
# நினைவுக் குமிழிகள்

93

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்



நான்காம் பாகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நினைவுக் குமிழிகள்-4

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின் கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## என் மனம் புகுந்தவன்

வந்தாய்; என்மனம் புகுந்தாய்; மன்னி நின்றாய்.
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ!
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய
எந்தாய்! இனியா னுன்னை யென்றும் விடேனே![1]
—திருமங்கையாழ்வார்

## அல்லிக்கேணியில் கண்ட அச்சுதன்

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென் றிழிந்த
கானமர் வேழம் கையெடுத் தலறக்
கராஅதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ளூர்ந்து
சென்றுநின் றாழிதொட் டானை
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிகண் டேனே[2]
—திருமங்கையாழ்வார்

---

1. பெரி.திரு. 1. 10 : 9
2. ஷை 2. 3: 9

# நினைவுக் குமிழிகள்-4

(ஆசிரியர் 75-வது அகவை புகும் நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

(எம்.ஏ., பி.எஸ்ஸி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.)

தமிழ்ப்பேராசிரியர்—துறைத்தலைவர் (ஓய்வு)

திருவேங்கடம் பல்கலைக் கழகம், திருப்பதி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிரகாசம் சாலை, சென்னை–600 108

முதற் பதிப்பு—மே, 1990

(C) டாக்டர் எஸ். இராமலிங்கம்
(ஆசிரியரின் மூத்தமகன்)
AD—13 (Plot. No.3354)
அண்ணாநகர், சென்னை-600 040
தொ. பே. 621 15 83

பக்கங்கள் xxxii + 672 = 704

விலை : ரூ. 66-00

NINAIVK-KUMIZHIKAL-Part IV

VENKATAM PUBLICATIONS
AD—13 (Plot No. 3354)
Anna Nagar, Madras-600 040
தொ.பே. 621 15 83

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்
41 சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி
சென்னை-600 005
தொ. பே: 84 45 54



## திருவேங்கடமுடையான் திருவடிகள்

சிந்திப் பனவும் துதிசெய் வனவும்
தெரிசிப் பனவும் துரிசற் றிடவே
வந்திப் பனவும் பூசிப் பனவும்
வாஞ்சிப் பனவும் யாம்செப் புவமால்
தந்திக் கிமையோர் பக்திக் களையின்
தாழிக் கருள்கூ ராழிக் கடவுள்
கந்தித் தெழுபூ வுந்தித் திருவேங்
கடமால் சரணம் தடமா மலரே.


—முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்

3. திருவேங்கடக் கலம்பகம்—65

# அன்னையும் பிதாவும்


 

மாதா பிதுவாக வைத்தேன் எனதுள்ளே
யாது ஆகில் யாதே இனி? (பெரி. திருவந், 70)
—நம்மாழ்வார்,



## பக்திப் படையல்

நித்திய மான வேதத்துக் கெட்டா
நீள்விசும் பாம்பரத் துவத்தில்
உத்தமர் இதய தாமரை மலர
ஒளிவிடும் பேரழ குடனே
பத்தரோ டுலகம் கண்டுகண் களிக்கும்
பயில்பொழில் வேங்கடத் திறங்கிச்
சத்திய மாகிப் பொழியுமெம் பெருமான்
தாள்மலர்க் குரியதிந் நூலே
(வேங்கடவனைப் பரத்துவ நிலையில் காண்பது)



**முனைவர் தானியேல் தேவசங்கீதம்**
எம்.ஏ.பிஎச்.டி, பட்டயம் மொழியியல்
**தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**திருவேங்கடவன் பல்கலைக் கழகம்**
**திருப்பதி-517502 (ஆ.மா)**

# அணிந்துரை

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்** அவர்கள் ஒரு விந்தை மனிதர்; துணிவையே துணையாகக் கொண்டவர்; உழைப்பால் உயர்ந்த செம்மல்; அநுமனைப்போல் ஆற்றலும் அடக்கமும் ஒருங்கே கொண்டவர்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் 1960 இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1977-இல் பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். திருப்பதியில் வாழ்ந்த பதினேழு ஆண்டுகளில் அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் **''நினைவுக் குமிழிகள்''-4** என்னும் நூலாக மலர்ந்திருக்கின்றது. இந்நூலுக்கு அணிந்துரை எழுத எனக்கு எந்தத் தகுதியும் இல்லை; என்மீது அவர் வைத்திருக்கும் அன்பு ஒன்றே இதற்குக் காரணம்.

சற்றேறக் குறைய இருபத்தைந்து ஆண்டுகளாகப் பேராசிரியர் ரெட்டியார் அவர்களோடு நெருங்கிப் பழகியவன் நான். கிறித்துவப் பாதிரிமார் இயேசுவின் அன்பை உலகெங்கும் சொல்ல தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து இந்திய மண்ணிற்கு

வந்ததைப் போல் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தமிழ் வளர்ச்சியையே தம் வாழ்க்கைப் பணியாக (Life mission) மேற்கொண்டு திருப்பதி மண்ணில் கால் வைததார். மனத்தூய்மையால், அன்பு வார்த்தைகளால், மாணவர்கள் உள்ளங்களைக் கவர்ந்தார். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போக்கு' இவரிடம் இல்லாததால் மாணவர்க்கு இவரிடம் அளவற்ற நம்பிக்கை உண்டானது. அந்நம்பிக்கை, பின்னால் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. இந்நூலின் பிற்பகுதியில் அவர் சித்திரிக்கும் பல நிகழ்ச்சிகள் நான் நேரில் கண்டவை; முற்பகுதியில் குறிப்பிட்டுள்ள செய்திகள் நான் சித்தூரில் இருந்த நாட்களில் என்னாசிரியப் பெருமக்களால் சொல்லக் கேட்டவை; இவ்வாறு நான் கண்டதும் கேட்டதுமே இந்நூலில் எழுதப் பெற்றுள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை மிகத் துல்லியமாகத் தேதி, மாதம், ஆண்டோடு பேராசிரியர் அவர்கள் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். என் சொந்த வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளை (பக் 594-595) இந்நூலில் நான் படிக்கும் போது, பேராசிரியர் இவைகளையெல்லாம் ஏதாவது கோப்புகளைப் பார்த்து எழுதினாரோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. ஆய்வு மாணவனாக நான் ஆற்றிய பணிகள், நான் பெற்ற பல்கலைக்கழக மானியப் படிப்புத் தொகை ரூ. 750/= மூன்றாண்டுகள் இங்ஙனம் கிடைத்தது. ஒரு மூன்று மாத காலமாக நான் வகுப்பில் செய்தபணி, அதற்குப் பல்கலைக்கழகம் ஊதியம் கொடுக்க மறுத்த நிகழ்ச்சி, பின்னர், பேராசிரியர் முயற்சியால் அப்பணிக்குரிய ரூ. 1200/— காசோலையைப் பெற்றது இவைகளெல்லாம் நானே மறந்துபோன நிகழ்ச்சிகள். இவற்றையெல்லாம் நேற்று நடந்ததுபோல் குறிப்பிடும் பேராசிரியரின் நினைவாற்றல் வியத்தற் குரியது. இந்நூலில் சித்திரிக்கப்பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் வேதனை மிகுந்த பேராசிரியர் உள்ளத்தில்

எழுந்த குமுறல்கள். அவையே பின்னர்க் குமிழிகளாக முகிழ்த்துள்ளன.

திருப்பதி வாழ்வில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் சுகப்பட்டதை விடத் துன்பப்பட்டது தான் மிகுதி.

> "திருப்பதி வாழ்வில் பூமகளின் கடைக்கண்
> நோக்குச் சரியாக இல்லை; ஏன்
> சுத்தமாக இல்லை என்றே சொல்லலாம்" (ப. 86)

என்ற தொடர்கள் அவர் அடிமனதில் உள்ள வேதனைக் குமுறல்கள். தியாக உணர்வும், உண்மையான தமிழ்ப்பற்றும், எதையும் தாங்கும் இதயமும் பலனை எதிர்ப்பாராது கடமை யாற்றும் கண்ணியமும் நிறைந்த பேராசிரியர் அவர்கள் இத்துன்பங்களை யெல்லாம் பொருட்படுத்தாது 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று மனந்தளராது தமிழ்ப்பணி செய்து வந்திருக்கிறார்.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையை உருவாக்கிய சிற்பி (The Architect of the Dept of Tamil of Sri Venkateswara University) என்பது தமிழ்கூறு நல்லுலகம் நன்கறிந்த உண்மை. இந்தச் சிற்பியின் வேதனைகளை, கனவுகளை கற்பனைகளை, இந்நூலில் படிக்கும்போது. மெய்சிலிர்க்கிறது.

> "உண்ணுஞ் சோறுபருகும் நீர் தின்னும் வெற்றிலை
> எல்லாம் கண்ணனே"

என்று எண்ணிய ஆழ்வார் நெறியில் ஆழங்கால் பட்ட பேராசிரியர் அவர்கள் திருப்பதியில் கால்வைத்த நாள் முதல் தமிழ்த்துறை தோற்றுவிப்பது ஒன்றையே தம் வாழ்வும் வளமுமாகக் கொண்டிருந்தார். காரைக்குடியில் பெரியதொரு புகழ்மிக்க கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி, முதல்வராகும் வாய்ப்பையுந் துறந்து, திங்கள் தோறும் ரூ. 153/- இழப்பில் திருவேங்கடவன்

பல்கலைக் கழகத்தில் ஒரு சாதாரண விரிவுரையாளராகச் சேர்ந்து பல எதிர்ப்புகள், அவமானங்கள், நிந்தனைகள் இவற்றையெல்லாம் சகித்து, தமிழ்த்துறையை நிறுவிய செய்திகளை இந்நூலில் படிக்கும்போது பேராசிரியரின் உண்மையான தமிழ்ப் பற்றையும் தியாகவுணர்வையும் நம்மால் உணர முடிகின்றது.

''பதின்மூன்று ஆண்டுகள் 'மக்கள் பேறு' வாய்க்கப் பெறாதிருந்தபோது புதிதாகத் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சியிலேயே என் கவனம் சென்றதால் மக்கட்பேறு பற்றிய எண்ணம் என் மனத்தில் எழாதிருந்தது. என் மனைவியும் என் அன்னையும் தான் இதுபற்றி மிகவும் கவலைப் பட்டனர். அவர்கள் வற்புறுத்தலின் பேரில் இரண்டு மாத காலம் திருத்தலப் பயணத்தை மேற் கொண்டேன். இராமேச்சுவரத்தில் பல்வேறு வைதிகக் கருமங்களை மேற்கொண்டேன். எனக்கு மக்கட்பேறு (1949) ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியை விட இப்போது துறை பிறந்தபோது பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது...விழா கொட்டகையில் அமர்ந்து கொண்டு திரு. பி. திம்மா ரெட்டி துறைகளைத் திறந்து வைத்தபோது கண்கள் குளமாயின! இரண்டு கன்னத்திலும் நீர் வழியத் தொடங்கியது. அருகிலிருந்த நண்பர்கள் 'என்னவாயிற்று? ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்க, ஒன்றுமில்லை; இஃது ஆனந்தக் கண்ணீர்!' என்று மறுமொழி பகர்ந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். (ப, 424)''

என்ற பகுதியைப் படிக்குங்கால், தாயொருத்தி மகனை ஈன்று புறந்தந்த போது பெற்ற மகிழ்ச்சியைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை பிறந்த ஞான்று இவர் பெற்றிருப்பதை அறிகிறோம்.

தமிழ் வளர்ச்சிக்கு எதிராய் வந்த தடைக்கற்களை யெல்லாம் பேராசிரியர் அவர்கள் தம் தடந்தோளால் தாங்கிய நிகழ்ச்சிகள் குமிழிகள் 182, 184 இல் நன்கு சித்திரிக்கப் பெற்றுள்ளன. அண்மையில் (1989) திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரின் இருக்கைக்குத் தமிழக அரசு வழங்கும் மானியம், தொடர்ந்து வழங்கப் பெறுவதற்கும், அம்மானியத் தொகை உயர்த்தப்படுவதற்கும் பேராசிரியர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பொன்னேடுகளில் பொறிக்கத் தக்கன.

பேராசிரியர் அவர்கள் தமிழ்த் தொண்டை துறை உருவாக்கினதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மொழி வழி மாநிலங்கள் பிரிந்த வின் வடவேங்கடப் பகுதிகளில் தமிழ் கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைப் பார்த்து, இப் பகுதிகளில் எப்படியாவது தமிழ் மக்கள் தமிழ் உணர்வோடு வாழ வேண்டும் என எண்ணி **பாக்காலா, சித்தூர், திருப்பதி, புத்தூர், நகரி, குந்தக்கல்** ஆகியவிடங்களில் படிப்படியாகத் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தி அங்குள்ள தமிழர்களை ஊக்குவித்திருக்கிறார். பேராசிரியர் அவர்கள் இத்தமிழ்ச் சங்கங்களைத் தமக்குச் சிறந்த இலக்கிய மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டதோடு நில்லாது, இவைகளைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படத் துணைக் கருவிகளாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பலவிடங்களில் சிதறிக் கிடந்த உறுப்பினர்களை ஒன்று சேர்த்தல், தாமே நேரிற் சென்று நிர்வாகச் சபையைக் கூட்டச் செய்தல், தீர்மானங்களைத் தட்டச்சு செய்து அவற்றைத் தமிழக அரசு, தமிழ் வளர்ச்சி இயக்கம், ஆந்திர அரசு முதலான இடங்களுக்கு அனுப்பல் முதலிய சிறந்த பணிகளை இத் தமிழ்ச் சங்கங்களில் செய்திருப்பதோடு, நல்லறிஞர் பலரை அழைத்துச் சிறந்த பல சொற்பொழிவுகளை ஆற்றுமாறும் செய்திருக்கிறார். இவ்வாறு

ஆந்திர மண்ணில் வாழும் தமிழ் மக்கள்தம் உள்ளப் புழுக் கத்தைத் தமிழ்த் தென்றலால் அகற்றிய பெருமைக் குரியவராகத் திகழ்கிறார் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள்.

"ஆசிரியர்கள் நல்ல நூல்கள் எழுதவேண்டும். எழுத்துப் பழக்கத்தைத் தொடக்கத்திலிருந்தே வளர்த்துக் கொள்ள வேண்டும். பல நூல்களைப் படித்த வண்ண மிருந்து தம் அறிவினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அதிகம் சிந்திக்கவேண்டும். இந்தச் சிந்தனையால் தாம் எழுதவேண்டிய பொருள் மனத்தில் உதயமாகும். நல்ல முறையில் மாணாக்கர்கட்குக் கற்பித்து வந்தால் தாமெழுதும் எழுத்திலும் தெளிவு பிறக்கும். உரை நடையும் ஆற்றொழுக்காக அமையும்" (பக். 94) என்ற தம் கொள்கைக்கு ஏற்பப் பேராசிரியர் தொடக்கக் காலத்திலிருந்தே எழுத்துப் பணியைக் கண்ணெனப் போற்றி வந்திருப்பதை இந்நூலில் (குமிழிகள் 163, 164, 167, 171, 172, 173, 179, 185, 187, 197, 192, 193, 194 212, 215, 224, 228, 230) நன்கு அறிகிறோம். திருப்பதியில் வாழ்ந்த பதினேழு ஆண்டுகளில் இருபது நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறந்த நூல்கள் பல, மாணவர்களாகிய எங்கட்கு வகுப்பறையில் பல ஆண்டுகளாகப் பாடமாகக் கற்பிக்கப்பட்டவை. ஆழ்ந்து சிந்தித்துக் கட்டுரைகளை எழுதுவார். எழுதிய கட்டுரை களைத் தாம் படித்துப் பார்த்து, மாணவர்க்கும் ஆசிரிய ரனைவர்க்கும் படித்துக் காட்டி இன்புறுவார். குறை நிறைகளை எடுத்துச் சொல்லுமாறு கேட்பார். இத்த கைய சிறந்த பண்புகளைக் கொண்டது இவருடைய எழுத்துப்பணி. இவருடைய வாழ்நாள் எண்ணிக்கை யைவிட (74) இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை (88) மிகுதியிலேயே. இவர் மெய் வருத்தம் பாராக் கருமமே கண்ணாயினரானார் என்பது நன்கு விளங்கும்.

இந்நாட்களில் நூல்களை எழுதும் சிலர் தாமெழுதிய நூல்களைத் தமக்கு மிகவும் வேண்டியவர்க்கோ,

உறவினர்க்கோ, உதவுவோர்க்கோ, அன்புப் படைய லாக்குவதைக் காண்கிறோம். இன்னும் சிலர் காக்கைப் (கால், கை) பிடிப்பதற்காகத் தம் நூல்களைப் பதவியில் இருப்பவர்க்கும் அரசியல் வாதிக்கும் அன்புப் படையல் செய்வர். ஆனால் பேராசிரியர் இதில் முற்றிலும் மாறுபட்டவர். ஒவ்வொரு நூலையும் உயர்ந்த எண்ணத் தோடு, தக்க அறிஞர் பெருமக்களுக்கே அன்புப் படைய லாகியிருப்பதைக் காண்கிறோம்.

முனைவர் பட்டம் (பி எச். டி) இன்று மிக மலிவாக விலைபோகிறது. பதிவு செய்தவர் சற்று உழைத்து எழுதினால் போதும்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு பட்டம் பறந்து வந்து சேருகிறது. மொழித்துறையில் அதுவும் தமிழ்த் துறையில் இந் நாட்களில் பட்டங்களுக்குப் பஞ்சமில்லை. ஆராய்ச்சிப் பொருளுக்கு ஒரு தராதரம் இல்லாமல் போய்விட்டது; உயர்ந்த சிந்தனைக்கும் பெரும் பஞ்சம். இந்நிலையில் ஆராய்ச்சிக்குப் பதிவு செய்து கொள்ள ரெட்டியார் அவர்கள் பட்ட சிரமங் களைப் படிக்கும்போது (குமிழின். 175, 177) ஒரு பக்கம் வேதனையும் மற்றொரு பக்கம் நகைப்பும் உண்டாகிறது.

> ''மகப்பேறு இல்லாத மங்கை யொருத்தி அரச மரத்துப் பிள்ளையாரை விடாது சுற்றி வருவதைப் போல துணைவேந்தரைச் சுற்றிச் சுற்றி வருவதை நிறுத்தவில்லை. அடிக்கடி வழக்கம்போல் காலை ஏழுமணிக்கு அவர் திருமாளிகை சென்று, அவர் தரிசனம் பெற்று வருவது உண்டு. போகும் போதெல்லாம் என் கோரிக்கையைச் சொல்வது மில்லை. பேச்சுவாக்கில் இதைச் சொல்லாதும் விடுவதில்லை. (பக். 146)

என்ற வரிகளைப் படிக்கும் போது பேராசிரியர் தம் விடாமுயற்சி ஒரு பக்கம் வெளிப்பட்டாலும் அவர்தம் மனவேதனையும் உணர முடிகிறது. பிள்ளைச் செல்வம்

இல்லாதார் பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் பிள்ளைச் செல்வம் கிடைக்குமாம். அதைப் போல டாக்டர் பட்டம் இல்லாத பேராசிரியர் கும்பகோண ஹோமியாபதி ஆய்வுக் கழகத்தில் (Institute of Homeopathy) ஒரு டாக்டர் பட்டத்தைப் பெற்று அப்பட்டத்தைத் துணைவேந்தரிடம் காட்டி, முனைவர் பட்ட ஆய்வுக்குப் பதிவு செய்து கொண்டிருக்கிறார் (குமிழ் 177). நிலைத்த செல்வமாகிய ஊக்கத்தினைத் தம்மிடம் கொண்ட பேராசிரியரின் பெருஞ் சாதனைகளில் இது குறிப்பிடத் தக்கது. இந்தக் கும்பகோண வழியைத் தத்துவக் கண்ணாடி கொண்டு நம்மைப் பார்க்கச் செய்யும் அவருடைய சிந்தனை ஆற்றல் வியந்து போற்றற் குரியது.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் வீண் வம்புக்குப் போகமாட்டார். வந்த வம்பையும் விடமாட்டார்; துணிச்சலோடு போராடி வெற்றி காண்பார். பார்ப்பதற்கு இவர் பரம சாது; ஆனால் இந்தச் சாது மிரண்டால் காடு கொள்ளாது. திருவேங்கடவன் பல் கலைக் கழகத்தில் தொடர்ந்து வந்த நான்கு துணை வேந்தர்களிடமும் பணிவோடு, அன்போடு பழகி இருந் தாலும் தம்முடைய உரிமை இவர்களால் பறிபோகும் போது துணிச்சலோடு செயலாற்றி இருக்கிறார். "முறையற்ற முறையில் நடை பெற்ற என் பேட்டி" (குமிழி. 209), இராமகிருஷ்ணன் மருத்துவக் கல்லூரியில் சேர்வதில் (குமிழி. 206) முதலான குமிழிகள் மூலம் இவருடைய துணிவை அறிகிறோம். நய வஞ்சகத் துரோகம், தனக்கு மட்டுமல்ல, பிறர்க்கும் ஏற்பட்டாலும் அதைச் சகித்துக் கொள்ளமாட்டார்; வெளிப்படையாகப் பேசி விடுவார். விளைவுகளைக் குறித்துக் கவலைப்பட மாட்டார். இந்த வெள்ளையுள்ளந்தான் இவருடைய நோயற்ற நீண்ட வாழ்வுக்கு மருந்து. "அஞ்சாமை அறிவுக்குத் தாய்" (Bravery is the Mother of wit) என்ற

பொன்மொழிக் கேற்ப, இவருடைய தெளிந்த சிந்தனைச் சிதறல்களுக்கு அஞ்சாமையே காரணம்.

பேராசிரியர் அவர்களின் '**நினைவுக் குமிழிகள்**' ஒரு தன் வரலாற்று நிகழ்ச்சிக்கோவை மட்டுமன்று; அஃது ஒரு சிறந்த இலக்கியம்; வாழ்க்கை அநுபவங்களை இலக்கியச் சான்றுகளால் விளக்குவதும், இலக்கியம் கூறும் உண்மைகளை, நீதிநெறிகளை, வாழ்க்கைத் தத்துவங்களைத் தம் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளால் விளக்கிக் காட்டுவதும் இந்நூலின் சிறப்புகளில் தலையாயவை என்று கூறலாம். படித்த இலக்கியத்தை ஏட்டிலே நிறுத்திவிட்டாமல், வாழ்க்கைப் பயணத்தில் அதன் உண்மைகளை ஒருவர் எவ்வாறெல்லாம் உணர்ந்து, சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும். தன்னைத்தானே அவ்விலக்கிய ஒளியில் ஆற்றுப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உண்மைகளை மிகத் தெளிவாக இந்நூல் விளக்குகிறது. கற்ற இலக்கியங் களெல்லாம், வாழ்க்கைப் பாதையில் கால் வழுக்கும்போது உற்றதுணையாக உதவுவதைப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பல பாடல்களின்வழி இந்நூலில் ஆங்காங்கு குறிப்பிட்டிருப்பது பாராட்டற்குரியது.

மேல்நிலையிலுள்ள அதிகாரிகள் தமக்கு அனுப்பி வைக்கும் கோப்புகளில் கீழ்மட்டத்தில் உள்ள எழுத்தர்கள் எழுதி வைக்கும் குறிப்புகளைப் பாராமல் பொறிபோல் (Mechine) கைநாட்டுச் செய்வது (பக். 213) இன்றும் நிகழ்ந்து வருகிற கொடுமையே. ஆர்வமுள்ள ஆய்வாளர் கள் முனைவர் பட்டத்திற்குப் பதிவு செய்வதற்கு ஆயிரம் தடைக்கற்களைப் போடும் கல்விக் கழகங்கள் இன்றும் இல்லாமலில்லை. கல்விக் கழகங்களில் இவ்வாறு இன்று நடக்கும் கண்மூடித்தனமான முறைகேடுகள், அவற்றிற்குச் சாதகமாக அமையும் சட்டதிட்டங்கள், சட்டதிட்டங் களைச் 'செக்கு மாடுகள்' போன்று பின்பற்றும் கல்வி

அதிகாரிகளின் கபோதித் தன்மைகள்—முதலாவற்றிற் கெல்லாம் நல்ல சவுக்கடி இந்நாளில் தரப்பட்டுள்ளது.

பேராசிரியருடைய சிறந்த கற்பனைகளையும் அநுபவ உண்மைகளையும் நகைச்சுவை உரையாடல்களையும் அவ்வப்போது துய்த்த மு. வ. அவர்கள் பேராசிரியர் ரெட்டியார் அவர்களை நோக்கி "நீங்கள் இந்தத் திறமை களையெல்லாம் பயன்படுத்தி நாவல்கள் எழுதலாமே" என்று கூறுவாராம். ரெட்டியாருடைய அத்தகைய படைப்பாற்றலெல்லாம் இந்நூலின்கண் அமைந்துள்ளன. மேலும் ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்புபோல எதிர்கால அறிஞர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் தமிழகத்தில் ஒரு கால கட்டத்தில் நிலவிய சமுதாய பொருளாதார கல்வி பற்றிய செய்திகளையெல்லாம் அறிந்து கொள்வதில் இவ்வரிசை நூல்கள் (ஐந்து) சிறப்பிடம் பெறும் என்பதற்கு ஐயமில்லை.

பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்கு தன்னம்பிக்கை ஒரு தும்பிக்கை. எனினும் இத்தும்பிக்கை சோர்ந்துபோகும் போதெல்லாம் இவர்தம் இறை நம்பிக்கை அச்சோர்வைப் போக்கிப் புத்துயிர் கொடுத்திருப்பதைப் பேராசிரியர் ரெட்டியார் மிக உருக்கத்தோடு இந்நூலில் பல விடங்களில் சுட்டியிருப்பதைக் காண்கிறோம். மனிதனின் அறிவும் ஆற்றலும் தோற்றுப் போகும்போது ஆழ்ந்த இறை நம்பிக்கை அவனை எவ்வாறு உய்யுமாறு நிலை நிறுத்து கின்றது என்பதைப் பல அநுபவ நிகழ்ச்சிகளால் பேராசிரியர் உறுதிபடுத்துகிறார். இந்நூற் சிறப்புக்களில் இதுவும் கோடிட்டுக் காட்டற்குரியது.

எங்கள் பல்கலைக்கழக வளாகத்தில் பேராசிரியர் ரெட்டியாரின் சுவையான, உவமைகள் நிறைந்த உரையாடல்களைக் கேட்டு இன்புறும் நண்பர்கள் இவருக்கு Doctor of Simile என்று ஒரு பட்டத்தை வழங்குதல் வேண்டும் என்று நகைச் சுவையாகக் கூறுவர்; இந்தித்துறை அப்பட்டத்தை வழங்கியே மகிழ்ந்தது. இவ்வாறு எதைக்

கூறினாலும் உவமை ஒன்றைக் கூறி விளக்கும் போக்கை இவருடைய மொழி நடையில் காணலாம்.

பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டு கற்று கேட்டு, கற்பித்து தாம் பெற்ற அநுபவங்களையெல்லாம் இவ்வுலகோடு பகிர்ந்து கொள்ளும் இந்த எழுத்தாளரைத் தமிழ்கூறு நல்லுலகம் சரியாகப் புரிந்து கொண்டு இவருயிரோடுஇருக்கும்போதே பெருமை செய்யவேண்டும். பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பல ஆண்டுகள் நோயற்று வாழ்ந்து இன்னும் நூல்கள் பல எழுத எல்லாம் வல்ல எம்பெருமானான ஏகநாதர் அருள் செய்ய வேண்டும் என்று வேண்டி அமைகின்றேன்.

திருப்பதி—2
8-5-1990

—டாக்டர் தேவசங்கீதம்

## நூல் முகம்

என்கண்ணை மறந்துன்இரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின் கண்ணாற் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதல்
பாவமெலாம் மடிந்து, நெஞ்சில்
புன்கண்போய் வாழ்ந்திடவே, கோவிந்தா
எனக்கமுதம் புகட்டு வாயே![4]

**1941**-ஆண்டு ஜூன் முதல் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பணியாற்றிய காலம் முதல் பல்கலைக்கழகத்தில் பணியாற்ற வேண்டும் என்ற கனவு இருந்து கொண்டு வந்தது. இந்தக் கனவு 1950 ஜூலை மாதம் காரைக்குடிக் கற்பகநிலையவிநாயகமூர்த்தி (சா.க)யின்கருணையால் நான் சிறிதும் எதிர்பாராமல் புதிதாகத்தொடங்கப்பெற்ற அழகப்பாஆசிரியர்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்ததால், சிறிது நனவாகியது. இங்குப் பணியாற்றிய பத்தாண்டுக் காலத்தில் அறிவியல், கல்வியியல், கல்வி உளவியல், சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம், வில்லி பாரதம் போன்றவற்றில்அதிகமாக ஆழங்கால்பட்டு நுணுகிப் பயின்றேன். பலதுறைகளில் ஏழு பெரிய நூல்கள் எழுதி மிகுபுகழ் பெற்றேன். இக்காலத்தில் 1958 தொடங்கிச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நுழைய மூன்று முறை முயன்றேன். என் தகுதி—திறமையால் கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தும், பழம் நழுவிப் பாலில் விழாமல், கீழே வீழ்ந்தது. நான் திருப்பதியில் பணியாற்ற வேண்டிய வாய்ப்பு தருவதற்காகவே ஏழுமலையான்

---

4. பா. க. கோவிந்தன் பாட்டு—3

எனக்குக் கிடைக்காமல் செய்தான். என்னைத் தவிர வேறு எவரும் பத்து ஆண்டுகள் இன்னல்களைப் பொறுக்க முடியாது நழுவிப் போவர் என்பது என் கருத்து. அப்போது நிலவிய சூழ்நிலைகளை ஆராய்ந்தால் இது எளிதில் புலனாகும். 'நான் இல்லை எனில் திருப்பதியில் பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ் இல்லை' என்பது ஏழுமலையான் திருவுளப் பாங்காகும் என்ற நிலையை உருவாக்கினவன் அந்த 'பைந்தமிழ்ப் பின் சென்ற பசுங் கொண்டலா'கும். என் திருப்பதி வாழ்வின் இந்த வரலாறே முக்கியமாகக் குமிழிகளின் நான்காம் பகுதியாக இலக்கிய வடிவம் பெறுகின்றது.

திருப்பதி வாழ்வில் யான் சந்தித்த இன்னல்கள், இக்கட்டுகள், நண்பர்களாக இருந்து குடிலர்களாகவும் கட்டியங்காரர்களாகவும் இருந்து கொண்டு விளைவித்த சதிகள் என்னிடம் சுயநலம் மருந்துக்குக் கூடக் கிடைக்காமையால் அவை ஆதவனைக்கண்ட பனிபோல் விலகினமையைச் சிந்திக்கும்போது,

புண்ணிலே புகுந்த கோல்எனத் துயரம்
　　புகுந்தெனைக் கலக்கிய போதும்
கண்ணிலே எனது கருத்திலே கலந்த
　　கருத்தனே நின்றனை அல்லால்
மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை
　　மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்
நண்ணிலேன் வேறொன் றெண்ணிலேன் உனையே
　　நம்பினேன் கைவிடேல் எனையே[5]

என்ற வடலூர் வள்ளலாரின் பாடலை என் நா நவிற்றி என்னையும் மறக்கச் செய்தது. ஒரு சில நாளில் (செப்டம்பர்—1969 என்பதாக நினைவு) ஏழுமலையான் திருவருளால் தமிழக அரசின் ஆண்டுதோறும் ரூ 10000/-

5. திருஅருட்பா— ஆறாந் திருமுறை. அபயத்திறன்-5 (3557)

வீதம் ஐந்தாண்டுகட்கு வழங்குவதாக உள்ள ஆணை வந்து சேர்ந்தது. இதனால் என்னிடம் புதிய உற்சாகம் பிறந்தது. இரவும் பகலும் கடுமையாக உழைத்து தமிழ்த் துறையை வளர்த்தேன். இந்தக் காலத்தில்தான் (1970—77) ஏழுமலையான் என்னை எண்ணற்ற சோதனைக்குள் ளாக்கி வாட்டி வளைவு எடுத்தான். எனினும், எதையும் தாங்கும் இதயத்தையும் அளித்தமையால் நன்கு பணியாற்ற முடிந்தது. திருப்பதியில் நண்பர்கள் பலர் நான் பட்ட துன்பங்களையும் தொல்லைகளையும் அறிவார்கள். ஆயினும், ஏழுமலையான் குன்றின் மேலிட்ட விளக்குபோல் தமிழகமெங்கும் என் புகழ் பரப்பினான். இந்தக் குறிப்புகளையெல்லாம் தாங்கிக் கொண்டு **நினைவுக் குமிழிகள்** (நான்காம் பகுதி) வெளி வருகின்றது. சில்வாழ் பல்பிணிச் சிறியேன் மறைந்த பிறகும் திருப்பதி யில் தமிழ் வளர்க்க யான் மேற்கொண்ட முயற்சி வரலாறாக என்றும் நின்று நிலவும் என்பது என் திடமான நம்பிக்கை.

என் வாழ்க்கை வரலாற்றின் இப்பகுதி (நான்காம் பகுதி) பெரிதாக வளர்ந்தது; துறையூர், காரைக்குடியில் பணியாற்றிய காலத்தைவிட சற்றேறக்குறைய இரட்டிப் பான காலம் (17 ஆண்டுகள்) ஆதலால் நூல் வளர்ந்ததில் வியப்பில்லை. இப்பெரிய நூல் வெளிவருமா? என்று எண்ணித் தவித்துக் கொண்டிருந்த நிலையில் எம்பெரு மானின் கருணையினால் கருணாநிதியின் தமிழக அரசு ரூ 8000/-நிதி உதவியது (இது அரசுத் திட்டத்தில் அதிக பட்ச உதவி). இது கிட்டத்தட்ட முட்டுவழியில் மூன்றில் ஒரு பங்காக இருந்தபோதிலும் இறையருளால் நூல் வெளி வருகின்றது. அரசின் சால்பு எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரிதாயிற்று இந்த உதவியும்—'செயப்பட்டார் சால்பின் வரைத்து'. இங்ஙனம் உதவிய தமிழக அரசுக்குத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின்மூலம் என் நன்றியைப் புலப் படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலைச் செவ்விய முறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணக்குமார் அவர்கட்கும், எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக்கட்டை தயாரித்து நான்கு வண்ணத்தில் அச்சிட்டு உதவிய கலை மன்னர் திரு P. N. ஆனந்தனுக்கும், நூலைக் கவின் பெறக்கட்டமைத்துத் தந்த அருமைத் தம்பி V. திருநாவுக்கரசுக்கும் என் உளங்கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய பேராசிரியர் தானியேல் தேவ சங்கீதம் எம்.ஏ. வகுப்பு தொடங்கப்பட்ட ஆண்டில் (1970) முதலாவதாகச் சேர்ந்த முதல் மாணக்கர். கற்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டி ஆசிரியர்களின் அன்பைக் கவர்ந்தவர். எம். ஏ.யில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ந்து திருவள்ளுவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். நான் ஒருவனே துறையில் டாக்டர் பட்டம் பெற்றவன். எனக்கு மட்டிலுமே ஆய்வு மாணவர்கட்கு ஆய்வு நெறியில் வழிகாட்டும் தகுதி இருந்தது. 1971-சனவரியில் சித்தூர் அரசுக் கல்லூரியில் பேராசிரியர் பதவியை விட்டு விலகி எனக்குத் துணையாக விரிவுரையாளராகச் சேர்ந்த திரு P. சௌரிராஜனை ஆய்வு மாணவராகச் சேர்த்துக்கொண்டேன் (1971-ஜூன் முதல்). 1972-ஜூனில் திரு. தேவசங்கீதம் எம். ஏ. யில் தேர்ச்சி பெற்றதும் ஆய்வு மாணவராகச் சேர்த்துக் கொண்டு 'டாக்டர் மு. வ. புதினங்கள்' என்ற தலைப்பில் ஆயும்படி யோசனை கூற, அவரும் ஒப்புக் கொண்டார். டாக்டர் மு. வ. நூல்களை முதன் முதலாக ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்ட முதல் மாணவர் இவர் ஒருவரே. பல்கலைக் கழகம் தமிழ்த்துறைக்கு U G. C. மூலம் பெறும் ஆய்வு ஊதியம் (Fellowship) ஒதுக்கவில்லை; புதிதாகத் தொடங்கப் பெற்ற சிறு துறை என்று கருத்தில் கொண்டு ஒதுக்காதுவிட்டுவிட்டது. தெலுங்குத் துறையில் மூவருக்கு நிதி ஒதுக்கப் பெற்றது. அப்போது தெலுங்குத் துறைப் பேராசிரியராக இருந்தவர் டாக்டர் ஜி. என்.

222 66. டாக்டர் மு. வ. வின் இலக்கியப் படைப்புகள் பற்றிய கருத்தரங்கு 538

223 67. என் மணி விழா 544

224 68. 'தொலை உலகச் செலவு' வெளியீடு 546

225 69. தமிழ்த்துறையில் என் மணிவிழா 551

226 70 பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு 566

227 71. கம்பராமாயணக் கருத்தரங்கு 571

228 72. என் பிஎச். டி ஆய்வுக் கட்டுரை வெளியீடு 578

229 73. நினைவுச் சிதறல்கள் 584

230 74. 'வேமனர்' உதயமும் என் பதவி உயர்வும் 601

231 75. பதவி உயர்வு ஆணை பெறுவதில் தடையும் அது நீங்கலும் 609

232 76. நான் கலந்து கொண்ட இலக்கிய மாநாடுகள் 615

233 77. ஓய்வு பெற்றதும் சென்னை வருகையும் 636


## பின்னிணைப்புகள்


1. குமிழிகளில் எழுந்த நூல்கள் 645

2. பொருட்குறிப்பு அடைவு 649

3. பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் 668

ரெட்டி; பரந்த நோக்க முள்ள பெருமகன். மூன்றில் ஒன்றை எங்கள் துறைக்கு விட்டுக் கொடுக்குமாறு வேண்டினேன். அவரும் பெருமனம் கொண்டு விட்டுக் கொடுத்தார்; எங்கள் துறைக்குத் தருவதற்காகவே விட்டுக் கொடுப்பதாகப் பல்கலைக் கழகத்திற்கும் எழுதினார். பல்கலைக் கழகமும் அதனை ஒப்புக்கொண்டு அதனை எங்கள் துறைக்கு வழங்கியது. இதனால் தேவ சங்கீதத்திற்கு மாதந் தோறும் ரூ 500 ஆய்வு ஊதிய மாகவும் ஆண்டொன்றுக்கு இதர செலவுகளுக்கு ரூ 1500/-ம் கிடைத்தன. இந்த உதவி கிடைக்காவிடில் தேவசங்கீதம் டாக்டர் பட்டம் பெற்றிருக்க முடியாது. தமிழ்த்துறையும் முதல்தரமான மாணவர் ஒருவரைத்துறை யின் முதல் ஆய்வு மாணவராகப் பெறும் வாய்ப்பையும் இழந்திருக்கும். இறையருள் துணை நின்றது என்பது என் கருத்து. இரண்டாம் ஆண்டு இத்தொகை ரூ 750/ ஆக உயர்ந்தது; இதர செலவுகளுக்கான தொகையும் 2000/ ஆக உயர்ந்தது. 1975—76 இல் துறையில் விரிவுரை யாளராகவும் சேர்த்துக் கொண்டேன். இதுவும் இறை யருளே. என் துறையில் எனக்கு அடுத்தவராக இருந்த அன்பர் இதற்குப் போட்ட முட்டுக்கட்டைகளைத் தகர்த் தெறியும் பணியும் இருந்தது. நான் ஓய்வு பெற்ற பிறகு டாக்டர் சங்கீதம் துணைப் பேராசிரியரானார். இதற்கும் எதிர்ப்பு தெரிவித்தார் என் நண்பர்; இதனைத் தகர்த் தெறியவும் என் பங்கு சிறிது இருந்தது. சென்ற ஆண்டு (1989 ஜூலை முதல்) பேராசிரியர் பதவி வந்த போது தமிழக அரசு மானியம் (ஆண்டு ஒன்றுக்கு 75, 000/-) பெறுவதற்குப் பெரிதும் முயன்று பெறுவதில் நேர் பங்கு கொண்டேன். இதற்கும் திருப்பதியில் துறையிலிருக்கும் ஒருவரால் போடப்பெற்ற முட்டுக் கட்டைகளையும் தகர்த்தெறிய வேண்டி இருந்தது. கல்வி அமைச்சரும் முதல்வரும் பெருமனம் கொண்டு இதனை வழங் கினார்கள். கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் தான் (1969) என் பத்தாண்டு முயற்சியால் முதன்

முதலாகத் திருவேங்கடவன் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்காக ஆண்டொன்றுக்கு 10000/ வீதம் மானியம் பெற்றமை நினைவு கூரத்தக்கது. டாக்டர் தேவசங்கீதம் நல்ல உழைப்பாளி; நன்கு பாடம் சொல்பவர்; ஆய்வில் விருப்பம் மிக்கவர். மாணவர்கள் நலனை நாடுபவர். நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் பேர்போனவர். இத்தகைய நன் மாணாக்கர்பால் வில்லிபுத்தூரார் தம் மகன் வரந்தருவாரிடம் சிறப்புப் பாயிரம் பெற்றாற் போல ஓர் அணிந்துரை பெறவேண்டும் என்ற என் விருப்பத்திற்கிணங்க அணிந்துரை வழங்கியுள்ளார்.

தன்னா சிரியன் தன்னொடு கற்றோன்
தன் மா ணாக்கன் தகுமுறை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே[6]

என்பதும் இலக்கண மரபு அன்றோ? அணிந்துரை அளித்த மாணாக்கருக்கு என் நன்றியும் வாழ்த்தும் ஆசியும் என்றும் உரியவை.

இந்த நூலை எழுதி நான் வெளியிடு வதற்குத் தோன்றாத் துணையாக நின்று உதவியவன் வேங்கட வெற்பில் எழுந்தருளியிருக்கும் சீநிவாசன். இவனே எனக்கு எல்லா நலமும் அவன் விரும்பும் வண்ணம் வழங்கி வருபவன். என்னைப் பல்வேறு பாங்கில் தமிழ்ப் பணியில் ஈடுபடுத்தி வருபவன். சமய நூல்கள் வெளிவரக் கணிசமான அளவு திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் நிதி வழக்கத் திருவருள் புரிந்தும் பிற நூல்கள் வெளிவரத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் ஏதோ ஓரளவு நிதி கிடைக்க வழியமைத்துத் தந்தும் என்னை வாழ்வித்து வருபவன். இந்த வேங்கடத்தின் எழில் கொள் சோதியினை,

---

6. நன்னூல்—51

உளன்கண்டாய் நன்னெஞ்சே!
　　உத்தமன் என்றும்
உளன்கண்டாய் உள்ளுவார்
　　உள்ளத்—துளன் கண்டாய்
விண்ணொடுங்கக் கோடுயரும்
　　வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணொடுங்கத் தானளந்த
　　மன்.[7]

— பேயாழ்வார்

என்ற பேயாழ்வார் பாசுரத்தால் மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்கிச் சரண் அடைகின்றேன்.

'வேங்கடம்'
A—D 13 (Plot 335½)
அண்ணா நகர்
சென்னை—600 040
மே 9, 1990
சித்திராபௌர்ணமி.

ந. சுப்புரெட்டியார்
தொ. பே. 621 15 83

7. மூன். திருவந் 40

# உள்ளுறை


| | |
|---|---|
| பக்திப் படையல் | vii |
| அணிந்துரை | viii |
| நூல் முகம் | xix |

| குமிழிகள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 157 | 1. | பல்கலைக்கழகப் பணி ஏற்றல் | 3 |
| 158 | 2. | துணைவேந்தரைச் சந்தித்தல் | 11 |
| 159 | 3. | முதுகுப் புறமாகப் பேனாக் குத்து | 21 |
| 160 | 4. | திருப்பதியில் திருத்தலப் பயணிகள் | 27 |
| 161 | 5. | இராமய்யாவும் பாலசுந்தர நாய்க்கரும் | 37 |
| 162 | 6. | டாக்டர் உசேன் நயினார் | 47 |
| 163 | 7. | மூன்று நூல்கள் வெளியீடு | 54 |
| 164 | 8. | முத்தொள்ளாயிர விளக்கம்—முகிழ்த்தல் | 63 |
| 165 | 9. | பிஎச். டி. ஆய்வுக்கு இசைவு தர மறுப்பு | 71 |
| 166 | 10. | நூல் வெளியீட்டு விழாவும் சோதிடப் பலனும் | 80 |
| 167 | 11. | அறிவுக்கு விருந்து—அவதாரம் | 90 |
| 168 | 12. | மாணாக்கர்களின் கிளர்ச்சி | 95 |
| 169 | 13. | கிளர்ச்சிக்குக் காரணம்—ஓர் ஆய்வு | 105 |
| 170 | 14. | நன்கொடை நூல்கள் தேர்வு | 110 |
| 171 | 15. | இளைஞர் வானொலி வெளியீடு | 115 |
| 172 | 16. | 'அதிசய மின்னணு' நூல் அவதாரம் | 121 |
| 173 | 17. | தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை | 127 |

174 18. திடீர் அதிர்ச்சி 136
175 19. ஆராய்ச்சிக்குப் பதிவு பெற மேற்கொண்ட தந்திரம் 145
176 20. மூன்றாண்டுத் திட்டகால ஊதியம் பெறல் 150
177 21. கும்பகோண வழி 158
178 22. என் தில்லி மாநகர்ப் பயணம் 164
179 23. 'இல்லறநெறி' நூல் வெளியீடு 173
180 24. தெலுங்கு மாநிலத்தில் தமிழ்ச் சங்கங்கள் 181
181 25. உருதுத்துறை ஆசிரியரின் மோதல் 184
182 26. தமிழக அரசு மானியம் பெறுவதில் தீவிர முயற்சி 196
183 27. புதிய துணைவேந்தர் டாக்டர் V. C. வாமன்ராவ் 205
184 28. தமிழக அரசு மானியம் பெற மேற்கொண்ட தீவிர முயற்சிகள் 212
185 29. 'இராக்கெட்டு' நூல் உதயம் 220
186 30. தமிழகப் புலவர் குழுவை வரவேற்க இயலாமை 227
187 31. 'நமது உடல்' நூல் வெளியீடு 233
188 32. குடும்பத்துடன் திருப்பதியில் குடியேறல் 238
189 33. இராமலிங்கம் 242
190 34. இராமகிருஷ்ணன் 252
191 35 அணுக்கரு பௌதிகம் 261
192 3 , இளைஞர் தொலைக்காட்சி தோற்றம் 269
193 37. 'அறிவியல் விருந்து' அவதாரம் 275
194 38. என் காசி யாத்திரை 283
195 39. நகரத்தார் நாகரிகமும் பண்பாடும் 293
196 40. காசியில் சில நிகழ்ச்சிகள் 295
197 41. அயோத்திப் பயணம் 309
198 42. கயைச் செலவு

| | | | |
|---|---|---|---|
| 199 | 43. | திருப்பதி திரும்புகை | 331 |
| 200 | 44. | என் டாக்டர் பட்ட ஆய்வு நிறைவு | 334 |
| 201 | 45. | ஆய்வுக்கட்டுரையின் தேர்வு முறைகள் | 340 |
| 202 | 46. | கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை | 345 |
| 203 | 47. | மறக்க முடியாத நிகழ்ச்சிகள் | 348 |
| 204 | 48. | யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் | 359 |
| 205 | 49. | புதிய துணைவேந்தர் டாக்டர் D. சகந்நாத ரெட்டி பணி ஏற்றல் | 363 |
| 206 | 50. | இராமகிருஷ்ணன் மருத்துவக் கல்லூரியில் சேர்வதில் | 376 |
| 207 | 51. | தமிழ்த்துறைப் பணியாளர் நியமனத் தொடக்கம் | 381 |
| 208 | 52. | துணைப்பேராசிரியர் பதவிக்குப் பேட்டி | 394 |
| 209 | 53. | முறையற்ற முறையில் நடைபெற்ற என் பேட்டி | 403 |
| 210 | 54. | தமிழ் எம். ஏ. வகுப்புத் தொடக்க விழா | 419 |
| 211 | 55. | மலை நாட்டுத்திருத்தலப் பயணம் | 425 |
| 212 | 56. | பரணிப் பொழிவுகள் | 447 |
| 213 | 57. | நடுநாட்டுத் திருத்தலப் பயணம் | 453 |
| 214 | 58. | தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம் | 464 |
| 215 | 59. | அம்புலிப் பயண நூல் தோற்றம் | 479 |
| 216 | 60. | இரண்டு தங்கப் பதக்கங்கள் | 495 |
| 217 | 61. | திருக்குறள் கருத்தரங்கு | 499 |
| 218 | 62. | சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நிகழ்ச்சிகள் | 504 |
| 219 | 63. | சிலப்பதிகாரக் கருத்தரங்கு | 511 |
| 220 | 64. | ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள் | 519 |
| 221 | 65. | பேராசிரியர் K. சச்சிதானந்த மூர்த்தி | 530 |

குறிப்பு : தயவு செய்து பிழைகளைத் திருத்திக் கொண்டு படிக்கவும்

# பிழை - திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 3 | துறைகட்டுத் | துறைகட்குத் |
| 11 | 23 | போங்ச் | போய்ச் |
| 12 | 11 | ஆரரண்டுக் | ஆறாண்டுக் |
| | 22 | வையதிம் | வையம் |
| 19 | 3 | நல்லுறவு | நல்லுறவு— |
| 21 | 17 | Endarsement | Endorsement |
| 38 | 13 | திகழ்வானாயின | திகழ்வானாயின் |
| 40 | 13 | கோப்புரங்கள் | கோபுரங்கள் |
| 45 | அ.கு. 5 | அணிக்கதிர் | அணுக்கதிர் |
| 47 | | 5.டாக்டர் உசேன் | 6.டாக்டர் உசேன்,.. |
| 47 | 10 | Offic boy | Office boy |
| 51 | 28 | உங்காசம் | உற்சாகம் |
| 59 | 13 | டி.ஆர்.புருடோத்தம் | டி.ஏ. புருடோத்தம் |
| 61 | 13 | கவிதையாய் | கவிதையால் |
| 95 | 4 | குமிழி—169 | குமிழி—168 |
| 100 | 7 | Peom | Peon |
| 102 | 8 | அடைப்பது | அசைப்பது |
| 104 | அ. கு. 6 | பக்கம் 103க்கு | மாற்றுக |
| 117 | அ. கு. 1 | முற்றிலும் | நீக்குக. |
| 130 | 30 | டா டர் | டாக்டர் |
| 131 | அ. கு. 1. | அடிக்குறிப்பு.2 | என மாற்றுக. |

| | | | |
|---|---|---|---|
| 136 | 14 | தீடீர் அதிர்ச்சி | 18-திடீர் அதிர்ச்சி |
| 141 | 8 | போட்டு | போட்டுத் |
| 145 | | குமிழி—145 | குமிழி—175 |
| 148 | 26 | 'சென்ன | ''சென்னை |
| 165 | 4 | காட்டவேன் | காட்டாவேன் |
| 184 | 3 | ஆசியர் | ஆசிரியர் |
| 188 | ... | குமிழி 179 | கும்ழி—175 |
| 195 | 14 | நண்பர்களாணோம் | நண்பர்களானோம் |
| 205 | ... | குமிழி-181 | குமிழி-182 |
| 225 | 15 | கலாடியை | மலரடியை |
| 242 | 10 | உமாகசுவரெட்டி | உமாமகேசுவர ரெட்டி |
| 248 | 12 | புரியவில்தை | புரியவில்லை |
| 252 | 8 | Theoretikal | Theoretical |
| 255 | ... | எழுத்தெண்ணக் | எழுத்தெண்ணிக் |
| 263 | 11 | போாசிரியரை | பேராசிரியரை |
| 267 | அ. கு. 2 | Tranolator | Translator |
| 279 | 9 | சுதரஞ் | சுந்தரஞ் |
| 308 | 32 | ரூ/- | ரூ 5/- |
| 315 | 12 | மும்மைகால் | மும்மைசால் |
| 318 | 14 | குமிழி-1988 | குமிழி-198 |
| 330 | 16 | போனறியதை | போற்றியதை |
| 331 | ... | குமிழி-198 | குமிழி-199 |
| 341 | 14 | மதிபபீட்டுக் | மதிப்பீட்டுக் |
| 351 | 11 | ஹுக்கர் | ஹுக்கா |
| 248 | 19 | புரியவில்தை | புரியவில்லை. |
| 359 | 8 | பாரட்டி | பாராட்டி |
| 369 | 18 | மூன்று | ஏழு |
| 374 | 6, 13, 26. | 4, 5,7 | 5, 6, 9 |
| 398 | 13 | பதிவாளர்த் | பதிவாளர் |
| 434 | 19 | கூறுகின்றான் | கூறுகின்றான். |
| 443 | 20 | சாட்டான்-5 | சாட்டர்ன்-5 |

| | | | |
|---|---|---|---|
| 454 | 20 | அயிர்திரபுரம் | அயிந்திரபுரம் |
| 457 | 13 | கோவிலூர் | கோவலூர் |
| 483 | 7 | புலியில் | அம்புலியில் |
| 493 | 22 | பிருத்துவமனையில் | மருத்துவமனையில் |
| 497 | பக். தலைப்பு | அம்புலிப்பயனா | இரண்டுதங்கப் |
| 522 | 13 | நூல்தோற்றம் | பதக்கங்கள் |
| 533 | 15 | பதவிக்கு | பதவிக்குத் |
| 536 | 11 | கிருஷ்ணபரம... | கிருஷ்ணபரம... |
| 536 | 13 | உருத்திராகசம் | உ[illegible]த்திராக்கம் |
| 539 | 31 | பேரரசிரியர் | பேராசிரியர் |
| 569 | 16 | பெருகை | பொருநை |
| 576 | அ. கு. | கிஸ்கிந்தை | கிட்கிந்தை |
| 589 | 13 | செல்லக்குமார் | செயக்குமார் |
| 596 | 8 | ரூ 4200 | ரூ 1200 |
| 592 | 4 | அரங்கசாமிஐய்யர் | அரங்கசாமிஐயர் |
| 594 | 13 | போட்டுவிட்டால் | போட்டுவிட்டதால் |
| 605 | 25 | டட்டம் | பட்டம் |
| 608 | 3 | விடியும் | விடிவும் |
| 639 | 27 | விவரமாக | விவரமாகச் |
| 626 | 2 | Thirvmnurai's | Thirumurais |

---

குறிப்பு : அனந்த சயனம் அய்யங்காரின் தலையெழுத்து பலவிதமாக மாறிக் கிடக்கின்றது. M. அனந்த சயனம் அய்யங்கார் என்று மாற்றிக் கொண்டு படிக்கவும்.

# நினைவுக் குமிழிகள்-4

அகிலத்து உள்ளே
மெய்யாய் இருந்தது நாள்செல
நாள்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
வாய்மெல்லப் போனதுவே.[1]
—பட்டினத்தடிகள்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

1. பட்டினத்தார் பாடல்கள்—பொது-52

## வேங்கடம் அடைதல்

கொற்றேன் பல்பிறவி
நுன்னைக் காண்பதோராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே
இடருற்றனன் எம்பெருமான்!
கோற்றேன் பாய்ந்தொழுகும்
குளிர்சோலைசூழ் வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன்;
அடியேனையாட் கொண்டருளே.[2]

—திருமங்கையாழ்வார்

## அடைக்கலம் புகுதல்

'அகல கில்லேன் இறையும்' என் (று)
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன் (று)
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே[3]

—நம்மாழ்வார்

2. பெரிய. திரு. 1. 9: 8
3. திருவாய் 6, 10:10

# திருப்பதி வாழ்வில்

குமிழி-157

## 1. பல்கலை கழகப் பணி ஏற்றல்

திருப்பதி சென்று திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகச் சேர்வதென உறுதியாயிற்று. புதிய பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவி 1960 இல் தான் ஏற்பட்டது. நான் தான் தமிழ்த்துறையின் தொடக்கத்திற்குப் பிள்ளையார் சுழி போடவேண்டியவனாக இருந்தேன். சென்னையில் துணைவேந்தர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் இல்லத்தில் நடந்த பேட்டியில் துறை வளர்வதற்குரிய குறிப்பினைத் துணைவேந்தர் பேச்சிலிருந்து அறிந்து கொண்டமையால் நான் கருவியாக இருந்து 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்'[1] ஏழுமலையான் திருவருளால் வளர்ப்பதென உறுதி கொண்டேன். தியாக உணர்வும் உண்மையான தமிழ்ப் பற்றும், இன்னல்களைத் தாங்கிக் கொள்ளக் கூடிய இதயமும், 'பலனை எதிர் பாராது கடமையைச் செய்' என்ற கண்ணனின் மறை மொழியில் நம்பிக்கையும் உள்ளவர்கட்கு முடியாத காரியமும் உண்டோ? வினைத்திட்பம் என்பது மனத்திட்பம் என்று வள்ளுவரும் கூறியுள்ளாரன்றோ?

---

1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் காப்பு-2

எண்ணிய எண்ணியாங்
 கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்[2]

என்ற மறைமொழியை என் மனத்தில் இறுத்திக் கொண்டு ஜூலை 31 தேதியன்று (1960) காரைமாநகரிலிருந்து புறப்பட்டேன், எத்தனை நாட்கள் அன்பு மனைவியையும் அருமைச் செல்வர்களையும் பிரிந்து வாழ வேண்டிவருமோ என்ற ஏக்கம் தொடர்ந்து என் மனத்தில் அடிநாதமாக ஒலித்துக் கொண்டிருந்தது. நாடு விடுதலை பெறவேண்டுமென்று போராடிய தேசபக்தர்களின் வரலாறுகள் என்மனக் கண்முன் தோன்றின. பிழைப்பின் நிமித்தமோ அல்லது ஊதியத்தின் பொருட்டோ நான் திருப்பதி செல்லவில்லை என்பதை அந்த 'வேங்கடம் மேவிய விளக்கு' தான் அறியும்; திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் எப்படியும் தமிழ்த் துறையை எம். ஏ, பிஎச்.டி முதலிய பட்டங்களைப் பெற ஒரு வாய்ப்புக் களனாக்க வேண்டும் என்ற மன உறுதியும் கொண்டேன்.

மெய்வருத்தம் பாரார்;
 பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும்
 மேற்கொள்ளார்; செவ்வி
அருமையும் பாரார்;
 அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார்.'[3]

என்ற குமரகுருபர அடிகளின் வாக்கை நினைவில் கொண்டு செயலாற்ற வேண்டும் என்ற உறுதியும் கொண்டேன். இதில் 'மெய்வருத்தம்', 'பசி' 'எவ்வெவர் தீமை', 'செவ்வி அருமை', 'அவமதிப்பு', 'கருமம்' என்ற

2. குறள்—666
3. நீதிநெறி விளக்கம்-52

ஒவ்வொரு கருத்தும் நான் வினையாற்றும்போது 'மின் வெட்டு' போல் 'பளீச் பளீச்' என்று ஒளிவிட்டுக் காட்டி எனக்கு மனத்திட்பத்தை நல்கும்.

எந்தெந்த இருப்பூர்தி ஏறி எப்படி எப்படிச் சென்றேன் என்பதை இப்போது நினைவுகூர முடியவில்லை. படுக்கை பெட்டியுடன் சென்றதை மட்டிலும் நினைந்து பார்க்க முடிகின்றது. தங்கும் அறைகள் கிடைக்கவில்லை. இப்போதுள்ளவசதிகளில் இருபதில் ஒரு பகுதி கூட அன்று இல்லை. திருப்பதியில் எவரையும் முன்னரே அறியேன். தேவஸ்தான சத்திரத்தில் 'தனிக் கட்டைக்கு'த் தனி அறை தருவதில்லை. ஆகஸ்டு முதல் தேதி அதிகாலை இரண்டரை மணி சுமாருக்குத் திருப்பதியை அடைந்த நான், இரயில் நிலையத்திலேயே உறக்கமின்றி இரயிலடி மேடைமீது கிடந்தேன். 'கிடந்தேன்' என்பது பொருள் பொதிந்த சொல். நீள நினைந்து ஊன்றிப் பொருள் கொண்டால் என் நிலையை உணரலாம். 'கடல் மல்லைக் கிடக்கும் கரும்பு' போல் 'தலசயனப் பெருமாளாகக்' கிடந்தேன்!

இரயிலடியிலிருந்து அதிகாலை 4 மணிக்கு வெளிவந்ததும் முதலில் என் கண்ணில் பட்டவர் தேநீர் கடை வைத்திருந்த ஒரு வடநாட்டுக்காரர். நன்றாகத் தமிழ் பேசுபவர். அவர் வாடகைக்கு அறைகள் கிடைப்பதரிது என்பதை விளக்கினார். என் பொருள்கட்குப் பாதுகாப்பு தந்தார். தேவஸ்தான சத்திரத்தில் கட்டணம் செலுத்திக் குளிக்கலாம் என்று விளக்கினார். இரயில் நிலையத்திலேயே காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சத்திரத்தில் சென்று குளித்து வேலையை முடித்துக் கொண்டேன். ஏழுமலையானைத் தரிசிக்காமல் வேலையில் சேர மனம் ஒப்பவில்லை. மலைக்குச் செல்ல ஆற்றுப்படுத்தினார் 'சேட்.' பேருந்து உடனே கிடைத்தது. காலை ஆறு மணிக்குத் திருமலையை அடைந்து விட்டேன். ஏழு மணிக்குத் தரிசனம் முடிந்தது.

'அகலகில்லேன் இறையும்' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகமூன்று
உடையாய் என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் (று) இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.[4]

என்ற பாசுரத்தைப் பாடிச் சேவித்தேன். இப்பாசுரம் 'பிரபத்தி நெறியின்' உயிரான பாசுரம் என்று அப்போது எனக்குத் தெரியாது. மனம் நெகிழ்ந்த நிலையில் திருக்கோயிலை விட்டு வெளியில் வந்தேன். உடனே பேருந்தும் கிடைத்தது. எட்டுமணிக்குத் திருப்பதி வந்து விட்டேன். 'வேங்கடேச பவன்' என்ற அருகிலுள்ள பாலக்காட்டு அய்யர் உணவு விடுதியில் காலை எட்டு மணிக்கே உணவு கிடைக்கும் என்றார் சேட். உணவை 9 மணிக்குள் முடித்துக் கொண்டு பல்கலைக் கழகத்திற்குப் போகத் தயாரானேன். சைக்கிள் ரிக்ஷா ஒன்றை அமர்த்திக் கொண்டு சரியாகப் பத்து மணிக்குக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

பல்கலைக்கழக அமைப்பைப்பற்றிச் சிறிது பகர்தல் இன்றியமையாதது. தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழக அமைப்பினின்றும் சிறிது வேறுபட்டது திருவேங்கடவன் பல்கலைக்கழகம். தமிழகத்தின் பல்கலைக் கழகத்தை யொட்டிக் கல்லூரி அமைப்பு இல்லை. ஆனால் திருப்பதி யில் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற ஓர் அமைப்பு உண்டு. இதற்கு முதல்வர் என்ற ஒருவரும் உண்டு. துறைகள் யாவும் இவருடைய பொறுப்பில் இருக்கும். இரண்டு அல்லது மூன்றாண்டுக்கு ஒருமுறை பல துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களில் ஒருவர் சுழல் முறையில் வரிசை

4. திருவாய் 6.10: 10

முறைப்படி (Rotation) முதல்வராக இருப்பார். பல்கலைக் கலகத்திற்குத் துறையிலிருந்து போகும் கடிதங்கள் யாவும் முதல்வர் மூலம்தான் செல்ல வேண்டும். துறைகட்டுத் தேவையானவற்றை முதல்வர் மூலம்தான் பெறுதல் வேண்டும் பல்கலைக்கழகமும் பல்கலைக்கழகக் கல்லூரியும் (University College) ஒரே வளாகத்திலிருப்பதால் துறையி லுள்ளவர்கட்கு எந்தச் சங்கடமும் ஏற்படுவதில்லை.

முதுகலை வகுப்பு மாணாக்கர்களும் ஆய்வு மாணாக்கர்களும் இருப்பதால் மாணாக்கர்கள் பற்றிய அன்றாடப் பிரச்சினைகள் கல்லூரியிலேயே தீர்ந்து விடும். நான் முதலில் சேர்ந்த பொழுது (1960) இளங்கலைப் பட்டப் படிப்பு மாணாக்கர்களும் பயின்று வந்தனர். 1972 வரை இந்த அமைப்பு இருந்து வந்தது. அதன் பிறகு இளங்கலைப் பட்டப் படிப்பை இக்கல்லூரியினின்றும் நீக்கி விட்டனர். பல்கலைக் கழக வளாகத்தை அடுத்தடுத்த வளாகங்களில் இளங்கலைப் பட்டப்படிப்பு வரைப் பயில்வதற்கு மகளிர்க்கு பதுமாவதி கலைக் கல்லூரி என்ற ஒன்றும், ஆடவர்க்கு வேங்கடேசு வரா கலைக் கல்லூரி என்ற ஒன்றும் உள்ளன. இவை இரண்டும் திருமலை—திருப்பதி அறநிலைய ஆட்சிக்குக்கீழ் அடங்கியவை. 19?2க்குப் பின்னர் கோவிந்த ராஜ சுவாமி கலைக்கல்லூரி என்ற ஒன்றும் அற நிலைய ஆட்சியின்கீழ் புதிதாகத் தொடங்கப் பெற்று நன்முறையில் இயங்கி வரு கின்றது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஆயிரத்திற்கு மேற் பட்ட மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர், இவர்களுள் முதுகலைப் படிப்பிற்குப் பல்கலைக்கழகக் கலைக் கல்லூரிக்குத்தான் வருதல் வேண்டும்.

திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் ஆட்சியின்கீழ் உள்ள தனியார் கல்லூரிகளிலும் அரசுப் பொறுப்பிலுள்ள கல்லூரிகளிலும் முதுகலை வகுப்புகள் இல்லை. சரியான வசதிகள் ஏற்படுத்தித் தரமுடியாதென்றோ வேறு என்ன காரணத்தினாலோ முதுகலைப் பட்டப் படிப்

பிற்கு அக்கல்லூரிகளில் வாய்ப்புகள் ஏற்படுத்தப் பெற வில்லை. ஆனால் அனந்தப்பூர், காவலி, கடப்பை, கர்நூல் இந்த இடங்களில் பல்கலைக்கழக மையங்கள் நிறுவப் பெற்று முதுகலைப் பட்டப் படிப்பிற்கும் ஆராய்ச்சிப் பட்டப்படிப்புகளுக்கும் வாய்ப்புகளும் வசதி களும் செய்யப் பெற்றுள்ளன.

இத்துடன் இவற்றை நிறுத்திக் கொண்டு யான் கல்லூரியில் சேர்ந்ததுபற்றிக் கூறுவேன். நான் சென்ற போது நிரந்தர முதல்வர் பேராசிரியர் டாக்டர் T. A. புருடோத்தம் (தத்துவத் துறைப் பேராசிரியர்) சில மாதங்கள் விடுப்பிலிருந்தபடியால் பேராசிரியர் டாக்டர் எஸ். இராமச்சந்திரராவ் (இயற்பியல் பேராசிரியர்) முதல்வர் பொறுப்பில் இருந்தார். அவரிடம் என் சான்றிதழ்களையும் சேரும் அறிக்கையையும் தந்து பணியில் அமர்ந்தேன். வளர்ந்து வரும் பல்கலைக் கழகத்தில் இடநெருக்கடி அதிகம். கல்லூரியே திருமலை—திருப்பதி அறநிலையத்திற்குக்கீழ் இயங்கி வந்த கலைக் கல்லூரிக்குரிய கட்டடத்திலும், பல்கலைக்கழக அலுவலகம் மேற்படி அறநிலையத்தின்கீழ் இயங்கின பதுமாவதி மகளிர்க் கலைக்கல்லூரிக் கட்டடத்தின் தரை தளத்திலும் செயற்பட்டு வந்தன. மகளிர்க் கல்லூரி மேல் மாடியில் இயங்கி வந்தது. பல்கலைக்கழகம் (1954) தொடங்கி ஆறாண்டுகள் ஆயினும், கட்டட வேலைகள் செயல் துடிப்பும் செயல்திறமையும் மிக்க துணைவேந்தர் திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் சீரிய தலைமையில் நடைபெற்று வந்த போதிலும் இயற்பியல், வேதியியல், தாவர இயல் துறைகட்கென்று ஒரு மூன்று மாடிக் கட்டடமும் விலங்கியல், நில உட்கூற்றியல் துறைக்கென்று ஒரு மூன்று மாடிக் கட்டடமும் நிறைவு பெறும் நிலையிலிருந்தன. பல்கலைக் கழகத்திற்கென்று ஒரு னிக் கட்டட வேலை தொடக்க நிலையிலிருந்தது. அங்ஙனமே இலக்கியக் கூட்டங்கள், விழாக்கள் நடைபெறு

வதற்கென்று ஒரு பெரிய மண்டபத்திற்கு அடிக்கல்லும் நாட்டப் பெற்றிருந்தது. பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இவர்கட்கென்று சுமார் ஐம்பது இல்லங்கள் நிறைவுற்றிருந்தன; இவற்றைத் தவிர 'பிரகாசம் நகர்' என்ற பெயரில் பல இல்லங்கள் கட்டத் திட்டமும் இருந்தது. இத்திட்டம் 1970-இல் தான் முடிந்தது. அப்போதுதான் எனக்கும் ஓர் நல்ல இல்லம் கிடைத்தது.

இடநெருக்கடியில் எனக்கு இந்தித் துறையில் இருக்க ஓர் இடம்தரப் பெற்றது. அந்தத் துறையில் இருந்தபோது இந்தி—தமிழுக்கு ஒவ்வாமையாக இல்லை; தமிழும் இந்திக்கு ஒவ்வாமையாக இல்லை. ஒரு பெரிய மண்டபம்; மூன்றாவது மாடியில் சிமெண்ட் பலகையால் வேயப்பட்ட கூறை. பிப்பிரவரியிலிருந்து ஏப்பிரல் முடிய சரியான கோடை; தாங்க முடியாத வெப்பம். தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். டாக்டர் வி.பி சிங்க் துணைப் பேராசிரியர்— துறைத் தலைவர் (உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்). அடுத்த விரிவுரையாளர் திரு எஸ். டி. நரசிம்மாச்சாரியார், வைணவர் (ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்). டாக்டர் சந்திரபாநு இராவுத், டாக்டர் ராம்பாபு சர்மா (உ,பி.யைச் சேர்ந்தவர்கள்; திரு போரா என்பவர் (மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்). டாக்டர் சிரீதர் சிங்க் என்பவர் (பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்); இவர்கள் விரிவுரையாளர்கள். இவர்களைத் தவிர ஆந்திரம் உட்பட பல மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஆய்வு மாணவர்களாகச் சேர்ந் திருந்தனர். எல்லோருமே உதவிப் பணம் பெற்றவர்கள். ஆய்வு மாணவர்கள் எல்லோருமே என்னிடம் மரியாதை யாகவும் அன்புடனும் நடந்து கொண்டனர். இந்தித் துறை ஆசிரியர்கள் அனைவருமே சுவை மிக்க என் உரையாடலைப் போற்றுபவர்கள்; அனைவருமே என்னிடம் பெருமதிப்பு காட்டினர். இவர்கள் அனைவரை

யும் விட ஒரு பத்தாண்டாவது மூத்தவனாக இருப்பேன்; அதிக மதிப்பு வைத்திருந்தமைக்கு வயதும் ஒரு காரணமாக இருக்கலாம். புரையறக் கலந்து எல்லோரிடம் இன்முகத்துடன் பழகுவதைப் பொறுத்துதான் அன்பும் மதிப்பும் மரியாதையும் வரும் என்பது என் தாழ்மையான கருத்து.

சேர்ந்து சில திங்களுக்குள் எனக்கு ஒரு புதிய இரும்பு அலமாரி (Godrej) தரப் பெற்றது. என் நூல்கள் முதலியவற்றை அதில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடிந்தது. 1960லிருந்து இந்தி, தத்துவம், விலங்கியல், தெலுங்கு போன்ற ஐந்திடங்கட்குத் தள்ளப் பெற்றேன். எங்கு இடம் கிடைக்குமோ அங்கெல்லாம் தள்ளப் பெற்றேன். 1968லிருந்துதான் புதிதாகக் கட்டப் பெற்ற கலைக் கட்டடத்தில் ஒரு சிறிய அறை தரப்பெற்றது. 1970-இல் தமிழ் எம். ஏ. தொடங்கப்பெறும்வரை 'சிறுகக் கட்டிப் பெருக' அதில் வாழ்ந்தேன். இரண்டு தடவைகள் தமிழ்ப் பாடத் திட்டக்குழு கூட்டம் கூட அச்சிறு அறையில்தான் நடைபெற்றது. இந்தக் கூட்டங்கட்கு டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்), பேராசிரியர். பூ. ஆலால சுந்தரம் செட்டியார் (சென்னை கிறித்துவக் கல்லூரி, தாம்பரம்) இவர்கள் 1970 வரையில் வந்து கொண்டிருந்தனர். ஆனால் டாக்டர் மு.வ.மட்டிலும் என் வேண்டுகோளுக்கிணங்க பாட திட்டக் குழுவின் தலைவராக இருந்து வந்தார்; அவர் 1974-இல் திருநாடு அலங்கரிக்கும் வரை அப்பதவியில் இருந்து வந்தார்.

## 2. துணைவேந்தரைச் சந்தித்தல்

கல்லூரியில் வேலை ஒப்புக் கொண்ட அன்று மாலையே இந்தித் துறைத் தலைவர் டாக்டர் வி. பி. சிங்க் தன் துறை உதவியாளர் கிருட்டிணன் என்பாரை என்னுடன் அனுப்பி நான் ஊரில் தங்குவதற்கு ஓர் அறையைக் கண்டறிந்து அதை அமர்த்திக் கொடுக்குமாறு பணித்தார். அந்தச் சிறுவன் உள்ளூரைச் சார்ந்தவனாதலால் அன்று மாலையே தீர்த்த கட்டத் தெருவில் ஒரு சிறிய அறையை மாதம் ரூ 20/- வாடகையில் அமர்த்திக் கொடுத்தான். மின்கட்டணம் உட்பட தங்குவதற்கென்று மாதம் ரூ 25/- செலவாயிற்று. இரண்டு ஆண்டுகள் ஏதோ தண்ணீர் வசதி இருந்தது. அதன்பிறகு குழாயில் தண்ணீர் வருவதில்லை. நான் தங்கியிருந்த அறை திரு K. சுப்பிரமணிய அய்யர் என்ற நகராண்மைக் கழக அலுவலர் வீட்டின் பின்புறத்தி லிருந்தது. என் அறை தீர்த்த கட்டத் தெருவில் இருந்தது. அவர் வீட்டு முகப்பு கங்கை கொண்டான் மண்டபத் தெருவில் (என் அறைக்குப் பின்புறம் வீடு இருந்தது) இருந்தது. வாடகை கொடுக்கும்போது சுற்றிக்கொண்டு போக வேண்டியநிலை. சற்றேறக்குறைய 100 அடி நடந்து செல்ல வேண்டும். ஆனால் அவர்கள் அடிக்கடிக் கொல்லைப் புறமாக வரநேர்வதால் இந்த நடையுமின்றி வாடகை எளிதாக அவர்கள் கைக்குப் போய்ச் சேரும்.

பணியில் சேர்ந்து ஒரு வாரத்திற்குள் காரைகுடியி லிருந்து என் மிதிவண்டியும் இரயில் மூலம் வந்து சேர்ந்தது. இரவில் மிதிவண்டியை நடைபாதையில் (இடைக்கழி போன்ற ஒரு சிறிய இடம்) வைத்துக் கொள்வேன். அந்த இடைக்கழிக்கு அமைக்கப்பெற்றுள்ள கம்பிக் கதவை இரவில் பூட்டிவிடுவேன். மிதிவண்டியும் பாதுகாப்பாக இருக்கும். பெரும்பாலும் என் அறைக்குப் பின்புறத்திலுள்ள மேற்படி வீட்டின் பின் பகுதி குடும்பத் துடன் தங்குவோருக்கு வாடகைக்கு விடப் பெறும். வசதிகள் குறைவாக இருந்ததால் யாரும் நிரந்தரமாகத் தங்குவதில்லை. அறையில் தங்கியிருந்த ஆராண்டுக்காலத் திலும் பெரும்பாலும் இப்பகுதி காலியாகவே இருக்கும். என் அறைக்குப் பக்கத்தில் அடுத்து ஒரு சிறிய அறை இருந்தது, என அறையில் பாதி அளவுதான் அது. அதில் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்க லாம்; இந்த அறையும் இரண்டு அறைகட்கும் இடையி லிருந்த இடைக்கழியும் முதலாழ்வார்கள் மூவரும் முதன் முதலாகச் சந்தித்த திருக்கோவலூரிலுள்ள இடைக் கழியை நினைவூட்டுவதாக இருந்தது. திவ்வியப் பிரபந்தத் தில் நாடோறும் சில பாசுரங்களை ஓதுவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்ததால், அந்த நூலைக் கையி லெடுக்கும் போதெல்லாம் 'அன்பே தகளியா' 'வையதிம் தகளியா' 'திருக்கண்டேன்' என்ற முதல் திரு அந்தாதிப் பாசுரங்கள் என் மனத்தை நிறைவிக்கும். தனிமை, என் சிறுவர்களின் நினைவு, சிறுவர்கள் எப்படிப் படிக்கின்றார் களோ என்ற கவலை அடிக்கடி மனத்தில் எழுந்தாலும் நூல்கள் எழுதும் பணியும் பார்வைப்படிகளைச் சரி பார்த்து அஞ்சலில் சேர்க்கும் பணியும் திவ்வியப் பிரபந்த ஆய்வும் அவற்றை மறக்கடிக்கும்.

பணியை ஒப்புக்கொண்ட ஒரு சில நாட்களில் துணைவேந்தர் திரு எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களை அவரது திருமாளிகையில் சந்தித்தேன். இது

மரியாதைக்காக ஏற்படுத்திக் கொண்ட சந்திப்பு. சாதாரணமாகக் காலையில் அவரைச் சந்திக்கலாம். பைஜமா ஜிப்பாவுடன் காணப்படுவார். தோட்டத்தில் உலாவுவார். அப்போது சந்திக்கலாம். சௌலப்பியமே உருவெடுத்தாற் போன்ற எளிமையுடன் காணப் படுவார். நான் திருப்பதியில் பணி ஏற்றுக் கொண்ட போது எனக்கு வயது நாற்பத்து மூன்று. தென்னிந்தியா வில் புகழ்பெற்ற ஒரு பெரிய கல்லூரியில் பேராசிரியனாக இருந்து விட்டு என் நற்பேற்றின் பயனாகத் திருப்பதியில் மாதம் ரூ 153/ இழப்பில் பணியில் சேர்ந்தவன். இறுதி வரையிலும் இந்த இழப்பு ஈடு செய்யப் பெறவில்லை. இதையெல்லாம் துணைவேந்தர் அறியாதவர் அல்லர். சிக்கனத்தில் சிறந்தவராதலால் இவையெல்லாம் அவர் மனத்தில் இடம் பெறுவதில்லை. ஒருவர் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அவரைப் பேட்டியில் மடக்கி எதிர்காலத்தில் ஏற்படும் பல நன்மை களை எடுத்துக்காட்டி துணைப் பேராசிரியராக (Reader) நியமனம் செய்து விடுவார். இப்படியே ஒருவர் எந்த வேலைக்கு மனுச்செய்திருந்தாலும் அவரை அடுத்த கீழ்நிலையிலுள்ள பணியில் அமர்த்திவிடுவதில் மிக சமர்த்தர். ஓரிரண்டு ஆண்டுகளில் அவரைநன்கு கவனித்து, அவர்திறமைகளை அளந்து எடைபோட்டுக் கணித்து விடுவார்,

திரு. எஸ். கோவிந்த ராஜுலு நாயுடு எனக்குத் தந்த அறிவுரை இது: "மிஸ்டர் ரெட்டியார், ஒன்று நான் உங்கட்குச் சொல்லுகின்றேன். அஃது உங்கள் நன்மைக் காகத்தான். இப்பக்கம் உள்ள ரெட்டிகளிடம் நன்கு கலந்து பழகாதீர்கள். அஃது உங்களை உள்ளூர் அரசியலில் (Local politics) கொண்டு போய் விட்டுவிடும்; உங்கள் மனத்தையும் கெடுத்துமன அமைதியையும்குலைத்துவிடும். உங்கள் கடந்தகால வாழ்க்கையையும் நீங்கள் இதுகாறும் எழுதி வெளியிட்டுள்ள நூல்களையும் கவனித்த பிறகும்,

சென்னையில் என் இல்லத்தில் நடந்த நியமனக்குழுவின் முன்னர் குழு கேட்ட வினாக்களைத் தாங்கள் சாதுர்ய மாகவும் அடக்கமாகவும் அளித்த விடைகளைக் கூர்ந்து கவனித்த பிறகும் நீங்கள் அறிவு, ஆராய்ச்சி இவற்றில் அதிக நாட்டமுள்ளவர் என்பது எனக்குத் தெரிந்தது. நீங்கள் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஏராள மான நூல்களைப் படியுங்கள். தக்க மன நிலை உருவாகும் போது எழுதுங்கள். பல்கலைக் கழகச் சூழ்நிலை உங்கள் போக்குக்கும் அவாவுக்கும் ஏற்றபடி இருக்கும். நல்ல நூல்களை வாங்குவதற்கு நூலகரிடம் தேர்ந்தெடுத்த நூல்பட்டியலைத் தாருங்கள். அவரிடமும் பேசுகின்றேன்; அவரும் தாங்கள் பரிந்துரைக்கும் நூல்களையெல்லாம் வாங்குவார். நூலகத்தில் தமிழ்ப்பிரிவினை வளமாக்குவது உங்கள் பொறுப்பாக இருக்கட்டும். நீங்கள் நாட்டின் தென்பகுதியிலிருந்து திருப்பதி வந்திருக்கிறீர்கள். நீங்கள் விரும்பும் போதெல்லாம் என்னைச் சந்திக்கலாம்; உங்கள் தேவைகளை எடுத்துக் கூறலாம். துறைவளர்ச்சியைப் பற்றியும் உங்கள் யோசனைகளைக் கூறலாம்" என்றார்.

நான் அவரிடம் பழைய நிகழ்ச்சியொன்றை எடுத்துக் கூறி[1] அதில் யான் எடுத்துக் கொண்ட முயற்சியையும் அதில் வெற்றி பெற்றதையும் தெரிவித்தேன். அவரும் நினைத்து பார்த்து என்னைத் தட்டிக் கொடுத்து வாழ்த்தி னார். அந்த நிகழ்ச்சி இது:- நான் பி. எஸ்சி. எல். டி. பட்டத்துடன் துறையூர் ஜமீந்தார் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியனாக இருந்தபோது (1943இல் என்பதாக நினைவு) தமிழ் எம். ஏ., தேர்வு எழுத விண்ணப்பித்துக் கொண்டேன்; மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணி யாற்றியவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் எந்தத்

1. இவரையும் இன்னொரு ஆட்சிக் குழு உறுப்பினர் ஜஸ்டிஸ் பஷிர் அகமத்தையும் சந்தித்ததை நினைவுபடுத்தினேன்.

தேர்வும் (அறிவியல் பாடம் சம்பந்தப்பட்டவை தவிர எழுதலாம் என்ற விதி இருந்தது. விலக்குரிமை (Exemption பெறுவதற்கு விண்ணப்பித்தேன். பி. எஸ்சி. பட்டதாரி அதற்குப் போக முடியாதென்றும், அப்படி எழுதுபவர் பி. ஏ., பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும் என்றும் பதிவாளர் தெரிவித்தார். உடனே நான் எழுதினேன்; "நான் ஆசிரியன்; மூன்றாண்டு அனுபவம் உண்டு. என் இடைநிலைத் தேர்வு சான்றிதழையும் (Intermediate Certificate) எல். டி. பட்டயத்தை இடைத் தரக் கல்வி சார்ந்த பயிற்சிச் சான்றிதழாகக் கருதிக் கொண்டும் என்னை பி. ஏ. தேர்வுக்கு அனுமதிக்க வேண்டும்" என்று. அதற்குப் பதிவாளரிடமிருந்து வந்த பதில்; "பட்டமே பெறாதவர்க்குத்தான் இந்த விதி பொருந்தும், நீங்கள் தொடக்கத்திலிருந்தேஇரண்டுபட்டங்கள்பெற்றிருப்பதால் இந்த விதி உங்கட்குப் பொருந்தாது. இதனால் உங்களை பி ஏ. தேர்வுக்கு அனுமதிக்க இயலாது" என்று. நான் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு எழுதினேன்! "நான் ஆசிரியன், இந்த விதி ஆசிரியர்காக (Bonafide teachers) ஏற்பட்டது. ஆகவே எனக்குப் பொருந்தும். ஆதலால் என்னை அனுமதிக்க வேண்டும்" என்று வாதித்தேன். இதற்குப் பதிவாளர் விடுத்த பதில்; "நீங்கள் கூறுவது. சரி தான். விதி அப்படி இருந்தாலும் அனுமதிக்காதது மரபொழுங்காகும் (Convention). ஆகவே அனுமதித்த தற்கில்லை,' என்று. உடனே மீண்டும் ஒரு கடிதம் எழுதினேன்; "இதுகாறும் நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துகளை ஆட்சிக் குழுவின் (Syndicate) ஆலோசனைக்கு வையுங்கள். அவர்கள் முடிவெடுக்கட்டும்" என்று. இதற்குப் பதிவாளரிடமிருந்து வந்த பதில்; "உங்கள் கடிதங்களை ஆட்சிக் குழுவிற்கு முன் வைக்கப்பட முடியாது என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்." என்று. உடனே நான் என் எல்லாக் கடிதங்களையும் அவற்றிற்குப் பதிவாளர் விடுத்த மறுமொழிகளையும் இயைபுபடுத்தி அச்சிட்டு எல்லா ஆட்சிக் குழு உறுப்பினர்

கட்கும் நேராக அனுப்பி என் வேண்டுகோளைக் கவனித்து ஆதரவுள்ள மறுமொழி தருமாறு வேண்டினேன் என்பதை அவரை நினைவுகூருமாறு வேண்டினேன். 'நான் விடாக் கொண்டனாகவும், பதிவாளர் கொடாக் கொண்டனாகவும்' கடிதப் போரிட்டதைக் காட்டி இறுதியில் (1943இல் தொடங்கிய போராட்டம் 1947இல்) என் அருமைப் பேராசிரியர்-முதல்வர் ஜெரோம் பாதிரியார் விடாது வற்புறுத்தியமையால் இந்த விதி மாற்றப் பெற்றதையும் எடுத்துக்காட்டிப் பழைய நிகழ்ச்சியை நினைவுகூரச் செய்தேன். அவரும் மகிழ்ந்து எனது பொறுமையையும் விடாது முயன்ற மன உறுதியையும் மகிழ்ந்து பாராட்டி என்னை வாழ்த்தினார்.

ஒரு சில நாட்கள் கழிந்த பிறகு என் அறைக்குப் பக்கத்துத் தெருவிலிருந்த இரு பெரியார்களைச் சந்தித்தேன். ஒருவர், நிம்மகாய வீதியிலிருந்த நகராண்மைக் கழகத் தலைவர் திரு. முனிரெட்டி என்பவர்; இவர் பட்டம் பெறாதவர். நன்றாக ஆங்கிலம் பேசுபவர், மற்றொருவர், கங்கை கொண்டான் தெருவிலிருந்த திரு. எம். பலராமரெட்டி என்பவர்; பி. ஏ. பட்டதாரி. இவர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்; திருமணமாகாதவர், பொதுப்பணியில் அதிகமாக ஈடுபாடு உண்டு. யார் தவறுகள் செய்தாலும் அவற்றைக் கண்டு பொறுக்க முடியாதவர். பல்கலைக்கழக ஆட்சியில் நடைபெறும் சில தவறுகளை இவர் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. இக்காரணத்தால் துணைவேந்தருக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு உண்டு.

முதலில் நான் திரு. எம். பலராமரெட்டியைச் சந்தித்தேன். மிக அன்பாக இன்முகத்துடன் வரவேற்றார். மிக அன்பொழுகப் பேசினார். "உங்களுக்குத் திருப்பதியில் ஏதாவது உதவிகள் தேவைப்படுமானால் என்னிடம் தாராளமாகச் சொல்லலாம். நான் மிகச் சிறியவன்.

என்னால் செய்யமுடியாமல் போனாலும் என் செல்வாக்கால் என் நண்பர்களைக் கொண்டு செய்விப்பேன்'' என்று உறுதியாகச் சொன்னார். உடனே எனக்கு வள்ளுவர் வாக்கு நினைவிற்கு வந்தது.

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.[2]

என்ற குறள் திரு.பலராமரெட்டியை நினைக்கும் போதெல்லாம் என் மனத்தில் எழும். 'அதனால் இரண்டும் (அகமும் முகமும்) ஒருங்கே மலர வேண்டும் என்பது பெற்றாம்' என்ற பரிமேலழகரின் உரைக்குறிப்பிற்கும் இவர் ஓர் இலக்கியம் போல் திகழ்ந்ததைத் திருப்பதியில் இருந்த வரை நினைந்து நினைந்து மகிழ்வேன். நான் திருப்பதியிலிருந்தவரை—பதினேழு ஆண்டுக் காலம்—எந்த உதவியையும் இவரிடம் பெறவில்லை; எவரிடமும் பெறவில்லை. நல்லதோ கெட்டதோ எது வந்தாலும் என் காலில் நின்றே சமாளித்துக் கொள்வேன். எந்தச் செயலில் இறங்கினாலும் ஏழுமலையான்மீது பாரத்தைப்போட்டுச் செயற்படுவேன். பலனையும் அவனுக்கே விட்டுவிட்ட பிறகு எனக்கு எந்தக் கவலையும் ஏற்படுவதில்லை. மலை போன்ற சிரமம் வந்தாலும் அதைக் கொசுபோலத்தட்டி விட்டுவிடுவேன். இறுதியில் முடிவு நல்லதாகவே அமையும். எந்தச் செயலிலும் தவறான வழிகளைக் கையாள்வது மில்லை; குறுக்குவழிகளில் செல்லத்துணிவதுமில்லை. திரு பலராமரெட்டி எனக்கு ஓர் எச்சரிக்கையையும் தந்தார்: ''மிஸ்டர் ரெட்டியார், என்னிடம் பழகுவது திரு. கோவிந்தராஜுலு நாயுடுவிற்குத் தெரியாமலிருக்க வேண்டும். தெருவில் செல்லும்போது 'வணக்கம்' கூடத் தெரிவிக்க வேண்டா. நான் பல்கலைக்கழக வளாகத்திற்கு வருங்கால் என்னைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிடுங்கள். கழுகுகள் போல் பல உளவாளிகள் உள்ளனர். அவர்

2. குறள்—786.

கள் ஏதாவது இல்லாதவற்றைத் துணைவேந்தரிடம் சொல்லி நம் உறவைத் தெரிவிப்பார்கள். துணைவேந்தர் கோள்களை நம்புபவர். ரெட்டிகளைப்பற்றி கூறப்பெறும் புகார்கள் அவருக்கு வெல்லமாக இனிக்கும். அவரால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் உங்கட்குத் தொல்லைகள் தரலாம். நீங்கள் தென்பகுதியிலிருந்து பணிக்காக வந்துள்ளீர்கள். உங்களுக்கு ஏன் இந்த வம்பு? திருப்பதி அரசியலிலிருந்து நீங்கள் ஒதுங்கியே இருங்கள்'' என்றார்.

ஒரு சில நாட்களுக்கு முன்னர் துணைவேந்தர் தந்த அறவுரையும் இப்போது திரு பலராம ரெட்டி தந்த எச்சரிக்கையும் எனக்கு வழி காட்டின; இவை இரண்டும் என் இயல்புடன் பொருந்தியனவாதலால் இவற்றைக் கடைப்பிடிப்பதில் எனக்கு யாதொரு சிரமமும் இல்லை. துறையூரிலிருந்த போது உள்ளூர்ப் பொது மக்களிடமும், சுற்றுப்புறச் சிற்றூர்ப் பெரியவர்களிடமும் நன்றாகப் பழகினேன்; இந்தப் பழக்கம் புதிய உயர்நிலைப் பள்ளியின் மேம்பாடு பற்றியதாகவே இருக்கும். அவர்கள் பிள்ளை களின் கல்வி மேம்பாடு பற்றியே இருக்கும். காரைக்குடி யிலிருந்த போதும் நகரத்தார் வகுப்பைச் சேர்ந்த பெரிய வர்களிடம் பழகும் போதெல்லாம் அவர்களிடம் என் பேச்சு தமிழையொட்டியே இருக்கும். நகரத்தார் பெரு மக்கள் நல்ல பண்பாடுடையவர்கள்; தமிழ்ப்பற்று மிக்க வர்கள். பெரும்பாலோர் சைவர்கள். திருநீறு சந்தனப் பொட்டு இல்லாத பெரியவர்களைப் பார்க்க முடியாது. நான் பழகியவர்களில் பலர் 'சிவபூசை' எடுத்துக் கொண்டவர்கள் குருமுகமாக. இவர்களில் இளைஞர்கள் செயல்திறம் மிக்கவர்கள் இதனால் காரைக்குடியிலிருந்த போதும் மிக்க செல்வாக்குடனும் புகழுடனும் என்காலம் சென்றது. பல நூல்களை ஆழ்ந்து கற்றலும் என் எழுத்துப் பணியும் பிறவழிகளில் காலத்தை வீணடிக்க இடம் தருவ

தில்லை; மனநிலையையும் குலைப்பதில்லை. திருப்பதியிலும் இதே நிலைதான், பழகுவதற்கு ஒரு சிலரே என் கண்ணில் பட்டனர். அவர்களிடம் மட்டிலுமே நல்லுறவு நெருங்கிய தொடர்பு—கொண்டிருந்தேன். பல்கலைக் கழகத்திலும் சிலரிடம்தான் நெருங்கின பழக்கம் ஏற்பட்டது. எல்லோரிடமும் நன்றாகத்தான் பழகுவேன். 'பட்டுகத்தரித்துபோல்' வெட்டிக் கொள்வேன். இதனால் எனக்கு பல்கலைக் கழக வளாகத்தில் நல்ல மதிப்பு இருந்தது; பெரும்புகழுடன் பதினேழு ஆண்டுகள் கழிந்தன.

திரு. முனிரெட்டி அவர்களையும் அவர் இல்லத்தில் சந்தித்தபோது அவரும் மிகவும் இன்முகத்துடன் உரையாடினார். திரு. பலராமரெட்டி என்னிடம் தமிழில் பேசி மகிழ்வார்; அவர் பேசும் தமிழும் சுமாராக இருக்கும். ஆனால் முனிரெட்டியிடம் நான் தெலுங்கில் தான் பேச்சினைத் தொடங்கினேன். குறைபாடுள்ள தமிழ்ஒலியுடன் கூடின—என் பேச்சுத் தெலுங்கு— அவரை மகிழ்விக்கும். அவர் நல்ல தெலுங்கில் என்னிடம் பேசுவார் திருப்பதியிலிருந்தவரை அவரிடம் தெலுங்கில்தான் பேசுவேன். நகராண்மைக் கழகத் தலைவர் என்ற முறையில்தான் இவரிடம் பழகினேனேயன்றி சாதிப்பற்று (அல்லது வெறி?) இங்ஙனம் பழகுவதற்குத் தூண்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவரிடம் பழகின சில மாதங்களிலேயே இவருடைய உதவியை நாட வேண்டியிருந்தது. நான் தங்கியிருந்த அறை தீர்த்த கட்டத் தெருவின் தென்கோடியில் காந்திச் சாலையைச் சந்திக்கும் இடத்தில் இருந்தது. தீர்த்தகட்டத் தெரு தென்வடலாகவும் காந்தி சாலை கிழக்கு மேற்காகவும் அமைந்திருந்தன. என் அறைக்குக் கீழ்ப்புறத்தில் தெருவையொட்டி 'ஆரோக்கிய பவன்' என்ற சிற்றுண்டி விடுதி இருந்தது: கர்நாடக மாநிலத்தை சார்ந்தஅந்தணர்

ஒருவர் நடத்திக் கொண்டிருந்தார்.[3] மேல்புறமாக இருந்த என் அறையையொட்டி ஒரு சிறு சாய்க்கடை அமைந்திருந்தது. விடுதியின் வேலையாள் பின்புறவாசல் வழியாக வந்து எச்சிலைகளை என் அறைப்பக்கம் போட்டு விடுவான். நாய்கள், பன்றிகள், எச்சிலையைப் பொறுக்கும் பிச்சைக்காரர்கள்- இவர்களிடையே 'மும்முனைப் போராட்டம்' இருக்கும். பெரும்பாலும் இலைகளில் அதிகம் ஒன்றும்இராததால் 'மனிதர்கள்' ஒதுங்கி விடுவார்கள். நாய்களும்பன்றிகளுமே பலத்த குரல்களில் போராடும். இந்தக் கூச்சலும் குழப்பமும் பெரும்பாலும் மாலை ஏழு மணி முதல் இரவு 12 மணி வரை இருக்கும். என்னால் அமைதியாகப் படிக்க முடிவதில்லை. நாற்றமோ மூக்கைத் துளைக்கும். நகரசுத்தியாளர்களும் அடிக்கடி இந்த இலைகளை அப்புறப்படுத்துவதில்லை. பலமுறை திரு. பட்டிடம் இலைகளைத் தம் விடுதியையொட்டி ஒரு பெரிய தொட்டியில் போடவும் அவற்றை அடிக்கடி அப்புறப்படுத்தவும் ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள்கள் விடுத்தேன். சொல்லும் போதெல்லாம் கவனிப்பதாகப் 'புன்முறுவல்' செய்வார்; ஆனால் கவனிப்பதில்லை. நாற்றமோ தாங்க முடிவதில்லையே. நல்ல அறை கிடைத்தும் அதில் சுகாதாரத்துடன் வாழ முடியவில்லையே என்று வருந்தினேன்.

திரு. முனிரெட்டியைச் சந்தித்துப் பேசினால் இதற்குஒரு கழுவாய் பிறக்குமோ என்று எண்ணி அவரைச் சந்தித்து என் பரிதாப நிலையை எடுத்துச் சொன்னேன்; கவனிப்பதாகப் முறுவலித்தார். நான் சொன்னது இரவு எட்டு மணிக்கு. மறுநாள் காலை

3. நெருங்கிப் பழகிய பிறகுங்கூட அவர் பெயரைத் தெரிந்து கொள்ளவில்லை. மிஸ்டர் பட் என்றே அழைப்பேன். அவரும் என்னை மிஸ்டர் ரெட்டியார் என்றே விளிப்பார். அவர் தெலுங்கு, தமிழ் இரண்டு மொழிகளையும் நன்கு பேசுவார்.

நகரச்சுத்தித்தொழிலாளர்கள் ஐவர் அற்புதமாகச் செயல்பட்டனர். சுமார் அரை பர்லாங் தொலைவுக்குச் சுத்தம் செய்தனர். நகராண்மைக் கழக நல வாழ்வுக்கு ஆய்வாளர் (Health Inspector) ஒருவர் திரு பட் அவர்களிடம் பேசி எச்சிலைகள் போடும் தொட்டியொன்றுக்கு ஏற்பாடு செய்தார். நாள்தோறும் அந்த எச்சிலைகளை அப்புறப்படுத்தவும் நகரசுத்தி ஆட்களிடம் ஆணைபிறப்பித்தார். அந்த அறையிலேயே 1960 ஆகஸ்டு முதல் 1966 ஜூலை முடிய (ஆறு ஆண்டுகள்) என் தனி வாழ்க்கை நலமாகச் சென்றது 1966 ஆகஸ்டு முதல் என் மனைவியும் மக்களும்திருப்பதிக்கு வந்து சேர்ந்தனர். அது முதல் எனக்கு எல்லாவசதிகளும் ஏற்பட்டன.

குமிழி-159

## 3. முதுகுப்புறமாகப் பேனாக் குத்து

குடும்பத்தைவிட்டுப் பிரிந்து பல்வேறு கவலைகளுடன் பணியைக் கவனித்துக் கொண்டு வந்தபோது பதிவாளரிட மிருந்து அவர் மேலெழுத்துடன் (Endarsement) ஒரு கடிதம் வந்தது. இந்தக் கடிதம் காரைக்குடி அழகப்பர் பயிற்சிக் கல்லூரியின் தாளாளர் திரு. C V. C T. V வேஙகடாசலம் செட்டியாரிடமிருந்து வந்த கடிதம். இதனை நேராக எனக்கு அனுப்பாமல் பல்கலைக் கழகப் பதிவாளர் மூலம் அனுப்பியிருந்தமையால் அவரால் அனுப்பப் பெறுகின்றது. (Forwarded) என்ற வாசகத்துடன் எனக்குக்கிடைத்தது. சேர்ந்து ஒரு வாரத்தில்

கடிதத்தில் (ஆணையில்) குறிக்கப் பெற்றிருந்த செய்தி இது. ''திரு. ந. சுப்புரெட்டியாருக்குக் கொடுக்கப் பெற்ற ஆணை தள்ளுபடி செய்யப் பெற்றது? இந்த

ஆணையின்படி இவர் திரும்பவும் அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் வந்து பணியேற்கவேண்டியது; இதற்கு விருப்பம் இல்லாவிடில் மூன்று மாத ஊதியத்தை நிர்வாகத்திற்குக் கட்டவேண்டியது.'' என்பதாக. கடிதம் என்னைத் திடுக்கிடவைத்தது. மனம் குழம்பிச் செயலற்ற நிலைக்குத் தள்ளப் பெற்றது. திரும்பவும் காரைக்குடிக்குப் போக விருப்பம் இல்லை. ''மூன்றுமாத ஊதியத்தைக் கட்டவேண்டுமா? வழக்குத் தொடங் கலாமா? ராய. சொ. சா. க இவர்கட்குக் கடிதம் எழுதி ஆணையை மாற்றச் செய்யலாமா?'' என்று என் மனம் எண்ணியது. ஒரு நாள் துணைவேந்தரைக் காலையில் சந்தித்து இந்தச் செய்தியைக் கூறி செய்ய வேண்டியது பற்றி யோசனை கேட்டேன்.

இந்தச் செய்தியைச் சொன்னவுடனே அவர் நகைத் தார். ''மிஸ்டர் ரெட்டியார், இந்த இரண்டாவது ஆணை நகைப்பிற்கிடமாக உள்ளதே. வள்ளல் தோற்று வித்த புகழ் பெற்ற நிர்வாகம் துக்ளக் ராஜ்யமாகவா போய்விட்டது? மூன்று மாத ஊதியம் அனுப்பாதீர்கள். அவர்களால் இரண்டு ஆண்டிற்கு ஒன்றும் செய்ய முடியாது. இரண்டாண்டு கழித்து பணம் கட்டுவதும் கட்டாதிருப்பதும் பற்றி யோசிக்கலாம்'' என்றார். திரு. CV. CT. V. வேங்கடாசலம் செட்டியாரின் மனம் ஏன் மாறியது? சிறந்த நிர்வாகத் திறமையுள்ளவ ராயிற்றே. இது மணியனது கைங்கரியமாக இருக்குமோ? முன்னர்தான் என்னை ஒன்றும் செய்ய இயலவில்லை. பலமான பின்னணி இருந்தது. இப்பொழுது ''கல்லெறிந்து பார்க்கலாமா?'' என்று செட்டியாரைப் ''பிரபதி'' செய்து இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கக் காரணமாக இருந்தாரா என்று யோசித்து அதுதான் முடிவு என்று தீர்மானித்தேன். துணைவேந்தரிடம், ''வீண் விவகாரம் செய்து மன அமைதியைக் குலைத்துக் கொள்ள விரும்ப

வில்லை. பணத்தை அனுப்பி விடுகின்றேன்'' என்று சொல்லிக் கொண்டு விடை பெற்றேன்.

இந்த மதியீனமான ஆணையை பலருக்குத் தெரிவித்தால் நிர்வாகத்தின் மானம், பெருமை எல்லாம் கப்பல் ஏறும் என்பதை நான் அறிவேன். முட்டாள் கூட இந்த மதியீனமான ஆணையைக் கண்டு நகைப்பான். இந்தச் சமயத்தில் புராணச் செய்திகளும் இதிகாசச் செய்திகளும் என் மனத்தில் எழத் தொடங்குகின்றன. கடவுள் மனிதர்களை ஏமாற்றிச் செயலாற்றுவிக்க வேண்டுமானால் ஓர் அந்தணச் சிறுவன், அல்லது கிழவேதியன் போலத்தானே வருகின்றான்? ஏன் ஒரு செட்டியாராகவோ, க்ஷத்திரியனாகவோ வரக்கூடாது? கதைகளில்கூட அப்படி இல்லையே என்று யோசித்தபோது ''பிராமணர்கள் தாம் சாதுக்கள், ஒரு காரியம் செய்தால் யாரும் தவறு என்று நினைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையை உண்டாக்கியிருக்கின்றார்கள்'' என்று எப்பொழுதோ தந்தை பெரியார் நான் மாணவனாக இருந்தபோது ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் சொன்னது நினைவிற்கு வந்தது. இன்னும் அவர், ''இப்படித்தான் பிராமணர்கள் தந்திரமாக ஏமாற்றுவார்கள்; சதி செய்வார்கள். கடவுள்கூட மக்களை ஏமாற்ற வேண்டுமானால் பிராமண வடிவத்தில் தான் தோன்றுவார். மாவலிச் சக்கரவர்த்தியைத் திருமால் அந்தணச் சிறுவனாக வந்து தானே மூவடி நிலம் கேட்டு ஏமாற்றினார்? கிழவேதியனாக வந்துதானே அதே திருமால் (கண்ணன்) கன்னனிடம் அவன் செய்த புண்ணியம் அனைத்தையும் பெற்றான்? கிழவேதியனாக வந்துதானே சீவகன் ஏமாற்றி சுரமஞ்சரியைத் திருமணம் புரிந்து கொண்டான்? அந்தணன் வடிவில் வந்துதானே இந்திரன் கன்னனின் கவசகுண்டலங்களைப் பெற்றுச் சென்றான்?'' என்ற நிகழ்ச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போனதும் நினைவிற்கு வந்தன. இறுதியில் ''பிராமணர்களிடம் கவனமாக இருக்க

வேண்டும். தந்திரசாலிகள். அவர்களிடம் விழிப்பாக இருத்தல் வேண்டும்" என்று எச்சரிக்கையும் விடுப்பார். இவையெல்லாம் படலம் படலமாக என் மனத்தில் தோன்றின.

இறுதியாக ஓர் இதிகாசச் செய்தி என்னுடைய அன்றைய நிலைக்கு ஒத்திருந்ததைச் சிந்தித்தேன். துரோணர் பொறாமையினால் வேடனான ஏகலைவ னுடைய வலது கட்டை விரலை வாங்கினார். தம்படத்தை வைத்து வணங்கியே ஏகலைவன் வில்வித்தைக் கற்றுக் கொண்டதை பாராட்டாமல் இவ்வாறு செய்தார். 'குதிரை எட்டடி, பாய்ந்தால் குட்டி பதினாறு அடிபாயும்' என்ற பழமொழிக் கிணங்க துரோணரின் மகன் அசுவத்தாமன் செய்த அடாத செய்கை என் மனத்தில் எழுந்தது. அந்தச் செய்கைதான் என்ன? பதினெட்டாம் போர் முடிவில் வீமனுக்கும் துரியோதன னுக்கும் நடை பெற்ற மற்போரில் துரியோதனன் தோற்றுக் குற்றுயிராய்க் கிடக்கின்றான். இருதிறத்தாரும் அவரவர்கள் பாசறைக்குள்புக, கண்ணன் பஞ்சபாண்டவர் களையும் திரெளபதியையும் யாரும் அறியாமல் ஒரு காட்டிற்குள் அழைத்துச் சென்று மறைத்து வைக் கின்றான். குற்றுயிராகக் கிடந்த துரியோதனனை அசுவத்தாமன் வந்து காண்கின்றான்; அவன் நிலைக்கு இரங்குகின்றான். "பாண்டவர்களை விடிவதற்குள் அழித்து வருவேன்." என்று வஞ்சினம் கூறிச் செல்லு கின்றான். பாசறைக்குள் புகுந்து தன் தாதையைத் கொன்ற திட்டத்துய்மனின் தலையைத் துணித்துப் பாண்டவர்களைத்தேடுகின்றான்; அவர்கள் கிடைத்திலர்.

இளம் பஞ்ச பாண்டவர்களை அணுகுகின்றான். அவர்கள் தம் படையை எடுப்பதற்குள் அசுவத்தாமன் அவர்களைப் பாண்டவர்கள் என மயங்கி அவர்கள் தலைகளைக் கொய்து விடிவதற்கு முன் துரியோதனனை அடைந்து தான் கொணர்ந்த தலைகளை அவன் முன்

வைக்க, அவன் ''சிறுவர் முகம்' எனக் கூறி இத்தீவினை நீங்க தவம் செய்யுமாறு ஏவி, உயிர் விடுகின்றான். அடுத்த நாள் காலையில் பாண்டவர்கள் பாசறைக்குள் புகுந்து இரவில் நிகழ்ந்தனவற்றை அறிகின்றனர். திரௌபதி புத்திரசோகத்தால் துடிதுடித்துப்போகின்றாள் வீமனும் விசயனும் அசுவத்தாமனைச் தேடிச் சென்று அவனை முனிவர்கள் நடுவே இருப்பதைக் காண்கின்றனர். விசயன் சினந்து அசுவத்தாமன்மீது நான் முகன்கணை யைத் தொடுக்கின்றான். அசுவத்தாமனும் அருகில் கிடந்த அருகம் புல்லை எடுத்து மந்திரித்து நான் முகன் கணையாக ஏவுகின்றான். இரண்டு கணைகளும் போரிடுவதால் உலகம் அழிந்து விடுமோ என்று தேவர்களும் முனிவர் களும் அஞ்சுகின்றனர். இருவரையும் தத்தம் கணைகளைத் திரும்பப் பெறுமாறு வேண்டுகின்றனர்.

பார்த்தன் கணையைத் திரும்பப் பெறுகின்றான்; அசுவத்தாமன் தனக்கு அவ்விதம்திரும்பப் பெறத்தெரியாது என்றும், ஆனால் வேறொருவர்மீது திருப்பி விடத் தெரியும் என்றும் கூறுகின்றான் அனைவரும் அதற்கு ஒப்புதல் தெரி விக்கவே, அசுவத்தாமனின் பிராமண மூளை வேலை செய்கின்றது. பாண்டவர்களின் குலம் விளங்காமல் போகச் சதிசெய்கின்றான்; ''இளம் பஞ்சபாண்டவர்கள் ஒழிந்தனர், அபிமன்யுவும் ஒழிந்தான். அவன் மனைவி, உத்தரையின் கருப்பத்தில் 'பரிட்சித்து' வளர்ந்துவரு கின்றான். அந்தச் சிசுவின்மீது நான்முகன் கணையைத் திருப்பிவிட்டால் பாண்டவ வமிசமே இல்லாது ஒழியும்'' என்று கருதி அதன்மீது திருப்பிவிடுகின்றான். கண்ணன், தன் மூல உருவத்துடன் பஞ்சாயுதங்களால் அக்கணையை அழித்து குழந்தையைக் காக்கின்றான்.

காரைக்குடியிலிருந்து வந்த இரண்டாவது ஆணை அசுவத்தாமனின் நான்முகன் கணையை யொத்தது. ஆனால் அதனைக் கண்ணன் காத்தது போல் இப்போது வேங்கடவன் நிழலில் வாழும் என்னை அவன் சமயம் வரும்

போது காப்பான் என்று நினைத்துக் கொண்டேன்; காரைக்குடி யு. கோ. வங்கியில் இருந்த சேமிப்புக்கணக்குப் புத்தகமும் காசோலைத் தொகுதியும் என்னிடம் இருந்த தால் ரூ1050 க்கு ஒரு காசோலையைக் கிழித்து ஒரு கடிதத் துடன் அனுப்பி வைத்தேன். கடிதத்தின் வாசகம் இது; ''உங்கள் கடிதம் கிடைத்தது. இத்துடன் ரூ 1050/ க்கு ஒரு காசோலை வருகின்றது. இது மூன்று திங்கள் ஊதியம்; நோட்டீசுக்குப் பதிலாக இத்தொகை. நான் கல்லூரியி லிருந்து விலகிக் கொள்வதை 27 நாட்களுக்குமுன் தெரிவித்து இரண்டாண்டு விடுமுறையும் பின்னர் வந்து சேரும் உரிமையும் கேட்டுகடிதம் அனுப்பியிருந்தேன். அந்த 27நாள் ஊதியத்தைத் திரும்ப அனுப்ப வேண்டுகின்றேன். நான் அங்கிருந்தபோது தாங்கள் எனக்குக் காட்டிய அன்பை நன்றியுடன் போற்றுவேன். ஆனால் நான் அங்கு விடைபெற்றுக் வந்த பிறகு இப்படி முதுகில் குத்தியதற்கு மிக மிக வருந்துகின்றேன்'' என்பது.

நான் கேட்டபடி 27 நாள் ஊதியத்தைத் திருப்பி அனுப்பியது நிர்வாகம். கல்லூரியில் என்பணியேட்டில் ''விலகிக் கொண்டார்'' (Resisned) என்று எழுதி வைத்து விட்டது. இக்குறிப்பு தமிழகத்தில் பணி செய்த 19 ஆண்டு ஓய்வு ஊதியம் பெறுவதில் தடையாக அமைந்தது. ஒன்பது ஆண்டு கடிதப் போராட்டத்தில் வேங்கடவன் அருளால் தடை நீங்கியது; ஓய்வு ஊதியம் வரும் அறிகுறி கள் தோன்றி அரசுடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது. 1987- நவம்பரில் ஓய்வு ஊதியமும் கிடைத்தது. இறைவன் இப்படிச் சிலரைச் சோதிக்கின்றான். செடிநட்டவனுக்குத் தண்ணீர் ஊற்றத் தெரியாதா என்ன? திருப்பதியில் பணி யாற்றிய 17 ஆண்டுக்குரிய ஓய்வு ஊதியம் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அது விளங்காப் புதிராகவே உள்ளது. அதை வேங்கடவன் கவனித்துக் கொள்வான் என்று நம்பி வாளா இருந்து வருகின்றேன்; ஓராண்டுக்கு முன் உச்சி நீதிமன்றத்தில் 'உரிமை விண்ணப்பம் (Writ petition

தாக்கல் செய்தேன். ஆறு திங்களில் நீதிபதி ஒருவர், "இது நியாயமான வழக்கு. ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஏற்றது" என்று சொல்லவே, என் வழக்குரைஞர் விண்ணப்பத்தையும் அதன் தொடர்பான அனைத்துத்தாள்களையும் நீதி மன்ற ஆணையுடன் எனக்கு அனுப்பிவைத்தார். இப்போது அந்த வழக்கு ஆந்திர மாநில உயர்நீதி மன்றத்தில் (ஐதராபாத்) உள்ளது. ஏழு மலையான் திருவருளால் நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகின்றேன். நகாரா VS இந்திய அரசு வழக்கில் ஏற்பட்ட 'வழக்கு முடிவு' (1983) எனக்குச் சாதகமாக இருந்ததால் இந்த வழக்கு தொடரப் பெற்றது.

குமிழி - 160

## 4. திருப்பதியில் திருத்தலப் பயணிகள்

நான் தங்கியிருந்த அறைக்கும் கோவிந்தராஜ சுவாமித் திருக்கோயிலுக்கும் குறுக்கு வழியொன்றுண்டு. காந்தி சாலையில் நம்மாழ்வார் திருக்கோயிலின் மதிலை யொட்டிச் செல்லும் சந்து வழியாகச் சென்று (இக்கோயி லின் வடக்கு மாட வீதியில் உள்ளது) வடக்கு மாட வீதியைக்கடந்தால் மணவாள மாமுனிகளின் சந்நிதியருகி லுள்ள படிக்கட்டுகளிலிறங்கி கோவிந்தராஜசுவாமியின் திருக்கோயிலை அடையலாம். கல்லூரியிலிருந்து மாலை யில் திரும்பியதும் சிற்றுண்டி அருந்தி கைகால் முகங்களைத் தூய்மைசெய்து கொண்டு குறுக்குவழியாகக் கோவிந்தராஜ சுவாமியின் திருக்கோயிலை அடைவேன். வாரம் மூன்று நாள் தவறாமல் கோவிந்தனைச் சேவித்து மகிழ்வேன். கோவிந்தன் என்ற திருநாமம் கண்ணன் குன்றம் ஏந்தி கல்மாரிகாத்தபோது இந்திரனால் அவனுக்கு வழங்கப் பெற்ற பெயர். திருக்கோயிலை அடையும்போது இந்த வரலாறு என் மனத்தில் குமிழியிட்டெழும்.

இந்த கோவிந்தராஜனைப்பற்றி மக்களிடையே சுவையான வரலாறு ஒன்று வழங்கி வருகின்றது. திருமலையில் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் வேங்கட கிருஷ்ணனும் திருப்பதியில் சயனத்திருக்கோலத்தில் காட்சி தரும் கோவிந்தராஜனும் சகோதரர்களாம். வேங்கட கிருஷ்ணன் பதுமாவதியைத் திருமணம் புரிந்து கொண்ட பொழுது பெருஞ்செலவு ஏற்பட்டுவிட்டதாம். இதற்காகக் குபேரனிடம் கடன்வாங்கினார்களாம். இதுகாறும் அக்கடன் தீராமல் கிடக்கின்றதாம். வட்டிகூட வருடந்தோறும் செலுத்த முடியவில்லையாம். வட்டிக்காசுகளை எண்ண முடியாமல் மரக்காலால் அளந்து தருகின்றார்களாம். இந்த நினைவாகத்தான் வட்டிக்காசு திருவிழா நடைபெறுகின்றதாம். வேங்கடகிருஷ்ணனின் கடன் பற்றிய கணக்கு அவர் சகோதரர் கோவிந்தராஜனிடம் இருக்கின்றதாம். வட்டிக்காசுகளைக் குபேரனுக்கு அளந்து தரும் மரக்காலைத் தலைப்பக்கத்தில் வைத்துக் கொண்டு சயனத்திருக்கோலத்தில் சேவைசாதிக்கின்றாராம் கோவிந்தராஜன். இங்ஙனம் பக்தர்களிடம் எத்தனையோ கட்டுக்கதைகள் வழங்கி வருகின்றன. இக்கதைகளும் பக்தி நெறி முறைகளைக் கெடாமல் பாதுகாத்து வருகின்றன.

திருப்பதியிலிருந்தாலும் வேங்கட நாதனை அடிக்கடிச் சேவிக்க முடிவதில்லை. அவன் அருள் கிடைக்கும்போது அவனைச் சேவிக்கும் பேறு கிட்டும். அப்பொழுதெல்லாம்,

தாயே தந்தையென்றும்
　　தாரமே, கிளை மக்களென்றும்.
நோயே பட்டொழிந்தேன்
　　நுன்னைக் காண்பதோர் ஆசையினால்
கொன்றேன் பல்லுயிரைக்
　　குறிக்கோளொன் றிலாமையினால்
என்றேனும்இரந்தார்க்
　　கினிதாக உரைத்தறியேன்

குலந்தான் எத்தனையும்
பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்
நலந்தான் ஒன்றுமிலேன;
நல்லதோரறஞ் செய்துமிலேன்
தெரியேன் பாலகனாய்ப்
பலதீமைகள் செய்துமிட்டேன்
பெரியேன் ஆயினபின்
பிறர்க்கேயுழைத் [1]தேழையானேன்

என்று கதறிக் கதறியழுது,

கோல்தேன் பாய்ந்தொழுகும்
குளிர்சோலை சூழ்வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன்;
அடியேனையாட் கொண்டருளே.[2]

என்று அவன் அருளை வேண்டுவேன். இன்னது வேண்டு மென்று ஒருநாளும் அவனைக் கேட்டதில்லை. 'எனக்கு எது வேண்டும்? என்பதை அவன் அறிந்து கொடுப்பான் என்று வாளா இருந்து விடுவேன்.

வந்தாய்; என்மனம் புகுந்தாய்; மன்னிநின்றாய்.
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ!
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய
எந்தாய்! இனியா னுன்னை என்றுவிடேனே[3]

1. துறையூர் ஜமீந்தார் உயர்நிலைப்பள்ளியில் பணி யாற்றியபோது பள்ளிமேம்பாட்டிற்காக உயிரை விட்டு உழைத்தேன்; மாணாக்கர் நலனுக்காக மனமாரப் பணி யாற்றினேன். ஜமீந்தார் சொந்த நலனுக்கு உழைத்து ஏழையானேன். மாதந்தோறும் குருதியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்; இப்பாசுரத்தைச் சேவிக்கும்போது இந்நிகழ்ச்சி நினைவிற்கு வரும். வழக்கு தொடுத்தேன். நீதி மன்றத்தில் ஏழைக்கு எப்படி நீதி கிடைக்கும்?

2. பெரி. திரு. 1. 9: 1, 3, 4, 7.

3. ஷை 1. 10:9

என்று அவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனி எனக்கு எந்தவிதக் குறையும் இராது. அப்படி ஏதாவது இருந்தாலும் அஃது என் ஆசையால் முளைப்பவை.

கோவிந்தராஜனைச் சேவிக்கும்பொழுது பாரதியாரின் பாடல்களைபாடிச் சேவிப்பேன்.

கண்ணிரண்டும் இமையாமல் செந்நிறத்து
மெல்லிதழ்ப்பூங் கமலத் தெய்வப்
பெண்ணிரண்டு விழிகளையும் நோக்கிடுவாய்
கோவிந்தா! பேணி னோர்க்கு
நண்ணிரண்டு பொற்பாதம் அளித்தருள்வாய்
சராசரத்து நாதா! நாளும்
எண்ணிரண்டு கோடியினும் மிகப்பலவாம்
வீண்கவலை எளிய னேற்கே.

எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவ னே! இவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே, கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டி லெல்லாம்
களியிலே, கோவிந்தா! நினைக்கண்டு
நின்னொடுநான் கலப்ப தென்றோ?

என்கண்ணை மறந்துஉன்இரு கண்களையே
என்அகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணால் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதல்
பாவமெலாம் மடிந்து, நெஞ்சிற்
புன்கண்போய் வாழ்ந்திடவே, கோவிந்தா!
எனக்கமுதம் புகட்டு வாயே.[4]

4. பா. க: தோ. பா: கோவிந்தன் பாட்டு (1,2,3)

என்று நெஞ்சுருகப் பாடிக் களிப்பேன். யான் இங்ஙனம் பெறும் இறையநுபவத்தை என் சொற்களால் எடுத்துக் காட்ட முடிவதில்லை.

பின் உள் மண்டபத்தில், திருச்சுற்று இடங்களில், இன்னும் தோன்றிய இடங்களிலெல்லாம் அமர்ந்து எதை எதையோ சிந்தித்த வண்ணம் இருப்பேன். சில சமயம் திருத்தலப் பயணிகளில் சிலர் வந்து என்னிடம் அமர் வார்கள். அவர்களிடம் பேச்சுக் கொடுப்பேன். நாட்டு நடப்புகள், மழை விவரங்கள், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் போன்றவற்றில் பேச்சுகள் நடை பெறும். இப்படிச் சில நேரங்கள் கழியும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இரயிலடியில் போடப் பெற்றி ருக்கும் பெஞ்சியில் அமர்ந்து பயணிகளின் நடவடிக்கை களைக் கவனிப்பேன். ஆனால் இன்றிருப்பதுபோல் அதிக வண்டிகள் அன்று இல்லை. இரயிலடியில் ஒரே ஒரு மேடை தான் இருந்தது. எவற்றையோ கண்டு களிப்பவன்போல் (Spectator) உட்கார்ந்து கொண்டு நேரம் போக்குவேன்; நேரம் போவதே தெரியாது. இப்படிச் சில நாட்கள் செல்லும்.

நாட்டுப் புறங்களிலிருந்து வரும் பெரும்பாலான திருத்தலப் பயணிகளிடம் தூய்மை இல்லை. உண்ணல், உடுத்தல், பருகுதல் போன்ற செயல்களிலும் தூய்மையைக் காணல் இயலாது. பெரும்பாலும் இவர்கள் பேருந்தை எதிர் பார்ப்பதே இல்லை. அதிகாலையில் எழுந்து (கோடைக் காலமானால் நிலவு காயும் இரவிலேயே) தங்கள் மலைப்பயணத்தைத் தொடங்குவார்கள். பெரும் பாலும் இவர்கள் இரயிலடி, கோனேற்றுக்கரை போன்ற இடங்களிலிருந்து கிளம்புவார்கள். 'கோவிந்தா, கோவிந்தா' என்று விண்ணை முட்டும் முழக்கத்துடன் கிளம்புவார்கள். மலையின் நடைபாதையெல்லாம் இப்படியே இரவு முழுதும் நடந்தே செல்வார்கள். திருமலையில் தேவஸ்தான சத்திரங்களில் இலவச அறை

களில் இடம் பெற்று உணவு தயாரித்துக் கொள்வார்கள். சத்திரத்தில் பாத்திரங்கள் வாடகையின்றி இலவசமாகக் கிடைக்கும். வெளியில் விறகு, அடுப்பு, மளிகை சாமான்கள் முதலியவை கிடைக்கும். பயணிகளே விறகைத் தவிர அனைத்தையும் தம் ஊரிலிருந்தே கொண்டு வந்து விடுவார்கள். தேவையுள்ளவற்றை மட்டிலும் இங்கு வாங்கிக் கொள்வார்கள். முடியெடுத்தல், தீர்த்தமாடுதல் களை முடித்துக்கொண்டு தரிசனத்திற்குத் தயாராகி விடு வார்கள். குழந்தைகட்கு முடி எடுக்கும் இடத்திலேயே குறைந்த கட்டணத்திற்கு வெந்நீர் கிடைப்பதற்கு தேவஸ்தான ஏற்பாடு உண்டு. குளிர்காலமானால் பெரிய வர்களும் வெந்நீர் ஏற்பாட்டைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

திருப்பதியிலும் கடந்த சில ஆண்டுகளாக சத்திரத்தில் தங்குவதற்கும் சமையல் செய்து கொள்வதற்கும் வசதிகள் செய்துள்ளனர். ஆனால் நெடுங்காலமாகத் திருப்பதியில் மலையடிவாரத்திற்குச் சுமார் ஒரு கல் தொலைவில் சில குடும்பங்கள் இவ்வகைப் பயணிகட்கு தம் இல்லங்களில் குறைந்த வாடகையில் இட வசதிகள் அளித்து வருகிறார் கள். இவர்கள் மளிகைக் கடை, விறகுக்கடை முதலிய வற்றையும் நடத்தி வருகிறார்கள். இதுவே இவர்கள் வாழ்க்கைத் தொழிலாக இருந்து வருகின்றது. 'பாகவத கைங்கரியம்' போலவும் அமைந்து விடுகின்றது. ஒருசிலர் இவர்களைக் கொள்ளையடிப்பவர்களாகக் கருதுகின்றனர். இக்கருத்து தவறு என்றே எனக்குப் படுகின்றது. இவர்கள் தரிசனம் செய்து வைக்கும் வரை பொறுப்பேற்றுக் கொள்வது மிகவும் பாராட்டத்தக்கது. எங்கோ இருந்து முன்பின் தெரியாமல் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்ட மாதிரி திருப்பதிக்கு வரும் அப்பாவி மக்கட்கு இத்தகைய தொண்டாற்றுவது இறைவழிபாட்டிற்கு ஒப்பாகும். ஏன்? பாகவத கைங்கரியத்திற்கும் ஒப்பாகும். வைணவ சமயக்

கொள்கைப்படி பகவத் கைங்கரியத்தைவிட பாகவத கைங்கரியம் சிறந்ததன்றோ?

ஆழ்வார்களின் தலைவராகிய நம்மாழ்வாரே பாகவத கைங்கரியத்தின் சிறப்பையும் பெருமையையும் சொல்லியுள்ளார்.

வலந்தாங்கு சக்கரத் தண்ணல்
மணிவண்ணற் காளென்றுஉள்
கலந்தார், அடியார் தம்அடி
யாரெம் அடிகளே.[5]

''வடிவார சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு' (திருப்பல்லாண்டு) என்று திருவாழியாழ்வானோடு உண்டான சேர்த்தியில் ஈடுபட்டுப் பல்லாண்டு பாடுவார்களாகில் அவர்களின் அடிமைப்பட்டவர்களுக்கு அடிமைப் பட்டவர்கள் எமக்குத் தலைவராவார்'' என்று கூறுவதைக் காணலாம். மேலும் இந்த ஆழ்வார்,

'எந்தைபிரான் தனக்கு
அடியார் அடியார் தமடி
யார்அடி யார்தமக்கு
அடியார் அடியார் தம்மடி
யார்அடி யோங்களே.[6]

என்று கூறுவதையும் காணலாம். 'எம்பெருமானுக்கு ஏழு தலைமுறையளவான அடிமையின் எல்லையிலே நிற்பவர்களுக்கு நாங்கள் அடிமைப்பட்டவர்கள்' என்கின்றார் இதில். இங்கே ஈட்டு ஸ்ரீசூக்தி: ''இப்போதும் தம்முடைய ருசிக்கு அவதியுண்டாய் (அவதி—முடிவு) இவ்வளவிலே நின்றாரல்லர்; சந்தஸ்ஸிலே (யாப்பில்) இதுக்கு அவ்வருகு போக வொண்ணாமே நின்ற தித்தனையிறே.'' செய்யுளின் நிர்ப்பந்தத்தை நோக்கி இவ்வளவிலே தலைக் கட்டினாரத்தனையல்லது 'இவ்வளவு சேஷத்துவம்

5. திருவாய். 3. 7: 9.
6. ஷை 3. 7: 10

(அடிமைத்தன்மை) நமக்குப் போதும் என்றெண்ணி முடித்தாரல்லர் என்பது இதன் பொருள். இதனையும் சிந்தித்து உணரவேண்டும்.

இந்தத் திருத்தலப் பயணிகள் தூய்மையற்றவர்கள். சுகாதார விதிகளைக் காற்றிலே பறக்க விட்டவர்கள் என்பதற்கு நான் நேரில் கண்ட நிகழ்ச்சியே சான்றாகக் கொள்ளலாம். ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் இவர்கள் பத்துப் பதினைந்து பேர்களாகச் சேர்ந்து பயணம் செய்வார்கள்; இவர்களில் குழந்தைகளும் சிறுவர்களும் அடங்குவர். ஒரு கும்பல் பெரிய துப்பட்டியில் இரண்டு மூன்று வேளைக்குப் போதுமான அளவு புளிச்சோறு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வரும். இதனை உண்பதற்கு சிறிய இலைக்கட்டு கொண்டு வருவதில்லை. இரயிலடி மேடையில் சோற்று மூட்டையை அவிழ்த்து விரித்து வைத்துக் கொள்வார்கள். சோற்றுக் குவியலைச் சுற்றிலும் அனைவரும் அமர்ந்து கொண்டு வைக்கோல் குவியலைச் சுற்றி நின்று கொண்டு மாடுகள் வைக்கோலைத் தின்பது போன்று உணவினைத் தம் கைகளால் பிசைந்து பிசைந்து பிடியாக்கி உண்பார்கள். குழந்தைகளும் சிறுவர்களும் சோற்றுக்குவியலை உழப்புவார்கள்.

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்ததும்
மயக்குறு மக்கள்[7]

அல்லர் இவர்கள். இஃது இல்லத்தில் சிறுவர்கள் தனித் தனிக் கலத்தில் இடப்பெற்றுள்ள சோற்றை உண்ணும் முறையை விளக்குவது. இச்சிறுவர்களும் குழந்தைகளும் இவ்வாறுதான் செய்தனர் என்று கொள்ளல் தவறு. இல்லத்தில் உள்ள குழந்தைகள் அந்த வேளைக்குரிய

7. புறம்—188.

உணவைத்தான் அவ்வாறு அலங்கோலம் செய்வரேயன்றி பானையிலுள்ள சோறு முழுவதையும் அங்ஙனம் செய் வாரல்லர். இரயிலடியிலுள்ள குழவிகளும் சிறுவர்களும் இன்னும் இரண்டு வேளைகட்குரிய உணவையும் இவ்வாறு உழப்புவார்கள். பெரியவர்கள் கூட சோறு கெட்டுவிடுமே என்ற நினைப்பே இல்லாதிருக்கும்போது பாவம் சிறுவர் களும் குழவிகளும இதனை எங்ஙனம் அறிவர்? பலநாட்கள் இத்தகைய காட்சிகளைக் கண்டுள்ளேன். தமிழ்நாட்டவர் களில் சிறுபான்மையோரும் ஆந்திரம், கர்நாடகம் இந்த மாநிலத்திலிருந்து வருவோரில் பெரும்பான்மையோரும் இங்ஙனம் செயற்படுவதைக் கண்டுள்ளேன்.

திருமலையில் எம்பெருமான் தரிசனம் முடிந்ததும் வரிசையாக வரும் பக்தர்களுக்கு வெண்பொங்கல், சருக்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச்சோறு போன்ற பிரசாதங்கள் சிறு இலைகளில் வழங்குகின்றனர். இவற்றை வழங்கும் பரிசாரகர்கள் கையைப் போட்டு உழப்புவதைப் பலசமயம் பார்த்ததுண்டு. தேவஸ்தானத் தில் சிறு கரண்டிகள் இல்லாமல் இல்லை. எடுத்து வருவதற்குச் சோம்பேறித்தனம். நாகரிகம் மிக்கவர்களாக கருதப்பெறும் பிராமணப் பரிசாரகர்கள் இங்ஙனம் செயற் படும்போது நாகரிகம் அற்ற திருத்தலப்பயணிகள் முறை கேடாகச் செயற்படுவதை எங்ஙனம் தவிர்க்க முடியும்? கடுக்காய் அளவுக்கு இலட்டும் இப்போது பிரசாதமாக வழங்கி வருகின்றனர்.

அறியாமையே நிரம்பிய மனிதர்கள் முறைகேடாகச் செயற்படுவதால் அவர்கட்கு நோய்கள், வேறு கோளாறு கள் ஏற்படாதிருத்தலுக்கு கண்மூடி மௌனியாகி ஒன்றும் கண்டிராதவன் போல் நின்றுகொண்டு பார்க்கும் அந்தத் திருவேங்கடமுடையானின் திருவருளே காரணமாக வுள்ளது என்று கருதலாம்.

மேற்குறிப்பிட்ட பிரசாதவகைகள் விலைக்கும் கிடைக்கும். கட்டணம் வாங்கிக் கொண்டு இலட்டு வினியோகிக்கும் அறையின் பக்கத்திலுள்ள அறையிலேயே இப்பிரசாதவகைகள் கிடைக்கும். பிரசாதவகைகளை உண்டு நீர் அருந்தி வெளியில் வரும் பயணிகள் பேருந்து நிலையத்திற்கு வந்தவுடன் பேருந்துகள் கிடைத்து விடுகின்றன. சில சமயங்களில் கொண்டை ஊசிவளைவுகள் பேருந்துகள் சுழன்று சுழன்று வேகமாகத் திரும்புவதால் சிலருக்குக் குமட்டல் ஏற்படுகின்றது. பிரசாதங்களைப் பேருந்திலிருந்த வண்ணம் வாந்தி எடுக்கின்றனர். வயிறு நிறைய உண்டவுடன் பேருந்தில் இறங்கி வருதல் கூடாது. பிரசாதங்கள் சத்துள்ளவை. வெண்பொங்கலில் நெய் அபரிமிதமாகச் சொரியப் பெற்றிருக்கும்; எளிதில் செரிமானமாகாது. பேருந்தில் மலைக்கு ஏறி வருபவர்கட்குப் பெரும்பாலும் வாந்தி வருவதில்லை. நடையாக இறங்கி வருபவர்கள் வாந்தி எடுப்பதில்லை. வயிறு சிறிது ஏதோ செய்கிற மாதிரி இருந்தாலும் உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு வருவதால் இவர்கட்கு எந்தத் தொல்லைகளும் நேரிடுவதில்லை.

## 5. இராமய்யாவும் பாலசுந்தர நாயக்கரும்

நான் திருப்பதி சென்ற சில மாதங்களுக்குப் பிறகு நான் தங்கியிருந்த அறைக்குச் சொந்தக்காரரான திரு. கே. சுப்பிரமணியம் இல்லத்திற்கு திரு. சி.எஸ். இராமய்யா பி.ஏ. பி.எல். என்பவர் வந்தார். திரு சுப்பிரமணியமும் திரு. இராமய்யாவும் நெருங்கிய நண்பர்களாதலால் இவர் அடிக்கடி இந்த இல்லத்திற்கு வந்து மகிழ்வுடன் உரையாடிப் போவதுண்டு. ஒருநாள் எனக்கு திரு. சுப்பிரமணியம் திரு. இராமய்யாவை அறிமுகப்படுத்தி வைத்தார். திரு. இராமய்யா வக்கீல் வேலைக்குப் படித்தாரேயன்றி அத்தொழிலைச் செய்ததாகத் தெரியவில்லை. நான் திருப்பதி சென்ற பிறகு ஒருநாள் கூட வக்கீல் உடையுடன் கண்டதில்லை. இல்லத்திலும் பெயர் பலகை தொங்குவதைப் பார்த்ததுண்டு; அதில் 'அட்வோகேட்' என்று எழுதப்பட்டதைப் பார்த்ததில்லை. இவர் நல்ல செல்வர்; சுகவாசி. இவர் சோதரர் டாக்டர் எஸ். பாஸகரன் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர். இவரும் மருத்துவத் தொழிலை நடத்துவதில்லை. மருத்துவத்துறை அல்லாத பாடத்தில் MDயோ M.Scயோ படித்தவராதலால் மருத்துவத் தொழில் நடத்தவில்லை என அறிந்தேன். என் மகன் டாக்டர் இராமகிருஷ்ணன் இவரிடம் பயின்றதுண்டு. இவன் திருமணம் திருச்சியில் நடைபெற்றது; திருப்பதியில் என் இல்லத்தில் வரவேற்பு நிகழ்ச்சி வைத்திருந்தேன். இதற்கு டாக்டர் பாஸ்கரன் வந்திருந்தபோது அவரிடம் எனக்கு அறிமுகம் ஆயிற்று.

வாழ்க்கையில் விநோதமான செயல்கள் நடைபெறும் நான் செல்வாக்குடன் திகழும் பல்கலைக்கழகத்திற்கு என் மக்கள் வரும்போது என் பெயரைச் சொல்லி இன்னார் மக்கள் என்று அறிமுகம் ஆவர். என் மகன் இராம கிருஷ்ணன் மருத்துவக் கல்லூரியில் சிறந்த மாணக்கனா தலால் எல்லோரும் அவனை நன்கு அறிந்திருந்தனர். நான் அங்குப் போனால் இவர் டாக்டர் இராமகிருஷ்ணனின் தந்தையார் என்று அறிமுகம் ஆவேன். இங்ஙனம் தந்தை பெயர் சொல்லி மகன் அறிமுகமாவதும், மகன் பெயர் சொல்லித் தந்தை அறிமுகமாவதும் எங்கும் இன்றும்—ஏன்? என்றுமே— நாம் காணும் நிகழ்ச்சிகளாகும். ஒரு குடும்பத்தில் மகன் நன்கு கற்றுத் தன்னுடைய குணச் சிறப்பாலும் அறிவு நலத்தாலும் திகழ்வானாயின, அவன் பெற்றோர்க்கு இனிமையைத் தருபவனாக அமைவான். உலகத்தினர் இவர்கள் பெறும் இனிமையை விடப் பன்மடங்கு இனிமை பெறுவர். பிறர் கல்வியைக் கண்டு பொறாமைப் படுபவரும் தம் மைந்தன் கல்வியின் உயர்தரத்தைக் கண்டுகளிப்பர்; கல்வியறிவில்லாதவர்களும் தம் மைந்தன் உயர்கல்வியைக் கற்பிக்கப் பெருமுயற்சி எடுக்கின்றனர். இதனைத்தான் வள்ளுவர் பெருமான்.

> தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.[1]

என்று கூறிப் போந்தார் என்பது ஈண்டு உளங் கொள்ளத் தக்கது.

ஒருநாள் திரு. இராமய்யா என் அறைக்கே வந்து விட்டார். சிறிய அறை. பத்து அடி நீளம் எட்டு அடி அகலம்தான் இருக்கும், 'பாயும் தலையணையும்தான் படுப்பதற்கு; உட்காருவதும் இந்தப் பாயிலேதான் மூன்றாண்டுகள் கழித்து தேக்கு மரத்தால் ஆன நாடாக் கட்டில் ஒன்று தயார் செய்து கொண்டேன். ஆராய்ச்சி

1 குறள்-68

செய்து வந்ததால் நூல் தொகையும் பெருகியது. அவற்றை வைத்துக் கொள்வதற்கு மரத்தாலான இரண்டு நிலைத் தட்டுகளையும் (Shelves) செய்து கொண்டேன்.

திரு. இராமய்யா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்; பதிவு பெற்ற பட்டதாரிகளின் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் என் அறைக்கே வந்தார். பாயில்தான் இருக்கவைத்தேன். அப்போது காலாண்டுத் தேர்வு விடுமுறையில் காரைக்குடி சென்று திரும்பிய சமயம். காரைக்குடி சென்று திரும்பியபோதெல்லாம் பாசிப்பருப்பு லட்டு கொண்டுவருவதுண்டு. திரு. இராமய்யா அறைக்கு வந்த பொழுது இரண்டு லட்டுகளைத் தந்து உபசரித்தேன்; மண்கூசாவிலிருந்த தண்ணீரைப் பருகக் கொடுத்தேன். கிட்டத்தட்ட ஒரு சந்நியாசி நிலைதான். ஆறு அறிவியல் நூல்களை எழுதினேன். ஒவ்வொரு நூலுக்கும் குறைந்தது ஐம்பது படங்களாவது தேவைப்படும்; அவற்றைத் தேர்ந்தெடுப்பதில் அதிகக் காலம் செலவாகும்; இந்த அறையிலிருந்து கொண்டுதான் பன்னிரண்டு அறிவியல் கட்டுரைகளும்[2] வேறு பல இலக்கியக்கட்டுரைகளும் எழுதப் பெற்றன. இலக்கியக் கட்டுரைகள் பெரும்பாலும் நான் ஆய்ந்து வந்த 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலேயே' அமைந்தன[3]. இவையாவும் பல பெரியார்களின் மணிவிழா மலர், திருக்கோயில் குட முழுக்கு விழா மலர், பல சங்கங்களின் ஆண்டு விழா மலர் போன்றவற்றிற்கு எழுதப் பெற்றவை.

திரு. இராமய்யா என்னுடன் அன்புடன்தான் பழகினார். நான் கல்வி கற்ற பள்ளிகள், கல்லூரிகள்,

---

2 இவை 'அறிவியல் விருந்து' (1967) என்ற நூல் வடிவம் பெற்றன.

3. இவையே 'சிலநோக்கில் நாலாயிரம்' (1983) என்ற தலைப்பில் நூல்வடிவம் பெற்றன.

பணியாற்றிய இடங்கள் முதலியவற்றை விசாரித்து அறிந்தார். என்னுடைய எழுத்துப் பணியையும் போற்றினார். ''யாரோ ஒருவர் — திரு. கே. பாலசுந்தர நாய்க்கர் என்று நினைக்கின்றேன் — நீங்கள் உயர்நிலைப் பள்ளியிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். தெரியாமல் துணைவேந்தர் தகுதியற்றவரைத் தேர்ந் தெடுத்துவிட்டார்'' என்ற தவறான செய்தியையும் பரப்பி விட்டார். இப்போதுதான் உண்மை இன்னதென்று புரிந்தது'' என்றார். உடனே நான் சொன்னேன்; ''ஐயா, நீர்வளமும் நிலவளமும் உள்ள ஆற்றுப்படுகையில் விழும் விதைகளில் சில முளைத்தாலும் தரமான உயர்ந்த மரங்களாக வளர முடிவதில்லை; சூம்பிக் கிடக்கின்றன. வீட்டின் கட்டடங்கள், கோயில் கோப்புரங்கள், விமானங் கள், மதில்கள் இவற்றின் இடுக்குகளில் முளைக்கும் விதைகள் நன்றாக வளர்ந்து கட்டடங்களையே இடித்துத் தள்ளி விடுகின்றன. இங்ஙனமே படித்தவுடன் பலருடைய பரிந்துரையால் நேராகப் பல்கலைக் கழகத்தில் நுழைந்து விடுகின்றனர். தொடர்ந்து பதவி உயர்வுகளையும் பெற்று கொண்டும் வருகின்றனர். ஓய்வு பெறும் வரையில் படித்த அறிஞர் (Scholar) என்ற பெயருடன் திகழ்வதில்லை. ஆர வாரத்துடன் ஸ்கூட்டர், கார்களில் வருவது, நல்ல ஆடை கள் அணிவது, விருந்துகளில் கலந்து கொள்வது— இப்படி இவர்கள் வாழ்க்கை கழிந்து விடுகின்றது. 'பேராசிரியர்' என்ற பெயர் வழங்குகின்றது. கடிதத் தலைப்புத்தாள் களிலும் 'பேராசிரியர்' என்று அச்சிட்டுக் கொள்வதுடன் இவர் புலமை அடங்கி விடுகின்றது'' என்றேன்.

இவர் மனத்தில் நன்கு பதிவதற்கு சில எடுத்துக் காட்டுகளையும் அடுக்கிக் காட்டினேன். ''பெரும் புகழுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்த ராகத் திகழ்ந்த திரு சீநிவாச சாஸ்திரி ஓர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்தான். பல நூல்களின் ஆசிரியரும், சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்

டாக்டர் மு.வரதாசன் தொடக்கத்தில்வட்ட அலுவலகத்தில் எழுத்தராக இருந்தவர்தான்; மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் மொ. அ. துரையரங்கசுவாமி இடைநிலை ஆசிரியராகத் (Secondary grade teacher) தன் பணியைத் தொடங்கினவர்தான். கல்வெட்டு ஆராய்ச்சியிலும் இலக்கிய வரலாற்று ஆய்விலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிறந்து விளங்கிய திரு. சதாசிவ பண்டாரத்தாரும் கும்பகோணத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஒரு சாதாரணத் தமிழாசிரியர்தான். இன்றும் எத்தனையோ தமிழ்ப்பேராசிரியர்கள் தம் உழைப்பால் உயர்ந்து பல்கலைக் கழகத்தில் நுழைந்து பெரும் பணியாற்றியவர்கள். இவர்களில் பெரும்பாலோர் எம். ஏ. கூட படிக்கவில்லை; வித்துவான் பட்டத்துடன் நின்றவர்கள். ஆதலால் உயர்நிலைப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு வந்தவர்கள் தாழ்வானவர்கள் என்று நினைப்பது தவறு'' என்று எடுத்துக்காட்டி விளக்கினேன். தவிர, ''நான் ஒன்பது ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பணியாற்றியவன். நானே பள்ளியைப் புதிதாகத் தொடங்கி பெரிதாக வளர்த்தவன். காரைக்குடியில் புதிதாகத் தொடங்கிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் பேராசிரியனாகப் பணியாற்றிய பிறகுதான் இங்கு வந்தேன். பெரியதோர் புகழ் மிக்க கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றி முதல்வராகும் வாய்ப்பையும் துறந்து சாதாரண விரிவுரையாளர் பதவிக்கு வந்துள்ளேன். திங்கள்தோறும் ரூ 153/ = இழப்பிலும் வந்துள்ளேன். மேனாடுகளிலிருந்து சமயப்பணிக்காக நம் நாடு வந்திருக்கும் சமயப் பாதிரியார்போல் தமிழ் வளர்ப்பதற்காகவே தியாகம் செய்து வந்துள்ளேன். பிள்ளைகளின் தமிழ்க் கல்வி திருப்பதியில் உயர்நிலைப்பள்ளி மட்டத்தில் இல்லாததால் குடும்பத்தையும் விட்டு வந்துள்ளேன்'' என்று மேலும் தொடர்ந்து பேசினேன்.

திரு. இராமய்யா இவ்வரலாற்றைக் கேட்டு அசந்து போய் விட்டார். பிறகு நான் அவரைப் பல்கலைக்கழக வளாகத்திலும் அங்காடித் தெருவிலும், பிற இடங்களிலும் சந்திக்கும்போது மரியாதையுடன் பழகி வந்தார். நாளடைவில் எப்படியோ இவர் மனம் சிறிது நஞ்சு கொண்டதை அறிய முடிந்தது; பழகுவதில் மாற்றம் காணப்பட்டது. ஒரு சமயம் — 1970-க்கு மேல் — ஒரு நாள் ஒரு திருமணத்தில் அலர்மேல் மங்காபுரத்தில் சந்திக்க நேரிட்டது. அப்போது டாக்டர் டி. சகந்நாதரெட்டி துணைவேந்தராக இருந்த காலம். பத்தாண்டுகள் எம். ஏ. கற்பித்த அநுபவம் இல்லையென்று — எனக்குப் பேராசிரியர் பதவி தராமல் என்னை அந்தரத்தில் வைத்திருந்த காலம். எப்படியோ திரு. இராமய்யா ரெட்டிகளின்மீது வளர்த்துக்கொண்ட வெறுப்பு துணை வேந்தர் சகந்நாத ரெட்டியின்மீது காட்ட வகையின்றி, என்னைக் 'கிள்ளுக்கீரை' என நினைத்து, "டாக்டர் சகந்நாத ரெட்டிக் காலத்தில் உங்கட்குப் பதவி உயர்வு வரா விட்டால் வேறு யார் காலத்தில் வரப்போகிறது?" என்று கிண்டல் செய்யும் பாவனையில் பேசினார்.

டாக்டர் டி. சகந்நாதரெட்டி என்னைப் பல் வேறு விதங்களில் கொடுமைப் படுத்திய காலம். இன்னொரு குமிழியில் இவை வெளிவரும். உடனே நான் திரு இராமய்யாவைப் பார்த்து "ஐயா, துணைவேந்தர் ரெட்டி என்னை எவ்வளவு கொடுமைப் படுத்துகின்றார் என்பதை நீங்கள் அறியீர்கள். இவர் காலத்தில் நான் பேராசிரியராகப் போவதில்லை என்பது அங்கை நெல்லிக் கனி. நான் பேராசிரிய பதவி பெறுவதாக இருந்தால், அதை ஒரு நாயுடு துணைவேந்தர் மூலந்தான் ஏழுமலையான் நல்குவான். அப்படி அப்பதவி எனக்கு வராவிடினும் நான் கவலைப்படுவன் அல்லன். நான் வந்தது பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ப்பதற்கு. தமிழக அரசு மானியம் பெற்று தமிழ் வளர்கிறது. பத்து மாணாக்கர்கள்

எம். ஏ. பயில்கின்றனர். ஐவர் பிஎச். டிக்கு ஆய்கின்றனர். ஒருவர் பிஎச். டி. பட்டம் பெற்று விட்டார்; ஒருவர் பெறும் நிலையில் உள்ளார். இப்படியே வீட்டிற்குப் போவதற்கும் தயார். பேராசிரியர் பதவி எப்போது பெறுவது என்பது ஏழுமலையான் கையில் உள்ளது. உரிய சமயத்தில் 'பச்சைக் கொடி' காட்டுவான்.'' என்று உணர்ச்சியுடன் உருக்கமாகப் பேசி முடித்தேன். திரு இராமய்யாவுக்கும் 'ஏண்டா, இவரைச் சீண்டினோம்' என்று ஆய்விட்டது. வாயை மூடிக் கொண்டு வாளா இருந்து விட்டார்.

நன் 'நள ஆண்டில் பிறந்தவன். 'நளன்' என்ற புனைவுத் திருநாமம் கொண்டவன். இதிகாச நளனைக் 'கலி' ஏழரை யாண்டுகள் பற்றித் தொல்லைகளை விளை வித்தான் ஆனால், அந்தக் 'கலி' என்னை வாழ்க்கை முழுவதும் விடாது பற்றிக் கொண்டுள்ளான். நளனிடத் தில் கலி சேர்ந்த விதத்தைப் புகழேந்திப் புலவர்,

> நாராய ணாய நமவென் றவனடியில்
> சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்— பாராளும்
> கொற்றவனைப் பார்மடந்தை கோமானை
> வாய்மைநெறி
> கற்றவனைச் சேர்ந்தான் கலி[4].

என்று காட்டுவர். என் பிராரப்த கருமமே (நுகர் வினையே) என்னை இவ்வாறு படுத்துகின்றது என்று எனக்குத் தோன்றுகின்றது. பிராரப்தத்தை (நுகர் வினையை) அநுபவித்தே தீரவேண்டும்; ஆண்டவனும் அதை அநுபவிக்கவைத்தே தீர்வான். சாணத்தில் புழு எப்படித் தோன்றுகின்றது? என்பதை நாம் அறிய முடியாது. அது போல எந்தச் சம்பந்தமும் இல்லாமல் எனக்குப் பகைவர்கள் முளைக்கின்றனர். எந்தச் சிறு நன்மை ஏற்பட்டாலும் அது 'ஆயுதப் பிரசவத்தால்

4. 'நள வெண்பா'— கலிதொடர். 202.

கிடைக்கும் மகப்பேறு போல்'தான் ஏற்படுகின்றது. மலையளவு முயற்சியால் கடுகளவு பயன் விளைகின்றது; ஊழ் (தெய்வம்) இல்லாமையால் 'மெய்வருத்தக் கூலி தரும்' என்பது போலாகின்றது. உண்ணவேண்டிய அளவுக்குக் கூலி கிடைக்கின்றது. அதற்கும் குந்தகம் விளைவித்தால் 'உண்மை உழைப்பாளிகள்' ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று அஞ்சி தான் இறைவன் இதில் தலையிடுவதில்லை போலும். "கோயிலுக்குப் போவதில்லை; இறைவன் புகழ் பாடுவதில்லை; பூசனை புரிவதில்லை; விழா எடுப்பதில்லை..." இப்படி பக்தர்கள் செய்தால் 'நம் நிலை என்னாகும்?' என்று இறைவனும் அஞ்சுகின்றான் போலும்!

என்னை 'உயர் நிலைப் பள்ளியிலிருந்து வந்தவன்' என்ற வதந்தியைப் பரப்பியவர் யாராயிருக்கலாம் என்று என்று மனம் சிந்திக்கத் தொடங்கியது. நான் திருப்திக்கு விண்ணப்பித்ததை என் 'ஞானத் தந்தை' போன்ற பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலுரெட்டியாரிடம் மட்டிலும் தெரிவித்திருந்தேன். அவர் சொன்னார்: "திருப்பதியில் கீழ்த்திசைக் கல்லூரில் திரு கே. பாலசுந்தர நாயக்கர் பணிபுரிகின்றார். அவர் முயல்வார். முயன்றால் அவருக்குத்தான் கிடைக்கும்" என்றார். நானும் திரு. நாய்க்கரும் ஒருவரையொருவர் பார்த்ததுமில்லை. விரிவுரையாளர் பதவிக்குச் சென்னையில் ஆர்ம்சாலையிலுள்ள துணைவேந்தர் நாயுடு இல்லத்தில் பேட்டி நடைபெற்ற பொழுது 18 பேர் பேட்டிக்கு வந்திருந்தனர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகத் திகழும் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்[5],

5. அப்போது பச்சையப்பன் கல்லூரியில் பயிற்சியளிப்பவராக Tutor)ப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இன்று (1990) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருப்பவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், மொழியியல் துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் கே. குமாரசாமி ராஜா,[6] தில்லிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் திரு. பாலசுப்பிரமணியம்[7] ஆகிய மூவரும் இந்தப் 18—இல் அடங்கியவர்கள் (இவர்கள் அப்பொழுது டாக்டர் பட்டம் பெறாதவர்கள்). நாங்கள் மூவரும் தேர்ந்தெடுத்த பட்டியலில் (Panel) இடம் பெற்றிருந்தோம். நானும் குழுவை நிரந்தரத் தன்மை துறைவளரும் வாய்ப்பு, தனியாகப் பணி, வீட்டு வசதி— இவை பற்றி வினாக்களை விடுத்தேன். துணைவேந்தர் தந்த மறு மொழியிலிருந்து எனக்குப் பதவி கிடைப்பது உறுதி என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

திரு கே. பாலசுந்தர நாய்க்கர் பேட்டிக்கு வரவில்லை. திருப்பதி சென்றதும் அவர் ஓய்வு பெற்றிருந்ததையும், விண்ணப்பிக்கத் தகுந்த அகவைத் தகுதி இல்லை என்பதையும் அறிந்தேன். நான்தான் தமிழ்த் துறையில் முதன் முதலாக நியமிக்கப் பெற்றவன். தேவஸ்தானத்தில் ஓய்வு பெற்ற பின் ஒரு மூன்றாண்டுகள் ஒப்பந்த நியமனம் பெறலாம் என்று முயன்றிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஏற்கெனவே இயங்கி வந்த நிரந்தர ஆசிரியர்கள் உள்ள துறையில் ஓய்வு பெற்ற ஒரு சிலரை நியமித்திருந்தமையால் திரு. நாயக்கருக்குச் 'சபலம்' ஏற்பட்டிருக்க வேண்டும். வளரும் துறையாதலால் எடுத்த எடுப்பில் முதல் தனியாசிரியனாக போடுவதால்,

6. ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு உதவியாளராக இருந்தார். சென்ற ஆண்டு (1989) அவர் எங்கோ மறைந்தார்.

7. எங்குப் பணியாற்றினார் என்பது நினைவு இல்லை. 'அணிக்கதிர்' என்ற அறிவியல் இதழ் ஒன்று நடத்தி வந்தார்.

சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பாரேயன்றி துறை வளர்ச்சிக்குப் பாடுபடமாட்டார் என்று துணைவேந்தர் கருதியிருக்க வேண்டும். துணைவேந்தரின் கருத்தை யார் அறிய முடியும்? ஏழுமலையான்தான் அறிவான். திரு நாயக்கருக்கு இக்காரணத்தால் கிடைக்கவில்லையேயன்றி, துணைவேந்தர் கருணையற்றவர் என்பதில்லை. எனக்கு ஆணை பிறப்பித்ததும் உள்ளூர் ஆட்சிக் குழு உறுப்பினர் களைச் சந்தித்து ஏதாவது உளறிக் கொட்டியிருக்க வேண்டும். இந்த உளறலிலிருந்துதான் மேற்குறிப்பிட்ட வதந்தி கிளம்பியிருக்க வேண்டும்.

நான் திருப்பதி சென்றதும் ஒன்றிரண்டு நாட்களில் வீடுதேடி திரு. நாயக்கரைச்சந்திக்க முயன்றேன்; வெளியூர் சென்றிருப்பதாக அறிந்தேன். அவர் துணைவியாரிடம் என் முகவரியைத் தந்து வந்தேன். ஒன்றிரண்டு நாட்களில் அவரே வந்து என்னைச் சந்தித்துப் பேசினார். பின்னர் என்ன ஆனார்? எங்குச் சென்றார்? என்பதை என்னால் அறியக் கூடவில்லை. அவரைப் பார்த்து அளவளாவ வேண்டும் என்ற ஆசை இருந்து வருகின்றது. முகவரி தெரியவில்லை. சென்னையில் (1983) டிசம்பரில் நடை பெற்ற வைணவமாநாட்டு நிகழ்ச்சி நிரலில் அவர் பெயர் காணப்பட்டது. சந்திக்கலாம் என்று மாநாட்டிற்குச் சென்றேன். ஆனால் அவர் வரவில்லை; ஏமாந்தேன். வைணவ சங்கச் செயலாளர் திரு. என். வேணுகோபால் நாயக்கர் மூலம் அவர் காஞ்சியில் இருப்பதாக அறிந்தேன். இறையருளால் சந்திப்பு ஏற்படும் எனக் கருது கின்றேன். அடுத்த ஆண்டில் (1984) வைணவமாநாட்டில் பங்கு பெற்றிருந்தார். அளவளாவி மகிழ்ந்தேன்.

# 5. டாக்டர் உசேன் நயினார்

இன்னொரு நிகழ்ச்சி உருதுத் துறை பற்றியது. சிறுபான்மையோர் (Minority) என்ற பெயரில் எத்தனையோ சலுகைகள் கிடைக்கின்றது. பல்கலைக்கழகம் தொடங்கிய காலத்திலேயே 'உருது, அறபு, பாரசீகம்' என்ற ஒரு துறை ஏற்பட்டுவிட்டது. இளங்கலை வகுப்புகள் நடைபெற்ற காலத்தில் கூட மாணவர்கள் தலைகாட்டவில்லை; எம். ஏ. வகுப்பிலும் இதே நிலைதான். தொடக்கத்தில் டாக்டர் அகமது என்ற ஒருவர் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். எம். ஏ. உள்ள துறையாதலால் ஏவலர் (Offic boy) என்ற ஒருவர் கூடப்பணியில் அமர்ந்தார். விரிவுரையாளர் கடிதங்களை உரிய இடங்களில் சேர்த்தல், பல்கலைக் கழகம், முதல்வர் அலுவலகம், போன்ற இடங்களிலிருந்து வரும் கடிதங்களை வாங்கி வைத்தல், வேறு குற்றேவல்களைச் செய்தல் போன்ற பணிகளை இவர் செய்வார்.

டாக்டர் அகமது வடநாட்டைச் சார்ந்தவர்; ஆஜ்மீர் நகரைச் சேர்ந்தவர் என்பதாக நினைவு. இவர் துறையை நன்முறையில் வளர்ப்பார் என்ற நம்பிக்கை துணைவேந்தருக்கு (பேராசிரியர் நாயுடு) இல்லை. ஆதலால் பேராசிரியர் முகம்மது உசேன்நயினார் என்ற ஓய்வு பெற்ற ஒருவர் பேராசிரியராக இரண்டாண்டு ஒப்பந்தத்தில் வந்து சேர்ந்தார். இவர் இங்கு வந்து சேர்வதற்குமுன் டாக்டர் உமாயூன் கபீர் என்ற நடுவணரசு அமைச்சர் ஆதரவில் தில்லி மாநகரில் ஏதோ ஒரு பணியிலிருந்தார். தென்னகத்திற்கு வந்து விடவேண்டும் என்று

துணைவேந்தரிடம் சொன்னமையால் அவரும் இவருக்கு இங்கு வர ஒரு வாய்ப்பு நல்கினார். பேராசிரியர் டாக்டர் நயினார் அரபுமொழியில் வல்லுநர்.

பேராசிரியர் நயினார் பழநியைச்சார்ந்தவர். பழநியில் இவருக்கு நிலபுலங்கள் உண்டு. இவர் பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறபு மொழிப் பேராசிரியராகப் பணியாற்றிப் புகழ்பெற்றவர். ஆகவே இவர் திறமையை நன்கு அறிந்த துணைவேந்தர் நாயுடு அவர்கள் இவரைத் திருப்பதிக்குக் கொணர்ந்தது வியப் பொன்றுமில்லை. பேராசிரியர் நயினாரை நானும் நன்கறிவேன். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையைச்சார்ந்த பன்மொழிப் புலவர் திரு. வே. வேங்கட ராஜுலுரெட்டியார் அவர்கட்கு மிகவும் நெருக்கமானவர். பேராசிரியர் நயினார் அவர்கள் தமிழிலும் புலமையுடைய வராதலால் தமிழ் இருவரையும் பிணைத்து வைத்தது என்று கருதுகின்றேன். சென்னையிலிருந்தபோது 'சீதக் காதி நொண்டி நாடகம்' என்ற நூலொன்றை ஆராய்ச்சி முகவுரையுடன் பதிப்பித்திருந்தார். பன்மொழிப் புலவர் ரெட்டியார் மூலம் இவரிடம் எனக்கு நட்பு ஏற்பட்டது. அக்காலத்தில் (1940—50) நயினார் சீறாப் புராணத்தை நல்ல முறையில் பதிப்பிக்க முயற்சி செய்து கொண் டிருந்ததை நான் நன்கு அறிவேன். செய்யாறு முதலிய இடங்களிலுள்ள கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரிய ராகப் பணியாற்றிய முத்து.சு.மாணிக்கவாசக முதலியாரை[1] பன்மொழிப் புலவர் ரெட்டியாரின் பரிந்துரையால் டாக்டர் நயினார் அவர்கள் சீறாப் புராணத்தைப் பதிப்பிக்கும் திட்டத்தில் ஆய்வு உதவியாளராகச்

1. இவர் பின்னர் துறவறத்தைக் கடைப்பிடித்து காஞ்சி முதலியார் மடத்தில் ஞானப்பிரகாச சுவாமிகள் என்ற பெயரில் மடத்துத்தலைவரா னார்.

(Research Assistant) சேர்த்துக் கொண்டார். பேராசிரியர் நயினார் அவர்கள் மிக்க செல்வாக்குடன் திகழ்ந்தவர். துணைவேந்தர் டாக்டர் இலக்குமணசாமி முதலியாரின் ஆதரவு பெற்றவர்; அவருடன் நெருங்கிப் பழகுபவர்.

பேராசிரியர் நயினார் அவர்களை 1950க்கு மேல் சந்திக்கும் வாய்ப்பு இல்லை. பல்கலைக் கழகத்தில் நீண்ட விடுப்பு பெற்று (பின்னர் பேராசிரியர் பதவியையும் துறந்து) இந்தோனேஷிவா அரசின் கீழ்ப் பெரிய ஊதியத்தில் பெரிய பதவி கிடைத்துப் போய் விட்டதை அறிந்தேன். அங்கும் ஒய்வு பெற்று தில்லியில் பணி யாற்றினபொழுதுதான் துணைவேந்தர் நாயுடுவைச் சந்தித்து அவர் ஆதரவின் பேரில் திருப்பதி வந்து சேர்ந்தார். இவர் வந்த நாள் தொட்டு இவரிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது; தனிமையாகத் தத்தளித்துக் கொண்டிருந்த எனக்கு இவர் வந்தமை மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. இவர் இருந்தவரை நான் சந்தித்து பேசாத நாளே இல்லை. தனிமையாகவே இருந்தார். வந்த மறு வருடமே கடுமையான நோயால் தாக்கப் பெற்றார். சென்னைக்கு வந்து பல் வேறு மருத்துவ சோதனைகட்குத் தன்னை உட்படுத்திக் கொண்டார்; பலன் இல்லை. நோய் இன்னதெனக் கண்டறிய முடியவில்லை. உடல் மெலிந்து கொண்டே வந்தது; பசியே இல்லை என்பதும், செரிமானம் இல்லை என்பதும் இவர் அடிக்கடிச் சொன்ன அறிகுறிகள். ஆனால் எந்த மருத்துவராலும் நோய் இன்னதென்பதை அறிந்து சொல்ல முடியவில்லை. என் அரிய நண்பர் டாக்டர் கே. சி. வரதாச்சாரியார் (தத்துவத்துறைத் துணைப் பேராசிரியர்) ஒரு சிறந்த ஓமியோபதி மருத்துவர்; அவராலும் நோய் இன்ன தென்பதை அறியக் கூடவில்லை. மலம் கீல் நிறத்தில் போகிறது என்பதை யறிந்த பல் கலைக் கழக வளாக மருத்துவர் டாக்டர் வீரபத்ரய்யா "கல்லீரல் புற்று நோய்' என்பதாக அறுதியிட்டார். வேறு

சோதனைகளும் அறிகுறிகளும் இதனை உறுதிப்படுத்தின. ஒரு சில மாதங்களில் நயினார் என்னைத் துக்கத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்தார்.

மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தார். புன்முறுவல் எப்பொழுதும் இவர் இதழில் தவழ்ந்து கொண்டே இருக்கும். சுவையாக உரையாடுவதில் மிகவும் வல்லுநர். தாம் வாழ்க்கையில் பங்கு கொண்ட பல சுவையான நிகழ்ச்சிகளைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார். இவர் மறைவதற்கு இரண்டு வாரங்கட்கு முன்னர், மாவட்ட நீதிபதியாக (District and Sessions Judge) இருந்து ஓய்வு பெற்ற இவர்தம் மூத்தசகோதரர் வந்து போனார். இரு சகோதரர்களுக்கிடையே முப்பது ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தை கூட இல்லை. அவ்வளவு பகையுணர்ச்சி முற்றிய நிலை. இவரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் பேராசிரியர் நயினார். அவர் திரும்பிப் புறப்பட்டதும் என்னிடம் சொன்னார்: "ரெட்டியார் அவர்களே, முப்பது ஆண்டுகள் கழித்து இப்போது ஏன் வந்தார் தெரியுமா? நான் இறந்த பிறகு முஸ்லிம் சட்டப்படி இவருக்கு என் சொத்தில் ஒரு பங்குத்தொகை கிடைக்கும். அதை அளவிட்டுப் பார்ப்பதற்கு இங்கு வந்து போனாரேயன்றி உண்மையான அன்பினாலோ பாசத்தாலோ அல்ல" என்று புன்முறுவலுடன் சொன்னார். 'துக்கச் சூழலையிலும்' இவர் முகத்தில் புன்முறுவல் தவழும். இச்சமயத்தில் நயினார் அவர் கட்கு,

சோர்வி னால்பொருள் வைத்ததுண் டாகில்
சொல்லு சொல்லென்று சுற்றும் இருந்து
ஆர்வி னாவிலும் வாய்திற வாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்

மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே.[2]

என்ற பெரியாழ்வார் பாசுரத்தை எடுத்துக் காட்டி முதலடியில் அவரது கவனத்தை ஈர்த்தேன். பாசுரத்தைச் சுவைத்து மகிழ்ந்தார்.

நயினார் மறைந்தது டாக்டர் அகமதுக்கு தலைவலி விட்டது போலாயிற்று. அடுத்த ஆண்டு அவர் துணைப் பேராசிரியரானார். இதனால் இவருக்குத் 'தலைக்கனம்' அதிகமாயிற்று; தலைகால் தெரியாமல் ஆடத் தொடங்கினார். ஒரு சமயம் நான் ஒரு பெரிய அறைக்குத் தள்ளப் பெற்றேன். அறையின் வாயிலின் இடப்பக்கத்தில்தான் ஒரு மின் விசிறி பொருத்தப் பெற்றிருந்தது. அதற்கு நேராக என் இருக்கையை அமைத்துக் கொண்டு வாயிற்படியருகில் இரும்பு பீரோவை நிறுத்தி மறைவிடமாக்கிக் கொண்டேன். வகுப்புக் கென்று தனி அறை இல்லாமையால் என் அறைக்கே மாணாக்கர்கள் வந்து விடுவார்கள். இவர்கள் யாவரும் இளங்கலைவகுப்பைச் சார்ந்த தமிழ் பயிலும் மாணாக்கர்கள். நான் கற்பித்த பத்தாண்டுக் காலத்திலும் எந்த வருடமும் மூவருக்கு மேல் சேர்ந்ததில்லை. ஓராண்டு மட்டிலும் நால்வர் சேர்ந்ததாக நினைவு. பெரும்பாலும் ஒரு மாணாக்கர் அல்லது மாணாக்கிதான் இருப்பது மரபாகிவிட்டது. 1972—முதல் இளங்கலை வகுப்பு பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப் பெற்றது.

இளங்கலை வகுப்பு இருந்த வரையிலும் எனக்கு உற்காசம் இல்லை; காரணம், அதிக எண்ணிக்கையில்

2. பெரியாழ். திரு. 4.5 : 3

மாணாக்கர் இல்லாமையால் கற்பிப்பதில் அதிக வேலை இல்லை. மிகவும் துன்பப் பட்டேன். ஒரு மாணாக்கர் வகுப்பில் இருக்கும்போது அவர் சரியாக வருவதில்லை; அப்படி வந்தாலும் தமிழ்ப் படிப்பில் உற்சாகம் காட்டுவ தில்லை. இரண்டு ஆண்டுகள் தனித் தனியாக இரு மாணாக்கியர் இருந்தனர்; அதாவது முதலாண்டில் ஒருவரும் இரண்டாம் ஆண்டில் ஒருவருமாக இருந்தனர். ஒருவர் உள்ளூர் வாசி; மற்றொருவர் மதனபள்ளி பக்க மிருந்து வந்து மகளிர் உணவு விடுதியில் தங்கிப் படித்தார். இருவரும் படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்து மிக நன்றாகப்படித்து முதல் வகுப்பு மதிப் பெண் பெற்றனர்; இதனால் என் கவனம் எழுத்துப்பணியில் ஆழ்ந்தது. சிறுவர்க்காகவும் வளர்ந்தவர்கட்காகவும் அறிவியல் நூல்களை எழுதினேன். கல்லூரியில் எழுத முடியாது; எழுதுவதற்கேற்ற சூழ்நிலையும் இல்லை; மனமும் இதற்கு ஒருப்படவில்லை. வகுப்பில்லாத நேரங்களில் நூலகத்தில் ஏதாவது படிப்பதில் காலம் கழிந்தது. நூலகத்தில் பணி யாற்றிய என் அருமை நண்பர் திரு. எம். ஆர். சந்திரன் என்பவரின் துணைகொண்டே அலங்கோலமாகச் சிதறிக் கிடந்த தமிழ் நூல்களை வகைப்படுத்தினேன்; நாடோறும் 25 நூல்கள்தாம் வகைப்படுத்த முடிந்தன. சில ஆயிரம் நூல்கள் இவ்வாறு என்னால் வகைப்படுத்தப் பெற்றன.

1959—60 ல் இரண்டாவது ஆண்டு முடித்துக் கொண்டு மூன்றாம் ஆண்டு இளங்கலை வகுப்பைச் சார்ந்தவன் வேங்கடேசன் என்ற மாணாக்கன். கல்லூரி யில் அவனை அறியாதவர்களே இரார். பம்பரம்போல் சுழன்று வருவான்; சுறுசுறுப்பாக இயங்கி வருபவன். நான் பணியில் சேர்ந்த ஒரு சில நாட்களில் என்னைச் சந்தித்துத் தமிழ்க் கூட்டங்கள் நடத்தவேண்டுமென்று தெரிவித்தான். "உருக்குமிணி என்ற ஒரே மாணாக்கி தானே வகுப்பில் உள்ளாள்? ஒருவரை வைத்துக்கொண்டு

என்ன செய்வது? தனிமரம் தோப்பாகுமா?'' என்றேன். தான் ஒல்லும் வகையெல்லாம் பணி புரிவதாக உறுதி யளித்தான். அவன் இருந்த மூன்றாண்டுகள் (எம். ஏயில் இரண்டாண்டுகள்) ஒரே மாணவி அல்லது மாணவனைக் கொண்ட தமிழ்த் துறை கலகலப்பாக இயங்கியது. இந்தித் துறை தெலுங்குத் துறை மாணாக்கர்களும் ஆசிரியர்களும் மூக்கின் மேல் விரலை வைத்து வியக்குமாறு ஆண்டொன்றுக்கு ஆறு கூட்டங்களுக்குக் குறையாமல் கூட்டிவிடுவான். ஒவ்வொரு கூட்டத்திற்கும் பத்துரூபாய் கேட்பான்; தந்து விடுவேன். வேறு துறைகளிலுள்ள ஒரு சில ஆசிரியர்களிடமும் ஏதாவது சிறு தொகை பெறுவான் போலும்! மாலைகள், குளிர் பானங்கள் முதலிய வாங்கு வதற்குப் பணம் வேண்டுமல்லவா?

அக்காலத்தில் தமிழறிந்த பிற துறையாசிரியர்கள் பரவலாக இருந்தனர்; மாணாக்கர்களும் பல துறைகளில் பயின்று வந்தனர். பெரும்பாலும் இவர்கள் நகரி, புத்தூர், ஏகரம்பரக்குப்பம், சித்தூர், கார்வேட்டி நகர் முதலிய ஊர்களிலிருந்து (இவ்வூர்களில் பெரும்பாலும் இருப் பவர்கள் தமிழர்களே) வந்து படிப்பவர்கள். இவர்களை யெல்லாம் நேரில் சந்தித்து கூட்டத்திற்குக் கொண்டு வந்து விடுவான். ஆசிரியர்களில் திரு. சீநிவாசலு (விலங்கியல் துறை) திரு. டி.இ. வீரராகவன், டாக்டர் கே.சி. வரதாச்சாரி (தத்துவத் துறை), டாக்டர் இராமாநுஜம், திரு. வி.எம். ரெட்டி (வரலாற்றுத் துறை), திரு. கே. கமலநாதன் (அரசியல் துறை), டாக்டர் வி. வரதாச்சாரியார் திரு. டி. கே. கோபாலசாமி அய்யங்கார், டாக்டர் சிரீகிருஷ்ணசர்மா (வடமொழித் துறை), திரு. ஜி.என். ரெட்டி, திரு டி.கே. கோதண்ட ராமய்யா, திரு. கந்தப்ப செட்டி (தெலுங்குத் துறை), டாக்டர் V.R. கிருஷ்ணன் (வேதியியல் துறை), டாக்டர் எஸ். இராமச்சந்திர ராவ் (இயற்பியல் துறை), டாக்டர் முகம்மது உசேன் நயினார் (அறபு மொழித்துறை) இவர்கள்

பல்கலைக்கழகத்திலிருப்பவர்கள். திரு. ஜி.லீலாகிருஷ்ணன் (தாவர இயல்), திரு. ஏ. நடராசன் (இயற்பியல்) இவர்கள் தேவஸ்தானம் நடத்தும் கலைக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் இவர்களில் பெரும்பாலோரை எப்படியோ கொண்டுவந்து சேர்த்துவிடுவான். ஒவ்வொரு கூட்டத்திலும் முப்பது பேர்களுக்குக் குறையாமல் கூடி விடுவார்கள். என்னை வரவேற்புரை நிகழ்த்துமாறு பணிப்பான்; தான் நன்றி நவிலும் பணியை மேற்கொள்வான். இங்ஙனம் மூன்றாண்டுகள் ஒரே ஆசிரியர்—ஒரே மாணாக்கர் அடங்கிய தமிழ்த் துறையில் கூட்டங்கள் கோலாகலமாக நடைபெற்று வந்தன. திருவேங்கடவனே வேங்கடேசன் வடிவமாகிக் கூட்டங்களை நடத்துவிக்கின்றானோ என்று கூட நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. இத்தகைய பல திருவிளையாடல்களை அவன் நடத்தியனவாக வரலாறுகளும் உண்டல்லவா?

குமிழி—163

# 7. மூன்று நூல்களின் வெளியீடு

நான் திருப்பதி வந்ததும் ஏற்கெனவே காரைக்குடியில் எழுதி அச்சுக்குச் கொடுக்கப்பட்டிருந்த (1) கல்வி உளவியல், (2) காதல் ஓவியங்கள் (3) கவிதையநுபவம் என்ற மூன்று நூல்கள் அச்சேறத் தொடங்கின. உடனே பல்கலைக் கழக விதிப்படி இந்த மூன்று நூல்களையும் வெளியிடுவதற்கு இசைவு கோரி பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பித்தேன். இசைவும் தரப்பெற்றது. அப்போது மானிடவியலில் (1) வரலாறு (2) பொருளியல் (3) மெய்ப்

பொருளியல் (4) உளவியல் என்ற துறைகளும் மொழியியலில் (1) தெலுங்கு (2) வடமொழி (சமஸ்கிருதம்) (3) உருது, அறபு, பாரசீகம், (4) புலம் அமையாத தமிழ் என்ற துறைகளும், அறிவியலில் (1) இயற்பியல் (2) வேதியியல், (3) கணிதம், (4) தாவர இயல் (5) விலங்கியல் (6) நிலஉட்கூற்றியல் என்ற துறைகளும்தான் இயங்கி வந்தன. எந்தத் துறையிலும் எழுத்துப் பழக்கம் உள்ளவர்களோ, எழுத வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களோ இருந்ததாகத் தெரியவில்லை. கல்லூரிகட்கும் பல்கலைக் கழகத்திற்கும் நடைமுறையில் வேறுபாடே தெரியாதவர்கள் பலர் சேர்ந்து விட்டனர். இந்தத் துறைகளிலெல்லாம் பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொள்ளும் உரிமை இருந்தது. அறிவியல் துறைகளில் ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலோர் பிஎச்.டி. பட்டம் பெறாதவர்களே. வரலாறு, பொருளியல் துறைகளில் துறைக்கு ஒருவராகப் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் இருந்தனர். மெய்ப்பொருளியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருவர் பணியாற்றினர். கணிதத் துறையிலும் தெலுங்குத் துறையிலும் எவருமே இலர். உருதுத் துறையில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர் ஒருவர் இருந்தார். ஆனால் பொருளியல் துறையில் ஒருவரும் (இவர் மலையாளி) கணித துறையில் ஒருவரும் (இவர் வங்காளி), உளவியல் துறையில் ஒருவரும் (இவர் தமிழர்) டாக்டர் பட்டங்கள் இல்லாமலேயே பேராசிரியர் பதவியிலிருந்தனர். வடமொழியில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்கள் இருவரும் துணைப் பேராசிரியர்களாகவே இருந்து வந்தனர். வணிகத் துறையில் ஒருவர் 'டாக்டர்' பட்டம் பெற்றவர். ஒருவர் இருந்தும் எல்லோருமே விரிவுரையாளர்களாகவே பணியாற்றி வந்தார். இவர்களையெல்லாம் துணைவேந்தர் எந்த அளவு கோலைக் கொண்டு மதிப்பிட்டார் என்பது அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம். அறிவியல் துறைகளில் ஒரு சிலரைத் தவிர

எந்தத் துறையிலும் 'ஆய்வு மன நிலை' உடையவர்களை என்னால் காணமுடியவில்லை. பெரும்பாலோர் செயலில் தம் திறமையை வெளிப்படுத்தாமல் துணைவேந்தரைக் 'காக்கை' (கால், கை) பிடித்தலில் போட்டி போட்டுக் கொண்டிருந்ததை என்னால் காண முடிந்தது. போட்டி போட்டுக் கொண்டு கூட்டங்களை அமைத்தல் அந்தக் கூட்டங்கட்குத் துணைவேந்தரைத் தலைமை தாங்குமாறு அழைத்தல் போன்ற செயலில் சுறுசுறுப்பாக இயங்கி வருவதைக் கண்டேன். இதில் பொதுவாக நாயுடு வகுப்பைச் சேர்ந்தவருக்கு, குறிப்பாக துணை வேந்தர் வகுப்பைச் சேர்ந்தவர்கட்கு, எல்லா நிலைகளிலுமே சலுகைகள் காட்டப் பெற்று வருவதும் வெள்ளிடை விலங்கலாகக் காணப்பட்டது. இவற்றையெல்லாம் கண்ணுறும் எனக்குச் 'சிரிப்பு' தான் வந்தது. உள்ளூர நகைத்துக் கொள்வேன். படித்தவர்களிடமே அக்கிரமங் கள், அடாத செயல்களைக் கண்ணுறும்பொழுது என் உள்ளம் கொதித்தெழும். என்ன செய்வது? எல்லாவற்றை 'ஹாஸ்யமாகவே' கொண்டு பாரதியார்,

> படித்தவன் சூதும் பாவமும் பண்ணினால்
> போவான், போவான், ஐயோவென்று போவான் [1]

என்று குடுகுடுப்பாண்டி வாயில் வைத்துப் பேசுவதை நினைத்துக் கொள்வேன். மலையின் மேல் கோயில் கொண்டிருக்கும் ஏழுமலையான் கண்களில் இவை யெல்லாம் படவில்லையோ என்று ஏங்கிக் கிடப்பேன். தேவஸ்தானத்தில் நடைபெறும் அட்டூழியங்களைச் சரிப்படுத்த முடியாது பார்த்துக் கொண்டிருக்கும் அவனுக்குப் பல்கலைக் கழகத்தின்மீது கவனம் செலுத்த நேரம் ஏது? அவரவர்கள் பிரார்த்தப்படி பாவம் பண்ணட்டும் என்று எண்ணிக் கொண்டானோ என்று கூட என்மனம் எண்ணத் தொடங்கியது. இந்நிலையில்

1. பா.பா: ப.பா—புதிய கோணங்கி—2

பிஎச்.டி.க்குப் பதிவு செய்து கொள்வதற்கு நான் தொடர்ந்து முயன்று கொண்டுதான் இருந்தேன்.

அக்காலத்தில் ஆசிரியம், இலக்கியம், அறிவியல் துறைகளில் தரமான ஏழு நூல்களை வெளியிட்டிருந்தேன். திறனாய்வு, கல்வி உளவியல் துறைகளில் மூன்று நூல்கள் அச்சாகிக் கொண்டிருந்தன. திறனாய்வில் இரண்டு நூல்களை எழுதிக் கொண்டிருந்தேன். கல்வித் துறையில் பணியாற்றிய இருபதாண்டுகள் அநுபவமும் பெற்றிருந்தேன். அக்காலத்தில் பி எச். டி பட்டம் பெற்றவர்கள் அரியராக இருந்தமையின் தரமான நூல்களை வெளியிட்டிருந்தவர்கட்கு துணைப் பேராசிரியர், பேராசிரியர், பதவிகள் வழங்கும் மரபும் நடைமுறையிலிருந்து வந்தது. பல்கலைக் கழக மானிய ஆணையமும் இந்த மரபுக்கு ஒப்புதல் அளித்தது, ஏன்? இந்தப் பல்கலைக் கழகத்திலேயே இம்மரபுக்குச் சான்றுகள் இருந்தன. இந்நிலையில் எனக்குத் துணைப் பேராசிரியர் பதவியாவது வழங்கியிருக்கலாம். என் உழைப்பை நான்கு ஆண்டுகள் நேரில் கவனித்திருந்தும் துணைவேந்தருக்கு மனம் இரங்கவில்லை. வாங்கிய சம்பளத்திற்கே பாதுகாப்பு அளிக்காதவர் பதவி உயர்வு எங்ஙனம் தரப்போகின்றார்? என்னிடம் நெருங்கிப் பழகிய பலதுறையைச் சார்ந்த பேராசிரியர்கள், துணைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என் உழைப்பையும் வெளியீடுகளையும் நன்கு உணர்ந்து துணைவேந்தர் எனக்குத் துணைப்பேராசிரியர் பதவி தருவார் என்று 'சோதிடம்' கூறினர். வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்த ஒரு சிலர் "பி எச். டிக்குப் பதிவு செய்து கொள்ள இசைவும் வாங்கிய சம்பளத்திற்கு பாதுகாப்பும் அளிக்காத துணைவேந்தர் ரெட்டியாருக்கு எதுவும் தாரார்" என்று உறுதியாகக் கூறினர். பலிஜ வகுப்பைச் சேர்ந்தவராக இருந்திருந்தால் "இத்தனையும் கிடைக்கும்; இதற்கு மேலும் கிடைக்கும்" என்று சில குறும்புக்காரர்கள் பேசிக் கொண்டதும் என் காதில்

விழாமல் இல்லை. ஆனால் எந்த விதமான மனமுறிவும் (Frustration) ஏற்படாமல் அமைதியாகப் பணியாற்றி வந்தேன்.

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப—இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதுஅன்றால்;
ஆவனவும் உண்டு சில.[2] அல்லனபோல

என்ற குமரகுருபர அடிகளின் திருமொழியின் ஒளியில் என் பணி சென்றது; முயற்சியும் தடைபடாது சென்றது. "இறக்கும் வரையிலும் முயற்சியுடையவனாயிருத்தல் வேண்டும்; உயிர் நீங்கும் என்று தெரிந்தும் ஆயுளை நீடிக்கச் செய்யும் மருந்தை ஊற்றுகின்றார்கள்; முடிவு பெறாதனபோல் தோன்றி முடிவு பெறும் காரியங்களும் உண்டு. இடைவிடாமல் முயன்றால் ஆகாதனவும் கைகூடலாம்" என்ற அடிகளின் வாக்கு எனக்கு ஊன்றுகோல் போல் இருந்தாலும், பலனை ஏழுமலையானுக்கு விட்டு விட்டேன்.

மூன்று நூல்கள் ஒரே சமயத்தில் அச்சானதால் சென்னையிலிருந்து ஒரு வாரத்தில் குறைந்தது நான்கு நாட்கள் பார்வைப் படிவங்கள் அஞ்சலில் வந்து கொண்டிருக்கும். வந்த அன்றே திருத்தி அஞ்சலில் சேர்த்து விடுவேன். சில நாட்களில் இந்தித் துறையில் பணியாற்றிய எல்லையா என்ற ஓடும் பிள்ளை (Office boy) முன்னதாகவே அஞ்சலகத்தில் பெற்று என்னிடம் சேர்ப்பிப்பதுண்டு. இதனால் அன்றைய வேலையின் அளவு காலையிலேயே அற்றுபடியாய் விடும். அறையிலிருந்து பார்வைச் படியைச் சரிபார்த்தல், உடனே அஞ்சலில் சேர்த்தல், அடிக்கடி நூலகத்திற்குச் சென்று நூல்களைப் புரட்டி எனக்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல், அறிவியல் ஆசிரியர்களை அவர்களது ஓய்வு நேரத்தில்

2. நீதிநெறி விளக்கம்—49

சந்தித்து ஐயங்களை அகற்றிக் கொள்ளுதல், புதிய வற்றைக் கற்றல்—இச் செயல்களில் தொடர்ந்து சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்ததைக் கண்டு என்னுடன் நெருங்கிப் பழகிய பல துறை ஆசிரியர்கள் மெச்சினர்; பாராட்டினர். சற்றுத் தொலைவிலிருந்து கொண்டு நோக்கியவர்கள் மூக்கின்மீது விரலை வைத்துக் கொண்டு வியந்தனர். சிலர் பொறாமைப் பட்டதையும் நான் கண்டேன்.

'கல்வி உளவியல்' என்ற நூல் முதலில் நிறைவு பெற்றது. இதற்குப் பேராசிரியர் ஜி. ஆர். தாமோதரன் (முதல்வர், பூ. சா. கோ. தொழில் நுட்பக் கல்லூரி, கோவை) அவர்களிடமிருந்து அணிந்துரையும், பேராசிரியர் டாக்டர் டி, ஆர். புருடோத்தம் (முதல்வர், பல்கலைக் கழகக் கல்லூரி, திருப்பதி) அவர்களிடமிருந்து ஓர் ஆங்கில அறிமுகமும், காரைக்குடியில் என்னுடன் பணியாற்றிய பேராசிரியர் வை. நா. சுப்பிரமணியன் (உளவியல் பேராசிரியர், அழகப்பா ஆசிரியர் கல்லூரி) அவர்ளிகடமிருந்து ஒரு முன்னுரை'யும் (Foreword) பெற்று நூல் வெளி வந்தது (சனவரி, 1961). இஃது என்னுடைய எட்டாவது வெளியீடாகும். இதனை, அப்போது சென்னை மாநிலக் கல்வி நிதி அமைச்சராகப் பணியாற்றி வந்த திரு. சி. சுப்பிரமணியத்துக்கு,

சென்னைமா நிலத்தில் செந்தமிழ் அன்னைத்
திருமுடி புனைந்தரி யணையில்
மன்னிவீற் றிருக்க மதிசெய்கல் லூரி
மாணவர் பல்கலை களையும்
பன்னுதீந் தமிழிற் பயின்றிட உழைக்கும்
பண்பினன்; நிதிகலை அமைச்சன்;
இன்னுரை வல்லான்; சுப்பிர மணியற்
கிவ்வுள நூல்உரி' யதுவே.

என்ற பாடலால் ,அன்புப் படையல்' செய்தேன். இதற்குக்காரணம் வேண்டுமல்லவா? ''அறிவாலும்

ஆற்றலாலும் மேற்கொண்டு செயலாற்றும் பணியாலும் சீலத்தாலும் என் உள்ளத்தைக் கவர்ந்தவர். பத்தாண்டு கட்குமேல் அமைச்சரவையின் அருமணியாகத் திகழ்ந் தவர். இவரது ஆட்சிக் காலத்தில்தான் தமிழன்னை சட்ட சபையில் அரியணை ஏறினாள். 'தமிழாராய்ச்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுவி'னை நிறுவித் தமிழன்னைக்குப் புதுக்கோலம் புனைந்து புத்தணிகள் பூட்டி அரியணை ஏற்றுவிப்பதில் முனைந்து நிற்கும் இவரது ஆட்சிக் காலத்தில்தான் தமிழன்னை பல்கலைக் கழகக் கல்வியிலும் பாடமொழியாக அரியணை ஏறத் தகுதி பெற்று வருகின்றாள்''. இத்தகைய பேரறிஞர்பால் யான் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் அறி குறியாக இவர்கட்கு இந்நூலை அன்புப் படையலாக்கி னேன்.

'காதல் ஓவியங்கள்' என்னும் நூல் அடுத்து நிறைவு பெற்றது. இது சங்க இலக்கியத் தொகுப்பாகிய எட்டுத் தொகை நூல்களில் அகநானூறு குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு கலித்தொகை என்னும் ஐந்து தொகை நூல்களிலிருந்தும் எடுக்கப் பெற்ற இருபத்து நான்கு பாடல்களின் விளக்கம். புறநானூற்றின் பாடல் ஒன்று(பாடல்-320) காதலின் நுட்பத்தை விளக்கு தால் அதுவும் இந்த நூலில் இடம் பெறலாயிற்று. அற்புதமான விளக்கமாகவும் அமைந்துள்ளது. இளங் கவிஞர்களுள் தலையாய கவிஞரான திரு எஸ். கே இராமராசனின் (தமிழாசிரியர், கண்டர் உயர் நிலைப்பள்ளி வேலூர் (சேலம்) அணிந்துரை பெற்று 'கல்வித் தந்தை' எனக் கருதத்தக்க திரு. ப துரைக்கண்ணுமுதலியார் அவர்கட்கு (முதல்வர் அழகப்பா ஆசிரியர்க் கல்லூரிக் காரைக்குடி)

ஆங்கிலக் கலையை முறையுறப் பயின்றோன்;
அருந்தமிழ் அமுதினைச் சுவைத்தோன்;
ஓங்குநற் கலைகள் தருபயன் அறிந்தோன்;
உயர்ந்தநற் குணம்பல பெற்றோன்,

பாங்குறும் பயிற்சிக் கலைக்கொரு தலைவன்
பண்புசால் துரைக்கண்ணு நம்பி
தேங்கலந் தொளிரும் நட்பினுக் கணியாய்த்
தேசுபெற் றொளிர்கஇந் நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கப் பெற்றது. இஃது என்னுடைய ஒன்பதாவது வெளியீடாகும்.

'கவிதையநுபவம்' இதனையடுத்து நிறைவு பெற்றது. "பாட்டெல்லாம் அறிவு நிலையைப் பற்றிக் கொண்டு போய் உயிர்களின் உணர்வு நிலையைத் தட்டி எழுப்பி விடுவதாகும். உரையெல்லாம் அறிவு நிலையைப்பற்றி நிகழுமேயல்லது அதன்மேற்சென்று உணர்வு நிலையைத் தொடமாட்டாதாகும்"[3] என்பர் மறைமலையடிகள். ஆகவே, நாம் தமிழால் பெறும் இன்பம் கவிதையாய் பெறும் இன்பமே இதுவே கவிதையநுபவமாகும். இந்நூல் நிறைவு பெற்றதும் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் அணிந்துரையையும் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரின் ஆங்கில 'அணிந்துரை'யையும் (Foreword) பெற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத் தன்னேரில்லாத துணைவேந்தர் ஆ. இலக்குணசாமி முதலியாருக்கு,

தேங்கமழ்தன் துளபமணி மாயற் கன்பர்;
சீர்சான்ற மருத்துவத்தின் இணையே இல்லார்;
ஆங்கிலமாம் பெருங்கடலின் ஆழங் கண்டார்;
அரியதமிழ்ப் பண்பாட்டின் உருவம் போல்வார்
ஓங்குசென்னைப் பல்கலைசேர் கழகம் வாழ
உறுபணிசெய் துணைவேந்தர்; வீறுபெற்ற
வேங்கடம்நேர் இலக்குமண சாமி என்னும்
வித்தகருக் கித்தனிநூல் உரிமை யாகும்.

---

3. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை—பக்(7-8)

என்ற பாடலால் அன்புப் படையலாக்கினேன். காரணம் என் வீர வழிபாடே.சற்றேறக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழக வளர்ச்சியில் பல்வேறு நிலைகளில் நின்று பங்கு கொண்டவர்கள். சேவைக்கும் அதனையாற்றும் திறமைக்கும் இராமகாதையின் இளைய நம்பியையொத்தவர்கள். பல்கலைக் கழகத்தின் தரம் குறையாமல் பல்லாற்றானும் மிகக் கவனமாகக் காத்து வந்தவர்கள். அரசியலிலும் இவருக்குப் பங்கு இருந்தது. பல்லாண்டுகளாக தமிழக மேலவையின் எதிர்க்கட்சித் தலைவராகநின்று நிகழ்த்திய பேருரைகள் வாதப் போர்கள் அவையின் தரத்தையே உயர்த்தி வந்ததை இந்திய மண் அறியும்; வெளிநாட்டு அறிஞர்களும் நன்கு அறிவார்கள். ஐ.நா.வைச் சார்ந்த உலக சுகாதாரக் கழகத்தின் (WHO) பல்லாண்டுகள் உறுப்பினராகவும் சில ஆண்டுகள் அதன் தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகளை உலக நாடுகள் நன்கு அறியும். இவற்றின் அறிகுறியாக, யான் இவர்பால் கொண்ட மதிப்புக்கும் மரியாதைக்கும் அறிகுறியாக இந்நூலை இப்பெரு மகனாருக்கு அன்புப் படையலாக்கினேன். இ∴து என்னுடைய பத்தாவது வெளியீடாகும் (மே,1961).

# 8. முத்தொள்ளாயிர விளக்கம்—முகிழ்த்தல்

முதல் சந்திப்பில் திரு எஸ். கோவிந்தராஜுலு நாயுடு துணைவேந்தர் தந்த அறிவுரை என் உள்ளத்தில் ஆழப் பதிந்தது. அவர் தந்த அறிவுரை என் இயல்புக்கு ஒத்த தாக இருந்தமையால் அஃது என்னோடு ஒன்றி ஐக்கியமாகி விட்டது. ஓய்வு நேரத்தில் திருவேங்கடவன் கீழ்த்திசை ஆய்வுக் கழக நூலகத்திற்குச் சென்று அங்குள்ள தமிழ் நூல்களையும் பிறவற்றையும் பார்வையிட்டேன். அதிக ஓய்வு இருந்தமையால் அடிக்கடிச் சென்று நூல்களைச் சோதித்தேன். 'முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் (108)' என்ற தலைப்பில் பேராசிரியர் மு. இராகவய்யங்காரால் பரிசோதிக்கப்பட்டுச் செந்தமிழ்ப் பிரசுரம்—14 ஆக வெளி வந்த (இரண்டாம் பதிப்பு-1935) என்ற சிறு நூலொன்று என் கண்ணில் பட்டது. என்னையும் கவர்ந்தது. உடனே அதனை இரவலாக வாங்கிப் படிக்கத் தொடங்கினேன். ஏற்கெனவே நான் காரைக்குடியிலிருந்த போதே கம்பன் அடிப் பொடியின்'[1] நட்பால் முத்தொள்ளாயிரம்—டி.கே.சி. பதிப்பில் (பொதிகைமலைப் பதிப்பு—திருக் குற்றாலம்—தென்காசி (1957) எனக்குப் பயிற்சி இருந்தது. காரைக்குடியிலிருந்த போதே அந்தப் பாடல்களை நன்கு சுவைத்திருந்தேன். பாடல்களின் நாடி பிடித்துப் பார்க்கும் டி. கே. சி.யின் இயல்பை நன்கு புரிந்து கொண்டிருந்தேன்.

குடும்பம் இல்லாமல் திருப்பதியில் 'தனிக் கட்டையாக' இருந்ததால்(ஆறு ஆண்டுகள் நேரம் எல்லாம்படிப்பதிலும்)

1. திரு சா. கணேசன். (தேசபக்தர்)

எழுதுவதிலுமே கழிய வேண்டியிருந்தது. முத்தொள் ளாயிரப் பாடல்களை அசைப்போட்டு அசை போட்டு மெல்லச் சுவைத்தேன். "முத்தொள்ளாயிரச் செய்யுள் ஒவ்வொன்றிலும் வெகு அற்புதமான உணர்ச்சி பாவங் களைப் பார்க்கலாம். உணர்ச்சியானது அரிய தமிழ்ப் பண்போடும் தாளப் பண்போடும் உருவெடுக்கப் பார்க்க லாம். எவ்வளவுக் கெவ்வளவு உணர்ச்சி பாவத்தோடு நம்முடைய இதயம் ஒட்டுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு கவி உருவத்திலுள்ள அழகும் சுவையும் அற்புத மும் நமக்கு விளங்கும்"[2]... "ஆனால் கவியில் முக்கிய மாகக் கவனிக்க வேண்டியது உணர்ச்சியானது பாவ உருவத்தில் வந்து வெளிப்படுகின்றதா என்பதுதான். இந்த உருவத்தின் மூலமாகவே, கவிஞருடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியைப் பார்க்கின்றோம். அதோடு, அந்த உணர்ச்சியை வார்த்தை தாளங்களிலுள்ள நேரான, இயல்பான சம்பந்தத்தில் பார்க்கின்றோம். அப்படிப் பார்க்கும் போதுதான் கவிஞரது இதயத்திலுள்ள அற்புத மான சிருஷ்டி தத்துவம் நம்முடைய இதயத்துக்கும் வந்து சேருகிறது. கவிஞருடைய சிருஷ்டி தத்துவத்தால், கவிஞர் இதயத்தில் பெருகிய ஆனந்தம் அவ்வளவிலும், நாமும் பங்கு கொள்கின்றோம். முத்தொள்ளாயிர ஆசிரியர் இரண்டாயிர வருஷத்துக்கு முன் அடைந்த ஆனந்தத்தை இன்று நம்முடைய இதயம் அடைகின்றது. நமது பாக்கியந் தான் என்ன!"[3] இந்தக் குறிப்பு என் உள்ளத்தை ஆட் கொண்டது; பிணித்துவிட்டது.

முத்தொள்ளாயிரப் பாடல்களைச் சுவைத்து மகிழும் போது—பரவசப் படும்போது—இந்த அநுபவம் எனக்குத் தட்டுப்பட்டது. துணைவேந்தர் தந்த உற்சாகத்தால் பாடல்

2 முத்தொள்ளாயிரம்—டி. கே. சி. யின் முகவுரை பக், ix. (பதிப்பு—1957).

3 ஷை-பக் (xi).

களைச் சுவைத்த முறையிலேயே அவற்றிற்கு விளக்கம் எழுதிக் கொண்டே வந்தேன். 1962—இல் பாடல் விளக்கமும் முடிந்தது. துணைவேந்தரிடம் கைப்படியைக் கொண்டு சென்று பல்கலைக் கழக வெளியீடாக வெளியிடுமாறு வேண்டினேன். 'ஒரு நிபுணர் கருத்து' பெற்றுதான் வெளியிடமுடியும் என்று சொன்னார். பல்கலைக் கழகம் கட்டட வேலைகள், அறிவியல் தள வாடங்கள் கொள்ளும் பணிகள் இவற்றிற்கு ஏராளமான செலவுகள் இருந்தமையால் பணத்திற்கும் தட்டுப்பாடும் இருந்தது. என் வேண்டுகோளினால் துணைவேந்தருக்கு இரண்டு பிரச்சினைகள் ஏற்பட்டன. ஒன்று, நிபுணர் கருத்தைப் பெற வழி காண்பது. இரண்டு, நூல் வெளியிட நிதி காண்பது. துணைவேந்தரோ சிக்கனக்காரர், சிந்தனை மிக்கவர் என்பது நாடறிந்த செய்தி. என் கைப்படியை அவரிடம் தந்து வெளியிடும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன்.

டாக்டர் மு. வரதராசன் பாடத்திட்டக்குழு, பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டங்களுக்கு ஆண்டிற்கு மூன்று முறை வந்து போவதுண்டு. ஒரு சமயம் அவர் ஏதோ ஒரு கூட்டத்திற்கு வந்திருந்தபொழுது துணைவேந்தருக்கு நான் தந்த கைப்படியை நினைவூட்டி டாக்டர் மு. வ. விடம் அதனைச் சேர்ப்பிக்கச் செய்தேன். அஞ்சல் செலவின்றி கைப்படிஅவரிடம் சேர்ந்தது. அவரும் நான்கு திங்களில் வேறொரு கூட்டத்திற்கு வந்த பொழுது தம் கருத்துடன் கைப்படியை என்னிடம் தந்து பல்கலைக் கழகத்தில் சேர்ப்பிக்குமாறு பணித்தார். நான் துணை வேந்தரிடமும் அவர் செவ்வியறிந்து கைப்படியைச் சேர்ப்பித்துப் பதிப்பிக்க வகை செய்யுமாறு வேண்டினேன். இவ்வாறு ஒரு பிரச்சினை தீர்ந்தது. திருவேங்கடவன் கீழ்த்திசை ஆய்வுக் கழகக் கணக்கில் நிதி தூங்கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து வெளியீட்டிற்குக் கட்டளை பிறப்பித்தார். இரண்டாண்டுகளாக 'சிவப்பு நாடாவின்'

தடை இருந்தது. எப்படியோ நூல் 'முத்தொள்ளாயிர விளக்கம்' என்ற தலைப்பில் பல்கலைக் கழக வெளியீடாக, என்னுடைய ஆங்கில ஆய்வு நூல்முகத்துடன் நவம்பர், 1965 இல் வெளி வந்தது இது என்னுடைய பதினேழாவது வெளியீடாக அமைந்தது; ஏழுமலையானின் முதல் பிரசாதமாகவும் அமைந்தது.

நல்ல பாத்திரம் ஒருவருக்கு இதை அன்புபடையலாக்க நினைத்தேன். இது கிட்டத்தட்ட ஒரு பதிப்பாகவும், விளக்க உரை நூலாகவும்அமைந்ததால் தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் தமிழ் இலக்கிய வானில் துருவ மீன்போலத் திகழ்ந்த (அமரர்) டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கட்கு,

முதலைவாய் அகப்பட்டுக் களிறு கூவ
 முன்வந்து புரிந்திட்ட திருமால் போலச்
சிதலைவாய் அகப்பட்டுக் கலங்கி மாழ்கிச்
 சீர்குன்றி அகம்புறமும் நைந்து நொந்து
விதலைநோய் உறுதமிழைக் காக்க வந்த
 வீறுடையான் சீர்சாமி நாதன் தெய்வப்
பதமலரில் இந்நூலை அன்பி னோடு
 படைக்கின்றேன் பணிகின்றேன் வாழ்த்து
 கின்றேன்.

என்ற பாடல்மூலம் அன்புப் படையலாக்கி அப் பெருமகனார்பால் நான் கொண்டிருந்த பெருமதிப்பையும் பக்தியையும் புலப்படுத்திக் கொண்டேன்.

ஒரு பாடலின் விளக்கம் 'அது கிட்டுமா?' என்பது தலைப்பு.

''அக்காலத்தில் கணவன்மார் நீராடுவதற்கு மனைவிமார் மஞ்சப்பொடி இடிப்பது வழக்கம், அரண்மனையின் அந்தப்புரத்திலும் அரசரின் தேவிமார் இவ்விதச்

செயலை மேற்கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது. அப்படி இடிப்பதற்குத் தனியான கூடம், நல்ல வயிரத் தாலாகிய மர உரல், தங்கப்பூண் கட்டிய உலக்கை முதலிய எல்லா ஏற்பாடுகளும் இருந்து வந்தன. இடிக்கும்போது பாடுவதற்குப் பாடல்களும் இருந்தன. உலக்கை போடும்போது பாடும் பாட்டு 'வள்ளைப் பாட்டு' என வழங்கி வந்தது. மூவேந்தர்களைப் பற்றியன வாக மிகப் பல வள்ளைப் பாடல்களும், கொடி தேர் முதலிய பத்து உறுப்புகளைப் பற்றிப் பாடுவதாகிய (தசாங்கமும்) அக்காலத்தில் மிகுதியாக வழங்கி வந்தன என்பதைச் சிலப்பதிகாரம் போன்ற நூல்களால் அறிய லாகும்.[1] கலித்தொகையிலும் இத்தகைய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. இந்தப் பாடல்களைத் தோழியருடன் பாடிக் கொண்டு மனைவியர் சுண்ணம் இடிப்பர்.

* * *

ஒருநாள் மங்கல முழக்கம் கேட்டு வாயிலுக்கு வருகின்றாள் நங்கையொருத்தி. தெருவில் இப்பக்கமும் அப்பக்கமுமாக நோக்குகின்றாள். ஒன்றும் காணப்பெற வில்லை. சோர்வுடன் வீட்டினுள் செல்கின்றாள். திரும்ப வும் ஒலி காதில் விழுகின்றது. ஆர்வத்துடன் மீண்டும் வெளியே வந்து தெருவாயிலின் கதவருகிலிருந்து கொண்டு அங்குமிங்கும் நோக்குகின்றாள். நெடுந்தூரத்தில் தேரின் கொடி மட்டிலும் அவளது கண்களுக்குப் புலனாகின்றது. வரவரத் தெளிவாகத் தெரிகின்றது கயற்கொடி.

அந்தக் கொடியையே நோக்கிய வண்ணம் நிற்கின்றாள் அந்நங்கை. சிறிது நேரம் சென்ற பின்னர் பெரிய தேர் ஒன்று தெரிகின்றது. இன்னும் பார்த்துக் கொண்டே நிற்கின்றாள்; தேரும் நெருங்கி வந்து கொண்டி ருக்கின்றது. தேரினுள்ளிருக்கும் செம்மல் யார் என்று

1. 'பாடல் சால் முத்தும்' (சிலப். வஞ்சி—வாழ்த்துக் காதை—27) என்று தொடங்கும் பாடல்பாண்டிய னைப் பற்றிய வள்ளைப் பாட்டு.

அவள் நோக்குகின்றாள்; ஆள் அடையாளம் தெரிய வில்லை. அவனுடைய மணி முடி மட்டிலும் அவளுடைய கண்ணில் படுகின்றது; அதனையே நோக்கிய வண்ணம் இருக்கின்றாள்; தேரும் அவளது வீட்டருகில் வருகின்றது; உள்ளே தென்னவன் வீற்றிருக்கின்றான். அவனுடைய மார்பில் மலர் மாலைகள் கிடந்து புரளும் காட்சி அவளது கண்ணில் படுகின்றது. தேர் வீட்டிற்கு நேரே வந்து நின்ற வுடன் மாறனுடைய மார்பில் கிடக்கும் முத்தாரங்கள் மிளிர்வது தெரிகின்றது. சிறிது நேரத்தில் தேரும் போய் விடுகின்றது.

அன்று கண்ட காட்சி அந்நங்கையின் மனத்தைவிட்டு அகலவே இல்லை. மாறன்பால் மால் கொண்டு மயங்கிய வண்ணம் இருக்கின்றாள் அவள். சரியாக உண்பதுமில்லை; உறங்குவதுமில்லை. இந்நிலையை அவளுடைய அன்னை அறிந்து தன் மகள் வெளியே எட்டிப் பார்க்காத வண்ணம் காவல் புரியத் தொடங்கு கின்றாள். பாவம், அந்நங்கை என்ன செய்வாள்? ஓரிடத் தில் அமர்ந்து கொண்டு அவள் ஏதேதோ எண்ணுகின்றாள்; சிந்தனையில் ஆழ்கின்றாள். அப்பொழுது அண்டை வீட்டி லுள்ள நங்கைமார் சுண்ணம் இடிக்கும் ஒலியும், அவர்கள் பாடும் வள்ளைப் பாட்டொலியும் அவளது காதில் விழுகின்றன. உடனே தான் காதலிக்கும் பாண்டியனைப் பற்றிப் பாடிக் கொண்டு சுண்ணம் இடிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகின்றது. ஆனால், தனது இயலாத நிலையை எண்ணித் தன் நெஞ்சுடன் இவ்வாறு சொல்லிக் கொள்ளுகின்றாள். தலைநாளில் கண்ட காட்சியை நினைந்து பேசுகின்றாள்.

''நான் முதலில் கண்டது கொடி; அடுத்துத் தேரைக் கண்டேன். அதன் பிறகு தேரினுள் வீற்றிருப்பவன் மாறன் என்றும் அவன் அணிந்திருப்பது குளிர்ந்த மலர் மாலை யென்றும் அறிந்தேன். சிறிது நேரத்தில் மாறனின் மணி

முடியும், மார்பில் இலங்கும் முத்தாரமும், எனது கண்ணில் பட்டன[2].' இங்ஙனம் யான் கண்ட காட்சியை முறை சிறிதும் பிறழாமல் உலக்கையை ஓச்சும்போது வள்ளைப் பாட்டால் பாடும் பேறு என்றாவது பெறுவேனோ?

கொடிபாடித் தேர்பாடிக்
    கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம்
    பாடித்—தொடியுலக்கை
    ...ஓச்சப் பெறுவனோ

என்று எண்ணுகின்றாள்.

"பெரிய இல்லமாக இருந்தால் அன்னை அக்கம் பக்கம் போயிருக்கும் பொழுது பாட்டினைப் பாடி உலக்கையைப் போடலாம்; அதற்கும் வழி இல்லையே. ஆனால், என் வீடோ மிகவும் சிறியது. அன்றியும், அண்டை வீட்டுப் பெண்களுக்குச் சுதந்திரம் உண்டு; அவர்கள் திருமணமானவர்களாதலின் அவர்கட்கு யாதொரு கட்டுப்பாடும் இல்லை. அன்னை எங்காவது போய்த் தொலைவாள் என்று பார்த்தால், அதற்கும் வழி இல்லை. என்னை விடாது கட்டிக் காக்கின்றாள் அவள்.

—தொடியுலக்கை

கைமனையில் ஓச்சப்
    பெறுவனோ யானும்ஓர்
அம்மனைக் காவல்
    உளேன்"

என்று ஏங்குகின்றாள்.

---

2. 'வற்கலையின் உடையானை' (கம்ப, அயோ. குகப்—29) என்ற பாடலுடன் ஒப்பிடுக. இது தொலைவில் வந்து கொண்டிருக்கும் பரதனைக் குகன் கண்ட முறையினை விளக்குவது'

தலைவியின் ஏக்கம் அவளது மனத்தில் தோன்றிய படியே அமையுமாறு கவிஞர் அமைத்த சொல்லோவியம் இது:

கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப் பெறுவெனோ யானும் ஓர்
அம்மனைக் காவல் உளேன்.[3]

இது கைக்கிளை : தலைவி நெஞ்சோடு கூறுவது.

விளக்கம் : கொடி—மீனக்கொடி. கொய் தண்தார் மாறன்—அப்பொழுது பறித்துக் கட்டிய குளிர்ந்த மாலையைச் சூடிய பாண்டியனது. முடி—கிரீடம். முத்தாரம்—முத்துமாலை; பாண்டியனுக்குச் சிறப்பாயுள்ளது. தொடி—பூண் (இங்குத் தங்கப் பூண்). தொடி உலக்கை—பூண் கட்டிய உலக்கை. கை மனை—சிறிய வீடு. கை—சிறுமை; கைக்குடை, கைத்தடி, கையேடு, கை விளக்கு முதலியன காண்க. ஓச்சுதல்—சுண்ணம் இடிக்கும் பொழுது உலக்கையை மேலோங்கிச் செல்லும்படி நீட்டுதல். யானும்—இதில் உள்ள உம்மை இறந்தது தழீஇயது. அண்டை வீட்டுப் பெண்கள் யாவரும் பாடிச் சுண்ணம் இடிக்கின்றனரே, யானும் அப்பேறு பெறுவேனோ என்பதை அந்த உம்மை குறிப்பிடுகின்றது. 'யானும்' என்பதற்கு அபாக்கியவதியாகிய யானும் என்றாலும் பொருந்தும். அம்மனை—தாய் ஓர் அம்மனை (கதவடைத்துக் காப்பதில்) ஒப்பற்ற தாய்; ஓர்கின்ற அம்மனை எனக்கொண்டு, குற்றம் ஆராய்கின்ற தாய் எனலும் அமையும்.

3. முத்தொள்ளாயிர விளக்கம்—44.

இந்தப் பாடலில் 'பாடி' என்ற சொல் பலமுறை வந்து பாடலின் உணர்ச்சியை மிகுவிக்கின்றது.[4]

'ஓர் அம்மனைக் காவலுளேன்' என்ற இறுதியடியில் நங்கையின் ஏக்கத் துடிப்பு தொனிக்கின்றது. இந்த அடியைத் திரும்பத் திரும்பப் பாடி அநுபவித்தால் அத்துடிப்பு வெளிப்படுவதை அறிந்து மகிழலாம்.

குமிழி—165

## 9. பிஎச். டி ஆய்வுக்கு இசைவு தர மறுப்பு

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ—இந்த
சென்மத்தை வீணாகக் கழிப்பேனோ?

என்ற ஏக்கம் கொண்ட நந்தனாரைப் போல் 'என்று நான் டாக்டர் (பிஎச்.டி) பட்டம் பெறுவேன்?' என்று ஏங்கிக் கிடந்தேன். 1943இல் தொடங்கிய இந்த ஏக்கம் தொடர்ந்து என்னை வாட்டத் தொடங்கியது. 'ஊழிற் பெருவலியாவுள?' என்ற வள்ளுவர் வாக்கு என் எண்ண அலைகளின்மீது மேலோங்கி நின்றது. சென்னைப் பல்கலைக் கழகவிதிஎன் 'தலைவிதி'யாக நின்று தடுத்தது.

புகல் ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே[1]

---

4. 'காதார் குழையாட' (திருவா. திருவெம்' 4) என்ற திருவெம்பாவைப் பாடலில் 'ஆட', 'பாடி' என்ற சொற்கள் மீட்டும் மீட்டும் இவ்வாறு வந்து உணர்ச்சியை மிகுதிப் படுத்துவதைக் காண்க,

1. திருவாய். 6.10.10.

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கினைச் சிரமேற்கொண்டு தமிழகத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியர்—துறைத் தலைவர் பதவியைத் துறந்து திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவியை ஏற்றேன்-1960 ஆகஸ்டு முதல் நாள்.

பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் மிக்க புகழோடு விளங்கியவர் டாக்டர் கே. சி. வரதாச்சாரியார்; இவர் துணைப் பேராசிரியராக இருந்தார். இவர் திருப்பதி வாசி முதல்வர் டி. ஏ. புருஷோத்தம்தான் இத்துறைப் பேராசிரியர்; துறைத் தலைவர். இத்துறையில் மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்தவர் டி. இ. வீரராகவன் என்ற விரிவுரையாளர். எப்படியோ பணியில் சேர்ந்த சில நாட்களுக்குள் இத்துறைக்குப் போக நேர்ந்தது. புதிதாக வந்தவனாதலால் தமிழ் பேசத் தெரிந்தவர்களிடம் பழக வேண்டும் என்ற எண்ணம் முகிழ்த்ததால் இந்தத் துறைக்குச் சென்றேன். டாக்டர் கே. சி வரதாச்சாரியாரும் டி. இ. வீரராகவனும் திருப்பதி தேவஸ்தானத்தைச் சார்ந்த கலைக் கல்லூரியில் பல்லாண்டுகள் பணியாற்றியவர்கள்; பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றதும் பல்கலைக் கழகத்தில் வந்து சேர்ந்தவர்கள். இதனால் திருப்பதியின் கல்விச் சூழ்நிலை, பணியாற்றிய பெரியார்கள், பிற விவரங்கள் இவற்றை நன்கு அறிந்தவர்களாக இருந்தனர்.

டாக்டர் கே.சி. வரதாச்சாரியர் நன்கு படித்தவர். அவர் பேச்சிலிருந்தே பெரும்புலவர் என்பதைச் சிறிது நேரத்தில் எவரும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். டி.இ. வீரராகவன் நாட்டு நடப்புகளை நன்கு அறிந்தவர்; உலகியலை நன்கு புரிந்து கொண்டுத் திகழ்ந்தவர். இதனால் இத்துறைக்கு அடிக்கடிப் போய் வருவதுண்டு.

நான் பிஎச்.டி. பட்டத்திற்குப் பதிவு செய்து கொள்வதற்காகவே இங்கு வந்ததாகக் குறிப்பிட்டேன். இதைப் பற்றி டாக்டர் கே.சி, வரதாச்சாரியாரிடம் அடிக்கடிப் பேசுவதுண்டு. தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், அணுகும் முறை இவற்றைப் பற்றி அவரிடம் கலந்து ஆலோசிப்பதுண்டு. ஒரு நாள் அவரை எனக்கு வழிகாட்டியாக (Guide) இருக்குமாறு வேண்டினேன். என்னுடைய துடிப்பு, ஆய்வில் ஆர்வம், கடுமையான உழைப்பு இவற்றை நன்கு அறிந்து தெளிந்த பேராசிரியர் என் வேண்டுகோளுக்கு ஒப்புக் கொண்டார். ஒரு நன்னாளில விண்ணப்பத்தை நிரப்பி, உரிய கட்டணத்தைச் செலுத்தி பேராசிரியரிடம் ஒப்பம் வாங்கிப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினேன். அனுப்பிய பிறகு துணைவேந்தரையும் சந்தித்து இசைவு தருமாறு வேண்டினேன். அவரும் கவனிப்பதாகக் கூறினார். ஆனால் அவா சொன்னது; ''மிஸ்டர் ரெட்டியார், நன்றாக ஆய்வு செய்யுங்கள். கட்டுரையை ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற எண்ணமுடையவராக இருங்கள். எதிர்காலத்தில் இங்குத் தமிழ்த்துறை ஏற்பட்டு வளர வாய்ப்புண்டு. தாங்கள் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் வருவதற்கும் வாய்ப்பு இருக்கும். அப்போது தாங்கள் வழிகாட்டியதாக இருக்க நேரிடுங்கால், இருவர் அல்லது மூவருக்கு மேல் எடுத்துக் கொள்ளாதீர்கள். அவர்களையும் ஆங்கிலத்தில்தான் கட்டுரை வரையப் பெறல் வேண்டும் என்று வற்புறுத்துங்கள். எக்காரணத்தைக் கொண்டும் தமிழில் எழுத இடங்கொடுக்காதீர்கள். இந்த நிலையில் கூட தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் வடிக்க முடியாது என்றால், யார்தான் தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்போகிறார்கள்? மொழியாசிரியர்கள் நல்ல ஆங்கில அறிவுடன் திகழ்ந்தால் அவர்கட்கு உலகளாவிய புகழ் கிடைக்கும். ஏன்? இந்தியாவிலேயே எல்லாப் பகுதிகட்குப் போகவும் அங்கெல்லாம் தமிழ்

இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழில் பக்தி இலக்கியத்தின் பெருமை, தமிழ் இலக்கியம் பல்வேறு காலங்களில் பல்வேறு சூழ்நிலையில் வளர்ச்சி பெற்ற முறை இவற்றையெல்லாம் நம் நாட்டில் பிற பகுதியினரும் வெளி நாட்டாரும் அறிய வாய்ப்புகள் ஏற்படும்'' என்று மலையுச்சி அறிவுரை (Sermon on the Mount) போன்ற ஓர் அறவுரையை நல்கினார். இதுகண்ணன் பார்த்தனுக்குத் தேர்த்தட்டிலிருந்துகொண்டு உபதேசித்த கீதையைப் போன்றிருந்தது என்றும் சொல்லிவைக்கலாம். நான் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். எதிர்காலத்தில் அமைய இருக்கும் தமிழ்த்துறையை எவ்வெவ்வாறெல்லாம் வளர்க்கவேண்டும்? அதன் வளர்ச்சிக்கு எப்படி உழைக்க வேண்டும்? எப்படிப் புகழ் பெறச் செய்யவேண்டும்? என்றெல்லாம் என் மனம் சிந்திக்கத் தொடங்கியது; கற்பனையுலகில் என் மனம் சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.'பைந்தமிழ்ப் பின்சென்றபச்சைப்பசுங் கொண்டல்'[1] ஏழுமலையான் துணையின்றி—அவன் திருவருளின்றி—தமிழ் நடையாடிக் கொண்டிருந்த நிலப்பகுதியில்—நடையாடாமல் செய்து வந்த சூழ்நிலையில்—எதுவும் நடைபெற முடியாது என்பது என் அதிராத நம்பிக்கையாக இருந்தது.

சில நாட்கள் கழிந்தன. பிஎச்.டி. ஆய்வு செய்ய இசைவு மறுக்கப்பெற்றது. காரணம் அறிவதற்காகத் துணைவேந்தரைச் சந்தித்தேன், தமிழ்ப் புலம் (Tamil Faculty) பல்கலைக் கழகத்தில் இல்லாததால் ஆய்வு செய்வதற்கு விதிகள் இடந்தரா என்று சொல்லிவிட்டார். மேலும், அவர் ''வழிகாட்டியாக இருப்பதற்கு ஒப்புக் கொண்ட டாக்டர் கே. சி. வரதாச்சாரி இதற்குத் தகுதியற்றவர்; தமிழ் இல்லத்தில் பேசும் வைணவராக இருந்த போதிலும் தமிழ் படிக்கத் தெரியாதவர்; தெலுங்குதான்

1. குமரகுருபர அடிகள்: மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் — காப்பு. திருமால்—2

அவர் படித்த மொழி. அதிலும் அவருக்கு ஆழ்ந்த புலமை இல்லை. வடமொழியிலும் இதே நிலைதான்'' என்று அவரைக் குறைவாகப் பேசினார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. செயற்பட முயற்சி எடுக்க முடியாத நிலை வந்துவிட்டது. மேற்கூறியவாறு தவறாக மதிப்பிட்டுப் பேசும் போது துணைவேந்தர் பேச்சில் 'கோபத் தொனியும்' இருப்பது தெரிந்தது. என்மீது கோபம் இல்லை என்பது தெளிவு. இருந்தால் கோபம் டாக்டர் வரதாச்சாரிமீது தான் இருக்கவேண்டும் என ஊகித்துக் கொண்டேன். இருந்த போதிலும், காரணத்தைத் தெரிந்து கொள்ள என் மனம் விழைந்தது. திரு டி. இ. வீரராகவனிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது ஒருவாறு காரணம் புரிந்தது. திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் நியமனத்தில் திரு டி. சதாசிவ ரெட்டிக்கும், (டி. எஸ். ரெட்டி என்றே வழங்கப் பெறுபவர்)[2] பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடுவுக்கும் போட்டி இருந்ததாகவும் இப்போட்டியில் டாக்டர் வரதாச்சாரி திரு. ரெட்டியின் சார்பாக உழைத்ததாகவும், இதனைத் திரு நாயுடு அறிந்து கொண்டதாகவும், அதிலிருந்து திரு நாயுடு டாக்டர் வரதாச்சாரியின்மீது சினங் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார் திரு. வீரராகவன். மேலும் அவர் எல்லாத் தகுதியிருந்தும் டாக்டர் வரதாச்சாரியாரைப் பேராசிரியராக உயர்த்தாமைக்கும் இதுதான் காரணமாக இருக்கவேண்டும் என்றும், இதனால்தான் அவருக்குப் பதவி உயர்வு தராமல் வெளியிலிருந்து ஒப்பந்தத்தில் பேராசிரியர் டி. ஏ. புருஷோத்தம் கொணரப்பட்டுள்ளார் என்றும், டாக்டர் வரதாச்சாரி ஓய்வு பெறும் வரையிலும் பேராசிரியர்

2. சென்னை மாநிலத்தில் பல்லாண்டுகளாகக் கல்வித் துறையில் பணியாற்றி கல்வித்துறை இயக்குநராக ஓய்வு பெற்றவர். அனந்தப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

புருஷோத்தம் ஒப்பந்தம் ரட்டிக்கப்படும் என்றும் விளக்க மும் தந்தார். காரணம் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. பின்னர் டாக்டர் வரதாச்சாரியும் இக் காரணத்தை உறுதி செய்தார்.

ஆனால் அண்மையில் (சூலை—1984) திருவேங்கடவன் கலைக் கல்லூரியில் இயற்பியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற திரு. ஏ. நடராசன் என் இல்லத்திற்கு வந்த போது வேறொரு காரணத்தையும் கூறினார். ஆந்திரம் தனி மாநிலமாகப் பிரியாதபோது திருப்பதி தேவஸ் தானத்தின் ஆதரவில் கலைக் கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றது. அதைப் பார்ப்பதற்கு ஆய்வு ஆணையம் (Inspection Commission) ஒன்றைச் சென்னைப் பல்கலைக் கழகம் அனுப்பியது. அதில் பேராசிரியர் எஸ். கோவிந்த ராஜுலு நாயுடு ஓர் உறுப்பினராக இருந்தார். டாக்டர் ஏ. எல். முதலியார் துணைவேந்தராக இருந்த காலத்தில் மிகப் பெரிய பதவியிலிருந்தவர்களும் நேர்மையும் ஒழுங்கு முறையும் தவறாதவர்களுமாக இருப்பவர்கள் பாடத் திட்டக் குழுக்களில் தலைவர்களாக இருப்பின் கல்வித்தரம் சிறந்த முறையில் இருக்கும் என்று கருதி பல்லாண்டுகள் T. M. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் தமிழ்க் குழுவிற்கும், திரு எஸ். கோவிந்தராஜுலு நாயுடு' அவர்கள் தெலுங்குக் குழுவிற்கும் தலைவர்களாக இருந்து வந்தனர். இதனால் பல்கலைக் கழகப் பேராசிரியர்களை நியமிக்க ஏற்படுத்தப்பெறும் தேர்வுக் குழுவிலும் (Selection committee) இடம் பெறுவர். திரு. நாராயணசாமிப் பிள்ளையவர்களும் திரு. கோவிந்தராஜுலு நாயுடு அவர் களும் மிக உயர்ந்த நேர்மையைக் கடைப்பிடிப்பவர்கள், ஒழுங்கு முறை தவறாதவர்கள் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. பொது மக்களும் இவர்கள்மீது பெருமதிப்பு கொண்டிருந்தனர். திரு. பிள்ளையவர்கள் தமிழ்ப் பற்று கொண்டவர்; பக்தி இலக்கியங்களில் குறிப்பாக ஆழ்வார்

களின் ''ஈரத் தமிழில்'' மிக்க ஈடுபாடு கொண்டவர்.[3] இந்த ஈடுபாட்டின் காரணமாகவே இவரும், இவர் அளவுக்கு இந்த இலக்கியத்தின் ஈடுபாட்டில் எள்ளளவும் குறையாதவருமான முன்னாள் அமைச்சர் திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்களும் திருவையாற்று அரசர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த திரு பு. ரா புருடோத்தம நாயுடு அவர்களைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குக் கொண்டுவரக் காரணமாக இருந்தவர்கள். இந்த நியமனத்தால் தமிழ் உலகுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம் மூன்று தமிழாக்க நூல்கள். அவை: ஒன்று, 'முப்பத்து ஆறாயிரப்படி' என்றும், 'நம்பிள்ளை ஈடு' என்றும் வழங்கப் பெறும். மணிப்பிரவாள நடையிலுள்ள நூல் 'ஈட்டின் தமிழாக்கம்' என்பது பத்துத் தொகுதிகளாக வெளி வந்தது. இரண்டு, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அவர்களால் மணிப்பிரவாள நடையில் சூத்திரங்களாகச் செய்யப் பெற்று மணவாள மாமுனிகளால் மணிப்பிரவாள நடையிலேயே உரையும் எழுதப் பெற்ற 'ஆசாரிய ஹிருதயம்' என்ற நூலின் தமிழாக்கம் இரண்டு தொகுதிகளாக வெளி வந்தது. மூன்று, பிள்ளை உலக ஆசிரியரால் மணிப்பிர வாள நடையில் சூத்திரங்களாகவும், மணவாள மாமுனி களால் மணிப்பிரவாள நடையிலேயே உரையும் எழுதப் பெற்ற 'ஸ்ரீவசணபூஷணம்' என்ற நூலின் தமிழாக்கம் ஒரே தொகுதியாக வெளி வந்தது. இந்த மூன்று தமிழாக்க நூல்களும் தமிழ் மட்டுமே அறிந்துள்ள அறிஞர் கட்குக் கிடைத்தற்கரிய பெருஞ் செல்வமாகும்.

திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களின் தெலுங்குப் புலமையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

---

3. இவர் மாவட்ட வாரியத் தலைவர், இந்த அற நிலை ஆட்சித் துறை ஆணையர், அரசு பொதுப் பணித்தேர்வு ஆணைய உறுப்பினர், தலைவர் என்ற பெரும்பொறுப்புகளில் பணியாற்றியவர்.

ஆனால் சென்னை சட்டக் கல்லூரியின் பேராசிரியர், கல்லூரி முதல்வர், பின்னர் சட்டத்துறை இயக்குநர் என்ற பெரும் பதவிகளை வகித்தவர். இத்தகையவர் சென்னைப் பல்கலைக் கழகத் தெலுங்கு பாடதிட்டக் குழுவின் தலைவராக இருப்பதில் குறையொன்றும் இல்லை. இத்தகைய பெரும் பொறுப்புகளை யெல்லாம் வகித்தவர் பல்கலைக்கழக ஆய்வு ஆணையத்தில் உறுப்பினராக வந்ததில் வியப்பில்லை. இவர் இங்கு வந்தபொழுது டாக்டர் கே. சி. வரதாச்சாரியார் கல்லூரியில் தத்துவத் துறைப் பேராசிரியராக இருந்தார். ஆய்வு செய்து கொண்டு வரும் பொழுது எப்படியோ திரு நாயுடு அவர்கட்கும் டாக்டர் வரதாச்சாரியாருக்கும் வாக்குவாதம் எழுந்து விட்டது. டாக்டர் வரதாச்சாரியார் புலமை மிக்கவர்; உணர்ச்சியுடன் பேசக் கூடியவர். எப்படியோ இவர் பேச்சு திருநாயுடு அவர்களின் மனத்தைப் புண் படுத்தி இருக்கவேண்டும். அன்றிருந்து இருவரிடையேயும் கருத்து வேற்றுமை இருந்து வந்தது. இக்கருத்து வேற்றுமை இருவரிடையேயும் விரோதத்தையும் ஏற் படுத்தி இருக்கவேண்டும். இதுவே பின்னர் திரு நாயுடு அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத் துணை வேந்தராக வந்தபொழுது வரதாச்சாரியார் பல்கலைக் கழகத்தின் துணைப் பேராசிரியர் பதவியைப் பெற்றாலும் பேராசிரியர் பதவியைப் பெற முடியவில்லை. துணை வேந்தரே தடையாக இருக்கும்போது டாக்டர் வரதாச் சாரியாரால் என்ன செய்ய முடியும்? இவருக்கு மேல் பேராசிரியர் டி. ஏ. புருஷோத்தம் தலைவராக இருந்த படியால் துணைத்தலைவராக இருக்கும் பேறும் இவருக்குக் கிட்டவில்லை.

> தாம்தாம்முன் செய்தவினை தாமே அநுபவிப்பார்
> பூந்தா மறையோன் பொறிவழியே—வேந்தே
> ஒறுத்தாரை என்செயலாம்? ஊர்எல்லாம் ஒன்றா
> வெறுத்தாலும் போமா விதி.[4]

என்ற ஔவைப்பாட்டியின் பொன்மொழியும்,

4. நல்வழி — 30

தானே புரிவினையாற் சாரும் இருபயனும்
தானே அநுபவித்தல் தப்பாது—தான் நூறு
கோடிகற்பஞ் சென்றாலும் கோதையே செய்தவினை
நாடிநிற்கும் என்றார் நயந்து.[5]

என்ற பெரியாரின் வாக்கும் இப்போது நினைவிற்கு வருகின்றன. எல்லா நிலையிலும் 'நாவடக்கம்' இருந்தால் இயன்றவரையில் தொல்லைகளைத் தவிர்க்கலாம் என்பது என் அநுபவம்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.[6]

என்ற வள்ளுவரின் திருவாக்கு நினைவிற்கு வருகின்றது. தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறி ஏறிய கதை போல, டாக்டர் கே. சி வரதாசசாரி, பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு இவர்களிடையே ஏற்பட்ட மோதல் என் தலையில் வந்து விடிந்ததே என்று நினைத்து வருந்தினேன். பி.எச்.டி.ஆய்வுக்கு என்ன செய்யலாம் என்ற ஏக்கமே என் மனத்தில் அடிநாதமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

---

5. நீதி வெண்பா—47 (இயற்றினார் பெயர் தெரியவில்லை.) 7. குறள்—127
6. குறள்—127

# 10. நூல் வெளியீட்டு விழாவும் சோதிடப் பலனும்

**1962**-பிப்பிரவரி என்று நினைக்கின்றேன். திருப்பூரிலிருந்து கே. ஆர். சுப்பிரமணியம் என்ற ஒரு சோதிடர் என்னைத் தேடிக்கொண்டு என் சிறிய அறைக்கு வந்து சேர்ந்தார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, "ஐயா, நான் திருவேங்கடவனைப் பற்றி ஒரு சிறுகவிதை நூல் படைத்துள்ளேன். இந்த நூல் ஒரு பிரார்த்தனையின் அடிப்படையில் எழுந்தது. நான் திருப்பூரில் தெருவில் கால்நடையாகச் சென்று கொண்டிருந்தேன். இரண்டு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் ஓர் ஓரத்தில் நடந்து கொண்டிருக்கும்பொழுது பாரம் ஏற்றாமல் சென்று கொண்டிருந்த ஓர் இரட்டை மாட்டு வண்டி தெருவில் திரும்பியது. வேகமாகத் திரும்பிய நிலையில் வண்டியின் பின்பகுதியின் கனத்த சட்டம் என் இடது புயத்தில் வேகமாகத் தாக்கியது; என் புய எலும்பு இரண்டாக முறிந்தது நல்லவேளையாக அது சாதாரண முறிவுதான், எங்கள் ஊரிலுள்ள ஒரு நாட்டு மருத்துவரிடம் கட்டு கட்டிக் கொண்டேன். ஆங்கில மருத்துவரை நாடிச் சிகிச்சை பெறுவதற்கு என் வறுமைச் சூழ்நிலை இடந்தரவில்லை. யாதொரு தொல்லைரிமின்றி பழையபடியே இருந்த நிலையில் 'கை கூடினால்' பொற் கங்கணம் பூண்டு, ஏழுமலையான்மீது ஒரு பதிகம்பாடி பொற்கங்கணத்தையும் நூலின் 100 படிகளையும் உண்டியில் போடுவதாக நேர்ந்து கொண்டேன். கை பழைய நிலையை அடைந்தது. பாடல்களை யாத்து நூலையும் அச்சிட்டு விட்டேன். இதனைத் திருமலையில் இறைவனின் திருமண மண்டபத்தில் எடுக்க நினைக்கும்

வெளியீட்டு விழாவில் தலைமை தாங்கவேண்டும்'' என்று வேண்டினார்.

''நான் மிகச் சிறியவன். சென்னையிலிருந்து யாராவது பெரியவர்களைப் பார்த்து அவரைக் கொண்டு வெளி யிடுவது சிறந்ததல்லவா?'' என்றேன்.

''தாங்கள் சொல்வது சரிதான். ஒரு சிறந்தவைண வரைக் கொண்டு வெளியிடத்தான் நினைத்துத் திரு. பு. ரா. புருடோத்தம நாயுடு அவர்களை நாடி வேண்டுகோள் விடுத்தேன். அவர் சொன்னார்: 'நான் திருமண் காப்பிட்ட வைணவன். என்னைவிடச் சிறந்த முறையில் திருமாலிடம் அன்பு பூண்டு திருப்பதியில் திருமண் காப்பிடாத வைணவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் இருக்கின்றார். அவர் அண்மையில் காரைக்குடியிலிருந்து திருப்பதி வந்து திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். என்னைவிட அவரே சிறந்தவர். அவரைக் கொண்டு விழாவை நடத்துங்கள்' என்று. ஆதலால்தான் தங்களை நாடி வந்தேன். தங்கும் இடத்து முகவரியையும் தந்து 'காலை ஏழரை மணிக்குள் அறையில் பார்க்கலாம்' என்று குறிப்புடன் அனுப்பினார். எனவே, தங்களை நாடி வந்தேன்'' என்றார்.

எனக்கோ மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

மாருதி யல்ல னாகில்
நீஎனும் மாற்றம் பெற்றேன்
யாரினி என்னோ டொப்பார்
என்பதோர் இன்பம் உற்றான்.[1]

என்று அங்கதன் மகிழ்ச்சியுற்றதுபோல் எனக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று என்று கூறலாம். சிறந்த தமிழறிஞர்; திருமாலின்மீது அளவற்ற பக்தியுடையவர் இப்படி

1. கம்ப. யுத்த. அங்கதன் தூது—13

என்னைத் தன்னைவிட உயர்ந்தவர் என்று கூறியதைக் கேட்டபோது ஒரு பக்கம் நாணமும் மற்றொரு பக்கம் மகிழ்ச்சியும் உண்டாயின என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மேலும் கே. ஆர். சுப்பிரமணியம் தம்மைப் பற்றித் தெரிவித்தது: ''நான் சாதாரண ஏழை சோதிடன்; இராஜராஜேசுவரி உபாசகன். முப்பதாண்டு கட்கு முன்னர் அன்னூர் K. கோவிந்தசாமி நாயுடு என்ற செல்வர் என்னைத் தம் பருத்தி ஆலையின் சோதிட ராக, திங்கள் ஒன்றுக்கு ரூ. 25/- ஊதியத்தில் நியமித்துக் கொண்டார். கோள்கள் இயக்க நிலை தெரிந்து பருத்தி விலை ஏறும் இறங்கும் என்று தெரிவிப்பது என் பணி, இதுகாறும் என் கணிப்பு தவறுவதில்லை. 'விலை ஏறும்;பருத்தி கொள்முதல் செய்யலாம்' என்பேன். அவரும் என் சோதிடத்தை நம்பி வாங்குவார். நல்ல இலாபம் கிடைக்கும். இதுகாறும் அவர் செல்வநிலை ஏற்ற நிலையிலேயே இருந்து வருகின்றது. எல்லாம் என் வழிபடு தெய்வமாகிய இராஜ இராஜேசுவரியின் திருவருள்'' என்றார்.

மேலும் தொடர்ந்து, ''இன்னும் கேளுங்கள். அண்மையில் அவர் திருமகளார்ன் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. மணமகனைத் தேடி உறுதிப்படுத்துவதில் சிரமம் இருந்தது. பிறகு அஃது ஒருவாறு நிறைவு பெற்றது. இதன் தொடர்பாகத் தமது திருமகளுக்கு நல்ல முறையில் திருமணம் கூடினால் திருவேங்கடமுடை யானுக்குத் திருமண உற்சவம் செய்து வைப்பதாக நேர்ந்து கொண்டார். இன்னும் ஒரு திங்களில் அது நடைபெறும். அப்போது நூல் வெளியீடும் செய்வதாக உத்தேசம். இன்றே திருமலை சென்று நாள் குறிப்பிட்டுத் திருமண உற்சவத்திற்குரிய கட்டணம் செலுத்தப் போகி றோம். திரு. நாயுடு அவர்களே நான் யாத்த பாடல்களை அச்சிட்டுக் கொள்ள பொருளுதவி செய்தார். நூல் ''ஸ்ரீநிவாசப் பெருமான் திருவருட்பாக்கள்'' என்ற

தலைப்பில் அச்சாகின்றது. இதில் 'உயிர் வருக்கப் பதிகம்' (12 ஆசிரிய விருத்தங்கள்), 'பத்மாவதி பரிணயம்' (32 அடிகள் கொண்ட ஒன்பது ஆசிரிய விருத்தங்கள்), தலமகிமை (15 வெண்பாக்கள்) அடங்கியுள்ளன'' என்றார்.

12-3-1962 அன்று திருவேங்கடவன் திருமண விழா நடைபெற்றது. திருப்பூர்ப் பகுதியிலிருந்து சுமார் 25 பெருமக்கள் எழுந்தருளியிருந்தனர். இவர்கள் தங்குவதற்கென்று நான்கு குடில்களை (Cottages) ஏற்பாடு செய்திருந்தார். எம்பெருமான் திருமண மண்டபத்தில் நூல் வெளியீடு செய்வது மரபில்லை என்று தேவஸ்தானத்தார் சொல்லிவிட்டதால் தனியாருக்குச் சொந்தமான 'நாரத மந்திரம்' என்ற விடுதியில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. திரு. புருடோத்தமநாயுடு அவர்களை நினைந்த வண்ணம் தலைமைப் பொறுப்பேற்றேன். சிறிய கூட்டமாக இருந்தாலும் பக்தியுடன் வெளியீட்டு விழா நடைபெற்றதால் கே. ஆர். சுப்பிரமணியத்தின் உள்ளம் குளிர்ந்தது. தமது பிரார்த்தனை நிறைவேறினமை கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தார். வெளியீட்டு விழாவில் எனக்கு வாசித்தளித்த நன்றியுரைப் பாடல் இது.

### ஆசிரிய விருத்தம்

திருவோங்கி வளர்கின்ற வடவேங்க டத்திலகி
 திசையெங்கு மொளிப ரப்பித்
திகழுமெழில் ஜெயசீநி வாசனுள மேமகிழ
 செந்தமிழி லுயிரெ ழுத்தே
செப்புமொழி முதலாக ஒப்பியுள பதிகமொடு
 சீரிலகு தாமரை யின்மேல்
ஜென்மித்த பதுமவதி திருமணநி கழ்ச்சிதனை
 சீருரவ மைத்து பாடி

ஒருவடிவி லாக்கிநல சீநிவா சச்செம்மல்
    உயர்திருவ ருட்பா வெனும்
ஒண்பெயர மைத்துப்ப திப்பித்த ரங்கேற்று
    முரியசபை தலைமை தாங்க
ஒத்துளம னத்தினனி யற்றமிழொ டாங்கிலமு
    மோதிநெறி வழுவி லாதான்
உகமுதலி லிலகுவட வேங்கடவன் பல்கலைக
    ளுதவுமுயர் கல்வி நிலையம்

பெருமைமிக நிலவுதமிழ்த் துறையிலினி தாந்தலைமை
    பெற்றகுண முற்ற நண்பன்
பேசரிய பிரசங்க மதையெங்கு மழையென்ன
    பேசுதிற னுற்ற புலவன்
பெட்பிலகு வேள்சுப்பு ரெட்டியா ரிவணுற்று
    பிரியமொடு சொல்வ ழங்கிப்
பிரபைதர வுதவியதி லுளமகிழ்வு மிகநமது
    பெரிதான நட்பி னுயர்வால்

மருவோங்கு மலர்மாலை யணிவேங்க டத்திறைவன்
    மாணடிவ ணங்கி நின்றும்
மதுவுமிழ்ச கஸ்த்ரதள வனசவதி தேவியருள்
    மன்னிநிறை வாகி நாளும்
மனைவியொடு மக்கணல மனையறமி சைத்திலக
    வாழ்த்தலொடு தலைமை கொண்ட
மாண்பினைம தித்தெமது நன்றிநவில் கின்றனமும்
    மனதுகொள வேண்டு மினிதே.

இந்தப் பாடலைக் கொண்டு திரு. சுப்பிரமணியத்தின் தமிழ்ப் புலமையையும் சொல்வளத்தையும் அறிந்து கொள்ளலாம்.

இந்த நூல் அரங்கேற்ற விழாவிற்கு திருப்பூர் நஞ்சப்ப உயர்நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர் திரு. கே. பழனிச்சாமிப் புலவரும் அப்பள்ளித் துணையாசிரியர்

டி. எஸ். சோமசுந்தரம் பிள்ளையும் வந்திருந்தனர். இவர்கள் கே. ஆர். சுப்பிரமணியத்தைப் பற்றிச் சொன்னது: ''நண்பர் சுப்பிரமணியம் சிறந்த புலவர் அல்லர்; முறையாகத் தமிழ் பயின்று தமிழறிவு பெற்றவரு மல்லர். தம்மை மாம்பழக் கவிராய நாவலர் பரம்பரையில் வந்தவராகச் சொல்லிக் கொள்வார். இவர் ஓர் அருட் கவிஞர். இராஜராஜேசுவரியை நினைத்துக் கொண்டு பாடத் தொடங்கினால் பாக்கள் தாமாக வரும். அவருக்கு அடி, சீர் முதலியவை பிரித்து எழுதத் தெரியாது; யாப்பிலக்கணமும் தெரியாதவர். அவர் சொல்வதை எம் போன்ற ஒரு தமிழ்ப் புலவர் எழுதினால் அது சிறந்த ஒரு பாடலாக அமையும். அப்படி நாங்கள் எழுதினவை தாம் இந்நூலிலடங்கிய பாடல்கள். தவிர, நல்ல ஒரு சோதிடர். இராஜ ராஜேசுவரியின் அருள் இருப்பதால் இவர் கூறும் சோதிடப் பலன் பெரும்பாலும் தவறாது'' என்றனர்.

எங்களூர் (கோட்டாத்தூர்) வள்ளுவப் பண்டாரம், வேலூர் வாத்தியார், பொற்கொல்லர் குமாரசாமி ஆசாரி, என் பள்ளித் தோழர் கே. பி. சுப்பையர், ஆகியோர் என் சாதகக் குறிப்பை ஆய்ந்து சொன்னவை யெல்லாம் பெரும்பாலும் சரியாகவே நடைபெற்று வருவதைக் கண்டுள்ளேன். இப்போது என் மனத்திலிருந்த பெருங்கவலை ''நான் டாக்டர் பட்டம் பெறுவேனா?'' என்பதுதான். எம்பெருமான் திருமணம் முடிந்து, நூல் அரங்கேற்ற விழா நிறைவெய்தி பிரசாதங்களை உட் கொண்டு நாங்கள் மனநிறைவெய்தி இருக்கும் சமயம். சுப்பிரமணியம் அவர்களிடம் என் சாதகக் குறிப்பை எழுதிக் காட்டி (இது எனக்கு மனப்பாடம்; நடப்புதிசை புத்தி விவரங்கள் வரை தெரியும்) பலன் சொல்லுமாறு வேண்டினேன். 'எனக்கு மேல்படிப்பு உண்டா? பிஎச். டி. பட்டம் பெற ஊழ் உண்டா? இதை மட்டும் நன்கு ஆய்ந்து சொன்னால் போதும்' என்றேன்.

திரு. சுப்பிரமணியமும் என் உள்ளக் கவலையை நன்கு புரிந்து கொண்டார். இராஜ ராஜேசுவரியை நினைந்து சொன்னார்: ''உங்கள் சாதகக் குறிப்பில் (சிம்மலக்ன சாதகம்) லக்னத்திற்கு 2-ல் புதன் உச்சத்தில் இருக்கிறான். புதன் வாக்குஸ் தானாதிபதி. உங்கட்குப் படிப்பு உண்டு. உயர்ந்த படிப்பு வரையில் எட்டுவீர்கள். ஆனால் புதனுடன் செவ்வாயும் சேர்ந்திருக்கின்றான். அதனால் உங்கட்கு எப்போதும் ஏதாவது தொந்தரவு வந்து கொண்டே இருக்கும். ஆனால் நீங்கள் விடாது முயன்று கொண்டிருப்பீர்கள். உங்கள் சுறுசுறுப்பிற்கும் உண்மையாகக் கல்வியில் கொண்டிருக்கும் ஆர்வத்திற்கும் விடாமுயற்சிக்கும் கட்டாயம் பலன் இருக்கும். சோர் வடையாமல் முயன்று கொண்டிருப்பீர்கள். ஏழுமலை யான் நிழலில் இருக்கின்றீர்கள். அவன் அருளும் உண்டு. இராஜராஜேசுவரியின் அருள்படி நீங்கள் வெற்றியடை வீர்கள்'' என்று. இவையெல்லாம் இப்போது மனத்தில் குமிழியிட்டெழுகின்றன.

காரைக்குடியிலிருந்தபோது திருப்பாரிதிப்புலியூர் சுகர் நாடி சோதிடம் திரு. S. J. S. செயகாந்தி நாயுடு நாடி சோதிடப்படி ''சந்திர மகாதிசையில் சில ஆண்டுகள் மனைவி மக்களை விட்டு மலைப் பகுதியில் மிகவும் கஷ்ட மான நிலையில் வாழ நேரிடும்; இக்காலத்தில் உயர்கல்வி யில் ஈடுபாடு அதிகம் இருக்கும். மேலதிகாரிகளின் உதவி இராது தொல்லைப் படவும் நேரிடும். இறுதியில் ஓரளவு நலமாகும்'' என்று சொன்னதையும் நினைவுகூர்கின்றேன். திருப்பதி வாழ்வில் சுகப்பட்டதைவிட துன்பப்பட்டது தான் அதிகம் என்பதை அநுபவ வாயிலாக அறிந்தவ னல்லவா? திருப்பதி வாழ்வில் பூமகளின் கடைக்கண் நோக்கு சரியாக இல்லை; ஏன் சுத்தமாக இல்லை என்றே சொல்லலாம். ஆனால் கலைமகளின் அருள் அபரிமித மாகவே இருந்தது. சிறு வயதிலேயே 'தந்தையொடு கல்விபோம்' என்ற முதுமொழி இருப்பினும், நாமகள்

அருள் இருந்தமையால்தான் எல்லா மட்டங்களிலும் கல்வி நன்முறையில் கற்க முடிந்தது. பணியிலிருந்து கொண்டே கற்று வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி பட்டங்களைப் பெறமுடிந்தது. இக்காலத்தில் பூமகள் அருளால் வயிற்றுக்குச் சோறு வசதியாகக் கிடைத்தது; அணிவதற்கு ஆடையும் கிடைத்தது. இவையும் இல்லாவிடில் எப்படிக் கவலையின்றிக் கல்வியில் ஈடுபட முடியும்? கலைமகள் பாரதியாருக்குப் பலவிதமாகக் காட்சியளித்ததுபோல் எனக்கும்,

> தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
> தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்;
> உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
> உயிரினுக்குரி யாகிய தெய்வம்;
> செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
> செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;
> கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்,
> கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்.[2]

இவ்விதமாகக் காட்சியளிக்கின்றாள். அவள் அருளால் தான் அறுபது அகவை தாண்டிய பிறகும் அதிகம் படிக்கின்றேன்; எழுதுகின்றேன். அவள் அருளால்தான் உடல் வளமும் மனநலமும் நன்றாக உள்ளன. அகவை முதிர்வினால் அவ்வப்போது சோர்வு தோன்றினாலும் மனவளம் குறைவதில்லை; மாறாக வளர்ந்து வருகின்றது. அவள் அருளால் கண்ணொளியும் நன்றாகவே உள்ளது.

> செல்வங்கள் கொழித்து நிற்கும் பெரிய பிராட்டியார்,
> நாரணன் மார்பினிலே—அன்பு
> நலமுற நித்தமும் இணைந்திருப்பாள்.[3]

'அகலகில்லேன் இறையும்' என்று அவன் மார்பில் நிலைத்து வாழ்பவள். மக்கள், செல்வத்தை விரும்புவது

2. தோ. பா: வெள்ளைத் தாமரை—4.
3. தோ. பா: திருமகளைச் சரண்புகுதல் – 4

போல் கல்வியை அதிகமாக விரும்புவதில்லை. இன்றைய உலகில் குறுக்கு வழியில் சிலருக்குத் திருமகள் அருள் கிடைத்து விடுகின்றது. ஆனால் கலைமகள் அருளைக் குறுக்கு வழியினால் அடைய முடிவதில்லை; உழைத்து உழைத்து, காலமெல்லாம் ஆழங்கால் பட்டுதான் அவள் அருளைப் பெற முடிகின்றது. இன்றைய உலகில் இவ் உண்மையை நேரில் அநுபவத்தில் பார்க்கின்றோம். திருமகள் சிலரிடம் 'சடுகுடு' விளையாடுவாள்.

'ஆறுஇடும் மேடும் மருவும்போல் அம்செல்வம்
மாறிடும் ஏறிடும்'[4]

என்பது ஒளவைப் பாட்டியின் திருமொழி.

அகடுஉற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.[5]

என்பது சமண சமயப் பெரியாரின் பொன் மொழி.

கூத்தாட் டவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிழிந் தற்று.[6]

என்பது வள்ளுவப் பெருமானின் பொய்யா மொழி. செல்வத்தின் 'அற்கா இயல்பினை' அருமையான உவமை யினால் விளக்கியிருப்பது சிந்தித்து மகிழத் தக்கது. பொருள் நோக்கு ஒரு புறமிருக்க சொல் நோக்கை யொட்டிய ரசிகமணி டி. கே. சி.யின் விளக்கம் அற்புத மானது. செல்வம் சேர்வதற்குக் காலம் ஆகும் என்பதை முதல் அடியின் நீண்ட நான்கு சீர்களாலும், செல்வம் போவதற்குக் குறைந்த காலம் போதும் என்ற குறிப்பை இரண்டாம் அடியின்மூன்று சிறுசீர்களாலும் காட்டியிருப்ப தாகக் கூறுவர்ரசிகமணி.சினிமா கொட்டகை நிறைவதற்கு அதிகக்காலம் ஆவதையும் கூட்டம் கலைவதற்குக் குறைந்த

4. நல்வழி—32
5. நாலடி—2
6. குறள்—332

காலம் ஆவதையும் விளக்கும் முகத்தான் செல்வம் சேர்வதற்கு ஆகும் அதிகக் காலத்தையும் போவதற்கு ஆகும் குறைந்த காலத்தையும் முறையே நீண்ட சீர்களாலும் குறுகிய சீர்களாலும் குறிப்பிட்டுள்ள நயத்தை எடுத்துக் காட்டும் ரசிகமணியின் ரசிக உள்ளத்தை வியந்து பாராட்ட முடிகின்றது. ஆனால் பரிசுச் சீட்டுகள் நடையாடும் இக்காலத்தில் 'திடீர்க் குபேரர்கள்' ஆவதற்குப் புதிய குறள் எழுதப் பெறல் வேண்டும்.

கலைமகள் இத்தகைய திருவிளையாடல்கள் புரிவதில்லை. ஒருவர் உயர் கல்வி பெறுவதற்கு வருந்தி உழைக்கவேண்டும். இரவு பகலாகக் கண் விழித்துப் படிக்கவேண்டும்; பக்தியுடன் அணுக வேண்டும். புலமை பெறுவதற்கு எந்த விதக் குறுக்கு வழியும் இல்லை. காளமேகப் புலவர் காளி உபாசகராக இருந்திருக்கலாம். அது போலவே சாதுர்யமாகவும் நகைச்சுவையாகவும் பேசும் தெனாலிராமனும் காளி உபாசகனாகத் திகழ்ந்திருக்கலாம். இருவரும் காளிதேவியின் அருளால் புலமை பெற்றதையும் 'விகடகவி' ஆனதையும் காளி தேவியின் அருள் என்று கூறுவது நம் நாட்டு மரபினையொட்டிய கதைகளாகும். இருவர் நாவிலும் தாண்டவமாடியவள் நாமகளே என்பதை நாம் அறிதல்வேண்டும். 'எல்லாம் சக்தி மயம்' என்ற பாரதியாரின் கொள்கையை அறிந்த நமக்கு இக்கதைகளின் உட்பொருள் புலனாகாமற் போகாது.

திருமகள் பாரதியாரைப் புறக்கணித்தது போலவே என்னையும் புறக்கணிக்கின்றாள். அவர் வாக்காலேயே,

என்ன பிழைகள் கண்டோ—அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவாள்.

என்று நானும் நைந்து கூறுகின்றேன். இந்நிலைமைக்கு,

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.[7]

என்ற வள்ளுவர் வாய்மொழியின் ஒளியில் உண்மை காண்கின்றேன். அமைதியும் பெறுகின்றேன்.

குமிழி-167

# 11. 'அறிவுக்கு விருந்து'—அவதாரம்

1962-கோடை விடுமுறையில் காரைக்குடிக்கு வந்தேன். சிறுவர்கள் உயர் நிலைப் பள்ளியில் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்று வந்தனர். இவர்களின் படிப்பின் பொருட்டே குடும்பம் காரைக்குடியில் இருக்கவேண்டியிருந்தது. நான் கல்வி கற்ற காலத்தில் பொருளாதார முட்டுப்பாட்டால் சிரமப் பட்டதை அடிக்கடி நினைத்துக் கொள்வேன். இவர்கள் கல்வி சிறந்த முறையில் அமையவேண்டும் என்று ஓயாத கவலை கொண்டிருந்தேன். இளையவனின் தொடக்கக் காலக் கல்வியின் பொறுப்பை (முதல் வகுப்பு முதல் எட்டு வகுப்பு வரை) திரு. A இராமசாமி அய்யர் என்ற ஓய்வு பெற்ற ஆசிரியரிடம் விட்டு வைத்திருந்தேன். முதல் மகனையும் தொடக்கத்தில் இவர்தான் கவனித்து வந்தார். கருவிலே திருவமைந்த ஆசிரியர்களும் தியாக உணர்வு கொண்ட ஆசிரியர்களும்தான் சிறுவர்களின் கல்வியை நன்கு கவனிக்க முடியும் என்பது என் கணிப்பு. என் கல்வி வாழ்க்கையில் எனக்கு ஆசிரியர்களாக

7. குறள்—374.

அமைந்தவர்களில் ஒரு சிலரும். நான் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய பொழுது கல்வி பற்றிய பல ஆங்கில நூல்களைக் கற்றுத் தெளிந்த அநுபவமும் இக் கணிப்பிற்கு அளவுகோலாகத் துணை செய்தது.

விடுமுறையில் காரைக்குடியில் இருந்தபொழுது இதுகாறும் எழுதி வெளியிட்ட கட்டுரைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து ஒரு கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிட்டால் பட்டப்படிப்பிற்குப் பாடநூலாக வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்ற நினைப்பே இந்த முயற்சியில் என்னை ஈடுபடுத்தியது. ஆனால் இந்த முயற்சியில் என்னென்ன சிக்கல்கள் எழும்? போட்டி எப்படி இருக்கும்? நூலின் தரத்தைவிட பெரியவர்களின் பரிந்துரையின் பங்கு எப்படிச் செயற்படும்? என்ற எண்ண அலைகளும் என் மனத்தில் எழாமல் இல்லை. இந்த முயற்சியில் இவற்றையெல்லாம் சந்திக்கும்படியும் நேர்ந்ததைப் பின்னர் எழும் குமிழியொன்றில் விளக்குவேன். இந்த நூலைத் தொகுக்க நினைக்கும் போது,

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உனறன் விருப்பனறே'[1]

என்ற மணிவாசகப் பெருமானின் திருவாக்கும் என் மனத்தில் எழுந்தது. அதே சமயம்,

1. திருவா. குழைத்த பத்து—6.

ஈட்டும் பொருள் முயற்சி
எண்இறந்த ஆயினும் ஊழ்
கூட்டும் படிஅன்றிக்
கூடாவாம்.[2]

என்ற பாட்டியின் வாக்கும் எழுந்தது. பலனை ஆண்டவனிடம் ஒப்படைத்து விட்டுப் பணியில் இறங்கினேன். தினமணிச் சுடர்[3], குன்றக்குடி 'மணிமொழி' சிறப்பிதழ் (10-7-54), 'தமிழ்நாடு' புத்தாண்டு இதழ் (1953), கவிதையநுபவம்,[4] கவிதையும் கற்பனையும் (தினமணி புத்தாண்டு மலர்—1962), கவிதையும் நீதியும் (குமரி மலர்—அக்டோபர் 1950), மொழியும் சமயமும் (குமரி மலர்—ஜூன் 1952) பெளத்தர்கள் வளர்த்த பைந்தமிழ் (குமரிமலர்—ஜூலை 1956), கிறித்தவர்களின் தமிழ்த் தொண்டு (குமரிமலர்—திசம்பர் 1953) என்ற ஒன்பது கட்டுரைகளை இலக்கியம், திறனாய்வு, இலக்கிய வரலாறு என்ற மூன்று தலைப்புகளில் தலைப்புக்கு மூன்றாகப் பொருத்தமான முறையில் அமைத்தேன். காரைக்குடியில் புகழ்பெற்றுத் திகழ்ந்த 'செளத் இந்தியா பிரஸ்' என்ற அச்சகத்திலேயே அச்சுக்குக் கொடுத்தேன். விடுமுறையில் இயன்றவரைச் சில படிவங்களைச் சரி பார்த்து அச்சிட்டேன். எஞ்சிய பார்வைப் படிவங்களைத் திருப்பதிக்கு அனுப்புமாறு சொல்லி விட்டு ஜூன் திங்கள் நடுவில் திருப்பதிக்குச் சென்று விட்டேன். ஜூலை, ஆகஸ்டுத் திங்களில் வேலை ஆமை வேகத்தில் நடைபெற்றது. செப்டம்பர் விடுமுறையில் காரைக்குடிக்கு வந்த பொழுது அச்சு வேலை முடிவு பெற்றது. நூலையும்

2. நல்வழி—8

3. 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி'—என்ற தொகுப்பு நூலில் உள்ளது.

4. 'கவிதையநுபவம்'—என்ற நூலில் உள்ள முதல் கட்டுரை.

'அறிவுக்கு விருந்து' என்ற பெயரில் (செப்டம்பர்—1962) வெளியிட்டேன். இஃது எனது பதினொன்றாவது வெளியீடு.

இந்த நூலுக்கு யார் அணிந்துரையையும் பெற முடியவில்லை. என்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்த திரு. சா. கணேசன் அவர்களிடம் கூடப் பெற இயலாத நிலை. எப்படியாவது நூல் செப்டம்பரிலேயே வெளிவர வரவேண்டும் என்ற அவசரம் இதற்குத் தடையாக நின்றது. இறுதியாக நூலைத் 'தமிழ்க்கடல்' 'சிவமணி' 'சிவம் பெருக்கும் சீலர்' ராய. சொக்கலிங்கம் அவர்கட்கு,

பக்குவமெய்ஞ் ஞானியென உலகம் போற்றும்
　　பாரதியைக் கண்டுமகிழ் பேறு பெற்றான்;
மிக்க நறுங் கலைத்தமிழ்நூல் ஒன்று கூடி
　　வெண்ணீறு புனைந்ததென விளங்குஞ்சான்றோன்;
தக்கதிரு வாசகத்தை மூன்று போதும்
　　தலைதாழ்த்திப் பணிந்திடுவோன்; எங்கள் ராய
சொக்கலிங்கன எனும் பெயர்கொள் தமிழ்க்கடற்குச்
　　சொல்விருந்தாம் இச்சிறுநூல் உரிமையாகும்.

என்ற பாடல் மூலம் அன்புப்படையலாக்கினேன். பின்னர் இது பாடநூலாக அமைந்ததற்கு இவர் ஆசியும் துணை செய்திருக்கவேண்டும் என்பது என் அதிராத நம்பிக்கை. என் வாழ்விலும் தாழ்விலும் பெருந்துணை செய்த பெருமகனார் இவர். நூலின் சில படிகளை கலிக்கோவில் கட்டமைத்து இரண்டு படிகளை இவர் திருவடிகளில் சமர்ப்பித்தேன். இவர் விருப்பப்படி திரு. எஸ்.கே. இராமராசன், திரு. மு. இராமசாமி (தமிழாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, இராசிபுரம்). திரு. பதுமநாபன் (முதல்வரின் தனி அலுவலர், அழகப்பர் பொறியியற் கல்லூரி, காரைக்குடி) இவர்கட்கும், என்னுடைய பல நண்பர்கட்கும் 25 படிகளை விநியோகம் செய்து மகிழ்ந்தேன். திருப்பதியிலும் சில நண்பர்கட்குத் தந்ததாக

5. குறள்—1110

நினைவு. இதை விற்பதில் பல சங்கடங்கள் எழுந்தன. ஏராளமான படிகள் இலவசமாக சென்று கொண்டிருந்தன. என்னுடைய 'தற்பெருமை'யும் வறட்டுக் கௌரமும் இதற்குக் காரணம் என்பதை இப்போது உணர்கின்றேன். பணத்தின் அருமை தெரியாது இப்படியெல்லாம் செயற்பட்டமைக்கு இப்போது வருந்துகின்றேன். இறுதியாக 40% விழுக்காடு கழிவு தந்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடம் படிகள் அனைத்தையும் (சுமார்—800) ஒப்படைத்தேன். போட்ட பணம் கைவந்து சேர்ந்தது; இதற்குப் பல ஆண்டுகளாயின.

ஆசிரியர்கள்தாம் நல்ல நூல்கள் எழுத வேண்டும். எழுத்துப் பழக்கத்தைத் தொடக்கத்திலிருந்தே வளர்த்துக் கொள்ளவேண்டும். பல நூல்களைப் படித்தவண்ணமிருந்து தம் அறிவினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அதிகம் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனையால் தான் எழுத வேண்டிய பொருள் மனத்தில் உதயமாகும். நல்ல முறையில் மாணாக்கர்கட்குக் கற்பித்து வந்தால் தாம் எழுதும் எழுத்திலும் தெளிவு பிறக்கும். உரைநடையும் ஆற்றொழுக்காக அமையும். டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர், திரு. வி.க., சொல்லின் செல்வர் ரா.பி. சேதுபிள்ளை, பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், டாக்டர் மு.வரதராசன் இவர்கள் நடையைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பாடல்களைப் படித்துச் சுவைக்கும் பழக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சுவை பற்றிய வடமொழிவாணர்களின் கருத்துகளையும், திறனாய்வு பற்றிய பல நல்ல ஆங்கில நூல்களையும் கற்க வேண்டும். தம்முடைய அறிவுச் செல்வம் மிகுவதற்கேற்ப, தம்முடைய பயிற்றும் முறை துணை செய்யச் செய்ய, தம்முடைய கற்பிக்கும் திறனும் நன்முறையில் செப்பம் அடையும். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[5] என்ற வள்ளுவர் வாக்கின்

5. குறள்—1110.

உண்மையும் தெளிவாகப் புலனாகும். இந்த அறிவுரையை இளம் புலவர்கள் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிப்பார்களாயின் அவர்கட்கு நல்ல எதிர்காலம் உண்டு.

குமிழி—169

## 12. மாணாக்கர்களின் கிளர்ச்சி

திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணி ஏற்றுக்கொண்டது பிழைப்புக்காக மட்டிலும் அன்று. பிழைப்புக்காக என்றிருந்தால் காரைக்குடிப் பணியைத் துறந்து இங்கு வந்திருக்க வேண்டியதில்லை. அறிவு வளர்ச்சிக்கும், பதவி உயர்வுக்கும்நல்லவாய்ப்பான இடம்; சூழ்நிலை அற்புதம். திரு. சா. கணேசன், திரு. ராய, சொக்கலிங்கன் போன்ற அறிஞர்களின் கூட்டுறவு தமிழ்ச் சூழ்நிலையை மேலும்மிகுவித்தது. இந்த நல்லசூழ்நிலையை ஏன் துறக்க வேண்டும்? மூன்று நான்கு முறை சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏதாவது பணியேற்க முயன்றேன். அக்காலத்தில் பிஎச்.டி. பட்டத்தை வற்புறுத்துவதில்லை. காரணம், பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களே இல்லை. டாக்டர் மு. வரதராசன் ஒருவரே பிஎச். டி. பட்டம் பெற்றவர். அவர் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றி வந்தார். நல்ல திறம் வாய்ந்த நூல்கள் எழுதி வெளியிட்டிருந்ததால் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. இத்தகைய வெளியீடுகளை மதித்து ஆசிரியர்களைத் தேர்ந் தெடுக்கும் முறையும் வழக்கத்தில் இருந்தது. அக்காலத்தில் நான் ஏழு பெரிய நூல்களை எழுதியிருந்தமையால் என் பெயர் தேர்ந்தெடுக்கப் பெற்ற குழு (Panel) பட்டியலில் இடம் பெற்றது. அதற்குமேல் ஆதரவாளர் (God father)இல்லாமையால் பதவி கிட்டவில்லை. இறையருளும் இல்லை என்பதே

இதற்குக் காரணம் என்பதையும் உணர்ந்தேன். எவரையும் குறை சொல்லிப் பயன் இல்லை. அவர்களெல்லாம் வெறும் கருவிகள் தாமே! இதனால் தான் திருப்பதி வந்தேன்.

திருப்பதி வந்த பிறகு பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையை வளர்ப்பது எப்படி? இந்த வினா அடிநாதமாக என் உள்ளத்தில் அடிக்கடி ஒலித்துக் கொண்டிருந்தது. ஏழுமலையப்பன் திருவருளின்றி எதுவும் நடைபெற முடியாது என்ற அதிராத நம்பிக்கை யுடையவனாதலின் வாய்ப்பினை எதிர் நோக்கிக்கொண்டிருந்தேன். பல்கலைக் கழகம் இதில் சிறிதும் முயலாது என்பதை நன்கு அறிந்திருந் தேன். சென்னையில் என் பதவித் தேர்வு நடைபெற்ற போது 'துறை வளர்ச்சிக்கு வாய்ப்பு உண்டு' என்று துணைவேந்தர் நாயுடு அவர்கள் உறுதியளித்த போதிலும் இங்கு வந்த பிறகு நடைமுறையில் அவரிடம் துறை வளர்ச்சிக்கான எந்தவித குறிப்பும் காண முடியவில்லை. அவர் பல்வேறு அல்லல்கட்கும் தொல்லைகட்கும்அதிகமாக உட்பட்டிருந்தது தெரிந்தது; எனக்குத் தெளிவாகவும் தெரிந்தது. இந்நிலையில் அவரைச் சந்தித்துப் பேசவும் வாய் எழவில்லை.

அவருக்கு என்ன தொல்லைகள் இருக்கும்? இவற்றை என்னால் ஊகித்து அறியமுடியவில்லை. ''அவருடைய திறமையையும் தன்னலமற்ற சேவையையும் செயலாற்றும் திறமையையும் கருத்தில் கொண்டுதானே தனியாகப் பிரிந்த ஆந்திர மாநில அரசு அவரை முதல் கல்வித்துறை இயக்குநராக நியமித்தது? பின்னர் புதிதாகத் தொடங்கப் பெற்ற திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கும் முதல் துணைவேந்தராகவும் நியமித்தது? பல்கலைக் கழகம் தொடங்கின நாள்முதல் இரவென்றும் பகலென்றும் கருதாமல் தம் தன்னல மற்ற சேவையால் ஓர் ஐந்தாண்டுக் குள் சிறந்த பல்கலைக்கழகமாகத் திகழவும் செய்தவ ரல்லவா? சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டு

களாக ஆட்சிக் குழு உறுப்பினராகவும், டாக்டர் ஏ.எல். முதலியார்விடுப்பில்இருந்த போதும் சிலதிங்கள்கள் உலக சுகாதாரக் கழகப் பணியாக வெளிநாடுகளில் இருக்கும் பொழுதெல்லாம் துணைவேந்தராகவும் பணி யாற்றிப் பெற்ற நல்ல அநுபவமெல்லாம் புதிய பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியவ ரல்லவா? திருவேங்கடநாதனின் கணக்கு வழக்குகளை எல்லாம் அருள்மிகு கோவிந்தராஜ சுவாமியிடம் இருப்பது போல, திருவேங்கடவன் பல்கலைக்கழகக் கணக்குகள், பல்வேறு வளர்ச்சி முறைகள் முதலியன யாவும் இந்த கோவிந்தராஜுலு நாயுடுவின் கையில்இருக்கின்றதல்லவா? ......'' இப்படியெல்லாம் என் சிந்தனை ஓடத் தொடங்கியது.

ஆனால் அவருக்கு எதிராகச் செயலாற்றிய சக்திகளை யும், அவருடைய குறைகளையும் என்னால் ஊகித்து அறிய முடியவில்லை. பல்கலைக் கழகத்தைப் பற்றிய உள்ளூர் அரசியலையும். (Local politics) அவருக்கு எதிராகச் செயற்பட்ட உள்ளூர் வெளியூர் பிரமுகர்களைப்பற்றியும் உசாவி அறிவதற்கும் என் மனம் துணியவில்லை. நான் முதன் முதலாகச் சந்தித்த அன்றே ''உள்ளூர் அரசியலில்'' —குறிப்பாக 'ரெட்டி—நாயுடுசச்சரவில்' (Conflict) கலந்து கொள்ளாதீர்கள்''—என்று எச்சரித்தாரன்றோ? ஆகவே ''நமக்கு ஏன் இத்தகைய வேலை? நான் காரைக் குடியிலிருந்து வந்தது இதற்காக அல்லவே?'' என்று என் உள் மனம்—'அந்தர்யாமியாக வீற்றிருக்கும் ஏழுமலையான்'—தொடர்ந்து எச்சரித்துக் கொண்டே இருந்தது. நானும் 'சிவனே' என்று வாளா இருந்து விட்டேன்.

ஒரு நாள் திடீரென்று இந்த எதிர்ப்புச் சக்திகள் 'விசுவரூபம்' கொண்டன. இந்தச் செயல் நான் பணியில் அமர்ந்த இரண்டாண்டுகள் கழித்து நடைபெற்றது

என்பதாக நினைவு. அக்காலத்தில் சுமார் முப்பது கல்லூரிகள் (சித்தூர், நெல்லூர், கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் மாவட்டங்களிலுள்ளவை) இப்பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தன. இக்கல்லூரிகளைச் சேர்ந்த மாணாக்கர்கள், பல ஆசிரியர்கள், பொது மக்கள் (சுமார் பத்தாயித்திற்கு மேற்பட்டவர்கள்) திருப்பதியில் திரண்டனர். ஒரு ஞாயிறன்று இவ்வாறு திரண்டதாக நினைவு. பிரம்மோத்சவம் (பெருவிழா) நடை பெற்றால் எப்படிக் கூட்டம் இருக்குமோ அப்படிக் கூட்டம் காணப்பட்டது. திருப்பதி—கோவிந்தராஜப் பட்டணம்—ஒரு பெரிய ஊர்: ஆனால் சிறிய பட்டணம். சென்னையிலுள்ள சிந்தாதிரிப் பேட்டை, திருவல்லிக்கேணி, மயிலாப்பூரில் சில பகுதிகள் கட்டடங்களிருப்பனபோல நெரிசலான கட்டடங்கள்; குறுக்கும் நெடுக்குமாகச் சிறு சிறு தெருக்கள்; சந்துகள். திருப்பதியிலுள்ள காந்திசாலைதான் பெருஞ்சாலை. நான் தீர்த்த கட்டத் தெருவின் தொடக்கத்தில் தங்கியிருந்ததால் உடனே ஓடிவந்து காந்திசாலையில் ஊர்வலமாக வந்த இக்கூட்டத்தைக் காணமுடிந்தது. 'எள்போட்டால் எள் இறங்காது' என்றபடி கூட்டம் மிக நெரிசலாகக் காணப் பெற்றது. சாலையின் இருபுறமும் வேடிக்கை பார்க்கும் மக்கள் காணப்பெற்றனர்; வீட்டின் கூரைகளின் மீதும் மச்சு வீடுகளின்மீதும் மக்கட் கூட்டம் காணப்பட்டது. மூலபலம் இலங்கையில் திரண்டதை,

அடங்கும் வேலைகள் அண்டத்தின்
  அகத்தகல் மலையும்
அடங்கும் மன்னுயிர் அனைத்தும்அவ்
  வரைப்பிடை யவைபோல்
அடங்கு மேமற்றப் பெரும்படை
  அரக்கர்தம் யாக்கை
அடங்கு மாயவன் குறளுருத்
  தன்மையின் அல்லால்.[1]

---

1-கம்ப, யுத்த—மூலபலவதை—5,

என்று வருணிப்பான் கம்பன். பெரிய அண்டத்தில் இருக்கத் தக்க கடல் மலை உயிர்கள் எல்லாம் வாமனத் திருவுருவம் கொண்ட திருமாலின் வயிற்றிலடங்கியிருந்ததுபோல மிகப் பெருந் தொகுதியான மூலத்தானை அவ்விலங்கையினுள் அடங்கியிருந்தது என்பான். இங்ஙனமே பல்கலைக் கழக எல்லையில் அடங்கிய கல்லூரி மாணாக்கர்கள் அனைவரும் பல பொதுமக்களும் சிறிய பட்டணமாகிய திருப்பதியில் திரண்டனரோ என்று என் மனம் எண்ணியது.

ஊர்வலத்தில் கூட்டத்தின் முன்னதாக பறை மேளம், தாரை, ஊதுகொம்புகளின் முழக்கம் அமைந்தது. இதனையடுத்து ஒப்பாரிகள், சிரிப்பு கலந்த அழுகைக்குரல்களில் பெண்ணுடை அணிந்த பல மாணாக்கர்கள் காணப் பெற்றனர். சிலர் பெரிய கோணிகளில் பொரிகள், கடலைப் பருப்புகள், சல்லிக்காசுகள் கலந்த கலவையைத் தூவிக் கொண்டு வந்தனர். இவர்களைத் தொடர்ந்து சிறுசிறு கூட்டமாகச் சிலமாணாக்கர்கள் 'கோவிந்தன் போய் விட்டாரே! கோவிந்தம்மாவும் மறைந்துவிட்டாரே! ஐயோ, ஐயோ ஐயையோ![2] என்று தெலுங்கில் அலறிய வண்ணம் சென்றனர். இவற்றைத்தவிர, கும்மி, கோலாட்டம். சிலம்பவிளையாட்டுகள் நடத்திய வண்ணம் சில கூட்டங்கள் தொடர்ந்தன. இவற்றைத் தொடர்ந்து மக்கள் வெள்ளத்தில் புன்முறுவல்கொண்ட அழுகை முகங்கள் காணப்பட்டன. ஒருபாடையில் 'கோவிந்தராஜுலுவான' கொடும்பாவியும், தொடர்ந்து மற்றொரு பாடையில், கோவிந்தம்மாவின்' கொடும்பாவியும் மாணாக்

2. 'கோவிந்தன்' என்று துணைவேந்தர் கோவிந்தராஜுலு நாயுடுவையும் 'கோவிந்தம்மா' என்பது பதுமாவதி மகளிர்க் கல்லூரி முதல்வர் ஆட்சிக் ராசேசுவரி அம்மையாரையும் குறிக்கும் (ஆட்சிக் குழுஉறுப்பினர்).

கர்களால் சுமந்த வண்ணம் சென்றன, அடுத்து மக்கள் திரள். இவ்வாறு ஊர்வலம் கோலாகலமாகச் சென்றது. துணைவேந்தரின் எதிர்ப்பியக்கத்தின் விசுவரூபம் இந்த வடிவம் கொண்டது. இத்தகைய கூட்டத்தை பார்த்து, கூட்டம் சென்ற பிறகு அறைக்குப் போய்விட்டேன். மக்களாட்சி நடைபெறும் காலமல்லவா? எதிர்ப்பும் பாராட்டும் இப்படித்தான் இருக்கும் போலும்! பாராட்டுத்தலை விட எதிர்ப்புதான் பார்ப்போரின் கவனத்தை அதிகமாகக் கவரும் என்பதை. நேரில் கண்டேன்.

இந்தக் கூட்ட ஊர்வலம் இறுதியில் சுடுகாட்டிற்குச் சென்று 'கோவிந்தனுக்கும்' 'கோவிந்தம்மாவுக்கும்' ஈமச்சடங்குகளையெல்லாம் முறைப்படி செய்து இரண்டு 'கொடும்பாவிகளையும்' ஒரே படுக்கையில் வைத்துத் தீமூட்டினபிறகு கலைந்தது என்பதை அறிந்தேன். ஏன் இப்படி ஒன்றின்மேல் ஒன்றாக வைத்துத் தீமூட்டினர் என்பது பற்றிப் பலர் பல வாறாகப் பேசிக் கொண்டதை ஈண்டுக்குறிப்பிடவில்லை. அவை எனக்கு சொல் லொணாத நாணத்தையும் வருத்தத்தையும் விளை வித்தன.

இத்தகைய எதிர்ப்புகளுக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றிப் பலர் பலவாறாகப் பேசிக்கொண்ட செய்திகளில் என் காதில் விழுந்தவை; "பல்கலைக்கழக நியமனங்களில் எல்லாமட்டங்களிலும் 'பலிஜ வகுப்பு' நாயுடுமார்களுக்கு முதலிடம் தந்தார்; தகுதி திறமை களைக் காற்றில் பறக்கவிட்டார். தோட்டப்பணியாளர் (Gardener) குற்றேவலர் (peom) முதல் பேராசிரியர் நியமனம்வரை 'பலிஜ வகுப்பினருக்கே முதலிடம் அளித்து வந்தார். கல்லூரி அலுவலக மேலாளர் பதவிக்குக் கூட பெங்களூரில் ஓய்வு பெற்ற 'கோமாளி' ஒருவரைக் கொணர்ந்தார். பேராசிரியர் பதவிக்குத் தகுதியுள்ள

வரைக் கூட பேச்சால் மடக்கி துணைப் பேராசிரியராக நியமனம் செய்தார் எந்தப் பதவிக்கு மனுச் செய்தாலும் அதற்கு அடுத்த கீழுள்ள பதவியையே அளித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆண்டில் பெரும்பகுதிக் காலம் திருப்பதியில் தங்குவதே இல்லை; சென்னையில் தான் வாழ்ந்து வந்தார். தேவஸ்தான நிர்வாக அதிகாரியைக் கைக்குள் போட்டுக் கொண்டு தேவஸ்தான நியமனங்களிலும் 'பலிஜவகுப்பினரையே' இடம் பெறச் செய்தார்....'' இன்னோரன்ன குறைகள். எவர் பதவியிலிருந்தாலும் இப்படி இட்டுக் கூறுவது 'சனாதன மரபாகி' விட்டது! இதில் சிறிதளவாவது உண்மையும் இருக்கலாம்.

இக்கிளர்ச்சி நடைபெற்ற சில நாட்களுக்கு முன்னதாக சென்னை மாநிலம்[3] மாண்புமிகு கல்வி-நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் திருப்பதி வந்திருந்தார். தேவஸ்தான விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்ததை அறிந்து அவரைச் சந்தித்து யான் அழகப்ப வள்ளல் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியதை அறிந்தவராதலால்[4] சென்னை மாநில அரசு பிற மாநிலங்களில் தமிழ் வளர்ச்சிக்கென மானியம் வழங்கும் கொள்கையை நம்பியே திருப்பதியில் தமிழ் எம். ஏ., பிஎச். டி வரை வளர்ப்பதற்கென்றே வந்ததையும் தெரிவித்து யான் வாழ்க்கைப் பணியாக (Life Mission) மேற்கொண்டமைக்கு நிதிவழங்கி உதவுமாறு வேண்டினேன். அவரும் என்னை இன் முகத்துடன் வரவேற்று அரைமணி நேரம்

3. அப்பொழுது தமிழ்நாடு என்று பெயர்சூட்டப் பெறவில்லை. தி.மு.க. ஆட்சியில் அண்ணா தலைமையில்தான் இப்பெயர்சூட்டல் செய்யப் பெற்றது.

4. வள்ளல் அழகப்பர் திருநாடு அலங்கரித்த பிறகு வள்ளல் கண்ட அறநிலையங்கள் சரியாக இயங்குவதற்குச் சில ஆண்டுகள் அறக்கட்டளை நிறுவனத்திற்குத் தலைவராக இருந்தார்.

பேசிக்கொண்டிருந்தார். யான் தமிழ் வளர்ச்சிக்கென்றே பேராசிரியர் பதவியைத்துறந்து — அதுவும் ஒரு நல்ல நிறுவனத்தின் கீழ்இயங்கும் புகழ்பெற்ற கல்லூரியிலுள்ள பதவியைத் துறந்து— வந்தமையைப் பாராட்டி என் 'தியாகத்திற்கு' வியந்தார். மானியத்திற்கு விண்ணப்பம் அனுப்புமாறும் பணித்தார். அப்போதிருந்த சூழ்நிலையில் பல்கலைக் கழகத்தை விண்ணப்பம் அனுப்பச் செய்வதென்பது திருவேங்கட மலையை அடைப்பது போன்ற முயற்சி என்பதை நன்கு அறிந்திருந்தேன். ஆகவே, அவ்வழியில் முயலாமல், நானே அமைச்சர் பெயருக்கு தமிழில் ஒரு விண்ணப்பம் அனுப்பினேன். அனுப்பின சின்னாட்களிலேயே அரசிடமிருந்து மறுமொழி வந்தது. கல்வித் துறை துணைச் செயலர் வி. சங்கரன் கையெழுத்திட்டு 'உங்கள் விண்ணப்பத்தை பல்கலைக் கழகத்தின் வழியாக அனுப்புங்கள்; அல்லது பல்கலைக் கழகத்தையே விண்ணப்பம் அனுப்புமாறு செய்யுங்கள்' என்று மறுமொழி வந்தது.

பல்லாண்டுகள் நிர்வாகத்தில் உழைத்தவனாதலால் இப்படித்தான் மறுமொழி வரும் என்பதை நன்கு அறிவேன். இப்படி வரும் கடிதத்தைத் துணைவேந்தருக்குக் காட்டிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் திட்டம். இப்படி எண்ணிக் கொண்டிருந்த பொழுதுதான் துணைவேந்தருக்கு எதிராக 'எரிமலை வெடித்தது போல்' மேற்குறிப்பிட்ட கிளர்ச்சி எழுந்தது. தமிழக அரசிடமிருந்து வந்த கடிதத்தைத் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று மனங்கவன்றேன். 'பைந்தமிழ்ப் பின்சென்ற பசுங் கொண்டலாகிய' ஏழுமலையானும் என் முயற்சிக்குக் கைகொடுக்கவில்லையே என்று என்னையே நொந்து கொண்டேன். ஆனால் 'திக்கற்றவருக்குத் தெய்வம் துணை நிற்கும்' என்ற முதுமொழியில் அதிராத நம்பிக்கை இருந்தது. இந்நிலையில்,

வேண்டத் தக்க தறிவோய்நீ;
 வேண்ட முழுதும் தருவோய்நீ;
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ;
 வேண்டி என்னைப் பணிகொண்டாய்;
வேண்டி நீயா தருள்செய்தாய்;
 யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
 அதுவும் உன்றன் விருப்பன்றே.[5]

என்ற மணிவாசகப் பெருமானின் திருவாக்கும் என் மனத்தில் எழுந்து மேலும் என் நம்பிக்கைக்கு உரம் அளித்தது.

இந்நிலையில் துணைவேந்தரின் இரண்டாவது சுற்றின் பதவிக்காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சில திங்கள்தான் இருந்தன. இதற்குள் எப்படியும் அரசு கடிதத்துடன் பார்த்து விட வேண்டும் என்று உறுதி கொண்டேன். ஒருநாள் சந்தித்துத் துறைவளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்றும், மானியம் பெறுவதற்குச் சென்னை மாநில அரசுக்கு விண்ணப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வேண்டினேன். பலன் கிட்டாது என்பதை நன்கு அறிவேன். காரணம் துணைவேந்தருக்குத் தமிழ் வளர்ச்சியை விரும்பாதவர் என்பது அல்ல; என்னைப் போலவே தமிழார்வம் உள்ளவர். ஆனால் சூழ்நிலையும் மனம் குலைந்த நிலையும், "மிஸ்டர் ரெட்டியார், கவலைப்படாதீர்கள். தமிழ்த்துறை வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் கட்டாயம் ஏற்படும்; நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏற்படும். ஏழுமலையான் திருவருள் இதற்கு இல்லாமற் போகாது. நான் சென்னை செல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தைப் பார்த்து[6] ஆவன

5. திருவா. குழைத்தபத்து—6

செய்வேன்'' என்று உற்சாகமூட்டினார். மூன்றாவது சுற்றுப் பதவிக்காக 'பகீரதப் பிரயத்தனம்' செய்தும் பயன் இல்லை. இந்த எதிர்ப்புச் சூழ்நிலையில் எப்படிக் கிடைக்கும்? எனவே, திருப்பதியைவிட்டு சென்னைக்குப் போய்விட்டார். சென்னையிலிருந்தாலும் என்மீது அளவு கடந்த அன்பு காட்டியது பல நிகழ்ச்சிகளால் அறிய முடிந்தது. ஆனால் இவர் துணைவேந்தராக இருந்த காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கான 'விதை' கூட ஊன்ற முடியாது போயிற்று

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா: —தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.[7]

என்ற ஒளவையார் வாக்கு பொய்த்தா போகும்? 'தமிழ்த் துறை' விரிய ஏற்பாடு செய்தால் தம்மைத் 'தமிழர்' என்று சாற்றிய பட்டம் உறுதிப்பட்டு விடுமோ? என்று அஞ்சியே துறைவிரிய ஏற்பாடு செய்யவில்லையோ? என்ற ஐயம் இப்போது என் உள்ளத்தில் முகிழ்க்கின்றது!

6. திரு சி. சுப்பிரமணியம் நடுவணரசில் அமைச்சராகி விட்டார். காமராசர் பதவிவிலகினமையால் திரு.பக்தவத்சலம் அமைச்சரவை ஏற்பட்டு விட்டது (1964).

7. வாக்குண்டாம்—5.

# 13. கிளர்ச்சிக்குக் காரணம்-ஓர் ஆய்வு

பேராசிரியர் கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர். அப்பொழுது திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாக இருந்தது. 1954-இல் தொடங்கப் பெற்ற இந்தப் பல்கலைக் கழகத்தில் இவர் பத்தாண்டுக் காலம் மிக அற்புதமாகப் பணியாற்றி வந்தார். நான் நான்காண்டு காலம்தான் (1960-64) இவர் தலைமையில் பணியாற்றும் பேறு பெற்றிருந்தேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரியில் ஓய்வு பெற்ற பிறகு கால் நூற்றாண்டுக் காலத்திற்கு மேல் துணைவேந்தராகப் பணியாற்றிய டாக்டர். இலக்குமண சாமி முதலியாரின் நெருங்கிய நண்பர்; அணுக்கத் தொண்டர். டாக்டர் முதலியாரின் பதவிக் காலத்தில் பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் (Syndicate) உறுப்பினராகப் பணியாற்றியவர்; டாக்டர் முதலியாருக்குவலக்கை போல் நின்று உதவியவர். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இரண்டு சுற்றுத் துணைவேந்தராகப் பணியாற்றிய டாக்டர் டி. சகந்நாத ரெட்டிஇவரை 'டாக்டர் ஏ.எல். முதலியாரின் கையடக்கப் பதிப்பு' (Pocket Edition of Dr. A.L. முதலியார்) என்றே குறிப்பிடுவார்: இவருடைய செயல்திறனை அடிக்கடிக் குறிப்பிட்டுப் பாராட்டுவதுண்டு. பேராசிரியர் நாயுடு அவர்கள் சட்டக் கல்லூரியில் பல்லாண்டுகள் சட்டப் பேராசிரியராகப் பணியாற்றியபொழுது சட்டக் கல்லூரி மாணாக்கர்களிடம் பெரும் புகழ் பெற்றிருந்தார்' மெக்காலே எழுதிய ''இந்திய குற்றத்துறைச் சட்டத்

தொகுதியை' (Indian Penal Code) இலக்கியம்போல் சுவையாகக் கற்பிப்பார் என்பதைச் சட்டக் கல்லூரியில் பயின்ற என் நண்பர்கள் பலர்மூலம் கேள்விப்பட்டதுண்டு. பின்னர் பேராசிரியர் நாயுடு அவர்கள் சட்டக்கல்வி இயக்குநராக உயர்ந்தார். அடுத்து சென்னை மாநிலக் கல்வி இயக்குநர் பதவி இவரை வந்தடைந்தது இக்காலத்தில் ஆந்திரம் தனிமாநிலமாகப் பிரிந்தது; சென்னை நகர் ஆந்திரத்திற்கா? தமிழகத்திற்கா? என்ற வாதமும் எழுந்தது. தமிழகத்தினரும் புதிதாகப் பிரிந்த ஆந்திரத்தைச் சேர்ந்தவர்களில் சிலரும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். நம் அருமை இராஜாஜி அவர்கள்—சாணக்கியர் என்ற அரசியல் வல்லுநரின் மறுபிறவிபோன்றவர்—தென்காசி வழக்காகத்திருப்பதியை ஆந்திரத்திற்கு விட்டுக் கொடுத்து சென்னையைத் தமிழகத்துக்கென்று நிலை நிறுத்திக் கொண்டார். இதில் இராஜாஜியின் பங்கு பெரிது; மிகப் பெரிது; தமிழக மக்கள் என்றும் நினைவிலிருத்தக் கூடியது.

ஆந்திரம் தனியாகப் பிரிந்த பொழுது பேராசிரியர் நாயுடு அவர்களின் திறமை உலகறிந்ததாதலால், ஆந்திரம் இவரை தம் மாநிலக் கல்வி இயக்குநராக்கிக் கொண்டது; மேலவை உறுப்பினராகவும் (M. L. C.) நியமித்துக்கொண்டது. 1954 இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகம் நிறுவப்பெற்ற பொழுது அதன் முதல் துணைவேந்தராகவும் தேர்ந்தெடுத்துக் கொண்டது. சென்னையில் பல்லாண்டுகள் கல்வி இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. டி. சதாசிவ ரெட்டிக்குப் (இவர் அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்) போக இருந்த பதவி இவர்தலையில் விழுந்தது; திரு. டி. சதாசிவ ரெட்டி (டி. எஸ். ரெட்டி என்ற சுருக்கமான பெயரால் புகழ் பெற்றவர்) உஸ்மானியப் பல்கலைக்கழகத்துணை வேந்தரானார்.

இவ்வளவு புகழ் பெற்ற இப்பெருமகனாருக்கு எதிர்ப்புச் சக்திகள் கிளர்ந்தெழுந்தமைக்குக் காரணம் என்ன? உலகியலில் மக்கள் அவரவர் அறிவிற்கேற்றவாறு, அநுபவத்திற்கேற்றவாறு பல காரணங்களைக் கூறுவர். சிலர் அவரவர் சார்ந்திருக்கும் சாதிக்கேற்றவாறும், அரசியல் கட்சிக்கேற்றவாறும் கூறுவர். ஆனால் என் அநுபவத்திற்கேற்ப என் மனத்தில் படுவது ஆணவ மலத்தின் செயல் என்பது. சகல நிலையில்[1] மாயை கன்மங்கள் செயற்படுவதால், உயிரைப் பற்றியுள்ள ஆணவ மலத்தின் ஆற்றல் சிறிது அடங்கப் பெற்றிருக்கும். இதனால் உயிர் பருப்பொருள்களைக் காணும் காட்சியை மறைக்காமல் நுண்பொருள்களைக் காணும் காட்சியை மட்டும் அது மறைத்து நிற்கும். பேராசிரியர் நாயுடு அவர்கள் (துணைவேந்தர்) சகல நிலையில் இருந்தவராகக் கருதலாம். இந்நிலையிலுள்ளவர்கட்கு நுண்பொருள் களைக் காணும் ஆற்றல் இன்மையால், பருப்பொருள் களின் இயல்பும் உள்ளவாறு விளங்காது; ஒன்று மற்றொன் றாகவே தோன்றும். அதாவது, நிலையாத பொருளே நிலைத்த பொருள் போலவும், பின்னர் துன்பத்தை விளை விக்கக் கூடிய பேச்சு, செயல் முதலியவை அப்போது இன்பம் பயப்பன போலவும் மாறித் தோன்றும். இந்நிலையை இருளில் இருந்த பொழுது ஒன்றையுமே பார்க்க இயலாதிருந்த ஒருவருக்கு விளக்கு வந்த பொழுது பருப்பொருள்கள் விளக்கமாகவும், நுண்பொருள்கள் விளங் காமலும், பொருள்களின் வண்ணமும்வடிவமும் உள்ளவாறு

1. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை உயிர்களில் விஞ்ஞானகலர் ஒரு மலம் உடையவர்கள்; பிரளயாகலர் இரு மலம் உடைய வர்கள்; சகலர் மூன்று மலம் உடைய உயிர்கள். சகல நிலையில் உயிர் பெரிய பெரிய பொருளை அறிய மாட்டாது; சிறிய பொருளையே பெரிதாக எண்ணி மயங்கும் (சைவசித்தாந்தம்)

விளங்காமல் மாறித் தோன்றுதலும் உடைய நிலையைப் போல்வது என்று விளக்கி வைக்கலாம். இவ்வாறு பொருள்கள் மாறுபட்டுத் தோன்றுதல் அங்கும் இருளி னால் விளைவதேயன்றி, விளக்கினால் விளைவதன்று. ஏனெனில், விளக்கு பொருள்களை விளக்க வந்ததேயன்றி, மறைக்க வந்தது அன்று; மறைப்பது எப்போதும் இருளே. அதுபோலவே, சகல நிலையில் இருந்த பேராசிரியர் நாயுடு அவர்கட்கு மெய்யுணர்வு தோன்றாமல் விபரீத உணர்வு தோன்றினதும் மாயை, கன்மங்களால் விளைந்த தன்று; ஆணவத்தால் விளைந்ததேயாகும். ஆணவத்தின் ஆற்றல் சகல நிலையில் விபரீத ஞானத்தை மயக்க உணர்வை—உண்டாக்கும் பான்மையது. இப்போது அதன் ஆற்றல் 'அதோ நியாமிகா சக்தி'—கீழ் நோக்கிச் செல்லும் சக்தி என வழங்கப் பெறும். பேராசிரியர் நாயுடு அவர்கள் திருப்பதி மருத்துவக் கல்லூரி ஆண்டுவிழா ஒன்றில் பேசிய பொழுது ஒருவர் பதவியிலிருக்கும் பொழுது அவர் சாதி யினருக்குச் சலுகை, நியமனம் முதலியனவற்றை வழங்குதல் குற்றம் இல்லை' என்று பேசி விட்டார். இப்பேச்சு நான்கும் அறிந்த நாயுடு அவர்க்கு மயக்க உணர்வால் விளைந்தது என்று கருதுவது பொருத்தமாகும்.

தீவினைப் பயன் முற்றிய நிலையிலிருக்கும்பொழுது அது பழுத்துப் பயன் விளைவதற்கு இப்பேச்சு போதாதா? ஏற்கெனவே 'சாதிப்பித்தர்', 'தான்றோன்றி', 'சனநாயக மரபை அறியாத சர்வாதிகாரி' என்றெல்லாம் பெயர்கள் சூட்டிப் பிரசார பலத்தால் பதற்ற நிலைக்கு உள்ளாகி இருக்கும் துணைவேந்தருக்கு எதிராக 'எரிமலை' வெடித்தது வியப்பன்று. அப்போது துணைவேந்தர் மேலவை உறுப்பினராகவும் இருந்தமையால் எதிர்கட்சி உறுப்பினர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து இவரைப் பேரவைக் கூட்டமொன்றில் இவ்வாறு பேசியமைக்கு மன்னிப்பும் கோர வைத்து அவமானப் படுத்தினர். இச்சமயத்தில்,

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும்,[2]
[நுணல்—தவளை]

என்ற பழமொழியின் உண்மையும் மனத்தில் எழுகின்றது. ஆணவமலத்தின் மறைப்பாற்றலால் அறிவு மயங்கப் பெற்று 'நல்லவர், வல்லவர், செயல் திறம் மிக்கவர்' இழிவுக்கும் ஆளானார். இவர்தம் எதிர்காலமும் கெட்டொழிந்தது.

சில சமயங்களில் ஏதாவது நிகழ்ச்சிகளில் பேசும் பொழுது சிறிது ஆணவத்துடன் இவர் பேசுவதும் உண்டு. பணபலம், அதிகாரபலம் உள்ளவர்கட்குச் சில சமயம் 'ஆங்காரம்' முளைப்பதும் உண்டு. இந்த 'ஆங்காரம்தான்' இவரை அடக்கமின்றிப் பேசச் செய்ததோ என்று கூட நினைக்கத் தோன்றுகின்றது. கெடுமதி கண்ணுக்குத் தோன்றாதல்லவா? இவ்விடத்தில் தாயுமான அடிகளின்,

'ஆங்கார மானகுல வேடவெப் பேய்பாழ்த்த
ஆணவத் தினும்வ லிதுகாண்;
அறிவினை மயக்கிடும்; நடுஅறிய வொட்டாது;
யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும்; அரிகரப் பிரமாதி
தம்மொடு சமான மென்னும்;
தடையற்ற தேரில்அஞ் சுருவாணி போலவே
தன்னில்அசை யாது நிற்கும்'[3]

என்ற வாக்கு என் மனத்தில் குமிழியிடுகின்றது; சிந்தித்து அசைபோட வைக்கின்றது. என்னையும் செயலில் நெறிப்

2. பழமொழி—செய். 114
3. தாயுமான அடிகள்—மௌன குரு மகிமை—9

படுத்துகின்றது. பிறர் வாழ்க்கையில் நேரிடும் இன்பதுன்ப நிகழ்ச்சிகள், அவற்றின் விளைவுகள் நமக்கு வழிகாட்டி களாக நின்று உதவுவதும் நம் வினைப்பயனே என்றும் என் மனம் எண்ணுகின்றது.

குமிழி—170

## 14. நன்கொடை நூல்கள் தேர்வு

சென்னை (மயிலாப்பூரிலுள்ள) பெண்ணாத்தூர் சுப்பிரமணிய அய்யர் உயர்நிலைப்பள்ளித் (பி. எஸ். உயர் நிலைப்பள்ளி) தலைமைத் தமிழாசிரியர் திரு. துரைசாமி அய்யர் என்பவர் பெரும் புலவர். டாக்டர் உ. வே. சாமிநாதய்யருடன் தொடர்புடையவர். அக்காலத்தில் கல்வியறிவாளர்களிடையே பெருமதிப்புடன் திகழ்ந்தவர். இவர்தம் காலத்தில் சேமித்து வைத்த அரிய நூல்கள் இவர் 'வீட்டு நூலகத்தில்' ஏராளமாக இருந்தன. இவர் தம் இருகுமாரர்களும் வேறு பெரிய அலுவல்களில் சேர்ந்து விட்டமையால் இந்த நூலகம் போற்றுவாரின்றிக் கிடந்தது. இவர்தம் குமாரர்கள் இருவரும் இந்த வீட்டு நூலகத்தைப் புதிதாகத் தொடங்கப் பெற்ற திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பிக்க எண்ணித் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடுக்கு எழுதினார்கள். ஒருநாள் துணைவேந்தர் தம்மை வந்து காணுமாறு ஆள்விட்டனுப்பினார். நானும் துணைவேந்தர் அறைக்குச் சென்று அவரைக் கண்டேன். அப்போது பல்கலைக் கழகம் தேவஸ்தானத்தின் கீழிருந்த பதுமாவதி மகளிர்க் கல்லூரிக் கட்டடத்தில் இருந்தது. கீழ்

உள்ளபகுதிகளில் பல்கலைக்கழக அலுவலகமும் மேல் மாடியில் பதுமாவதி மகளிர்க் கல்லூரியும் இயங்கி வந்தன.

''மிஸ்டர். ரெட்டியார், சென்னை துரைசாமி அய்யரின் குமாரர்கள் தம் தந்தையாரின் நூலகத்தை நம் பல்கலைக் கழகத்திற்குத் தருவதாக எழுதியிருக்கின்றார்கள்உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராதலால் பாடபுத்தகக் குப்பை நிறைய இருக்கும். அவற்றை நீக்கி விட்டுத் தரமான உயர்ந்த இலக்கண இலக்கியங்களை மட்டிலும் பொறுக்கி எடுத்துக் கொண்டு வாருங்கள். பதிவாளரிடமிருந்து இது பற்றிக் கடிதம் வரும்'' என்று சொன்னார். நான் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இது பற்றி முதல்வர் பேராசிரியர் டி. ஏ. புருடோத்தம் அவர்களிடமும் சொல்லியிருந்திருப்பார் போலும், அவர் தம் துறையிலுள்ள திரு டி. இ. வீரராகவன் என்ற விரிவுரையாளரை இப்பணிக்கு அனுப்பலாம் என்று எண்ணிப் பதிவாளருக்கு அவர் பெயரைப் பரிந்துரைத்துக் குறிப்பு அனுப்பி யிருந்தார். அப்போது பதிவாளராக இருந்தவர் திரு. இராமாநுசராவ் நாயுடு என்பவர். துணைவேந்தர் பதிவாளரிடம் என்னை இப்பணிக்கு அனுப்புமாறு சொல்லி இருந்ததாக அறிந்தேன். முதல்வர் குறிப்பு வேறுவிதமாக இருந்தது கண்டு அவர் வியப்பெய்தினார்.

முதல்வர், துணைவேந்தர், பதிவாளர், திரு. டி. இ. வீரராகவன் ஆகிய நால்வரும் 'பலிஜ' வகுப்பைச் சேர்ந்தவர்கள். துணைவேந்தர் பலிஜ வகுப்பினருக்கு அதிக ஆதரவு தந்து வருவது திருப்பதியில் எல்லோரும் நன்கு அறிந்த செய்தி. ஒருசமயம் திரு. டி. இ. வீரராகவனிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது தான் சென்னை சென்று தமிழ் நூல்களைக் கொணர வேண்டியிருக்கும் என்று முதல்வர் உரைத்ததாக என்னிடம் சொன்னார். ஆனால் அவர் என்னிடம் ''நீங்கள் அப்பணிக்குப் போய்வருவது தான் சரி; நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவருவ

தில் நீங்கள்தான் தகுதியுடையவர்கள்'' என்றார். நான் அங்குப் பணியிலிருக்கும்போதுதான் தமிழ்ப் புத்தகங்களைப்பொறுக்கி எடுத்து வரும் பொறுப்பிற்குப் போவது சரியன்று என்று கருதினதை அவர் பேச்சிலிருந்து அறிந்தேன். திரு. டி. இ. வீரராகவன் பரந்த நோக்கமுடையவர். தமக்குப் பொருத்தமில்லாத பணியை ஏற்றுக்கொள்ளார். ஆனால் திரு. டி. இ. வீரராகவனை அனுப்பித் தான் பலிஜ வகுப்பினரிடம் அக்கறை காட்டுபவன் என்பதைத் துணைவேந்தர் அறியும்படிச் செய்ய வேண்டும் என்று பேராசிரியர் டி. ஏ. புருஷோத்தம் முயன்றிருக்க வேண்டும் என்று என்னால் ஊகம் செய்யமுடிகின்றது. ஆனால் முதல்வர் அனுப்பிய குறிப்பின்படி பல்கலைக்கழகம் திரு. டி. இ. வீரராகவனை அனுப்பவில்லை. என்னைத்தான் அனுப்பியது.

திரு. துரைசாமி அய்யர் வீடு கௌடியாமடச்சாலையருகிலுள்ள இலட்சுமிபுரத்தில் இருந்தது. அதை விசாரித்துக் கொண்டு அங்குச் சென்றுவிட்டு நூலகத்தை நோட்டம் இட்டேன். திரு. துரைசாமி அய்யர் மறைந்து ஒரு சில ஆண்டுகள் ஆனபடியால் நூல்களில் சில நல்ல முறையில் அடுக்கப் பெற்றிருந்தன. பெரும்பாலான நூல்கள் குப்பைபோல் குவிந்து கிடந்தன. சில ஆண்டுகள் நூல்கள் இருந்த அறையில் ஆள் நடமாட்டமே இல்லாதிருந்ததை அறிய முடிந்தது. திரு. துரைசாமி அய்யரின் குமாரர்களும் இதை ஒப்புக் கொண்டனர். மக்கிப்போன தாள்களின் மணம் மூக்கைத் துளைத்தது. சாதாரணமாக இந்த மணம் எனக்கு ஒவ்வாதது. ஆதலால் முதல் நாளன்று ஒரு வேலையாளை விட்டு குப்பை முதலியவற்றைப் பெருக்கியும் ஒட்டடை அடித்தும் அறையையும் அலமாரிகளையும் துப்புரவு செய்தால்தான் நூல்களைப் பொருக்கி எடுக்க வசதியாக இருக்கும் என்று சொன்னேன். திரு. துரைசாமி அய்யரின் குமாரர்கள் (இப்போது அவர்களின் பெயர்கள் கூட நினைவில் இல்லை; 22 ஆண்டுகள் ஓடி

விட்டன அல்லவா? உடனே இப்பணியை நிறைவேற்றுவ தாகவும் மறுநாள் என்னை வரும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.

காலை ஒன்பது மணிக்கு உணவை முடித்துக் கொண்டு சென்றுவிடுவேன். தூசு புழுதி முதலியவற்றைத் தட்டி எடுப்பதிலும், நூல்களைத் திறந்து பார்த்து அவை பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கத் தகுந்தவையா? பழைய நூல்களைக் கட்டமைத்தால் தகுந்தவையாக அமையுமா? என்றெல்லாம் ஆய்ந்து எடுப்பதில் கால தாமதம் ஆயிற்று. தொடர்ந்து நான்கு நாட்கள் சென்று இருநூறு நூல்கட்கு மேல் தேர்ந்தெடுத்தேன். நாற்பது விழுக்காடுதான் தகுதியான நூல்களாக இருந்தன. இடை யில் மூன்று மணிக்கு ஒருமுறை காஃபி பானம் தந்தனர். மாலை 4 மணிக்குச் சிற்றுண்டி காஃபி வழங்கினர். நான்கு மணிக்கு மேல் திரும்பி விடுவேன்.

நான்காம் நாள் தேர்ந்தெடுத்த நூல்கட்குச் சிவப்பு பென்சிலால் எண்கள் இட்டுப் பட்டியலைத் தயாரித்துக் கொண்டேன். நான் சென்னையில் வழக்கமாகத் தங்கும் இடம் பன்மொழிப் புலவர் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லம் (35, இராக்கியப்ப முதலியார் தெரு, மயிலை, சென்னை-600 004) உயர் நிலைப்பள்ளித் தமிழ்ப் பாட நூல்கள், இலக்கண நூல்கள், துணைப்பாட நூல்கள் இவற்றை வெளியிடும் எஸ். வாசன் கம்பெனியும் இந்த இல்லத்தில்தான் இருந்தது. இதற்கு இரவு பகலாக ஓயாது உழைக்கும் R. சக்கரவர்த்தி அய்யங்கார் மேலாளராக இருந்தார். இவர் அப்போது இலயோலா கல்லூரியில் பேராசிரியாக இருந்த R. சாரங்கபாணி அய்யங்காரின் திருத்தம்பியார். இவரைத் தவிர கோவிந்தன் என்ற முழு நேர எடுபிடி ஆளும் இருந்தான். இவர்கள் கர்ம வீரர்கள். இவர்களிடம் நான் தயாரித்த பட்டியலைத் தந்து நூல் களை இரண்டு மூன்று கட்டுகளாக அழகாகக் கட்டிக்

கோணியால் தைத்து மூடி லாரியில் சேர்ப்பித்து மேற்படி லாரி பற்றுச் சீட்டைப்பெற்றுக் கொண்டு திருப்பதி வந்து சேர்ந்தேன். மூன்று நாட்களில் நூல்கள் பாதுகாப்பாகப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வந்து சேர்ந்தன. நூல்கள் வந்து சேர்ந்தமைக்குப் பல்கலைக் கழகத்திற்கு ஓர் அறிக்கை அனுப்பி வைத்தேன். நூலகரையும் நூல்களைப் பெற்றுக் கொண்டமைக்கு ஓர் கடிதம் அனுப்புமாறு செய்தேன்.

துணைவேந்தர் அவர்களை நேரில் சந்தித்து என் பயணத்தையும், நூல்களைப் பொறுக்கி எடுப்பதில் ஏற்பட்ட சிரமத்தையும், நூல்கள் கட்டமைக்கப் பெற்று நூலகத்திற்கு வந்து சேர்ந்த விவரங்களையும் தெரிவித்தேன். துணைவேந்தர் சாதிப் பற்றாளராக இருந்தாலும் பிறசாதியினரின் திறமையைப் போற்றுபவர். இவர் காலத்தில் பல்வேறு சாதியினர் பல்வேறு பணிகளில் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றிருந்தனர். எல்லோருமே இவரிடம் நல்ல மதிப்பு வைத்திருந்தனர். இவரும் எல்லோர் பாலும் நல்ல அன்பு காட்டினார். இவர் காலத்தில் பல்கலைக் கழகம் ஒரு சிறந்த குடும்பம்போல் இயங்கி வந்தது என்பதற்கு இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

> இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்.[1]

என்ற வள்ளுவர் பெருமான் கூற்றை நடைமுறையில் இவர் அற்புதமாகக் கையாள்வதை பலமுறை கண்டு மகிழ்ந்ததுண்டு.

1. குறள்—517 (தெரிந்து வினையாடல்)

# 15. 'இளைஞர் வானொலி' வெளியீடு

தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழக அரசின் மானியம் பெறுவதற்கென்று எடுத்த முயற்சியும் சரிப்பட்டுவர வில்லை. பிஎச்.டி.க்குப் பதிவு பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சியும் பலன் அளிக்கவில்லை. இதனால் அமைதியாக இருக்க வேண்டிய மனம் கலங்கியது. காரைக்குடியில் சிறுவர்கள் இருவரும் எப்படிப் படிக்கின்றனரோ என்ற கவலை வேறு சூழ்ந்து கொண்டது. சென்னைப் பல்கலைக் கழகத்திலோ தமிழ் எம்.ஏ., பயிற்றுவிக்கும் கல்லூரியிலோ பணி புரியும் வாய்ப்பு கூட கிடைக்கவில்லை. அழகப்பர் கலைக் கல்லூரியில் எம்.ஏ., படிப்புக்கு வழி ஏற்பட்டது. சென்னையில் எம்.ஏ., பயிலும் மாணாக்கர்கட்கு கல்லூரி கள் கலந்து கற்பிக்கும் முறை (Inter—collegiate Teaching) நடைமுறையிலிருந்து வந்தது. பல்கலைக்கழக மானிய ஆணையமும் (University Grants Commission) இதை வற்புறுத்தியது. இதற்குப் பேராதரவும் தந்தது. இந்த முறையைக்கடைப்பிடிக்கும்திட்டத்தில் அழகப்பர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணிபுரியும் எனக்கு வாரத்திற்கு 4 பொழுதுகள் (Periods) எம்.ஏ.க்கு மொழியியல் (Philology) கற்பிக்கும் வாய்ப்பினை அளிக்குமாறு கேட்ட வேண்டு கோளையும் முதல்வர் அலெக்ஸாண்டர் ஞானமுத்து மறுத்துவிட்டாரே; அவ்வாய்ப்பு வழங்கப் பெற்றிருந்தால் பிஎச்.டி.க்காவது பதிவு செய்து கொண்டிருக்கலாமே. குடும்பத்தைப் பிரியாது வாழ்ந்திருக்கலாமே. வாழ்க்கை யில் எதிர்பார்க்கும் சாதாரண வாய்ப்புகளும் கிட்டாமல் போய் விடுகின்றனவே, ஏழுமலையானை நம்பித் திருப்ப திக்கு வந்தும் அவனும் கைவிட்டானோ என்ற ஐயத்திற்கு

இடம் கொடுத்து விட்டானே... என்றெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து என் மனம் கவலைக் கடலில் ஆழ்ந்தது.

இந்தக் கவலையைப் பணி செய்து அதில் மறக்க நினைத்தேன். குடும்பப் பொறுப்பு இல்லாததால் உறங்கும் நேரம் போக எல்லா நேரத்தையும் பணியிலே தானே கழிக்க வேண்டும்? பிஎச்.டி.க்கு எப்படியாவது பதிவு பெற முடியும் என்ற மன உறுதி மட்டிலும் இருந்து கொண்டிருந்தது. ஆழ்வார் பாசுரங்களைத்தான் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறுதியிட்டுக் கொண்டமையால், காலையிலும் மாலையிலும் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டேன்; காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகளின் திவ்வியார்த்த தீபிகையும் திரு. பு.ரா. புருடோத்தம நாயுடுவின் திருவாய் மொழி ஈட்டின் தமிழாக்கமும் கருவி நூல்களாகப் பயன் பட்டன. ஆசாரிய சுவாமிகள் எனக்கு மானச குருவாக நின்று விளக்கியருளினார்கள். ஐயம் வரும்போதெல்லாம் இன்றியமையாத நிலையில் ஐயத்தை அஞ்சலட்டையில் சுருக்கமாக எழுதியனுப்புவேன்; மறு தபாலில் அஞ்ச லட்டை மூலமே ஐயத்தைத் தெளிவாக்குவார்கள். இந்தச் செய்தியை எப்படியோ அறிந்த வைணவப் பெரியார் செவந்தாம்பட்டி பெ. இராமாநுசம் என்பார் என் மணி விழா மலரில்,

தன்னிலைமை தானறியாத் தன்மையாளன்
சாதிவெறி சமயவெறி சற்று மில்லான்
துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்
தூயதிருக் கச்சிநகர் அண்ணங் கரராம்
மன்னியவாச் சார்யரின் மலர்த்தாள் போற்றி
வைணவத்தின் வளமனைத்தும் உணரப் பெற்றோன்
பன்னியதை ஏட்டினிலே பரவச் செய்தான்
பலவுரைத்தேன்? அவன்திறனைப் பகரல் ஆற்றேன்![1]

1. மணிவிழா மலர்—பக்கம் 25.

என்று குறிப்பிட்டு மகிழ்கின்றார். இப்பாடல் முற்றிலும் தன்மை நவிற்சியணியாக அமைந்ததைக் கண்டு நானும் மகிழ்கின்றேன். இஃது இப்படியே எனக்கு ஆசியாகவும் நின்று இறைபணியும் இலக்கியப் பணியுமாக ஆற்ற ஏழு மலையான் துணை நிற்பான் என்று நம்புகின்றேன்.

காரைக்குடியில் தொடங்கிய அறிவியல் பணியை மேற்கொள்ளத் துணிந்தேன். எனக்குத் தேவையான அறிவியல் நூல்களை சென்னை அமெரிக்க நூலகம் அனுப்பி உதவியது. சிறுவர்கட்கு விளக்கமாக இருக்கும் பொருட்டு 'இளைஞர் வானொலி' என்ற ஒரு சிறிய நூலை எழுத தொடங்கினேன். உலக முன்னேற்றத்திற்கு அறிவியல் மிகமிக இன்றியமையாதது என்று சொல்லத் தேவை இல்லை. அது பலதுறைகளாகப் பரந்து உள்ளது. இது வியத்தகு ஆற்றல் படைத்தது, மிகப் பரந்து கிடக்கும் இவ்வுலகின்கண் நடைபெறும் நிகழ்ச்சிகளை இருந்த இடத்திலிருந்தே அவ்வப்போது கேட்டு மகிழவும், அறிவு பெறவும், பல நாடுகளுடன் உறவு கொள்ளவும் உறுதுணை செய்வது வானொலியாதலால் இதனை முதலில் விளக்கத் துணிந்தேன்.

காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்.[2]

என்று பாரதியார் கண்ட கனவு நனவாகி விட்டதை முதலில் எழுதத் துணிந்தது பொருத்தந்தானே.

இம்மாதிரியான அறிவியல் நூல்களை, அதுவும் சிறுவர்க்காக எழுதப்பெறும் நூல்களைப் படைப்ப தென்பது எளிதான செயலன்று. இந்த நூல் உருவாகும் காலத்தில் சிறார்கள் உயர்நிலைப் பள்ளிகளில் 10—11வது வகுப்புகள்வரைப் பொது அறிவியலைத் தமிழில் படித்து

1. மணிவிழா மலர்—பக்.25
2. பா. க: பாரததேசம்—7.

வந்தனர். சற்று வளர்ந்தவர்களிடமும் செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும் என்ற விடுப்பூக்கம் (Instinct of Curiosity) துடித்து நின்ற காலம். தமிழ் வார, பிறை, திங்கள் இதழ்களும் செய்தித் தாள்களும் மக்களிடம் படிக்கும் பழக்கத்தை வளர்த்தன. தமிழகமெங்கும் ஆங்காங்கு அரசினால் தோற்றுவிக்கப் பெற்ற நூலகங்களும் தனியாரால் தொடங்கப் பெற்ற வாசக சாலைகளும் பணவசதி படைக்கப் பெறாத ஏழைகளுக்கும் படிக்க வசதியையும் வாய்ப்பையும் நல்கின. இத்தகைய வாசகர்களும் நூல் நிலையங்களும் யான் எழுதும் நூல்களை தக்க முறையில் பயன்படுத்திக் கொள்வர், கொள்ளும் என்று நினைத்தே இவ் வரிசை நூல்களை எழுதத் துணிந்தேன்

இத்தகைய வாசகர்களின் மனநிலை, அடிப்படை அறிவு முதலியவற்றை அறிந்து கொண்டுதான் நூல் அமைப்பினைத் திட்டமிடுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக இளைஞர் வானொலியைப் படிப்போர் வானொலி அலைகளின் இயல்புகள், மின்னாக்கப் பொறி செயற்படும் விதம், தாமஸ் ஆல்வா எடிசன், அலெக்ஸாந்தர் கிரஹாம் இவர்களின் பங்கு, மின்னோட்டத்தின் தன்மைகள், ஒலியின் தன்மைகள், வியத்தகு மின்காந்தம் ஒலிபெருக்கி செயற்படும் விதம், ஒலிவாங்கியின் பல்வேறு அமைப்புகள், மின்னணுக்கள் செயற்படும் முறை, லெய்டன் ஜாடி, ஒத்த அதிர்ச்சி, சுருதி செய்தல், (Tuning) வான அலைகள், அதிசய வெற்றிடக் குழல்கள். நம்முடைய வானொலிப் பெட்டியின் அமைப்பு இவை பற்றிய சில அடிப்படையான கருத்துகளை சுவையுடன் வாசகர்கள் அறிந்து கொள்ளச் செய்தல் வேண்டும். இந்த அடிப்படைக்குப் பிறகுதான் வானொலி இயங்குவதை விளக்குதல் வேண்டும்.

காட்சிப் பொருள் வடிவில் உள்ள துணைக் கருவிகளே குழந்தைகட்கு உற்சாகத்தை ஊட்டும்; கவர்ச்சியையும் தரும். ஆனால் அறிவியல் நூல்கள் வரிவடிவங்கள்,

விளக்கப் படங்கள் போன்றவை ஏற்ற இடங்களில் ஏற்றவாறு அமையப்பெறின் நூல் கவர்ச்சியுடையதாக அமையும். இவை வண்ணப் படங்களாக இருப்பின் நூலின் கவர்ச்சி மேலும் அதிகமாகும். ஆனால் இளைஞர் வானொலியில் முப்பத்தைந்து சாதாரணப் படங்களே நன்முறையில் அமைக்கப்பெற்று விளக்கங்களும் தரப் பெற்றுள்ளன. நூலின் இறுதியில் கலைச்சொற்களின் விளக்கம் ஓரிரண்டு வாக்கியங்களில் சுருக்கமாகத் தரப் பெற்றுள்ளன. இந்த நூலை திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (79, பிரகாசம் சாலை, சென்னை—600 108) ஏற்று வெளியிட்டது இந்நூலின் பெரும் பேறாகும்.

இன்றைய நிலையில் ஆசிரியரே மூலதனம் போட்டு வெளியிடுவது விரும்பத் தக்கதன்று. அப்படி அவர் வெளியிட்டாலும் விற்பனையுரிமை விற்கும் நிறுவனத் திடம் ஒப்படைத்து விடவேண்டும். ஆசிரியரே தம்வசம் படிகளை வைத்துக் கொண்டால், அவற்றைத் தக்க முறையில் பாதுகாக்க இயலாது. தவிர, விற்கும் படிகளை விட இலவசப் படிகளே வேகமாகப் போய்க் கொண் டிருக்கும். திருவேங்கடவன் அருளால் இந்நூல் நவம்பர் 1962-இல் வெளி வந்தது. இஃது எனது பன்னிரண்டாவது வெளியீடாகும் (கழக வெளியீடு).

எந்த நூலை வெளியிட்டாலும் அவற்றை எவ்வகை யிலேனும் சமூகத்திற்குச் சேவை செய்யும் பெரியார் ஒருவருக்கு அன்புப் படையலாக்குவது என்ற மரபை வைத்துக் கொண்டிருந்தேன். இதற்கு முன் வெளி வந்த பதினொரு நூல்களைப் பதினொரு பெரியார்கட்கு அன்புப் படையலாக்கியுள்ளதை ஆங்காங்குச் சுட்டிக் காட்டி யுள்ளேன். இந்த நூல் எழுதி வெளிவந்த பொழுது பல்வேறு வகைகளில் பல்வேறு காரணத்தால் பெரும் பாலோர் உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடியும் வரைக்

கட்டணம் இன்றிக் கல்வி பெற்று வந்தனர். ஒரு சிறு பகுதியினர் எந்த விதத்திலும் சம்பளச் சலுகை பெறா திருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் ஏழையாகவும் இருந்தனர். இதை நன்குணர்ந்த 'ஏழை பங்காளர்', அக்காலத் தமிழக முதல்வராக இருந்த திரு. கே. காமராசர் எல்லோருக்கும் இலவசக் கல்வி கிடப்பதை நடைமுறைப் படுத்தினார். நான் திருப்பதியில் பணியாற்றினாலும், இவர் செய்த தொண்டு என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. தவிர, இப்பெருமகனார் ஏழை எளியவர்களின் கஷ்டங்களை நன்குணர்ந்தவர்; எவ்வகையிலேனும் அவர் கட்கு உதவக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர். ஆகவே, இந்நூலை, அவர்தம் அறுபதாம் ஆண்டு நினைவின் மலராக,

பயிர்காக்கும் உழவனென உயிர்கள் காக்கும்
பான்மையிலே முதலமைச்சர்; வறியர் தாமும்
மயல்போக்கும் கல்வியினால் மேன்மை பெற்று
வாழ்வுபெற வழியமைத்தோன்; பார தத்தை
உயர்வாக்க உழைப்பதிலே முதன்மைத் தொண்டர்
ஒருநலமும் தாம்நாடார் காம ராசர்
பெயர்வாழ்த்தி அவர்பிறந்த நன்னாள் வாழ்த்தி
பெரிதுவந்து படைக்கின்றேன் இந்த நூலை.

என்ற பாடல் மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இதனைக் கிடைத்தற்கரிய பேறாகவும் கருதினேன்.

## 16. 'அதிசயமின்னணு' நூல் அவதாரம்

'இளைஞர் வானொலி'யை அடுத்து என்ன அறிவியல் எழுதவேண்டும் என்பது பற்றிய திட்டம் ஒன்றும் இல்லை. ஒரு நாள் வேழமுகத்தோன் என் மனத்தில் தோன்றினான். சிறு வயதில் பெரகம்பி என்னும் சிற்றூரில் யான் திண்ணைப் பள்ளியில் பயின்ற பொழுது சில ஆண்டுகள் விநாயகர் அகவலாக என் நாவில் தாண்டவமாடி என் உள்ளத்தில் நிலையான இடம் பிடித்துக் கொண்டவனல்லவா? "உனக்கு நான் வழி காட்டுவேன். 'மின்னணுவியல்' பற்றிய ஒரு சிறுநூலை எழுதுக. அஃது இளைஞர்கட்கு நன்கு பயன்படும்" என்று சொல்லி மறைந்தது போன்ற ஒரு மன நிலை. உடனே,

அணுவிற் கணுவாய் அப்பா லுக்கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தில் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

என்று அவன் திருவடிகளைச் சரணம் அடைந்தேன்.

இஃது அறிவியல் ஊழி. கடந்த பல நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியின் அளவைவிட இந்த நூற்றாண்டில் அதன் வளர்ச்சியின் அளவு மிக அதிகமாக

ஏற்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக வாமனன் போலிருந்த அது திடீரென்று திரிவிக்கிரம அவதாரம் எடுத்துள்ளது. இன்னும் அதன் வளர்ச்சி எந்த அள விற்குப் போகும் என்று இப்பொழுது சோதிடம் கூறுவதற் கில்லை. நேற்று கண்டறியப் பெற்றவை இன்று 'பத்தாம் பசலிகளாக'ப் போகின்றன. நேற்று ஆக்கின சோறு இன்று பழஞ்சோறு ஆகிவிடுகின்றது. இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டமேனாட்டு அறிஞரொருவர் "இந்த நூற்றாண்டு கருத்துகள் வெடித்த காலம்' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு விரைந்து வளர்ந்து வரும் அறிவியல் துறையில் 'மின்னணுவியல்' (Electronics) என்பது ஒரு பிரிவு; இயற்பியலைச் சார்ந்தது. இப்பிரிவில் 'மின்னணு' (Electron) "அலகிலா விளையாட்டுடையார் போல்" புரியும் திருவிளையாடல்கள் எண்ணற்றவை, அத்திருவிளையாடல்களால் நாம் பெறும் நன்மைகளும் கணக்கிலடங்கா. இவற்றைச் சுருக்கமாக விளக்கும் முறையில் 'அதிசய மின்னணு' என்ற தலைப்பில் ஒரு நூலைப்படைக்கத் திட்டம் இட்டேன்.

அணுக்களைக் காட்டிலும் நுண்ணிய பொருள்களும் உள்ளன என்பது அறிவியலறிஞர்கட்குத் தெளிவாயிற்று. எதிர் மின்னணு (Electron) என்பது மிகச் சிறியர்கள். நாம் கண்ணினால் காணக் கூடிய மிகச் சிறிய பொருள் களைவிடப் பல இலட்சக்கணக்கான அளவுகளில் சிறியது. இதை ஆற்றல் மிக்க நூண் பெருக்கியாலும் காண முடியாது. கோடிக்கணக்கான எதிர் மின் அணுக்களை ஒன்று சேர்த்தால்தான் ஒரு குண்டூசியின் தலையளவு இருக்கும். எதிர் மின்னணுவை மின்னணு என்றே வழங் கலாம். இஃது எதிர் மின்னூட்டத்தைக் கொண்டது. மின்னணுக்கள் உண்மையிலேயே மிக நுண்ணிய துகள்கள் அவை நகர்ந்து கொண்டே இருக்கும் தூய்மையான மின்

1. விநாயகரகவல் — அடி (64-71).

பொறிகள் ஆகும். அண்டங்கள் யாவும் ஒரு கதிரவனைச் சுற்றி இயங்குவதைப் போலவே மின்னணுக்களும் கதிரவன் போலுள்ள உட்கருவைச் சுற்றி இயங்குகின்றன. நம்முடைய பூமியைச் சூரியனிடமிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. உட்கரு என்ற கதிரவனிடமிருந்து மின்னணுக்களைப் பிரிக்கலாம். ஆனால் பிரிக்கும் முறையை அறியப் பன்னெடுங் காலம் ஆயிற்று.

உட்கரு (Nucleus) என்பதும் மின்துகளாலானதே. இத்துகள்கள் மின்னணுக்களினின்றும் முற்றிலும் வேறானவை. ஒவ்வொரு மின்னணுவும் எதிர்மின்னூட்டம் கொண்டது என்பதை நாம் அறிவோம். ஆனால், உட்கருவில் இருவகை மின்துகள்கள் அடங்கியுள்ளன. ஒருவகைத் துகள்கள் நேர் மின்னூட்டம் கொண்டவை; இவை நேர் மின்னணுக்கள் (Protons) என்று வழங்கப் பெறும். மற்றொரு வகை துகள்களிடம் யாதொரு மின்னூட்டமும் இல்லை; இவற்றை நடு நிலை மின்னணுக்கள் (Neutrons) என்று வழங்குவர், இந்த இரண்டு வகை மின் துகள்களும் இறுகிப் பிணைந்து கொண்டுள்ளன. இவ்வாறு பிணைந்து கொண்டுள்ள ஆற்றலுக்கு உலகிலுள்ள எந்த ஆற்றலையும் ஈடு சொல்ல முடியாது. இது புவியீர்ப்பு விசையைவிட இலட்சக் கணக்கான மடங்கு வலுவுடையது. இந்த இரண்டு வகைத் துகள்களைத் தவிர இருபதிற்கு மேற்பட்ட வேறு துகள்களும் இருப்பதாக அறிவியலறிஞர்கள் அறிந்துள்ளனர். ஆனால், அவர்கள் அவற்றைத் தனியாகப் பிரித்து இன்னும் இனங் காணவில்லை. அவற்றின் செயல்களைக் கொண்டே அவற்றின் இருப்பினை மட்டிலும் அறிந்து கொண்டுள்ளனர்.

ஓர் உட்கருவும் அதனைச் சுற்றி இயங்கிக் கொண்டிருக்கும் எதிர் மின்னணுக்களும் சேர்ந்த அமைப்பே அணு (Atom) என்பது. கதிரவனுடைய ஈர்ப்பு விசை தன்னைச் சுற்றிலுமுள்ள கோள்களைத் தம்முடைய

நிலைகளிலிருந்து விலகாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போலவே, அணுவின் உட்கருவிலுள்ள நேர்மின் துகள்களும் எதிர் மின்னூட்டத்தைக் கொண்ட மின்னணுக்களை மிக வலுவாக இழுத்துப் பிடித்துக் கொண்டுள்ளன; இந்நிலை அவற்றைத் தம் நிலைகளிலிருந்து விலகாமல் இருக்கச் செய்கின்றது. உட்கரு ஒரு துவரை அளவு இருந்தால் அணு ஒரு மைல் குறுக்களவுள்ள உருண்டையாக இருக்கும். ஓர் அணுவின் எடை முழுவதும் அதன் உட்கருவிலேயே செறிந்து கிடக்கின்றது. எனவே, அணுவின் எடை என்பது உட்கருவின் எடையே. மின்னணுக்களுக்கு எடையே இல்லை. ஒரு நேர் மின்னணு ஒரு மின்னணுவில் கிட்டத்தட்ட ஆயிரத்தில் ஒரு பங்கு பருமனே இருக்கும். அதன் எடை மின்னணுவின் எடையைப் போல் 1840 மடங்கு அதிகம் இருக்கின்றது!

செயற்படும் நிலையிலுள்ள மின்னணுக்கள் மின்னணு வாற்றல் (Electronic energy) என வழங்கப் பெறும். ஆனால் ஓரணுவில் இதனினும் வேறான ஓர் ஆற்றல் உள்ளது. இந்த ஆற்றல் வேறு விதமாகப் பயன்படுகின்றது. அணுவினைச் சிதைத்து இந்த ஆற்றல் வெளிப் படுத்தப்பெறுகின்றது. இஃது 'அணுவாற்றல் (Atomic energy) அல்லது 'உட்கரு வாற்றல்' (Nuclear energy) என வழங்கப்படுகின்றது.

மின்னணுக்களைப்பற்றிய அறிவியல் மின்னணுவியல் (Elecronics) ஆகும். இங்கு நாம் மின்னணுக்களைக் கட்டுப் படுத்திச் செயற்படச் செய்கின்றோம். பன்னெடு நாட்களாகச் செய்ய முடியாத பணிகள் யாவும் மின்னணுக்களால் செய்யப்பெறுகின்றன. மின்னணுவியலால் பரந்த வான்வெளியில் தொலைவிலுள்ள காட்சிகளைக் காண்கின்றோம்; இருண்ட நள்ளிரவில் கனமான எஃகு மூலமும் நம் கண்கள் சில பொருள்களைக் காண்கின்றன. அது பிணி நீக்கும் முறைகளில்

பணி புரிகின்றது. போர்களிலும் பெரும்பங்கு கொள் கின்றது. அது தொழிற்சாலைகளிலும் வேளாண்மைப் பண்ணைகளிலும் இல்லங்களிலும் வியத்தகு முறையில் ஏவல் கேட்டு நிற்கின்றது. எதிர்காலத்தில் அது விமானங் களையும் இரயில் வண்டிகளையும் தானியங்கிகளையும் (Automobiles) இயக்கி நம் பயணத்தை எளிதாக்கலாம்; நம் இல்லங்களிலும் பல்வேறு சேவைகள் புரியலாம். அஃது ஆயிரம் கைகளையுடை ஒருசேவகன் போல்அனைத்தையும் செய்யும் காலம் மிக அண்மையிலுள்ளது என்பதற்கு ஐயம் இல்லை.

இவற்றையெல்லாம் விளக்கும் முறையில் 'அதிசய மின்னணு' என்ற நூலை அமைத்தேன். இதில் விடுதலை மின்னணுக்கள் மின்னணுக்குழல்கள், மின்னணுக் குழல் களின் பணிகள், தொழில்துறையில் மின்னணு புரியும் வியத் தகு செயல்கள், ஒளிக்குழல்கள் (Photo tubes) ஊர்க்காவ லர்கள்போல்பணிபுரியும் முறைகள் உடல்நலப்பாதுகாப்பில் மின்னணுவின் பணி, அறிவியல் ஆராய்ச்சிகளில் அதுபுரியும் அற்புதப்பணிகள், பாதுகாப்புத் துறையில் அது கொள்ளும் பங்கு போன்ற செய்திகள் எல்லாம் அடங்கும் முறையில் நூலை அமைத்தேன். நிமிடங்கள் தோறும் புத்தமைப்புகள் தோன்றி வருவதை—அறிவியல் உலகம் விரிந்து கொண்டு வருவதை—என் மனம்,

கணந் தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறுப் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணத்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? [2]

கவிஞன் வாக்கில் காண்கின்றது.

காலத்திற்கேற்ற அரிய நூல்களை வெளியிட்டு வரும் 'கழகம்' இந்த நூலையும் மனமுவந்து ஏற்றுவெளியிட்டது

2. பாரதியார்: பாஞ்சாலி சபதம்—பாடல் 149

(சூலை 1963). இந்த நூல் வெளிவந்த சமயம் நாடாளு மன்றத்தில் நண்பகல் உணவுத்திட்டத்தையும் சீருடைத் திட்டத்தையும் பாராட்டிப் பேசியதைச் செய்தித்தாள் களில் படித்து மகிழ்ந்தேன். இத்திட்டங்களின் தாயாகிய திரு. நெ.து.சுந்தரவடிவேலு அவர்களை தமிழ் கூறு நல்லுலகம் புகழ்ந்தது; இவற்றிற்கு முதலமைச்சர் காமராசர் ஆக்கமும் ஊக்கமும் தந்தமை மிகவும் பாராட்டத்தக்கது. கல்வி உலகில் ஜாம்பவான் போல் திகழ்ந்தவர் திரு. சுந்தர வடிவேலனார். இவரால் தமிழக ஆசிரியர்களும் மாணாக்கர்களும் அடைந்த ஏற்றங்களும் நன்மைகளும் பலப்பல, இவருக்கு முன்னர் இருந்த கல்வி இயக்குநர்கள் 'மூலவராகவே' காட்சியளித்தனர். இப்பெருமகனாரோ 'உற்சவராக' இயங்கியவர்; தமிழ் நாடெங்கும்—பட்டி தொட்டிகளிலெல்லாம்—உலாவந்தார்; உலப்பிலா ஆனந்தமும் அடைந்தார். பல்வேறு நிலை மாணாக்கர்கள் சீருடையுடன் திகழ்வதை இவர்மனம் கண்டுகளித்திருக்கும்; குளிர்ந்துமிருக்கும். கல்லூரிகளிலும் தமிழன்னை அரியணை ஏறுவதற்கு அல்லும் பகலும் ஓல்லும் வகை யெல்லாம் உவந்து பணியாற்றியதை உலகம் கண்டது. இவற்றையெல்லாம் உலகினோர் நினைவு கூரும் வகையில் இச்சிறு நூலை,

நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்
நல்லிளங் கோவுயர் கபிலன்
கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்
குலவிய செந்தமிழ்த் தாயின்
பற்றுறு வயிற்றில் திருவொடு தங்கிப்
பண்பொடு தோன்றிய செல்வர்
கற்றவர்க் கினியர்; சுந்தர வடிவேல்
கண்ணியர்க் குரியதிந் நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இஃது எனது பதின்மூன்றாவது வெளியீடாகும். (ஜூலை-

1963)—இது கழக வெளியீடு. இந்த நூலுக்குப் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

குமிழி—173

# '17. 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' தோற்றம்

பண்டைய இலக்கியங்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து அழகிய முறையில் ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் இன்றியமையாத பின்னிணைப்புகளுடனும் வெளியிட்ட பெருமை டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், அவர்களைச் சாரும். ஈடும் எடுப்புமற்ற இப்பெரியாரைப் 'பதிப்பாசிரியச் சக்கரவர்த்தி' என்று சொன்னாலும் மிகையாகாது. தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமை இவருடையது. இவரைத் தொடர்ந்து திரு. வி. கனகசபைப்பிள்ளை, பேராசிரியர் பி. சுந்தரம்பிள்ளை, திரு. பி. டி. சீநிவாச அய்யங்கார், பேராசிரியர் ரா. இராகவய்யங்கார், பேராசிரியர் மு. இராகவய்யங்கார், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை தவத்திரு. மறைமலையடிகள், தவத்திரு விபுலானந்த அடிகள் ஆகியோர் பண்டையத் தமிழ் நாகரிகச் சிறப்பையும், பண்டைய இலக்கிய நயங்களையும் அறிவுறுத்தினர். இவர்களைப் பின்பற்றிப் பல அறிஞர்கள் மறுமலர்ச்சியின் தூதுவர்களாய் அமைந்தனர்.

டாக்டர் கால்டுவெல் 'திராவிட மொழியினம்' என்ற ஒரு பிரிவை உலகிற்குணர்த்தி அக்குழுவினுள் தமிழ் பண்டையப்பெருமையையும் புகழையும் இலக்கியப்பரப்பையும் உடைய பண்பட்ட மொழி என்று காட்டினார். இவர்

காட்டிய பாதையில் பலர் மொழியியல் துறையில் தம் கவனத்தைச் செலுத்தி ஆராயத் தொடங்கினர். சமயச் சிறைச்சாலையினின்றும் வெளிப்போந்து விடுதலை பெற்று மக்கள் புதியஅறிவுலகத்திற்குள் புகுங்காலம் தோன்றியது. ஆங்கில இலக்கிய அறிவும் மேனாட்டு அறிவியல் அறிவும் நமக்கு இப்புத்துணர்ச்சியை அளித்தன. இந்நிலையில் 1947-ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் நமக்கு அரசியல் விடுதலையும் கிட்டியது; அந்நிய ஆட்சியினின்று விடுபட்டோம். இதற்கு முன்னர் ஏற்பட்ட பல்கலைக் கழகங்களாலும், புதிதாக நிறுவப்பெற்ற பல்கலைக் கழகங்களாலும் மக்கள் கல்வி பெருகிற்று. நம் நாட்டிலும் ஒரு புதுயுகம் தோன்றத் தொடங்கியது. இதுவே நம் நாட்டில் தோன்றிய 'மறு மலர்ச்சி' ஆகும்.

மக்களின் மனப் பான்மை விரிந்து நவீன ஒளியைப் பெறவேண்டுமென்ற ஓர் உணர்ச்சித் துடிப்பு எம்மருங்கும் காணப்பெறுகின்றது. இந்த உணர்ச்சி இலக்கியங்களிலும் நிழலிடுகின்றது.பழைய கதைகளும், புராணங்களும்,பாட்டுகளும் சுவையற்றுப் போயின, நவீன உணர்ச்சித் துடிப்புடன் கூடிய கவிதைகளும், புதினங்களும் சிறு கதைகளும் உண்டாகிப் பெருகி வருகின்றன. 'புதுக் கவிதை' என்ற புதியதோர் கவிதை மரபும் தோன்றியுள்ளது. ஆங்கிலக் கவிஞர்களாகிய டி. எஸ். எலியட்டு, எஸ்ரா பவுண்டு போன்ற கவிஞர்கள் காட்டிய வழியில் தோன்றியது இப் புதுமரபு. நூற்றுக்கணக்கான புதுக்கவிதை நூல்கள் பல்கிப் பெருகி வருகின்றன. இன்று இளைஞர்களிடையே சங்க இலக்கியங்கள் மீது ஆராக்காதல் பிறந்துள்ளது. இதற்கு மறைமலை அடிகள் முக்கிய காரணமாவார். அவரைத் தொடர்ந்து பணியாற்றிய பலருள் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, ரா.பிசேதுப் பிள்ளை,மு.வரதராசனார், கி. வா. ஜகந்நாதன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். கி. வா. ஜகந்நாதன் அவர்களின் 'சங்க நூற்காட்சிகள்'

என்ற தொடரில் வந்த எட்டு நூல்களும், டாக்டர் மு. வரதராசனாரின் குறுந்தொகை, நெடுந்தொகை நற்றிணை விருந்துகளும் விளக்கங்களும் இளைஞர்களின் சங்க இலக்கியக் காதலுக்குத் தூண்டு கோல்களாக அமைந்தன. சென்ற பல ஆண்டுகளில் இதற்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் பல மலிவுப் பதிப்பு நூல்கள் தோன்றிப் பல்லோர் கைக்கும். கிட்டியுள்ளன. இந்த மலிவுப் பதிப்பு நூல்களை உயர்ந்த முறையில் நல்ல அச்சுடன் பிழை களின்றி அதிகச் செலவினையும் பொருட்படுத்தாது அப்பொறுப்பினைத் தானே ஏற்றுக் கொண்டு வெளியிட்ட பெருமை திரு. எஸ். ராஜம் (முன்னாள் உரிமையாளர், முர்ரே கம்பெனி, சென்னை-600 001) அவர்களைச் சாரும். அவருடைய சீரிய தமிழ்ப் பணியைத் தமிழ்நாடு என்றும் மறக்காது நன்றிவுடன் போற்றும். இந்நிலையில் பண்டைப் பெருமையையுடைய தொல்காப்பியம் என்ற இலக்கண நூலுக்கும் (சிறப்பாக எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்) கி. வா. ஜகந்நாதன் விளக்க, ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் நான் கரைக்குடியில் பணி யாற்றியபோது தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு எளிய விளக்க நூல் ஒன்று எழுதத் திட்டம் இட்டேன். 1953, 1954-இல் நான் காரைக்குடியில் இருந்தபோது பத்துக் கட்டுரைகள் எழுதினேன்; இவை அமுத சுரபி என்ற திங்கள் இதழில் வெளிவந்தன. அதன் பிறகு தமிழ் பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல் போன்ற கல்வித்துறை பற்றிய நூல்கள் எழுது வதிலும் வேறு திசைகளிலும் என் கவனம் சென்றதால் தொல்காப்பியப் பணி நின்றது. திருப்பதியில் பணியேற்ற பிறகு மீண்டும் தொல்காப்பியத்தில் என்கவனம் சென்றது. ஓர் இரண்டாண்டுக் காலத்தில்ஏனைய 24 கட்டுரைகளை யும் எழுதி முடித்தேன். பல சமயங்களில் இவை பல நோக்குடன் எழுதப் பெற்றமையான் இவற்றுள்

ஆங்காங்கே 'கூறியது கூறல்' காணப்பெறும்; அவை விளக்கம் பற்றி வந்தனவாகக் கொள்ளல் வேண்டும். இவற்றையெல்லாம் தொகுத்து 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்ற தலைப்பில் நூல் வடிவம் பெற்று. இந்தக் கைப்படியும் பழநியப்ப சகோதரர்களிடம் (வெளியீட்டாளர்கள்) இரண்டாண்டுகள் உறங்கிக் கிடந்தது. பின்னர் மார்ச்சு 1964இல் வெளிவந்தது. இஃது எனது பதினான்காவது வெளியீடாக அமைந்தது.

பல்லாண்டுகள் கழித்து வெளிவரும் இந்த நூல் 'தொல்காப்பியம்—பொருளதிகாரம்' பயில்வாருக்கு ஒரு வழித்துணைபோல் அமையும்; ஏனையோருக்கும் தொல்காப்பியத்தைப்பற்றிய கருத்துகளை எளிதாகப் பெறுவதற்குத் துணையாக இருக்கும். இந்த நூலைப் பயில்வோர் "கவிதை வாழ்க்கையிலிருந்து மலர்ந்தது; அது வாழ்க்கைக்கே உரியது; வாழ்க்கைக்காகவே அது நிலை பெற்றுள்ளது"[1] என்று கவிதையைப் பற்றி அட்சன் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர் கூறிய கருத்து ஒல்காப் பெரும்புகழ் 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலுக்கும் பெரிதும் பொருந்துவதை அறியலாம். இந்த நூலை என் உள்ளம் எப்படி எப்படியெல்லாம் பகுத்துப் பார்க்க முனைந்தது என்பதையும் தெளியலாம். இந்த நூலுக்கு மூவர் அணிந்துரை, ஆங்கில முன்னுரை (Foreword), தமிழில் முன்னுரை (அறிமுகம்) அருளியுள்ளனர். அவர்களைப் பற்றியான் என் நூல் முகத்தில் கூறியுள்ளதை இவண் கூறுவேன்.

"பல்லாண்டுகளாகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையில் பெரும் பணியாற்றிக் கடந்த இரண்டாண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து அத்துறையை அணி செய்யும் டாக்டர் மு. வரதராசனாரைத் தமிழ்கூறு

1. Hudson, W.H.: An Introduction to the Study of Literature-P-92

நல்லுலகம் நன்குஅறியும். கடந்த இருபதுயாண்டுகளாக அவரை நான் நன்கு அறிவேன். பழைய பரம்பரைத் தமிழ்ப் புலவர்களையும் புதிய பரம்பரைத் தமிழ்ப் புலவர் களையும் இணைத்து நிற்கும் பெரும் புலவர் அவர். பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் நின்று அறிவொளி வீசும் ஆசிரிய மணியாவார். உழைப்பி னால் உயர்ந்தமைக்குத் தமிழ்நாட்டு இளைஞர்கட்கு எடுத்துக் காட்டாக நின்று நிலவுபவர். இவருடைய எழுத்துகளில் புலமை மணம் கமழும். ஆராய்ச்சித்திறன் ஒளிரும். சிந்தனைச் சுடர் தெறிக்கும். இவருடைய கருத்து களில் ஆழ்கடலைப் போன்ற ஆழமும் உண்டு; அதனைப் போல அவை அகன்றும் காணப்பெறும். இலக்கியம், திறனாய்வு, ஆராய்ச்சி, மொழியியல், நாடகம், புதினம், சிறுகதை, கடிதங்கள் போன்ற பல்வேறு வகை இலக்கிய வகைகளை அணி அணியாக வெளியிட்டுத் தமிழன்னை யின் மகிழ்ச்சியைப் பொங்கச் செய்தவர்; தமிழ் ஆராய்ச்சி யும் தமிழில் புதிய இலக்கிய வகைகளைப் படைக்கும் ஆற்றலும் நிறைந்த இவரைத் 'தமிழ் நாட்டு பெர்னாட் ஷா' என்று கூறினும் மிகையன்று. வல்லவர்; நல்லவர்; எவருட னும் இன்முகத்துடன் புன்முறுவல் காட்டி உரையாடும் பண்புடையாளர். 'பண்புடையார் பட்டுண்டு உலகம், என்ற வள்ளுவர் வாழ்க்கைக்கு இலக்காக நிற்கும் உயர் குணச் செம்மல். தமிழ் மூதறிஞர் திரு.வி.க தமிழ் மக்களின் உள்ளத்தில் நான்கு எழுத்துகளில் நிலையாக வாழ்கின்றார். அவர்காட்டிய பாதையில் செல்லும் இவர் 'மு,வ,' என்ற இரண்டெழுத்துகளில் தமிழ் இளைஞர் களின் உள்ளத்தில் நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டார். இத்தகைய அறிஞர்[1] பண்புடையாளர்—எனது இந் நூலுக்கு அணிந்துரை அருளி ஊக்கியமைக்கு என் உளங் கனிந்த நன்றி என்றும் உரியது."

1. மூன்றாண்டுகட்கு மேல் மதுரைப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி இன்று இவர் இல்லை. 10-10-1974 இல் சிவப்பேறு அடைந்து விட்டார்.

அடுத்து, ஆங்கில முன்னுரை அருளியவர் பேராசிரியர் அ. சீநிவாசராகவன். இவரைப்பற்றிய குறிப்பு: ''கடந்த பதினெட்டு யாண்டுகட்கு மேலாக இப்பேராசிரியரை நான் நன்கு அறிவேன். துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியனாகப் பணியாற்றிய காலத்திலும் அதன்பின்னர் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாகப் பணியாற்றிய காலத்திலும் முறையே ஆசிரியர் மாநாடுகளிலும்[2] பல இலக்கியக் கூட்டங்களிலும் கலந்து பழகியுள்ளேன். ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் தேனூறும் சொற்களால் இனிக்க இனிக்கப் பேசும் நாவீறு படைத்தவர். ஆங்கிலப் பேராசிரியரான இவர் அருந்தமிழை நன்கு கற்றவர். தமிழ் கூறு நல்லுலகம் எங்கும் உலாப் போந்து தமிழ்ப் பணியாற்றுபவர், சில்லாண்டுகள் 'சிந்தனை' என்ற திங்கள் இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய உயர்ந்த சிந்தனையாளர். கம்பன் புகழ் பாடுபவர். பல தமிழ் நூல்களின் ஆசிரியர். தூத்துக்குடியில் கப்பலோட்டிய தமிழன் பெயரால் நிறுவப்பெற்ற கல்லூரியில் அது தோன்றிய நாள் தொட்டு அதன் முதல்வராகவும், பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் (Syndicate) உறுப்பினராகவும் பணியாற்றியவர். என்னுடைய உழைப்பையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்து என் பணியில் என்னை மேன்மேலும் ஊக்குவித்தவர். எவருடனும் எளிமையாகவும் உள்ளங்குழைந்தும் பழகும் உயர்ந்த பண்புடையாளர்.[3] இத்தகைய

2. முதன் முதலாக நாமக் கல்லில் நடைபெற்ற ஓர் மாவட்ட ஆசிரியர் மாநாட்டில் அவ்வூர் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் திரு பி.ஆர். சுப்பிரமணியத்தால் அறிமுகமானவர் 1947-ல் என்பதாக நினைவு.

3. இவர் இன்று (ஏப்ரல் - 1990) இல்லை. பல்லாண்டுகட்கு முன்னரே வைகுந்தவாசியாகி விட்டார்.

பெரியார் இந்நூலுக்கு 'ஆங்கில முன்னுரை' வழங்கி ஆசி கூறியமைக்கு என் உளங்கனிந்த நன்றி.''

அடுத்து இந்நூலுக்குத் 'தமிழ் முன்னுரை' அருளியவர் பேராசிரியர் பு. ரா. புருடோத்தம நாயுடு[4] அவர்கள். இவரைப்பற்றிய குறிப்பு: ''திருவையாறு அரசர் கல்லூரியில் பல்லாண்டுகளாகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி நூற்றுக்கணக்கான மாணாக்கர்கட்கு உயர்ந்த முறையில் பாடம் சொல்லி அவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களைப் புலவர்களாக்கியவர். கடந்த பதினைந்து யாண்டுகட்கு மேலாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையை அணி செய்பவர்கள். தமிழன்னைக்கு இவர் செய்துள்ள தொண்டு பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கது. இவர்களால் தமிழன்னை பெற்ற செல்வம் ஒப்புயர்வற்றது. இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் அருளிச் செய்த 'திருவாய் மொழிக்கு' மணிப்பிரவாள நடையிலுள்ள 'ஈடு' என வழங்கும் முப்பத்தாறாயிரப் படியைத் (நம்பிள்ளை அருளிச் செய்த இது வடக்குத் திருவீதிப் பிள்ளையால் எழுதி வைக்கப்பெற்றது) தமிழாக்கிப் பத்துத் தொகுதிகளாகத்[5] தமிழர்கள் கையில் கிட்டும்படி செய்த மேதை; உண்மைத் தமிழ்த்தொண்டர். தமிழ்மொழி உள்ள அளவும் 'ஈட்டின் தமிழாக்கமும்' நின்று நிலவும் என்பதற்கு ஐயம் இல்லை. இங்ஙனம் திருந்திய உளத்தை மாலடிக்காக்கிச் சேவையைத் தமிழ் மொழிக்காக்கிய பேராசிரியர் நாயுடு அவர்கள் அமைதியான போக்கும் உயர்ந்த நெறியும் உடையவர்கள். 'உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே' என்ற தொல்காப்பி

4. இவரும் இன்றில்லை. பல்லாண்டுகட்கு முன்னரே ஆசாரியன் திருவடி நிழலை அடைந்து விட்டார்.

5. சென்னைப் பல்கலைக் கழக வெளியீடுகள்

யரின் இலக்கணத்திற்கு இலக்கியமாக—எடுத்துக்காட்டாக அமைந்தவர்கள். இத்தகைய பெரியார் என்மீது என்றும் கொண்டுள்ள கெழுதகை அன்பினால் எனது இந்த நூலுக்கு 'முன்னுரை' அருளி ஆசி கூறியதற்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்; இவருக்கு என் நன்றியும் வணக்கமும் உரியவை."

இந்தப் பெரிய நூலை திருவேங்கடவன் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கோவிந்த ராஜுலு நாயுடு அவர்கட்கு,

ஆங்கிலக் கலைஞன்; சீர்த்துணை வேந்தன்;
அன்பெனும் தேன்பொதி உளத்தன்;
வேங்கடே சுவரன் பல்கலைக் கழக
விளக்கினை மேதகத் தூண்டிப்
பாங்குறு கலைமான் முகத்தொளி கண்டோன்;
பண்புறு கோவிந்த ராசன்
ஓங்குநற் புகழோன் திருவடி மலரில்
ஒளிமணம் பெறுகஇந் நூலே.

என்ற பாடலின் மூலமாக அன்புப்படையலாக்கி மகிழ்ந்தேன். இவரைப்பற்றி யான் நூல்முகத்தில் எழுதிய குறிப்பு இது; "அறிவாலும் ஆற்றலாலும் ஒழுக்கத்தாலும் அத்தனைக்கும் மேலாகச் செயலாற்றும் திறனாலும் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள்— தமிழ்கூறு நல்லுலகிற்கு அறிமுகப்பட்டவர்கள்—உயர் திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள். பல்லாண்டுகளாகச் சென்னைச் சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் (பின்னர் சட்டத்துறை இயக்குநராகவும்) பணியாற்றித் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்றிலும் உள்ள பல்லாயிரக் கணக்கான மாணாக்கர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்கள். 'இந்தியன் பீனல்கோட்' என்ற சட்டத்தை இலக்கியம்போல் சுவையாகக் கற்பித்துப் பலரை உயர்ந்த சட்ட நிபுணர்களாக்கியவர்கள்.

மூன்றாண்டுகள் தமிழ் நாட்டுக் (அப்போது சென்னை, ஆந்திரம், கேரளம் அடங்கிய பகுதி) கல்வித்துறை இயக்குநராகப் பணியாற்றித் தம் சீலத்தாலும் உயர்ந்த பண்பாட்டாலும் பல்லாயிரம் ஆசிரியர்களின் உள்ளங் களைக் கவர்ந்தவர்கள். பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் உறுப்பினராகவும் இடை இடையே துணைவேந்தராகவும் இருந்து பணியாற்றி அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சர் ஆ. இலக்குமணசாமி முதலியார் (எ. எல். முதலியார்) அவர்கட்கு உறுதுணையாக நின்று பெரும்புகழ் பெற்றவர் கள். அன்றியும் சென்னைப் பல்கலைக்கழகத் தெலுங்குப் பாடத்திட்ட ஆய்வுக் குழுவிலும், கீழை நாட்டு மொழி களின் பாடத்திட்ட ஆய்வுக் குழுவிலும் உறுப்பினராகவும் தலைவராகவும் ஏறக்குறைய முப்பதாண்டுகளாகப் பணி யாற்றி மக்களுக்குக் கண்போல் விளங்கும் மொழிகளின் தரத்தை உயர்த்தி மொழித் துறையை வளமாக்கி வருப வர்கள். கடந்த பல்லாண்டுகளாகத் "தென்மொழிப் புத்தகப் பொறுப்பாட்சிக் குழு" (Southern Language Book Trust) விற்குத் தலைவராக இருந்து தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் பொது மக்களுக்கெனப் பலநூல்கள் வெளிவரக் காரணமாக இருந்து வருபவர்கள். கடந்த ஒன்பதாண்டுகளாகத் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்து கொண்டு அதன் வளர்ச்சியிலும் பெருமையிலும் அதிகக் கவனம் செலுத்திக் கண்காணித்து வருபவர்கள். இத்தகைய கல்வித்துறை 'ஜாம்பவான்' திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திலும் 'தமிழ்' இடம்பெறச் செய்து அதன் வளர்ச்சியில் 'கடைக்கண் நோக்கைக்' கொண்டவர்கள். ஒருதலைச் சார்பற்ற உள்ளத்தைக் கொண்ட இவர்கள் ஆசியாலும் 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலின்' திருவருளாலும் தமிழ்த்துறை விரிவடைந்து பல தமிழறிஞர்கள் ஒருங்கிருந்து பணியாற்றும் வாய்ப்பு அண்மையில், ஏற்பட வேண்டும். அன்றியும், பல்கலைக்

கழகங்களின் ஆலோசனைக் குழு (Inter-University Board) வின் தலைவராக இருந்து பல்கலைக் கழகக் கல்வியின் தரம் குறையாதிருக்கப் பாடுபடுபவர்கள், ஆந்திர மாநில சட்ட மேலவையில் உறுப்பினராக இருந்து அரசியலிலும் தம் ஆழ்ந்தகன்ற அநுபவத்தை வழங்குபவர்கள். ஆசிரியரின் தோன்றாத் துணையாகவுள்ள இத்தகைய பேரறிஞரின்பால் யான் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் அறிகுறியாக இப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றும் சிறியேன் இந்நூலை அவர்கட்கு அன்புப் படையலாக்கினேன். இவர்கள் ஆசியால் இந்நூல் தமிழ்கூறு நல்லுலகத்தில் பெருமிதத்துடன் உலவும் என்பது என் திடமான நம்பிக்கை''[6] இந்நூலின் மூன்றாவது பதிப்பு அண்மையில் வெளி வந்துளது.

குமிழி —171

## திடீர் அதிர்ச்சி

முக்கிய நிகழ்ச்சியென்று இப்போது திரு. நாயுடுவின் குமிழியிடுகின்றது. ஒரு சமயம் பேராசிரியர் துணைவேந்தர் ஆட்சிக் காலத்தில் ஒருநாள் மாலையில் பணி முடிந்து வீடு திரும்பும் நிலையில் முதல்வர் பதிவாளருக்கு அனுப்பிய கருத்துருவின் (Proposal) நகல் ஒன்று எனக்குக் கிடைத்தது. கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் என் பணி முடியும் தருணம்; துணைவேந்தரின் பதவிக் காலமும் இன்னும் ஒருசில திங்களில் முடியும் நிலை. இக்கருத்துருவின் படி, 'தனியாக விரிவுரையாளராகப் பணியாற்றும் நான் தெலுங்குத் துறையின் கீழோ. வடமொழித் துறையின் கீழோ அமர்த்தப் பெற வேண்டும்' என்பது. எனக்கு இது

6. இவரும் இன்றில்லை. பல ஆண்டுகட்கு முன்னரே இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார்.

சிறிது அதிர்ச்சியைத் தந்தது; மனக்குமுறலை அடக்கிக் கொண்டு தங்கும் அறை வந்து சேர்ந்தேன்; மாலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி அருந்தி மீண்டும் அறைக்குத் திரும்பினேன்; இருப்பு கொள்ளவில்லை. எங்குப் போவது? ஒன்றும் தோன்றவில்லை. கோவிந்த ராஜ சுவாமியைச் சேவிக்கலாம் என்று அவன் சந்நிதியை நாடினேன். நான் திருப்பதிக்கு எதற்காக வந்தேனோ, அத்திட்டமெல்லாம் மறுநாள் முதல் நாசமாகப் போகின்றதே என்று வருந்தினேன். திக்கற்றவருக்கு தெய்வம்தானே துணை?

சேயன் அணியன் என்சிந் தையுள்நின்ற
மாயன் மணிவாள் ஒளிவெண் தரளங்கள்
வேய்விண்(டு) உதிர்வேங் கடமா மலைமேய
ஆயன் அடிஅல்லது மற்றுஅறி யேனே.[1]

என்றும்,

திருவேங் கடம்மேய
எந்தாய்! இனியான் உனைஎன் றும் விடேனே.[2]

என்றும் நினைந்து கொண்டு கோவிந்தன் சந்நிதியை வந்தடைந்தேன். கோவர்த்தன மலையைப் பேர்த்தெடுத்து ஆயர் ஆநிரைகளைக் காத்த கோவிந்தனுக்கு என் இடரைக் களைய முடியாதா, என்ன? அதுவும் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலாம்' ஏழுமலையான் திருவடிவாரத்தில் நிறுவப்பெற்று அவன் பெயராலேயே விளங்கும் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்க்கும் நோக்கத்துடன் வந்திருக்கும் அடியேனுக்கு வரும் இடர்கள், நான் செல்லும் வழியில் கிடக்கும் முட்டுக் கட்டைகள், பிறரால் உண்டாகப் பெறும் தடைகள் இவற்றையெல்லாம் களைவது அவன் பொறுப்பல்லவா? ஆகவே தான், கோவிந்தராஜுலு நாயுடுவின் மனத்தில் அந்தர்யாமியாக வீற்றிருக்கும் கோவிந்தன் இன்று மாலையில் பேராசிரியர் நாயுடுவால்

1. பெரி. திரு. 1.10:8
2. ஷெ 1.10:9

போடப் பெற்ற தடையை நாளை காலையே நீக்குவான் என்ற அதிராத நம்பிக்கையுடன் அவன் சந்நிதியை நாடி வந்தேன்.

*கண்ஆர் கடல்சூழ் இலங்கைக்கு இறைவன்தன்*
*திண்ஆகம் பிளக்கச் சரம்செல உய்த்தாய்!*
*விண்ணோர் தொழும்வேங் கடமா மலைமேய*
*அண்ணா அடியேன் இடரைக் களையாயே.*

*இலங்கைப் பதிக்குஅன்று இறையாய அரக்கர்*
*குலம்கெட்(டு) அவர்மாள கொடிப்புள் திரித்தாய்!*
*வலங்கல் குடுமித் திருவேங் கடம்மேய*
*அலங்கல் துளப முடியாய்! அருளாயே.*

*நீர்ஆர் கடலும் நிலனும் முழுதுண்டு*
*ஏர்ஆ லம்இளந் தளிர்மேல் துயில்எந்தாய்!*
*சீர்ஆர் திருவேங் கடமா மலைமேய*
*ஆரா அமுதே! அடியேற்கு அருளாயே.*

*உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாக;*
*கொண்டாய் குறளாய் நிலம்ஈர் அடியாலே;*
*விண்தோய் சிகரத் திருவேங் கடமாமேய*
*அண்டா! அடியே னுக்குஅருள் புரியாயே.*

*தூண்ஆய் அதனூடு அரியாய் வந்துதோன்றி*
*பேணா அவுணன் உடலம் பிளந்திட்டாய்!*
*சேண்ஆர் திருவேங் கடமா மலைமேய*
*கோள்நா கணையாய்! குறிக்கொள் எனைநீயே.*[3]

என்ற பாசுரங்களை மனம் உருகக் கோவிந்தன் சந்நிதியில் சேவித்தேன்.

நம்பிக்கையுடன் தூய உள்ளத்தினால் எம் பெருமானைப் பிரார்த்தித்தால் அப்பிரார்த்தனை வீண் போகாதுஎன்பது என்இளம்பிராயம் முதற்கொண்டுநானே

3. பெரி திரு. 1.10:(1—5)

வகுத்துக் கொண்ட கொள்கை. சமய நூல்களும் இக் கொள்கையினையே பறைசாற்றுகின்றன என்பதை வயது முதிர்ந்து கற்ற அறிவினால், அநுபவத்தால், இப்போது தெளிகின்றேன். அறிவுநடையாடாத இளம் பருவத்திலேயே தந்தையை இழந்த எனக்கு என் அன்னை ஊட்டிய நம்பிக்கை இது. அக்காலத்தில் காடன், மாடன், கருப்பண்ணசாமி, காமாட்சியம்மன், மதுரைவீரன், பிடாரி, மாரியம்மன் போன்ற சிறுதேவதைகளின் சந்நிதிகட்கு என்னை இட்டுச் சென்று வணங்கச் செய்ததுதான் என்பால் இந்நம்பிக்கையை வளர்த்தது. இப்போது ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு ஆய்ந்தபொழுது,

> நும்இன் கவிகொண்டு நும்மிட்
> டாதெய்வம் ஏத்தினால்
> செம்மின் சுடர்முடி என்திரு
> மாலுக்குச் சேருமே.[4]

என்ற பாசுரத்தால் நான் எக் கடவுளரை வழிபட்டுப் பிரார்த்தித்தாலும் அப்பிரார்த்தனை திருமாலைச் சென்று சேரும் என்பதை அறிகின்றேன். தவிர, துருவனுக்கும் பிரகலாதனுக்கும் அவர்தம் இளம் வயதிலேயே அருளிய பெம்மான் இவனன்றோ?

அன்றிரவு மன அமைதியுடன் உறங்கினேன். அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களையும் நீராடலையும் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு சரியாகக் காலை ஏழரை மணிக்குள் முதல்வர் டாக்டர் பப்பாபதி ராவ் இல்லம் அடைந்தேன். இவர் பலிஜா வகுப்பைச் சேர்ந்தவராதலால் இவரை எவ்வளவுக் கெவ்வளவு தூக்கிவிடவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு தூக்கிவிட்டிருந்தார் துணைவேந்தர். முப்பத்திரண்டு அகவை நிரம்பும் முன்னரே பேராசிரியர்—துறைத் தலைவராக்கினார் (விலங்கியல்); ஒரு சில ஆண்டுகளில்

4. திருவாய். 3.9:6

கல்லூரி முதல்வராகவும் உயர்த்தினார். அக்காலத்தில் வேறு சில துறைகளில் பணியாற்றுவோரையும் டாக்டர் ராவையும் ஒப்பிட்டு ஆய்ந்தால் சிறுவயது என்ற ஒன்றைத் தவிர, தகுதி, திறமை, அடக்கம் முதலிய எல்லாப் பண்பு களிலும் நிகரற்று விளங்கினார் என்றே சொல்லவேண்டும். பொறாமையினாலும் வேறு காழ்ப்பினாலும் பலர் பல்வேறு விதமாகப் பேசினாலும் இவரைப் பொறுத்த மட்டிலும் துணைவேந்தர் தகுதியற்றவருக்குப் பதவி கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு எள்ளளவும் பொருந்தாதது.

காலை ஏழரை மணிக்குள் குளியல் முதலியவற்றை யெல்லாம் முடித்துக் கொண்டு டாக்டர் ராவ் படிப்பில் ஆழ்ந்திருந்தார். என்னைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றார்; முகமலர்ச்சியுடன் உரையாடிக் கொண் டிருந்தார். காஃபி அருந்தச் செய்து வந்த காரணத்தை வினவினார். பெரும்பாலும் என் பதவிக்கு மேற்பட்ட பதவியிலிருப்பவர்களை அடிக்கடிச் சந்தித்து 'குலவி வழிபாடு செய்யும்' பழக்கமுடையவன் அல்லேன். இதை டாக்டர் ராவும் நன்கு அறிந்திருந்தார். இதனால் தனிப் பட்ட மரியாதையுடன் பழகினார். தம்மைப் போல் என்னையும் சிறந்த உழைப்பாளி என்பதையும், அடக்க மான பண்புடையவன் என்பதையும், அகவையிலும் கிட்டத்தட்டப் பத்தாண்டுகள் மூத்தவன் என்பதையும் நன்கு அறிந்தவராதலால் இவ்வாறு பழகுவதற்குக் காரணம் என்பதையும் நான் நன்கு உணர்ந்தேன்.

முன்நாள் மாலையில் பெற்ற கருத்துருவின் காரணம் என்ன என்று வினவினேன். "மிஸ்டர் ரெட்டியார், எனக்கு இதைப்பற்றி ஒன்றுந் தெரியாது. துணைவேந்தர் இப்படி ஓர் ஏற்பாட்டைத் திட்டமிட்டு அனுப்பச் சொன் னார்; அனுப்பினேன். இதற்கு மேல் ஒன்றையும் யான் அறியேன். அவர் திருஉள்ளத்திலிருப்பதை ஆண்டவன் தான் அறிவான். ஆகவே, அவரை நாடி உண்மை

நிலையை அறிந்து கொள்க. மணி 8-30 ஆகிறது, விரைந்து செல்க. குளிக்கப் போய் விடுவார்'' என்று என்னை முடுக்கிவிட்டார்.[5] ஐந்தே மணித்துளிகளில் துணை வேந்தர் இல்லத்தை அடைந்தேன். முதல்வர் குறிப்பிட்ட படியே அவரும் குளியலறைக்குப் போகத் தயாராக இருந்தார். என்னைக் கண்டதும், இன்முகத்துடன் வரவேற்று வந்த காரணத்தை உசாவினார்.

எம்பெருமான்மீது பாரத்தைப் போட்டு துணிவையே துணையாகக் கொண்டு படபடப்புடன் பேசத் தொடங்கி யதைக் கண்டு அவரே அதிர்ந்து போனார். என்னை அவர் பதற்ற நிலையில் கண்டதே இல்லை.

நான் : நேற்று மாலையில் ஒரு கருத்துருபற்றிய குறிப்பு (Memo) ஒன்றைப் பெற்றேன். இதன் அடிப்படைக் காரணம் புரியவில்லை. நான்காண்டுகள் தனியாக இருந்து பணியாற்றியமையால் நான் இழைத்த தவறுகள் என்ன?

துணைவேந்தர் : ஒன்றும் நீங்கள் தவறிழைக்கவில்லை. கல்லூரியிலேயே உங்கட்குத்தான் நல்ல பெயர். வகுப்பு எடுக்கும் நேரங்கள், சிற்றுண்டி நேரம் இவற்றைத் தவிர மீதி நேரங்களில் நீங்கள் நூலகத்தில்தான் இருப்பீர்கள் என்றும்,நேரத்திற்குள் கல்லூரிக்கு வந்து,நேரத்திற்கு முன் திரும்புவதில்லை என்றும் நான் பலர் வாயிலாகக் கேள்வி யுற்றிருக்கின்றேன். ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் ஒரு துறையில் ஓரே ஒரு விரிவுரையாளர் இருக்க நேர்ந்தால், அவரை ஏதாவது பொருத்தமான துறையுடன் சேர்க்கும் மரபு உண்டு. தில்லிப் பல்கலைக் கழகத்திலும் இம்மரபு இருந்து வருகின்றது.

5. இவர் இன்றில்லை. வேற்றூர் சென்று பணி யாற்றினார். அப்பொழுது மனைவியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் நஞ்சுண்டு மாண்டார் என்ற செய்தி பரவியது.

நான் : என் நியமனத்திற்கான பேட்டி சென்னையில் கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலையிலுள்ள தங்கள் இல்லத்தில் நடைபெற்று முடிந்த பின்னர் நான் தங்களை 'நான் தனியாக இருந்து செயற்படுவேனா? வேறு துறை யொன்றில் இணைப்பீர்களா? தமிழ்த் துறையில் எம்.ஏ., பிஎச்.டி முதலான வகுப்புகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வீர்களா? வீடு தருவீர்களா? P. F. உண்டா? அல்லது ஓய்வு ஊதியத் திட்டம் உண்டா?'' என்றெல்லாம் வினாக் களை எழுப்பினேன். தாங்கள் ''எந்தக் குறையும் உங்கட்கு இருக்காது. எல்லா வசதிகளும் செய்துதரப் பெறும். வந்து பணியை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றீர்கள். அவற்றை இப்போது நினைந்து பார்க்க வேண்டுகின்றேன்.

மேலும், நான் தொடர்ந்தேன் : ''ஐயா இப்போது தெலுங்குத் துறைத் தலைவர் இலக்குமிகாந்தம் என்பவர். தெலுங்கு வெறியர். தமிழர்களைக் கண்டால் நஞ்சாகக் கருதுபவர். இவருக்குக் கீழ் நான் பணியாற்ற நேர்ந்தால் எத்தனையோ வீணான துன்பங்களையும் தொல்லை களையும் அநுபவிக்க நேரிடும். தற்செயல் விடுப்பு எடுப் பதற்கே ஆட்சேபணை இருக்கும். நான் துறை வளர்ச்சிக் காகப் பல்வேறு வழிகளில் முயல்வேன்; பல்கலைக் கழகத்திற்குக் கடிதங்கள் எழுத நேரிடும். அவற்றிற் கெல்லாம் தடைகள் போடுவார். ஏதாவது விளக்கம் சொன்னால் 'தமிழர்களே இப்படித்தான். எப்போதும் 'கூச்சல்' போடுவார்கள்'' என்று குற்றப் பத்திரிகை வாசிப்பார். என்மீது அடாவடியாகப் பல்கலைக் கழகத் திற்கு ஏதேனும் புகாரும் எழுதுவார்.

'''தெலுங்கர்' என்று கருதி உங்கட்குப் பதவி தந்த ஆந்திர அரசே இப்போது உங்களைத் 'தமிழர்' என்று குற்றம் சாற்றுகின்றது. என்னைப் பற்றிய புகார் வந்தால் தாங்கள் 'தெலுங்கர்' என்பதை நிலைநாட்ட என்னை

ஏமாளியாக்கி—பலிகிடாவாக்கி (Scape goat) — பிறர் பழி சுமப்பவராக்கி—விடுவீர்கள் என ஐயுறுகின்றேன்.''

து. வே.: அப்படியொன்றும் நிகழ்ந்து விடாது. தைரியமாக இருங்கள்.

நான் : இப்படியெல்லாம் மானம் கெட்டுப் பணியாற்ற ஒப்பினால் நான் மதி கெட்டவனாவேன் என்பது உறுதி. காரைக்குடியில் புகழ் பெற்ற கல்லூரியொன்றில் பேராசிரியர் பதவியைத் துறந்து மூன்று மாதம் ஊதியம் தந்து விடுதலை பெற்று திங்களொன்றுக்கு ரூ. 153/- இழப்பில் நான்காண்டுகளாகப் பணியாற்றி வருகிறேன்; சிறுவர்களின் படிப்பின் பொருட்டுக் குடும்பத்தை விட்டு வந்திருக்கின்றேன். பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொள்ளவும் இசைவு மறுக்கிறீர்கள், ரூ. 153/- இழப்பை ஈடு செய்யவும் ஒருப்படவில்லை. இந்த லட்சணத்தில் தெலுங்குத் துறையில் ஒரு தெலுங்கு வெறியருக்குக் கீழ் பணி புரியுமாறு ஆணையிடுகின்றீர்கள். இப்படியெல்லாம் துயரடைய வேண்டுமென்பது என் தலைவிதி (Fate) போலும்! தாங்கள் நேற்று அனுப்பிய குறிப்பின்படி நான் தெலுங்குத் துறையின்கீழ் இருக்கும்படி வற்புறுத்தினால் நான் பணியிலிருந்து விலகிக் கொள்ளவும் தயாராக உள்ளேன். உங்கள் கருத்தை அறிவதற்காகவே உங்களைச் சந்தித்தேன். நீங்கள் நான்காண்டுகள் நான் இருந்த நிலையில் என்னை வைத்திருக்க ஒருப்படாவிடில் சரியாகப் பத்து மணிக்கு முதல்வரிடம் பணியிலிருந்து விடுதலை தருமாறு விண்ணப்பம் தந்து விடுவேன். இங்குத் தெலுங்குத் துறையின்கீழ் அவமானத்தைப் பொறுத்துக் கொண்டு இருப்பதைவிட வேலை இழப்பால் ஊதியமின்றி மானத்துடன் வாழ்வது சிறந்தது. பின்னர் உங்கள் கட்டளை; என்பேறு.''

இப்படி உருக்கத்துடன் கண்ணீர் கலங்கி வடியும் என் முகத்தைக் கண்டவுடன் மனம் உடைந்து போனார்

துணைவேந்தர். அவர் உள்ளத்தில் அந்தர்யாமியாக இருக்கும் கோவிந்தராஜ சுவாமி கோவிந்தராஜுலு நாடு வாயில் பேசுகின்றார்;

''மிஸ்டர் ரெட்டியார், உங்கள் தூய்மையான உள்ளத்தையும் தியாக உணர்வையும் இப்பொழுது புரிந்து கொண்டேன். மனம் கலங்கற்க. நேற்றைய குறிப்பு நடைமுறைக்கு வராது; அதன் உயிரை இன்று நீக்கிவிட்டோர்கள். மகிழ்ச்சியுடன் திரும்புங்கள். பத்து மணிக்குக் கல்லூரிக்கு வந்து சேருங்கள்'' என்று நெகிழ்ச்சியுடன் விடை கொடுத்தனுப்பினார்.

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே;—உலகு அறியப்
பால்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி[6].

என்ற குமரகுருபர அடிகளின் திருமொழியைச் சிந்தித்த வண்ணம் இல்லம் திரும்பினேன்.

6. நீதிநெறி விளக்கம்—50

## 19. ஆராய்ச்சிக்குப் பதிவுபெற மேற்கொண்ட தந்திரம்

திருப்பூர் திரு கே. ஆர். சுப்பிரமணியம் சொன்ன சோதிடப் பலன் எனக்கு ஊக்கம் அளித்தது. அவர் என் இயல்பை நன்கு அறிந்து சொன்னாரா, அல்லது கோள்களின் நிலைகளைக் கண்டு சொன்னாரா என்பது அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம். நன்கு அநுபவம் மிக்க சோதிடர்கள் தீய பலன்கள் தெரிந்தாலும் சொல்ல மாட்டார்கள். அவற்றை 'வளவளவென்று' மழுப்பிக் குழப்பி விடுவார்கள். ஒரு சோதிடர் தீய பலன்களையே சொல்லக் கூடாது என்பது சோதிடர்களின் மரபு என்று ஓர் இலக்கணத்தையும் குறிப்பிட்டார் திரு. சுப்பிரமணியம். சோதிடம் பார்ப்பவர்கள் ஏதோ கவலையின் காரணத்தால்தான் பார்ப்பார்கள்; எந்தக் கவலையும் நோக்கமும் இல்லாதவர்கள் அப் பக்கத்தில் தலையை வைத்துக்கூடப் படுப்பதில்லை. தீய பலனைச் சொன்னால் அந்தக் கவலை மேன்மேலும் அதிகரிக்கும் என்பது உளவியல் உண்மை. இதனைக் கருதியே சோதிடர்கள் எந்தவிதமான தீய பலன்கள் கோள்களின் நிலையை அனுசரித்து வாய்க்கக் கூடியனவாக இருப்பினும் அவற்றை எடுத்துக்காட்டாது மழுப்பி விடுவார்கள். நான் சிறு வயதில் படித்த,

> வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
> அனைத்துஆய நூலகத்தும் இல்லை; நினைப்பதுஎனக்
> கண்ணுறுவது அல்லால் கவலைப்படேல்நெஞ்சே!மெய்
> விண்உறுவார்க்கு இல்லை; விதி'[1]

1. நல்வழி—37

தி—10

என்ற பாடல் அடிக்கடி நினைவிற்கு வரும். சற்றுவளர்ந்து விவரம் அறிந்த பிறகு, குறிப்பாகச் சமயக் கருத்துகளில் சிறிது தெளிவு ஏற்பட்ட பிறகு 'வினை' என இப்பாடலில் குறிப்பிடப்பட்டிருப்பது 'பிராரத்தம்' (நுகர்வினை) என்பதை அறிய முடிந்தது. பிராரத்தம் அநுபவித்தே தீர வேண்டியது என்பது சமய நூல்கள் உணர்த்தும் உண்மை.

ஆனால் இச்சமயங்களில் குமரகுருபரரின் எல்லாம் நீதிநெறி விளக்கத்தில் படித்த,

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகுஅறியப்
பால்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே சாலும் கரி.[2]

என்ற பாடலும் ஒளிகாட்டும். ஆதலால் பி எச்.டி. பட்டம் பெறுவதில் என் முயற்சியைக் கைவிடவில்லை. மகப்பேறு இல்லாத மங்கையொருத்தி அரசமரத்துப் பிள்ளையாரை விடாது சுற்றி வருவது போல துணைவேந்தரைச் சுற்றிச் சுற்றி வருவதை நிறுத்தவில்லை. அடிக்கடி வழக்கம் போல் காலை ஏழு அல்லது ஏழரை மணிக்கு அவர் திருமாளிகை சென்று அவர் தரிசனம் பெற்று வருவது உண்டு. போகும் போதெல்லாம் என் கோரிக்கையைச் சொல்வதுமில்லை. பேச்சுவாக்கில் இதைச் சொல்லாதும் விடுவதில்லை.

'தமிழ்ப் புலம் (Tamil Faculy) இல்லை; அதனால் ஆய்வு செய்வதற்கு வழி இல்லை' என்று சொல்லும்போது ஏதாவது ஒரு விதி அல்லது மரபைக் காட்டி அவரை மடக்குவேன்.

2, நீதிநெறி விளக்கம்—50

'சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலன் இல்லாத இந்தித் துறையில் இங்குத் தமிழ்த் துறையில் ஒரே ஒரு விரிவுரையாளர் இருப்பது போல் ஒரேஒரு விரிவுரையாளர் இருந்தார். அவர் பெயர் எஸ். சங்கரராஜு நாயுடு. அப் பல்கலைக் கழகத்தில் நேர்முகமாக எம். ஏ. பயிலுவிக்கும் வசதி செய்யப்படாவிட்டாலும் அப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ., (தமிழ்) கற்பிக்கப்பெற்று வருவதால் அப்பல்கலைக் கழகத்தில் எம். ஏ இருப்பதாகப் (தமிழ்ப் புலம் இருப்பதாகப்) பொருள், தமிழ்த்துறைப் பேராசிரியரான திரு. ரா. பி. சேதுபிள்ளையை வழிகாட்டியாகக் கொண்டு எஸ். சங்கரராஜு நாயுடு பிஎச்.டி.க்குப் பதிவு செய்து கொண்டார், திரு. சேதுபிள்ளைக்கு இந்தி தெரியாது; எழுத்து கூட தெரியுமா என்பது ஐயமே. அவருக்குப் பிஎச்.டி. பட்டம் கூட இல்லை. இந் நிலையில் அப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறையில் பி எச்.டிக்குப் பதிவு செய்து கொள்ள ஓர் இந்தி விரிவுரையாளருக்கு வாய்ப்பு அளித்தது.''

''இத்தகைய விதி இப் பல்கலைக் கழகத்திற்குப் பொருந்தாதா? இங்கு நான் தமிழ்த் துறையில் (புலன் இல்லாத) ஒரு தமிழ் விரிவுரையாளராக இருக்கின்றேன். வடமொழியில் புலன் உண்டு—எம்.ஏ., பி எச்.டிக்கு வாய்ப்பு இருப்பதால் துணைப்பேராசிரியர் டாக்டர் வி.வரதாச்சாரியை வழிகாட்டியாகக் கொண்டு நான் ஏன் பிஎச். டிக்குப் பதிவு செய்து கொள்ளக்கூடாது? டாக்டர் வி. வரதாச்சாரி ஒரு வைணவர். நாலாயிரப் பிரபந்தத்தில் அவருக்கு நல்ல பயிற்சியும் உண்டு; இந்தியே தெரியாத ஒரு தமிழ்ப் பேராசிரியர் 'கம்ப ராமாயணம்—துளசி ராமாயணம் : ஓர் ஒப்பீடு' என்ற பொருளை ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டு பிஎச். டி.க்கு ஆய்வு செய்பவருக்கு வழிகாட்டியாக இருக்கும்போது, நாலாயிரத்தில் நன்கு பயிற்சியுள்ள ஒரு வட மொழித் துறைத்

துணைப் பேராசிரியர் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம்' என்ற தலைப்பில் ஆயும் எனக்கு (புலன் இல்லாத தமிழ்த்துறையில் விரிவுரையாளராக இருக்கும் ஒருவருக்கு) ஏன் வழிகாட்டியாக இருக்கக் கூடாது?'' என்றேன்.

அதற்கு அவர் சொன்னார்: ''சேது பிள்ளைக்குத் தமிழ்த் தெரியும்; சங்கரராஜு நாயுடுக்கு இந்தி தெரியும். இருவரும் கலந்து கொண்டு ஒப்பிட்டு ஆய்வு செய்யலாமல்லவா?'' அதனால் தான் இந்த வசதியை அப்பல்கலைக் கழகம் சங்கரராஜு நாயுடுக்கு அளித்தது.''

நான் சொன்னேன்: ''எனக்கும் வழி காட்டியாக இருக்கும் டாக்டர் வி. வரதாச்சாரியாருக்கும் தமிழ் தெரியும். இந்தி தெரியாத ஒரு தமிழ்ப் பேராசிரியர் இந்தி விரிவுரையாளர் ஒருவருக்கு வழிகாட்டியாக இருக்கும் போது தமிழ் நன்கு தெரிந்த ஒரு வடமொழித் துணைப் பேராசிரியர் ஒரு தமிழ் விரிவுரையாளருக்கு வழி காட்டியாக இருக்கலாமல்லவா? அதுவும் வைணவ சம்பிரதாயத்தில் ஊறிய ஒருவர் வைணவ தத்துவம் பற்றிய ஆய்வுப் பொருளை ஆயும் ஒரு தமிழ் விரிவுரையாளருக்கு வழிகாட்டியாக இருப்பது மிகவும் பொருத்தமல்லவா? தவிர, இரண்டு துறை சேர்ந்து ஆராயும் முறைக்கு U.G.C.யும் அதிக ஆதரவு தருகின்ற காலமல்லவா?''

வகையாக மாட்டிக் கொண்டார் துணைவேந்தர். பேச வாய் எழவில்லை, ஏதாவது சொல்ல வேண்டுமே என்று சொன்னார்: ''சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிறையப் பால் உற்பத்தியாகியுள்ளது. சிறிது தண்ணீர் கலப்பு ஏற்பட்டால் ஒன்றும் தெரியாது. இங்குப் பாலே உற்பத்தியாகவில்லை. முதலில் தண்ணீர் ஊற்றினால் என்ன ஆகும்? நீங்களே சொல்லுங்கள்!'' என்று சிரித்துக்

கொண்டே சொல்லி இருவர் வாதத்திற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

துணைவேந்தர் பேச்சில் சதுரர். யார் எந்தச் சலுகையை வேண்டிச் சென்றாலும் அழகாகப் பேசி எதிர் மறை முடிவினையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொள்ளும் படி செய்து விடுவார் சலுகையை நாடிச் சென்றவர்களும் மனநிறைவுடன் திரும்பி விடுவர். என் சம்பளம் பற்றிப் பல முறை கேட்கும் போதெல்லாம் இப்படித்தான் எதை எதையோ பேசி பேச்சை இதிகாசச் சுவையாக்கி நயமாக அனுப்பிவிடுவார்: நான்காண்டுக் காலத்திலும் என் சம்பள நட்டத்தை ஈடுசெய்து கொள்ள முடியாது போய் விட்டது.

ஆகுவ தாகுங் காலைத்
  தழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று
  போற்றினும் போதல் செய்யும்.[3]

என்று கும்பகருணன் வீடணனிடம் பேசும் பேச்சாகக் கம்பநாடனின் வாக்கை நினைந்து கொண்டு வாளா இருந்து விடுவேன்.

இப்போது பிஎச். டி.க்குப் பதிவு செய்து கொள்ள வேண்டிய போதெல்லாம் இதே கதைதான். நான் என்ன செய்ய முடியும்? அவர் ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தர். நான் புலமே இல்லாத தமிழ்த் துறையின் ஒரு விரிவுரையாளர். ஒன்று என் நினைவுக்கு வந்தது. ஜான்சனைப் பற்றி கோல்ட்ஸ்மித் சொல்வாராம்: "அவருடைய (ஜான்சனுடைய) துப்பாக்கி ? குண்டுகளை அனுப்பத் தவறினால் அவர் (ஜான்சன்) துப்பாக்கியைத் திருப்பிக் கொண்டு அதன் அடிக்கட்டையால் அடிப்பார்." என்பதாக (If his pistol misses fire, he would knock at

3. கம்ப. யுத்த. கும்பகருணன் வதை—166

its Butt's end) இதை நினைத்துக் கொண்டேன். இருந் தாலும் நானும் ஏதாவது சொல்ல வேண்டுமல்லவா? "ஐயா, தாங்கள் இவ்வாறெல்லாம் பேசி என்னை மடக்கி பிஎச். டி.க்குப் பதிவு செய்து கொள்ள மறுத்தால் நான் இனி கும்பகோணம் வழியைக் கையாள வேண்டியதுதான்'' என்று சொல்லி வைத்தேன்.

''கும்பகோணம் வழி என்றால்?'' என்று வினவினார். "சென்னையிலிருந்த தங்கட்கு இது நன்கு தெரியும். இப்போது உடனே நினைவிற்கு வராவிடினும் சிந்தித்துப் பார்த்தால் தெரியாமற் போகாது. ஓர் ஆறு திங்களில் இதைத் தங்கட்குச் செயலில் காட்டுவேன்'' என்று சொல்லி நானும் என் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டேன். அவரும் அதனை வற்புறுத்தாமல் அந்த அளவிற்கு விட்டு விட்டார் சிரித்துக் கொண்டே. நானும் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பி விட்டேன். என் வயதிற்கும் புலமைக்கும் அடக்கமான பண்பிற்கும் அவர் மதிப்பு தருபவராதலால் சற்றுத் துணிவுடன், அவரிடம் பழகும் வாய்ப்பு இருந்தது என்பதால் இவ்விதமாகவெல்லாம் அவரிடம் பேச முடிந்தது.

குமிழி—176

# 20. மூன்றாண்டுத் திட்டகால ஊதியம்பெறல்

நான் திருப்பதி வந்து பணியேற்றுக் கொண்டதில் திங்கள் தோறும் ரூ 153/- இழப்பு. இதை நான் 1960— ஏப்பிரலில் சென்னையில் ஆர்ம்ஸ் சாலையிலுள்ள பேராசிரியர் எஸ். கோவிந்த ராஜுலுவின் இல்லத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்குப் குழுவின் முன்னர் நடைபெற்ற பேட்டியில், குறிப்பாக என் நியமனம் பற்றி ஊகிக்க முடிந்ததால், அப்பொழுதே

இழப்பைப் பற்றிய பிரச்சினையை எழுப்பினேன். வாங்கிய ஊதியத்தில் எந்த வித இழப்புமின்றி நியமனம் பெற்றால் நலம் என்பதைக் குறிப்பிட்டேன். நியமனக் குழுவின் கூட்டக் குறிப்பிலேயே ஊதியம் பற்றிய குறிப்பைப் பதிவு செய்திருந்தால் பின்னால் எந்த வித இழப்பின்றி ஊதியம் கிடைத்திருக்கும். விண்ணப்பம் செய்த மனிதர் இதனை வற்புறுத்த முடியாது. பெரும்பாலும் நியமனக் குழு இதனைச் சிந்திப்பதேயில்லை. வேலையை முடிந்ததும் தேநீர் அருந்தி விரைவாக வீடு திரும்புவதையே முக்கிய பணியாகக் கொள்ளுகின்றனர். பதவிக்கு விண்ணப்பிப்பவர்களும் இதனைத் தம் விண்ணப்பதில் குறிப்பிடுவதில்லை. பல்கலைக் கழகமே வரையறுத்த விண்ணப்ப அமைப்பில் இதற்கு இடம் விட்டு வைப்பதில்லை. 'வாங்கிய சம்பளம்' என்ற இடத்தில் வாங்கிய சம்பளத்தையும் சம்பள ஏற்றப்படி முறையுமே (Scale of pay) குறிப்பிட்டு அத்துடன் விட்டுவிடுகின்றனர். கம்பெனி விளம்பரத்தில் 'எதிர்பார்க்கும் ஊதியம்' என்றிருப்பது போல் பல்கலைக் கழக விண்ணப்ப அமைப்பிலும் இப்படி ஓர் இடம் அமைத்திருப்பின் இதுபற்றிய ஓர் எண்ணம் குழுவின் கவனத்தைப் பெற்றிருக்கும். அஃது இல்லாமையால் நியமனக் குழுவும் இதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. 'அப்பாவி' ஆசிரியர்களுக்கு இதனால் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. 'இன்னும் ஏதாவது சொல்ல விரும்பினால்' என்றாவது ஓர் இடம் இருந்தாலாவது அவ்விடத்திலாவது விண்ணப்பிப்போர் சம்பளம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடலாம்; அப்படியும் இடம் இருப்பதில்லை.

நான் திருப்பதிக்கு விண்ணப்பிக்கும்போது எத்தகைய விண்ணப்ப பாரமும் இல்லை. எல்லாத் தகவல்களும் அடங்கிய விண்ணப்பத்தைச் சாதாரண தாளில்தான் தட்டச்சு செய்துதான் அனுப்பினேன். வாங்கின ஊதியத்தைப் பற்றிய குறிப்பு அதில் தந்தேனா?

இல்லையா? என்ற நினைவு இல்லை. ஆனால் பேட்டி நடைபெற்றபோது ஊதியப் பிரச்சினையை எழுப்பினேன். என் நியமனம் பற்றிய குறிப்பு ஊகமேயன்றி தெளிவில்லை யாதலால் அதைப்பற்றி அதிகமாக வற்புறுத்த இயல வில்லை. ''தாங்கள் நியமனம் பெற்று பணியில் சேர்ந்த பிறகு பதிவாளர் இதனைக் கவனிப்பார்'' என்று துணை வேந்தரும் சொல்லிவிட்டார்.

நான் திருப்பதியில் சேர்ந்து சில நாட்களுக்குப் பின் பதிவாளரைச் சந்தித்து முன் வாங்கிய ஊதியத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று வேண்டினேன். அவர் நியமனக் குழுவின் நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டு அதில் இதுபற்றி ஒன்றும் குறிப்பிடப் பெறாததால் துணைவேந்தரைப் பார்க்குமாறுக் கூறி விட்டார். பல தடவை துணைவேந்தரைப் பார்க்கும் போதெல்லாம் நினைவூட்டினேன். ''பார்க்கலாம்'' என்று பதிலிறுத்தாரேயன்றி தரும் குறிப்பு ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை ம்திப்புக்குரிய முதலமைச்சர் காமராசர் ஏதாவது சலுகை யாருக்காவது வழங்க மனமில்லாவிட்டால் இப்படித்தான் ''ஆகட்டும் பார்க் கலாம்'' என்று சொல்லியனுப்பிவிடுவதாகக் கேள்வியுற்ற துண்டு. அந்தக் கொள்கையையே இவரும் கடைப்பிடிப்ப தாக நினைத்துக் கொண்டு வாளா இருந்து விட்டேன். ஆறின கஞ்சி பழங்கஞ்சிதானே!

என்னுடன் வேதியியல் விரிவுரையாளர் ஒருவர் நியமனம் பெற்றார். அவர் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. சி. எஸ். இராமய்யாவுக் வேண்டியவர்; அவர் மூலம் முயன்று ரூ 50/ இரண்டுபடி ஏற்றம் பெற்றார். பதிவாளர், துணைவேந்தர் இவர்களைத் தவிர வேறு எவரையும் பார்க்க விரும்பவில்லை. இவர்களிருவருமே பொறுப்பானவர்கள்; இவர்கள் கவனிக்காவிடில் எனக்கு ஊழ் இல்லைஎன்பது தெளிவு. இதனால்,

எண்ணி ஒருகருமம் யார்க்கும்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லால்; கண் இல்லான்
மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆம்காலம் ஆகும் அவர்க்கும்.[1]

என்ற ஔவைப்பாட்டியின் திருமொழியை எண்ணி அமைதி கொண்டு விடுவேன். பலரைப் பார்ப்பதால் காரியம் கைக்கூடாது; நம் மதிப்புதான் பாதிக்கப்படும் என்ற உண்மையை நன்கு அறிவேன். 'திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை' என்ற உண்மை என் வாழ்நாள் முழுவதும் ஒளி காட்டிவருகின்றது.

பல்கலைக் கழகம் 1954இல் தொடங்கப் பெற்றது. தொடக்கக் காலத்தில் தகுதியற்றவர்கள் பலர் பல்கலைக் கழகத் துறைகளில் இடம் பிடித்துக் கொண்டனர். பல்வேறு பெரியார்களின் பரிந்துரைகளின் விளைவாக இந்நிலை ஏற்பட்டது. இவர்கள் ஒவ்வொரு நிலையிலும் பரிந்துரைகளின் பேரிலேயே பல நன்மைகளைப் பெற்றுக் கொண்டு வந்ததில் வியப்பில்லை. 1962-இல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஊதிய விகிதங்கள் நடைமுறைக்கு வந்தன என்பதாக நினைவு. புதிதாக நியமனம் பெறுபவர்கள் இந்த நன்மைகளை அடைந்தனர். விரிவுரையாளர்கள் கூட பிஎச். டி. பெறவேண்டும் என்ற நிலையை மெதுவாக நடை முறைக்குக் கொணர்ந்தனர். சில விரிவுரையாளர்கள் இத்திட்டத்திற்கு வரத் தகுதியற்றவர்களாக இருந்தும் உள்ளூர் செல்வாக்காலும் சாதியின் பலத்தாலும் சலுகைகள் பெறமுடிந்தது. அவர்கள் பணியாற்றும் துறைகளில் பேராசிரியரோ, துணைப் பேராசிரியரோ இருந்தால் அவர், பதிவாளர், துணைவேந்தர் முதல்வர் அடங்கிய சல்லடைகுழு (Screening Committee) என்ற குழுவொன்றை அமைத்துக் கொண்டு உரிய விரிவுரையாளர்களைப் பேட்டிக்கு வரச்செய்து 250—500 திட்டத்தில் உள்ளவர்

1. நல்வழி—4

களை 400—800 திட்டத்திற்கு மாற்றினர். பஞ்சப்படி இத்திட்டத்தில் ஐக்கியமாயிற்று. இது நடை முறைக்கு வந்த சமயம் பஞ்சப்படிக்கு வகை இல்லை.

தமிழ்த்துறையில் யான் ஒருவனே இருந்த படியால் சல்லடைக்குழு அமைத்துக்கொள்ள வழி இல்லாதிருந்தது. சென்னையிலிருந்து டாக்டர் மு. வரதராசன் போன்ற பேராசிரியரைக் கொண்டு குழு அமைத்துக் கொள்ளலாம். ஆனால் அப்படி ஒருவரைத் தருவித்தால் அவருக்குப் பயணப்படி தரவேண்டுமே. துணைவேந்தர் நாயுடு மிகவும் சிக்கனக்காரர் என்பது நாடறிந்த உண்மை. நான் அவர் சாதியைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால் குழு அமைத்து புதிய சம்பளத்திட்டத்தில் வைத்திருந்திருப்பார். என்னிடம் துணைவேந்தர் நல்ல மதிப்பு வைத்திருந்த போதிலும், பல்கலைக் கழகம் என்ஒருவன்பொருட்டுப்பயணப்படி தந்து சென்னையிலிருந்து ஒருவரைத் தருவிக்க விரும்பவில்லை. "'கம்புக்குக் களை வெட்ட ஆட்கள் வரும்போது தம்பிக்கும் பெண்பார்த்துக் கொள்ளலாம்' என்ற கொள்கையை என் பொருட்டுக் கடைப்பிடிக்க எண்ணியிருந்தார் என்பதை அவர் பேச்சிலிருந்து ஊகித்து அறிந்து கொண்டேன்.

டாக்டர் மு. வரதராசன்தான் பாடதிட்டக்குழுவிலும் (Board of Studies), பல்கலைக் கழகப் பேரவையிலும் (Senate) உறுப்பினராக இருந்தார். எல்லாத் துறைப் பாடத்திட்டக் குழுக்களும் ஒரே நாளில் கூடும் மரபை ஏற்படுத்தியிருந்தார். குழுக் கூட்டங்கள் தொடங்குவதற்கு முன்னர் எல்லாக் குழு உறுப்பினர்களையும் ஓரிடத்தில் கூடச் செய்து அரைமணி நேரம் உரையாற்றுவார் துணை வேந்தர். பாடத்திட்டக் குழு ஆண்டிற்கு ஒருமுறை கூடும். பேரவை ஆண்டிற்கு இரு முறை கூடும். பேரவைக் கூட்டத் திற்கு முதல் நாள் பல்கலைக் கழக ஆட்சிக்குள் அடங்கிய முதல்வர்கள் அடங்கியகூட்டம்நடைபெறும்; துணைவேந்தர் இக்கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி முதல்வர்

களிடம் கலந்து ஆலோசிப்பார். அடுத்த நாள் காலையில் கல்வி ஆலோசனைக்குழு (Academic Council) கூட்டமும் மாலையில் பேரவைக்கூட்டமும் நடைபெறும். இக்கூட்டங் கள் நடைபெறும் அன்று காலையில் டாக்டர் மு. வரதராச னுக்கு ஓய்வு இருப்பினும் துணைவேந்தருக்கு ஓய்வு இருப்ப தில்லை, இதனால் இக்கூட்டங்கள் நடைபெறும் அன்று சல்லடைக் குழுக்கூட்டம் அமைப்பதற்கு வாய்ப்பு இருப்ப தில்லை. ஆகவே, பாடத்திட்டக்குழு கூட்டம் நடைபெறும் நாளன்று பிற்பகலில் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு இது பற்றிய நினைவே இராது. முன் கூட்டியே டாக்டர் மு. வரதராசனுக்கு இதுபற்றி எழுதவேண்டும். துணை வேந்தர், முதல்வர், பதிவாளர் இவர்களையும் முன் கூட்டியே சந்தித்து இக்கூட்டம் அமைப்பது பற்றி நினைவு படுத்தவேண்டும். இந்த மூவர்களையும் செவ்வியறிந்து பார்த்துப் பேசுவதென்பது நடைமுறையில் மிகச் சிரமம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. கண்ணன் கோவர்த்தன மலையை அநாயாசமாகத் தூக்கி நிறுத்தினான் என்பதைக் கதைகளில் படித்திருக்கின்றோம். பெரிய பயில்வான்கள் பெருஞ்சுமையை மிகச்சிரமத்துடன் தூக்குவதை நேரில் பார்த்திருக்கின்றோம். பயில்வான் செயலைவிட இந்தச் சல்லடைக் குழுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வது மிகச் சிரமமாக இருந்தது. எப்படியோ கூட்டமும் கூடியது; எனக்கும் 400—800 ஊதியத்திட்டம் வழங்குவதென்றும் முடிவு செய்யப் பெற்றது, இதனால் நான் வழக்கமாகப் பெற்றுவந்த ஊதியத்தில் பதினொரு ரூபாய் உயர்ந்தது. திங்கள் தோறும் ரூ 153/ இழப்பி லிருந்த எனக்கு ரூ.11/ ஈடுசெய்யப் பெற்றது. இத்திட்டம் வருகிறதென்று நினைத்தே பலமுறை வேண்டியும் ரூ153/க்கு ஈடு செய்யச் சரியாகச் செவி சாய்க்காது இருந்தார் போலும்!

1963-மார்ச்சில் என நினைக்கின்றேன். ஒரு நாள் துணைவேந்தரைச் சந்தித்து இந்தப் புதியத்திட்டத்தாலும்

என் இழப்பு ஈடுசெய்யப் பெறவில்லை என்று விளக்கினேன் அவரும் மனமிரங்கி முதல்வர் மூலம் கடிதம் எழுதுமாறு பணித்தார். அப்போது முதல்வராக இருந்தவர் பேராசிரியர் டி. ஏ. புருஷோத்தம் என்பவர். கடிதத்தைத் தட்டச்சு செய்து ஓர் உறையில் போட்டு அவரிடம் தந்தேன். அவர் அதை வாங்கி வைத்துக் கொண்டார். இப்போது இஃது உறுதியாகக் கவனிக்கப் பெற்று எனக்கு 'விமோசனம்' கிடைக்கும் என்று நம்பினேன். மனநிறைவுடன் கோடை விடுமுறைக்குக் காரைக்குடி சென்றேன்.

கோடை விடுமுறை கழித்து காரைக்குடியிலிருந்து திருப்பதி திரும்பினேன். மிக்க ஆவலுடன் பதிவாளர் அலுவலகத்தில் சம்பள இழப்பு ஈடுசெய்வதுபற்றி நான் தந்த கடிதத்தின் முடிவைப்பற்றி விசாரித்தேன். 'கடிதம் வரவில்லையே' என்று கூறிய செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது. முதல்வரைச் சந்தித்து கடிதம் பற்றிக் கேட்டேன். அவர் அனுப்பிவிட்டதாகக் கூறினார். 'கடிதம் வரவில்லையே' என்று பதிவாளர் அலுவலகத்தில் தெரிவிக்கிறார்கள் என்றேன். 'நான் அனுப்பினது எப்படித் தவறி இருக்கும்?' என்று என்னையே திருப்பி வினவினார். 'ஏழுமலையானுக்கே வெளிச்சம்!' என்று மறுமொழி கூறினேன். அவர் இலேசாக நகைத்தார். ஒப்புக்கு நானும் நகைத்தேன். ஆனால் என் நகைப்புக்குக் கீழ் அடிநாதமாக இருந்த நெஞ்சுக் குமுறலை அவர் எப்படி அறிவார்? என் குமுறல் யாரை என்ன செய்ய முடியும்?

இன்னும் ஓரிரண்டு திங்களில் இவரது பதவி ஒப்பந்தக் காலமும் நிறைவெய்துகின்றது என்பதை அறிந்தேன். இந்த ஏக்கத்தால்தான் என் கடிதத்தை மறந்தாரோ என்று சிந்திக்க முடிந்தது. ''கூழுக்கு உப்பில்லை' என்பார் கவலையும் 'பாலுக்குச் சருக்கரை இல்லை' என்பார் கவலையும் ஒன்றுதானே!'' என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்? என் கவலையை என் முகத்தில் கண்ட முதல்வர் சிறிது

கவலை கொண்டு தன் மேசையின் இழு அறைகளைத் (Drawars) துழாவினார். கடிதம் கிடைக்கவில்லை! முதல்வர் 'மேசைமீது எல்லாம் குவியலாகக் கிடக்கும். இந்தக் குவியலை நான் ஆயட்டுமா?' என்று கேட்க, அவரும் ஒப்புக் கொண்டார். மேசையின்மீது தூசுகள் படிந்த கடிதங்கள் நிறைந்த தட்டம் (Tray) ஒன்று இருந்தது. அக்கடிதங்களை ஒவ்வொன்றாகச் சோதித்தேன்; பலன் இல்லை. தட்டத்தைத் தூக்கினேன்; அதன் அடியில் என் கடிதம் உறையுடன் அழுந்திக் கிடந்தது; அதை எடுத்துக் காட்டினேன். வியப்பு கலந்த வருத்தம் அவர் முகத்தில் நிழலிடுவது தென்பட்டது. அவரும் வாளா இருந்தார். 'இனி இக்கடித்தை அனுப்பவேண்டாம்; என் விதிப்படி ஆகட்டும்?' என்று கூறி அக்கடிதத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டேன். இனி, சம்பளம்பற்றி எந்தவித முயற்சியும் செய்வதில்லை என உறுதி கொண்டேன்.

> ஈட்டும் பொருள்முயற்சி
> எண்இறந்த ஆயினும்ஊழ்
> கூட்டும்படி அன்றிக்
> கூடாவாம்.[2]

என்ற ஔவைப் பாட்டியின் பொன் மொழியைச் சிந்தித்து வாளா இருந்து விட்டேன். இப்படித்தான் என் வாழ்வில் வரவேண்டியது கூடவராமல் போகின்றது.

---

2. நல்வழி—8

# 21. கும்பகோண வழி

பி.எச். டிக்குப் பதிவு பெறுவதற்கு மறுத்த துணைவேந்தரிடம் '''கும்பகோணம் வழியைக் கைவாள வேண்டியதுதான்' என்று சொல்லி வந்து விட்டோமே. இனிது என்ன செய்வது?'' என்று என் மனம் உழன்று கொண்டிருந்தது; தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டும் இருந்தது. 1942-இல் சந்தனையில் எழுந்த இந்த 'டாக்டர் பட்ட ஆசை' இது காறும் என்னைப் படுத்திய பாடுகளையெல்லாம் என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. இதுகாறும் எனக்குத் துணைசெய்தவர் ஒருவரும் இல்லை—காரைக்குடி திரு. சா. கணேசனைத் தவிர. அந்த யானை முகக் கடவுளே இவர் வடிவாக வந்து என்னை ஆட்கொண்டான் என்று நம்புகின்றேன்; இந்த அதிராத நம்பிக்கை என்னைவிட்டு என்றும் அகலாது. 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை' என்று என் வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காண்கின்றேன்; உணர்கின்றேன்.

ஒவ்வொரு நிலையிலும் முயற்சியைக் கைவிடாமல் இருக்க வேண்டும் என்று என்னுள்ளே தோன்றாத் துணையாக வீற்றிருக்கும் அந்த வேங்கடவாணன்தான் நெறிப்படுத்துகின்றான். அவனே யான் உயர்நிலைப் பள்ளியில் படித்த,

> நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
> நிலைகலக்கிக் கீழிடுவானும்—நிலையினும்
> மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
> தலையாகச் செய்வானும் தான்.[1]

1. நாலடியார்—248 (அறிவுடைமை)

என்ற நாலடியார் பாடலை அடிக்கடி நினைவு கூரச் செய்கின்றான். அன்றியும்,

எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார் தாம்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்.[2]

என்ற பழமொழியும் வழிகாட்டுகின்றது. நமக்கு வேண்டிய நன்மையை நாமே தேடிக் கொளல் வேண்டும் என்றல்லவோ இப்பழமொழி ஆற்றுப்படுத்துகின்றது? திருவள்ளுவரும் ஊக்கம் உடைமையே' நிலையான உடைமை; காரணம், அதுவே மனத்தில் உள்ள செல்வ மாகும்.[3] நிலைத்த செல்வமான ஊக்கத்தைத் தம்மிடம் கொண்டவர்கள் பெற்ற நன்மை போய்விட்டதே என்று எப்போதும் வருந்த மாட்டார்கள்; ஊக்கம் கொண்டு உழைத்து மீண்டும் அதை அடையப் பாடுபடுவார்கள்.[4] இவ்வாறு கூறும் வள்ளுவமும் எனக்கு ஒளிகாட்டி வழி காட்டுகின்றது.

கும்பகோணத்திலுள்ள 'ஓமியோபதிமுறை ஆய்வுக் கழகம்' (Institute of Homeopaths) என் நினைவிற்கு வந்தது. அதில் பதிவு செய்து கொண்டு அஞ்சல் வழியாக மருத்துவக் கல்வி பெற்றேன். இத்தேர்வு எழுதுவதில் முறை கடினமாக இல்லை. ஓர் உயர்நிலைப்பள்ளித் தலைமை யாசிரியர்க்கு (மாணக்கரே தலைமையாசிரியரைக் குறிப்பிடலாம்) வினாத்தாள்கள் அனுப்பப் பெறும். அவர் மேற்பார்வையில்தான் தேர்வு எழுத வேண்டும். என்னுடன் உடன் பயின்று சைதையில் ஆசிரியர் பயிற்சி பெற்ற திரு. V. சொக்கலிங்கம்பிள்ளை காரைக்குடி நகராண்மைக் கழக உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக இருந்தார். காரைக்குடி வாழ் நாளில்—பத்தாண்டுகட்குப் பிறகு— ஒரு பதினைந்து

2. பழமொழி—149 (முயற்சி)

3. குறள்—592. 4. ஷை—593.

ஆண்டுகள் அவரிடம் நெருங்கிப் பழகும் பேறு பெற்றிருந்தேன்.[5] என் குடும்பமும் காரைக்குடியில் இருந்தது. ஆதலால் ஒரு டிசம்பர் திங்களில் (1963) தேர்வு எழுதுவதாகக் கருதி அவர் பெயரைக் குறிப்பிட்டுக் கும்பகோணத்திற்கு எழுதினேன் எண்ணியபடி திசம்பரில் தேர்வு எழுதி வெற்றி பெற்றேன். பிப்பிரவரியில் (1964) எனக்கு 'டாக்டர்' பட்டமும் வழங்கப் பெற்றது.

ஒரு நாள் மார்ச்சுத் திங்களில் இப்பட்டத்தை எடுத்துக் கொண்டு வழக்கம்போல் காலை எட்டுமணிக்கு துணைவேந்தர் இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தேன். சான்றிதழை அவர் முன் வைத்து, "இதுதான் கும்பகோணம் வழி. டாக்டர் பட்டம் வாங்கி விட்டேன். உங்கள் பட்டம் இனி எனக்குத் தேவை இல்லை" என்றேன். வியப்பும் வேடிக்கையும் கண்ட அவர், "மிஸ்டர் ரெட்டியார், உங்கள் உண்மையான கவலையையும் ஆர்வத்தையும் உணர்ந்தேன். இப்பொழுதே விண்ணப்பியுங்கள்" என்றார். 1964-இல் வடமொழித் துறையில் பதிவு செய்து கொண்டேன். துணைப் பேராசிரியராக இருந்த டாக்டர். வி. வரதாச்சரியார் வழி காட்டியாக அமைந்தார். ஐந்தாண்டுகள் ஆய்ந்து 1969-இல் பட்டமும் பெற்றேன். பணியாற்றிய தலத்திற்கும், வழிகாட்டியாக அமைந்தவருக்கும் என் மன நிறைவுக்கும் பொருத்தமான "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம்" (Religon and Philosophy of Nalayira Divya Prabandham with Special Refcrence to Nammalvar) என்ற தலைப்பை ஆய்பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். இப்படிப் பல்கலைக் கழக விதிகளை வைத்துக்கொண்டே

5. இப்போது அவர் இல்லை. சுமார் பத்தாண்டுகட்கு முன்னரே அவர் பரமன் அடி சேர்ந்து விட்டார். அவர் இறப்பதற்கு மூன்று திங்கட்கு முன்னர் அவரோடு அளவளாவி மகிழ்ந்தேன்.

''சடுகுடு'' விளையாடி 52-வது வயதில் டாக்டர் பட்டம் வந்தது—'கர்மபுத்திரன்' போல, எந்த நிலையில் எது கிடைத்தாலும்—துன்பத்தைச் சேர்த்துதான் சொல் கின்றேன்—அதுவும் ''அவன் அருள்'' தானே.

ஆழ்வார் பாசுரங்களில் உருகினேன்; கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருத்தலங்களைச் சேவிக்கவேண்டும், தலத்திலேயே அவர் களின் 'அருளிச் செயல்களை' அநுபவிக்கவேண்டும் என்ற பேரவா என்னைச் சூழ்ந்தது. 108 தலங்களில் 102 ஐக் குடும்பத்துடன் சேவிக்கும் பேறு பெற்றேன் சேவிக்கும் பேறு இருந்ததால். திருத்தலப் பயணம் பற்றிய அநுபவங்கள் பின்னர் எழுதும் குமிழிகளில் வெளிவரும். ஏழுமலையானின் திருவருள் எப்படி எப்படி எல்லாம் வெள்ளங் கோத்து என் மீது பாய்கின்றது என்பதை அவ்வப்போது விளக்குவேன்.

'கும்பகோண வழி' என்கின்ற போதே சாரங்கப் பாணிப் பெருமாள் ('சார்ங்கப்பாணிப் பெருமாள்' என்பதே சரி) நினைவுக்கு வருகின்றார். இவர்தாம் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 'ஆராவமுதன்'. இப்பெருமாள்மீது மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருவாய்மொழிதான்[6] நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் பக்திக் கருவூலத்தைக்—ஆராவமுதமாக இனிக்கும் இலக்கியப் பெட்டகத்தைக் காண்பதற்கு ஒரு மந்திரத் திறவுகோலாக அமைந்தது. அலாவுத்தீன் என்ற சிறுவனுக்குக் கிடைத்த 'மந்திர விளக்கு' போல் அமைந்தது என்றும் சொல்லிவைக்கலாம். நாதமுனிகட்கு அமைந்த 'கும்பகோண வழி' என்று வழங்கினாலும் தவறில்லை.

6. திருவாய், 5. 8. 'ஆராவமுதே' என்று தொடங்கு வது.

இதுதான் நாதமுனிகள் கண்ட கும்பகோணப்பெரு வழி: தில்லைச் சிற்றம்பலவன் திருக்கோயில் கொண்டிருக்கும் சிதம்பரத்துக்கருகில், சுமார் 25 கி. மீ. தொலைவில், மேல்திசையில் 'காட்டு மன்னார்கோவில்' என்ற ஒரு வைணவத்திருத்தலம் உண்டு.[7] அதன் பழம்பெரும் பெயர் 'வீர நாராயணபுரம்' என்பது. இத்திருத்தலத்து எம்பெருமான் 'மன்னனார்'. திருக்கோயிலில் கைங்காரியம் செய்து வந்தவர் நாதமுனிகள் என்று வழங்கப்பெறும் 'அரங்கநாத முனிகள்' (9-வது நூற்றாண்டு). ஒரு நாள் மேலை நாட்டிலிருந்து (மைசூரைச் சார்ந்த பகுதி?) வைணவர் இருவர் வந்து மன்னனாரைச் சேவித்து அவர் திருமுன் 'ஆராவமுதே' எனத் தொடங்கும் ஒரு பதிகத்தையும் சேவித்து நிற்கின்றனர். அருகிலிருந்த நாதமுனிகள் இப்பாசுரங்களின் இன்சுவையிலும் அவை நல்கும் பேரின்பத்திலும் ஈடுபட்டவராய் இறுதிப் பாசுரத்தில் 'ஆயிரத்தில் இப்பத்தும்' என வரும் தொடரால் இப்பாசுரங்கள் ஆயிரம் பாசுரங்கள் கொண்ட ஒரு பிரபந்தத்தில் உள்ளவை எனக் கருதி அப்பிரபந்தத்தைப் பற்றி அவர்களை வினவுகின்றார். அவர்கள் இந்தப் பதினொரு பாசுரங்களைத் தவிர தமக்கு வேறு யாதும் தெரியாது என மறுமொழி பகர்கின்றனர். இப்பிரபந்தத்தை எப்படியாவது கண்டறியவேண்டும் எனப் பேரவாக் கொள்ளுகின்றார் நாதமுனிகள். திருக்குடந்தை வருகின்றார், ஆராவமுதனைச் சேவிக்கின்றார், அவன் மீதுள்ள திருவாய்மொழியை அவன் திருச்சந்நிதியின்முன் உளமுருக ஓதி அவன் திருவருள் பெற்று இத்திருவாய்மொழியின் இறுதிப் பாசுரத்தில் வரும் ''குருகூர்ச்சடகோபன்'' என்ற மாற்றொரு தொடரைக்கொண்டு இவை சடகோபன் திருவவதரித்த இப்போது 'ஆழ்வார் திருநகரி' என வழங்கப்பெறும் திருக்குருகூரில் இருத்தல் கூடும் எனக் கருதி அவ்வூருக்குப் புறப்படுகின்றார்.

7. 108 திவ்விய தேசங்களில் இது சேராது.

திருக்குருகூரை அடைந்தவர் அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் பொலிந்து நின்ற பிரானையும் திருப்புளியாழ்வாரையும்[8] சேவித்து அப்பகுதியிலுள்ள சிலரை இப்பிரபந்தம் பற்றி உசாவுகின்றார், அவர்கள் நம்மாழ்வாரின் திருவடி சம்பந்தம் பெற்ற மதுர கவிகளின் மரபில் வந்த பராங்குச தாசரை வினவினால் இதுபற்றித் தெரியக்கூடும் எனக் கூறி அவர்தம் இருப்பிடத்தையும் தெரிவிக்கின்றனர் அப்பராங்குச தாசரிடம் வருகின்றார் நாதமுனிகள்; முனிகள் அவரை வினவ அவர் பதினொரு பாசுரங்களைக் கொண்ட 'கண்ணிநுண் சிறுத்தாம்பு'[9] என்ற பிரபந்தத்தைப் பன்னீராயிரம் முறை ஒன்றிய மனத்துடன் நம்மாழ்வார் திருமுன் உருப்போடுகிறவர்கட்கு ஆழ்வார் தோன்றியருள்வார் என உரைத்தருளுகின்றார். அங்ஙனமே முனிகளும் செய்ய, ஆழ்வார் அவர்முன் தோன்றித் தாம் அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களையும் ஏனைய ஆழ்வார் பாடியருளியவற்றையும் திருமந்திரத்தையும் அட்டாங்கயோகத்தின் நுட்பங்களையும் கூறியருளுகின்றார். பின்னர் தம் பதி திரும்பி, வேதவியாசர் திருமறைகளை நான்காக வகுத்தாற்போல, இவரும் இப்பாசுரங்களை முதலாயிரம் பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற நான்கு பகுதிகளாக வகுக்கின்றார். தம்முடைய மருமக்களாகிய மேலையகத்தார், கீழையகத்தார்என்பவர்களைக்கொண்டு பண் முறைகளையும் அமைக்கின்றார். இந்த நான்கு தொகுதிகளும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற பெயரில் நம்மிடையே வழங்கிவருகின்றது. 'கும்பகோண வழியால்' நாதமுனிகட்கு ஆழ்வார் பாசுரங்கள் கிடைத்

8. வைணவர்கள் நம்மாழ்வார் தங்கியிருந்த புளிய மரத்தையும் 'ஆழ்வார்' என வழங்குதல் மரபு.

9. மதுரகவிகள் நம்மாழ்வார்மீது பாடிய ஒரு சிறுபிரபந்தம். முதலாயிரத்தில்உள்ளது.

தன. இந்தக் 'கும்பகோண வழியால்'தான் எனக்கு 'டாக்டர்' பட்டம் கிடைத்தது. நாதமுனிகள் கண்ட சொத்தாகிய ஆழ்வார் பாசுரங்களில் ஐந்தாண்டுகள் ஆழங்கால்பட்டு இந்த பாசுரங்களைப் பற்றி 'Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar' என்ற ஆங்கில நூல் சுமார் 1000 பக்கத்தில் எழுதிவெளியிடும் பேறும் கிடைத்தது. எம்பெருமானின் கருணைத் திறத்தை நம்மால் அளவிட முடியுமா? தெய்விக அருள் எப்படி நம்மிடம் வரும் என்பதைத் திட்டமிட்டு வரைந்து காட்டமுடியாது.

குமிழி—178

## 22. என் தில்லி மாநகர்ப் பயணம்

துணைவேந்தர் திரு.நாயுடுஅவர்கள் எல்லா மட்டங்களிலும் பணியாற்றுபவர்களில் தனித்திறமையைத் தரம் அறிந்து மதிப்பிடுவதில் சதுரப்பாடுடையவர். 'காக்கைப் பிடிப்பவர்கள்', உழைப்பதுபோல் நடிப்பவர்கள், ஆளைக் கண்டால் கூழைக் கும்பிடு போடுபவர்கள், காணாதபோது புறம் பேசித் திரிபவர்கள் இவர்களை யெல்லாம் அளந்து கண்டவர்.பெரும்பாலும் இவரைஏய்க்க முடியாது. இவருடைய இத்தனித் திறமையை எல்லோரும் நன்கு அறிந்திருந்தனர்; தங்கள் குறைகள் அவருக்குத் தெரிந்துவிடுமோ என்று அச்சத்தோடும் அவருடன் பழகிவந்தனர். ஆனால் 'பலிஜ' வகுப்பைச் சார்ந்தவர் கள் எந்நிலையிலிருந்தாலும் குழைந்து கொஞ்சிப் பழகுவ தைப் பார்த்திருக்கின்றேன். 'செல்லமாக' நுழைந்தவர்

கள் அல்லவா? ஆனால் துணைவேந்தர் திறமையுள்ளவர் கள் எந்த வகுப்பினராயிருந்தாலும் அவர்களுடன் மதிப் புடனும் அன்புடனும் குழைந்து பழகுவார். நானே இதற்கு ஓர் எடுத்துக் காட்டவேன். இல்லத்தில் சந்தித்தால் செவ்வியறிந்து நீண்ட நேரம் பழகுவேன்; அரட்டையும் அடிப்பேன்! அலுவலகத்தில் சந்திக்க நேர்ந்தால் விரைவில் சந்திக்க நேர்ந்த பணியை முடித்துக் கொண்டு நானே கத்தரித்துக் கொண்டு வெளியேறிவிடுவேன்.

1963—ஆகஸ்டுத் திங்களில் சென்னையில் மொழி பெயர்ப்பு பற்றி ஒரு கருத்தரங்கு நடக்க இருந்தது. இதற்கு என் பெயரைப் பரிந்துரைக்க வேண்டுமென்று துணைவேந்தர் நாயுடு அவர்கள் முதல்வர் டாக்டர் டி. ஏ. புருஷோத்தம் அவர்கட்கு ஒரு குறிப்பு அனுப்பி யிருக்க வேண்டும்; அல்லது நேரில் அல்லது தொலைபேசி மூலம் சொல்லியிருக்க வேண்டும். ஆகவே, அவர் என் பேரைப் பரித்துரைத்து அக்கடித நகலை எனக்கும் அனுப்பி வைத்தார். அங்ஙனமே பல்கலைக் கழகமும் என்னை அக்கருத்தரங்கிற்கு நோக்கராக (Observer) அனுப்பி வைத்தது. இது சென்னையில் தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனம், தமிழக அரசு புத்தக வெளியீட்டுக் கழகம் ஆகிய இரண்டின் கூட்டுப் பொறுப்பில் மூன்று நாட்கள் நடைபெற்றது. மயிலாப்பூர் உட்லாண்ட்ஸ் (Woodlands) உணவு விடுதியில் கூட்டங்களை அமைத்திருந் தனர். நான் மயிலை முனிவர் பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லத்தில் தங்கி நாடோறும் கூட்டங்களுக்குப் போய் வந்து கொண்டிருந் தேன் பெரும் புலவராதலால் சாதாரண உலகச் செய்தி களைப் பற்றி உரையாடும்போதுகூட இலக்கிய— இலக்கணக் குறிப்புகள் நடமாடும்; அவற்றால் பெரும் பயன் அடைவேன். நான்கு மொழிக்கும் பேராளர்கள் பங்கு கொண்டனர். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் நோக்கர்களையும் பேராளர்களையும் அனுப்பியிருந்தன.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலிருந்து நான் மட்டிலும்தான் வந்திருந்தேன். தனியார் கல்லூரியில் பணியாற்றினவனாதலால் இத்தகைய தேசிய கருத்தரங்கு களில் கலந்து கொள்ள வாய்ப்பிராது என்றும் எனக்கு இத்தகைய வாய்ப்புகளை நல்கி அநுபவம் பெறச் செய்ய வேண்டும் என்றும் துணைவேந்தர் கருதியிருக்க வேண்டும்.

இந்தக் கருத்தரங்கில் அறிவியல் ஆய்வு பண்பாட்டுத் துறை அமைச்சர் பேராசிரியர் உமாயூன் கபீரும் பல்கலைக் கழக மானிய ஆணையத் தலைவர் டாக்டர் கோதாரி அவர்களும் கலந்து கொண்டனர். சென்னை மாநில நிதி—கல்வி அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். நான் சாதாரண விரிவுரையாளராக இருந்த காலத்தில் துணைவேந்தர் நாயுடு அவர்களிடமும் (1960—64) துணைவேந்தர் டாக்டர் V.C. வாமனராவ் அவர்களிடமும் (1964—1969) பின்னர் நான் துணைப் பேராசிரியராகப் (Reader) பணியாற்றியபோது பேராசிரியர் கே. சச்சிதாநந்த மூர்த்தி அவர்களிடமும் (1975—78)—நான் 24-10-77இல் ஓய்வு பெறும் வரை—பெற்ற மரியாதையும் மதிப்பும் டாக்டர் டி. சகந்நாத ரெட்டி துணைவேந்தராக இருந்த காலத்தில் (1969—1975) பெறவில்லை. முற்குறிப்பிட்ட இருவரும் என்னுடைய உழைப்பையும் புலமையையும் நன்கு மதிப்பீடு செய்து அறிந்தவர்கள். இதனால்தான் நான் வேண்டாமலேயே துணைவேந்தர் நாயுடு அவர்கள் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு என்னை நோக்கராக அனுப்பி வைத்தார்.

இன்னொரு நிகழ்ச்சியும் ஈண்டு நினைவிற்கு வருகின்றது. 1965—ஜனவரியில் 26-வது உலகக் கீழ்த் திசை மாநாட்டுக் கருத்தரங்கு தில்லி மாநகரில் நடைபெற இருந்தது. 1963 செப்டம்பர் முதற்கொண்டே இம்மாநாடு குறித்து விளம்பரங்களும், சுற்றறிக்கைகளும் இந்தியத் துணைக் கண்டம் எங்கும் பரவத் தொடங்கின. இதற்கு

முன் சென்னையில் நடைபெற்ற மொழி பெயர்ப்புக் கருத்தரங்கில் நோக்கராக (Observer) கலந்து கொண்டு ஓரளவுப் பயன் பெற்றவனாதலால், தில்லியில் நடைபெறும் உலகக் கருத்தரங்கில் ஒரு பேராளனாகக் கலந்து கொள்ளவேண்டும் என்றும், ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை மாநாட்டில் திராவிட மொழிப் பகுதியில் படிக்க வேண்டும் என்றும் ஒரு பேரவா என்பால் எழுந்தது. சாதாரண விரிவுரையாளனாக இருந்த என்னைப் பல்கலைக் கழகம் இந்த மாநாட்டுக்கு அனுப்பாமல் புறக்கணிக்கக் கூடும் என்ற ஐயமும் என்பால் எழுந்தது. தெலுங்குத் துறையில் நாலைந்து விரிவுரையாளர்கள் பணியாற்றி வந்தனர். தொடக்கக் காலத்தில் டாக்டர் பட்டம் இல்லாத இலக்குமி நாராயண சாஸ்திரி என்பார் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த செல்வாக்கைக் கொண்டு எப்படியோ துணைவேந்தர் நாயுடு அவர்களிடம் 'நாடகம் ஆடி' துணைப் பேராசிரியராக (Reader) நியமனம் பெற்றிருந்தார். அதே செல்வாக்கையும் நடிப்பையும் கொண்டு பேராசிரியராவதற்கு அரும்பாடுபட்டார்; பருப்பு வேகாததால் பதவியைத் துறந்து வெளியேறினார். பின்னர் தில்லி மாநகரில் திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தாரால் தொடங்கப்பெற்ற கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றுச் சில ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றதை அறிந்தேன். ஒரு சில ஆண்டுகள் திரு. இலக்குமி நாராயண சாஸ்திரியுடன் பழகினதிலிருந்து அவர் தமிழர்களிடம் கொண்டிருந்த வெறுப்பை உணர முடிந்தது. சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றியபோது இப்படித்தான் இருந்தாரோ என்ற ஊகமும் என்பால் அடிக்கடித் தோன்றிற்று. ஆனால் இந்த ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை; ஈடுபடவும் விரும்பவில்லை.

சென்னையில் மாநிலக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய திரு ஜி. என். ரெட்டியும், டாக்டர் பட்டம் பெற்ற திரு கே. மகாதேவ சாஸ்திரியும், தெலுங்குத் துறை

யில் விரிவுரையாளராகச் சேர்ந்திருந்தனர். நான் சேர்ந்த பிறகு சென்னையிலிருந்து திரு T. கோதண்ட ராமய்யா என்பவரும் (வீட்டில் தமிழ் பேசும் தெலுங்கு பிராமணர்) தெலுங்குத் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். இவர் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் பரிந்துரையால் வந்தவராதலால் ஊதியத்தில் இரண்டு உயர்படிகள் பெற்று வர முடிந்தது. தெலுங்குத் துறையில் எம்.ஏ., பி.ஏ.யில் சிறப்புத் தெலுங்கு வகுப்புகளும் நடைபெற்றதால் ஐந்தாறு ஆசிரியர்கட்குப்பணிஇருந்தது. திரு ஜி. என். ரெட்டி மாநிலக் கல்லூரியில் பேராசிரியர் பதவியிலிருந்து அநுபவம் பெற்றிருந்தும் இவரை ஏன் துணைப் பேராசிரியராக்கவில்லை? திரு. இலக்குமி நாராயண சாஸ்திரிக்கு வழங்கப் பெற்ற சலுகை (பிஎச்.டி பட்டம் இல்லாதிருந்தும் துணைப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றமை) ஏன் திரு ஜி. என். ரெட்டிக்கு வழங்கப் பெறவில்லை? டாக்டர் பட்டம் பெற்று தெலுங்கு, மொழியியல் துறைகளில் எம்.ஏ.பட்டங்களும் பெற்றிருந்த திரு.கே.மகாதேவ சாஸ்திரிக்கு ஏன் துணைப் பேராசிரியர் பதவி கிடைக்கவில்லை? டாக்டர் பட்டமே பெற்றிராத மேஜர் பார்த்தசாரதிக்கு உளவியல் துறையில் எப்படித் துணைப் பேராசிரியர் பதவி வந்தது? இப்படி யெல்லாம் என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. இவை யெல்லாம் கவைக்குதவாத செய்திகள்; ஆற்றல் இல்லாத வன் காணும் உண்மைகள். வல்லான் வகுத்ததே வாய்க்கா லாக இருக்கும்போது, அதுவும் ஆறு வரம்பின்றி ஓடும் போது, யார்தான் என்ன செய்ய முடியும்?

துணிவைத் துணையாகக் கொண்டு துணைவேந்தர் நாயுடு அவர்களைச் சந்தித்து தில்லியில் நடைபெற இருக்கும் உலகக் கீழ்த்திசை மாநாட்டிற்கு என்னைப் பேராளனாக அனுப்புமாறு வேண்டினேன். அவர் மறுமொழி சாதகமாக இருக்கும்போலத் தோன்றியதால் எழுத்து மூலம் ஒரு விண்ணப்பமும் அனுப்பினேன். தமிழ்த்

துறையில் என்னையும், தெலுங்குத் துறையில் டாக்டர் கே மகாதேவசாஸ்திரியையும் (நாங்கள் இருவரும் விரிவுரையாளர்கள்), வடமொழித் துறையில், டாக்டர் சிரீகிருஷ்ணசர்மாவும், வரலாற்றுத் துறையில் டாக்டர் இராமாராவையும் பல்கலைக் கழகம் அனுப்பி வைத்தது. நான் 'பண்டைய தமிழ் இலக்கியத்தில் காணும் இந்திய ஒருமைப்பாடு பற்றிய கருத்து' (The Cancept of One India in Anient Tamil Literature) என்ற ஆங்கில ஆய்வுக் கட்டுரையை அழகாகத் தயாரித்துக் கொண்டு சென்றேன். எங்கட்கு இந்திரப் பிரஸ்தம் என்ற பகுதியிலுள்ள பொருளாதார ஆய்வு நிறுவனத்து மாணாக்கர்குரிய உணவு விடுதியில் இடம் அளிக்கப் பெற்றது. உண்டிக்கும் உறையுளுக்குமாக நாளொன்றுக்கு ஒருவர் ஒன்பது ரூபாய் கட்டணமாகத் தரவேண்டும். உறையுள் இலவசமாக இருக்கும் என்று தோன்றியது; அரசே இடம் ஒதுக்கித் தந்தது. ஒன்பது ரூபாயும் உணவுக்கு மட்டிலும் என்பது என் ஊகம். மிகச் சிறந்த முறையில் படுக்கைக் காஃபி, காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, மாலைச் சிற்றுண்டி—காஃபி, இரவு உணவு மிக உயர்ந்த முறையில் அளிக்கப் பெற்றன. டிசம்பர்—ஜனவரி தில்லியில் கடுங்குளிர். உணவு விடுதியில் மின்சார முறையில் வெந்நீர் வசதி இருந்தது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறை கொடுக்கப் பெற்றது.

மாநாடு விஞ்ஞான பவனியில் நடைபெற்றது. நாங்கள் தங்கியிருந்த விடுதிக்கும் மாநாடு நடைபெற்ற இடத்திற்கும் எட்டு கிலோ மீட்டர் தொலைவு. மாநாட்டு வளாகத்தில் தனியார் உணவு விடுதிகள் இருந்தன. நாங்கள் நால்வரும் போக வர ரூ/10- பேசிக்கொண்டு மதிய உணவுக்கு விடுதிக்கு வந்து விடுவோம். ஏனெனில் மாநாட்டுவளாகத்திலுள்ள விடுதிகளில் உணவு நன்றாக இல்லை; ஒரு வேளை உணவுக்குத் தலைக்கு ரூ 6/- வீதம் தர வேண்டியிருந்தது; மாலைச் சிற்றுண்டியை மாநாட்டி

டத்திலேயே சிறிது கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்டோம். மாநாடு ஆறு நாட்கள் நடைபெற்றது. பிரதமர் சவகர்லால் நேரு அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். அப்பொழுதே அவர் உடல் நிலை சரியாக இல்லை. சில திங்களில் அவர் திருநாடு அலங்கரித்து விட்டார் (1964).

மாநாட்டில் Indology என்ற பகுதி (1) Vedic Studies (2) Classical Studies (3) Religioand Philosophy (4) History and Culture (5) Modern Indian Languages and Linguistics என்ற உட்பிரிவுகளாக பிரிக்கப்பெற்று அவற்றுள் History and Culture என்ற பிரிவில் என் கட்டுரை இடம் பெற்றது. இந்த உட்பிரிவிற்குப் பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். இவருடைய சீரிய தலைமையில்தான் என்னுடைய கட்டுரை படிக்கப் பெற்றது. குழுமியிருந்தோர் அனைவரும் என் கட்டுரையைப் பாராட்டிப் பேசினர். என் அரிய நண்பர் டாக்டர் சாலை இளந்திரையன் (தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றிக் கொண்டிருந் தவர்) கட்டுரைப் பொருளைப் பாகுபாடு செய்து எடுத்துக் கூறின முறை, படித்த முறை இவை மிக அற்புதமாக இருந்தது என்று கைகுலுக்கிப் பாராட்டினார்.[1] தலைவர் அவர்களும் கட்டுரையை மெச்சிப் பேசினார்.

இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு சில நாட்களுக்கு முன்னர் புவனேஸ்வரத்தில் அனைத்திந்திய காங்கிரசுமாநாடுநடைபெற்றது.பேரறிஞர்அண்ணா தலைமையில்இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் கோரிய தனித்திராவிடநாட்டுப்பிரிவினைக்கொள்கையைகாங்கிரசு

1. இந்தக்கட்டுரை 1964-ஏப்ரல் —மே யில் Hindu இதழிலும் வெளி வந்து தமிழகத்திலும் அறிஞர் களின் பாராட்டைப்பெற்றது.

மாநாடு வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறை வேற்றிய செய்தி நாளிதழ்களில் முதல் பக்கத்தில் இடம் பெற்றிருந்தது. தில்லி மாநாட்டில் என்னுடைய கட்டுரை அரசியல் சார்பின்றிப் பண்பாட்டின் அடிப்படையிலிருந் தாலும் தனித் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகச் செய்தித் தாள்கள் பறைசாற்றின; முன் பக்கச் செய்தியாகப் பதிப்பித்தன. இக்காலத்தில். காரைக் குடியில் 1960க்கு முன்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் என் மாணாக்கராக இருந்த திரு இசக்கி என்பவர் இந்தியச் செய்தித் துறையில் ஒரு முக்கிய அலுவலராகப் பணி யாற்றிக் கொண்டிருந்தார். என் கட்டுரைப் புகழ் ஆரம் பெற்றது இவர் 'கைங்கர்யம்' என்று என்னால் ஊகிக்க முடிந்தது. நாங்கள் இருவரும் சந்தித்து அளவளாவிய போது திரு. இசக்கியும் இக்கட்டுரையைப் பற்றிப் பாராட்டியதாக நினைவு[2] அப்போது திரு. இசக்கி என்னிடம் இன்னொரு முக்கிய செய்தியையும் தெரிவித் தார்.

அரசியல் வானத்தில் பேரறிஞரின் அண்ணாவின் புகழ் சீறுவாணம்போல் இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவிக் கொண்டிருந்த சமயத்தில் தமிழகத்தைச் சார்ந்த சில பெரிய காங்கிரசுத் தலைவர்கள் சவகர்லால் நேருவிடம் அண்ணாவைப் பற்றிக் குறைத்துப் பேசி அவரது தூய்மையான உள்ளத்தைக் கெடுத்துக் கொண்டி ருந்தார்கள். ஆனால் அண்ணாவின் நாடாளுமன்ற முதல் சொற்பொழிவை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டி ருந்த நேரு அவர்கள் அண்ணாவின் நேர்மை, திறமை, மனத்தூய்மை இவற்றைக் கண்டு மூக்கின்மீது விரலை

2. இந்த ஆங்கிலக்கட்டுரை Studies in Arts and Sciences என்ற தலைப்பில் 85 கட்டுரைகளைத் தாங்கி வந்த என்னுடைய மணிவிழா மலரில் (1978) இடம் பெற்றுள்ளது.

வைத்து "தென்னகத்தில் தி. மு. க. கணக்கிற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய கட்சியாகும். (The D. M. K. is an important party in the south to be reckoned with)" என்று சொல்லிக் கொண்டு இருக்கையை விட்டு எழுந்தார் என்று என்னிடம் தெரிவித்தது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.[3]

என்னுடைய ஆய்வுக்கட்டுரையைப் பற்றிய புகழ் மாலைகள் செய்தித்தாள்களில் முதல் இடம் பெற்றதால் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் (Indian Embassies) என்னுடைய கட்டுரையின்படியொன்று அனுப்பு மாறு கேட்டு எழுதின. மிகச் சிரமப்பட்டு கட்டுரையைப் படி எடுக்கச் செய்து 19 தூதரகங்களுக்கு அனுப்பியதாக நினைவுகூர முடிகின்றது. புகழ் பெற்ற இந்தக் கட்டுரை இன்னொரு முக்கிய பாராட்டு விழா மலர் ஒன்றில் இடம் பெற்றது. 'பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மை யாருக்கு அவர் பிறந்த நாள் பரிசாக ஒரு பாராட்டு மலர் அளிப்பதாக அலகாபாத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வா.வி. கிரி அவர்களைத் தலைமை ஆதரவாளராகக் (Chief Patron) கொண்டு ஒரு தேசிய உயர் மட்டக்குழு அமைக்கப்பெற்றது. (1972 ஏப்ரல்—மே. என்பதாக நினைவு)[4] இந்தக்குழு 1964-இல் டில்லி மாநாட்டில் நான் படித்த கட்டுரையை நினைவில் வைத்துக் கொண்டு, "The Concept of National and Emotional In Integration in

4. Bharat Ratna Indira Gandhi Abinandan Granth Samthi.

3. Anna Speaks—at the Rajya Sabha (1962-66) என்ற நூல் இப்போது மின்துறை அமைச்சராகப் பணியாற்றும் எஸ். இராமச்சந்திரன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்று Orient Lougmans Ltd கம்பெனியாரால் 1975 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

Ancient TamilLiterature" என்ற கட்டுரையை அனுப்பு மாறு கேட்டிருந்தது. நானும் அவர்கள் கேட்டபடி அனுப்பி வைத்தேன். அது அந்தப் பாராட்டுச் சிறப்பு மலரில் (இல்லை, அஃது ஒரு சிறந்த அறிஞர்களின் கட்டுரைத் தொகுதி) இடம் பெற்று மேலும் புகழ் பெற்றது. இன்று வரை (1990—ஏப்பிரல்) அந்தத் தொகுதியை நான் பார்த்த தில்லை. என் அரிய நண்பர் திரு..ப. அரங்கசாமி தலைமைத் தமிழாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, லாலுகுடி, திருச்சி மாவட்டம்) இதைப் படித்து விட்டு "இந்தச் சிறப்புத் தொகுதியில் தமிழகத்து அறிஞராகிய தங்கள் கட்டுரை ஒன்று மட்டிலும் இடம் பெற்று இருப் பதைக் காண என் உள்ளம் குளிர்கின்றது; பெருமகிழ்ச்சி அடைகின்றேன்" என்று 1976 இல் எனக்கு ஒரு கடிதம் எழுதியதாக நினைவு. இக்கட்டுரை Studies in Arts and Sciencss என்ற தலைப்பில் வெளி வந்த (1978) என் மணி விழா மலரில் பல அறிஞர்களின் கட்டுரைகளின் நடுவில் (85 கட்டுரைகளில் ஒன்றாக) இடம் பெற்றுத் திகழ் கின்றது.

குமிழி—179

## 23. 'இல்லற நெறி'-நூல்வெளியீடு

நான் திருச்சிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுது திருச்சி உயர்ந்து அகன்ற மரங்கள் நிறைந்த மேற்கு நிழற்சாலையிலுள்ள மாவட்ட நூல் நிலையத் திற்கு அடிக்கடிச் சென்று பல நூல்களைப் படிப்பது வழக்கம். திரு. வி. க. அவர்களின் நூல்கள் கருத்தாலும் நடைச் சிறப்பாலும் என்னைக் கவர்ந்தன. 'பெண்ணின்

பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னை மிகவும் கவர்ந்தது. இந்நூலை இரண்டு மூன்று முறைப் படித்த தாக நினைவு. இதில் உள்ள கருத்துகள் என்னை மிகவும் கவர்ந்தன.

கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய அனைத்திற்கும் நிலைக்களனாக இருப்பது உடல் என்பதை ஒவ்வொரு வரும் நன்கு அறிவர். அறிவு விளக்கம் மன அமைதியைப் பொறுத்து நிற்பது. உடல் நலம் இனத்தை அறிவிக்கும் உறுப்பின் அகப்புற வளத்தைப் பொறுத்தது, அவ்வுறுப் பிற்குப் பழுது நேரின் வாழ்வே குலைந்து போகும். உடலில் எவ்வுறுப்பிற்கு ஊறு நேரினும் சிகிச்சை செய்து கொள்ள இயலும்; எவ்வுறுப்பினை இழப்பினும் உயிர் வாழ்தல் கூடும். ஆயின் குறிக்கு ஊறு நேரின் அதற்கு எவ்வித சிகிச்சையும் இல்லை. சிகிச்சை செய்து கொள்ளினும் ஊறு நீங்காது; ஊறுடன் உயிர் வாழ்தலும் இயலாது. இந் நுட்பத்தினை நன்கு உணர்ந்தே தமிழ் மக்கள் இவ்வுறுப் பிற்கு 'உயிர்நிலை' என்று பெயர் சூட்டிப் போற்றினர்.

எத்தனையோ புதுமணத் தம்பதிகள் உடற்கூறு தெரி யாது பல வழிகளிலும் கெடுகின்றனர். இருவரும் கெடுவ தற்கு ஆண் மகனே முக்கிய காரணமாகின்றான். தவறான வழிகளில் சென்று பல்வேறு வித இரகசிய நோய் களை அடைகின்றான்; தன் துணைவிக்கும் இதனைத் தொற்றச் செய்து இல்லற வாழ்க்கையின் இன்பத்தையே குலைத்து விடுகின்றான். ஆதலால் ஆடவன் ஆணுறுப்பு பற்றியும் அதனோடு தொடர்புள்ள சிறுசிறு உறுப்புகள் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்; அங்ஙனமே பெண்ணும் கருக்குழியைப் பற்றியும் அதன் சினைகளாக வுள்ள சிறுசிறு உறுப்புகள் பற்றியும் போதிய அளவு அறிவு பெற்றிருத்தல் வேண்டும். இருவரும் தம் உறுப்புகளைப் பற்றிப் போதிய அளவு அறிவு பெறாத காரணத்தால் நன் முறையில் தாம்பத்திய உறவு கொள்ள முடிவதில்லை. இவர்கள் உறுப்புகளின் நிலையை உணராது, அவற்றைப்

பயன்படுத்தும் வழி முறை தெரியாது உழன்று நெறி தவறிய வாழ்வினால் வேறு பல நோய்களையும் தேடிப் பாழ்படுகின்றனர். இப்பொழுது மேனாட்டு அறிஞர்கள் உயிர் நிலைகளின் நுட்பங்களைச் செவ்வனே ஆய்ந்து அவற்றின் இயல்புகளை எவரும் எளிதில் உணரும் முறையில் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். அந்த நுட்பங்களையெல்லாம் மனத்திற்கொண்டு பல அறிவியல் கருத்துகளை விளக்க வேண்டும் என்ற திட்டம் நீண்ட நாட்களாகவே என் மனத்தில் கால் கொண்டிருந்தது. உயிர் நிலையாகவுள்ள உறுப்புகளைப் போற்றிப் புரத்தலும், நெறியுடன் ஆளுதலும் மணமக்களின் முதலாயகடனாகும்; கடமையுமாகும்.

கல்வி முடிந்த பிறகு என்னுடைய ஊழ் ஆசிரிய வாழ்க்கையில் தள்ளியது. துறையூரில் பணியாற்றிய ஒன்பதாண்டுக் காலத்தில் பள்ளியின் பன்முக வளர்ச்சியிலேயே என் காலமெல்லாம் கழிந்தது. தமிழ்ப்படிப்பிலும் கவனம் சென்றதால் என் திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. அறிவியல் துறையில் என் கவனம் செல்லவில்லை. காரைக்குடிப் பத்தாண்டு வாழ்க்கையிலும் முதல் ஏழாண்டுகள் கல்வித்துறை, உளவியல் துறையிலேயே என் கவனம் முழுதும் சென்றது. இதன் விளைவு தமிழ் பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல் என்ற மூன்று நூல்கள் முகிழ்த்தன. காரைக்குடி வாழ்க்கையின் பிற்பகுதியில் என் கவனம் அறிவியல் நோக்கில் சென்றது. விளைவு மானிட உடல் (மொழி பெயர்ப்பு), அணுக்கரு பௌதிகம் (மொழி பெயர்ப்பு), அணுவின் ஆக்கம் (முதல் நூல்) ஆகிய மூன்றும் பிறந்தன. வேறு சில இலக்கிய நூல்களுங் நூற்றுக்கணக்காக(செய்தித் தாள்களில்) வெளியான இலக்கியக் கட்டுரைகளும் தோன்றின.

இந்தக் காலத்தில்தான் திரு.வி.க.வின் ''பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' என்ற நூலை;

மீண்டும் ஒரு முறைப் படித்தேன். ''நமது நாட்டுப் பழமை என்னும் 'உயிர்' மேல் நாட்டுப் புதுமை என்னும் 'உடல்' தாங்கும் முறையில் தமிழ் மொழியில் நூல் பலயாத்தல் காலத்துக்கு இயைந்த தொண்டாகும். அத் தகைய நூல்களின் இன்றியமையாமையைச் சொல்லவும் வேண்டுமோ?'' என்ற திரு.வி.க. அவர்களின் திருக் குறிப்பின் அடிப்படையில் இந்த 'இல்லற நெறி' என்ற நூல் உருவாகியது. இதற்கு முன் பல ஆண்டுகள் உடல் பற்றி அறிந்த அறிவும் இந்நூல் எழுதத் தொடங்கியபிறகு திரட்டிய நூலறிவும் கைகொடுத்து உதவின.

மணப்பொருத்தம். அறிவியலடிப்படையில்திருமணம், இனப்பெருக்கம், குடும்பக் கட்டுப்பாடு, மக்கட்பேறு, திருமணக்கலை, பால் பொருத்தக் கேடுகள், திருமண வாழ்வில் உடல் நலம், மகிழ்வுடைய இல்வாழ்க்கை, மங்கலவாழ்த்து என்ற பத்துத் தலைப்புகளில் எழுதத் திட்டமிட்டு என் எழுத்துப் பணியைத் தொடங்கினேன். ஒவ்வொரு தலைப்பின்கீழும் தொகுத்த செய்திகளை 'வேங்கடத்தான் வேலனுக்கு எழுதும் கடிதங்களாக' அமைத்தேன். கடித உத்தி எழுதுபவர் வாசகர்கட்கு நேரில் சொல்வது போன்ற உணர்வுகளை எழுப்ப வல்லது என்பதை இந்த நூல் உருவான பின்னர்தான் உணர முடிந்தது.

'மணப்பொருத்தம்' என்ற தலைப்பில் ஆறு கடிதங்கள் அமைந்தன. இவற்றில் திருமணத்தின் நோக்கங்கள், இனப் பெருக்கம், Rh-கூறு, நிறக் கோல்கள் (Chromosomes) பற்றிய கருத்துகள், மரபுவழிப் பண்புகள் இறங்கும் முறை, குழந்தை வளர்ச்சியில் மரபுவழியின் பங்கு, உறவினர்களிடையே திருமணம் போன்ற செய்திகள் அடங்கியுள்ளன.

'அறிவியல் அடிப்படையில் திருமணம்' என்ற தலைப்பில் ஆண் உறுப்புகள், பெண் உறுப்புகள் பற்றிய

விரிவான நுட்பமான விளக்கங்கள் அமைந்தன. ஆணின் இனப் பெருக்க மண்டலத்தை விளக்கும் பாங்கில் விந்துப் பாய்மம், விரைகள், விரைப்பைகள், விந்தணுக்கள் வரும் வழி, கலவியில் ஆண் குறியின் நிலையும் பங்கும், விந்தணுக்களின் தன்மை, அவற்றின் ஆயுட்காலம் பிரம்மச் சரியம், ஹார்மோன்கள். பாலறி குறிகள், 'விரையடித்தல், சுரப்பிகளை இடம் பெயர்த்து நடுதல் இன்னோரன்ன செய்திகள் இப்பகுதியில் ஒன்பது கடிதங்களால் விளக்கம் அடைகின்றன.

இனப்பெருக்கம் என்ற பகுதியில் விந்து பாய்ச்சுதல், விந்தணுக்கள் கருப்பையில் நுழைதல், கருவுறுதல்; குழந்தை வளர்ச்சியில் முதல் சூல்நிலை, இளஞ்சூல் நிலை, நஞ்சுக் கொடி, கருப்பையில் மாற்றம், கருப்ப காலச் சின்னங்கள்; கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், போலி கருப்பம், கருப்பகாலம்; கருவுயிர்த்தல் பற்றிய சில கொள்கைகள், பிரசவத்தில் மூன்று நிலைகள், பலவகைப் பிரசவங்கள் மருந்துகளின் தீங்குகள்; கருப்பைக் கோளாறு பிரசவ பாகத்தின் கோளாறு, குழந்தையிடம் கோளாறு, சிசேரியன் செக்ஷன், ஆயுதப் பிரசவம் —பால் சுரத்தல், மாதவிடாய்த் தோற்றம்; ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் சேர்ந்து பிறத்தல், இரட்டைக் குழவிகளின் நிலைகள், குழந்தையின் பாலை அறுதியிடுதல்—போன்ற செய்திகள் இப்பகுதியில் ஆறு கடிதங்களால் விளக்கம் பெறுகின்றன.

குடும்பக் கட்டுப்பாடு என்ற பகுதியில் குடும்பக் கட்டுப்பாடு—விளக்கம், இதன் இன்றியமையாமை, நாகரிகத்தின் அருஞ் செயல், இயற்கைக் கட்டுப்பாடு; பல முறைகள், கூடு பருவம், மாதவிடாய் வட்டத்தில் மூன்று பகுதிகள்; ஆண் முறைகள், பெண் முறைகள் உயிரியல் முறைகள்; இச்செய்திகள் ஐந்து கடிதங்களால் விளக்கப் பெறுகின்றன.

மக்கட்பேறு என்ற பகுதியில் கருத்தரிப்பிற்குரிய காரணங்கள், சூதக. ஒய்வு நடை பெறும் முறைகள், குழந்தைப் பேறு ஏற்படாததற்குக் காரணங்கள். தலயாத்திரை; ஆண் மலடு, பெண் மலடு விளக்கம்; இனப் பெருக்கக் கோளாறுகள்; காலத்திற்கு முன் கருவுயிர்ப்பு, குழந்தை இறந்து பிறத்தல், கருச்சிதைவு—இன்னோரன்ன செய்திகள் நான்கு கடிதங்களில் விளக்கம் பெறுகின்றன.

திருமணக்கலை என்ற பகுதியில் பாலுறவின் பங்கு, திருமணம் தெய்விக உறவு, பாலுறவு பற்றிய யுக்தி முறை; இணைவிழைச்சு, இது நடை பெறும்பொழுது உடலின் நிலை, கன்னிச் சவ்வு கிழிதல், முதல் நாள் புணர்ச்சி; பசியும் பாலுறவும்—மகளின் பாலூக்கம், பெண்ணின் காம உணர்ச்சி, உணர்வு எல்லைகள், ஆணின் பீடிகை, இணைவிழைச்சில் பெண் அசட்டை; சிருங் காரம், உச்ச நிலை உணர்ச்சி, தம்பதிகளிடம் பாலின்ப அளவுகள், இணைவிழைச்சுக் காலம்; புணர்ச்சி நிலைகள், வாத்ஸ்யாயனர் கூறும் நிலைகள், ஆடவர் பெண்டிர் வகைகள், புணர்ச்சி நிலைகளால் தாம்பத்திய உறவு சிறத்தல், புணர்ச்சி நிலையின் பிரிவுகள்—போன்ற செய்திகள் ஐந்து கடிதங்களில் விளக்கம் அடைகின்றன.

பால் பொருத்தக் கேடுகள் என்ற பகுதியில் பாலுற வின் முக்கியத்துவம், சங்கடங்கள் பிறப்புறுப்பு வலிப்பு, காரணங்கள்; இணை விழைச்சில், வலி, பெண்ணிடம் பால் விருப்ப மின்மை, காரணங்கள்; உச்ச நிலை உணர்ச்சி, அடைய முடியாமைக்குக் காரணங்கள், சமாளிக்கும் முறைகள்; ஆண்களிடம் பால் விருப்ப மின்மை, ஆண்மைக் குறைவு, விரைவாக விந்து வெளிப் படுதல், பால்விருப்பமின்மைக்குக் காரணங்கள், பிழை பாடான உறவுமுறைகள்; பாலுறுப்புகள், ஒவ்வாமை போன்ற செய்திகள் ஐந்து கடிதங்களில் விளக்கமாகின்றன.

திருமணவாழ்வில் உடல் நலம் என்ற இப்பகுதியில் நோயற்ற வாழ்வு, திருமண வயது, தம்பதிகளின் வயது வேற்றுமை, முதல் கருப்பம், கருத்தடை; கலவிபுரிதலில் கணக்கு, இருபாலாரின் பால் வேட்கையில் வேற்றுமை, உறவில் தாள இயக்கம், முட்டை பக்குவம்; மாதவிடா யின் பொழுது உறவு, கருப்ப காலத்தில் உறவு, மருத்துவரின் பரிந்துரை, கருவுயிர்த்தலுக்குப்பின் கலவி, சூதக ஓய்வின்பொழுது கலவி சூதக ஓய்விற்குப் பிறகு கலவி; பால் அடக்கத்தின் விளைவுகள், திருமணத்திற்கு முன்னர் உறவுகள், எச்சரிக்கை—குறிக்கோள் திருமணம் இன்னோரன்ன செய்திகள் நான்கு கடிதங்களில் விளக்கப் பெறுகின்றன.

மகிழ்வுடைய இல்வாழ்க்கை என்ற பகுதியில் ஊழ் வலியால் தொடர்பு, தமிழரின் மணவகைகள்—ஆரியரின் எண் வகை மணங்கள், காந்தருவம்—களவு; ஒற்றுமை வேற்றுமை; களவு—கற்பு—விளக்கம்; திருமண முரண் பாடுகள்; ஆளுமைக் கூறுகள், பண்பாட்டுப் பொருத்தப் பாடு; மாமனார் மாமியார் தொல்லைகள்; திருமணத் திற்கு முன்னர் இளைஞர்கள் மேற்கொள்ளவேண்டியவை இரண்டு படிகள்—போன்ற செய்திகள் ஆறு கடிதங்களில் விளக்கம் எய்துகின்றன.

மங்கல வாழ்த்து என்ற இறுதிப் பகுதி மணமக்கள் அன்பு வடிவம் பெறல்; உடல் மனம் அறிவு என்ற முத்திற ஒற்றுமை; ஒழுங்குப்பட்ட இல்லறம் பெண்ணின் பெருமை; வாழ்த்துடன்,

மன்றலின் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்.
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்
—பாலகாண்-கடிமணம்-86

என்ற கம்பன் பாடலால் நிறைவு பெறுகின்றது.

இந்தநூலைக் காரைக்குடியில் ஒரு பதிப்பாளர் ரூ 1000/ முழு உரிமையுடன் தருமாறு கேட்டார்; ஐந்தாண்டுகட்குமேல் சிரமம் பெற்று எழுதிய நூலை அங்ஙனம் தர என் மனம் ஒப்பவில்லை. கழகம் இரண்டு ஆண்டுகள் வைத்திருந்து கைப்படியைத் திருப்பித் தந்து விட்டது. தமிழ்ப் புத்தகாலய அதிபர் திரு கண. முத்தையா ராயல்டி ஒப்பந்தத்தில் வெளியிட்டார். நூல் பெரும் புகழ் பெற்றதற்கு ஐயமில்லை. இந்த நூலுக்கு ஒரு மருத்துவ வல்லுநரிடம் அணிந்துரை பெறவேண்டும் என்பது என் விருப்பம். அப்போது நடுவண் அரசில் நலவாழ்வுத்துறையில் துணை அமைச்சராக இருந்த டாக்டர் T. சௌந்திரம் இராமச்சந்திரன் அவர்களை அணிந்துரை அருளுமாறு வேண்டினேன்; ஒப்புக் கொண்டார். ஆனால் நூலின்படியை அனுப்பினபோது அவர் இலேசான இதய நோயால் தாக்குண்டு மருத்துவமனையில் இருந்தார். அவருடைய தனி அலுவலர் அமைச்சர் மருத்துவமனையில் இருப்பதாகவும் வெளியில் வந்தவுடன் தருவதாகவும் கூறி அதுவரையில் காத்திருக்க முடியுமா? என்று கேட்டு எழுதியிருந்தார். 'அணிந்துரை அவசியம்; காத்திருக்கின்றேன்' என்று கடிதம் எழுதி னேன். 20 நாட்களில் அணிந்துரை வந்து சேர்ந்தது. இந்த நூல் எழுதுவதற்குக் காரணமாக இருந்த வரும் 'பெண்ணின் பெருமை' நூலின் ஆசிரியரும் இளமை முதல் என் மனத்தைக் கவர்ந்தவருமான முத்தர் திரு வி. க. அவர்கட்கு இந்த நூலை,

சாந்தியின் வடிவம்; செந்தமிழ்த் தென்றல்
சால்பினுக் கமைந்ததோர் உரைகல்;
காந்தியின் நெறியால் நல்வழி காட்டி;
கருணையாம் திரைதவழ் வேலை;

பாந்தளை முல்லை அலங்கலாய்ச் செய்யும்
பண்புரு; பெண்மையைப் போற்றும்
ஏந்தலார்-அமரர் திரு. வி.க பதத்தில்
எழில் மணம் பெறுக இந்நூலே.

என்றபாடலால் அன்புப்படையலாக்கி மகிழ்ந்தேன். இஃது என்னுடைய பதினாறாவது வெளியீடாகும் (திசம்பர் — 1964).

குமிழி-180

## 24. தெலுங்கு மாநிலத்தில் தமிழ்ச் சங்கங்கள்

மொழிவழிப்படி மாநிலங்கள் பிரிய வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படி ஆந்திரம், கேரளம், கர்நாடக மாநிலங்கள் சென்னை மாகாணத்திலிருந்து தனித்தனி யாகப் பிரிந்தன. ஐதரபாத், திருவனந்தபுரம், பெங்களூர் என்ற மாநிலத் தலைநகர்களிலும், தில்லியிலும் தமிழர் கள் வாழ்வதால் பல்கலைக் கழக மட்டத்திலும் சில கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் வாழ் கின்றது. தமிழ்மக்களும் பிழைப்பின் நிமித்தம் தம் பிள்ளைகட்குக் கீழ் மட்டத்திலிருந்து மாநில மொழி களையே பயிற்றுவிப்பதால் கீழ்மட்டத்தில் தமிழ் பயில்வது குறைந்து கொண்டே வருகின்றது. இவ்விடங்களில் நாளடைவில் பல்கலைக்கழக மட்டத்தில் ஆராய்ச்சி மட்டத்தில்தான் தமிழ் பிழைத்து வாழும் என்பது என் கணிப்பு.

திருப்பதி தமிழகத்தில் சேர்ந்தது என்பது தமிழர் களின் வாதம். சென்னை ஆந்திரர்கட்கு வேண்டும் என்பது ஆந்திரர்களின் கோரிக்கை. இதைப்பற்றிய பிரச்சினையே இப்போது இல்லை. நம்முடைய அருமை இராஜாஜி தம்முடைய அரசியல் ஞானத்தால் ஒருவிதமாகத் தீர்த்து வைத்துவிட்டார். திருப்பதி வாதத்திற்கிடமாக இருந்தபடியால், திருப்பதி ஆந்திரத்தில் இணைந்த பிறகு திருப்பதியில் வேர்மட்டத்திலேயே தமிழை இல்லாது செய்து விட்டனர். தமிழ்ப் படித்தவர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு உயிர் இருந்து கொண்டே இருக்கும் என்ற கருத்தைக் கொண்டே 'வேரில் வெந்நீர் ஊற்றியதுப் போல்' இந்தப் பிரச்சினையை எப்போதும் எழும்பாது செய்து விட்டனர். தேவஸ்தானக் கலைக் கல்லூரியில் தமிழ் கற்கும் வாய்ப்பு இருந்தது. அதனை அறவே அகற்றிவிட்டனர். கீழ்த்திசைக் கல்லூரி யில் தமிழ் வித்துவான் வகுப்புகள் இருந்து வந்தன, அவற்றையும் இல்லாது ஒழித்தனர். இதை ஒரு குறை யென்றோ குற்றம் என்றோ இப்போது பேசுவதில் பயன் இல்லை; பேசவும் வேண்டியதில்லை. ஆந்திரர்கள் நிலை யில் தமிழர்கள் இருந்திருந்தால் இப்படித்தான் செய்திருப் பார்கள்; இதைவிட வேகமாகவும் இரண்டு பங்கு அதிக மாகவும் செய்திருப்பார்கள். தமிழை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்குத் தேவஸ்தான ஆட்சிப் பொறுப்பிலிருந்த சி. அண்ணாராவுக்குப் பெரும் பங்கு உண்டு என்பதைத் திருப்பதியிலிருந்த காலத்தில் யான் அறிந்தேன்.

பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்கள் (முதல் துணைவேந்தர்) பரந்த நோக்கமுடையவர். தாம் முதல்துணைவேந்தராக நியமிக்கப் பெற்றுப் பணியாற்றி வந்தபோது, இந்த நிலையை நன்கு அறிந்திருந்தார். விரோத மனப்பான்மையோடு செயலாற்றுவதை விட தோழமை கொண்டு செயலாற்றினால் நிறைந்த பயன்

உண்டு என்பதை நன்கு அறிந்தவர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை இருக்க வேண்டும் என்பது இவர்தம் 'நீள்நோக்கு'. புதிய பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் தேவஸ்தானத்திற்குப் பெரும் பங்கு இருந்து வந்தது. பல்கலைக்கழக வளாகத்திற்கு நிலம் தந்தவன் ஏழுமலையான்; தேவஸ்தானக் கல்லூரிக்குச் சொந்தமாக இருந்த கட்டடங்களையெல்லாம் தொடக்கத்தில் உதவியாக இருக்கும் பொருட்டுப் பல்கலைக்கழகத்திற்குஒப்படைத்தான். கலைக்கல்லூரிக்கும் கீழ்த்திசைக் கல்லூரியில் இடம்தரப் பெற்றது, சிறிய இடத்தில் இடநெருக்கடியால் இரண்டு கல்லூரிகளும் தொல்லைப்பட்டதை நான் நன்கு அறிவேன். (1966—70) ஆண்டுப் பகுதியில் இக்கல்லூரிகட்கு எதிரே இருந்த 'உமாமகேஸ்வரரெட்டிகுடியிருப்பில' நான் குடும்பத்துடன் வாழ்ந்தபோதும், (1960—66) ஆண்டுப்பகுதியில் தீர்த்தக் கட்டவீதியில் சிறு அறையில் தனிமையாக வாழ்ந்தபோதும் கலைக் கல்லூரியில் பணியாற்றிய திரு. லீலாகிருஷ்ணன் திரு A. நடராசன் என்ற என் அரிய நண்பர்களைப் பார்க்க அடிக்கடிப் போய்வந்து கொண்டிருந்தபடியால் கல்லூரிகள் இடநெருக்கடியால் சிரமப் பட்டதை நேரில் காணமுடிந்தது. இதனால் கலைக்கல்லூரி முதல்வர் திரு எஸ். நாகய்யாவும் கீழ்த்திசைக் கல்லூரி முதல்வர் திரு சுதர்சன ஆச்சாரியாரும் என் நெருங்கிய நண்பர்களானார்கள்.

ஒரு சமயம்—1962இல் என நினைக்கின்றேன்—பாக்காலாவிலிருந்து[1] திரு G. கோபாலகிருஷ்ணன் என்ற ஒருபள்ளி ஆசிரியர் பாக்காலா இருப்பூர்தி தொழிலாளர்

1. திருப்பதி-காட்டுப்பாடி இரயில்பாதையிலுள்ள ஓர் இரயில் சந்திப்பு; பாக்காலா ஒரு சிறிய ஊர். திருப்பதியிலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவிலுள்ளது.

சங்கத்தில் ஓர் இலக்கியச் சொற்பொழிவிற்கு அழைத்துச் சென்றிருந்தார். சொற்பொழிவு முடிந்து மேற்படி ஆசிரியர் இல்லத்தில் இரவு உணவு கொண்டேன். அப்போது பாக்காலாவில் இருப்பூர்தி நிர்வாகத்தின் கீழ் திரு ஜகதீசன் என்ற ஒரு நலவாழ்வு ஆய்வாளர் (Railway Health Inspector) பணியாற்றி வந்தார்; தமிழ்ப்பற்று மிக்கவராகக் காணப்பட்டார். நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் பாக்காலா இருப்பூர்திச் சந்திப்பில் பணியாற்றினர்; ஊரிலும் சில தமிழர்கள் இருந்தனர். இந்த ஊரில் ஒரு தமிழ்ச் சங்கம் இருப்பது பொருத்தம் எ பது என் மனத்தில் பட்டது. திரு. G. கோபால கிருஷ்ணன். திரு ஜகதீசன், வேறு சில தமிழன்பர்கள், தமிழ் ஆர்வலர்கள் இவர்களிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்தேன் ஏல்லோருமே மிகஉற்சாகமாக இக்கருத்தை வரவேற்றனர். ஓரிரு திங்களில் 'பாக்காலாத்தமிழ்ச் சங்கம்! தோற்றுவிக்கப் பெற்றது; விரைவில் பதிவும் செய்யப் பெற்றது. இஃது எனக்கு ஒரு நல்ல இலக்கிய மேடையாகத் திகழ்ந்தது. இதன் ஆதரவின்கீழ் பல இலக்கிய விழாக்கள் நடைபெற்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவைத் தொழில் விற்பன்னர் திரு. ஜி.டி. நாயுடு அவர்கள், எனது நண்பர் திருச்சி வழக்குரைஞர் திரு. P. அரங்கசாமி ரெட்டியார் இவர்கள் இத்தகைய விழாக்களில் கலந்து சொற் பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்தேன். நானும் வாரமாத நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

சித்தூரிலும் ஒரு தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கு ஏற்பாடு செய்தேன். ஏகாம்பரக் குப்பம் நகரிபோன்ற இடங்களிலுள்ள திரு. பொன்னுசாமி முதலியார் போன்ற செல்வச் செழிப்புள்ள சில செங்குந்த முதலியார்களும், சித்தூர், நகரத்திலுள்ள சில பல தமிழார்வலர்களும் சேர்ந்து 'சித்தூர்த் தமிழ்ச் சங்கம்' என்ற சங்கத்தைத் தோற்றுவித்தனர்; சங்கமும் பதிவு செய்யப் பெற்றது

இதனை உற்சாகமாகச் செயற்படுத்துவதற்குத் தக்க செயலாளர் அமையவில்லை. பல ஆண்டுகள் பெயரளவில் சங்கம் இருந்து கொண்டு வந்தது. ஒரு சமயம் முதலாண்டு விழா—சங்கம் தோன்றிப் பல ஆண்டு கட்குப் பிறகு—மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஜஸ்டிஸ் எம். எம். இஸ்மாயில் (சென்னை உயர்நீதி மன்றம்) இவ்விழாவில் கலந்து கொண்டு பேருரை ஆற்றினார். நானும் இவ்விழாவில் பங்கு கொண்டேன். சங்க உறுப்பினர்கள் யாவரும் பெருவணிகர்கள்; தம் தொழிலை விட்டுச் சில சமயம் கூட சங்க நிகழ்ச்சிகளை ஏற்படுத்த இவர்களால்முடிவதில்லை. ஆதலால்பாக்காலாத் தமிழ்ச்சங்கத்தைப் போல்இது நன்கு செயற் படவில்லை. பாக்காலாத் தமிழ்ச் சங்கத்திலுள்ள வர்கள் இருப்பூர்தித் தொழிலாளர்கள்; அலுவலர்கள். பணி நேரம் போக மாலை—இரவு நேரங்களில் சங்கக் கூட்டங் களுக்கு உடனே ஏற்பாடு செய்து விடுவார்கள். ஆசிரியர் திரு. G. கோபாலகிருஷ்ணன் நல்ல தூண்டுகோலாக இயங்கி அடிக்கடிச் சங்க நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து விடுவார். குன்றையொட்டிய ஓர் இடத்தில் சங்கத்திற்குச் சொந்தமாகவே கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டு விட்டது.

நீண்ட நாட்களாகக் குண்டக்கல்லில் (ஓர் இருப்பூர்திச் சந்திப்பு) 'குண்டக்கல் தமிழ்ச்சங்கம்' நல்ல முறையில் செயற்பட்டு வந்தது. அறிஞர் அண்ணா போன்ற அரசியல் தலைவர்களும் இதில் பங்கு பெற்றிருந்ததைக் கண்டேன். இங்குக் கூட்டங்கள் நடை பெறுவதற்கு பெரிய அரங்கொன்று இருந்தது. சித்தூர்த் தமிழ்ச் சங்கத்திற்கும். பாக்காலாத் தமிழ்ச்சங்கத்திற்கும் இத்தகைய இடவசதி இல்லை. பாக்காலாவில் இருப்பூர்தி நிர்வாகத்தைச் சேர்ந்த ஒரு சிறிய அரங்கு இருந்தது. இதில் பெரிய கூட்டம் நடை பெறமுடியாது. 50 பேர் இதில் கூடலாம்.

இந்த மூன்று சங்கங்களையும் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஏற்படுவதற்குத்

துணை புரியும் மேடைகளாகப் பயன்படுத்திக் கொண்டேன். ஒவ்வோர் இடங்கட்கும் நானே நேரில் சென்று நிர்வாக சபையைக் கூட்டச் செய்தேன். சித்தூர்த் தமிழ்ச் சங்கத்தில் பல இடங்களில் சிதறிக் கிடந்த உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பதில் மிகவும் சிரமப்பட்டேன். ஏனைய இருசங்கங்களிலும் சபைகூட்டுவதில் அதிகச் சிரமம் இல்லை. திருப்பதியிலுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் இன்றியமையாமை குறித்து தீர்மானங்களை நிறைவேற்றச் செய்தேன். மேற்படி தீர்மானங்களைத் தட்டச்சு செய்யச் செய்து கடிதத்துடன் 1. தமிழக அரசு 2. தமிழ்வளர்ச்சி இயக்கம் 3. ஆந்திர அரசு இவர்கட்கு அனுப்பச் செய்தேன். நானே பொறுப்பேற்று அஞ்சலில் சேர்த்தேன்.

திருப்பதியில் இந்தியன் எக்ஸ்பிரஸ்—தினமணி நிருபர் திரு. வரதாச்சாரி[1] இந்து நாளிதழ் நிருபர் திரு. ஏ. அரங்சாமிஅய்யங்கார்[2] ஆகிய இருவரும் என் பணிக்கு மிகவும் உறுதுணையாக அமைந்தனர். மூன்று சங்கங்களில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களின் நகல்களை இவர்களிடம் தந்து மேற்படி இதழ்களில் எடுப்பாக இருக்குமாறு பதிப்பிக்கச் செய்தேன், திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கும் இந்தத் தீர்மானங்களின் நகல்கள் அனுப்பப் பெற்று வேண்டுகோள்கள் விடுக்கப் பெற்றன. குடும்பம் இல்லாது தனியாக இருந்ததால் இத்தகைய பணிகளில் பம்பரம்போல் சுழன்று செயலாற்றினேன் நான் படும் சிரமங்களை எல்லாம் வேங்கடம்மேவியமாலவன்கண்மூடிமௌனியாகப்பார்த்துக் கொண்டுதான் இருந்தான். இப்படிச் சில ஆண்டுகள் (கிட்டத்தட்டப் பத்தாண்டுகள்) சனநாயக முறைகளைக் கடைப் பிடித்துப் பொதுமக்களின் கருத்தை என் பணியில் பிரதிபலிக்கச் செய்தேன்.

1. இந்த அன்பர் இப்போது இல்லை; பல ஆண்டுகட்கு முன்னரே திருநாடு அலங்கரித்து விட்டார்.
2. இவரும் இன்று வைகுந்த. வாசம்.

திருப்பதியிலேயே 'திருப்பதி கலாச்சாரக் கழகம்' என்ற ஓர் அமைப்பினை உருவாகச் செய்தேன். இதில் திரு. A. நடராசன் (திருவேங்கடவன் கலைக் கல்லூரி) திரு வேங்கடாசலம் அய்யர் (ஹோட்டல் பீமா), டாக்டர் வி.வி. சீநிவாசன் (தனிப்பணியாற்றி வந்த புகழ்பெற்ற மருத்துவர்). திரு G. லீலாகிருஷ்ணன் (கோவிந்தராஜ சுவாமி கலைக்கல்லூரி), திரு. தீனதயாளன் இருப்பூர்தி அலுவலர்), திரு. கல்யாணம் அய்யங்கர் திருசொக்கலிங்கம் (ஆடிட்டர்) பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். இதில் திரு A நடராசன் செயலாளர் பொறுப்பேற்றுப் பெரும் பணி ஆற்றினார். இங்கும் நிர்வாக சபை கூடிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் இன்றியமையாமையை வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உரிய இடங்கட்டு அனுப்பப் பெற்றன. இந்தச் சீரிய பணியில் திரு. A, நடராசனின் பங்கு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பெறத் தக்கது. தமிழ்த்துறை பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட பின்னர் நான் பல கருத்தரங்கங்கள் நடைபெறச் செய்தேன். தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்து கருத்தரங்கிற்கு வரும் பெரியோர்கட்கெல்லாம் 'திருப்பதி கலாச்சாரக் கழகம்' வரவேற்பு நல்கிச்சிறப்பித்தது. வரவேற்பு அளிக்கப்பெற்ற காலத்தில் அன்றைய பெருஞ்சேற்று உதியன்சேரலாதன் பாரதப் பெரும் போர் நடை பெற்றபோது இரு சாரார்க்கும் உணவு அளித்தது போல் சேரநாட்டைச் சார்ந்த திருவேங்கடாசலம் அய்யர் (ஹோட்டல் பீமா) விருந்தளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# 25. உருதுத்துறை ஆசிரியரின் மோதல்

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பெயர் அளவுக்கு உள்ள தமிழ்த் துறையும், அடிப்படையில் நன்கு அமைந்த 'உருது, அறபி, பாரசீகப்' மொழித்துறையும் சந்தடியில்லாத துறைகள். தமிழ்த் துறையிலாவது மருந்துக்கென்று ஒரு மாணாக்கனோ, மாணாக்கியோ இருப்பது உண்டு. உருதுத் துறையில் சில ஆண்டுகள் மருந்துக்கும் மாணாக்கர் ஒருவர் கூட இருப்பதில்லை. உருதுத் துறை அனந்தபூருக்குதான் சரியான துறை. முஸ்லீம்கள் அப்பகுதியில்தான் அதிகம்; பல்கலைக் கழக மையம் அங்கு ஏற்பட்ட பிறகாவது உருதுத் துறையை அங்கு மாற்றியிருக்கலாம். பல்கலைக் கழகத்தின் சிந்தனை ஏனோ இதில் செல்லவில்லை.

இடநெருக்கடி காரணமாக அடிக்கடி இட மாற்றம் செய்யப்படும் துறைகள் தமிழ்த் துறையும் உருதுத் துறையுமே ஆகும். காரணம். இரண்டிலும் ஆசிரியர்களும் குறைவு: மாணாக்கர்களும் அரியர். இவர்கட்குத் தனி வகுப்பறைகள் தேவை இல்லை; காரணம், மாணாக்கர்கள் இருப்பதில்லை. ஓரிருவர் இருந்தாலும் இளமாக்காவிலோ, ஆடுகளத்திலுள்ள ஒரு பெரிய மரத்தடி நிழலிலோ அல்லது ஆசிரியர் இருக்கும் அறையிலோ வகுப்புகளை நடத்திக் கொள்ளலாம்.

பேராசிரியர் நயினார் காலமான ஓராண்டுக் காலத்திற் குள்ளே டாக்டர் அகமது துணைப் பேராசிரியரானதையும் இதனால் இவருக்குத் 'தலைக்கனம்' ஏறியதையும் குறிப்

பிட்டேன் அல்லவா? இந்நிலையில் வேறு இடம் இல்லா மையால் என் அறையில் இடம் கொடுக்கப்பெற்றது. நான் நூலகத்திற்குச் சென்றிருந்த பொழுது, டாக்டர் அகமது எனக்குள்ள நாற்காலி, மேசை, இரும்பு பீரோ இவற்றை அறையின் கீழ்க்கோடியில் ஒரு மூலைக்குத் தள்ளிவிட்டுத் தனக்கு நானிருந்த இடத்தில் இடம் போட்டுக் கொண்டார். என் தலைக்குமேல் சுழன்று கொண்டிருந்த 'மின்விசிறி' தான் அவரை இவ்வாறு செய்யத் தூண்டியது என்பது வெளிப்படை. அவ்வறையில் வேறு விசிறி இல்லை. அப்பொழுது அவர் துறையில் வேறு விரிவுரையாளர்கள் நியமனம் பெறவில்லை. நான் நூலகத்திலிருந்து திரும்பி வந்த பொழுது என் அறையில் நடைபெற்றிருந்த 'பிரளயத்தைக்' கண்டேன். மனக்கொந்தளிப்பு கொள் ளாமல் அமைதியாக 'டாக்டர் அகமது, ஏன் இடமாற்றம் செய்தீர்கள்? அதுவும் என் அநுமதியின்றி இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டேன். துணைப் பேராசிரியர் (Reader) என்ற 'தலைக்கனம்' அவரைப் படபடக்கச் செய்தது. 'மிஸ்டர் ரெட்டியார், இந்த அறையை முதல்வர் எனக்கு ஒதுக்கீடு செய்தார்; ஆதலால் இந்த அறை எனக்குரியது. என் விருப்பப்படி நான் இடபகுதி களைப் பிரித்துக் கொண்டேன். உங்கட்கு 'அதோ அந்த மூலையில் இடம் அமைத்துத் தந்துள்ளேன். அங்கு போய் அமர்ந்து கொள்ளுங்கள்' என்றார். 'டாக்டர் அகமது, உங்கட்கு இந்த அறை ஒதுக்கீடு செய்யப்பட்டது உண்மை என்பதை நீங்கள் இங்கு வந்ததிலிருந்தே அறிகின்றேன். ஆனால், நான் இருக்கை அமைத்துக் கொண்டிருந்ததி லிருந்தே எனக்கும் இந்த அறை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தங்கட்குப் புரியவில்லையே. முதலில் இந்த அறை எனக்கு ஒதுக்கப்பட்டுப் பல திங்களாக இதில் இருந்து வருகின்றேன். இன்று இதே அறை உங்கட்கு ஒதுக்கப்பட்டு நீங்கள் வருகின்றீர்கள். இருவருக்கும் இந்த அறை உரியது என்பது தெளிவு. நீங்களும் இந்த அறையில் தங்கலாம் என்பதற்குத் தடை இல்லை. ஆனால் நான்

அமர்ந்திருந்த இடத்தை மாற்றிக் கொள்ளவும் உங்கள் விருப்பப்படி இடப்பகுதிகளை அமைத்துக் கொள்ளலாம் என்று பல்கலைக் கழகமோ முதல்வரோ சொல்ல வில்லையே' என்றேன். அவர் 'அப்படித்தான் செய்வேன், அது என் விருப்பம். நான் துறைத்தலைவர்; துணைப் பேராசிரியர்' என்று அகம்பாவத்துடன் பேசினார்.

'இப்படித்தான் பாகிஸ்தானியரும் சீனரும் இந்தியப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்க வேண்டும்; அடாவடித்தன மாக ஆக்கிரமித்திருக்க வேண்டும்' என்பது எனக்குப் புரிந்தது. ஆற்றின் மேற்பகுதியிலிருந்த ஓநாய் அதன் கீழ்ப் பகுதியிலிருந்த ஓர் ஆட்டுக்குட்டியைப் பார்த்துப் பேசுவது போலிருந்தது. ஆட்டுக்குட்டியும் ஓநாயின் சொரூபத்தை மேற்கொண்டால் இருவரிடையேயும் 'மோதல்' நிகழும். ஆனால் ஆட்டுக்குட்டிக்கு ஓநாயின் சொரூபம் வர முடியாது. 'ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டிதான்; ஓநாய் ஓநாய்தான்.' ஒன்றன் இயல்பு பிறிதொன்றற்கு ஒருகாலும் வரமுடியாது, என் நிலை ஆட்டுக்குட்டியின் நிலை. இப்படித்தான் இப்பரந்த உலகில் அடாவடித் தனங்கள் நடைபெற்று வருகின்றனவோ? இதற்குக் கழுவாய் இருக்காதோ? இப்படியெல்லாம் என் 'சிறு மனம்' சிந்திக்கத் தொடங்கியது.'முட்டாள் நாய்க்கனும் முரட்டுத் துலுக்கனும்' மோதிக் கொண்டால் முட்டாள் நாய்க் கனுக்குத்தான் கஷ்டம் வரும். எது இல்லாவிட்டாலும் அடி விழும் என்பது மட்டிலும் உறுதி. ஆனால், நான் முட்டாள் நாய்க்கன் இல்லை; அறிவும் சிந்தனையுமுள்ள தமிழன்! தமிழ்த்துறையில் பணியாற்றுபவன்.

அப்பொழுது முதல்வராக இருந்தவர் டாக்டர் பம்பாபதிராவ். நேராக அவரிடம் சென்று அடாவடியாக என் அறையில் இடம் மாற்றம் செய்ததையும் உருதுத் துணைப் பேராசிரியர் தன் முனைப்பாகப் பேசுவதையும் எடுத்துக் கூறி மோதலைத் தவிர்ப்பதற்காகவே முறையீடு

செய்வதற்கு வந்திருப்பதாகக் கூறினேன். உடனே அவர் ஏவலர் ஒருவரை அனுப்பி உருதுத் துணைப் பேராசிரியரைக் கூட்டிவரச் சொன்னார். அவரும் வந்தார். என்னையும் முதல்வர் அறையில் பார்த்தபொழுது நிமிர்ந்து நின்ற முகம் இறங்கிப் போயிற்று; சிறிது நடுக்கமும் காணப்பட்டது. தான் செய்த அடாவடித்தனத்திற்கு வருந்தியிருக்க வேண்டும் என்று எனக்குப் படுகின்றது. இல்லாவிடில் இயல்பிலேயே முரட்டுத்தனம் உள்ளவருக்கு இப்படி நடுக்கம் ஏற்படக் காரணம் இல்லை.

முதல்வர் அமரச் சொல்லி புன்முறுவலுடன் ''நான் உங்கட்கு அறை ஏற்பாடு செய்தேன். ஏற்கெனவே மிஸ்டர் ரெட்டியார் அந்த அறையில் இருப்பது தெரியும். வேறு இடம் இல்லாமையாலும், பெரிய அறையாக இருப்பதாலும், இரண்டு துறைகளிலும் மாணாக்கர்கள் அதிகம் இல்லாமையாலும், உங்கட்கு அந்த அறை தந்தேன். நீங்கள் போய் ஏதாவது ஓரிடத்தில் இருக்கை வசதி செய்து கொண்டு அமர்வதுதான் முறை. அப்படியிருக்க மிஸ்டர் ரெட்டியாரின் நாற்காலி மேசை, பீரோ முதலியவற்றை ஏன் அகற்றினீர்கள்?'' என்று கேட்டார்.

இதற்கு உருது ஆசிரியர் சொன்னது; ''நீங்கள் எனக்கு அந்த அறையைத் தந்தீர்கள். ஒரே ஒரு மின்விசிறி தான் அந்த அறையில் பொருத்தப் பெற்றிருந்தது. அதன் கீழ்தான் மிஸ்டர் ரெட்டியாரின் இருக்கை வசதிகள் இருந்தன. எனக்கு மின்விசிறி இல்லாததால் நான் அவருக்கிருந்த வசதிகளை மாற்றிப் போட்டு விட்டு எனக்கு அந்த இடத்தில் வசதிகள் செய்து கொண்டேன். நான் துணைப் பேராசிரியர் (Reader); உருதுத்துறைத் தலைவர். மிஸ்டர் ரெட்டியார் சாதாரண விரிவுரையாளர்தானே என்று நினைத்து இந்த மாற்றங்களைச் செய்து கொண்டேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்.

முதல்வர், "டாக்டர் அகமது, ஏற்கெனவே மிஸ்டர் ரெட்டியார் அங்கிருந்தார். ஒரே மின் விசிறியிருந்தமையால் அதன்கீழ்த் தம் இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொண்டார். நீங்கள் அதே அறையில் பிறிதோர் இடத்தில் அமர்வதுதான் முறை. மின் விசிறியில்லாமையை என் கவனத்திற்குக் கொணர்ந்து விசிறிக்கு ஏற்பாடு செய்து கொள்வதுதான் முறை. நானும் ஏற்பாடு செய்து தருவேன். நீங்கள் நடந்து கொண்டது தான்றோன்றித் தனம் (High-handed) ஆகும்" என்று கூறி, "உடனே நீங்கள் பழைய படியே அவர் இருந்த இடத்திலேயே இருக்கை வசதிகளைத் திரும்பவும் செய்து கொடுக்க வேண்டும். நீங்கள் ஏதாவது ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அந்த இடத்தில் உங்கட்கு வசதிகளைச் செய்து கொள்ள வேண்டும்" என்று சற்றுக் கடுமையாகவே சொல்லிவிட்டார்.

மேலும் தொடர்ந்து, "துணைப்பேராசிரியருக்குக் காற்று வேண்டும்; விரிவுரையாளருக்குக் காற்று வேண்டா என்று நினைப்பது தவறு என்பதை உணர்கின்றீர்களா? உங்கட்கு எந்த இடத்தில் அமர்வது என்று தெரியாவிட்டால் நான் நேரில் வந்து காட்டட்டுமா? அல்லது இடைப்படம் (Plan) ஒன்று வரைந்து உங்கள் இருப்பிடத்தைக் குறித்துக் காட்டட்டுமா? அல்லது அலுவலக மேலாளரை அனுப்பி உங்கட்கு ஆற்றுப்படுத்தட்டுமா?" என்று மேலும் கடுமையாகவே பேசினார். "டாக்டர் அகமது, நீங்கள் துறைத்தலைவர் என்ற தலைக்கனத்துடன் செயற்பட்டு மிஸ்டர் ரெட்டியாருக்குத் தீங்கு ஏதாவது விளைவித்தால் நான் உங்கள் தலைமைப் பொறுப்பை மாற்றி நானே உங்கள் துறைத் தலைமைப் பொறுப்பை மேற்கொண்டு விடுவேன். நீங்கள் துணைப் பேராசிரியரேயன்றி பேராசிரியர் அல்லர் என்பது நினைவிருக்கட்டும். இதனால் நீங்கள் பணித்துறை சார்பாக (Ex-officio) பல்கலைக்கழகப் பேரவை

உறுப்பினர், கல்விமன்ற உறுப்பினர் போன்ற சலுகைகளை யெல்லாம் இழக்க நேரிடும் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்'' என்றும் எச்சரித்தார்.

டாக்டர் அகமதுவின் முகத்தில் ஈயாடவில்லை. முகம் சுருங்கி மௌனியானார்; பேச்சு எழவில்லை. பின்னர் அறைக்குச் சென்று என் இருக்கை வசதிகளைப் பழைய படியே மாற்றியமைத்தார். எனக்குப் புதிதாகப் போட்ட இடத்திலேயே தனக்குப் போட்டுக் கொண்டார்,

டாக்டர் அகமது ஒரு விநோதமான மனிதர்; வெகுளி. நல்லவர்தான்; வல்லவர் இல்லை. புலமை போதாது என்று பேராசிரியர் நயினார் சொல்லக் கேட்டிருக்கின்றேன். பேராசிரியர் நயினார் வருவதற்கு முன் ஒரு சமயம் பலர் ஓரிடத்தில் ஏதோ காரணமாக நின்று கொண்டிருந்த பொழுது துணைவேந்தர் நாயுடு அவர்களும் அங்கிருந்தார். துணைவேந்தர் எல்லோரிடமும் எளிமையாகப் பழகுவார். 'தான் துணைவேந்தர்' என்ற தன்முனைப்பே இல்லாதவர்; தலைக்கனம் இவரிடம் இருந்ததை நான் பார்த்ததில்லை. இப்படி எல்லோரிடமும் புரையறக் கலந்து பழகினமையால் ஒவ்வொருவரின் திறமைகளையும், உணர்வுகளையும், தனிச்சிறப்புப் பண்புகளையும் (Idio eyncrasy) நன்கு அறிந்து வைத்திருந்தவர். திடீரென்று டாக்டர் அகமதுவைக் கேட்டார்: ''பி. ஏ. பி. எஸ் சி. வகுப்புகளில் மாணவர்கள் இல்லை என்பது எனக்குத் தெரியும். எம். ஏ. யிலாவது ஓரிருவர் சேர்ந்துள்ளனரா?'' என்று. டாக்டர் அகமது அளித்த மறுமொழி: ''ஒரே ஒரு மாணவி சேர்ந்திருக்கின்றாள். நான் அவளால் திருப்தி அடைகின்றேன் (I am satisfied with her).'' என்பதாக. எல்லோரும் நகைத்தனர். ஏன் நகைத்தனர்? என்று கூட அவரால் அறிந்து கொள்ளக் கூடவில்லை. துணைவேந் தரும் சிரித்துக்கொண்டு வாளா இருந்து விட்டார். பின்னர் டாக்டர் அகமது அங்கிருந்த ஒரு சிலரைத் தனித் தனியாக

சிரித்ததன் காரணத்தை வினவ, அவர்கள் அவர் கையாண்ட ஆங்கில மொழியிலுள்ள குறையை எடுத்துக் காட்டி அதன் விபரீதப் பொருளை விளக்கினதாக அறிந்தேன். அதன் பிறகு அவர் பேராசிரியராகவும் உயர்த்தப் பெற்றார். மூன்று விரிவுரையாளர்களும் வந்து சேர்ந்தனர். மூன்று மொழிகள் உள்ள துறையாதலால், உருதுக்கு ஒருவரும் அறபிக்கு ஒருவரும், பாரசீகத்திற்கு ஒருவருமா நியமனப் பெற்றனர்.

யான் திருப்பதியில் பணியேற்ற இரண்டாண்டுக் காலத்தில் பி. ஏ., பி. எஸ்சி வகுப்புகளில் இருமாணாக்கர்கள் சேர்ந்ததாக நினைவு. அப்பொழுது உருது படிப்பதற்கும் ஒருவர் சேர்ந்திருந்தார். ஆனால் உருதுத் துறையில் இரண்டு ஆசிரியர்கள் இருந்தனர். டாக்டர் அகமது அத்துறையில் நிரந்தரமானவர். துணைவேந்தர் நாயுடு அவர்கள் சென்னையிலிருந்தவராதலால் யாராவது 58 அகவையில் ஓய்வு பெற்றவர் கிடைத்தால் அவர் தயவில் உருது, அறபி மொழிகளுக்கு இரண்டாண்டு தற்காலிகமாக நியமனம் பெற்று வந்து சேர்ந்துவிடுவர். பெரும்பாலும் இவர்கள் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த கல்லூரியாசிரியர்களாகவே இருப்பர். பல இடங்களில் கல்லூரி முதல்வராக இருந்தவர் ஒருவர் கூட வந்து சேர்ந்தார். அவர் பெயர் திரு. ஃபஸ்லுல்லா என்பது. பேராசிரியர் நயினாரைப் போலவே இவரும் என்னுடன் நன்கு பழகுவார். இரண்டாண்டுகள் விரிவுரையாளராகவும் மூன்றாண்டுகள் பல்கலைக்கழக மானிய நிறுவனத்தின் கீழ் உதவி பெற்றும் ஆய்வாளராகவும் பணியாற்றினார். பேராசிரியர் டி. ஏ. புருடோத்தம் முதல்வராக இருந்த காலம். இக்காலத்தில்தான் இரண்டு பாட நூல்களில் ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்காக இரண்டு 'மேசைப் படிகள்' (Table copies) வேண்டுமென்று கடிதம் ஒன்று முதல்வருக்கு அனுப்பினார். அதில் (copies) என்ற ஆங்கிலச் சொல்லை (coppies) என்று எழுதிவிட்டார். பேராசிரியர்

புருடோத்தம் நகைச்சுவை மிக்கவர். அவர் சொன்னாராம் யாரோ ஒருவரிடத்தில் "இங்கே பாருங்கள். இரண்டு படிகள் வேண்டும் என்று கோரி எழுதிய கடிதத்தில் (coppies) என்று இரண்டு 'P' போட்டிருக்கின்றார். மூன்று படிகள் தேவையாக இருந்திருப்பின் மூன்று 'P' போட்டிருப்பார் போலும்!" என்று. பல்கலைக் கழக வளாகத்தில் இந்நிகழ்ச்சியை ஓராண்டுக் காலம் எல்லோருமே பேசிக் கொண்டு மகிழ்வார்கள். கால வெள்ளம் இந்நினைவையே அடித்துக் கொண்டு சென்று விட்டது. இவர்தம் இல்லறவாழ்க்கை சரியாக அமையாதது இவருக்கு ஏற்பட்ட பெருங்குறை. என்னோடு டாக்டர் அகமதுவுக்கு 'மோதல்' ஏற்பட்டாலும் நான் அதனை மறந்தேன்; நாளடைவில் அவரும் மறந்தார், இருவரும் நல்ல நண்பர்களானோம். நாங்கள் இருவரும் சந்திக்கும் போதெல்லாம் அவர் முதலில் 'சலாம்' போடுவார். இருவரும் கைகுலுக்கிக் கொள்வோம்.

உருதுத்துறையில் எல்லா ஆசிரியர்களும் என்னிடம் அன்பாகத்தான் பழகி வந்தனர். தொடக்கக் காலத்தில் பேராசிரியர் நயினார் இருக்கும்போது வந்து சேர்ந்த ஓய்வு பெற்ற அறபு மொழிப் பேராசிரியர் (முதல்வர்) திரு ஃபஸ்லுல்லா சங்கிலித் தொடர்போல் சார்மினார் சிறு சுருட்டைப் (Cigarette) புகைப்பவர் என்னிடம் மிகக் குழைந்து பழகுவார் அவர் தமிழ் பேசுபவராதலால் தமிழ்மொழி எங்களிருவரையும் நன்கு பிணைத்தது. இவரைப்பற்றி அதிகம் குறிப்பிடத்தக்க செய்திகள் இல்லை என்றாலும், ஓர் அறபுக் கவிஞரின் கற்பனையைப் பற்றி இவர் குறிப்பிட்டது இன்றும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. வண்ணப்படமெழுதும் ஓவியர் ஒருவர் குதிரைமேல் இவர்ந்து செல்லும் நவாப்புப் படம் ஒன்றை வரைந்து நவாப்பைச் சன்மானம் பெறுவதற்காகப் பேட்டி கண்டாராம். அப்போது அவரிடம் படத்திலுள்ள தாங்கள் இவர்ந்து செல்லும் குதிரையின்மீது என் வண்ணத்

தூரிகை தடவும் போது தங்கள் உருவம் விண்ணில் பாய்ந் தோடுகின்றது'' என்று கூறிப் பெரும் பரிசு பெற்றாராம் என்பது. இந்த நண்பர் இப்பொழுது எங்கு சென்றார் என்பது அறியக்கூடவில்லை; இறைவனுலகம் சென்று விட் டார் என்பதை அண்மையில் அறிந்தேன்; வருந்தினேன்!

குமிழி—182

# 26. தமிழக அரசு மானியம் பெறுவதில் தீவிர முயற்சி

மறு பரிசீலனை செய்து திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு மானியம் வழங்க வேண்டும் என்ற விண்ணப்பம் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழக அரசுக்குச் சென்றுவிட்டது என்று எண்ணி நான் வாளா இருக்க வில்லை. சூடு கண்ட பூனையல்லவா? இதற்கு முன்னர் அனுப்பிய விண்ணப்பத்தைத் தொடர்ந்து பலமுறை சென்னை சென்று தலைமைச் செயலகத்தில் வட்ட மிட்டதும், சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் சென்னை சென்று முயன்றதும் குன்றின்மீது 'கண்மூடி மௌனியாக'[1] நிற்கும் ஏழுமலையான் அறியாததன்று. தானே 'சீமானாக' இருந்தும், தேவஸ்தானத்து நிதியிலிருந்து தாராளமாக வழங்கலாம். ஆனால் தேவஸ்தானத்தை நானே நேரில் நெருங்குவதற்கு அவன் வழி வகுக்கவில்லை.

1. நெடியோன் நெற்றியில் தீட்டப் பெற்றுள்ள திருமண் காப்பு கண்ணை மறைக்கும் வரை இறங்கியிருத்தலையும், அர்ச்சையில் எம்பெருமா னின் பேசாத நிலையையும் குறிப்பிட்டவாறு.

பல்கலைக் கழக வளர்ச்சிக்கென்று முதலில் ஆண்டொன்றுக்கு மூன்று இலட்ச ரூபாயும் சில ஆண்டுகள் கழித்து ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம் ரூபாயும் இன்னும் சில ஆண்டுகள் கழித்து ஆண்டொன்றுக்குப் பத்து இலட்சம் ரூபாயுமாக வழங்கி வருகின்றான். அதில் ஆண்டொன்றுக்கு எழுபத்தைந்து ஆயிரம் ரூபாய் வீதம் தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யலாம். செய்தால் தானே? தமிழக அரசு ஆணை சாதகமாக இல்லையென்று தெரிந்ததும் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் தேவஸ்தான ஆட்சிக் குழுவின் தலைவரும், நிர்வாக அதிகாரியும் இதில் தலையிட்டிருக்கலாம்; தலையிடுமாறு அவர்கள் உள்ளத்தில் அந்தர்யாமியாக இருக்கும் எம்பெருமான் அவர்களைத் தூண்டியிருக்கலாம்: இப்படியெல்லாம் அவன் செய்யவில்லை.

ஆனால் அவன் என்னைத்தான் தூண்டுகின்றான்; என் பொறுமையைச் சோதிக்கின்றான். இவன் உண்மையான தமிழன்பன்—தமிழ் வெறியன்—என்பதை உலகிற்கு உணர்த்த நினைக்கின்றான். தொண்டரடிப் பொடியாழ்வாரின் பக்தியை உலகினருக்குணர்த்துவான் வேண்டி ஒரு அந்தணனாகிப் பொன் வட்டிலை மறைத்துக்கொண்டது போலவும், திருமங்கையாழ்வாரின் பக்தியை உலகினர்க்குணர்த்த மணமக்கள் வடிவத்தில் வந்து வழிப்பறிக் கொள்ளை செய்யும் ஆழ்வாரிடம் மாட்டிக் கொண்டது போலவும் செய்யாவிடினும் என்னை அதிக அலைச்சலுக்கு உட்படுத்தித் தமிழக அரசை அணுகச் செய்தான். பணத்தைக் குவித்துக் கொண்டிருப்பவன் அல்லவா?

நான் திருப்பதியிலிருந்து கொண்டு பல்கலைக் கழக[5] கடிதத்தைத் தொடர்ந்து தமிழ்கஅரசுக்குப் பல கடிதங்கள் எழுதினேன் பல தடவைகள் நேரில் வந்து முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைப் பார்க்க முயன்றேன். ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு தடையினால் பார்க்க முடிவ

தில்லை. திரு சிலம்பொலியார் மூலம் அமைச்சர் முத்து சாமியை இதுபற்றி அண்ணாவை அணுகச்செய்தேன். இது பயன் தருவதாகத் தெரியவில்லை. அடுத்து துறையூர் பக்க எம். எல். ஏ. திரு. டி. பி. அழகமுத்து என்பார் மூலம் அப்போது கல்வி அமைச்சராக இருந்த நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியனைப் பல முறை பார்க்க முயன் றேன்; முடியவில்லை. ஒவ்வொரு தடவையும் ஏதாவது தடை நேரிடும். பின்னர் ஒரு முறை சட்டசபை கூட்டம் முடிந்ததும் பகல் 1-30க்கு அழகமுத்து என்னைச் சட்ட சபையை விட்டு வெளிவருவதற்கு முன் நாவலரைப் பார்க்க ஏற்பாடுசெய்தார். பசிநேரம்; என் கோரிக்கையை நன்றாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ''தமிழ் நாட்டில் தெலுங்கு வளர்ச்சிக்கு ஆந்திர அரசு மானியம் தருகின்றதா?'' என்று என்னைக் கேட்டுவிட்டு அருகி லிருந்த தனி உதவி அலுவலரை நோக்கி, ''குறித்துக் கொள். தெலுங்கு வளர்ச்சிக்கு நாம் ஆந்திர அரசுக்கு எழுத வேண்டும். நாளை நினைவு படுத்துக'' என்றார்.

''ஐயா!, ஓர் அரசுக்கு மற்றோர் அரசுக்கு இந்தச் சிறு தொகைக்காகக் கடிதம் எழுதுவது உசிதம் இல்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாகாணம் என்ற பெயரிலிருந்தபோது சென்னைப் பல்கலைக் கழகத் தில் கன்னடம், மலையாளம், தெலுங்குத் துறைகளைத் தொடங்கியுள்ளனர். இந்தியத் துணைக் கண்டத்திலேயே மைய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்கு மாநிலங்கட்கு நிதிவசதி செய்து தருவது போலவே தமிழகம்தான் முதன் முதலாக தமிழ் வளர்ச்சிக்கென்று மானியம் வழங்கும் கொள்கையை வகுத்துக்கொண்டு தில்லிப் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10000/-மும், உஸ்மானியப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 25,0000/-மும், அலகாபாத், ஆக்ரா பல்கலைக்கழகங்கட்கு ரூ. 10000/- வீதமும் வழங்கி வருகின்றது. அண்மையில் தில்லிப் பல்கலைக்கழகம், இந்த உதவி பெறுவதை நிறுத்திக்

கொண்டது. திருப்பதி தமிழக வட எல்லையில் உள்ளது. அங்குள்ள குன்றத்தை 'வடவேங்கடம்' என்று தொல் காப்பியமும் 'மாலவன் குன்றம்' என்று தேசிய கவி பாரதியாரும் தமிழகத்தின் வடஎல்லையை குறிப்பிட்டிருப்பதைத் தாங்கள் அறிவீர்கள் அல்லவா?

''திருவேங்கடவன் பல்கலைக்கழகம் 1954 இல் தோன்றியது. தொடக்கத்தில் அப்பல்கலைக் கழகம் தமிழுக்கு யாதொரு வகையும் செய்யவில்லை. மொழிவழி மாநிலங்கள் பிரிய வேண்டும் என்ற மைய அரசின் கொள்கைப்படி 1953-இல் ஆந்திரம் தனியாகப் பிரிந்த பொழுது திருப்பதியைத் தமிழகமும் ஆந்திரமும் உரிமை கொண்டாடின. தமிழகத்திற்குரிய சென்னையையும் ஆந்திரத்தில் சேர்க்க உரிமைக் குரல் எழுப்பினர் ஆந்திரர்கள். எனினும் சிறந்த இராஜ தந்திரியாகிய நம் அருமை இராஜாஜி அவர்கள் யோசனைப்படி திருப்பதி ஆந்திராவுக்குச் சென்றது; சென்னை நம்மிடமே இருந்து விட்டது. இந்த உரிமைப் போராட்டத்தில் வெளிச்சத்தைவிட வெப்பமே அதிகம் தோன்றியது, இருமொழிக்குரியவர்களும் ஒருவரையொருவர் வெறுக்கலாயினர். இந்த வெறுப்பு மொழி வெறுப்பு வரையிலும் சென்றது. வேரில் 'வெந்நீரை விட்டு அழித்ததுபோல்' திருப்பதியில் அடிமட்டத்திலேயே தமிழ்ப்படிப்பு இல்லாது செய்தனர். கீழ்த்திசைக் கல்லூரியிலும் வித்துவான் முதலிய வகுப்புகள் இல்லாது செய்துவிட்டனர். அப்பொழுது தேவஸ்தான நிர்வாக அதிகாரியாக இருந்த திரு சி. அண்ணாராவ் மிக்க செல்வாக்குடன் விளங்கியவர். அவரும் வேறு சில அரசியல்வாதிகளும் சேர்த்து கொண்டு அடிமட்டத்தில் தமிழ் இல்லாது செய்தனர். இப்படிப்பு இருப்பின் எப்பொழுதாவது திருப்பதி தமிழ் நாட்டுக்குக்குரியது என்ற கிளர்ச்சி எழத்தான் செய்யும் என்ற முன் நினைவுடன் இவ்வாறு செய்தனர் போலும்!

''பல்கலைக் கழக மட்டத்திலாவது தமிழ்ப் படிப்பு இருக்கட்டும்; அதிலும் எல்லைப் பகுதியில் இருப்பின் பயனுடையதாக இருக்கும்' என்ற சிறந்த நீள்நோக்கைக் கொண்ட துணைவேந்தர் கோவிந்தராஜுலு நாயுடு 1960 ஜூலை முதல் விரிவுரையாளர் நிலையில் ஒருவரை நியமிக்க ஏற்பாடு செய்தார். நானும் காரைக்குடியில் பேராசிரியர் பதவியைத் துறந்து திருப்பதியில் பல்கலைக் கழக மட்டத்தில் தமிழை நிலைநிறுத்த வேண்டும் என்று கருதியே பல்வேறு இன்னல்களையும் பொருட்படுத்தாது, சிறுவர்களின் கல்வியின் பொருட்டுக் குடும்பத்தைக் காரைக்குடியில் விட்டு, கணிசமான பொருளிழப்பில் விரிவுரையாளர் பதவியை ஏற்றேன். இப்போது தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. எம்.ஃபில்., பிஎச். டி மட்டத்தில் தமிழை நிலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் திருப்பதி சென்றேன்; இப்போது அதன் பொருட்டுதான் உங்கள் முன் நிற்கின்றேன்.

''தெலுங்கு மாநில அரசிடமிருந்து பல்கலைக் கழக மட்டத்தில் தெலுங்கு வளர்ச்சிக்கு மானியம் பெற வேண்டும் என நினைத்தால் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரை ஆந்திர மாநில அரசுக்கு எழுதச் சொல்லுங்கள். துணைவேந்தரே எழுதினால் விரைவில் பலன் கிடைக்கும்'' என்றேன். தாம் கவனிப்பதாகச் சொல்லி என்னை அனுப்பி விட்டார்.

இதனாலும் பயன் விரைவில் தெரியவில்லை. மனம் உடைந்து போனேன்; இந்நிலையில் பேரறிஞர் அண்ணாவும் தீராத நோய்வாய்ப்பட்டு விட்டார். அவர் நோய்வாய்ப்பட்டாலும் கொள்கையளவில் எவரும் முடிவு எடுக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஆகவே கிராமசாலையில் (Village Road) உள்ள நிழல் சாலையினுள் (Avenue Road) அமைந்துள்ள அவருடைய வீட்டை வட்டமிட்டேன். அப்போது முதல்வர் அறிஞர் அண்ணா

வுக்குத் தலைமைச் செயலராக இருந்தார் திரு. K. சொக்கலிங்கம் IAS அவர்கள்; தனி எழுத்தராக இருந்தவர் திரு. P. K. சுவாமிநாதன் (இப்போது சட்டப் பேரவை நிருபராக இருப்பவர்) என்பவர். அண்ணாவை நல்ல நிலையிலிருக்கும் போதுதான் பார்க்க வாய்ப்பு இல்லையென்றாலும் இப்போதும் மருத்துவர் அநுமதி இல்லாததால் பார்க்க இயலவில்லை. ஒவ்வொரு கட்டத் திலும் ஆகூழ் இல்லாது அவதிப்படும் நிலையை நினைந்து நினைந்து ஏங்கினேன். திரு. சுவாமிநாதன் அவர்கள் கோப்பு நகருவதைக் கவனித்து ஆவன செய்வதாகக் கூறினார்.

இதற்கிடையில் திரு. K. சொக்கலிங்கம் அவர்களை அவர் இல்லத்தில் (தேனாம்பேட்டையில் உள்ளது) கண்டு பேசலாம் என்று என் அரிய நண்பர் திரு. R. மதவடை[1] (துணைச் செயலர், வேளாண்மைத்துறை) என்பாருடன் சென்றேன். திரு. மதவடைமூலம் தான் திரு. சொக்கலிங்கம் எனக்கு அறிமுகம் ஆனார். நாங்கள் சென்ற நேரம் காலை 8-00 மணி. திரு. சொக்கலிங்கம் இறைவழிபாட்டிலிருந்தார். வெளியில் ஒரு சிறிய மண்டபத்தில் சில நாற்காலிகள் இருந்தன. ஒரு சிறு மேசையின்மீது அன்றைய தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்கள் இருந்தன. "நாம் இருக்கையில் அமரலாம்" என்றேன். திரு. மதவடை "வேண்டா; வெளியிலேயே நின்று கொண்டிருப்போம்" என்றார். சுமார் அரைமணி நேரம் காத்திருந்தோம். இச்சமயத்தில் ஒரு பெருங்கூட்டம் (சுமார் 200—300 பேர்) வந்தது. கூட்டம் வீட்டைச் சூழ்ந்திருக்க நான்கு பேர் 'மடமட'வென்று மண்டபத்தில் நுழைந்து இருக்கைகளில் அமர்ந்து கொண்டு செய்தித்

1. இவர் இன்றில்லை. சில ஆண்டுகட்கு முன்னர் (1982) திருநாடு அலங்கரித்தார்.

தாள்களை விரித்தவண்ணம், "இன்று இரண்டிலொன்று பார்த்து விடுவோம்" என்று உரத்த குரலில் பேசினர்.

திரு. சொக்கலிங்கம் இறைவழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியில் தலையை நீட்டும் போது முகத்தில் சினக்குறி தென்பட்டது. "என்ன அப்பா, கலாட்டா?" என்று சொல்லிக் கொண்டு வெளியில் வந்தார்; நின்று கொண்டே பேசினார். இருக்கைகளில் இருந்தவர்களும் எழுந்து நின்றனர். அவர்களுள் ஒருவர், "என்ன சார்? நேற்று தலைமைச் செயலகத்திற்கு வந்தோம் தங்களைப் பார்க்க. உள்ளே இருந்து கொண்டே 'இல்லை' என்று தகவலை அனுப்பி எங்களை அவமதித்தீர்கள். நாங்களும் ஏமாற்றத்துடன் திரும்பினோம். இப்போது இரண்டிலொன்று பார்த்து விடலாம் என்று வந்திருக்கின்றோம். வெளியில் ஒரு பெருங்கூட்டம் காத்திருக்கின்றது" என்றார். திரு சொக்கலிங்கத்தின் முகத்தில் ஈஆடவில்லை. சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டார். சிரமத்துடன் முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு, "என்ன அப்பா வெங்கிட்டு (ஏதோ பெயர் சொல்லிக் கூப்பிட்டு) நீ கூட இப்படி நடந்து கொள்கின்றாய்? நேற்று நீங்கள் தலைமைச் செயலகம் வந்தபொழுது உண்மையில் உள்ளேதான் இருந்தேன். திரு ம. பொ. சி. சொல்லி அனுப்பி இருந்தார்; தொலைபேசி மூலமும் பேசினார். நானும் உரிய அமைச்சருடன் உங்கள் விஷயத்தைப் பற்றிதான் ஆய்ந்து கொண்டிருந்தேன். காரியம் சுமுகமாக முடிந்துவிடும். கவலைப்படவேண்டா" என்று சொல்லி அமைதிப்படுத்தி அனுப்பினார். நாங்கள் "இவர்கள் வன்னியர் தேனாம்பேட்டையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஏதோ இடத்தகராறு பற்றி வந்துள்ளார்கள் என்றும்" ஊகித்துக் கொண்டோம். திரு சொக்கலிங்கம் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு கூட்டத்தைச் சமாளித்த முறை எங்களை வியக்க வைத்தது. முதல் நாள் செயலகத்தில் நடந்து கொண்ட முறையும்

அன்று இல்லத்தில் சமாளித்த முறையையும் சிந்தித்தோம். எவ்வளவு அதிகாரம் இருந்தாலும் சில சமயத்தில் அதைப் பயன்படுத்த முடியாத நிலையும் நேரிடும் என்பதை அறிந்து கொண்டோம். குடியாட்சியில் (Democracy) கும்பலாட்சி (Mobocracy) செயற்பட்ட விந்தையும் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் விந்தையும் எங்களைச் சிந்திக்க வைத்தன.

திரு. சொக்கலிங்கம் எங்களை இன்முகத்துடன் வரவேற்று அமரச் சொல்லி நாங்கள் வந்த வேலையைப் பற்றி உசாவினார். திரு மதவடை திருப்பதிக்கு மானியம் பெறும் விஷயத்தைப் பற்றி எடுத்துரைத்து சுமார் எட்டு ஒன்பது ஆண்டுகளாக நான் அலைவதைப் பற்றி விளக்கினார். நான் தட்டச்சு செய்து கையில் தயாராக வைத்திருந்த விண்ணப்பத்தை நீட்டினேன். அதை வாங்கிப் பார்த்தவர் ''நான் இந்தக் கோப்பைப் பார்த்தது நினைவு இருக்கிறது. 11—12 மணி சுமாருக்கு அண்ணா இல்லத்திற்கு வாருங்கள். நிலைமையைக் கண்டு சொல்வேன்'' என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினார்.

சற்றேறக் குறைய பகல் பன்னிரண்டு மணிக்கு நுங்கம் பாக்கத்திலுள்ள அண்ணா இல்லத்திற்குச் சென்றேன். சொல்லிய படியே திரு சொக்கலிங்கம் கோப்பைப் பார்த்து நிலையைத் தெரிந்து வைத்திருந்தார். என்னைப் பார்த்ததும் உள் அறை ஒன்றில் அமரச் சொல்லி, ''அண்ணா நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. கோப்புகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. நீங்கள் எழுதிய ஒவ்வொரு கடிதத்தின் மீதும் ''திருப்பதியைக் கவனிக்க வேண்டும். திருப்பதியை ஆந்திரத்திற்கு விட்டுக் கொடுத்து விட்டாலும், தமிழாவது அங்கு வளர்வதற்கு உதவவேண்டும். இதற்கெனவே கங்கணம் கட்டிக் கொண்டு சென்றுள்ள திரு ரெட்டியாரை ஊக்குவிக்க

வேண்டும்'' என்ற குறிப்புகள் அண்ணாவின் கைப்பட எழுதியிருப்பதாகவும் திரு ம.பொ.சிக்கு நான் எழுதி அவர் அண்ணாவுக்கு அனுப்பிய கடிதத்தின் மீதும் இதே வாசகங்கள் எழுதியிருப்பதையும் கூறினார். ''அண்ணா வுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அடுத்து முதல்வர் யார்?'' என்ற விஷயம் சர்ச்சையில் இருக்கிறது. சில நாட்கள் பொறுங்கள். எல்லாம் சாதகமாக முடியும்'' என்று சொல்லி உற்சாகப் படுத்தி அனுப்பினார்.

ஏற்கெனவே துணைச் செயலர் திரு கோ.முத்துப் பிள்ளையைத் தலைமைச் செயலகத்தில் பார்த்திருந்தேன். திரும்பவும் தலைமைச் செயலகத்திற்கு வந்து திரு சொக்க லிங்கம் சொல்லிய விவரங்களை எல்லாம் திரு பிள்ளை யிடம் தெரிவித்தேன். திரு. முத்துப் பிள்ளையும் ''நீங்கள் அமைதியாகத் திரும்புங்கள். தமிழ் வளர்ச்சிக்கு நிதி வழங்க வேண்டும் என்பது அரசு கொள்கையாக இருப்ப தால் நீங்கள் கவலைப்பட வேண்டா. நான் பார்த்துக் கொள்ளுகின்றேன். இதில் ஓர் அமைச்சரே பொறுப்பு எடுத்துக் கொண்டிருந்தால் எப்போதே மானியம் கிடைத் திருக்கும்'' என்று சொல்லி அனுப்பினார். நானும் ஓரளவு மன நிறைவுடன் ஊர் திரும்பினேன்.

இந்நிலையில் பேராசிரியர் நாயுடு அவர்கட்கும் மூன்றாவது முறை பதவி கிடைக்கவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் ஏ.எல். முதலியாரைப் போல் தானும் பல ஆண்டுகள் (திருமுதலியார் 25 ஆண்டுகட்கு மேல் பதவி வகித்தவர்—அதுவும் மருத்துவத் துறையிலிருந்து ஓய்வு பெற்றபின்) பதவியிலிருக்க விரும்பினார். என் செய்வது? டாக்டர் முதலியாருக்கு இருந்த சாதுரியம்—ஏன்? சாணக்கியம்—அரசியல் கலப்பின்மை, சாதிப்பூசலில் ஈடுபடாமை போன்றவை பேராசிரியர் நாயுடுவுக்கு இல்லையே. இப்படிச் சொல்வதைவிட 'டாக்டர் முதலியாருக்கு ஊழ் துணை

செய்தது; பேராசிரியர் நாயுடுவுக்கு அது துணை செய்ய வில்லை' என்று கொள்வதே பொருத்தமானது என்பது என் கணிப்பு. மற்றும் டாக்டர் முதலியார் காலத்தில் துணைவேந்தரை நியமிக்கும் பொறுப்பு பேரவையின் (Senate) பொறுப்பில் இருந்தது. திருநாயுடு அவர்களின் காலத்தில் அரசுப் பொறுப்பிற்குப் போய்விட்டது.

குமிழி—181

## 27. புதிய துணைவேந்தர் டாக்டர் V.C. வாமன்ராவ்

நீலம் சஞ்சீவ ரெட்டி ஆந்திர மாநிலம் முதலமைச்சராகப் பணியாற்றி வருகின்றார். பேராசிரியர் எஸ். கோவிந்த ராஜுலு நாயுடுவிற்குப் பின் யார் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் என்ற பிரச்சினை எழுகின்றது. இப்போது துணை வேந்தரின் பதவிக் காலம் ஐந்தாண்டு என்ற நியதிதான் இருந்து வந்தது. ஆந்திர மாநிலத்தில் இன்றளவும் ரெட்டி நாயுடு சாதியாருக்கிடையே எல்லா நிலைகளிலும் மோதல்கள் இருந்து வருகின்றன. கல்வி நிலையங்களில், குறிப்பாகப் பல்கலைக் கழக வளாகத்திலாவது இதைத் தவிர்த்தால்தான் மாணாக்கரின் கல்வி முறை நன்கு அமையும் என நினைத்தார் முதல் அமைச்சர் நீலம் சஞ்சீவ ரெட்டி. நாட்டு நலனில் அக்கறை கொண்ட பழம் பெருந்தலைவர்களில் இவர் ஒருவர்; பழைய பரம்பரையைச் சேர்ந்தவர். தமிழகத்தில் காமராசர் எப்படிப் புகழுடன் திகழ்ந்தாரோ அப்படி ஆந்திர மாநிலத்தில்

பெரும் புகழுடன் திகழ்ந்தவர் திருரெட்டி. இருவருமே நெருங்கிய நண்பர்கள். அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியில் தூய்மை இருந்தது. குறை இல்லை என்று சொல்ல முடியாது; சுயநலம் மிக்க தலைவர்களே இல்லை என்றும் சொல்ல முடியாது. குறைகள் குறைவாகவும் நிறைகள் அதிகமாவும் இருந்தன.

குணம்நாடிக் குற்றம் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்[1]

என்ற வள்ளுவரின் அளவுகோலைப் பயன்படுத்திக் கொண்டால் தெளிவு பிறக்கும்.

இரண்டு சாதியாரிலும் வேறுபட்ட ஒருவரை நியமித்தால் பல்கலைக் கழகத்திலாவது இத்தகைய மோதல்களைத் தவிர்க்கலாம் என்ற பேரெண்ணம் கொண்ட முதல் அமைச்சர் கல்வி இயக்குநராகப் பணியாற்றி அச்சமயம் ஓய்வு பெற்றிருந்த டாக்டர் V. C. வாமன்ராவ் என்பாரை நியமித்தார். தாம் எதிர்பார்த்த பலன்களையும் கண்டார். இந்த டாக்டர் V. C. வாமன்ராவ் யார்? திருப்பதியில் உள்ள சில பிராமணர்கள் இவர் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த கன்னட பிராமணர் என நினைத்தார்கள். ஆந்திர மாநிலத்தில் 'ராவ்' பட்டத்தை வைசியர்கள் (கோமுட்டிகள்), பிராமணர்கள் (மத்வர்களில் வேறானவர்கள்) ,கம்ம நாயுடுமார்கள், வெலமநாயுடுமார்கள் போன்ற வேறு இனத்தார்களும் சூட்டிக் கொள்ளுகின்றார்கள். அரிசனங்கள் என்பவர்கள் கூட இப்பட்டத்தைச் சூட்டிக் கொள்ளுகின்றனர் என்று கேள்வியுற்றிருக்கின்றேன். இவர்கட்கு 'அய்யா' என்ற பட்டமும் வழங்கி வருவதை நன்கு அறிவேன். சென்னை வேலூர் போன்ற நகரங்களில் இந்த 'ராவ்' பட்டம் முதலியார்கட்கும் உண்டு. தவிர தமிழகத்

1. குறள்—504 (தெரிந்து தெளிதல்)

தில் குறிப்பாக சென்னை மாநகரில் பல சாதியாரும் பிள்ளை, முதலியார் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொள்வது நடைமுறையில் உள்ளது. திருவள்ளூர் (திருஎவ்வுளூர்) பக்கத்தில் அகமுடையர், வன்னியர் இவர்கள் 'ரெட்டி' பட்டத்தையும் சூட்டிக் கொள்வதையும் அறிவேன். சர். கே. வி. ரெட்டி நாயுடு என்பவர் கம்மா நாயுடு என்பது தமிழகத்தில் பெரும்பாலோர்க்குத் தெரியாது. 'ரெட்டி' வகுப்பைச் சேர்ந்தவர் என்றே இன்றும் கருதுகின்றனர். திரு. வாமன்ராவ் திருப்பதி வருவதற்கு முன்னரும், வந்த பின்னரும் பிராமணர்கள் கன்னட பிராமணர் என உறுதி கொண்டனர். கம்மா நாயுடுமார்கள் தங்கள் இனத்தைச் சார்ந்தவர்தான் என்று கருதினர். ஓரிரு மாதங்கள் வரை துணைவேந்தரின் சாதியைப் பற்றி 'கடுகு, துவரை உள்ளங்கொண்ட மக்கள்' ஆராய்ந்தனர்; தவறான முடிவுகளையே கொண்டனர். எல்லாச் சாதியாரும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பொழுது ரெட்டி குல மக்கள் இதைப் பற்றிப் பேசாதிருந்தது எனக்கு வியப்பினை அளித்தது. என் மனத்தில் மூன்று எண்ணங்கள் தோன்றின. ஒன்று, தங்கள் இனத்தைச் சேர்ந்தவர் அல்லர் புதிய துணைவேந்தர் என்பது. இரண்டு, சாதி ஆராய்ச்சி பற்றிய குறுகிய எண்ணம் இவர்களிடம் இல்லை என்பது. மூன்று, தங்களினத்தாருக்கு ஏதாவது சலுகை தருவதாக இருந்தாலும் பிற சமூகத்தைச் சார்ந்த தகுதியானவர்களை ஒதுக்கி விட்டுத் தம் இனத்தைச் சார்ந்த தகுதியற்றவர்கட்குத் தாரார் என்பது. பதினேழு ஆண்டு திருப்பதி வாழ்வில் இந்த உண்மைகளை அநுபவ வாயிலாக அறிய முடிந்தது.

இனி டாக்டர் V. C. வாமனராவைப் பற்றிப் பின்னர் அவரிடம்நன்றாகப் பழகினபிறகு அறிந்தசெய்திகள் இவை; இவருடைய பாட்டனார் நைசாம் நவாப் ஆட்சியில் ஓர் அலுவலராகச் சேர்ந்தார். தந்தையார் வாழ்க்கையும் ஐதரபாத்தில் கழிந்தது. திரு. வாமன்ராவ் தமிழ் கற்கவும்

வாய்ப்பில்லை; தெலுங்கு கற்கவும் வாய்ப்பில்லை. தொடக்கநிலைப் பள்ளியிலிருந்தே உருது பயின்றார். உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைத் தவிர அனைத்துப் பாடங்களையும் உருது மொழியிலேயே கற்றார். கல்லூரியில்தான் ஆங்கிலத்தின் மூலம் கற்கும் வாய்ப்புஏற்பட்டது. எம்.ஏ., எல்.டி பயின்று உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கித் தலைமையாசிரியர், மாவட்டக் கல்வி அதிகாரி என்றெல்லாம் பதவிகளில் உயர்வுகள் பெற்றார், நவாப் செலவில் இங்கிலாந்து சென்று பயின்று, ஆய்ந்து, கல்வித் துறையில் டாக்டர் (Ph.D) பட்டமும் பெற்றார். இந்தியாவுக்குத் திரும்பிய சில ஆண்டுகளில் கல்வித்துறை இயக்குநராகச் சில ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற நிலையில் தான் நீலம் சஞ்சீவரெட்டி இவரைத் துணைவேந்தராக நியமித்தார். இவர் பூர்வீகமாக இராய வேலூரைச் சேர்ந்தவர்; முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். தமிழிலும் தெலுங்கிலும் நன்கு பேசுவார். ஆனால் இருமொழிகளை படிக்கவும், எழுதவும் தெரியாது.

"தாய்மொழியாகிய தமிழைக்கூட மறக்கும் படி நேர்ந்து விட்டதே. தமிழகத்திலிருந்து 500 கல் தொலைவிலிருந்தும் இந்த நிலை ஏற்பட்டு விட்டதே என்று நினைக்கும்போது மிகவருத்தமாக இருக்கின்றது" என்றேன்.

"நீங்கள் சொல்வது உண்மைதான். நான் வேலூருக்கு வந்து போவதற்கும் வாய்ப்பில்லை. உறவினர்களே அற்றுப் போய்விட்டனர். வந்து போய்க் கொண்டிருந்தால் மொழித் தொடர்புஅற்றுப்போகாமலாவது இருந்திருக்கும். ஆனால் தமிழில் என் பெயரையும் என் அன்னையார் பெயரையும் எழுதத் தெரியும்" என்று பெருமிதமாகச் சொல்லிக் கொண்டார்.

எழுதிக்காட்டச் சொன்னேன். தம் பெயரை ''வமனரவ்'' என்றும், அன்னையார் பெயரை 'அனடல்' என்றும் எழுதிக் காட்டினார். 'குறில், நெடில்' என்ற எண்ணமே தெரியாததை நினைத்துக் கொண்டேன். ண—னகர வேற்றுமையும் ள—லகர வேற்றுமையும் கூட அறியவில்லையே என்றும் கருதினேன். தமிழகத்தில் முறையாகத் தமிழ் கற்கும் சிறுவர்கட்கும் இவ்வேற்றுமை தெளிவாகப் பல ஆண்டுகள் ஆகின்றதே என்று மனத்தைச் சமாதானம் செய்து கொண்டேன். தமிழை மறந்தாலும் தமிழினத்தின் தொடர்பு அற்றுப் போனாலும் தமிழின் மீதும் தமிழர்கள்மீதும் அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருந்தார் என்பதைக் கண்டு வியந்து போனேன்.

தமிழகத்தில் தெலுங்கை எழுதப் படிக்கத் தெரியாதிருந்தும் என்னைத் 'தெலுங்கன்' என்று சில மேலிடங்கள் நினைத்துக் கொண்டு இருப்பதற்கும், திருப்பதியில் (ஆந்திரத்தில்) என்னைத் 'தமிழன்' என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கும் காரணம் இன்னும் எனக்குப் புரியவில்லை. இதனால் சில நெருக்கடியான நிலையில் இடையூறுகள் குறுக்கிடுகின்றதையும் செரிமானம் செய்து கொள்ள முடியவில்லை.

ஆனால் டாக்டர் V. C. வாமன்ராவ் என்னைத் 'தமிழா' என்றே கருதுவார். இதற்குமுன் துணைவேந்தராக இருந்த எஸ். கோவிந்தராஜுலு நாயுடு என்னை எப்படிக் கருதினார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என்மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார் என்பது மட்டிலும் தெளிவாகத் தெரிந்தது. ஒரு சில ஆண்டுகள் முதல்வராக இருந்த பேராசிரியர் டி. ஏ. புருடோத்தம் என்னை ரெட்டி-நாயுடு என்ற வேற்றுமைக் கண் கொண்டு பார்த்தார் என்பதைப் பல நிகழ்ச்சிகளால் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் முதன்முதலாகத் திருப்பதியில் பணியேற்றபோது தற்காலிக முதல்வராக

இருந்த பேராசிரியர் எஸ். இராமச்சந்திர ராவ் (கன்னட பிராமணர்) என்னைத் 'தமிழர்' என்றே கருதுவார். தமிழகத்தில் பிறந்து வளர்ந்தவராதலால் தன்னைத் தமிழர் என்றே சொல்லிக் கொள்வார்; பெருமிதமாகவும் சொல்லிக் கொள்வார். "'திருப்பதி' தமிழ்ச் சொல்; 'திருமலை' தமிழ்ச் சொல். இப்படியிருக்க 'திருப்பதி' என்ற சொல்லைத் தெலுங்குச் சொல்லாக மாற்ற முடியாமல் 'திருமலை' என்ற சொல்லை தெலுங்குச் சொல்லாக மாற்றுவதாக நினைத்துக் கொண்டு 'திருமல' என்று மாற்றிவிட்டார்களே. 'மல' என்பது 'மலம்' (அழுக்கு) என்ற பொருளைத் தருவதேயன்றி 'கொண்ட' (மலை) என்ற பொருளைத் தரவில்லையே" என்று அடிக்கடி என்னிடம் சொல்லுவதுண்டு. இயற்பியலில் பெரும்புகழ்பெற்ற ஒரு மத்வ பிராமணரின் தமிழ்ப் பற்றினை வியந்து வியந்து போற்றினேன். திருப்பதியி லிருந்த வரையிலும் இப்பெருமகனாரிடம் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பும் இருந்து வந்தது. இறுதியில் திருப்பதியில் தான் கட்டின வீட்டை விற்றுவிட்டுச் சென்னையில் (குரோம் பேட்டையில்) வீடு வாங்கிக் குடியேறியதை அறிந்தேன்; சில ஆண்டுகளில் திரு நாடு அலங்கரித்த செய்தியும் எனக்கு எட்டியது. மிகவும் வருந்தினேன்.

தமிழகத்திலுள்ள ரெட்டி, நாயுடு, ராஜுக்கள் கிருஷ்ண தேவராயர் ஆட்சியின் பொழுது பல்வேறு சந்தர்ப்பங்களாலும் காரணங்களாலும் தமிழகத்திற்கு வந்தவர்கள். வந்தவர்கள் நிலையாக நின்றுவிட்டார்கள். இருதலை முறைக்கு முன்னர் தெலுங்கைப் படிக்கவும் எழுதவும் தெரிந்து கொண்டிருந்தனர். இப்போது, அஃதாவது மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிந்த பிறகு, இப்பயிற்சி அருகிக் கொண்டு வருகின்றது. இங்ஙனமே தமிழ்ப் படிப்போரும் எழுதுவோரும் சித்தூர், திருப்பதி போன்ற இடங்களில் அருகிக் கொண்டு வரு கின்றனர். சென்னைமாநகரில் இருப்போருக்குத் தெலுங்கு

கற்கும் வாய்ப்பு அடி மட்டத்தில் இருந்துவந்தாலும் பிழைப்பின் நிமித்தம் தெலுங்கை மறந்து தமிழையே படிக்கத் தொடங்கிவிட்டார்கள். சித்தூர், திருப்பதி, ஐதரபாத் போன்ற பகுதிகளில் வாழும் தமிழர்கள் பிழைப்பின் நிமித்தம் தெலுங்கைப் படிக்கத் தொடங்கி விட்டனர். ஆனால் பல்கலைக் கழக மட்டத்தில் 'ஆராய்ச்சி' என்ற பெயரில் பூந்தொட்டிகளில் குரோட்டன்ஸ் செடிகளை வைத்து வளர்த்துப் போற்றுவதுபோல் இம்மொழிகள் இறவாது வாழ்ந்து வருகின்றன. உயர் மட்டத்தில் தாம் பிறந்த மண்ணில் வேலை வாய்ப்பு பெறமுடியாத தமிழர்கள், தெலுங்கர்கள் இம்மட்டங்களில் வேலை வாய்ப்பு பெற்று வாழ்ந்து வருகின்றனர். இந்தியின் நிலையும் இதுதான். வடநாட்டைச் சார்ந்த பலர் தென்னாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்தத் துறையில் பணியாற்றி வருவது இதற்குச் சான்றாகும். எதிர்காலத்தில் இவர்கள் சந்ததியினர் நிலை என்ன ஆகும் என்பதைப் பற்றி யாரும் சரியாக சோதிடம் கூற முடியாது என்பது மட்டிலும் தெளிவு.

# 28. தமிழக அரசு மானியம் பெற மேற்கொண்ட தீவிர முயற்சிகள்

திருப்பதிக்கு வந்த வேலை தொடங்கப் பெற வில்லையே என்ற கவலை என் மனத்தில் அடி நாதமாக ஒலித்துக் கொண்டே இருந்தது. பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு ஆட்சிக் காலத்தில் இது நிறைவேற முடியவில்லை. ஆனால் பிஎச். டிக்குப் பதிவு செய்துகொள்ள வேண்டிய வேலை முடிவுற்றது; பணியி லும் உற்சாகமாக இறங்கிவிட்டேன். ஆனால் டாக்டர் V. C. வாமன்ராவ் ஆட்சியில் அவரைப் பாராமலேயே அலுவலகத்தில் உள்ள சில நண்பர்களைக் கொண்டு தமிழக அரசுக்கு மானியம் கோரி ஒரு விண்ணப்பம் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டேன். "தமிழ்வளர்ச்சிக்காக இப்பல்கலைக் கழகத்திற்குத் தமிழக அரசினிடமிருந்து மானியம் கிடைக்குமா?" என்ற கருத்துப்பட ஓரிரு வரிகளில் தான் விண்ணப்பம் சென்றது என்பதைப் பின்னர்தான் அறிந்தேன். அக்கடிதநகல் எனக்கு அனுப்பப் பெறவில்லை. ஆனால் இது தெரிந்ததும் தேவையை வலியுறுத்தி நானே பல கடிதங்களை எழுதினேன். ஒவ்வொரு கடிதத்தின் நகலையும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தேன். அடிக்கடி சென்னை சென்று தலைமைச் செயலகத்தில் வட்டமிட்டேன். அப்போது தமிழ்வளர்ச்சிக்கான துணைச் செயலர் (Deputy Secrctary) பதவியில் ஒருவர்பின் ஒருவராக இருந்தவர்கள் பேராசிரியர் மூ. இராசாக்கண்ணனார், பெரும் புலவர் **மு. ரா. பெருமாள் முதலியார். இவர்கள் இருவரையும் பல**

முறை பார்த்துப் பேசினேன்; குறையிரந்தேன். தமிழக அரசு பிறமாநிலங்களில் தமிழ் வளர்ச்சிக்காக நிதிவழங்கும் கொள்கை இருந்தது. ஐதரபாத் (ஆந்திரம்), அலகபாத் (உத்திரப்பிரதேசம்) தில்லி இவ்விடங்களில் உள்ள நிறுவனங்கட்குத் தமிழ் வளர்ச்சிக்காக ஆண்டுக்குப் பத்தாயிரம் ரூபாய் விதம் வழங்கியும் வந்தனர். இவர்கள் மனம் வைத்துக் கோப்புகளில் பலமான குறிப்புகள் எழுதியிருந்திருந்தால் மானியம் கிடைத்திருக்கும். கீழ் மட்டத்தில் எழுத்தர்கள் எழுதி வைக்கும் குறிப்புகளைப் பாராமல் பொறிபோல் கைந் நாட்டுச் செய்து வந்தமை பின்னர் தெரிய வந்தது.

யாரோ ஒரு கடை நிலை எழுத்தர். "திருவேங்கடவன் பல்கலைக் கழகம் செல்வச் சிறப்பு மிக்கது. அவர்களே தம் செலவில் தமிழை வளர்க்க முடியும்; வளர்த்துக் கொள்ளலாம்" என்ற குறிப்பை எழுதி வைத்து விட்டார். அப்போது நடைபெற்றது காங்கிரசு ஆட்சி, திரு. M. பக்தவத்சலம் முதல் அமைச்சர்; கல்வியும் நிதியும் அவர் பொறுப்பிலிருந்தன. செயலக அலுவலர்கள் மட்டத்திலேயே என் சந்திப்புகள் நிகழ்ந்தன. அமைச்சர் மட்டத்தில் நான் முயலவில்லை. மேற்குறிப்பிட்ட இரு பெரியார்களும் கீழ்மட்டத்தில் எழுதி வைத்த குறிப்புகளைப் பாராமலேயே (கொக்கிபோட்ட) கையெழுத்திட்ட செய்தி பின்னர் தெரிய வந்தது. தமிழ்ப் பற்றாளர்களாக இருந்தும், அரசின் கொள்கைப் போக்கு சாதகமாக இருந்தும், நான் பலமுறை வேண்டியும் இவர்கள் உதவவில்லையே என்ற வருத்தம் இன்றும் என் மனத்தில் இருந்து கொண்டுதான் உள்ளது. நான் அமைச்சரைப் பார்த்திருந்தால் சாதகமாக முடிந்திருக்குமா என்று இப்போது நினைத்துப்பார்க்கின்றேன். நான் அமைச்சருக்கு வேண்டப்பட்டவனாக இருந்திருந்தால். ஒரு கால் சாதகமாக நடைபெற்றிருக்கலாம். ஆனால் நான் அப்படி இல்லையே; திக்கற்றவனாயிற்றே. இதனால்தான்

அமைச்சரை நான் சந்திக்கவில்லை; சந்திக்கவும் முயல வில்லை. ஆட்சிப் பொறுப்பைத் திறமையாக நடத்துபவர் கள் செயலர்களேயன்றி அமைச்சர்கள் அல்லர் என்பதை நான் நன்கு அறிவேன்.

ஓராண்டுக் கழித்து "திருவேங்கடவன் பல்கலைக் கழகம் செல்வச் சிறப்புடையது. அவர்களே அவர்கள் செலவில் தமிழ் வளர்த்துக் கொள்ளலாம். இந்த அரசின் உதவி தேவையில்லை" என்ற போக்கில் அரசு ஆணை பிறந்தது. இஃது என்னைத்திடுக்கிடச் செய்தது. சென்னை சென்று சில நண்பர்கள் உதவியால் கோப்புகளிலுள்ள குறிப்புகளை அறிந்து கொள்ள முடிந்தது. இதனால் நான் அறிந்து கொண்ட உண்மை இது; "திருவேங்கடவன் பல்கலைக் கழகமும் திருமலை—திருப்பதி தேவஸ்தானமும் ஒன்றே என்ற தவறானகருத்து கொண்டமை. தேவஸ்தான உண்டியில் குவியும் பணமும் இதர, திரவியமும், பல்வேறு சேவைகளில் கிடைக்கும் நிதிக்குவையும் பல்கலைக் கழகத் திற்குச் சொந்தம் என்ற முடிவு கொண்டமை. இன்றும் தமிழகத்திலுள்ள பெரும்பாலான பொதுமக்களும் தமிழகத் தலைமைச் செயலகத்திலுள்ள பலரும்—ஏன்? எல்லோருமே என்று கூடச் சொல்லலாம்—இக்கருத் துடையவர்களே, ஒரு கடைநிலை எழுத்தர் எடுத்த தவறான கருத்தினை மேல்மட்டம் வரையிலும் யாரும் பரிசீலனை செய்யாததால், தவறான ஆணைபிறப்பிப் பதற்குக் காரணம் ஆயிற்று. ஆட்சியில் பெரும்பாலான தவறான முடிவுகட்குப் பலமட்ட நிலைகளில் பணியாற்று பவர்கள் தம் கடமைகளைச் சரியாக ஆற்றாமையால் இத்தகைய தவறுகள் நிகழ்கின்றன என்பதை சுமார் 45 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புகளிலிருந்த நான் நன்கு அறிவேன். இவர்கட்கு அறிவு கொளுத்த வேண்டுமானால் அந்த ஆண்டவனே முயன்றாலும் முடியாது என்று கூட என்னைச் சிந்திக்க வைக்கின்றது.

ஒருநாள் பதிவாளரைத்[1] தனிமையில் சந்தித்து பல்கலைக் கழகத்தையும் தேவஸ்தானத்தையும் ஒன்று என்று குழம்பிய நிலையில் ஏற்பட்டதன் விளைவு எதிர் மறை முடிவாயிற்றென்றும், மற்றொரு விண்ணப்பம் அனுப்பி இதனை மறுபரிசீலனை செய்யுமாறு கோரலாம் என்றும் தெரிவித்தேன். நானும் சென்னை சென்று ''படியாய்க்கிடந்து'' இதனைக் கவனிப்பதாகக் கூறினேன். அதற்கு அவர் ''நாங்கள் திரும்பவும் தமிழக அரசுக்கு பிச்சைக்காரத்தனமாக மற்றொரு விண்ணப்பம் அனுப்ப மாட்டோம்'' என்று சொல்லிவிட்டார். என்ன வேண்டியும் அசையவில்லை. நானும் விடாக் கொண்டன் ஆனேன். ஒரு நாள் ஞாயிறன்று அவர் இல்லம் சென்று என் நிலையை விளக்கினேன். ''ஐயா, புகழ் பெற்ற ஒரு நல்ல கல்லூரி யில் தமிழ்ப் பேராசிரியனாக (Professor) இருந்தேன். தமிழ் வெறியால் அதனைத் துறந்து, குடும்பத்தையும் சிறுவர் களின் தமிழ்க் கல்வியின் பொருட்டுக் காரைக்குடியில் விட்டு விட்டுத் திருப்பதியில் பல ஆண்டுகளாகத் தவிக்கின்றேன். தமிழக அரசுக் கொள்கையைப் பயன் படுத்திக் கொண்டு எப்படியாவது பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையை ஏற்படுத்த வேண்டும் என்று வந்தேன். தமிழகத்தில் தலைமைச் செயலகத்திலும் தொல்லை; இங்குப் பல்கலைக் கழகத்திலும் தொல்லையாகப் போய் விட்டது. தங்களை என் நிலையில் வைத்துச் சிந்தித்துப் பாருங்கள். அப்படி இல்லாவிட்டாலும் நீங்கள் இளைஞனாக இருந்தபோது புதுக்கோட்டையிலும் விருது நகரிலும் தற்காலிகமாகப் பயிற்றுனர் (Tutor) வேலையில் தொல்லை

---

1. அப்போது பதிவாளராக இருந்தவர் திரு. K.S.S. சுப்பராஜு என்பவர். மிக நல்லவர். பேராசிரியராகத் தமிழகத்தில் புதுக்கோட்டை, விருதுநகர் முதலான இடங்களில் பணி யாற்றியவர்.

யுற்றதையாவது[2] இப்போது நினைத்துப் பாருங்கள்'' என்றேன். எதற்கும் ''கொடாக் கொண்டனாகவே'' இருந்தார். இவரது 'ஆணவ மலத்தை' என்னால் நீக்க முடியாது என்று முடிவு கொண்டு மிக வருத்தத்துடன் அறைக்குத் திரும்பினேன்.

அன்று மாலையே அருள்மிகு கோவிந்தராஜசுவாமி சந்நிதிக்குச் சென்றேன். எந்தக் கடவுளை வணங்கினாலும் அந்த வணக்கம் திருமாலுக்கே சென்று சேரும் என்பது வைணவக் கொள்கை. ''பெருமானே, உன்னைப் பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல் என்று சொல்லுகின்றார்களே. இஃது உண்மையா? அல்லது அரசியல் தலைவர்கள் போல் தமிழ்ப் பற்றாளன்போல் நடிக்கின்றாயா? இப்படி நடித்து உன் பக்தர்களைத் திசை திருப்புகின்றாயா? நான் குடும்பத்தை விட்டுத் திருப்பதியில் எப்படியும் தமிழ்த்துறையை ஏற்படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு உன் சந்நிதிக்கு மிக அருகிலேயே அறையில் தங்கிக் கொண்டும் பல செளகர்யங்களைத் துறந்தும் தொல்லையுறுவது உன்கண்ணில் படவில்லையா? அர்ச்சகர்கள் உன் கண்களுக்குக் கீழே இறங்குமாறு தீட்டி யுள்ள திருமண் காப்பு நான் துன்பப்படுவதைக் காணாத வாறு மறைக்கின்றதா? நீ உலகளந்த அன்று உன் திருவடி தீண்டியதால் பொல்லார் யாவரும் நல்லார் ஆகியிருக்க வேண்டுமே. இந்த ''வாமனன் பூமியில்'' உன் விருப்ப மான தமிழை வளர்ப்பதற்கு ஏன் இத்துணைத் துன்பங் களை எனக்கு விளைவிக்கின்றாய்? என் வழியில் பல் வேறு விதமாக தடைக்கற்களை ஏன் போடுகின்றாய்?...'' என்பன போன்றவற்றை அவன் திருச்செவியில் சாற்றினேன். கண் களைத் திருமண் மறைத்தாலும் என் சொற்கள் காதுகளி

2. இவரிடம் நெருக்கமாகப் பழகி வந்தபோது அவ்வப்போது பேசிய குறிப்புகளைக் கொண்டு ஓரளவு இவர்தம் வாழ்க்கையில் தொல்லைப் பட்டத்தை அறிந்து கொண்டிருந்தேன்.

லாவது விழட்டும் என்று நினைத்து இவ்வாறு கதறினேன். இரவு சிற்றுண்டி கொண்டு அறைக்கு வந்தேன்; அன்றிரவு நன்றாக உறங்கினேன். மறுநாள் மாலை டாக்டர் வாமனராவ் (துணைவேந்தர்) அவர்களைப் பார்த்துப் பேசுவது என்று முடிவு கொண்டேன்.

திங்களன்று மாலை நான்கு மணிக்கு வீடு திரும்ப வேண்டிய நான் அரைமணி முன்னதாகத் திரும்பினேன். நன்றாக நீராடி சிற்றுண்டி கொண்டேன். சுமார் ஐந்தரை மணிக்குத் துணைவேந்தர் திருமாளிகைக்குச் சென்றேன். அவர் 'ஹுக்கா' பிடித்துக் கொண்டு ஆனந்தமாக அதனை அநுபவித்துக் கொண்டிருந்தார். இவர் திருப்பதியிலிருந்த ஐந்தாண்டுக் காலமும் சமையல்காரனுடன் (இவனும் ஒரு தமிழன்) தனியாகவே வாழ்ந்தார். 'ஹுக்கா' பிடித்துக் கொண்டிருக்கும்போது இவரைப் பார்ப்பது நல்ல நேரம். என்பதை நான் அநுபவத்தில் நன்கு அறிந்திருந்தேன். பேராசிரியர் கோவிந்த ராஜுலு நாயுடு அவர்களைப் போலவே இவரும் ஒருமணி நேரத்திற்கு மேலாக பேசிக் கொண்டிருப்பார். வந்த வேலையை இவரிடம் சுருக்க மாகத் தெரிவித்தேன். நான் காரைக்குடியிலிருந்து திருப்பதிக்கு வந்த நோக்கத்தையும், வந்த வரலாற்றையும் ஆதியோடந்தமாக விவரமாக விளக்கினேன். இதற்கு முன் அடிக்கடிச் சந்தித்ததில் என்னுடைய உழைப்பையும் எல்லையற்ற தமிழ்ப்பற்றையும் நன்கு அறிந்து கொண்டி ருந்தார். பிற பேராசிரியர்கள்மூலமும் கேட்டு அறிந்து கொண்டிருப்பார் என்பதையும் என்னால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த துணை வேந்தர் சொன்னார்; "(1) உங்கள் தமிழ் வெறியால் நீங்களே வந்து மாட்டிக் கொண்டு விட்டீர்கள். இதிலிருந்து நீங்கள் நல்ல முறையில் விடுவித்துக் கொள்ள முடியாது. மிக்க சிரமத்துடன் பிஎச்.டிக்குப் பதிவு செய்து

கொண்டு விட்டீர்கள். விரைவில் பட்டம் பெற முயலுங்கள். பட்டம் வந்ததும் நான் இங்கிருந்தால் உடனே உங்களைத் துணைப்பேராசிரியராக (Reader) உயர்த்திவிடுகின்றேன். பட்டம் வாங்காமல் செய்ய முடியாது. இப்போது கூட உங்கள் அநுபவம், எழுதியுள்ள அரிய நூல்கள், வயது இவற்றைக் கருதியே உயர்த்தலாம். இப்படிச் செய்தால் பல்கலைக் கழக வளாகத்திலும், வெளியிலும் வீணான பேச்சுக்கு இடம் கொடுத்ததாக முடியும். குறிப்பாக 'ஒரு தமிழனை, ஒரு தமிழனாக இருந்த துணைவேந்தர் தகுதியின்றி உயர்த்தி விட்டார்' என்ற கூக்குரல் கிளம்பும். பொறாமையினால் உங்கட்கும் நீங்கள் அறியாமலேயே பல பகைவர்கள் இருப்பார்கள். நான் இங்கு வந்தது குறித்துப் பொறுக்காத சில பகைவர்களும் தோன்றியிருப்பார்கள். 'சீசரின் மனைவி ஐயத்திற்கிடமின்றி இருக்க வேண்டும்' (Caesar's wife should be aboue suspicion) என்ற பழமொழியைக் கேட்டதில்லையா?''

(2) ''நீங்கள் பல்கலைக் கழகம் எழுதுவதுபோல் ஒரு விண்ணப்ப நகல் நல்ல முறையில் ஆங்கிலத்தில் தயார் செய்யுங்கள். அதில் (அ) பல்கலைக்கழகத்தில் இருக்க வேண்டிய பலதுறைகளுள் தமிழ்த் துறையும் ஒன்று (ஆ) தமிழக எல்லையிலிருக்கும் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் இன்றியமையாமை (இ) தமிழ் பயிலும் மாணாக்கரின் தொகையைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ள வேண்டாமை. (ஈ) தமிழாராய்ச்சிக்குத் திருப்பதி நல்ல களம் என்பதை வற்புறுத்திக்காட்டுவது, (உ) எம்.ஏ. மாணாக்கர்கள் இல்லா விட்டால், பிஎச்,டிக்கு ஓரிருவர் இருப்பார் என்பதைக் காட்டுதல், (ஊ) இரண்டு பகுதிகளிலும் எப்போதும் சிலர் இருப்பர் என்பதைக் காட்டுவது (எ) தனிப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவது—என்பவை போன்ற காரணங்களைக் காட்டி நகல் ஒன்று மூன்று நாட்களுக்குள் என் கையில் தாருங்கள். விரைவில் ஆவன செய்யப்படும்.

தமிழக அரசுக்கும் அனுப்பப்பெறும்; கடிதத்தின் நகல் ஒன்று உங்கட்கும் அனுப்பப்படும்'' என்று யோசனை கூறினார்.

இதுகாறும் அமைதியாக அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்த துணைவேந்தரின் உண்மையான சொரூபத்தைக் அன்று கண்டேன். தமிழ் நாட்டின்மீதும், தமிழ் இனத்தின்மீதும், தாம் படிக்க வாய்ப்பில்லாத தமிழ் மொழியின் மீதும் கொண்டிருந்த பற்றினைத் தெரிந்து கொண்டேன். அன்று மறுநாள் (செவ்வாயன்று) அருமையான நகலைத் தயார் செய்து புதனன்று மாலையில் அவர் திருமாளிகையில் சந்தித்து நகலைப் படித்துக் காட்டி அவரிடம் அதைத் தந்தேன். நகலைக் கண்டு என் திறமையைப் பாராட்டினார். 'இப்பொழுதே உங்களைப் பேராசிரியராகக் காண ஆசைதான். என் செய்வது? மலையின்மீது நின்று கொண்டிருக்கும் மாலவன் கவனிப்பான்' என்று வாழ்த்தினார். அந்த வாரத்தின் இறுதிக்குள் விண்ணப்பம் தமிழக அரசுக்கு அனுப்பப் பெற்றது. அதன் நகலும் என் கைக்கு வந்து சேர்ந்தது. என்றும் இல்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது, உற்சாகமும் பொங்கி எழுந்தது. இனி (அ) தமிழக அரசு (ஆ) ஆந்திரமாநில அரசு—இந்த இரண்டினை எப்படிச் சரிக்கட்டுவது? என்ற எண்ணத்தில் ஆராய்ச்சியில்— என் மனம் ஈடுபடத் தொடங்கியது.

# 29. 'இராக்கெட்டு' நூல் உதயம்

நான் திருப்பதிக்கு வந்த நாள் தொட்டே விண்வெளிச் செலவு பற்றியும், விண்வெளியை ஊடுருவித் திங்கள் மண்டிலத்தை நோக்கிச் செல்ல வேண்டிய முயற்சி பற்றியும் செய்தித் தாள்களில் செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. திங்கள் மண்டிலப் பயணம் விரைவில் கூடும் என்ற நம்பிக்கையும் அறிவியலறிஞர்களிடையே கை இருந்து வந்தது. 1961-இல் ''1970க்குள் அம்புலியில் மனிதன் இறங்க வேண்டும் என்பது அமெரிக்காவின் குறிக்கோள்.'' என்ற கென்னடியின் அறிவிப்பும் செய்தித்தாளில் வெளிவந்ததைக் கண்டேன்.

*பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே உங்கள்*
*பக்கம் வந்து சேருவேனே வெண்ணிலாவே.*[1]

என்ற கவிமணியின் குரலும் கேட்டது. இது புதுமைகளைக் கண்டு களிப்பெய்தத் துடிக்கும் மனிதன் காணும் கனவுகளைக் காட்டும் ஒரு கவிஞனின் குரலாக வெளிப்பட்டதாகக் கருதலாம்,

மேனாடுகளில் கி.பி. 160இல் எழுதப்பெற்ற கதையொன்றில் கதைத் தலைவன் வானக் கப்பலில் செல்லுகின்றான். இவன் பல இடையூறுகளைத் தாண்டி, விபத்து மிக்க பகுதிகள் பலவற்றையும் கடந்து, எட்டு நாட்கள் கழித்து விண்வெளியில் ஒளிமிக்க தீவு ஒன்றினைக் கண்ணுறுகின்றான். இதுவே மதிமண்டலமாகும். இன்

1. கவிமணி : மலரும் மாலையும்-வெண்ணிலா—15

னொரு கதையாசிரியர் கதைத் தலைவனுக்குச் சிறகு களைப் படைத்து விடுகின்றார். மதிமண்டலத்தை எட்டிய இவன் கதிரவன் மண்டலத்தையும் எட்டி விடுகின்றான். இதனைக் கண்ணுற்ற வானுலகத்தோர் சீற்றங்கொண்டு இவனைத் தரைக்கு அனுப்பி விடுகின்றனர். மீண்டும் அவன் விண்வெளிக்கு வர இயலாதிருக்க அவனது இறக்கை களையும் களைந்து விடுகின்றனர்.

இதற்குப் பல நூற்றாண்டுகட்குப் பிறகு (17-வது நூற்றாண்டில்) கெப்லர் எழுதிய கதைகளிலும், அவருக்குப் பின்னர் காட்வின் என்பாரும் பிறரும் எழுதிய நூல்களிலும் மதிமண்டலத்தைப்பற்றிய கருத்துகள் வருகின்றன. கெப்லர் காலத்தில் சமயக் கோட்பாடுகட்கும் அரசியல் கருத்துகட்கும் புறம்பான கருத்துகளை எடுத்துரைப்பவர் கள் கடுந்தண்டனைக்குள்ளானதால் அவர்கள் தம் கருத்து களைக் கதை வடிவில் கற்பனைக் கூற்றுகள்போல் எடுத் துரைக்க வேண்டியதாயிற்று. இருபதாவது நூற்றாண்டில் வாழ்ந்த எச். ஜி. வெல்ஸ் என்ற புகழ் பெற்ற அறிஞரும் ''மதியை அடைந்த மாந்தர்கள்'' (First men in the Moon) என்னும் புதினத்தில் பல கற்பனைக் கருத்துகளை உரு வாக்கியுள்ளார்.

சம்பாதி-சடாயு வரலாற்றிலும்[2] விண்வெளிப் பயணம் பற்றிய செய்தி உண்டு. சூரிய சாரதியாகிய அருணன் என் பான் காசியப முனிவரது மனைவியாகிய விநதையின் வயிற்றில் பிறந்தவன்; கருடனுக்குத்தமையன். இடைக்குக் கீழ் உறுப்பில்லாதவன். சம்பாதியும் சடாயும் அருணனது மைந்தர்கள். இவர்கள் இருவரும் வானத்தில் உயர்ந்து பறக்குந் தன்மையுள்ள கழுகுகளின் அரசர்கள். இவர்கள் இருவரும் உயரப் பறக்கும் வல்லமை பெற்றிருந்தமையால் தேவலோகத்தைக் காண வேண்டும் என்ற எண்ணத்தினால் வானத்திற் பறந்து கதிரவனைக் காணும் நிலைமையில்

2. கம்பரா. கிட்கிந்தை—சம்பாதிப் படலம் (53-61)

இருந்தனர். சம்பாதியைவிட உயரமாகப் பறந்து சென்ற சடாயு கதிரவனின் வெப்பத்தைத் தாங்கமுடியாமல் வருந்திய போது, சம்பாதி தன் இறகுகளின்கீழ் அவனை இருக்க வைத்துக் காப்பாற்றினான். சம்பாதியின் சிறகுகள் தீய்ந்தமையால் கீழே விழுந்தான். சூரிய பகவான் அவன் நிலைக்கு இரங்கி ''வாநரர்கள் இராமநாமம் உச்சரிக்கும் போது, உன் சிறகுகள் மீண்டும் தளிர்க்கும்'' என்று ஆசி கூறினான். இது வரலாறு. ஒரு வகையில் விண்வெளிப் பயணமாகும்.

இங்ஙனம் கற்பனையாகவும் புராணங்களிலும் இருந்து வந்த எண்ணங்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைமுறையில் செயற்பட்டன, பல அறிவியலறிஞர்கள், கனவாக இருந்து வந்த மதிமண்டலச் செலவினை நன வாக்க முயன்றனர். காடார்டு, ஓபெர்த் போன்ற அறிஞர் கள் இராக்கெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். பல அரிய உண்மைகளையும் கண்டறிந்தனர். இந்த இராக்கெட்டு தான் விண்வெளிச் செலவுக்கு உறுதுணையாக இருக்கும் அற்புத ஊர்தி. 1959இல் இரஷ்யர்களும் 1964இல் அமெரிக்கர்களும் விண்வெளிப் பயணத்தில் வெற்றி கண் டனர். இன்னும் ஆறாண்டுகளில் அம்புலிக்கு மனிதனே சென்று திரும்பி வர வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக மாக இருந்து வந்தது.

விண்வெளிப் பயணங்கட்குப் பயன்படும் இராக்கெட்டு பற்றி ஒருசிறிய நூலை எழுத வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் எழுந்தது. அதை எழுதி முடித்தேன். இந்தப் பயணம் தொடங்கப் பெறுவதற்கு முன்னர் விண் வெளியில் எடையின்மை அநுபவம், . விண்வெளியின் வெப்பம், அமுக்கம் இவை போன்ற செய்திகளை அறிவதற்கு இராக்கெட்டு துணை செய்கின்றது. இராக்கெட்டின் துணையால் தொலைக்காட்சி அமைப்பு, இராடார் அமைப்பு, தொலை ஒலிப்பான் அமைப்பு

போன்ற அமைப்புகளடங்கிய சிறிய துணைக்கோள்களை விண்வெளியில் பல்லாயிரக்கணக்கான மைல் உயரங்கட்கு அனுப்பிப் பல செய்திகளை அறிதல் வேண்டும்.

இராக்கெட்டு (Rocket) என்றால் என்ன? இது சீறு வாணத்தின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப் பெற்ற ஒரு கருவி. இது தானியங்கி (Automobile) அல்லது வான ஊர்தியின் பொறி போன்ற ஒரு வகை உள்ளெரி பொறி (Internal Combustion Engine) ஆகும். ஆனால், இஃது ஒருவகையில் இவற்றினின்றும் வேறுபடு கின்றது. இது தனக்குத் தேவையான உயிரியத்தைத் (Oxygen) தானே சுமந்து செல்கின்றது; மற்றவை தமக்கு வேண்டிய உயிரியத்தைக் காற்றினின்றும் பெறுகின்றது. மற்றும், இராக்கெட்டின் உட்புறத்தில் என்னென்ன பொருள்கள் தேவையோ அவற்றையெல்லாம் இராக்கெட்டுகள் சுமந்து செல்லுகின்றன. இக்காரணத் தால் அவை எங்கு வேண்டுமானாலும் செல்ல முடிகின்றது. காற்றே இல்லாத விண்வெளியிலும் அது பயணம் செய்ய முடிகின்றது.

இந்தச் சிறு நூலில் 41 விளக்கப்படங்கள் அமைந்து விளக்கத்திற்குத் துணை செய்கின்றன. இராக்கெட்டின் ஆதி வரலாறு, இராக்கெட்டின் அமைப்பு, இதில் ஐசாக் நியூட்டன் கண்டறிந்த கவர்ச்சி விதி, இயக்கவிதி செயற் படும் விதம். இராக்கெட்டுகள் மேலே செல்லுங்கால் குறுக்கிடும் ஒலித்தடை (Sound barrier), வெப்பத் தடை (Heat barrier). என்ற தடைகள், இவற்றைச் சமாளிக்கும் முறைகள் இவை தெளிவாக விளக்கப் பெறுகின்றன. இராக்கெட்டில் விமானி போல் செயற் படும் வழிகாட்டி அமைப்புகள் (Gaidance systems) நன்கு விளக்கப்பெறுகின்றன, இராக்கெட்டு கடந்து செல்ல வேண்டிய வளிமண்டலத்தின் (Atmosphere) அமைப்பு, அதில் அடிவளிமண்டலம் (Troposphere),

அடுக்கு வளி மண்டலம் (Stratosphere), வேதியியல் மண்டலம், (Chemosphere), அயனி மண்டலம் (Inosphere) என்று ஒன்றன் மேல் ஒன்றாக அமைந்திருக்கும் அற்புதம் தெளிவாக விளக்கப்பெறுகின்றது.

ஆளில்லாத விண்கலங்கள், ஆளுள்ள விண்கலங்கள் என்று பல்வேறு கட்டங்கள் அநுப்பப்பெற்று ஆராய்ச்சிகள் நடைபெற்ற வரலாறு தெளிவாக்கப்பெறுகின்றது. இரஷ்யர்களும் அமெரிக்கர்களும்மாறிமாறி மேற்கொண்ட முயற்சிகள் எடுத்துக்காட்டப்பெறுகின்றன. இருவரும் விண்வெளிக்கு அனுப்பிய பல்வேறு துணைக்கோள்கள் (ஸ்புட்னிக்குகள்), லூனிக்குகள், எகிஸ்புளோரர்கள். வான் கார்டுகள், பயனியர்கள்) கொண்டு வந்த தகவல்கள் சுட்டப் பெறுகின்றன. இந்த நூல் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு,

செந்தமிழ்த்தாய் கலரடியை மறவாச் சீலர்;
சீர்திருத்தக் கொடிவளர்க்கும் சீர்மை மிக்கார்;
சந்தஇளம் பிறையணிந்த மூர்த்திக் கன்பர்;
தயாமூல தத்துவத்தை நன்கு ணர்ந்தோர்;
சிந்தனைக்கு விருந்தளிக்கும் பண்புச்செல்வர்;
தேன்மொழியால் தமிழகத்திற் குயிர்அளிக்கும்
அந்தணர்;நல் குன்றைநகர் வாழ வந்த
அடிகளார்க் கிச்சிறுநூல் உரிய தாமே.

என்ற பாடலால் அன்புப்படையலாக்கப்பெற்று ஆகஸ்டு 1964—இல் எனது பதினைந்தாவது நூலாக வெளி வந்தது; இது கழக வெளியீடு.

இந்த நூலின் நூல்முகத்தில் அடிகளாரைப் பற்றி எழுதிய குறிப்பு இது; "அறிவாலும் ஆற்றலாலும் அத்தனைக்கும் மேலாகச் செயலாற்றும் திறனாலும் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள்— தமிழ் கூறு நல்லுலகத்தின் தந்தை போன்றவர்கள்— தவத்திரு குன்றக்குடி

அடிகளார். அடிகளார் சின்னப்பட்டமாக இருந்த காலத்தி லேயே வேண்டாத சில மடத்துச் சம்பிரதாயங்களைக் கைவிட்டதனால் பொது மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர் கள். எவருடனும் இன்முகத்துடன் பழகும் பண்புடையவர் கள்; 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற வாய் மொழிக்கு எடுத்துக்காட்டாக நின்று நிலவுபவர்கள் பட்டம் ஏற்று மடத்துப் பொறுப்புகள் யாவும் அவர்களை வந்தடைந்த பிறகு பலதுறைகளிலும் அவர்களது அருள் நோக்கம் சென்றது: அறங்கள் யாவினும் ''புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'' என்பதை உணர்ந்து பல பள்ளிகளையும் இலவச உணவு விடுதிகளை யும் நிறுவினார்கள். ''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி, பேணி வளர்த்திடும் ஈசன்'' என்பதை யுணர்ந்த அடிகள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைத் துவக்கி, ''பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம். பேதைமை யற்றிடும் காணீர்'' என்ற குறிக்கோளைப் பறையறை வித்தனர். தம் பார்வையின் கீழுள்ள திருக்கோயில்களைப் புதுக்கி அவற்றில் தமிழ் அருச்சனை வழிபாட்டைச் செயற்படுத்தினார்கள். இதனால் பாடிய் வாய் தேனூறும் 'பால்வாய்ப் பசுந்தமிழ்' ஏற்றம் பெற்றது. தமிழ் கூறு நல்லுலகமெல்லாம் அருள் நெறிக் கழகங்களைத் தோற்றுவித்துச் சமயப்பணி ஆற்றி வருகின்றார்கள். ஏனைய மடாதிபதிகள்போல் 'மூலவராக' இராமல், அடிகளார் 'உற்சவராக' எங்கும் சென்று தமிழ் முழக்கம் செய்து சமயநெறியையும் தமிழ் நெறியையும் பரப்பி வருகின்றார்கள். அடிகளாரின் திருவாயினின்றும் அருவி போல் பொங்கி வரும் அமுத வெள்ளமாகிய பேச்சில் புலமை மணம் கமழும்; ஆராய்ச்சித் திறன் ஒளிரும்; சிந்தனைச் சுடர் தெறிக்கும். இவர்களுடைய கருத்துகளில் ஆழ்கடலைப் போன்ற ஆழமும் உண்டு; அதனைப்போல் அவை அகன்றும் காணப்பெறும். அனைத்தையும் துறந்து தமிழைத் துறக்க முடியாத அடிகளார் ஆசிரியர்களின்

தோன்றாத் துணையாக இருப்பவர்கள்; புலவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர்கள். வருங்கால மாணிடப் பயிர்கள்—மாணாக்கர்கள்—உய்யவேண்டும் எனத் துடித்து நிற்பவர்கள். தம்மிடம் சுரக்கும் அருள் காரணமாக இங்ஙனம் பல்லாற்றாற்றானும் சேவை புரிந்து வரும் தவத்திரு அடிகளார்மீது அடியேன் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் அறிகுறியாக இச்சிறு நூலை அவர்கள் திருவடிகளில் அன்புப் படையலாக்கு கின்றேன். இவர்கள் ஆசியால் இந்நூல் தமிழ்கூறு நல்லுலகில் பெருமிதத்துடன் உலவும் என்பது என் திடமான நம்பிக்கை"

பயனுடைய நல்ல நூல்கட்கு பரிசளித்து வரும் தமிழக அரசு இந்நூலுக்கு முதற்பரிசாக ரூ. 1000/- அளித்தது. இஃது அடிகளாரின் ஆசி என்பது என் கருத்து. இந்த நூலின் படியொன்றினை எடுத்துக் கொண்டு ஒரு விடுமுறைக் காலத்தில் குன்றக்குடி சென்று அடிகளாரைச் சந்தித்து அவர் திருவடிகளில் சேர்த்தேன். அவர் தமக்குப் படையலாக்கியதால் மகிழ்ந்ததை விட அறிவியல் வளர்ச்சியைக் காட்டும் ஒரு புதிய படைப்பைக் கண்டு என்னை மிகவும் பாராட்டினார்; விருந்தும் அளித்தார். விடைபெறுங்கால் ரூ 200/-க்கு ஒரு காசோலை வைக்கப் பெற்ற ஒரு காகித உறையையும் தந்து வாழ்த்துக் கூறினார். கல்லூரியில் சேரும் நிலையிலிருந்த என் முதல் மகனுக்கு ஒரு மிதிவண்டி வாங்கித் தருவதற்கு அத் தொகை உதவியது. இது காலத்தில் செய்த உதவி யாதலால் அதனை ஞாலத்திலும் பெரிதாகக் கொண்டு மகிழ்ந்தேன்.

# 30. தமிழகப் புலவர் குழுவை வரவேற்க இயலாமை

1965-ஆகஸ்டு என்பதாக நினைவு. குடும்பம் காரைக்குடியில் இருந்த சமயம். ஒருநாள் நான் நூலகத்தி லிருந்து திரும்பியவுடன் திரு கி. ஆ. பெ. விசுவநாதன் என்ற பெயர் பொறிக்கப்பெற்ற வருகை அட்டை (Visiting Card) ஒன்று என் மேசையின்மீது இருந்தது. தமிழ்க் காவலர் வந்து போனதை அறிந்தேன். அந்த அட்டையில் தாம் தங்கியிருக்கும் இடத்தைக் குறிப்பிட் டிருப்பின் அங்கு சென்று பார்த்திருப்பேன். எந்தவிதக் குறிப்பும் இல்லாததைக் கண்டு மிகவும் வருந்தினேன். அன்று மாலையில் தமிழ்ப்புலவர் குழு செப்டம்பர் நடுவில் வருவதாகவும். அவர்கள் கூட்டம் பல்கலைக் கழகத்தில் நடைபெறப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கல்லூரி முதல்வரிடமிருந்து ஒரு குறிப்பு மாலை 3 மணிக்கு வந்தது. புலவர் குழுவரும் நாளைக் கவனித்த தில் அது செப்டம்பரில் வரும் 14 நாள் விடுமுறையின் நடுவில் அமைந்திருந்தது.

குறிப்பைக் கண்டதும் அதனை எடுத்துக் கொண்டு முதல்வரைச் சந்தித்தேன். அப்போது முதல்வராக இருந்தவர் விலங்கியல்பேராசிரியர் டாக்டர் பம்பாபதிராவ். புலவர் குழு வரும் நாள் விடுமுறையின் நடுவில் வருவதாக வும் நான் ஆறு ஆண்டுகளாகக் குடும்பத்தை விட்டுத் தனிமையில் இருப்பதாகவும் குடும்ப நிலையைக் கவனிக்கவும் சிறுவர்களின் கல்வியைக் கவனிக்கவும் ஊர் செல்ல வேண்டியிருப்பதால் தன்னால் இப்பொறுப்பை

ஏற்க இயலாதென்றும் விளக்கி என்னை இந்தப் பொறுப்பி லிருந்து நீக்கிவிடுமாறும் கேட்டுக் கொண்டேன்.

முதல்வர் சொன்னார்: "மிஸ்டர் ரெட்டியார், திருச்சியிலிருந்து ஒரு பெரியவர் துணைவேந்தரைச் சந்தித்தார். அவரை என்னிடம் அனுப்பி என்னைக் கொண்டு இந்த ஏற்பாட்டைச் செய்யுமாறு தொலைபேசி மூலம் செய்தி அனுப்பினார். இந்தக் குறிப்பு அவர் எண்ணமேயன்றி, என் விருப்பம் அன்று. நாளை அதிகாலையில் அவர் ஐதரபாத் செல்லுகின்றார். அவர் உங்கள்மீது நல்ல மதிப்பு வைத்திருக்கின்றார். இன்று மாலையே அவரைச் சந்தித்துப் பேசி உங்கள் நிலையை விளக்கி இயலாமையைத் தெரிவித்து விட்டால், மாற்று ஏற்பாடு செய்து கொள்ளலாம். நீங்கள் அவரைப் பார்த்து அவர் கருத்தறிந்து என்னிடம் நாளை தெரிவியுங்கள்" என்றார். எனக்கு ஒரே குழப்பம். துணைவேந்தரைப் பார்க்க முயன்றேன். யாரோ அமைச்சர் ஒருவர் வந்திருப்பதாகவும் அவருடன் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு ஒரு கூட்டத்திற்குப் போயிருப்பதாகவும், மாலை ஆறு மணிக்கு மேல்தான் சந்திக்க முடியும் என்றும் அவருடைய தனி அலுவலர் மூலம் அறிந்தேன்.

அறைக்கு வந்து மாலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி அருந்தி சுமார் ஆறரை மணிக்குப் புறப்பட்டேன். மிதி வண்டிதான் என் வாகனம். ஏழை கட்கு இதுவே அதிகப்படியானது. என் அறையிலிருந்து ஒரு நாளைக்கு இரண்டு முறை பல்கலைக் கழகத்திற்குப் போய் வந்தால் உயிர் போய், உயிர் வரும்; போகும் போது ஏற்றம்; வரும்போது சிறிது இறக்கம். ஐம்பது அகவையை எட்டிய நிலையில் மிதிவண்டியை இயக்குவது கஷ்டமாகத் தான் இருந்தது. என்ன செய்வது? வேறு வழி இல்லை. மிகவும் கஷ்டத்துடன் மேல் மூச்சு வாங்க மாலை ஏழு மணிக்குத் துணைவேந்தர் திரு மாளிகைக்கு வந்து சேர்ந்

தேன். துணைவேந்தர் ஒரு சிற்றுந்தின் முன் பக்கம் வண்டியோட்டியின் இருக்கைக்கருகிலுள்ள இருக்கையில் அமர்ந்து கொண்டு எங்கோ போகத் தயாராக இருந்தார்.

என்னைக் கண்டதும் வண்டியோட்டி வேறு ஏதோ வேலையாக இல்லத்திற்குள் சென்றிருந்ததால் அவர் இருக்கையில் என்னை அமரச் செய்து பேசத் தொடங்கினார். "மிஸ்டர் ரெட்டியார், இன்னும் சில நிமிடங்கள் தாமதித்து வந்திருந்தால் என்னைப் பார்த்திருக்க முடியாது. ஐதரபாத்திலிருந்து சில அமைச்சர்கள் வந்திருந்தமையால் வாகனங்கள் யாவும் அவர்கட்கு உதவச் சென்றுவிட்டன. இந்தச் சிற்றுந்துதான் மிச்சம். நல்லவேளையாக இதுவாவது மிஞ்சியது எனக்கு. நானும் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் விருந்தில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கின்றேன். (கைக் கடிகாரத்தைப் பார்த்து) மணி 7—தான்; 7—30க்கு அங்கு இருக்க வேண்டும். இவ்வளவு அவசரமாக இந்த அகாலத்தில் வந்த காரியம் என்ன? இன்னும் மூச்சு வாங்குகிறதே" என்று அன்புடனும் பரிவுடனும் வினவினார்.

நான் சொன்னேன்: "ஐயா, மாலையில் முதல்வரிடமிருந்து ஒரு குறிப்பு வந்தது. அதில் செப்டம்பர் நடுவில் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் திருப்பதிக்கு வரும் புலவர் குழுவை வரவேற்கவும், அவர்கள் நடத்த இருக்கும் கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யவும் எனக்குப் பொறுப்புத் தருமாறு முதல்வரிடம் தொலைபேசி மூலம் சொன்னீர்களாம். நான் விடுமுறையில் குடும்பத்தைக் கவனிக்கக் காரைக்குடி செல்லவேண்டும் என்றும், விடுமுறை தொடங்குவதற்குமுன்னரோ அல்லதுவிடுமுறை முடிந்த பின்னரோ வந்தால் இப்பொறுப்பு ஏற்க வசதியாக இருக்கும். என்றும் விடுமுறையின் நடுவில் வருவதால் என்னால் இப்பொறுப்பை ஏற்க இயலாது என்றும்

சொல்லி விட்டேன். ஆனால் அவர் தங்களைப் பார்த்து இதனைச் சொல்ல வேண்டும் என்றும், நாளைக் காலையில் தாங்கள் ஐதரபாத் புறப்படுவதாகவும் அதனால் இன்றே தங்களிடம் கூற வேண்டும் என்றும் சொன்னதால் உடனே வந்தேன். மன்னிக்க வேண்டும்'' என்றேன்.

உடனே அவர் கேட்டார் : ''இந்தக் கூட்டத்தில் படிப்பு சம்பந்தமாக ஏதேனும் பேசுவார்களா? அல்லது சமூக விஷயமாக ஏதேனும் நடக்குமா?'' என்று.

நான் சொன்னேன் : ''அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை, சமூக விஷயமாகத் தான் ஏதேனும் இருக்கும்போல் தோன்றுகின்றது. பண்டைக் காலத்தில் மதுரையிலிருந்த தமிழ்ச்சங்கத்தில் 49 புலவர்கள் இருந்த தாகச் சொல்கிறார்கள், அதை நாடெங்கும் காட்டு வதற்காக 49 புலவர்கள் கொண்ட குழு பல இடங்கட்கு நடத்திச் செல்லப்படுகின்றது. சில சமயம் நாட்டு நடப்பு களையும் பேசினாலும் பேசலாம்'' என்று.

இதைக் கேட்டதும் அவர் தேர்த் தட்டிலிருந்து கொண்டு கண்ணன் பார்த்தனுக்குக்கீதையை உபதேசித்தது போல் பேசலானார். நான் அவர் அமர்ந்திருந்த இடத் திலும் அவர் நான் உட்கார்ந்த இடத்திலுமாக மாறி உட்கார்ந்து கொண்டால் உவமை முற்றுவமையாக அமையும். ''மிஸ்டர் ரெட்டியார், இதற்காகவா அலட்டிக் கொண்டு இவ்வளவு தூரம் அகாலத்தில் சிரமப்பட்டு வந்தீர்கள்? ஒரு கால் தாளில் காரணத்தை எழுதி இயலாமையைக் காட்டிவிட்டு ஊருக்குச் செல்லுங்கள். முதல்வருக்கு ஏதாவது மாற்று ஏற்பாட்டிற்கு யோசனை கூறிச் செல்லுங்கள், இன்றிருந்து ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பொது விஷயத்திற்கு அதிக மாக அலட்டிக் கொள்ளாதீர்கள். பொது விஷயத்தில் அக்கறை காட்ட வேண்டும் என்பது உண்மையே. ஒவ்வொருவரும் பொறுப்பைக் கழித்துவிட்டு இப்படி

விலகிக் கொண்டால் பொதுக் காரியம் நடைபெறுவதில் குந்தகம் ஏற்பட்டுவிடும். பொதுக் காரியம் ஒருவரால் மட்டிலும் நடைபெற முடியாது; பலர் அதில் பங்கு கொள்ள வேண்டும். ஆனால் ஒரு நெருக்கடியான கட்டத்தில் ஒருவர் அவசிய நிமித்தம் இல்லாத நிலை ஏற்பட்டாலும் அக்காரியம் நடைபெற வேண்டும். 'நான் தான் இதில் முக்கியம்; நான் இல்லாவிடில் இது நடைபெற முடியாது' என்ற தன் முனைப்பு கூடாது. பங்கு பெறும் ஒவ்வொருவரும் இதனை நன்கு உணர வேண்டும். புலவர் குழுவில் திரு. விசுவநாதம் முக்கியமானவர்; அவர் இல்லாமல் இது நடைபெற முடியாது. குழுவிலுள்ள 49 பேர்களில் ஓரிருவர் உடல் நலமின்றி, வேறு ஒரு முக்கியமான காரணத்தால் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டால் கூட்டத்தை நிறுத்த முடியுமா? முடியாதல்லவா? கூட்டம் நடைபெற்றே தீரும்.

''நான் தான் இருக்கின்றேன் துணைவேந்தராக. இந்த நிருவாக இயந்திரத்தில் நான் வேக உருளை (Speed wheel) ஆகவும் உள்ளேன்; இயக்கும் பொறியாகவும் உள்ளேன். நான் இல்லாவிட்டால் பல்கலைக் கழகம் இயங்காது என்று நினைப்பது பூனை தான் கண் மூடிக் கொண்டால் பூலோகமே இருட்டாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வது போல என்றாகிவிடும். நான் ஒரு மாதம் வெளியில் செல்கின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள், மூன்று உள்ளூர் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் முக்கியமான விஷயத்தை முடிவு செய்ய நிர்வாகம் இயங்கும். கொள்கையளவில் இல்லாத சாதாரண விஷயங்களைப் பதிவாளர் கவனித்துக் கொள்வார்.

''நிருவாக இயந்திரத்தில் துணைவேந்தரைப் போல் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள். கடைநிலை ஊழியர் ஒருவர் இல்லாவிட்டாலும் நிருவாகம் இயக்கத்தில் சிறிது தாமதப்படத்தான் செய்யும். பொது விஷயத்தில் யாரும்

அதிகமாக அலட்டிக் கொள்ளக் கூடாது. அப்படி அலட்டிக் கொண்டால் அவர்கள் மனநிலை கெடும்; உடல் நிலையும் பாதிக்கப்படும். உங்கள் பெண் திருமணம், பையன் திருமணம் என்றால் அலட்டிக் கொள்ள வேண்டியது தான். ஏனெனில் அதில் உங்கள் பங்கு இன்றியமையாதது. துறை நிகழ்ச்சியாக இருந்தால் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் இல்லாத நிலை ஏற்பட்டாலும் துறை இயங்கச் செய்யும். திறமையுடன் இயங்கலாம்; அல்லது இயங்காமற் போகலாம். ஆனால் நின்றுவிடாது'' என்று கூறி முடித்தவர், தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து ''மணி 7-30 ஆகிறது. நானும் விருந்துக்குப் போக வேண்டும். நீங்கள் அமைதியாக விடுமுறையில் ஊருக்குப் போகலாம்'' என்று விடை கொடுத்தார்.

அடுத்த நாள் முதல்வரைப் பார்த்து ''தெலுங்குத் துறைக்கு இப்பொறுப்பு விடலாம். தெலுங்குத் துறை தமிழ் புலவர் குழுவை வரவேற்றால் அஃது இன்னும் சிறப்பாக அமையும். நானும் திரு. ஜி. என். ரெட்டி, திரு ஜே. சென்னா ரெட்டி ஆகியவர்களிடம் பேசுகின்றேன்'' என்றேன். முதல்வரும் இந்த மாற்று ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார். நானும் தெலுங்குத் துறையினரைப் பார்த்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். அவர்களும் ''ஜமாய்த்து விடுகின்றோம்'' என்று உற்சாகமாகப் பேசினார்கள்.

விடுமுறை கழித்துத் திரும்பியவுடன் அவர்கட்கு நன்றி கூறத் தெலுங்குத் துறைக்குச் சென்றேன். ''நன்றாக நடைபெற்று விட்டது'' என்று மகிழ்ச்சி தெரிவித்தார்கள். திரு. சென்னாரெட்டி மட்டும் சொன்னார். ''யாரோ ஒரு புலவர் பேசும்போது 'திருப்பதி தமிழகத்திற்கு உரியது' என்ற தொனியில் பேசத் தொடங்கினார் திரு விசுவநாதம் அவர் பேச்சை அடக்கிவிட்டார். ''நாங்கள் விருந்தினர் களை வரவேற்றுமரியாதை செய்ய ஒப்புக் கொண்டோமே

யன்றி ''பட்டி மன்றம்' அமைக்க அல்ல'' என்பதை அறியாமல் பேசியதுதான் சிறிது வருத்தத்தைத் தந்தது. விருந்தினர்கள் மனம் புண்படக்கூடாது என்று எங்களில் எவர் ஒருவரும் திருப்பதி பிரச்சினை குறித்து வாயெடுக்க வில்லை. எங்கட்குப் பேசத் தெரியாது என்பதல்ல'' என்று கூறிமுடித்தார். நானும் ஏதோ சமாதானம் கூறினேன்; அதற்குமேல் பேச விரும்புவில்லை.

குமிழி—187

## 31. 'நமது உடல்' நூல் வெளியீடு

உயர்நிலைப்பள்ளிக் கல்வி ஏற்பாட்டில் பொது அறிவியல் (General Science) ஒரு பாடமாக உள்ளது அப்பாடத்திட்டத்தில் உடலைப்பற்றி ஒவ்வொரு வகுப்பி லும் சில பகுதிகள் சேர்க்கப் பெற்றுள்ளன. ஆறாண்டுகள் படித்துத் தேர்ந்த பிறகும் பெரும் பாலோருக்கு உடலைப்பற்றி அடிப்படையில் முழுமை யான அறிவு இருப்பதில்லை. பொது அறிவியல் கற்பிப் போருக்கும் எல்லாப்பகுதிகளையும் நன்கு கற்பிப்ப தில்லை; பெரும்பாலோருக்கு எல்லாத்துறைகளிலும் நல்ல அறிவு இல்லாமையாலும், போதுமான பாடத்தயாரிப்பு செய்யாமையாலும் இந்நிலைமை ஏற்படுகின்றது.

ஒரு மிதிவண்டி பழுது பார்ப்பவனுக்கு மிதிவண்டி யிலுள்ள எல்லாப்பகுதிகளும் நன்கு தெரியும். இங்ஙனமே பிற வாகனங்களைப் பழுது பார்ப்போருக்கும் அந்தந்த வாகனங்களைப் பற்றிய விவரங்கள்! அவை இயங்குவது பற்றிய நுணுக்கங்கள் எல்லாம் நன்கு தெரியும். ஆனால் உடலுக்கு ஏற்படும் ஊறுபாடுகளைப்பற்றி இவர்கட்கு

ஒன்றுந் தெரியாது. நமக்கு ஆண்டவன் அருளிய உடலைப் பற்றித் தெரிந்து கொள்ளாதிருத்தல் மிகவும் வருந்தத் தக்கது.

உடலின் உறுதி உடையவரே
    உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
    இனிய வாழ்வு தந்திடுமோ?[1]

என்ற கவிமணியின் வாக்கு சிந்திக்கத் தக்கது.

இந்த உலகில் இவ்வுடல் வாழ்க்கையைச் செவ்வனே கொண்டு செலுத்துவதற்கு வேண்டிய கருவி கரணங்கள் யாவும் நாம் பிறக்கும்பொழுதே இவ்வுடலில் அமைந்துள்ளன. இதயம், இரத்தம், மூளை, நரம்புகள், நுரை ஈரல்கள், இரைப்பை, சிறு நீரகங்கள், கல்லீரல் போன்றவையாவும் இந்த உடலின் பயணத்திற்குத் தேவையான உறுப்புகளாகும். உயிர்நிலையான இவ்வுறுப்புகள் யாவும் சரியான நிலையிலிருப்பின் சாதாரணத் தேவைக் கேற்றவாறும், எதிர்பாராது ஏற்படும் தேவைக் கேற்றவாறும் வியத்தகு முறையில் இவை செயற்படும். நம் பிறப்புடன் நாம் பெற்றுள்ள இந்த இயற்கைத் 'தளவாடங்களை'க் கையாளும் முறையைச் சரியாக அறிந்து கொள்வோமாயின் நம்முடைய உடல் பயணம் இனிதாகச் செல்லும். இது கருதியே தெய்வத் திருமூலரும்,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடப்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேனே[2]

1. கவிமணி : மலரும் மாலையும்—உடல் நலம் பேணல்—1
2. திருமந்திரம்—724.

என்று 'காயசித்தி உபாயத்தை'த் தெளிவாக உரைப்பர். மேலும் இந்த ஞானச் செல்வர்,

> உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான் என்று
> உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே[3]

என்று உடலோம்பலின் இன்றியமையாமையை வற்புறுத்திச் செல்வர்.

சமயப் பெருமக்கள் ஆலயங்களின் அமைப்பு முறை மானிட சரீரம் என்னும் ஆலயத்தின் புறச்சின்னங்கள் என்று கூறுவர். மானிட சரீரமே ஆலயங்களுள் மிகச் சிறந்தது என்று ஆன்றோர்களால் எல்லாக் காலத்திலும் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது. அண்டமெங்கும் குடி கொண்டிருக்கும் இறைவன் சிறப்பாக மானிட உடலில் வீற்றிருக்கின்றான் என்பது சமயக் கோட்பாடு. பல்வேறு முறையில் பயன்படும் உறுப்புகளடங்கிய இவ்வுடலைப்பற்றி உயர்நிலைப் பள்ளி வரையில் கல்வி கற்றவர்களும் அங்ஙனம் கல்லாது தமிழறிவு மட்டிலும் பெற்ற மற்றவர்களும் எளியமுறையில் அறிந்து கொள்வதற்கேற்றவாறு தமிழ் மொழியில் தக்க முறையில் அமைந்த உடலைப் பற்றிய நூல்கள் இல்லை. இந்தக் குறையைப் போக்கும் பணியில் ஈடுபட்டு ஓர் அழகிய நூலை எழுதத் துணிந்தேன். 'நமது உடல்' என்ற தலைப்பில் 64 விளக்கப் படங்களுடன் நூல் ஒன்று உருப்பெற்றது. இதில் உறுப்புகளின் துணையால் உடல் இயக்கம் தெளிவாக்கப் பெற்றுள்ளது. இத்தகைய பணியை ஒரு தெய்வப் பணியாகவே கருதுவேன்.

இந்த நூலை நம் கண் காணும் விவேகாநந்தராகிய தவத்திரு சித்பவானந்த அடிகளுக்கு அன்புப் படையலாக்க நினைத்து திருப்பாராய்த்துறை இராமகிருஷ்ண தபோ

---

3 திரு. 725

வனத்தில் அடிகளாரின் பிரதம சீடராகிய சாந்தானந்தா[4] ('பூர்வாசிரமம் இராமுடு என்ற பெயருடையவர்') என்பவருக்கு எழுதி அடிகளாரின் ஒளிப்படத்தை அனுப்புமாறு கேட்டிருந்தேன். சாந்தானந்தா இக் குறிப்பை அடிகளாரிடம் தெரிவிக்கவே, அவரும் விவேகாநந்த அடிகட்குப் படைக்குமாறு பணித்ததாகக் கடிதம் வந்தது; தம் படம் தருவதற்கு இசையவில்லை. நானும் 'என் கண் கண்ட விவேகாநந்தர் தவத்திரு சித்பவாநந்தரே' என்று தெரிவித்து அவருக்கே படைப்பதாக எழுதிவிட்டேன். சில நாட்களில்,

வங்கநாடு ஈன்ற நரேந்திரன் கண்ட
மாண்புறு கற்பனை வித்தைத்
தூங்கமார் கல்விச் சாலைகள் மலிந்த
தூயநல் தபோவன மாக்கிப்
பொங்கிய ஞானத் தீங்கனி தந்து
புவியெலாம் நுகர்ந்திடச் செய்த
எங்கள்மா முனிவர் சித்பவா நந்தர்க்
கிச்சிறு நூலுரித் தாமால்

என்ற பாடலின் மூலம் அடிகளாருக்கே அன்புப் படையலாக்கி முதற்படியை அவர் திருவடிகளில் சமர்ப்பிக்குமாறு சாந்தாநந்தாவுக்கு அனுப்பி வைத்தேன். இந்த நூல் என்னுடைய பதினெட்டாவது வெளியீடாகும். (சனவரி - 1966)

இந்த நூலில் தவத்திரு அடிகளாரைப் பற்றி நான் வைத்த குறிப்பு: ''தமிழ்கூறு நல்லுலகில் தவத் திரு சித்பவாநந்த அடிகளை அறியாதவர் இரார். கடந்த முப்பது ஆண்டுகட்கு மேலாகத் திருச்சிராப்பள்ளிக்கு

4. இவர் இப்பொழுது (ஏப்ரல்-1990 இல்லை. சில ஆண்டுகட்கு முன்னர் இறைவன் திருவடியை நிலை அடைந்தார்.

அண்மையில் சற்றேறக் குறைய பத்துக் கல் தொலைவி லுள்ள திருப்பராய்த்துறையில் இராமகிருஷ்ணதபோவனம், விவேகாநந்த வித்யாவனம் என்ற இரண்டு தாபனங்களை நிறுவி முறையே சமயப் பணியும் கல்விப் பணியும் புரிந்து வரும் தவச் செல்வர் இவர்; தம் பேச்சாலும் எழுத்தாலும் இப்பணிகளை மேலும் மேலும் துலக்கமும் விளக்கமும் அடையச் செய்து வரும் அருட்செம்மல், இன்றுள்ளார் கண் காணும் 'சுவாமி விவேகாநந்தர்'. அந்த அடிகளாரின் மறுபிறவியே இந்த அடிகளார் என்று கூறினும் சாலப் பொருந்தும். கடந்த இருபத்தைந்து யாண்டுகட்கு முன்ப தாகவே என் உள்ளத்தைக் கவர்ந்து என்னையும் ஓர் அடியனாக ஆட்கொண்ட பெருமான் இவர். இவருடைய அருள் நோக்கு சிறியேனது வாழ்க்கையினைப் புனிதமாக்கி வருகின்றது என்பது என் திடமான நம்பிக்கை. இவருடைய ஆசியால் என்னுடைய எழுத்துப் பணியும் கல்விப் பணியும் சிறக்கவேண்டும் என்பது என் பேரவா, இத்தகைய பெருந்தவச் செல்வருடைய திருவடிகளிலே இந்த நூலை அன்புடன் படைக்கின்றேன். இவருடைய ஆசியால் இந்நூலைப் படிக்கும் சிறார்கள் முதலியோ ருடைய வாழ்க்கையும் புனிதமாகும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.''

இவருடைய ஆசியால் இந்நூல் தமிழக அரசின் இரண்டாவது பரிசு ரூ 500/- பெற்றது. துறவிகட்குப் படைத்த இரு நூல்களும்[5] பரிசு பெற்றமை என்னைச் சிந்திக்க வைக்கின்றது. சித்பவானந்த அடிகள் இன்று நம்மிடையே இல்லை. நவம்பர் 19 நாள்-1985 இறைவன் இணையடிகளை அடைந்து விட்டார். அவர் பிரிவு என்னை மிகவும் வருத்தியது. 1943-லிருந்து என்னை ஆசிகள் கூறி அணைத்துக் கொண்டவர் அல்லவா?

5. தவத்திரு குன்றக்குடி அடிகட்கு அன்புப் படையலாக்கிய 'இராக் கெட்டுகள்' முதல்பரிசு பெற்றமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

## 32. குடும்பத்துடன் திருப்பதியில் குடியேறல்

1966-கோடை விடுமுறையில் காரைக்குடி புது நகரத்திற்கு (New Town) அருகிலுள்ள நூறு குறுக்கம் என்ற இடத்தில் அடுத்தடுத்துள்ள இரண்டு மனைகளை ரூ 4500/-க்கு வாங்கினேன். அதே ஆண்டு டிசம்பர் மாதம் ரூ 16000/-க்கு இலக்குமிபுர அக்கிரகாரத்தில் கெட்டி வீடு ஒன்று வாங்கினேன். 1966-மே மாதம் குடும்பத்தைத் திருப்பதிக்கு மாற்ற வேண்டும் என்று தீர்மானித்தேன். முதல் மகன் இராமலிங்கம் P.U.C. முடித்திருந்தான். இரண்டாவது மகன் இராமகிருஷ்ணன் மூன்றாவது படிவம் முடித்திருந்தான். இராமலிங்கத்தை பி.எஸ் சி (கணிதம், இயற்பியல், வேதியியல்) வகுப்பில் சேர்க்க முடிவு செய்தேன். பொறியியல் கல்லூரியில் சேர்க்க வேண்டும் என்ற முயற்சியைக் கை விட்டேன்—கணிதத்தில் 60% இல்லாததால். இந்த விழுக்காடு மதிப்பெண் பெற்றிருந்தால் காரைக்குடி அழகப்பர் பொறியியல் கல்லூரியில் கம்பன் அடிப்பொடியின் அருளால் ஓரிடம் கிடைத்திருக்கும்; அதற்கு ஊழ் இல்லை. இராமகிருஷ்ணன் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படித்தமையால், தவத்திரு சித்பவாநந்தர் அடிகள் யோசனைப்படி சென்னை தியாகநகர் இராமகிருஷ்ணர் உயர்நிலைப் பள்ளியிலும் அதன் மாணவர் விடுதியிலும் சேர்க்கத் திட்டம் இட்டிருந்தேன். திடீரென்று அவனுக்கு உடல் நிலை கெட்டதால் அதற்குரிய நுழைவுத்தேர்வு எழுத முடியாமல்போயிற்று; ஆதலால் இத்திட்டம் கைவிடப் பட்டது.

திருப்பதியில் 1964-65இல் மைய அரசின் கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளி திறக்கப் பெற்றுக் கபில தீர்த்த சாலையில் திருமலை-திருப்பதி தேவஸ்தானக் கட்டடத்தில் இயங்கி வந்தது; இதில் ஆங்கிலம் பாட மொழியாக இருந்தது; வடமொழி, இந்தி கட்டாயப் பாடங்கள். இராமகிருஷ்ணன் காரைக்குடியிலேயே இந்தி மத்தியமா தேர்வு பெற்றிருந்தமையால் அதில் சிரமம் இல்லை. வடமொழி மட்டிலும் படிக்க வேண்டும். இதனால் இரண்டு திங்கள் (ஏப்பிரல் மே 66) மீனாட்சி-சுந்தரேசுவரர் உயர் நிலைப் பள்ளி வடமொழி ஆசிரியர் செளமிய நாராயண அய்யங்கார் அவர்களிடம் தனிப் பயிற்சி பெறச் செய்தேன்; இரண்டு மாதத்திற்கும் ரூ 50/- சிரமப் படியாகத் தந்ததாக நினைவு. ஏற்கெனவே இந்தி படித்திருந்ததால் வடமொழிப் பிடிப்பு விரைவாக ஏற்பட்டுவிட்டது. திருப்பதியில் மைய அரசுப் பள்ளியில் நுழைவுத் தேர்வு எழுத வேண்டியிருந்ததால் இந்த ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று. தவத்திரு சித்பவா நந்த அடிகள் "ரெட்டியார் எங்கும் சரி வராவிடில் பையனை உங்கள் ஆதரவில் வைத்துக் கொண்டு பயிற்று வது மேல். உங்களுக்குத்தான் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கத் தெரியுமே" என்றும் சொல்லியிருந்தார்கள்.

1966-மே மாதம் முதல் வாரத்தில் எதிர்பாராத வண்ணம் நோய் வாய்ப்பட்டான் இராமகிருஷ்ணன். வலது முழங்காலில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது; ஒரு வாரம் துடிதுடித்துப் போனான். டாக்டர் P.K. நாராயண அய்யரிடம் காட்டினேன். அவர் சோதனை செய்து இதய நோய் என்று கண்டறிந்து அதற்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தார். திருப்பதிப் பயணம் நெருங்கி வரத்தொடங்கியது; இன்னும் பத்து நாட்கள்தாம் இருந்தன. கால் வலியோ தாங்க முடிய வில்லை. அறுவை சிகிச்சை செய்து பார்க்கலாம் என்று தீர்மானித்தார். ஒரு குறிப்பிட்ட நாளில் அறுவைக்கு

ஆயத்தம் செய்யப் பெற்றது. மரத்துப் போகும் ஊசி போட்டு வலியின்றிதான் செய்தார். பையன் அறையி லிருந்து "நாயனா, நாயனா" என்று கதறியது இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. அறுவை சிகிச்சை யில் கில் நிறத்தில் குருதி கொட்டியது. டாக்டரே வியந்து போய் "இப்படிப்பட்ட நோயைக் கண்டதில்லை" என்று கூறினார். சிகிச்சை முடிந்து கட்டுப் போட்டதும் கால் வலி அறவே நீங்கியது; அறுத்ததால் உண்டான வலி சிறிது இருந்தது. நான்கு நாள் கட்டுப் போட்டார். "இனி அஞ்ச வேண்டியதில்லை. பயணம் தொடங்கலாம். திருப்பதி சென்றபின் ஒரு நான்கு நாள் கட்டுப் போட்டார். போதும்" என்று சொல்லி விட்டார். பத்து நாட்களுக்கு மேல் குதிரை வண்டியில் மருத்துவ மனைக்குப் போய் வரவேண்டியிருந்தது. பையனை வண்டியில் தூக்கித்தான் உட்கார வைக்க வேண்டும்.

ஒரு லாரி அமர்த்தி பெரும்பாலான சாமான்களை புதிதாக வாங்கிய வீட்டின் மாடி அறையிலும், கீழேயுள்ள ஓர் அறையிலுமாகப் போட்டு விட்டேன். இந்த இரண்டு அறைகள் போக மீதியுள்ள இடத்தில் ஒரு குடும்பம் தாராளமாக இருக்கலாம். இப்பகுதியை ரூ 45/- வாடகைக்கு விட்டேன். பதினைந்து ஆண்டுகள் வீடு வாடகையில் இருந்தது; பயிற்சிக் கல்லூரிப் பணியாள் ஆறுமுகம் பிள்ளையின் பொறுப்பில் (மேற்பார்வையில்) விட்டிருந்தேன்; வாடகையை வாங்கி மதுரை வங்கியில் போடுமாறு ஏற்பாடு செய்திருந்தேன். காரைக்குடியில் கொடுக்கல் வாங்கல் கணக்குகள் இருந்ததால், யு.கோ. வங்கி, மதுரை வங்கி, இந்தியன் ஓவர் சீஸ் வங்கி இவற்றில் சேமிப்புக் கணக்குகளும் நிலையான டெபாசிட்டுகளும் இருந்து வந்தன. தனியார்களிடமும் புரோ நோட்டுக் கணக்குகள் இருந்து வந்தன.

திருப்பதி வாழ்க்கைக்குத் தேவையான 4 மெத்தைகள், சமையலுக்கு வேண்டிய தட்டுமுட்டு சாமான்கள் இவற்றை மூன்று, நான்கு மூட்டைகளாக நன்கு கட்டி நான் பயணம் செய்த இருப்பூர்தி வண்டியிலேயே ஏற்றி விட்டேன்; அதற்குரிய கட்டணத்தையும் செலுத்தி விட்டேன். விழுப்புரத்தில் வண்டி மாறும்போது இருப்பூர்தி நிர்வாகப் பொறுப்பில் சாமான்களும் மாறும் வண்டியில் ஏற்றப் பெறும். எல்லா ஆடைகளையும் இரண்டு பெரிய பெட்டிகளில் அடைத்து அனுப்பி விட்டேன். சில ஆடைகளைப் படுக்கைக்குள்ளும் வைத்துக் கட்டியிருந்தேன்.

தேவஸ்தான சத்திரத்தில் தினம் ரூ. 5/- வாடகையில் ஒரு பெரிய அறையை வாங்கிக் கொண்டேன். நாள் தோறும் முதல் வேலையாக சத்திரத்திலுள்ள மருத்துவமனையில் புண்ணைத் தூய்மை செய்து கட்டு போடும் பொறுப்பை மேற்கொண்டேன். இரண்டு நாட்கள் அலர்மேல் மங்காபுரத்திலுள்ள தாயார் சந்நிதி கோவிந்தராஜ சுவாமி சந்நிதி, இராமர் கோயில் சந்நிதி, கபில தீர்த்தம் இங்கெல்லாம் காலை நேரங்களில் சென்று சேவிப்பதும், பகலுணவிற்குப் பிறகு சிறிது ஓய்வு கொள்வதும், மாலை நேரங்களில் வீடு தேடுவதுமாக பத்து நாட்கள் கழிந்தன. இடையில் இரண்டு நாட்கள் திருமலை சென்று வேங்கடவனைச் சேவித்தோம். ஆகாய கங்கை, பாபநாசம், கோகர்ப்பம் முதலிய இடங்களுக்குச் சென்று வந்தோம். என் மனைவிக்கும் சிறார்கட்கும் இது முதல் முறைப் பயணமாதலால் இதனை நன்கு மகிழ்ச்சி யுடன் அநுபவித்தனர். மலையில் இரண்டு நாட்கள் தங்கி யிருந்தோம். மலை மேலும் கீழும் தங்கியிருந்த காலத்தில் சிற்றுண்டி, பகல் உணவு முதலியவை உணவு விடுதிகளில் தான் கொண்டோம்.

ஒரு வாரத்திற்குள் வீடு கிடைத்தது. மத்திய அரசுப் பள்ளியின் எதிரிலேயே ஒரு வீடு அமைந்தது. ரூ.80/-

மாத வாடகை; ரூ.10/- தண்ணீர்க் கட்டணம். தண்ணீர் குழாய்மூலம் வினியோகிக்க ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. சமையல் அறை, உணவு உண்ணும் அறை, குளியல் அறை, கழிப்பறை, படுக்கையறைகள், வேறு இரண்டு அறைகள் தனித்தனியாக இருந்தன; புழக்கடையில்தான் வெந்நீர் போட்டுக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டோம். விறகு அடுப்புதான். திருப்பதியில் கியாஸ் அடுப்பு அப்போது இல்லை. நான்கு ஆண்டுகள் இந்த இல்லத்தில் தங்கியிருந்தோம். இதன் உரிமையாளர் திரு உமாமகேசுவரெட்டி மிகவும் நல்லவர்; நன்றாகப் பழகுவார். குறைபாடுகளைத் தெரிவித்தால் உடனே நீக்குவார். இந்த இல்லத்தில் இருந்தபோது மூத்தவன் இராமலிங்கம் பி.எஸ்சி. டிகிரி படிப்பை முடித்துக் கொண்டான்; இளையவன் இராமகிருஷ்ணன் எட்டு ஒன்பது, பத்து வகுப்புகளை முடித்துக் கொண்டு தனியாக மெட்ரிகுலேஷன் படித்து வெற்றியடைந்தான். இது பற்றிய விவரங்கள் ஒரு தனிக் குமிழியில் காட்டப் பெற்றுள்ளன.

குமிழி—189

# 33. இராமலிங்கம்

இவன் என் முதல் மகன். பள்ளியிறுதித் தேர்வுக்குரிய ஆண்டில் (11—வது வகுப்பு; 6-ஆம் படிவம்) பயிலும் போதுதான் இவனைக் கவனிப்பதற்கு திரு R. செளந்திர ராஜ அய்யங்கார் என்ற அறிவியல் ஆசிரியரை ஏற்பாடு செய்திருந்தேன். மாதம் ஒன்றுக்குச் சிரம தானமாக ரூ.20/- தந்ததாக நினைவு. பத்து வயதிலிருந்து இருபது வயது வரை மாணாக்கர்களை நன்கு கவனிப்பது மிகவும் இன்றியமையாதது. குழுவாகக் கூடி ஊர் சுற்றுவான்.

இந்த வயதில் எழும் பல்வேறு உணர்ச்சிகளை மடைமாற்றம் செய்து பயனுள்ள முறையில் திருப்பாவிடில் பிள்ளைகள் குட்டிச் சுவர்களாகி விடுவார்கள். படிப்புச் சூழ்நிலையாவது இருக்கட்டும் என்றுதான் தனிப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தேன். தனிப் பயிற்சி பொறுப்புள்ள ஆசிரியர்கள் வீட்டிலேயே ஒரு சிறு பள்ளி வைத்திருப்பார்கள். எல்லோரையும் நன்கு கவனிக்க முடியாத நிலையும் உருவாகும். மாணாக்கர்களிடம் எந்தப் பாடத்தில் அறிவு போதாது என்பதைத் தெரிந்து கொண்டு அக் குறையை நீக்கினால் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்' மாணாக்கர்களிடமே 'நாம் முதலாவதாகத் தேற வேண்டும்' என்ற உந்து விசை இருந்தால்தான் ஆசிரியர் கவனிப்புக்குப் பொருள் உண்டு; இஃது இல்லாவிடில் கழுதைகளைக் கட்டி ஹோமம் வளர்ப்பது போலாகும். இராமலிங்கத்திடம் நான் நினைத்த அளவுக்கு இந்த உந்து விசை சரியாக அமையவில்லை என்பதை பல நிகழ்ச்சிகளால் நான் கணித்திருந்தேன்.

சிறுவயதிலேயே தட்சிண பாரத இந்தி பிரச்சார சபையினர் நடத்தும் இந்தித் தேர்வுகளில் முதல் மூன்று தேர்வுகளிலாவது தேறியிருந்தால் இந்த அறிவு பணியாற்றும் இடத்திற்கேற்ப எய்ப்பினில் வைப்பாகப் பயன்படும் என்று இரு சிறுவர்களையும் இந்தித் தனிப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தேன். இராமலிங்கம் மூன்று தேர்வுகளில் வெற்றி பெற்றான்; இராமகிருஷ்ணன் இரண்டு தேர்வுகளில்தான் வெற்றி பெற முடிந்தது. திருப்பதிக்குக் குடும்பம் மாறியதால் மூன்றாவது தேர்வுக்கு முயலவில்லை. இராமலிங்கம் 'மத்யமா' என்ற இரண்டாவது தேர்வில் தேறவில்லை. இதில் தேர்ச்சியடையாமல் மூன்றாவது தேர்வு எழுத முடியாது. முதல் தேர்வு எழுதாமலேயே இரண்டாவது தேர்வுக்கு உட்காரலாம். இரண்டாவது தேர்வில் தேறாத நிலையை இரகசியமாக வைத்துக் கொண்டு பயிற்சி தரும் ஆசிரியரை மாற்றிக்

கொண்டான். அவரிடமும் தான் தேர்ச்சி பெறாமையைத் தெரிவிக்கவில்லை. தேர்வுக்குப் பணம் செலுத்தப்பட்டு விட்டது. தேர்வு நெருங்கிய சமயம்தான் தேர்வு எழுத முடியாது என்பதை அறிந்து கொண்டான். தேவ கோட்டையில் தேர்வு எழுத வேண்டும். இரண்டு நாட்கள் செலவுக்கு பணம் தந்து அனுப்பினேன்; தேர்வுக்குப் போய் வந்ததாகவும் நன்றாக எழுதியதாகவும் சொன்னான். இது நாடகம் என்பது பின்னால் தெரிய வந்தது. 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரிந்து விடும்' என்ற பழமொழி இத்தகைய நிகழ்ச்சிகளால் திரண்ட 'நவநீதம்' அல்லவா? திரும்பவும் முதல் ஆசிரியரிடமே படிக்க ஏற்பாடு செய்து இரண்டு தேர்வு களிலும் (இரண்டு, மூன்று) வெற்றி பெற்றான்.

பள்ளியிறுதித் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தான். நான் நினைத்த அளவுக்குப் பெற வில்லை. காரணம் வெளிப்படை. படிப்பில் கவனம் இல்லாது ஊர் சுற்றியிருக்கின்றான். P.U.C.யிலாவது நன்கு படித்து நல்ல மதிப்பெண்கள் பெறலாம் என்று நினைத்து அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்தேன். அவை யும் பயன்படவில்லை. விசுவநாதன் என்பவர் அழகப்பா கலைக் கல்லூரி கணித ஆசிரியர். அவர் வகுப்பு நடத்து வதில் திறமையற்றவர் என்பதாகவும், ஆனால் தனிப் பயிற்சி தருவதில் வல்லவர் என்றும் கேள்விப்பட்டதுண்டு. என்தோழ ஆசிரியர்திரு. கிருஷ்ணஅய்யங்கார்மூலம்அவரை என் மகன் இராமலிங்கத்திற்குத் தனிப்பயிற்சி தருவதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். வாரத்தில் மூன்று நாள் (நாளொன்றுக்கு ஒரு மணி நேரம்) கவனிக்க வேண்டும்; ரூ.200/- சிரம தானம். ஆண்டு இறுதியில் (கோடை விடுமுறையில்) அவருக்குத் தொகை வழங்குவதற்காக அவர் இல்லம் சென்று ரூ.200/- தந்தேன். "இரண்டு நாட்கள்தாம் வந்தான்; அதற்கு மேல் வரவே இல்லை; இதற்கா பணம்?" என்றார். "பேசியபடி கொண்டு

வந்தேன்'' என்றேன். இந்நிலையில் வாங்கமாட்டார் என்று நினைத்தேன். வாங்கிக் கொண்டார். ''சிரமம் இல்லாமல் வாங்கிக் கொண்டார் போலும்!'' என்று கருதினேன். தானம் வாங்கும் பிராமணர் அல்லவா? பின்னர் அவர் குடும்ப நிலை சரி இல்லை என்றும், மனைவி யுடன் ஒத்து வாழவில்லை என்றும் அறிந்தேன். ஆசிரியருக்கு மனநிலை சரியாக இல்லை என்றால் எப்படி உற்சாகத்துடன் பாடம் சொல்ல முடியும்? கிருஷ்ணய் யங்காரை நம்பி செய்த ஏற்பாடு பயனற்றுப்போயிற்று. இராகவ அய்யங்கார் புகழ்பெற்ற பாத்திரக்கடையினர் மகன் திரு, விசயராகவனை வைத்திருந்திருக்கலாம்; அவர் உற்சாகமாகப் பாடம் சொல்வார். ''அதை இப்போது நினைத்துப் பயன் என்ன?'' என்று வாளா இருந்து விட்டேன்.'' பையன் வரவில்லை'' என்று விசுவநாதன் ஒரு கடிதம் எனக்கு எழுதி இருக்கலாம்; அதை அவர் செய்ய வில்லை. இப்படியெல்லாம் நடைபெற்றது பையனுடைய ஊழ் என்று மன அமைதி கொண்டேன்.

இராமலிங்கம் P.U.C, படித்த ஆண்டு பதினேழு முறை மாணவர்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்போது கல்லூரி முதல்வராக இருந்தவர் டாக்டர்வ.சுப.மாணிக்கம்.யார் முதல்வராக இருந்தாலும் வேலைநிறுத்தம் என்றுஒன்றுநேர்ந்தால் யாராலும்ஒன்றும் செய்ய முடியாது. மாணவர் விடுதியில் ஏதாவது கலாட்டா நேரிட்டால் அது பெரும்பாலும் அரிசன மாணவர்கள் தாம் காரணமாக இருப்பர். வேறு இனத்தைச் சார்ந்தவர் களும் காரணமாக அமையலாம் அடிக்கடி வேலை நிறுத்தம் இருந்தமையால் பாடங்கள் சரியாக நடைபெறுவதில்லை. தேர்வுக்குரிய பகுதிகள் முற்றிலும் கற்பிக்க முடிவதில்லை. வேகமாக பகுதிகள் முடிவு பெற்றனவாகக் ''கைதட்டல்'' செய்தாலும் பயன் இல்லை. உணவு கொள்வதில் நிதானம் மேற்கொள்ளுதல், நன்றாக மென்று விழுங்குதல், நேரம் விட்டு விட்டு உண்ணல், பல்வேறு வகை உணவுகளை

உண்ணல், செரிமானம் ஆவதற்கு நேரம் தருதல்—போன்ற முறைகள் மனத்தினால் கொள்ளக் கூடிய பாடங்களுக்கும் பொருந்தும். உணவுக்குச் செரிமானம் இன்றியமையாதது போல, பாடத்தை மனத்தில் வாங்கிக் கொண்டு அசை போடுதலும் இன்றியமையாதது. பின்னால் ஆசிரியப் பயிற்சி பெற்றபோது கல்வி உளவியலால் இத்தெளிவு ஏற்பட்டாலும், மாணவனாக இருந்தபோதும் இந்தஅறிவு, பயிலவேண்டிய முறை முதலியவற்றில் தெளிவு இருந்தது. திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றவர்கட்கு இவை நல்லஇரண்டாவது இயற்கையாக (Second—nature) அமைந்துவிடும்.

திருப்பதியிலிருந்து விடுப்பு வாங்கிக்கொண்டு 3 முறை வந்து இயற்பியல், வேதியியல் பாடங்களை இராமலிங்கத் திற்கும்மாணிக்கவாசகனுக்கும் (கணக்குத் தனிக்கையாளர் சொ. நாராயணன் செட்டியாரின் மகன்) சொல்லிப் பகுதி களை முடித்தேன். நான் அங்ஙனம் வந்து சொல்லி யிராவிடில் இருவரும் தேறியிருக்க மாட்டார்கள். பி.எஸ்சி யில் கூட இராமலிங்கத்திற்கு இடம் கிடைத்திராது. திருப்பதி வந்த பிறகும் ரிஷிவேலி பையன் ஜான் என்பவனோடு சேர்ந்து விளையாட்டு மைதானத்தில் காலங்கழித்துக் கொண்டு நன்கு படிக்கவில்லை. அங்க வேதியியல் (Organic Chemistry) நான் கற்பிப்பதாகச் சொன்னேன். நன்றாகப் படித்தால் 90 விழுக்காடு வாங்க லாம்; படிக்காவிட்டால் தேறமுடியாது போதற்கும் வாய்ப்பு உண்டு என்றும் எச்சரித்தேன்; இதற்குச் செவி சாய்க்கவில்லை. 29% (30% வாங்கவேண்டியது) பெற்று தேர்வில் தோல்வியுற்றான். தேர்வாளர் 30 போட்டிருக்கலாம். அப்படிப் போட்டிருந்தால் பையன் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பும் முதல் நிலையும் பெற்றிருப்பான். என்ன செய்வது? ஊழ் என்று வாளா இருந்து விட்டேன். ஜான் முதல் வகுப்பில் சேர்ந்து விட்டான்.

ஒரு தடவைப் படிப்பே வேண்டாம்'' என்றும்சொல்லி விட்டான். இதைக் கேட்டபோது நான் அடைந்த வேதனைக்கு அளவில்லை. எப்படியோ சரிப்படுத்தி ஐந்து ஆண்டு தேர்வுத்தாள் கட்கு (5+5 தாள்கள்) நூல்களைப் பார்த்து விடைகளை எழுதி வர ஏற்பாடு செய்தேன்; ஒப்புக்கொண்டு அவ்வாறு செய்தான். செப்டம்பர் தேர்வில் 80%க்கு மேல் பெற்று தேர்வில் வெற்றியடைந்தான். அப்போது நடைமுறையிலுள்ள தேர்வு விதிகளின் படி இப்படித் தேறின் மாணவர்கட்கு 'வகுப்பு' சொல்லப் பட மாட்டாது (No Classification). இவர்கட்குத் திரு வேங்கடவன்பல்கலைக் கழகத்தில் இடம் இல்லை.

பணம் கட்டி விடைத்தாளைப் பார்த்தேன். கவன மாகத் திருத்தி இருந்தால் 50%க்கு மேல் கிடைத்திருக்கும். (Manufacture of Grinard Reagents) என்ற கட்டுரை எழுதித்தந்திருந்தேன். அவனுக்குக் கற்பித்த பேராசிரியர்க் குக் கூட அதிசயிக்கும் படி கட்டுரை அமைந்திருந்தது. வகுப்புத் தேர்வில் இதற்கு 18/20 கிடைத்திருந்தது. இந்த விடைக்குப் பல்கலைக்கழகத் தேர்வில் 8/20 என்று தான் மதிப்பீடு செய்திருந்தார். அப்போதைய விதிப்படி இரண்டாவது மதிப்பீடு இல்லை; மதிப்பெண்களைக் கூட்டிதான் பார்க்கலாம். தேர்வாளர் கடப்பையைச் சேர்ந்தவர், கடப்பை சென்று அவரைச் சந்தித்து நிலைமையை விளக்கினேன். ஏதோ காரணம் காட்டி விடைத்தாள்களைத் திருப்பியனுப்பச் சொல்லி இரண் டாவது முறை நோக்கச் சொல்லி வேண்டியும் அவர் அதற்கு ஒருப்படவில்லை. பல ஆண்டுகளாகத் தேர்வுகளில் எவ்வளவோ ஊழல்கள் நடை பெற்றுக் கொண்டுவருவதை நான் அறிவேன். நேரிய முறையில் நீதி வழங்கச் செய்ய என்னால் முடியவில்லை. இதுவும் பையனுடைய ஊழ் என்று வாளா இருந்துவிட்டேன்.

அடுத்து, இயற்பியல் M.Sc' அல்லது மூன்று வருட B.E (அப்போது B,Sc பட்டதாரி கட்கு இந்த வாய்ப்பு

இருந்தது). படிக்கவைக்க முயன்றேன். B.E படிப்பதற்கு பெங்களூர் IndianInstituteof Scienceக்கும்சென்னை-குரோம் பேட்டையிலுள்ள MITக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப் பெற்றன. பெங்களூரிலிருந்து மறுமொழி இல்லை. முதல் வகுப்பு மாணாக்கர்கட்கே கிடைக்காதபோது இவனுக்கு எப்படிக் கிடைக்கும்? என்னுடைய அரிய நண்பரும் மிகவும் செல்வாக்குள்ள வருமான திரு. சுந்தரம் அய்யங்கார் மூலம் (குரோம்பேட்டை அய்யங்கார்) முயன்றேன். அவர்எனக் காகத்தனது காரில் அழைத்துச் சென்று பலரைப் பார்த் தார்:பயன்இல்லை. ஊழ் இல்லை என்று வாளர் இருந்து விட்டேன். ஒழுங்குமுறைகளைக் கடைப்படிக்காத் பையனை என்ன செய்வது? என்று புரியவில்லை. I. I. T யில் (சென்னை) M.Sc. யில் சேர்த்து விட்டால் அந்த நிறுவனத்தின் விதிமுறைகளே இவனைச் சீர்ப்படுத்தும் என்று நினைத்து அதில் சேர்க்க முயன்றேன். இங்கு பாடத்தில் பெற்றுள்ள மதிப்பெண்களைத்தான் பார்ப் பார்கள்; அந்தப் பாடத்திலுள்ள அறிவை இது விளக்கு வதாகக் கொள்வார்கள், இந்த நியதியால் இவனுக்குத் தேர்வு எழுத வாய்ப்பு தந்தார்கள். நானும் பையனுடன் வந்து I.I.T விடுதியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தேன்.

இங்குப் பள்ளியிறுதித் தேர்வில் வாங்கினமதிப் பெண் 10%, PUCயில் வாங்கின மதிப்பெண் 20%, பி,எஸ்சி தேர்வில் பெற்ற மதிப் பெண் 50% (ஆக 80%) இங்கு நடைபெறும் எழுத்து முறைத் தேர்வில் 10% வாய்மொழித் தேர்வில் 10% (ஆக 20%) கூட்டி இருந்த மதிப்பீட்டில் முதல் 15 பேர்கட்கு இடம் அளிக்கப் பெறும் என்பது நடை முறை. இது சிறந்த முறை. ஒரு பையனது படிப்பறிவைப் பள்ளியிறுதித் தேர்விலிருந்தே கவனித்து வரும் முறை யாதலால் முறையற்ற முறையில் பி.எஸ்சியில் மதிப்பெண் பெறும் வழக்கத்தைத் தகர்த்தெறியும் முறையாகவும் இருந்தது. அனைவராலும் வரவேற்கக் கூடியதாகவும் இருந்தது திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலிருந்து

மற்றொருபையனும் (மதனபள்ளியைச் சேர்ந்தவன்) சேர்வதற்காக வந்திருந்தான் அவன் P.U.C. படிக்காமல் 12வது வகுப்பு படித்து பட்டப்படிப்பில் சேர்ந்தவன் 12வது வகுப்பில் அக்காலத்தில் பள்ளியில் 25% மதிப்பெண்களும் தேர்வுகளில் 75% மதிப்பெண்களும் சேர்க்கப் பெறும். இது நல்ல முறையாக இருப்பினும் பெற்றோர்களின் செல்வாக்கால் 23/25 வரையும் கணிதம் போன்ற பாடங்களில் 25/25 பெறும் வாய்ப்பும் இருந்தது. இறுதியான மதிப்பீட்டில் இராமலிங்கம் 77½யும் மதனபள்ளி பையன் 782ம் பெற்றனர். ½ மதிப்பெண் குறைவால் இராமலிங்கத்திற்கு இடம் கிடைக்காது போய்விட்டது. மதனபள்ளிப் பையனுக்கு இடம் கிடைத்தது.

இப்போது என் மனம் சோர்வுற்றதுபோல் என் வாழ்க்கையில் எந்தக் காலத்திலும் சோர்வுறவில்லை. I. I. T யின் முடிவு பிற்பகல் 3 மணிக்குத் தெரிந்தது. பையனைத் திருப்பதிக்கு அனுப்பிவிட்டு நான் மட்டிலும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 2. 45க்கு வந்து சேர்ந்தேன். இங்கு M.Sc இடத்திற்கு மனுப்போடுவதற்கு முன்னரும், அதற்குமுன் பல தடவையும் துணைவேந்தர் N. D. சுந்தரவடிவேலுவைப் பார்த்து ஓரிடத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தேன். அவர் பையன் கோரும் நான்கு இடங்களில் கோவை P.S.G. கல்லூரிக்கு முதல் இடம் தருமாறு சொல்லி இருந்தார்; அங்ஙனமே மனுவிலும் குறித்திருந்தோம். துணைவேந்தர் தில்லிக்குப் போயிருந்ததால் அவரைப் பார்க்க முடியவில்லை. மாணவர்களைச் சேர்க்கும் பொறுப்பிலுள்ள துணைப் பதிவாளரைப் பார்த்தேன். அவர் பையன் பெயரைக் கேட்டார்; சொன்னேன். ''அவனுக்கு இடம் கிடைத்து விட்டது; இன்றுதான் பட்டியலை அஞ்சலில் சேர்த்தேன்; நீங்கள் பையனை இட்டுக் கொண்டு கோவை செல்லலாம்'' என்றார். களைத்துப் போய் வெய்யலில் வந்த எனக்கு குளுகோஸ் சேர்த்த குளிர்ந்த எலுமிச்சை சாறு

பானம் பருகியது போன்ற உணர்வு இச்செய்தி நல்கியது. "இவனைச் சேர்ப்பதற்குப் பல இடங்களில் முயன்று ஏமாற்றமடைந்த எனக்கு இந்தப் பட்டியலை என் கண்ணால் பார்ப்பதற்கு வாய்ப்பு தருவீர்களா?" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டேன். துணைப்பதிவாளர் என் முகத்தில் படர்ந்திருந்த கவலைக் குறிகளைக் கண்டு கழிவிரக்கம் கொண்டு இரும்பு பீரோவைத் திறந்து பட்டியலை எடுத்துக் காட்டினார். பல்கலைக் கழகப் பகுதியில் 15 பேருக்கும் துணைவேந்தர் பகுதியில் உ பேருக்கும் இடம் கொடுக்கப்பெற்றிருந்தது; இராமலிங்கத்தின் பெயர் இரண்டில் ஒன்றாக இருந்தது. துணைப்பதிவாளருக்கு நன்றி தெரிவித்துவிட்டு மாலை ஐந்துமணி இருப்பூர்தியில் திருப்பதிவந்து சேர்ந்தேன்.

மறுநாளே பையனைக் கூட்டிக் கொண்டு கோவை சென்றேன். ஓர் உணவு விடுதியில் தங்கி நீராடி சிற்றுண்டி கொண்டு P. S. G. கலைக் கல்லூரி சென்றேன். முதல்வர் D. K. P. T. வரதராசனைப் பார்த்தேன். அவர், "பட்டியல் வந்து விட்டது. இராமலிங்கத்தின் பெயர் அதில் உள்ளது. ஆனால் துணைவேந்தர் பகுதி தனித் தாளில் தட்டச்சு செய்து பட்டியலில் ஒட்டப் பெற்றிருப்பதால் ஒரு சிறு ஐயம் தோன்றியுள்ளது. துணைவேந்தர் தில்லி போயிருக்கின்றார். நாளை காலையில் திரும்புகின்றார். இடம் விஷயமாகத் தன்னைத் தவிர பிறரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளக் கூடாது என்பது துணைவேந்தர் கட்டளை, நாளை தில்லியிலிருந்து திரும்புகின்றார். முதல் வேலையாக அவருடன் தொடர்பு கொண்டு ஐயத்தைப் போக்கிக் கொள்வேன். இப்போதே உணவு விடுதியில் இடம் தருகின்றேன். பணம் கட்டிச் சேர்ந்து கொள்ளுங்கள். நாளை கல்லூரியில் பணம் கட்டிச் சேர்ந்து கொள்ளலாம்" என்றார். அப்படியே செய்து உணவு விடுதியில் தங்கிவிட்டோம். மறுநாள் கல்லூரியிலும் சேர்த்துவிட்டேன். M. Sc. வகுப்புகள் (இயற்பியல், வேதியியல்) P. S. G. பொறியியல் கல்லூரி

யில் நடைபெற்றன; அவற்றில் பயிலும் மாணவர்கட்கும் பொறியியல் கல்லூரி மாணவர் விடுதியில் இடம் தரப் பெற்றிருந்தது. படிப்பதற்கு நல்ல சூழ்நிலை; நல்ல சத்துணவு. இயற்பியல் பேராசிரியர் வேங்கடேசுவரலு என்ற ஆந்திரர். மாணவர்களிடம் கண்டிப்பாகவும் இருப்பார்; அன்பும் காட்டுவார். ஒழுங்கு முறையை வற்புறுத்துவார். கல்லூரியிலும் நல்ல சூழ்நிலை.

மாணவர் விடுதியிலும் கல்லூரியிலும் சம்பத் என்ற நன் மாணாக்கன் வகுப்புத்தோழனாக அமைந்தான். என்ன ஏற்பாடுகள் இருந்தும், சூழ்நிலைகள் அமைந் திருந்தும் பையன் படித்தால்தானே! சிரமப்பட்டு இடம் வாங்கினதைப் பையன் நன்கு அறிவான். அப்படியிருந்தும் நன்கு படிக்கவில்லை. முதல் ஆண்டில் 49 % தான் வாங்க முடிந்தது, 45% வாங்கினால் இரண்டாவது ஆண்டு வகுப்பிற்குப் போகலாம். இரண்டாவது ஆண்டில் பெற்ற மதிப்பெண்ணுடன் முதல் ஆண்டு பெற்ற மதிப்பெண்ணும் சேர்ந்து தேர்வுமுடிவாக அமையும். இதில் 54% தான் இராமலிங்கத்திற்குக் கிடைத்தது. சம்பத் முதல் வகுப்பில் தேறினான். 54% பெற்றதைப் பற்றி வருந்தவில்லை. நன்கு படிக்காததால் ஏற்பட்ட வருத்தம்தான் இன்னும் இருந்து வருகின்றது. மந்தமதியினன் என்றால் வருத்தம் இராது. கூரிய அறிவுடையவன் இப்படிக் கெட்டானே என்பதுதான் வருத்தம்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.[1]

என்ற வள்ளுவர் வாக்கின்படி செயற்பட்டேன். ஆனால்,

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்.[2]

என்றபடி பையன் நடந்துகொள்ளவில்லையே. என்

1. குறள்—67
2. குறள்—70

செய்வது? 'முன் செய்த தீவினை இங்ஙனமே வந்து மூண்டதுவே' என்று ஊழை நினைந்து கொண்டு வாளா இருந்துவிட்டேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வந்த அழகப்பா தொழில் நுட்பத்துறைக் கல்லூரியில் முதுகலை டிப்ளோமா (Post-Graduate Diploma)—ஒரு வருடப் படிப்பு—பயிற்சி நடைபெற்றது. கொள்கை இயற்பியல் (Theorctical Physics) என்பதில் இடம் கிடைத்தது. துணை வேந்தரின் கருணையால் திங்கள் ஒன்றுக்கு ரூ250/- படிப்பூதியமும் கிடைத்தது. மிக்க சிரமத்துடன் மாணவர் விடுதியிலும் ஓர் இடம் வாங்கித் தந்தேன். படிப்பதற்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தும், இங்கும் நன்கு படிக்கவில்லை. ஏன்? தேர்வே எழுதாமல் இருந்து விட்டான். என்ன செய்வது? இதுவும் ஊழ்போலும் என்று வாளா இருந்து விட்டேன் இதே ஊழ் வாழ்க்கையிலும் செயற்பட்டு நல்லபணியில் வாழ்க்கை அமையாது போய் விட்டது. வினைப்பயனை யாரால் வெல்ல முடியும்?

குமிழி-190

## 34. இராம கிருஷ்ணன்

இவன் என் இரண்டாவது மகன். தவத் திரு. சித்பவானந்த அடிகளின் யோசனைப்படி இவனை என்னுடன் வைத்துக் கொள்வதெனத் தீர்மானித்து திருப்பதி நடுவண் அரசின் கீழ் இயங்கும் பள்ளியில் 9-வது வகுப்பில் சேர்த்தேன். இங்கும் வடமொழியில் நன்கு பயிற்சி இல்லாததால் சில மாதங்கள் தனிப்பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்தேன். விரைவில் இந்த மொழியிலும் நன்கு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது!

ஒன்பது, பத்து வகுப்புகளில் நன்கு படித்தான். பள்ளியின் ஒழுங்கு முறையே படிக்க வைத்துவிட்டது. வீட்டு வேலையாகப் பள்ளியில் தரப்பெறும் ஒப்பந்தங்களை (Assigiments) தவறாமல் செய்வதைக் கவனித்துவந்தேன். ஆங்கிலம் பாடமொழியாக இருப்பது ஒருகால் தடையாக இருக்குமோ என்று அஞ்சினேன்; அந்த அச்சத்திற்கு இடம் இல்லாது செய்துவிட்டான். ஆங்கிலமொழியில் நல்ல அறிவு வளர்வதற்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித்தந்தார் பள்ளித் தலைமை ஆசிரியர் திறமை மிக்க சுப்பிரமணியம். பள்ளியில் மாணவன் ஆசிரியர்களோடு பேசும்போதும், மாணவர்கள் தம்முள் ஒருவரோடு ஒருவர் பேசும்போதும் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியில் பேசக் கூடாது என்ற கட்டாயம் இருந்ததால் மொழியில் நன்கு பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. வெகு விரைவில் வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். எவ்வளவு மும்முரமாகப் படித்தாலும் எண்பது விழுக்காற்றிற்கு மேல் மதிப்பெண் கிடைப்பதில்லை. வேறு பள்ளிகளில் படிப்பவர்களும், மெட்ரிக் தனியாக எழுதுபவர்களும் 90% க்கு மேல் மதிப்பெண்கள் பெற்று வருவதை அறிந்தேன். பாட அறிவு, மொழி அறிவு ஒழுங்குமுறை ஏற்படுவதற்கு நடுவண் அரசு பள்ளிதான் சிறந்தது என்பதை நன்கு உணர்ந்தேன், வேறு சில பள்ளிகளில் 25 % பள்ளியும், 75% பொதுத்தேர்வும் வழங்குவதைக் கூட்டிப் போடும் வழக்கம் இருந்தாலும் பள்ளியில் 25க்கு 23வரையிலும் சிலபாடங்களில் 25-2. பெறும் வாய்ப்பும் இருந்தது. நடுவண் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்கட்கு பொறியியல், மருத்துவ இயலில் சேர்வதற்கு முன்னுரிமை அளிக்கப் பெறுவதில்லை என்ற பீதியும் கிளப்பப்பெற்றிருந்தது.

இதனால் இராமகிருட்டிணனைப் பள்ளியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்து மெட்ரிக் தேர்வுக்கு அனுப்பலாம் எனத் தீர்மானித்தேன். தனிப் பயிற்சிக்கு வசதி இருக்குமா என்று ஆய்ந்ததில் திருப்பதியில் அந்த வாய்ப்பு இல்லை. 'மூர்த்தி' தனிப்பயிற்சிப் பள்ளி' என்ற ஒன்று

அந்த ஆண்டுதான் தொடங்கினார். அங்கு படிக்கும் சூழ்நிலை சரியாக இல்லை; நல்ல ஆசிரியர்களும் இல்லை. எம்பெருமான்மீது பாரத்தைப்போட்டு நானே எல்லாப் பாடங்களையும் கற்பிப்பது என்ற முடிவிற்கு வந்தேன். நான் நினைத்தால் என்ன பயன்? படிக்க வேண்டியவன் பையன் அல்லவா? "நான் சொல்லித் தந்தால் படிப்பாயா?" என்று பையனைக் கேட்டேன். பையனும் உறுதியாக ஒப்புக்கொண்டான். பள்ளியில் கிடைக்கும் ஒழுங்கு முறை வீட்டில் கிடைக்காதே என்ற அச்சம் உள்ளூர இருந்து கொண்டு தான் இருந்தது. அறிவியல் பாடங்களில் கிடைக்கும் செய்முறைப் பயிற்சியும் வீட்டில் கிடைக்காதே என்ற அச்சமும் இருந்து வந்தது.

'துணிவே துணை' என்று மன உறுதியுடன் இந்த அக்கினிப் பரீட்சையில் இறங்கினேன். மெட்ரிகுலேஷன் தேர்வு தனியாக எழுதுவதற்கு இசைவு பெறும் விண்ணப்பம் தரும் இறுதி நாள் செப்டம்பர் முதல் தேதி. இதனால் பள்ளியில் படிக்கும் வரை நல்லது என்று ஆகஸ்டு 31 வரை பள்ளியில் படிக்கும் வாய்ப்பைக் கெடுக்கவில்லை. ஆகஸ்டு 31 தேதி விலகுவதாக விண்ணப்பம் தந்து அன்றேசான்றிதழ்கிடைக்கவும்ஏற்பாடு செய்தேன். செப்டம்பர் 1ந்தேதி தனியாக மெட்ரிக் தேர்வு எழுதுவதற்கு இசைவு பெறும் விண்ணப்பத்தை எல்லா இணைப்புகளுடனும் கட்டணத்துடனும் பல்கலைக் கழகத் தில் சேர்ப்பித்தேன். இதற்கு முன்னரே மெட்ரிக் தேர்வுக் குரிய பாடத் திட்டங்கள், பாடநூல்கள் இவற்றை அறிந்து தயாராக வைத்துக்கொண்டேன்.

பழங்காலத்தில் எல்லாப் பாடங்களையும் ஆசிரியரே தம் பிள்ளைகட்குக் கற்பிக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் இப்போது இருப்பது போல் ஆங்கிலம், தாய் மொழி, கணிதம், அறிவியல், சமூக இயல் என்றவாறு பாடத்திட்டம் இல்லை. தாய்மொழியில் இலக்கணம்

இலக்கியம் இவை மட்டுமே கற்பிக்கப் பெற்றன. துரோணர் போன்ற ஆசாரிய மணிகள் வில்வித்தை, படைக்கலப் பயிற்சி (Military Science) ஆகியவற்றையும் கற்பித்ததாகப் புராண வரலாறு. கண்ணனாகப் பிறந்த பரந்தாமன் சாந்தீபினி என்ற முனிவரிடம் 60 நாட்களில் பயில வேண்டிய அனைத்தையும் கற்றுக்கொண்டதாக வரலாறு உண்டு. இவையெல்லாம் என் மனத்தில் எழுந்தன. மெட்ரிக் தேர்வுக்குரிய எல்லாப் பாடங்களை யும் நானே கற்பிக்கும் திறன் என்னிடம் அமையுமாறு செய்த இறைவனின் கருணைத் திறத்தை எண்ணி எண்ணி வியக்கின்றேன். தமிழ் கற்பிக்கும் எத்தனை பேரிடம் இந்த அரிய திறன்கள் அமைந்துள்ளன என்பது சிந்திக்க வேண்டிய நிலை.

மெட்ரிக் தேர்வுக்குரிய பாடங்களில் இந்தியை அவனாகப் படித்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட் டேன். ஏனைய பாடங்களை நானே கற்பித்தேன், அறிவியலுக்கும் சமூக இயலுக்கும் உரிய பகுதிகளில் முக்கியமானவற்றிற்கு சிறுசிறு வாக்கியங்களாக இரவில் நானே எழுதி வைத்துக் கொள்வேன். சமூக இயல் பாடத் திற்கு இரண்டு தாள்கள்; ஒவ்வொன்றுக்கும் மதிப்பெண் 100; ஏனைய பாடங்கட்கு ஒரே தாள்தான்; ஒவ்வொன் றுக்கும் மொத்த மதிப்பெண் 100. சமூக இயலுக்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. ஆங்கில பாட நூலை எழுத்தெண்ணக் கற்பித்து விட்டேன். இந்நூல் தேர்வு முறையைக் கருத்தில் கொண்டு கற்பிக்கப்பெற்றது. பள்ளியிலேயே அறிவியல் நன்கு கற்பிக்கப்பெற்றதால் அதுபற்றி அதிகக் கவலையில்லை. நல்ல நூல்களும் இருந்தன. சில முக்கியமான பகுதிகள் மட்டிலும் குறிப்புகள் எழுதிக் கற்பிக்கப் பெற்றன.

இயற்கணிதமும்(Algebra) வடிவ கணிதமும் (Geometry) நானே அதிசயிக்க முறையில் கற்பித்தேன். ஏழெட்டு ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி மாணவர்க்குக்

கற்பித்த அநுபவமும் இருந்ததால் நீரில் குதித்து சாகச விளையாட்டுகளைக் காட்டுவது போன்ற செயலாக அமைந்தது. பையனும் இதில் சிறந்த அக்கறை காட்டினானாதலால் இவற்றை உற்சாகத்துடன் கற்றான். இயற்கணிதத்தில் உள்ள சூத்திரங்களையும் அவற்றின் கீழுள்ள கணக்குகளையும் மிகுந்த உற்சாகத்துடன் கற்றான்; வடிவ கணிதத்தின் தேற்றங்களையும் அவற்றின் கீழுள்ள கணக்குகளையும் (Riders) கூட கற்பதில் மிகுந்த அக்கறை காட்டினான். பெரும்பாலான பள்ளிகளில் தேற்றத்தின் கீழ்உள்ள கணக்குகளை ஆசிரியர் கற்பிப்பதில்லை. சிந்தனையை வளர்க்கும் இக்கணக்குகளைக் கற்பிப்பதில் ஆசிரியர்கட்கே பொறுமை இருப்பதில்லை. வடிவ கணிதத்தில் மட்டும் ஐந்நூறுக்கு மேற்பட்ட கணக்குகளைக் கற்றான்.

சமூக இயலில் 20க்கு மேற்பட்ட நான்கு பக்கக் கட்டுரைகள் எளிய முறையில் எழுதித் தந்தேன். அவற்றை மிக நன்றாகக் கற்றான்; குடியரசு தலைவர் துணைத் தலைவர் நாடாளு மன்றம் (Parliament) மாநிலங்கள் அவை (Council of State)—இவற்றின் விவரங்கள் எல்லாம் பாடத்திட்டத்தில் இருந்தன. இவற்றை 'வாய்ச்சொற்களால்' விளக்குவதால் பயன் இல்லை என்பதை அறிந்தேன், திசம்பர்—சனவரி விடுமுறையில் (1968—69) ஒரு வாரம் சென்னையில் தங்குவதென்று முடிவு செய்தேன். சட்டசபைக் கூட்டமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. சபாநாயகர் நுழைவுச் சீட்டுகள் வாங்கிக்கொண்டு ஒருநாள் இருவரும் உட்கார்ந்து கொண்டோம். கட்சிக்குத் தனித்தனியாக இருக்கை வசதிகள் அமைக்கப் பெற்றிருப்பதையும், ஆளும் கட்சிகள் இருப்பு, அமைச்சர்கள் இருப்பு இவற்றையும் விளக்கினேன். ஒருநாள் மேல் சபை கூட்டத்திற்கும் இட்டுச்சென்று அதன் அமைப்பை விளக்கினேன்; இதற்குத் தனித்தலைவர் (Chairman) உண்டு என்பதையும், அதைக் கூட்டம் தேர்ந்

தெடுக்க வேண்டும் என்று விளக்கினேன். இதே மாதிரி தில்லியிலுள்ள மக்கள் சபை (Council of State) யின் நிரந்தரத்தலைவர் துணைக் குடியரசுத் தலைவர் என்றும் சுட்டியுரைத்தேன். இங்குள்ள சட்ட மன்றத்தைப் போலவே நாடாளுமன்ற அமைப்பு உள்ளது என்பதையும் எடுத்துரைத்தேன்.

சட்ட முன்வடிவு (Bi ll) சட்டசபையில் சமர்க்கப் படும் என்றும், அது விவாதத்துக்கு உட்படுத்தப்படும் என்றும், அப்போதுதான் திருத்தங்கள் நடைபெறும் என்றும் திருத்தப்பட்ட வடிவம் இச்சபையினால் அங்கீ கரிக்கப்பெற்ற பிறகு மேலவை அங்கீகரிக்க வேண்டும் என்றும், அது குடியரசுத் தலைவர் அங்கீகாரம் பெற்ற பிறகு சட்டமாகும் என்றும் விளக்கினேன். இப்படியெல் லாம் விளக்கினதால்தான் பாடத்தின் இப்பகுதி அவனுக்குத் தெளிவாயிற்று. ஒன்றிரண்டு நாட்கள் இப்படி நடப்பதைப் பார்க்குமாறு சொல்லி விட்டு திருப்பதியில் முதுகலைப் படிப்பு தொடங்குவதற்குப் பல்கலைக் கழகம் தந்திருந்த மானியம்பற்றிய விண்ணப்பத்தின் நிலையைக் கவனிப்பதற்கு செயலகத்தினுள் நுழைந்தேன். இப்போது அண்ணா இருந்தார். அவர் திறமை பையன் கவனத்தைக் கவர்ந்தது. அடுத்த ஒன்றிரண்டு மாதங்களில் நோய் வாய்ப்பட்டு விட்டார். இந்தச் சந்தர்ப்பத்தை இதற்குப் பயன்படுத்திக்கொண்டேன். இந்தத் தீவிர முயற்சியின் பலன் 1969—அக்டோபரில் கிடைத்தது. ஆண்டுக்குப் பத்தாயிரம் ரூபாய்வீதம் தருவதற்கு ஆணை பிறப்பிக்கப் பெற்றது. இப்போது முதல் அமைச்சர் அண்ணாதுரை மறைந்து கலைஞர் அந்த இடத்தில் அமர்ந்திருந்தார். இவர் காலத்தில் தான் மானியம் கிடைத்தது.

சட்ட மன்றத்தில் கேள்வி நேர நிகழ்ச்சிகளைத்தான் பையன்மிகவும் அநுபவித்தான். துணைக் கேள்வி கேட்கும் எதிர்க்கட்சி உறுப்பினரின் சாதுரியம் ஆளுங்கட்சியினர் சில சமயம்அவற்றிற்கு விடையிறுக்கமுடியாதுமழுப்புவதையும்

எதிர்க்கட்சியினர் கைகொட்டி மகிழ்வதும் பையனுக்குச் சொல்விருந்தாக அமைந்தது. மூன்று நான்கு நாட்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தான். ஒரு வாரம் சென்னையிலிருந்து விட்டுத் திருப்பதி திரும்பினோம். மார்ச்சு மாதம் (1969) நடைபெற்ற மெட்ரிக் தேர்வு களை மிக நன்றாக எழுதினான். அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சி அடைவான் என்று எதிர் பார்த்தேன். உழைப்பின் பயன் காண முடிந்தது. முதல் வகுப்பில் தேர்ந்தான். எல்லாப் பாடங்களில் 75%க்கு மேல் மதிப்பெண்கள் கிடைத்தன; அறிவியல். கணிதம், சமூகஇயல் இவற்றில் 94ஐயும் தாண்டியது. பின்னர் பல்கலைக் கழகத்தில் இவன்தான் முதல் மாணவன் என்ப தும் தெரிந்தது. தேர்வுப் பகுதியிலுள்ள அலுவலர் ஒருவர் கடந்த பதினைந்து ஆண்டுகளில் முதலாவதாகத் தேறின வர்கள் பெற்ற மதிப்பெண்களைவிட இவன் பெற்ற மதிப்பெண் 50க்கு மேல் அதிகம் இருந்ததாகக்கூறியது. எங்கட்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது. PUC-யின் முதல் வகுப்பில் தேறின முதல் பத்து பேருக்குப் படிப்பூதியம் (Scholarship) கிடைத்தது. இத்தகைய மாணவர்களின் பெற்றோரின் மாத வருமானம் ரூ 500/-க்கு மேல் இருந் தால் இந்த ஊதியம் கிடையாது. ஆனால் கருத்தியலாக (Notional) ரூ. 100/-ம், சான்றிதழும் வழங்கப்படும் என்று அறிவிப்பு வந்தது. சான்றிதழ் வந்தது; ரூ. 100/- ஐ ஐதராபாத்தில் யாரோ ஓர் அலுவலர் எடுத்துக்கொண் டார் என்பது ஊகம்; ஆறு மாதம் கடிதப்போக்குவரத்து நடந்தது; பயன் இல்லை.

ஜூன் மாதத்தில் தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் இருந்த கலைக் கல்லூரியில் P.U.C.யில் சேர்த்துவிட்டேன். இந்தியை முதல் மொழியாக எடுத்துக் கொண்டான். விருப்ப பாடங்கள் இயற்பியல் வேதியியல் உயிரியல் என்பவை. 1960 தொடங்கி இரண்டு மூன்றாண்டுகளாக ஆசிரியரை வைத்து தாவரஇயல், விலங்கியல் பாடங்

களை நான் படித்துக்கொண்டு வந்தேன்—அந்தத் துறை களில் சிறிது அறிவு பெற்றுக் கொள்ளலாம் என்றும் கால் வழிஇயலில் (Genetics) அறிவு பெற வேண்டும் என்பதும் என் நோக்கமாக இருந்தது. அதற்கு தாவர இயல், விலங்கு இயல் துறைகளில் அடிப்படை அறிவு தேவைப் பட்டது; இந்த அறிவு இல்லாவிடில் கால்வழி இயலில் தெளிவு ஏற்படாது' இந்த முயற்சி எல்லாம் பி எச்.டிக்குப் பதிவு செய்வதில் முயன்று வந்த காலம். அதில் தடை ஏற் பட்டதால் இந்தத் திசையில் என் முயற்சி சென்றது. கால்வழி இயலில் தெளிவுஏற்பட்டது. 'வாழையடி வாழை' என்ற தலைப்பில் நூலொன்று எழுதி முடித்தேன். நல்ல நூல். 1963 இல் இதை முடித்தேன். பிஎச்.டிக்குப் பதிவு பெற்று விட்டதால் இந்த நூலை வெளியிடுவதில் முயற்சி எடுக்கவில்லை. இக்காலத்தில் உயிரியலில் பெற்ற அறிவு என் மகனைக் கவனிக்கப் பயன்பட்டது,

மெட்ரிக் கற்பித்த காலத்தில் வாரந்தோறும் படித்த வற்றில் ஒரு மணி நேரத் தேர்வுகள் நடத்தினேன். மாதந் தோறும் 2மணித் தேர்வுகட்கு ஏற்பாடுசெய்தேன்.மார்ச்சு மாதத் தொடக்கத்தில் பல்கலைக் கழகத் தேர்வு முறை யில் தேர்வுகள் வைத்தேன். ஒரு ரீம் தாள் வாங்கி வைத்துக்கொண்டு தேர்வுகள் நடைபெற்றன. தேர்வு களினால் பாடங்கள் மனத்தில் அற்றுபடியானதை அளவிட முடிந்தது. இறுதித் தேர்வில் சமூக இயல் பாடத் திற்குரிய விடைத் தாள்களை வரலாற்றுத் துறை பேராசிரிய நண்பர் ஒருவரைக் கொண்டு மதிப்பிட்டேன். அவர் 90 விழுக்காடு மதிப்பெண் வழங்கினார். எம். ஏ. முதலாண்டு மாணவர்களின் நிலையை விட அதிகமான நிலையில் இருந்ததாகக் கூறினார்.

PUC-யில் படித்தபோது மூன்று அறிவியல் பாடங் களிலும், ஐந்தாண்டுகள் நடைபெற்ற தேர்வுகளின் வினாத் தாள்களைத் (மார்ச்சு—5 தாள்; செப்டம்பர்—5

தாள் ஆக 10 தாள்கள்) தேடி எடுத்து நகல் செய்து வைத்துக் கொண்டேன். இந்தப் பாடங்கள் வகுப்பில் நடைபெறும் போது ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் குறிப்புகளை அப்படியே எழுதி வரும்படி (தேதியுடன்) என் மகனுக்குச் சொல்லியிருந்தேன்; அவனும் அப்படியே எழுதி வருவான். இந்தகுறிப்புகள், பாடத்திட்டம், தேர்வு வினாக்கள்-இவற்றைக் கொண்டு கற்க வேண்டிய அளவை (Scope) அறுதியிட முடியும். நான் கற்பிக்கும் போது அதிக அளவுக்குப் போகாமலும் குறைந்த அளவுக்கு வராமலும் கற்பிக்க முடிந்தது. அன்றாடம் கல்லூரியில் கற்பித்தவற்றை மீள் நோக்கு செய்வதால் பாடங்களில் தெளிவு ஏற்பட்டது. பாடங்கள் மனத்தில் அற்று படியாயின. வினாத் தாள்களை வைத்துக்கொண்டு எப்படி எப்படி எல்லாம் வினாக்கள் வரலாம் என்பதை அறுதியிட்டுக் கற்பிக்க முடிந்தது. பையனும் மிக்க ஊக்கத்துடன் கற்றான். PUCயிலும் பல்கலைத் தேர்வுகளில் அறிவியல் பாடங்களில் 85%க்கு மதிப்பெண்கள் பெற முடிந்தது. பின்னர் முதல் வகுப்பில் 6-வது நிலையில் தேற முடிந்தது என்பதை அறிந்தேன். மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்குத் தேவைக்கு மேல் மதிப்பெண்கள் பெற்று விட்டான். ஆனால் வேறொரு நிலை உருவாகியது. இதை அடுத்த குமிழியில் தெரிவிப்பேன்.

# 35. அணுக்கரு பௌதிகம்

நான் காரைக்குடியிலிருந்தபோது ஹெய்ஸன் பெர்க் எழுதிய (Nuclear Physics) என்ற நூலைப் மொழி பெயர்த்துச் சென்னைப்பல்கலைக்கழகப் பரிசு பெற்றேன். (1956). இஃது பல்கலைக்கழகத்தாரால் அச்சுக்குஎடுத்துக் கொள்ளப்பெற்றது (1965). இஃது அச்சிட்ட பிறகுதான் மொழி பெயர்த்த ஆசிரியர்க்குப்பரிசுப்(சன்மானம்) சுமார் ரூ 500/- வழங்கப்பெறுதல் வேண்டும் என்பது பரிசுத் திட்டத்தின் விதி. மொழி பெயர்த்த கைப்படிக்குப் பரிசே யன்றி அச்சுப்படிக்குப் பரிசு அன்று என்பது சாதாரண அறிவுள்ளவர்க்குக்கூட விளங்காமற் போகாது. இப்படிப் பத்தாண்டு வரை அச்சிடாத குறையின் பலனை மொழி• பெயர்ப்பாளர்தான் அநுபவிக்க வேண்டுமா? இது நியாயந் தானா? அச்சேறுங்கால் பார்வைப் படிகளை (Proofs) மொழி பெயர்ப்பாளர்தான் பார்த்துக் கொடுக்க வேண்டும். இறுதி நிலையில் ஓர் இயற்பியல் பேராசிரியர் தாம் அச்சிட ஆணை தரவேண்டும். இந்த மொழி பெயர்ப்பைப் பரிசீலனை செய்து பரிசு வழங்கும் பொறுப் பினையுடைய குழுவின் தலைவராக இருந்தவர் மாநிலக் கல்லூரியின் இயற்பியல் தலைமைப் பேராசிரியர் A. G. நரசிம்மன் என்பவர். 1965இல் இந்தியா அச்சகம் (India Press) என்ற அச்சகத்தில் அச்சேறியது. (டெமி அளவு) 32 பக்கங்களை (8 பக்கம் உள்ள 4 படிவங்களை) நான் பார்த்துத் தந்தேன்; பேராசிரியர்நரசிம்மன் பார்வை யில் அச்சிடப் பெற்றது. என் தீயூழின் காரணமாக பேராசிரியர் நரசிம்மன் திருநாடு அலங்கரித்து விட்டார். இதனால் அந்தப் பொறுப்பு சென்னை கிறித்தவக் கல்லூரி

(தாம்பரம்) இயற்பியல் பேராசிரியரின் தலையில் விழுந்தது. அவர் 8 பக்கம் பார்த்து விட்டுத்தம் இயலாமை யைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்து விட்டு தம்மை அப்பொறுப்பினின்றும் கழற்றிக்கொண்டார். நூல் 40 பக்கம் அச்சாகி இருந்தது.

இந்நிலையில் இறுதியாகப் பார்வைப் படிவம் பார்க் கும் பொறுப்பை பூ.சா.கோ. பொறியியற் கல்லூரியில் இயற்பியல் முதுகலைப் பேராசிரியர் டாக்டர் P. திருஞான சம்பந்தம் அவர்களின் பொறுப்பிற்கு விடப் பெற்றது. அவர் பல்கலைக்கழகத்திற்கு "மொழிபெயர்ப்பாளர் இது காறும் அரசால் வெளியிட்ட கலைச் சொற்பட்டியல்கள், தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் கையாளப் பெற்றுள்ள கலைச் சொற்கள் இவற்றைப் பயன்படுத்தி மீண்டும் கைப் படியைத்திருத்தி அச்சேற்றவேண்டும்" என்றுஎழுதினார். அந்தக் கடிதத்தின் நகலைப் பல்கலைக் கழகம் எனக்கு அனுப்பி அதன்படி கைப்படியைத் திருத்த வேண்டும் என்று தெரிவித்தது. "இவற்றையெல்லாம் பயன்படுத்தி தான் கைப்படி தயார் செய்யத் பெற்றது; இக் கைப்படிக் குத்தான் பரிசும் வழங்கப் பெற்றது. ஆகவே. மீண்டும் திருத்துதல் அவசியமற்ற வேலை. பரிசு வழங்கப்பெற்ற படியையே அச்சிடவேண்டும். இதனால் 40பக்கம் அச்சான வேலையும் வீணாகாது" என்று எழுதினேன். இக் கடிதம் பேராசிரியர் திருஞானசம்பந்தத்திற்கு அனுப்பப் பெற் றிருத்தல் வேண்டும்; இது குறித்து அவர் என்ன எழுதி னாரோ எனக்குத் தெரியாது.

திடீரென்று ஒரு நாள் "அச்சு வேலையை நிறுத்தி விடுக" என்று இந்தியா அச்சகத்திற்கு எழுதி அதன் நகல் எனக்கு அனுப்பப் பெற்றது. பேராசிரியர் P. திருஞானசம்பந்தம் ஒரு தனியார் கல்லூரியின் இயற்பியல் பேராசிரியர், நானும் பி. எஸ்சி பட்டம்

பெற்று (முதல் வகுப்பு-மூன்றாம் நிலை) தமிழ் வித்துவான், எம். ஏ., படித்துத் தனியார் கல்லூரியின் (அழகப்பர் பயிற்சிக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர். இந்நிலையில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது அறிவியலில் மட்டும் ஒன்பது நூல்களை வெளியிட்டிருந்தேன்; பல துறைகளிலும் அப்போது வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை இருபத்து இரண்டு. ஓர் அறிவியல் துறையில் பணியாற்றும் பேராசிரியரை வல்லுநர் என்று கருதும் பல்கலைக்கழகம் அறிவியலும்தமிழும்கற்று 22 நூல்களை எழுதியுள்ள ஒரு தமிழ்ப் பேராசிரியரை வல்லுநர் என்று கருதாது ஒரு 'கிள்ளுகீரை' என்று கருதினது துர்அதிர்ஷ்ட வசமானது; வருந்தத் தக்கது. தனியாக ஒரு கடிதம் எழுதாமல் அச்சகத்திற்கு எழுதிய கடிதத்தின் நகலை அனுப்பி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது.

கடிதம் பெற்றதும் உணர்ச்சி வசப்பட்டேன்; அதை அடக்கிக் கொண்டேன். சென்னை வரும்போது பதிவாளரைப் பார்த்தேன்; நிலையை எடுத்துச் சொன்னேன். அப்போது பதிவாளராக இருந்தவர் B. M. திருநாரணன். அவர். ''தவறாகக் கையாண்டிருக்கும் ஓர்ஆறுசொற்களை எடுத்துக்காட்டுமாறு பல்கலைக்கழகத்திற்கு எழுதுங்கள். வல்லுநர் மாட்டிக்கொள்வார், பிறகு நிலைமை சரிப்பட்டு விடும்'' என்று யோசனை கூறினார். இது வீணான கடிதப்போக்கு வரத்தில் கொண்டுபோய் விடும் என்று கருதினேன். ஆகவே இப்படிச் செய்ய விரும்பவில்லை. துணைவேந்தரைப் பார்த்துப் பேசலாம் என்று முடிவு செய்தேன். அவரைப் பார்த்துப் பேசினேன். அவர் ''நீங்கள் கோவைக்குச் சென்று அவரைச் சரிப் படுத்திக்கொள்ளுங்கள்'' என்றுகூறினார். ''நான் உங்கள் பல்கலைக்கழக ஊழியனல்லன் இப்படியெல்லாம் செய்வதற்கு. பரிசுத் திட்டத்தில் கலந்து கொண்டு பரிசு

பெற்றவனை இப்படியெல்லாம் அலைக்கழிப்பது நியாய மல்ல. திருப்பதியிலிருந்து கோவைக்கு இருவழிப் பயணப் படி அநுமதித்தால் போய் வருகின்றேன். அதுவும் உங்கள் அன்புக் கட்டளைக்காக'' என்றேன். ''இது குறித்து பல்கலைக்கழகத்திற்கு எழுதுங்கள்'' என்றார் துணை வேந்தர். அங்ஙனமே பதிவாளருக்கு எழுதினேன், ''பயணப்படிதர இயலாது'' என்று பதிவாளரிடமிருந்து மறுமொழி வந்தது.

முதலில் ஒரு வழக்கறிஞரைக் கலந்து (1) பரிசுத் திட்டம் அறிவிப்பு, (2) அதில் நான் கலந்து கொண்டது, (3) பரிசுபெற்றது. (4) அச்சேற்ற 10 ஆண்டுகள் ஆனது, (5) அச்சான பிறகுதான் பரிசு வழங்குவது என்ற அநியாயவிதி, (6) பத்து ஆண்டுகளாக இத்திட்டம் இழு பறியாகக்கிடந்த நிலை, (7) துணைவேந்தரிடம் நேரில் பேசியது, (8) கோவைக்குப் போய்வரப் பயணப்படி மறுப்பு இவற்றையெல்லாம் கூறியும், இந்த நோட்டீஸ் கண்ட ஒரு மாதக் காலத்தில் (1) அச்சான படிவங்கள் (2) அச்சாகாத கைப்படிகள் (3) அச்சுக்கட்டைகள் இவற்றை அனுப்பி னால் நானே நூலைவெளியிட்டுக்கொள்வேன் என்று செப்பியும், இதற்குப் பல்கலைக் கழகம் இசையாவிடில் பரிசையாவது வழங்கிவிடும்படிக் கூறியும் அதற்கும் இசையாவிடில் நீதிமன்றத்தில் நீதி கோரி வழக்கு தொடுப்பதாகவும் நோட்டீஸ் அனுப்பினேன். நான்தான் என் பெயரில் நோட்டீஸ் அனுப்பினேன்.

ஒரு மாதத்தில் (1) பரிசுத் தொகை, (2) அச்சிட்ட படிவத்தில் இரண்டு, (3) அச்சிடாத கைப்படிகள் முதலியவை என்கைக்கு வந்து சேர்ந்தன. ஒரு சமயம் சென்னை வந்தபோது கோட்டையில் (தலைமைச் (செயலகத்தில்) பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் செயலாளர், அரசு நூல் வெளியீட்டுக்குழு) அவர்களைச் சந்தித்து இந்த நூலை வெளியிடுமாறு வேண்டினேன்

அவரும் "படியை அனுப்பிவையுங்கள்; கவனிக்கின்றேன்" என்றார். அப்போது பேராசிரியர் தெ. பொ. மீ. இந்தக் குழுவின் தலைவர்; சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் (Syndicate) உறுப்பினர்; மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். அ. ச. ஞா. கேட்டபடி கைப் படியை அனுப்பிவைத்தேன். இரண்டு திங்கள் கழித்து என் கைப்படி திரும்பி வந்தது—"பதிப்பிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்" என்ற கடிதத்துடன்.

அப்போது நானே வெளியிட நினைத்தேன். நிதிவசதி இல்லை. அப்படி இருந்தாலும் பதிப்பித்தால் அம்மாமி சுண்டல் விற்கும் கதையாகிவிடும். அறிவியல் நூலை வாங்கிப் படிக்கும் மனப்பான்மை மக்களிடம் இல்லை என்பதையும் அறிந்தேன். தமிழ்ப்புத்தகாலயத்திடம் பரிசுபெற்ற இந்த நூலை வெளியிட முடியுமா? என்று கேட்டேன். அதன் அதிபர் திரு கண. முத்தையா வெளியிடு வதற்கு இசைவு தெரிவித்தார். கைப்படியை அவருக்கு அனுப்பிவைத்தேன். நூலிலுள்ள வரிப்படங்கட்கும் ஒளிப்படங்கட்கும் அச்சுக்கட்டைகள் தயாரிக்கப்பெற்றன. இந்தப் படி அச்சேறும்போது இறுதிப் பார்வைப்படியை ஓர் அறிவியல் பேராசிரியர் பார்த்து ஒப்புதல் தெரிவிக்க வேண்டும் என்ற பல்கலைக் கழக விதிப்படி என் நெருங்கிய நண்பர் இயற்பியல் துறையில் பணியாற்றும் டாக்டர் M. இராதாகிருட்டிணனுக்கு இந்தப் பணியை ஒப்படைத் தேன். இதற்குப் பல்கலைக் கழகம் அனுமதித்த ஊதியம் ரூ 100/-. இதைப் பதிப்பகத்தாரிடம் வாங்கி என் நண்ப ருக்கு வழங்கினேன்.

இந்த நூலுக்கு இராஜாஜிக்கு ஓர்ஆங்கில அணிந்துரை வழங்குமாறு கடிதம் எழுதிவேண்டினேன். நான் இராஜாஜியை நேரில் பார்த்துப்பேசவில்லை; முன் அறிமுக மும் இல்லை. காரைக்குடி சென்றிருந்தபோது கம்பன் அடிப்பொடியை அவருக்குப் பரிந்துரைக் கடிதம் எழுதச்

செய்ததாக நினைவு. அவர் ''உங்கள் நூலுக்கு ஒரு பல்கலைக் கழகத்துணைவேந்தர் அணிந்துரை வழங்கினால் சிறப்பாக இருக்கும்; உங்களுடைய எதிர்காலமும் சிறக்க வழி ஏற்படும். இந்தக்கிழவனின் அணிந்துரை உங்கட்கு ஒருவித முன்னேற்றத்தையும் தராது'' என்று எழுதினார் இந்தப் பரிசுத் திட்டத்தின் கதை படலம் படலமாக என் மனத்தில் எழுந்தன. அழுகை கலந்த சிரிப்புதான் வந்தது. உலகியலறிந்த இராஜாஜியின் அறிவுரை இப்பொழுது இந்த நூலுக்குப் பயன்படாது என்பதை அறிந்தவனாதலால் இத்திசையில் முயல விருப்பம் இல்லை. உடனே அந்தப் பெரிய உயர்குணச் செம்மலுக்கு, ''ஐயா, தங்கள் அறிவுரைபடி ஒருபல்கலைத் துணை வேந்தரை அணுக விருப்பம் இல்லை, மனிதாபிமானமும் பிரச்சினைப் பரிவுடன் அணுகத் தெரியாமல் பொறிபோல் இயங்கும் துணைவேந்தரின் அணிந்துரை என்னை எந்த விதத்திலும் உயர்த்தாது. அவரும் யாரையோ எழுச் சொல்லிக் கையெழுத்திட்டு அனுப்புவார். இந்தக் கபட நாடகப் பாத்திரமாக நடிக்க நான் விரும்பவில்லை. முனிவர்போல் திகழும் உங்கள் அணிந்துரை உங்கள் உள்ளத்தில் எழுந்ததாக இருக்கும். உங்கள் சொற்களாவும் இருக்கும். தள்ளாத வயதில் 4 வரிகள் எழுதினாலும் அவற்றை உங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த ஆசியாகவும் அணிந்துரையாகவும் கருதுவேன். தயவுசெய்து தாங்கள் தான் அருளவேண்டும்'' என்று வேண்டி எழுதினேன். வேங்கடவன் திருவடி வாரத்தில் வாழும் அடியேனின் வேண்டுகோள் இராஜாஜியின் உள்ளத்தில் ''பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலின்'' அன்புக் கட்டளையாகத் தோன்றியிருக்க வேண்டும். மறுதபாலில் அஞ்சலட்டையில் அவர் கைப்பட எழுதிய வாசகம் தாங்கிய கடிதம் வந்தது. வாசகம்; ''அறிவியல் நூல்களை மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்ப்பாளரி டையே எழும் இடப்பாடுகளை நான் நன்கு அறிவேன். ஹெய்ர்ன்பெர்க்கின் (Nuclear Physics) என்ற அறிவியல்

நூலை மொழி பெயர்த்து அது சிறந்தமொழி பெயர்ப்பு என்பதற்காகப் பரிசு பெற்ற பேராசிரியர் ந.சுப்புரெட்டியாருக்கு என் நல்வாழ்த்துகள்''[1] என்பது. ஒருதுணை வேந்த அணித்துரையை விட இது பல்லாயிரம் மடங்கு உயர்ந்தது, சிறந்தது என்பது அடியேனின் கருத்து. பதவிமாயமும் பசப்பு வார்த்தைகளும் என்றுமே என்னைக் கவர்ந்ததில்லை; அவற்றின் வலையில் சிக்கவும் இல்லை.

எந்த நூலையும் என் உள்ளத்தைக் கவர்ந்த ஒரு பெரியாருக்கு அன்புப் படையலாக்குவது என்பதை ஒரு நியதியாகவே கொண்டிருப்பவன் அடியேன்[1] இந்த நூல் பரிசு பெற்ற வரலாற்றையும், வெளிவருவதில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சியையும் நன்கறிந்தவர் தெ.பொ.மீ. தமிழ் வளர்ச்சியில் சிறந்த ஆவேசம் கொண்டவர். உயர்ந்த உள்ளம் படைத்த சீலர். மதுரைப் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர். இந்தப் பெருந்தகைக்கு,

சீலமார் தமிழ்த்தாய் புரிதவத் துதித்தோன்;
　　செவ்விய நல்லுளச் செம்மல்;
ஞாலமாம் கனியின் சாறெனத் தக்க
　　நன்மொழி பலபல சுவைத்தோன்;
கோலமார் மதுரைப் பல்கலைக் கழகக்
　　கோயிலின் முதல்துணை வேந்தன்;
தாலமீ தோங்குமீ னாட்சிசுந் தரனார்
　　தாள்மலர்க் குரியதிந் நூலே.

---

1. Foreword ; "I can understand the difficulties of a tranolator of scientific books and I tender my congratulations to Prof. N. Subbu Reddiar on his having won the prize for the best translation of Heisen berg's Nuclear Physics" - C. Rajasopa lachari, சென்னை 28-3-1966

என்ற பாடலின் மூலம் அன்புப் படையலாக்கும் பேறு பெற்றேன். நூலும் ஆயுதப் பிரசவம்போல் வெளிவந்தது. குழந்தையும் பிழைத்து வளர்ந்து உலகில் நடமாடுவது போல் இந்த நூலும் அறிஞர்களிடையே தவழ்ந்து தளர் நடை போட்டு மகிழ்வித்திருக்கும் என்று நம்புகின்றேன். என்னை விஷப் பரீட்சைக்கு உட்படுத்தும் எம்பெருமான் என் நூலையும் அந்தப் பரீட்சைக்கு உள்ளாக்கினானே என்று அவன் பெருங்கருணைத் திறத்தைப் போற்று கின்றேன்[2]. யமகண்டத்திற்குத் தப்பி உயர்ந்த காள மேகப் புலவரை நினைத்துக் கொள்கின்றேன்.

> ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்.[2]

என்று வள்ளுவர் கூறும் தாயின் அநுபவம் இலக்கியத்தைப் பிறப்பிக்கும் ஆசிரியர்க்கும் உண்டு என்பதையும் சிந்திக் கின்றேன். இஃது என்னுடைய பத்தொன்பதாவது வெளியீ டாகும் (ஜூலை 1966).

---

2. குறள்—69 (மக்கட்பேறு)

# 36. இளைஞர் தொலைக்காட்சி தோற்றம்

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.[1]

என்று 'அந்தப் பேதை' உரைத்ததை எண்ணித் தமிழ்த்தாய் 'இந்த வசை எனக்கு எய்திடலாமோ?' என்று ஏங்குவதாகக் கற்பனை செய்கின்றார் புதுமைக் கவிஞர் பாரதியார். தமிழ்த்தாய்க்கு அந்தக் குறை—அந்த ஏக்கம்—இல்லா தொழியச் செய்வது இன்றைய தமிழ் அறிஞர்களின்—அறிவியலறிஞர்களின்—கடமை. இதற்கு வேண்டிய அறிவியல் கலையறிவு இளமையிலிருந்தே இளைஞர்களிடம் அமையச் செய்தல் வேண்டும். அதற்குரிய ஆர்வம், அவா, விடுப்பூக்கம் (Curiosity) அவர்களிடம் கிளர்ந்தெழச் செய்தல் வேண்டும். அறிவியல் படித்தவர்கள் இதனை ஒரு முக்கிய பணியாக ஏற்கவேண்டும். சொல்லுந்திறமை (Expressive ability) தமிழ் மொழிக்கு அமைய வேண்டுமாயின் தமிழ் பயிற்று மொழியாக அமைந்து தமிழிலேயே அறிவியற் கலைகள் எழுதப்பெறல் வேண்டும்; வகுப்புகளிலும் விளக்கம் பெறுதல் வேண்டும். இந்த வித முயற்சிகளின்றித் தமிழ் மொழியில் அறிவியற் கலைகள் தோன்ற வேண்டும் என்று 'மேடையில் முழக்கம் செய்வது' வெறுங்கையால் முழம் போடுவது போலாகும்; மனக் கோட்டை கட்டுவது போலாகும்.

1 பா.க: தமிழ்த் தாய்—9

இவ்விதமான சிந்தனையில் நான் ஈடுபட்டிருக்கும் போது பாவேந்தர் பாரதிதாசன் 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' என்ற கவிதையைப் படிக்க நேர்ந்தது. அம்மலையில் குப்பனும் வள்ளியும் என்ற காதலர்களைச் சந்திக்க விடுகின்றார் கவிஞர். அங்கு இரண்டு மூலிகைகள் இருப்பதாகக் கற்பனை செய்கின்றார். மூலிகைகளின் மகிமையைக் குப்பன்,

ஒன்றைத்தின் றால்இவ் வுலகமக்கள் பேசுவது
நன்றாகக் கேட்கும்மற் றொன்றைவா யில்போட்டால்
மண்ணுலகக் காட்சிஎலாம் மற்றிங் கிருந்தபடி
கண்ணுக் கெதிரிலே காணலாம்.[2]

என்று வள்ளிக்குக் கூறுகின்றான். இந்த அடிகளைப் படித்த எனக்கு வானொலியும் தொலைக்காட்சியும் நினைவிற்கு வந்தன. ஒரு மூலிகை வானொலியை உணர்த்துவதாகவும், மற்றொரு மூலிகை தொலைக் காட்சியைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். இங்ஙனம் கவிஞர்களிடம் தோன்றிய கற்பனைதான் நாளடைவில் அறிவியலறிஞர்களின் ஆராய்ச்சிகள்மூலம் புதுப்புனைவுகளாக (Inventions) வடிவெடுத்தது என்று கொள்வதில் தவறொன்றும் இல்லை.

இந்தப் பெரும் பணியில் நான் தனியாக இறங்குவது அணிலின் செய்கை போன்றது. இராமன் சேதுகட்டும் போது ஒரு சிறு அணில் மணலைவாரி அணையில் போட்டதைத் 'தொண்டரடிப் பொடியாழ்வார்'

குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட் டோடித்
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலும் போலேன்.[3]

2. சஞ். சாரல்—அடி (43—46)
3. திருமாலை—27

என்று பேசுவார். இந்தப் பெரும் பணியில் அணிலின் பங்கு எவ்வளவோ அவ்வளவுதான் என்னுடையது. அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதும் என் பங்கும் குரங்குகள் அணை கட்டியதில் ஈடுபட்டதுபோல் எல்லா நிலையிலும் அறிவியலில் பட்டம் பெற்றவர்கள் இதனைத் தம் வாழ்க்கையின் பெரும்பணியாகக் கருதி இதில் ஈடுபடவேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது கவிஞரின் வாக்கு; இது நம் வழியில் ஒளி காட்டுவதாக இருக்கட்டும்.

வானொலியும் தொலைக்காட்சியும் எலக்ட்ரானிக் சகோதரிகள். அவர்களில் ஒருவரைச் செவி மடுத்தியார் (Miss Audible) என்றும் மற்றொருவரைக் கண்ணம்மையார (Miss Visible) என்றும் வழங்கலாம். மானிடச் சகோதரி களைப் போலவே இவர்களிடமும் பொதுவான பண்புக் கூறுகள் (Traits) அமைந்துள்ளன. ஆனால் இவர்களது நடத்தையில்தான் பேரளவில் வேற்றுமை உள்ளது. இன்று நமது நாட்டில் உள்ள எல்லோருக்கும் அறிமுகமான செவிமடுத்தியாரைப் பற்றி நாம் ஓரளவு நன்குஅறிவோம் 'இளைஞர் வானொலி'யை[4] அறிமுகம் செய்த போது இவளது தத்துவம், இவள் இயங்கும் முறை போன்ற செய்திகள் தெரிவிக்கப் பெற்றுள்ளன. இவளுடைய சகோதரியாகிய கண்ணம்மையார் இப்போது நம் நாட்டில் வேகமாக அறிமுகமாகி வருகின்றாள். தொலைக்காட்சியில் தொலைவில் நடைபெறும் நிகழ்ச்சியின் ஒலியையும் கேட்கலாம்; அங்கு நடைபெறும் நிகழ்ச்சியின் காட்சிகளை யும் கண்ணுறலாம்.

இரண்டிலும் நிகழ்ச்சிகளை அனுப்புவதற்கு'வானொலி அலைகள்' என்று வழங்கப்பெறும் மின்காந்த அலைகளே

4. இது என் 15-வது வெளியீடு. (குமிழி-169 பக்கம்.115)

பயன்படுகின்றன. இந்த அலைகள் வினாடியொன்றுக்கு 297600 கி.மீ. வீதம் செல்லுவதால் இவற்றின் மூலம் ஓரூரிலிருந்து அனுப்பப்பெறும் நிகழ்ச்சிகள் அடுத்தக் கணமே அடுத்த ஊரை அடைந்து விடுகின்றன. அந்த ஊர் எவ்வளவு தொலைவிலிருப்பினும் அங்குள்ளவர்கள் இருந்த இடத்திலிருந்து கொண்டே உடனுக்குடன் நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் அநுபவிக்கின்றனர். வானொலி ஒலிபரப்பில் தொடக்கத்திலும் இறுதியிலும் ஒலி அலைகள் தோன்றுகின்றன. ஒலி அலைகளாகத் தொடங்கி, மின் அலைகளாக மாறி, மீண்டும் ஒலி அலைகளாக மாறுவதே ஒலிபரப்பு நிகழ்ச்சியாகும். ஆனால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பரப்புவதில் ஒளிக்கதிர்களைப் பயன்படுத்துகின்றனர். ஆதலால் இந்த நிகழ்ச்சிகள் ஒளிக்கதிர்களாகத் தொடங்கி, மின்சார அலைகளாக மாறி, திரும்பவும் ஒளிக்கதிர்களாகத் தோன்றுகின்றன. இதனை நாம் ஒளிபரப்பு என்று வழங்கலாம். ஒளிபரப்பு நிகழும் இடத்தில் நடைபெறும் இசைவிருந்து, நாடகம், வயலும் வாழ்வும் போன்ற செயல்கள் திரும்பவும் ஒளி பரப்பினை ஏற்கும் இடத்திலும் நடத்தப் பெறுகின்றன. ஆனால், இவை நடத்தப் பெறும் வரிசை முறைமட்டிலும் தலைகீழாக இருக்கும். ஒளிபரப்பும் இடத்தில் நடைபெறும் செயல்களை 1, 2, 3 என்று பெயரிட்டால் அவை ஏற்கும் இடத்தில் 3, 2, 1 என்ற வரிசை முறையில் நடைபெறும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு அனுப்புவதில் மூன்று கட்டங்கள் உள்ளன. முதலாவதாக, தொலைக்காட்சிப் படமாக வேண்டிய நிகழ்ச்சியை, அல்லது பொருளை, துருவிப் பார்த்தல் (Scanning) என்ற நிகழ்ச்சிக்கு உட்படுத்த வேண்டும். இரண்டாவதாக, இவ்வாறு நிகழ்த்திய செயலால் கிடைத்துள்ள ஒளித்துடிப்புகளை மின் துடிப்புகளாக மாற்றுதல் வேண்டும். மூன்றாவதாக, இந்த மின்

துடிப்புகளை மீண்டும். ஒளித் துடிப்புகளாக மாற்ற வேண்டும். இவ்வாறு மாற்றும்பொழுது முதலில் கண்ட நிகழ்ச்சி அல்லது பொருளின் பிம்பம் திரும்பவும் படைக்கப் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும். முதலிரண்டு கட்டங்களையும் ஒளிபரப்பு நிலையம் கவனிக்கின்றது. மூன்றாவது கட்டம் நிகழ்ச்சிகளை ஏற்கும் கருவியில் நிறைவேறுகின்றது. இதுவே தொலைகாட்சி இயங்கும் முறையாகும்.

இம்முறையை அறிந்து கொள்ள வேண்டுமானால் ஒளியின் தன்மைகள், கண்ணின் குணங்கள், மின்னணுக் குழல்கள், தனி மின்சாரமாதல், தொலைக்காட்சிக் காமிரா, தொலைக்காட்சிப் படங்கள், வாகன அலைகள், நம்முடைய தொலைக்காட்சிப் பெட்டி இவைபற்றிய செய்திகளை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் விளக்கிய பின்பு தொலைக்காட்சி செயற்படுவது தெளிவாக்கப் பெறுகின்றது. "வானொலி நிலையத்திலுள்ள நமது உள்ளங்கை யகலமுள்ள ஒலி வாங்கியின் வாய் மண்ணைத் தின்கின்ற கண்ணன் வாய் போல் உலகனைத்தையும் உண்டு உமிழும் வாயாக அமைந்துள்ளது. அங்ஙனமே தொலைக்காட்சி நிலையத்தில் நமது கண்ணை விட மிகவும் சிறியதாகவுள்ள ஒளி மின்சாரக்கலம் என்னும் மாயக்கண் இந்த எல்லையற்ற அகிலம் முழுவதையும் ஊடுருவிப் பார்க்க வல்லதாக அமைந்துள்ளது"[5] முன்னது உலகனைத்தையும் செவி சாய்த்துக் கேட்கின்றது. பின்னது உலகம் முழுவதையும் ஏறிட்டுப் பார்க்கின்றது.

இந்தச் சிறு நூலை அணுவாற்றலை மக்கள் நலனுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்வதற்கு நம் நாட்டுத் தூதராக அமெரிக்கா சென்று வந்தவுடன் இராஜாஜி அவர்கட்கு,

5. இளைஞர் தொலைக்காட்சி—பக் (101—102)

மல்லிகை மலர்போல் தூயவன்; வேத
 வரம்புறும் உபநிட தத்தில்
சொல்லிய பொருளை ஆய்ந்தவன்; சிறுமைச்
 சூழலில் புகாப்பெரு நடையன்;
நல்லியல் கலைஞன்; சிலசொல்லால் சான்றோர்
 நன்மனம் கவர்ந்தவன்; அஞ்சா
வல்லிய மனைய வீர ராஜாஜி
 மலர்ப்பதத் தொளிர்கஇந் நூலே.

என்ற பாடலின் மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். இவரைப் பற்றி இந்நூலின் நூல் முகத்தில் வைத்த குறிப்பு இது: ''நமது இராஜாஜி அவர்கள் உலகப் பேரறிஞர்களில் ஒருவர்; உயர்ந்த சிந்தனையாளர். நம் நாட்டு விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டவர். எதிலும் பகுத்தறிவு வழியைக் கடைப்பிடிப்பவராயினும், நம்பிக்கையின் உருவமான உத்தம சீலர். 'காலத்தொலைவில்' நடை பெற வேண்டியவற்றை முன்னரே கணித்துக் காட்டவல்ல ஆழ்ந்த பெரு நோக்குடையவர். 'இடத் தொலைவில்' நடைபெறுவனவற்றை உடனுக்குடன் காணவல்ல தொலைக் காட்சிச் சாதனத்தை விளக்கும் 'இளைஞர் தொலைக்காட்சி' என்னும் இந்நூல் பாரதத்தின் முதல் இரத்தினமாகிய அவரது எண்பத்தெட்டாவது ஆண்டு நினைவினைப் பாராட்டும் மலராக வெளி வருகின்றது. அவரது ஆசியைப் பெற்றுத் தமிழ்நாட்டுச் சிறுவர்களின் கைகளை அடையும் இந்நூல் அவர்கட்குச் சிறந்த அறிவியலறிவினை நல்கும் என்பது உறுதி.''?

கழக வெளியீடாக வந்த இந்த நூல் என்னுடைய இருபதாவது வெளியீடாகும். (திசம்பர்—1966).

# 37. 'அறிவியல் விருந்து' அவதாரம்

1966-நவம்பரில் என நினைக்கின்றேன். என்னுடைய இலக்கியக் கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டது போல் அறிவியல்பற்றி எழுதிப் பல்வேறு இதழ்களிலும் ஆண்டு மலர்களிலும், பெரியார்களின் மணிவிழா மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகளை வெளியிட நினைத்தேன். அன்று வரை பத்துக் கட்டுரைகள் தேறின. அறிவியலைப் பயிலாதவர்களும் அறிவியலில் இன்றியமையாத செய்திகளை அறிந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்[1]; தமிழ் மரபு குறையாமல் எளிய முறையில் மக்களுக்கு அறிவியல் செய்திகளைத் தெளிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் எழுதப் பெற்றவை இக்கட்டுரைகள். பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கும் கட்டுரைகளைத் தொகுத்துப் பார்க்கும் வாய்ப்பும் கட்டுரை ஆசிரியருக்குக் கிடைக்கின்றது. இதனால் பல்வேறு காலங்களில் பல்வேறு நிலைகளில் 'புத்தம் புதிய கலைகளைத்' தமிழுக்குக் கொணர்ந்த முயற்சியையும் எடை போட்டுப் பார்க்கும் நிலையும் ஏற்படுகின்றது. இந்தக் கட்டுரைகளின் தொகுப்புக்கு 'அறிவியல் விருந்து' என்ற திருநாமமும் இட்டேன். இஃது என்னுடைய இருபத்தொன்றாவது வெளியீடாகும். (மே—1967)

இந்தத் தொகுப்பில் அடங்கிய கட்டுரைகள்; 1. பொங்கலும் அணுவும் (தமிழ்ச் செல்வி); 2. அணுவின் அளப்பரிய ஆற்றல் (சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக 1008-வது வெளியீட்டு விழா மலர்); 3. குடி-

வழியும் சூழ்நிலையும் (தமிழ்ச் செல்வி); 4. மின்னலும் இடியும் (செந்தமிழ்ச் செல்வி); 5. ஞாயிற்றுக் குடும்பம் (தனியாக எழுதப் பெற்றது); 6, மதிமண்டலச் செலவு (பேராசிரியர் ஆர். கே. விசுவநாதன்) மணிவிழா மலர்),கதிரியக்க ஓரிடத்தான்கள் (அணுக் கதிர்) 8. நனவிலி மனம் (செந்தமிழ்ச் செல்வி); 9. தொல் பொருட்கலையில் புதிய ஆராய்ச்சி முறை (கலைக் கதிர்); 10. எதிர் கால அறிவியல்) பத்தாவது வகுப்பு பாடநூலில் உரை நடைப் பகுதிக்காக எழுதப் பெற்றது) இவை அறிவியல் துறையில் பல்வேறு புலங்களைப் (Faculty) பற்றியவை என்பது தெளிவு. சாதாரணமாக ஒரு கட்டுரை யைச் சிந்தித்து உருவங்கொடுத்து எழுதுவதற்குப் பதினைந்து நாட்களாகும்.அதுவும் அறிவியல் கருத்துகளை எடுத்துச் சொல்வதில் பொருட் பிழையின்மை, பழகு தமிழில் தெளிவாக எழுதுவதில் நேரிடும் இடர்ப்பாடுகள் இவற்றை இப்போது நினைந்து பார்க்கும்போது ஓரளவு நான் பட்ட சிரமத்தை எடைபோட்டுப் பார்க்க முடிகின்றது. நான் திருப்பதியிலிருந்து கொண்டு இந்நூலை வெளியிடுவதென்பது குதிரைக் கொம்பாக இருந்தது. 'அஞ்ஞாத வாசத்தில்' எவர் என்னை நினைவு வைத்துக் கொள்வார்கள்?

ஏற்கெனவே 'இல்லற நெறி' என்ற நூலை வெளியிட்டு அதனால் எனது அறிவியல் ஆற்றலையும் அது எனது 'இல்லற நெறி' நடைமுறையில் பெற்றுத் தந்த புகழை யும் நினைந்து தமிழ்ப் புத்தகாலயம் என்ற நிறுவனத்தின் அதிபர் திரு. கண. முத்தையா இதனை மனமுவந்து ஏற்று வெளியிட முன் வந்தார். நூலும் மே, 1967 இல் வெளி வந்தது. தமிழ் மொழிபால் அளவற்ற காதலும் அம்மொழி யில் பெரும் புலமையும் அடைந்து மிகுபுகழ் பெற்ற என் கெழுதகை நண்பர் பேராசிரியர் அர.சு. நாராயணசாமி நாயுடு அவர்கள்(முதல்வர் ஜி.வேங்கடசாமி நாயுடு கல்லூரி, கோவில் பட்டி, மதுரை மாவட்டம்)

இதற்கு அரிய தோர் அணிந்துரை நல்கி இந்நூலைச் சிறப்பித்தார்.

அணிந்துரையில் இப்பேராசிரியர் கூறுவது; "அறிவியல் விருந்து என்னும் நூலினை அணுவின் கூறுகளாகிய அரிசி, அணுவின் ஆற்றலாகிய மிளகு, குடிவழியும் சூழ்நிலையும் என்னும் புளி ஈருள்ளி, மின்னலும் இடியும் என்னும் பச்சை மிளகாய், ஞாயிற்றுக் குடும்பம் என்னும் காய்கறிகள், மதி மண்டலச் செலவு[1] என்னும் மஞ்சட் பொடி, கதிரியக்க ஓரிடத்தான்கள் என்னும் தாளிதப் பொருள் இவைகளை அளவறிந்து, பொழுதறிந்து, சேர்த்தாக்கித் தொல் பொருட்கலையில் புதிய ஆராய்ச்சி முறை என்னும் நெய்யிலே யிட்டு, நனவிலியுளமாகிய மசாலாப் பொருள் சேர்த்து, எதிர் காலத்தில் அறிவியல்என்னும் ஊறுகாயோடு சுவைத்துண்டு மகிழ்ச்சி யேப்ப மிடச் செய்துள்ளார். இவ்வறிஞர், அறிவுக்குச் சத்தூட்டும் நல்லுணவு இது. பழமையையும் புதுமையையும் கலந்து 'மாறுபாடில்லா உண்டி' நல்கியுள்ளார்" என்பது.

"இந்நூலிலுள்ள கட்டுரைகளைப் பாராட்டி உரைத்த லின்றி மதிப்பிட்டுரைத்தல் என்பது எளிதன்று. ஒவ்வொரு கட்டுரையும் அறிவியலாகிய மாற்றுயர்ந்த தங்கத்தா லியன்று பழமையாகிய மணிகள் குயிற்றி இடப்பெற்றுப் பேரழகோடு திகழ்கின்றது. ஆங்கிலமும் அதனையொத்த அறிவியல் புதுமைகளை அளந்து கூறும் மொழிகளும் அறியாத தமிழரும் இருபதாம் நூற்றாண்டின் இறுமாப்புக் குரிய அறிவியற் செய்திகளையறிந்து நனவில் நினைந்து கனவிலும் தொடர்ந்து மகிழுமாறு உதவியுள்ளார்

1. இக்கட்டுரை இரண்டாம் பதிப்பில் (மே, 1981) அறிவியலின் புதிய போக்குகளையொட்டி மாற்றி எழுதப் பெற்று 'அம்புலிப் பயணம்' என்ற தலைப்பில் சேர்க்கப் பெற்றுள்ளது.

பேராசிரியர். அம்மொழிகளை அறிந்தாரும் எளிதிலே சிக்கலின்றித் தெளியுமாறும் அமைந்துள்ளது 'அறிவியல் விருந்து''.

இந்த அரசு நாராயணசாமி நாயுடு யார்? நான் துறையூரில் தலைமை யாசிரியனாகப் பணியாற்றிய காலத்திலோ அதற்கு ஓரிரண்டு ஆண்டுகட்கு முன்போ (அதாவது 1940—1943 காலத்தில்) திருவையாற்றில் வித்துவான் பயின்று சிறந்த மாணாக்கராகத் திகழ்ந்து வித்துவான் தேர்வில் முதல் நிலையில் முதல்வராகத் தேறி ரூ 1000/- பரிசு பெற்றவர். அதன் பிறகு திருப்பதி கீழ்த் திசைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்து பணியாற்றியவர். அப்போதுதான். B. O. L., M. A முதலிய பட்டங்களைத் தனியாகப் பயிற்று பெற்றுத் திருப்பதியில் கலைக்கல்லூரித் தொடங்கப் பெற்றபொழுது அதில் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். சில ஆண்டு கட்குப் பிறகு விருது நகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகச் சேர்ந்தவர். இந்தக் காலத்தில் நான் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியனாகச் சேர்ந்து பணி யாற்றினேன். இக்காலத்தில் விருதுநகருக்கு ஏதோ ஒரு சொற்பொழிவுக்குச் சென்றிருந்த பொழுது இவரைச் சந்தித்து அளாவளாவியதுண்டு. அக்காலத்தில் மனைவியை இழந்து தனிமை வாழ்க்கை நடத்தியவர். இவருடைய மகளும் மகனும் கோவையில் கல்வி பயின்றதாகச் சொன்ன தாக நினைவு. நான் 1953-56 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்வி ஆலோசனைக் குழுவிலும், பேரவையிலும் உறுப்பினராகப் பங்கு பெற்றிருந்த காலத்திற்கு முன் 1950—53ல் என்பதாக நினைவு) மூன்றாண்டுக் காலத் தில் இவர் இந்த இரண்டு அவைகளிலும் பல தீர்மானங் களை வைத்துப் போராடியதாக என்தோழ ஆசிரியர்கள் சொன்னதாகக் கேள்வியுற்றிருக்கின்றேன்.

நான் காரைக்குடியை விட்டுத் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பணியாற்றிய காலத்தில் திருநாயுடு அவர்கள் கோவில்பட்டி ஜி. வேங்கடசாமி நாயுடு கல்லூரியில் முதல்வராகச் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மூன்றாண்டுக் காலம் திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ் பாடத்திட்டக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றியவர். நான் திருப்பதியில் சேர்ந்த நாள் முதல் பேராசிரியர் பூ. ஆலால சுதரந்ஞ் செட்டியார் (சென்னை—தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்), பேராசிரியர் கோ. சுப்பிரமணியப் பிள்ளை (தமிழ்ப் பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) ஆகியோர் உறுப்பின ராகப் பணியாற்றினார்கள். இக்காலத்தில் திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. தொடங்கப் பெறவில்லை. 1970—71 முதல்தான் தமிழ் எம். ஏ தொடங்கப் பெற்றது; பிஎச். டி பட்ட ஆய்வுக்கும் வழியமைந்தது. பேராசிரியர் நாயுடு அவர்கள் முதல்வ ராகப் பணியாற்றியபொழுது அக்கல்லூரி மதுரைப் பல்கலைக் கழகத்தில் இணைந்திருந்தது. அப்போதுதான் 1962-முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் மு. வரதராசன் 1971—முதல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரானார். இவர் 1974ல் திருநாடு அலங் கரிக்கும் காலம் வரையிலும் என் வேண்டுகோட்கிணங்கத் தொடர்ந்து திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவின் தலைவராக இருந்து வந்தார். இவ்வாறு இவரை வேண்டிக் கொண்டதற்குக் காரணம் உண்டு. இது பிறிதொரு குமிழியில் விளக்கம் பெற்றுள்ளது.

பேராசிரியர் நாராயணசாமி நாயுடு சிறந்த புலவர்; நேர்மை தவறாதவர். பெரிய இடத்தில் தவறுகள் நிகழ்ந் தாலும் துணிவுடன் எடுத்துக்காட்டிப் போராடுபவர். மாணாக்கராக இருந்த காலத்தில் எங்களூர்ப் பக்கத்

லிருந்து பயின்ற திரு. V.C. கிருஷ்ணசாமி, திரு. C. முத்து நல்லப்ப ரெட்டி, திரு. ஆ. சாம்பசிவம் போன்ற வர்கள் (இவர் காலத்தில் உடன் பயின்ற ஒரு சாலை மாணாக்கர்கள்). இவருடைய புலமை, சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை, நேர்மைக்காகப் பேராடும் பண்பு. தோழர்களுடன் அன்புடனும் பாசத்துடனும் பழகும் சீர்மை முதலிய அருங்குணங்களை எடுத்துக் காட்டியமை இப்போது நினைவுக்கு வருகின்றது. திருப்பதி, விருது நகர், கோவில்பட்டியில் பணியாற்றிய நண்பர்கள் மூலமும் இவருடைய அரும்பெருங்குணங்களைக் கேள்வியுற்றிருக் கின்றேன். டாக்டர் மு. வ. அவர்கள் "தில்லு முல்லு அறியாத பெரும் புலவர்" என்று சுருக்கமாகச் சொல் வார். இப்பெருமகனார் டாக்டர் அ. சி. செட்டியார் மரணமடைந்த வரலாற்றைக் காதோடு காதாக என்னிடம் சொல்லியதுண்டு. டாக்டர் மு. வ. துணைவேந்தராக இருந்த காலத்தில் பேராசிரியர் நாயுடு முதல்வர். அப்போதுதான் இவர் திருநாடு அலங்கரித்தார். மறைந்த சில நாட்களில் திருப்பதிக்கு பாடத்திட்டக்குழு கூட்டத் திற்கு வந்திருந்த டாக்டர் மு. வ. தான் மேற்கூறியவாறு அடைமொழி தந்து வருணித்தார். இவர் திருநாடு அலங் கரித்தமை குறித்துப் பாடத்திட்டக் குழுவிலும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி இவர் குடும்பத்தினருக்கு அனுப்பப்பட்டது. இத்தகைய பெரும்புலவரின் அணிந்துரை 'அறிவியல் விருந்து' என்ற என் நூலை அணி செய்கின்றது.

இந்த நூலை முதறிஞர் உயர் திரு. தி. மு. நாராயண சாமிபிள்ளையவர்கட்கு,

பங்கயம் பூத்த நீலமால் வரைபோல்
பணிமிசை பொலியரங் கேசன்
துங்கமார் பாதம் மறந்திடா உளத்தோன்
தூயநல் அறநெறி காத்து

மங்கலப் புகழைப் பெற்றவன்; வேழ
வனத்திருப் பணிபுரி அன்பன்;
பங்கமில் நாரா யணப்பெரு நம்பி
பதமலர்க் குரியதிந் நூலே.

என்ற பாடலின் மூலம் இந்நூலை அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன்.

நூல்முகத்தில் நான் இவரைப் பற்றி எழுதிய குறிப்பு இது : ''மூதறிஞர் உயர்திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் என் வாழ்க்கையில் ஒரு முக்கிய திருப்பத்தைத் தந்தவர்கள். இவர்கள் வழக்குரைஞராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிப் பிறகு படிப்படியாகத் தம் வாழ்க்கையைப் பொதுப் பணிக்கென அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அரசினர் வழக்குரைஞர், திருச்சி நகராட்சித் தலைவர், திருச்சி மாவட்டக் கழகத் தலைவர், சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினர், சென்னை தேர்வு ஆணையின் தலைவர், சென்னை மாநில அறநிலையக் கழகத் தலைவர், பல்கலைக் கழக மானிய ஆணைய உறுப்பினர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் போன்ற பல்வேறு பொறுப்புகளில் உளத் தூய்மையுடன் பணி புரிந்து பெரும்புகழ் பெற்றவர்கள். இப்பொறுப்புகளை வகித்த பொழுது 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' (குறள்—996), 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (தொல். சொல். கிளவியாக்கம்-1) என்ற ஆன்றோர் வாக்குகட்கு எடுத்துக் காட்டாக அமைந்தவர்கள். எவர் மாட்டுப் புன்முறுவலுடன் இனிமையாகப் பேசுபவர்கள்; காண்டற்கெளியவர்கள்; கடுஞ் சொல் அறியாதவர்கள். எடுத்த காரியத்தை இனிதே முடிக்கும் திறம் படைத்தவர்கள். நல்ல சமயப் பற்றுடையவர்கள்; என்றும் இறையை உளத்தில் உறுதியாகக் கொண்டிருப்பவர்கள். நாட்டு நலன்களிலும் இளைஞர் கல்வியிலும் பேருக்கம் காட்டுபவர்கள். தற்சமயம் (ஏப்ரல் 1967)

திருவானைக்கா திருக்கோயில் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றி வருபவர்கள். பழுத்த சமயப்பற்றும் இறைவன்பால் உறுதியும் உடைய இவரை இறைவனே இக் 'கைங் கரியத்தில்' ஈடுபடுத்தினான் போலும்! 1930-இல் என் உயர் நிலைப்பள்ளி வாழ்க்கையின் போதிருந்தே என்னை அறிந்தவர்கள்; எனக்குக் கலைத் தந்தையாகவும், கல்வித் தந்தையாகவும், வாழ்க்கையின் வழிகாட்டியரகவும் இருப்பவர்கள். இத்தகைய் மூதறிஞர்பால் யான் கொண்டுள்ள பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் அறிகுறியாக அன்னார் பொன்னார் திருவடிகளில் இந்நூலை அன்புப் படையலாக்கிப் பெருமை கொள்ளுகின்றேன். அன்னார் ஆசியால் பல இளம் உள்ளங்களில் இந்நூல் பல நல்லெழுச்சிகளை விளைவிக்கும் என்பது என் திடமான நம்பிக்கை'' (20.4.67).

1974-இல் டாக்டர் மு.வ. திருநாடு அலங்கரித்த பிறகு என் வேண்டுகோட் கிணங்கப் பல்கலைக் கழகம் ஓராண்டு இவரைத் தமிழ்ப் பாடத் திட்டக் குழுவின் தலைவராக நியமித்தது. சிறந்த முறையில் கூட்டத்தை நடத்திக் கூட்டத்தின் தரத்தை உயர்த்தினார். இவரை இருப்பூர்தி நிலையத்தில் வரவேற்று பீமா உணவு விடுதியின் மாடியில் ஒரு நல்ல அறையை அமர்த்தித் தங்க வைத்தேன். சிற்றுந்து (Van) ஒன்று அமர்த்தி ஏழுமலையான் தரிசனத்திற்கும் ஏற்பாடு செய்தேன். அவர் ஆசியால் எனக்கும் அத்தரிசனம் கிடைக்கும் பேறு ஏற்பட்டது. இருப்பூர்தியிலிருந்து இறங்கும்பொழுது வழியில் பணப்பையைத் தவற விட்டு விட்டார். அறைக்கு வந்த பிறகுதான் இதுதெரிந்தது. என்ன முயன்றும் அது கிடைத்திலது. ரூ. 300/- வரை இருந்ததாகச் சொன்னார். இது எனக்குப் பெருவருத்தத்தை விளைவித்தது.

''ஏழுமலையானைச் சேவிக்கும் முன்பதாக, அப்பை ஒரு திருடன் கையில் சிக்காது ஏழையொருவனின் கையில்

சிக்கினால் மிகவும் மகிழ்வேன்'' என்று சொல்லி மன அமைதி பெற்றதை இன்றும் நான் நினைவு கூர்கின்றேன்.

குமிழி—194

## 38. என் காசி யாத்திரை

**1968** அக்டோபர் 12 முதல் 14 நாள் முடிய அனைத்திந்திய கீழ்த்திசை மாநாடு (24-வது அமர்வு) வாரணாசியில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குப் பல்கலைக் கழகம் என்னைப் பேராளராக அனுப்பியது. 52 அகவை நிலையில் இருந்த நான் இதனைக் 'காசியாத்திரை'யாக மேற்கொள்ளவும் நினைத்தேன். வைணவ சமயக் கருத்துப்படி முத்தி தரு நகரங்கள் ஏழு. அவை: அயோத்தி, மதுரை(வடமதுரை), மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பனவாகும்[1]. சைவ சமய நம்பிக்கைப்படி அவை: தில்லை, திருவாரூர், மயிலாடுதுறை, வடதிருமுல்லைவாயிலும் தென்திரு முல்லை வாயிலும் முதுகுன்றம் (விருத்தாசலம்), கூடல் (மதுரை), நெல்லை, காஞ்சி, திருக்கழுக்கழுக் குன்றம், திருமறைக்காடு (வேதாரண்யம்) என்ற பத்தாகும். தாயுமான அடிகள் தீர்த்தயாத்திரைப் பற்றி,

மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினற்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே[2]

என்று கூறியுள்ளமையை நினைந்து என் துணைவியுடன் காசி யாத்திரையைத் தொடங்கத் திட்டமிட்டேன்.

1. தே. பி. 237. ஒப்பிலியப்பன் சந்நிதி சீராம தேசிகனின் உரை காண்க.
2. தா. பா. : பராபரக்கண்ணி—156.

அவளையும் கட்டணம் செலுத்தி மாநாட்டுப் பேராள ராக்கிக் கொண்டேன். தனிப்பட்ட முறையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்வோருக்கு இருப்பூர்திப் பயணத்தில் திரும்புவதற்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டா. செயலாளர் கடிதங்கொண்டு இருப்பூர்தித் துறைக்கு எழுதி சலுகை பெறும் கட்டளை பெற்றுப் பயணச் சீட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். என் மனைவிக்கு அவ்வாறு பயணச் சீட்டு வாங்கிக் கொண்டேன். நான் போகவும் திரும்பவும் பயணச் சீட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டும் பல்கலைக்கழகம் எனக்குப் பயணப்படி தருவதால்.

துறையென்று ஒன்று இல்லாமல் தனி விரிவுரையாள ராக இருப்பது பல்கலைக்கழக வட்டத்தில் "அந்தஸ்து" என்ற ஒன்று இல்லாத நிலை. இந்நிலைமையில் பணியாற்றுபவர்களைப் பிற துறையினர், குறிப்பாகப் பேராசிரியர்—துறைத்தலைவர்கள், முதல்வர் முதலியோர் மதிப்பதில்லை. பல்கலைக் கழக அலுவலகத்திலும் அவ்வளவாக மதிப்பு இருப்பதில்லை. வாரணாசியில் நடை பெற்ற கீழ்த்திசை மாநாட்டிற்கு என்னைப் பேராளராக அனுப்புமாறு பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பினேன். அதற்குச் சாதகமான முடிவு ஏற்பட வில்லை. நானே என் செலவில் போய்வரலாம் என்றும், ஆனால் போய்ச் சேரும் நாட்கள், மாநாடு நடைபெறும் நாட்கள், திரும்பும் நாட்கள் இவை நான் பணி செய்த நாட்களாகக் கருதப்படும் என்ற கடிதம் வந்தது. இதை ஆய்ந்து பார்த்ததில் முதல்வர் அலுவலகம் முதல் பதிவாளர் அலுவலகம் வரை எனக்கும் என் விண்ணப்பத் திற்கும் மதிப்பு தருவதில்லை என்பதை அறிந்தேன். இப்போது துணைவேந்தராக இருந்தவர் டாக்டர் வி.சி. வாமன்ராவ். இது குறித்து அவரை நேரில் சந்தித்துப் பேசினேன். பல பேராசிரியர்கள் இத்தகைய

மாநாடுகளில் 'ஆராய்ச்சிக் கட்டுரை' கூடக் கொடுக்காமல் அதை ஒரு மகிழ்ச்சிச் செலவாகக் கருதிப் போய் வருவதை யும் நான் காணாமல் இல்லை எனபதையும் அவரிடம் குறிப்பிட்டேன். ஒரு சில நாட்களில் முன் அனுப்பிய கட்டளையைச் சிறிது மாற்றி என்னைப் பல்கலைக் கழகச் செலவில் அனுப்புவதாகப் புதிய கட்டளை பிறப்பிக்கப் பெற்றது. கல்வி நிகழ்ச்சிகளில் நான் கொண் டிருந்த உண்மையான அக்கறையை நன்கு புரிந்துகொண்டு இதனைச் செய்த துணைவேந்தரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மேற்குறிப்பிட்ட வைணவ சமயம் குறிப்பிடும் நகரங் களில் மாயை, அவந்தி, துவாரகை இங்குப் போக வாய்ப்பு ஏற்படவில்லை. சைவர்கள் கூறும்கருத்துப்படி திருமுல்லை வாயில்கள், முதுகுன்றம், திருமறைக்காடு இந்த மூன்று இடங்களுக்குப் போய்வரவும் வாய்ப்பில்லை. இறைவன் அருளால் இப்பிறவியில் இந்த நகர்களைச் சேவிக்கும் பேறு கிட்டும் எனக் கருதுகின்றேன்.

அந்தக் காலத்தில் காசிக்குப் போவதற்குச் சென்னையி லிருந்து நேர் இருப்பூர்தி வண்டி இல்லை. இட்டார்சி என்ற இடத்தில் மாறிப் போக வேண்டும். சென்னையி லிருந்து நான் சென்ற வண்டியிலேயே டாக்டர் M. A. துரையரங்கனார், டாக்டர் மு. வரதராசனார் ஆகிய பேராசிரியர்களும் பயணம் செய்தனர். வண்டியில் உறங்கும் நேரம் போகப் பகலில் இலக்கியக் கருத்துகள், நாட்டு நடப்புகள் முதலியவைபற்றி வேடிக்கையாகப் பேசிக் கொண்டே சென்றோம். நானும் மனைவியும் அலகபாத் தில் இறங்கி தங்கும் விடுதியில் அறையொன்றை எடுத்துக் கொண்டு தங்கினோம். அன்று மாலை ஊரைச் சுற்றிப் பார்த்தோம். கையில் 'திடீர் காபி'ப் பொடியையும் சருக்கரையையும் வைத்திருந்தோம். வடநாட்டுப் பகுதி களில் பால் நன்றாக இருக்கும் என்பதை நான் அறிவேன்.

என்னுடைய ஜப்பல்பூர் பயணமும் (அக்டோபர் 1958), தில்லிப் பயணமும் (சனவரி, 1964) எனக்கு இந்த அநுபவத்தைத் தந்தன. அங்காடித் தெருவில் பால் வாங்கிக் காபி அருந்திய பின்னர் ஊரை சுற்றிப் பார்த்தோம். எல்லா இடங்கட்கும் போக முடியவில்லை; மாலையில் இரண்டு மணி நேரத்திற்குமேல் (5—7 மணி) தெரியாத இடங்களுக்குப் போக விரும்பவில்லை. முதலில் பண்டித சவகர்லால் நேரு வாழ்ந்த 'ஆனந்தபவனைப்' பார்த்தோம். அவர் பயன்படுத்திய நூலகம், மேசை, நாற்காலி, சாய்வு நாற்காலி, எழுது கோல்கள், பேனாக்கள் முதலியவை நல்ல முறையில் வைக்கப் பெற்றிருந்தன. சமையல் அறை, உணவு கொள்ளும் அறை, பார்வையாளர்களை வரவேற்று உரையாடும் அறை, பள்ளியறை முதலியவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்தோம். பெரும்பாலான சுவர்களின் உட்புறம் வழு வழுப்பான தேக்குப் பலகையால் மூடப் பெற்று எழிலுடன் காட்சியளித்தது. ஓர் அலுவலர் எங்களுடன் சுற்றி வந்து ஒவ்வோர் இடத்தையும் காட்டி விளக்கினார். வீட்டின் பின்புறத் தோட்டத்தில் ஒரு பக்கம் 'அணையாத நேரு சோதியை'க் காட்டினார். நாங்கள் ஆனந்த பவனத்திற்குப் போனபோது அதிகக் கூட்டம் இல்லை; ஓரிருவரே வந்து போய்க் கொண்டிருந்தனர். சுமார் 7 மணிக்கு ஒரு சிற்றுண்டிக் கடையில் பூரி சாப்பிட்டு விட்டு அறைக்குத் திரும்பினோம்.

மறுநாள் அதிகாலையில் அறையிலேயே காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஒரு 'டோங்காவில்' (ஒருவகைக் குதிரை வண்டி) திரிவேணி சங்கமத்திற்குச் சென்றோம். மக்கள் ஒரு பக்கமாக விசைப்படகை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். ஒரு சாதாரணப் படகோட்டி—தெலுங்கு பேசுபவன்—வேறொரு பக்க மாக இட்டுச் சென்று வாடகை பேசாமல் தனிப்படகில் திரிவேணிக்கு இட்டுச் சென்றான். ஒரு பக்கமாகக் கங்கை

யின் வெள்ளம் வேகமாக வந்து கொண்டிருந்தது; இதை அமைதியாக வந்து கொண்டிருந்த யமுனை வெள்ளம் சந்தித்தது. இரண்டு நதிகளும் சந்திக்கும் இடத்தில் பூமி யின் அடியில் சரசுவதி நதி சந்திப்பதாகக் கருதுவது ஓர் ஐதிகம். இந்த இடமே 'திரிவேணி' (மூன்று நதிகள் சந்திக்கும் இடம்) என்ற பெயர் வழங்கிவருகின்றது. படகு கள் யாவும் அமைதியானயமுனையில்தான் செயற்பட்டன. இவற்றில் பயணம் செய்யும் மக்களை மூன்று நதிகளும் சந்தித்து ஒரு பக்கமாக நீரோட்டம் அதிக வேகமில்லாத இடத்தில் படகுகளுடன் நிறுத்துவார்கள். அங்குப் படகு களில் புரோகிதர்கள் இவர்கட்கு அநுட்டானம் செய்து வைப்பார்கள். நாங்கள் ஓரிடத்தில் அநுட்டானத்தை முடித்துக் கொண்டு படகிலேயே திரும்பினோம். கரையை அடைந்ததும் படகுக் கட்டணம் ரூ 25/- என்றான்; எங்கட்குத் 'திகீர்' என்றது. அவன் எங்களை ஒரு பக்கமாக இட்டுச்சென்று ஏமாற்றி விட்டதை அப்போதுதான் அறிந்தோம். விசைப்படகில் சென்றிருந் தால் கட்டணம் ஒரு ரூபாய் என்பதைப் பின்னர் அறிந்து அவன்மீது சினந்தேன். 'கோபித்துக் கொண்டால் கட்டணம் வேண்டாம்' என்று பிணங்கிக் கொண்டான். கட்டணத்தை அவனிடம் தந்து விட்டேன். 'செலவு செய்யத்தானே வந்தோம்' என்று மன அமைதி கொண்டேன். வந்த டோங்காவிலேயே திரும்பினோம். டோங்கா வண்டிக்காரன்தான் புதியவர்களான எங்களைப் படகோட்டியிடம் சிக்க வைத்தான் என்பதைப் பின்னர்தான் அறிந்தேன். 'வடநாட்டில் பண்டாக்கள் கொள்ளையடிப்பார்கள்; அவர்களிடம் மாட்டிக் கொள்ளாதீர்கள்' என்று திருப்பதியில் இந்தித் துறை நண்பர்கள் எச்சரித்தும் படகோட்டியிடம் ஏமாந்து போனதை எண்ணி வருந்தினேன். பிரயாகையில் 'நாட்டுக் கோட்டை நகரசத்திரத்தில்' (149, Mori, Daragani P.O., U.P. India)தங்கியிருந்திருந்தால் இத்தகைய சங்கடங்கள் நேர்ந்திரா. உணவுக்கும் சிரமப்பட்டிருக்க

வேண்டிதில்லை; ஆனால் அலகாபாத்திலுள்ள சில இடங்களைப் பார்த்திருக்க முடியாது. இவற்றையும் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தால், இன்னொரு நாள் அலகாபாத்தில் தங்க நேரிட்டிருக்கும். ஆனால் இச் சத்திரம் 6, 7 கி.மீ தொலைவில் உள்ளது என்பதையறிந்துதான் வாடகை விடுதியில் தங்கினோம். வாழ்க்கையில் துன்பங்களும் கலந்து வருவதால்தானே 'இன்பம்' இனிக்கின்றது? நிழலின் அருமை வெயிலில் தானே தெரியும்?

தங்கியிருந்த அறைக்கு உரிமையாளர் தென்னிந்திய உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார். மனநிறைவு இல்லாது உண்டோம்; சமைக்கும் பக்குவம் அவர்கட்குத் தெரியவில்லை. வடநாட்டு பூரி, சப்பாத்தி முதலியவற்றையே உண்டிருக்கலாம் என்று பின்னர் நினைத்துக்கொண்டோம். எனக்கு எல்லா வகை உணவு முறைகளிலும் பழக்கம் உண்டு; என் மனைவிக்காக தென்னிந்திய உணவுக்கு ஏற்பாடு செய்தது தவறு என்பதை இருவருமே உணர்ந்தோம். அறையைக் காலி செய்து கொண்டு இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து வாரணாசி செல்லும் வண்டியில் ஏறினோம். டாக்டர் துரையரங்கனாரையும் டாக்டர் வரதராசனாரையும் இட்டார்சியில் சந்திக்கவில்லை. நாங்கள் அலகாபாத்தில் இறங்கி அடுத்த நாள் இரயிலில் ஏறினோம். அந்த வண்டி சுமார் மாலை 4 மணிக்கு வாரணாசியை அடைந்தது என்பது நினைவு. இந்த வண்டியில் அந்தப் பேராசிரியர்கள் இருவரையும் இறங்கும்போது சந்தித்தேன். அவர்களும் வழியில் எங்கோ இறங்கி அடுத்த நாள் இதே வண்டியில் வந்திருக்க வேண்டும்.

கூலியாளிடம் மூட்டைகளைத் தந்துவிட்டு மிகப் பாதுகாப்புடன் அவனைக் கவனித்துக் கொண்டே வந்து கொண்டிருந்தேன். இருப்பூர்தி நிலையத்திலிருந்து படிகள் மீது ஏறி மேம்பாலம் வழியாகச் சென்று அடுத்த பக்கத்

தில் இறங்க வேண்டும். இறங்குவதற்கு இரண்டு புறமாக வழிகள் இருந்தன. கூலியாளைப் பார்த்துக் கொண்டே வந்ததால் நான் சரியான வழியில்இறங்கி வந்து விட்டேன். கூட்டம் அதிகமிருந்ததால் என்னைப் பார்த்துக்கொண்டே வந்த எனது மனைவி கூட்டத்தில் என்னைப் பார்க்க முடியாமல் அடுத்தப் பக்கம் இறங்கி விட்டாள். நான் இறங்கின பக்கம் டாக்டர் வரதராசனாரும் டாக்டர் M.A. துரை அரங்கனாரும் நான் இறங்கும்போது படுக்கை பெட்டிகளுடன் காத்திருந்ததைக் கண்டேன். கூலியாளுக்குக் கூலியைக் கொடுத்து விட்டு சாமான்களைப் பார்த்துக் கொள்ளுமாறு இரு பேராசிரியர்களிடமும் சொல்லிவிட்டு என் மனைவியைத் தேடிக்கொண்டு மீண்டும் படிகளின்மீது ஏறிச் சென்று அடுத்தப் பக்கமாக (நாங்கள் இறங்கவேண்டியதற்கு அடுத்த பக்கம்) இறங்கிப் பார்க்கும்போது அங்கு என்னை எதிர் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் என் மனைவி. அவளைக் கூட்டிக் கொண்டு சாமான்கள் இருந்த இடத்திற்கு வந்தேன். பேராசிரியர் துரையரங்கனார், ''என்ன மிஸ்டர் ரெட்டியார்,அக்கினி சாட்சியாகக் கைபிடித்த பெண்ணைக் கைவிட்டு விட்டீர்களே!'' என்று வேடிக்கையாகக் கேட்டார். ''பேராசிரியர் அவர்களே, நான் கைவிட வில்லை. நாங்கள் வானப்பிரஸ்த நிலையிலிருக்கின்றோம். இந்நிலையில் அவள்தான் வழி தெரியாமல் என்னை விட்டு நழுவி விட்டாள்'' என்றேன். என் மனைவியும் பேராசிரியரின் நகைச்சுவைப் பேச்சையொட்டி, ''ஆமாங்க, இவர் எப்பொழுதும் இப்படிதான். வீட்டிலும் இப்படித்தான்; மனைவி என்று ஒருத்தி இருக்கின்றாளே, என்ற நினைப்பே இருப்பதில்லை. புத்தகங்களைக் கட்டிக் கொண்டு கிடப்பார்'' என்றாள். நானும் நகைத்து விட்டு மௌனியானேன்.

இரண்டு பேராசிரியர்களும் மாநாட்டாளர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொண்டிருந்த இடத்திற்குப்

போய் விட்டனர். நான் ஆள் இழுவண்டியை அமர்த்திக் கொண்டு 'காட்ஹௌலியா' என்ற பகுதியிலுள்ள ஸ்ரீ—காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரத்தில் வந்து இறங்கினேன். இங்கு நான் தங்குவதற்குத் தமிழ் கடல் ராய. சொக்கலிங்கன் அவர்கள் இச்சத்திரத்துக்குப் பொறுப்பாளராக இருந்த திரு. வீர. பழ வினைதீர்த்தான் செட்டியாருக்குக் கடிதம் எழுதி எனக்கும் தெரிவித்திருந் தார்கள். இந்த இடத்தைத் தவிர காசியில் குமாரசாமி மடத்தில் தங்குவதற்குத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் திரு. கே.எம். வேங்கட்டராமய்யாவும் மேற்படி மடத்துப் பொறுப்பாளர் ஜி. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கட்கு எழுதியிருந்தார்கள். அங்குத் தங்கி யிருந்தால் உணவும் இலவசமாகக் கிடைத்திருக்கும் (இதை நான் விரும்பவில்லை). மேலும் காசி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்த திரு.T.B. சித்தலிங்கய்யா வுக்கும் எழுதியிருந்தேன். அவர் நடுவண் அரசுத் திட்டமொன்றுக்கு உதவும் பொருட்டுத் தில்லியில் தங்கி யிருந்தார். அவரும் காசி மடத்தில் தங்குவதற்கு ஏற்பாடும் செய்துவிட்டு நகரத்தார் சத்திரத்தில் தங்குவது எல்லா வற்றிற்கும் வசதியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந் தார். இக்காரணத்தால் நான் நாட்டுக் கோட்டை நகரத் தார் சத்திரத்திலேயே தங்குவதாக முடிவு செய்தேன்.

திருத்தலப் பயணக் காலங்களில் நகரத்தார் தம் சமூகத்தினர் வசதிகளுடன் தங்குவற்கென்று திருத்தலங் களில் சத்திரங்களை அமைத்துள்ளனர். இராமேசுவரம் சிதம்பரம், மதுரை முதலான இடங்களில் இத்தகைய சத்திரங்களைக் காணலாம். இங்ஙனம் தென்னாட்டிலே யன்றி வடநாட்டிலும் இத்தகைய சத்திரங்களை நிறுவி யுள்ளனர். காசி (உ. பி.) பிரயாகை, (உ. பி.) அயோத்தி (உ. பி.), கயை (பீஹார்) கல்கத்தா, காளிகாட் (கல்கத்தா), தாரகேஸ்வரம்' (கல்கத்தா அருகிலுள்ளது), கோதாவரி (ஆந்திரம்), நாசிக் பஞ்சவடி (மகாராஷ்டிரம்)

ஆகிய இடங்களில் இத்தகைய சத்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. பர்மா வளமாக இருந்த காலத்தில் இவை மிகச் சிறப்பாக இயங்கி வந்தன. இப்பொழுது ஏனைய வசதிகள் குறைந்தாலும் தங்கும் வசதிகளுக்குக் குறை வில்லை.

கல்கத்தாவில் நகரத்தார் இல்லம் (34, எஸ்ராதெரு, கல்கத்தா—1) என்பது, பெரியகட்டடம். இதனைப் பல்வேறு வணிகர்கட்கு வாடகைக்கு விட்டுள்ளனர். மாதம் ரூ 15000/=க்கு மேல் வாடகை வருகின்றது. இதனைக் கொண்டுதான் இந்தச் சத்திரங்கள் ஓரளவு இயங்கிவருக் கின்றன. இச்சத்திரங்கள் எல்லாவற்றையும்விட காசி யிலுள்ள 'நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம்' தான் நன் முறையில் இயங்கிவருகின்றது. இதில் தங்கும் நகரத்தார் கட்கு ஓரளவு கட்டணம் பெற்றுக் கொண்டு உணவு வசதி களும் அளிக்கின்றனர். நகரத்தார்களேயன்றி தமிழ் நாட்டைச் சார்ந்த வேறு சமூகத்தினரும் தக்கவர் அறிமுகத்துடன் சென்றால் இங்குத் தங்கலாம். நானும் என் மனைவியும் ஒரு குடும்பம் எனக் கணக்கிட்டு முதல் தடவை யாக ரூ 3-50 தரவேண்டியிருந்தது. அடுத்த முறை முதல் இதில் பாதி (ரூ 1-75) தந்தால் போதும். எத்தமுறை சென்றாலும் இத்தொகை முதலில் தரவேண்டியது. அடுத்து நாளொன்றுக்கு 0-50 வாடகையாகத் தர வேண்டும். இப்போது இக்கட்டணங்களை அதிகரித் திருக்கலாம். உணவுக்காக அப்போது நாளொன்றுக்கு ஓர் ஆளுக்கு ரூ 4-50 தரவேண்டும். காலையில், சிற்றுண்டி யுடன் காஃபி, நண்பகல் காய்கறிகளுடன் உணவு, இரவு சிற்றுண்டியுடன் காஃபி (அல்லது பால்) தருவார்கள். வேறு ஓரிரு இடங்களில் தென்னிந்திய உணவு கிடைக்குமாயினும் அவை தூய்மையாக இராது; சுவையும் சரியாக இராது ஆதலால் மாலையில் மட்டிலும் காஃபி அங்கு அருந்தப் போவதுண்டு.

மாநாடு மூன்று நாட்கள் வாரணாசி வடமொழிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. நானும் மனைவியும் இந்த மூன்று நாட்களும் குளித்து முடிந்ததும் ஆள்மிதி வண்டியில் மாநாடு நடைபெறும் இடத்திற்குச் சென்று வருவோம். மூன்று நாட்களிலும் காலை, நண்பகல், மாலை, இரவுகளில் மாநாட்டு உணவு வசதிகளைப் பெற்றோம். இதற்கு மூன்று நாட்களுக்கும் ஒவ்வொரு வரிடமும் ரூ 20/-வாங்கிக் கொண்டார்கள். தென்னாட்டு-வடநாட்டுக் கலப்புணவு இங்குக் கிடைத்தது. இரவு ஒன்பது—ஒன்பதரைக்கு ஆள்மிதிவண்டியில் சத்திரத்திற்கு வந்து சேர்ந்து விடுவோம். ஒரு நாள் குறைந்த கட்டணம் வாங்கிக் கொண்டு மாநாட்டுப் பேராளர்களைக் காசிக்கு அருகிலுள்ள முக்கியமான இடங்கட்கு இட்டுச் சென்றனர். இந்த மூன்று நாட்களிலும் கங்கை சென்று நீராட நேரம் இல்லாததால் சத்திரத்திலேயே நீராடிக் கொண்டோம், சத்திரத்திலே வழிபாட்டிற்குச் சிவாலயம் ஒன்று உண்டு. என் மனைவிக்கு நச்சுக் காய்ச்சல் வந்து விட்டதால் 25 நாட்கள் வரையில் சத்திரத்தில் தங்க நேரிட்டுவிட்டது.

கீழ்த்திசை மாநாட்டில் அந்த ஆண்டுக்கு தெ.பொ.மீ. திராவிட ஆராய்ச்சிப் பகுதிக்குத்தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். அந்த இடத்தை டாக்டர் துரை அரங்கசாமி நிறைவு செய்தார். நான் 'ஆழ்வார்களின் இயற்கை பற்றிய கவிதைகள்' (Nature Poetry of the Azhvars) என்ற ஆங்கில கட்டுரையை இப்பகுதியில் படித்தேன். இத்தகைய மாநாடுகட்குப்போகும்போது கட்டுரையின்றிப் போவதில்லை. ஓய்வு பெற்ற பிறகு இக்கட்டுரைகளைத் தொகுத்து (Collected Papers)என்ற தலைப்பில் நூலொன்று வெளியிட வேண்டும் என்ற திட்டம் மாநாடுகளில் கலந்து கொள்ள வாய்த்த முதல் கூட்டத்திலேயே சங்கல்பித்துக் கொண்டிருந்தேன். இதனால் கட்டுரைகள் நன்கு அமைய வேண்டும் என்ற கவலையால் ஒரு கட்டுரை எழுதவே 15 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை செலவிடுவேன். சில

கட்டுரைகள் முடிக்க இரண்டு திங்கள் வரை எடுத்துக் கொண்டதும் உண்டு.

குமிழி —195

## 39. நகரத்தாரின் நாகரிகமும் பண்பாடும்

நான் காரைக்குடியில் அழகப்பா ஆசிரியர் கல்லூரியில் பத்து ஆண்டுகள் (1950-60) பணியாற்றியபோது செட்டி நாட்டில் பல பெரிய புள்ளிகளுடன் கலந்து பழகும் வாய்ப்பு தமிழ்க்கடல், சிவமணி, சிவம் பெருக்கும் சீலர் திரு. ராய. சொக்கலிங்கம் அவர்கள் மூலம் ஏற்பட்டது. நகரத்தார் சமூகத்தைப் பற்றியும் அவர்கள் ஆற்றிய, ஆற்றிவரும் பல்வேறு திருப்பணிகள் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது. தென்னிந்தியாவில், குறிப்பாக இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் இவர்களைப்போன்று கட்டுப்பாடு, ஒழுங்கு முறை, பொது நலத்தொண்டு போன்றவற்றில் பெரும் புகழ்பெற்றுத் திகழும் பிறிதொரு சமூகம் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களின் மூதாதையர் கோவலன் மரபைச் சேர்ந்தவர்களாகவும், காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து குடியேறினவர்களாகவும் சொல்லிக் கொள்ளுகின்றனர். தண்ணீர் நிறைந்த பகுதியில் வாழ்ந்த இவர்கள், கடல் கொந்தளிப்பினால் தாம் வாழ்ந்த இடம் மூழ்கிவிட்டதனால், தண்ணீரே அருகியிருக்கும் வறட்சியான பகுதிக்குக் குடியேறிவிட்டனர் என்று நகைச் சுவையாகச் சொல்லுவார் கம்பன் அடிப்பொடி. நகரத்திலிருந்து (பட்டினம்) நாட்டுப்புறத்திற்கு வந்தவர்களாதலால் 'நகரத்தார்' என்று வழங்கப் பெறுகின்றனர் போலும்!

நாட்டுப் புறத்திற்கு வந்த பிறகு வீடுகளைக் கோட்டை போல் (பாதுகாப்பாக அமைத்துக் கொண்டதால்)'நாட்டுக் கோட்டைச் செட்டியார்' என்றும் வழங்கப் பெறுகின்றனர் போலும்!!

தமிழ்நாட்டை ஆண்ட சேர சோழ பாண்டியர்களை அடுத்துத் தென் நாட்டில் ஆலயத் திருப் பணிகளைப் பக்தியுடன் செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கிணங்க கப்பலில் பிற நாடுகள் சென்று வாணிகம் புரிந்து பெரிய செல்வர்களானதால்—'தன வணிகர்' என்ற சொற்றொடரால் இதனை யறியலாம்—அந்தப் பழக்கத்தால் இலங்கை, மலேசியா, பர்மா, ரெங்கோன், சிங்கப்பூர், ஈப்போ போன்ற வெளி நாடுகளில் தொழில் நடத்தி வருவதை இன்றும் காணலாம். எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் ஆண்டவனையும் ஒரு பங்காளியாக வைத்துத்தான் தொழில் செய்வதை வழக்கமாகக் கொண்டவர்கள். ஐந்து காசு, பத்துக் காசு என்று அவன் பேரில் வைக்கும் பங்கு பல ஆண்டுகளில் பல இலட்சங்களாக வளர்ந்துவிடும். இந்தப் பணத்தைக் கொண்டும் தங்கள் வருவாயிலும் ஒரு பகுதியைக் கொண்டும்தான் ஆலயத் திருப்பணிகளைப் புரிந்து வருகின்றனர். தென்னாட்டில் பெரும்பாலான சிவாலயங்கள் புதுப்பிக்கப் பெற்றதில் இவர்கள் பங்கு இல்லாதிராது.

தற்காலத்தில் இவர்கள் பங்கு கல்விப் பணியிலும் சென்றுள்ளது. தொடக்கக் காலத்தில் செட்டி நாட்டுப் பகுதிகளிலும்பிற இடங்களிலும்தேவாரப் பாட சாலைகள், வேத பாட சாலைகளைத் தோற்றுவித்தனர். பின்னர் தற்காலக் கல்வி நிலையையொட்டி பல தொடக்கநிலைப்

பள்ளிகள் தோன்றச் செய்தனர். செட்டி நாட்டுப் பகுதிகளில் பல ஊர்களில் இத் தொடக்கநிலைப் பள்ளிகள் பல சிறந்த உயர்நிலைப் பள்ளிகளைப்போல் சிறந்து விளங்குவதை இன்றுங் காணலாம். காலத்தையொட்டி பாலர் பள்ளிகள், உயர்நிலைத் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், இளையோர் தொழிற்பள்ளிகள், பல்தொழில் கல்லூரிகள், பொறியியல் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி, ஆராய்ச்சி நிறுவனங்கள், உடற்பயிற்சிக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்ற எல்லா நிலைகளிலும் இவர்கள் கல்விக்காகச் செய்த, செய்துவரும் தொண்டினைக் காணலாம்.[1] 1930க்கு முன்னரே ரெங்கூன் பல்கலைக் கழகத்திற்கு பெருந் தொகைகள் வழங்கி அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் தோற்றுவிக்கப்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம், காரைக்குடியில் வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியாரால் சுமார் 1000 ஏக்கர் நிலத்திலுள்ள கல்லூரி வளாகத்திலுள்ள பாலர் பள்ளி முதல் கலைக் கல்லூரி, பல்தொழில் கல்லூரி, பொறியியற் கல்லூரி வரையிலுள்ள நிறுவனங்கள், மதுரையில் கருமுத்து. தியாகராச செட்டியார் ஏற்படுத்திய பல்வேறு கல்வி நிலையங்கள் இத்தகைய கல்வி பணிக்கு சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. மகளிர்க்கென கல்வி நிலையங்களைத் தோற்றுவித்த பெருமையும் இச் சமூகத்தினருக்கு உண்டு. தாம் தொடங்கின கல்வி நிலையங்களே யன்றி பிறரால் தொடங்கப் பெற்ற திருச்சி

1. நகரத்தார் மாணவர் சங்கம்—சிறப்பு மலரில் (1964) — (கல்வி மலரில்)—பல விவரங்களைக் காணலாம்.

தேசியக் கல்லூரி, புதுக்கோட்டை அரசர் கல்லூரி, சென்னை விவேகாநந்தர் கல்லூரி, மதுரைக் கல்லூரி, மதுரை டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரி, சென்னை மேரி அரசி கல்லூரி சென்னை (கிண்டி) மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம், காரைக்குடி மத்திய மின்சார வேதியியல் ஆராய்ச்சி நிலையம், இராமாநுசம் கணித ஆராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், சாந்தி நிகேதனம் விசுவபாரதி பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகம், காசி இந்துப் பல்கலைக் கழகம், இரங்கூன் பல்கலைக் கழகம், மலேயாப் பல்கலைக் கழகம் போன்ற உள்நாட்டு—வெளிநாட்டுக் கல்வி நிலையங்கட்கும் பெருந்தொகைகள் வழங்கியுள்ளனர் இச் சமூகத்தினர்.

பண்டிருந்து இன்றுவரை இச் சமூகத்தினர் வட்டித் தொழிலைத் தம் குலத் தொழிலாகக் கொண்டிருந்தாலும், இன்று இவர்கள் பஞ்சு ஆலைகள், நூற்பு ஆலைகள், துணி உற்பத்தி ஆலைகள் போன்ற பல்வேறு ஆலைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உள் நாட்டிலேயே இத்தொழில்களைச் செய்தும் வருகின்றனர். தேயிலை, காஃபி இவற்றை உற்பத்தி செய்தும் வருகின்றனர். இக்கால நகரத்தார்கள் வட்டித் தொழிலையும் வைத்துக்கொண்டு வேறு நவீனத் தொழில்களிலும் இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து 'செட்டி நாட்டுப்' பகுதிகட்குக் குடியேறிய குடும்பங்கள் நாம் அதிசயக்கத் தக்க முறையில் அமைந்துள்ளன. இக்குடும்பங்கள் ஒன்பது கோயில்கட்குள் அடங்கும்படி அமைந்துள்ளன. அதிக எண்ணிக்கைகளில் அடங்கும் கோயில்களில் பல உட்பிரிவுகள் அமைந்துள்ளன. இந்த ஒன்பது கோயில்கள் வருமாறு: 1. இளையாற்றங் குடிக்கோயில். இதில்

(அ) ஒக்கூருடையார் (ஆ) அரும்பார் கிளையரான் பட்டனச் சாமியார் (இ) பெருமருதூருடையார் (ஈ) கழனி வாசற்குடியார் (உ) கிங்கிணிக்கூருடையார் (ஊ) செந்தூருருடையார் (எ) பேரசிறுசேத்தூருடையார் ஆக வகை ஏழு உள்ளன. 2. மாற்றூர்க் கோயில். இதிலும் அ, உறை(ர)யூருடையார் (ஆ) அரும்பாக்கூருடையார் (இ) மணலூருடையார் (ஈ) மண்ணூருடையார் (உ) கண்ணூருடையார் (ஊ) கருப்பூருடையார் (எ) குளத்தூருடையார் ஆக வகை ஏழு உள்ளன; 3. வைரவன் கோயில்; இதில் (அ) சிறுகுளத்தூருடையார் (ஆ) கழனிவாசலுடையார் (இ) மருதேந்திரபுரமுடையார் ஆக வகை மூன்று உள்ளன. இதில் (அ) உட்பிரிவில் மேலும் (i) பெரிய வகுப்பு (ii) தெய்யனார் (தெய்வ நாயகர்) வகுப்பு (iii) பிள்ளையார் வகுப்பு என்ற மூன்று சிறு பிரிவுகள் உள்ளன. (4) இரணியூர்க் கோயில், (5) பிள்ளையார்பட்டிக் கோயில், (6) நேமங்கோயில், (7) இலுப்பைக்குடிக் கோயில், (8) சூரைக்குடிக் கோவில், (9) வேலங்குடிக் கோயில், இந்த ஆறு கோயில்களிலும் உட்பிரிவுகள் இல்லை.

இவர்களுள் ஒரு கோயிலுக்குடையவர்களுக்குள் திருமணம் புரிந்து கொள்வதில்லை. அதாவது ஒரே கோத்திரத்தாருக்குள் திருமணம் புரிந்து கொள்ளக் கூடாது என்ற விதி போன்றது இது.[2] ஒரு கோயிலுக்

---

2. இளையாற்றங்குடி, மாற்றூர், வைரவன் கோயில் இம்மூன்று கோயில்களைச் சார்ந்தவர்கள் மட்டிலும் தங்களுக்குள் உட்பிரிவுகள் அதிகம் இருத்தலால் ஒரே பிரிவினர் அதே கோயிலைச் சார்ந்த மற்றொரு பிரிவினருடன் மண உறவு கொள்ளலாயினர். இதை வேடிக்கையாக 'பகலில் 'அண்ணன்-தம்பி' இரவில் 'மாமன்-மைத்துனன்' என்ற உறவு முறை என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுவர்.

குடைய மாப்பிள்ளைக்கு மற்றொரு கோயிலுக்குரிய மணப் பெண்ணைத் திருமணம் புரிந்துகொள்ள வேண்டும். எ-டு. இளையாற்றங்குடிக் கோயிலுக்குரியார் மாற்றூர்க் கோயிலுக்குரியார் வீட்டில் பெண் எடுத்துக் கொள்ள வேண்டும். திருமணத்தன்று இரண்டு கோயில்களிலிருந்து மாலைகள் வந்த பிறகுதான் திருப்பூட்டு நடைபெறும்.

திருமணத்தில் ‘இசை குடிமானம்’ எழுதுதல் என்ற வரன்முறை வழக்கத்தில் உள்ளது. இதில் இரண்டு கோயில்கட்குரிய மணமகன், மணமகள் பெயர்கள் அவரவர் தந்தையாரின் பெயர்கள், சீதனங்கள் தரும் விவரம் எழுதப் பெற்று மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் இந்த இசைக்குடி மானத்தில் கையெழுத்திடு வார்கள், இந்த இசைக்குடிமான விவரம் இரண்டு கோயில் கட்குரிய பதிவேடுகளிலும் இடம் பெற்றிருக்கும். ஆவணக் களரிகளில் பதிவு செய்து கொள்ளும் முறை போன்ற இதனை நகரத்தார்கள் வழிவழியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த நான் இந்த வழக்கத்தை முதன்முதலாக அறிந்தபோது மிகவும் வியப்பெய்தினேன். இவர்கள் நாகரிக முறை என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. திருமணத்தின்போது மணமகனுக்குத் தலைப்பாகை முதலியன அணிவித்து குதிரை ஏற்றம் போன்ற சடங்குகள் நடைபெற்று வருகின்றன. இதுவாணிகத்தின்பொருட்டு மேற்கொள்ளும் பயணத்தினைக் குறிக்கும் ஐதிகம். உயர்கல்வி கற்று பல பட்டங்களைப் பெற்ற தனவணிக இளைஞர்களும்கூட தம் மரபு முறையைப் பின்பற்றுவதற்கு வணிக வேடம் தரித்தல், குதிரை ஏற்றத்திற்கு இணங்குதல் போன்ற சடங்குகட்கு உட்படும் முறை என்னை மேலும் வியக்க வைக்கின்றது. பெரும்பாலும் இவர்கள் திருமணத்தைத் தம் சொந்த ஊரில்தான் நடத்துகின்றனர். இடம் போதாமல் சிறிய வீட்டில் வாழ்கின்றவர்கள்கூட அக்கம்பக்கத்திலுள்ள பெரிய வீட்டை வாடகைக்கு வாங்கித் திருமணம் நடத்துவர்.

நகரத்தார் தெய்வ பக்தி மிக்கவர்கள். பெரும்பாலும் இவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள்; நெற்றியில் திருநீறு, சந்தனப்பொட்டு அல்லது குங்குமப் பொட்டு திகழும். ஒரு சிலர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இவர்கள் திருமண் தரித்துக் கொண்டதை ஒரு நாளும் நான் கண்ட தில்லை. இவர்களும் திருநீறு முதலியவற்றையே அணிந்து கொள்ளுகின்றனர். வைணவத் திருக்கோயில்களின் திருப் பணிகளை பெரும் அளவுக்கு மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அரியக்குடித் (காரைக்குடிக்கு அருகி லுள்ள ஊர்) திருக்கோயிலில் நகரத்தார் மேற்கொண்ட திருப்பணியைக் காண முடிகின்றது. வேறு திருக்கோயில் களிலும் இத்தகைய பணியை மேற்கொண்டிருத்தலும் கூடும். சைவம் வைணவம் என்ற வேறுபாட்டில் கவனம் செலுத்தாது சமரச மனப்பான்மையுடையவர்கள். காரைக்குடியிலுள்ள பெருமாள் கோயிலில் கருடசேவை, வைகுண்டவாசல் திறப்பு போன்ற நிகழ்ச்சிகளை நகரத் தாரே நடத்தி வருவது இதற்குச் சான்றாகும்.

குமிழி-196

# 40 காசியில் சில நிகழ்ச்சிகள்

காசியிலுள்ள நகரத்தார் சத்திரம் ஒரு பெரிய கோட்டையைப் போன்றது. நாட்டில் 'கோட்டை' போன்ற இல்லங்களை அமைத்த நாகரிகம் நகரத்திலும் 'இத்தகைய கோட்டை ஒன்று வேண்டும்; இது சமூகத்தின் மரபையும் காட்டுவதாக இருத்தல் வேண்டும்' என்ற நோக்கத்தைக் காட்டுவதற்கு இத்தகைய பெரிய கட்டடத்தை அமைத்துக் கொண்டனர் போலும். தவிர 'திக்குத்தெரியாத இடத்தில்' இது ஒரு சிறந்த பாதுகாப் பாகவும் அமைகின்றது. நான் காசியில் தங்கியிருந்தபோது

நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் இக்குமிழியில் வெளிப்படுகின்றன.

(1) நான் தங்கியிருந்தபோது சிவபூசகர் இராமநாத அடிகள் என்ற பெயர் கொண்ட நகரத்தார் ஒருவரும் சத்திரத்தில் தங்கியிருந்தார்: சத்துவ குணமே தலையெடுக்கும் குணசீலர் அவர். அவரோடு சதா உரையாடி மகிழும் பேறு கிடைத்தது பற்றி பெரு மகிழ்ச்சியடைவேன். நாங்கள் இருவரும் என் மனைவியும் அதிகாலையில் 5½-6 மணிக்குக் கங்கைக்கு நீராடச் செல்வோம். மக்கள் நீராடுவதற்கு அருமையான, பாதுகாப்பான படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றுள்ளன. ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு நாடோறும் நீராடி வருவோம். பெண்கள் ஆடை மாற்றிக் கொள்வதற்கு படிக்கட்டையொட்டி பல மறைவிடங்களும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. நீராடிப் பிறகு திருநீறு அணிந்து கொண்டு கமண்டலம் போன்ற வெண்கலப்பாத்திரமொன்றில் கங்கை நீர் எடுத்துக் கொள்வோம். வழியில் 5 காசுக்கு வில்வம் வாங்கிக் கொள்வோம். நேராக விசுவநாதர் ஆலயத்துக்குச் சென்று இலிங்கத்தின்மேல் வில்வத்தைப்போட்டு கங்கை நீர் சொரிந்து வழிபடுவோம். இந்த வசதி விசுவநாதர் ஆலயத்தில் நாடோறும் நடைபெற்று வந்தது. என் துணைவியார் நச்சுக்காய்ச்சலால் தாக்குண்ட நாட்களில் மட்டும் நானும் அடிகளுமே சென்று வருவோம். சத்திரத்திற்குத் திரும்பியதும் இராமநாத அடிகள் சிவபூசையில் இறங்கி விடுவார். திரு. வினைதீர்த்தான் செட்டியார் நாங்கள் எழுவதற்கு முன்பே, அதிகாலையில் நான்கு மணிக்கே, எழுந்துகங்கையில் நீராடித் திரும்பிவிடுவார். விடுதியின் நடைமுறைச் செயல்களைக் கவனிக்க வேண்டுமல்லவா?

(2) நாடோறும் முற்பகல் 9 - மணி அளவில் 16 படி ஆவின்பாலையும் வேறு சில பூசைப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு சத்திரத்திலிருந்து மேளதாளத்துடன்

விசுவநாதர் ஆலயத்துக்குச் செல்லும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. இந்தக் குழுவில் சேர்ந்து கொண்டு மீண்டும் விசுவநாத ஆலயத்திற்குச் செல்வோம். இந்தக் குழுவிற்குக் காசியில் நல்ல மரியாதை இருந்து வருவதைக் கண்டு மகிழ்ந்தேன். காசியில் நான் தங்கியிருந்த நாள்களிலெல்லாம் இம்மாதிரி இக்குழுவுடன் சென்று வழி படுவேன். என் மனைவி உடல் நன்னிலையிலிருந்த வரை இருவருமே இக்குழுவுடன் சேர்ந்தே செல்வோம். இராம நாத அடிகளும் இக்குழுவுடன் சேர்ந்து கொள்வார். நண் பகல் விசுவநாதரை வழிபட்ட பின்னர் அத்திருக் கோயிலுக்கு அப்பாலுள்ள விசாலாட்சித் திருக் கோயிலுக்குச் சென்று அந்த அன்னையாரையும் வழிபடு வோம். இந்த அன்னையாரின் திருவுருவம் மிகச்சிறியது; திருக்கோயிலும் மிகச் சிறியதே. 'கஞ்சி காமாட்சி; காசி விசாலாட்சி; மதுரை மீனாட்சி' என்ற தொடர் களைக் கேள்வியுற்றிருக்கின்றோம் அல்லவா? 'காமாட்சி- கண்டார் விரும்பும் (பார்ப்பவர்களை ஈர்க்கும்) கண்களை யுடையவள் (அட்சி - கண்); விசாலாட்சி - அகன்ற கண் களையுடையவள்; மீனாட்சி - மீன்வடிவம் போன்ற கண் களையுடையவள் என்ற பொருள்களையும் சிந்திக் கின்றோம்: இப்படி நானும் இராமநாத அடிகளும்[1] பேசிக் கொண்டே வருவோம். பெயர்களின் பொருளின் அருமைப் பாட்டை எண்ணி எண்ணி மகிழ்வோம். இந்த அன்னைமார்களை வழிபடும்போது,

> கரணமும் தனுவும் நினக்கெனத் தந்ததேன்.
> காளிநீ காத்தருள் செய்யே;
> மரணமும் அஞ்சேன்; நோய்களை அஞ்சேன்;
> மாரவெம் பேயினை அஞ்சேன்;

---

1. அடிகள் இப்பொழுது இல்லை. பல்லாண்டுகட்கு முன்னரே 'சிவப்பேறு' அடைந்து விட்டார் என்பதை நீண்ட நாட்களுக்குப் பின்னரே அறிய முடிந்தது.

இரணமும் சுகமும், பழிவுநற் புகழும்,
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்;
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்;
தாயெனக் காத்தலுன் கடனே.
எண்ணிலாப் பொருளும் எல்லையில் வெளியும்,
யாவுமாம் நின்றனைப் போற்றி,
மண்ணிலார் வந்து வாழ்த்திலும் செறினும்
மயங்கிலேன்; மனமெனும் பெயர்கொள்
கண்ணிலாப் பேயை எள்ளுவேன்; இனியெக்
காலுமே அமைதியி லிருப்பேன்;
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகும்
தாயுனைச் சரண்புகுந் தேனால்[2]

என்ற பாரதியாரின் பாடல்களை இசைப்பேன். பாடல்களை நான் மனமுருகிப் பாடும்போது இராமநாத அடிகள் மெய் மறந்து நிற்பார்கள். பாடல்களைப் பாடும்போது காமாட்சி, விசாலாட்சி, மீனாட்சி என்ற மூன்று அன்னைமார்கள் என் மனக்கண்முன் சேவை சாதிப்பார்கள். இவர்களைச் சேவிக்கும் போது,

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதியஉயி ராக்கி—எனக்
கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.[3]

என்று அன்னைமார்களைப் பணிவுடன் வேண்டி நிற்பேன்

2. பா. க: மகா சக்தி பஞ்சகம் - 1, 2

3. பா. கா: யோகசித்தி (வரஸ்கேட்டல்)—5

(3) ஒருநாள் திரு வினைதீர்த்தான் செட்டியாரவர்கள் நகரவிடுதியிலேயே நல்ல புரோகிதரைக் கொண்டு என் பெற்றோர்கட்குத் 'திதி' (திவசம்) செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். கங்கைக்கரையில் பலர் 'திதி' கொடுப்பதைப் பார்த்தேன். காசியாத்திரையாகச் செல்பவர்கள் காசியில் பெற்றோர்கட்கு தவறாது திதி (சிரார்த்தம்) கொடுப்பதை வழக்கமாகச் செய்து வருவதையொட்டி எனக்கும் என் பெற்றோர்கட்கு இவ்வாறு 'திதி' கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. "கங்கைக்கரையில் அவசர அவசரமாகச் செய்து விட்டு அடுத்தவர்களை எதிர் நோக்கி நிற்பார்கள்; மந்திரங்களையும் சுருக்கமாக முடித்து விடுவார்கள், நிதானமாக விடுதியிலேயே செய்து திவசம் செய்த 'சேஷப் பொருள்களை' ஒரு பாத்திரத்தில் சேர்த்து எடுத்துக் கங்கையில்சேர்த்து விடுவோம். சத்திரத் திலேயே சிறப்பான உணவுக்கு (வடை பாயசத்துடன்) ஏற்பாடு சேய்வேன்" என்று திரு வினை தீர்த்தான் செட்டியார் அன்புடன் கூறி அனைத்தையும் சிறப்பாகச் செய்வித்தார்கள். முன்பின் தெரியாத இடத்தில் திரு. செட்டியார் செய்த உதவி இன்றளவும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது.

(4) இன்னொரு நாள் பகலுணவிற்குப் பிறகு ஆள் மிதிவண்டி ஒன்றை அமர்த்திக் கொண்டு (அ) காசி இந்துப் பல்கலைக் கழகம் (ஆ) இராமமந்திர் என்ற ஈரிடங்கட்குப் போய் வந்தோம். காசிப் பல்கலைக் கழகம் ஒரு பெரிய வளாகத்தில் அமைக்கப் பெற்றுள்ளது; ஒவ்வொரு துறைக் கும் தனித்தனிக் கட்டடங்கள்; கட்டடங்களுக்கிடையே அதிக இடைவெளி விட்டுக் கட்டப் பெற்றுள்ளன மரங்கள் வளர்க்கப் பெற்றுள்ளன; வளாகம் ஒரு சோலையாக மாறி உள்ளது.

ஓங்குமரன் ஓங்கிமலை
ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர்
சோலைபுடை விம்மி[4]

என்று கம்பன் காட்டும் சூழ்நிலை என் நினைவிற்கு வருகின்றது. அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமனுக்குப் பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக் காட்டுவது இது. மேலும் நாகர்கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலையைக் கண்டதும் நினைவில் எழுகின்றது; ஒரு சமயம் திருச்சி மாவட்டம் வைரி செட்டிபாளையத்திலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள கொல்லி மலை அடிவாரத்தில் கண்டபுளியஞ் சோலையையும் நினைந்து பார்க்கின்றேன். வளாகத்தின் சோலைக்குள் கட்டடங்கள் இருப்பது அழகுணர்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது. இந்த வளாகத்திற்குள் 'பிர்லா மந்திர்' என்ற ஓர் அழகான மண்டபம் உள்ளது. மாணாக்கர்கள் பயிலுவதற்குச் சிறந்த இடமாக அமைத்த பல்கலைக் கழகம் நிறுவின பெரியார்களின் 'நீள் நோக்கினை' நினைந்து நினைந்து மகிழ்ந்தேன். 'நான் மாணாக்கனாக இருந்து பயிலும் வாய்ப்பு இல்லாமல் போயிற்றே?' என்று மனங் கவன்றேன். என் மக்களையாகிலும் பயில வாய்ப்பு தந்திருக்கலாம் என்றும் சிந்தித்தேன். நாடெங்கும் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாணாக்கர்களிடம் கொந்தளிப்பும் வேலை நிறுத்தமும் இருந்தமையால், என் மக்களை என்னுடனே வைத்துக் கொண்டு உயர் கல்வி பெறுமாறு செய்ததை நினைத்துக் கொண்டேன். பல்கலைக் கழக வளாகத்தைக் கால் நடையாகவே சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம்.

4. கம்பரா. ஆரணி. அகத்தில்—57

அடுத்து 'இராம மந்திர்' என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். யாரோ ஓர் அம்மையார் தம்முடைய இராம பக்திப் பெருக்கின் காரணமாக வழங்கிய பல கோடி ரூபாயைக் கொண்டு கட்டப் பெற்ற ஓர் அற்புதமான இலக்கிய மாளிகை என்பதைக் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தேன். மிகப் பெரிய கட்டடம். உட்புறம் பளிங்குக் கல்லால் அமைந்தது. கட்டடம் முழுதும் துளசி ராமாயணப் பாடல்கள் பொறிக்கப் பெற்றுள்ளன; ஒரு பாடல் விடாமல் பொறிக்கப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள் அங்குப் பணியாற்றும் அன்பர்கள். இந்தச் சூழ் நிலையில் என் மனத்தில் பல்வேறு எண்ணங்கள் குமிழி யிடத் தொடங்குகின்றன. "நமது சமய நூல்கள் அன்பைப் 'பக்தி' என்றும், காதலைப் 'பிரேமம்' என்றும் பிரித்துப் பேசும். பக்தியைக் காட்டிலும் பிரேமமே சிறந்தது, இப்பிரேமம் என்னும் காதலின் இலக்கணத்தை வெளியிட எழுந்த இலக்கணங்களும் உயரியதும், தூயதுமான காதல் இவ்வுலக மக்களிடையே நிகழ்தல் அரிதாகும் என்றும், தெய்வத் தன்மை வாய்ந்த, 'நம்மாழ்வார்', திருமங்கை யாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற சீரியரிடையேதான் இஃது அரும்பா நிற்கும் என்றும் அறிஞர்கள் கூறுவர்"—இதனை என் மனம் சிந்தித்தது.

இன்னும் மங்கையர்மீது கொள்ளும் காமம் 'விஷய காமம்' என்றும், மாதவன்மீது கொள்ளும் காமம் 'பகவத் விஷயகாமம்' என்றும் நூல்களில் நுவலப் பெற்றிருப்பதை யும் என் மனம் சிந்தித்தது. உலகப் புகழ் பெற்ற தாஜ் மகால் 'விஷய காமத்தின் சின்னம்' எனவும், இராம மந்திர், 'பகவத்விஷயகாமத்தின் சின்னம்' எனவும் என் மனம் எண்ணியது. முன்னதில் அன்பு காதல் முறையில் பரிணமித்து நிற்றலையும் அதே அன்பு பின்னதில் பக்தி யாக உருவெடுத்து நிற்றலையும் நினைந்து பார்க்க முடி கின்றது. இதனையெல்லாம் சிந்திக்கும் நிலையில் சென்னை யிலுள்ள வள்ளுவர் கோட்டம் நினைவிற்கு வராமல்

போகுமா? தமிழ்மொழியின் தலையாய இலக்கியமாகிய திருக்குறளுக்கு நினைவாலயம் எழுப்பிய டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 'தமிழ்க் காதலையும் நினைவுகூர முடிகின்றது.அம்மையாரின்இராமபக்திக்கு நாம் தலை வணங்குகின்றோம்; இராம பக்தியின் இலக்கியச் சின்னமாகத் திகழும் துளசிதாசர் இராமாயணத்தின் சின்னமாகவும் விளங்குவதைக் கண்டு இறும்பூது அடைகின்றேன்.

(5) நகரத்தார் சத்திரம் பெரும் செல்வர்கள் வந்து தங்கும் இடமாதலால் காசியில் கிடைக்கும் அபூர்வப் பொருள்களைக் கொண்டு வந்து சத்திரத்திலுள்ள பெரிய திண்ணைகளில் காட்சிக்கு வைப்பார்கள் அவ்வூர் வணிகர்கள். காசிப் பட்டு பெயர் போனதல்லவா? பட்டுத் துணி வணிகர்களும் அபூர்வ ரகப்பட்டுச் சேலைகளைக் கொண்டு கடை விரிப்பார்கள். நாங்கள் சில பொருள்களை சத்திரத்திலேயே வாங்கிக் கொண்டோம். சேலைகள் வாங்குவதற்குத் திரு. வினைதீர்த்தான் செட்டியார் ஆற்றுப்படுத்திய கடைக்குச் சென்று பட்டுரகங்களைப் பார்த்தோம். என் மனைவிக்குக் கடையையே வாங்கிவிட வேண்டும் என்ற ஆசைதான். பட்டுரகங்கள் கண்ணைப் பறிக்கின்றன. எங்கட்குப் பெண் பிள்ளைகள் இராததால் வாங்குவதில் ஆசையைச் சுருக்கிக் கொண்டு ஒன்றிரண்டு உருப்படிகளை மட்டிலும் வாங்கிக் கொண்டு திரும்பினோம்.

(6) ஒரு நாள் பகலுணவிற்குப் பிறகு கங்கையின் வடகரையிலுள்ள காசி அரசரின் அரண்மனையைப் பார்க்கச் சென்றோம். பேருந்துகள் அடிக்கடி உண்டு. எளிதாகப் போய் அனைத்தையும் சுற்றிப் பார்த்து விட்டு வீடு திரும்பினோம். அரிச்சந்திர புராணத்தில் வரும் காசி அரசரை நினைந்து பார்க்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

(7) என் மனைவிக்கு 'நச்சுக் காய்ச்சல்' ஏற்பட்டதால் 25 நாட்கள் காசியில் தங்கவேண்டி நேரிட்டதால்,

மிகச் சிறப்பாக நடைபெற்று வரும் 'மிட்டாய்த் திருவிழா'வைக் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இஃது தமிழகத்தில் சிவாலயங்களில் நடைபெறும் 'அன்ன அபிஷேகத்தை'ப் போன்றது. அன்ன அபிஷேகம் நடைபெறும் அன்றுதான் இஃதும் நடைபெறுவது வழக்கம். காசியிலுள்ள கோயில்களின் அர்ச்சகர்கள் ஒன்று சேர்ந்து அவ்வூரிலுள்ள அங்காடிக்காரர்களிடம் தலைக்கு ரூ5/- வீதம் வசூலிப்பார்கள்; டிக்கெட் போட்டு வசூலிப்பார்கள். இவ்வாறு சேரும் பணத்தைக் கொண்டு பல்வேறு இனிப்பு வகைகளைத் தயார் செய்வார்கள். இந்த இனிப்பு வகைகள் காசிவிசுவநாதர் கோயில், அன்னபூர்ணி ஆலயம், விசாலாட்சி கோயில் இந்த மூன்று கோயில்களிலும் உள்ள சுவர்களில் உள்ளும் புறம்புமாக அடுக்கி விடுவார்கள். கோயில்களின் தோற்றம் மிட்டாய்களால் கட்டப் பெற்றது போல் காணப்படும். ஓரிரவு, ஒருபகல்—இந்த அலங்காரம் கலைக்கப்பெறாமல் இருக்கும். ஊர் மக்கள் திரள் திரளாகச் சென்று கோயில்களிலுள்ள மூர்த்தங்களை வழிபடுவார்கள். மாலையில் அலங்காரங்கள் கலைக்கப் பெறும். இனிப்பு வகைகள் காகித உறைகளில் போடப் பெற்று டிக்கெட் வாங்கின புள்ளிகளுக்குப் 'பிரசாதமாக' வழங்கப்பெறும். இத்தகைய ஒரு காட்சியைக் காசியில் கண்டு மகிழ்ந்தோம். ரசகுல்லா, குலோப்ஜாமுன் வகை வகைகள் திரவத்திலிருப்பதால் இவ்வகை இனிப்புகள் இந்த விழாவில் செய்யப் பெறுவதில்லை. காரணம், இவற்றைக் கொண்டு சுவர்களை அலங்கரிக்க முடியாது. இவ்வளவு இனிப்பு வகைகளிலிருந்தும், எங்கும் எறும்புகளே காணப் பெறாதது ஒரு தனிச்சிறப்பாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். இதுதான் சிறப்பு என்றும் அந்த ஊர் மக்களும் பேசிக் கொண்டதையும் கேட்டேன்.

(8) காய்ச்சலால் பீடிக்கப்பெற்ற என் மனைவியைக் கவனிக்க மருத்துவர் ஒருவருக்கு ஏற்பாடு செய்தார் திரு வினைதீர்த்தான் செட்டியார். மூன்று நாள் ஆள்

மிதிவண்டியில் மருத்துவரிடம் போய் வந்தோம். ஊசி போட்டார்; மாத்திரைகள் உண்ணச் செய்தார். விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூர்ணி இவர்கள் திருவருளால் அதிகத் தொல்லை விளைவிக்காமல் நோய் நீங்கி விட்டது.

(9) ஒருநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு கங்கைக் கரையிலுள்ள 64 படித்துறைகளைக் காணச் சென்றோம். நகரச் சத்திரத்தில் தங்கியிருந்து சில ஆச்சிமார்களும் எங்களுடன் வந்தலர். சாதாரண பெரிய படகொன்றில் சென்றோம். வேறு சிலரும் படகில் வந்தனர். படகோட்டி ஒவ்வொரு துறையருகிலும் படகை நிறுத்துவான். திருத்தலப் பயணமாக வருபவர்கள் ஒவ்வொரு துறையிலும் ஒரு 'முழுக்கு' போடுவது வழக்கம். ஆனால் காலையில் ஒரு துறையில் நீராடினதோடு சரி. இப்போது ஒவ்வொரு துறையிலும் கங்கை நீரை எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டோம். படகோட்டி ஒவ்வொரு துறையின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே வந்தான். விசைப்படகுகளும் இருந்தன. நாங்கள் சாதாரணப் படகையே தேர்ந்தெடுத்துக் கொண்டோம். மெதுவாகச் சென்றால்தான் காட்சிகளைக் கண்டு நன்கு அநுபவிக்க முடியும் என்று திரு வினைதீர்த்தான் செட்டியார் யோசனை கூறியிருந்தார். அரிச்சந்திரப்படித் துறையருகில் வரும்போது சுடுகாட்டைக் கண்டோம். சில பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன; சில பிணங்கள் எரிவதற்குத் தயாரில் இருந்தன. பிணங்கள் எரியாத நாட்களே இல்லையென்று படகோட்டி சொன்னான். நான் அரிச்சந்திர புராணத்தில் வரும் சுடுகாட்டுக் காட்சிகளை நினைத்துக் கொண்டேன். அந்தப் புராண ஆசிரியரின் கற்பனைத் திறன் இக்காட்சிகளை நேரில் கண்டபின் பல மடங்கு அதிகரித்ததை எண்ணி மகிழ்ந்தேன். சுமார் ஐந்து அல்லது ஆறு மணிநேரம் படகில் இருந்ததாக நினைவு. இவ்வளவுக்கும் தலைக்கு ரூ/- தான் கொடுத்தோம்.

திருத்தலப் பயணிகளின் வசதிகட்காக ஏராளமான படகுகள் கங்கைக் கரை ஓரமாக உள்ளன. அப்பகுதி மக்களில் சிலருக்கு இதுவே வாழ்க்கைத் தொழிலாகவும் இருக்கின்றது.

குமிழி-197

# 41. அயோத்திப் பயணம்

நான் காசிப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன் என் சிறுவர்கட்கு நான் 1960—66இல் உணவு கொண்ட வேங்கடேசுவர பவனில் உணவுக்கு ஏற்பாடு செய்தேன். இரண்டு வேளை (பகல், இரவு) அங்கு சாப்பிடுவார்கள்; சிற்றுண்டி விருப்பமான இடத்தில் கொள்வார்கள். மூத்த மகன் இராமலிங்கம் பி எஸ் சி. யும் இளைய மகன் பத்தாவது வகுப்பிலும் (Central School) படித்து வந்தனர். நாங்கள் குடியிருந்த உமாமகேசுவர ரெட்டி குடியிருப்பிற்கெதிரிலேயே பள்ளி இருந்ததால் இளையவனுக்குச் சௌகர்யம்; மூத்தவன் காலையிலேயே பகலுணவை முடித்துக் கொண்டு பல்கலைக் கழகம் செல்ல வேண்டும்; நண்பகலில் அங்கு உணவு விடுதியில் சிற்றுண்டி கொள்ளவேண்டும். இளையவனுக்கு ஊருக்குள்ளேயே இவற்றிற்கு வசதி இருந்தாலும் ஒரு கி.மீ, போய் வர வேண்டும். மூத்தவன் 3—4 கி.மீ போய் வரவேண்டும். இருவருக்கும் தனித்தனியாக மிதிவண்டிகள் இருந்தன. காசியில் நாங்கள் தங்கியிருந்தபோது அடிக்கடிச் சிறுவர்களின் நினைவு வரும் எப்படி உணவுகொள்கின்றார்களோ? வீடு பாதுகாப்பாகப் பூட்டப் பெறுகின்றதோ? என்றெல்லாம் கவலை எழும். எங்கட்கு எந்தவித

பிரச்சினைகளையும் தராமல் நன்கு படித்து வந்தவர்களாதலால், நாங்கள் இல்லாதபோதும் தம்மை நன்கு கவனித்துக் கொள்வார்கள் என்ற மனஉறுதி இருந்தாலும் பெற்றமனம் பித்தல்லவா? என்றாலும் கவலைகள் எழும்; மறையும். ஏழுமலையான் நிழலில் வாழ்பவர்கட்கு எந்த வித இடையூறும் இராது என்ற மன உறுதியுடன் இருந்தோம்.

ஒருநாள் அயோத்தி போய்வர நினைத்தோம். ஒரு நாள் அதற்கென்று குறிப்பிடப் பெற்றது. முதல் நாள் காலையிலேயே ஓர் ஆளை எங்களைக் கவனித்துக் கொள்வதற்கு அயோத்திக்கு அனுப்பி வைத்தார் திரு. வினை தீர்த்தான் செட்டியார். இந்த ஆள் குன்றக்குடியைச் சேர்ந்தவர்; பண்டார வகுப்பைச் சார்ந்தவர். நல்ல அறிவுள்ளவர். சத்திரத்தில் தங்கியிருந்தபோதே இவர் சுறு சுறுப்பாக இயங்கிச் செயற்பட்டதைக் கண்டேன். நாங்கள் மறுநாள் சிற்றுண்டிக்குப் பிறகு புறப்பட நினைத் திருந்தோம். புறப்படவேண்டிய நாள் காலையில் திருச்சி மாவட்டம் நாரணமங்கலத்தைச் சார்ந்த கணபதி ரெட்டியார் மகன் திரு. நடராசனைச் சந்தித்தேன். திரு. நடராசன் சென்னையிலிருந்து வடநாட்டிற்கு லாரி மூலம் சரக்கு அனுப்பும் தொழில் செய்து கொண்டிருந்தார். இத்தொழில் காரணமாக வடநாட்டிற்கு வந்தவர் அவர் தந்தையாரின் ஆண்டுத் திவசத்தைக் கங்கைக் கரையில் கொடுக்க நினைத்துக் காசிக்கு வந்திருப்பதாகச் சொன்னார். நான் அவரைப் பார்த்த அன்று திதி கொடுக்கப்போவதாகவும் ஒரு தென்னிந்திய அந்தணரைக் கொண்டு பத்துப் பேருக்கு உணவு தயாரிக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்தார் எங்கள் இருவரையும் திவச விருந்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டினார். நாங்கள் பத்து மணி சுமாருக்கு அயோத்தி பயணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டதால் விருந்தில் கலந்து கொள்ள இயலாமையை வருத்தத்துடன் தெரிவித்தேன். கலந்து

கொண்டிருந்தால் எங்களுக்கும் அவருக்கும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

பத்து மணிக்கு அயோத்தி செல்லும் இருப்பூர்தியில் ஏறினோம். ஒதுக்கீடு செய்ய வேண்டியதற்குரிய பெட்டியில் ஏறிக்கொண்டோம். அந்தப் பெட்டியில் பெரும்பாலான உட்காரும் இடங்கள் காலியாகவே இருந்தன. பயணச் சீட்டுப் பரிசோதகர் எங்கள் சீட்டுகளைக் காட்டும்படி கேட்டபோது ஒதுக்கீட்டுக் கட்டணம் வாங்கிக் கொண்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டோம். அவர் 300 கி. மீ. க்குக் கீழ் ஒதுக்கீடு செய்ய முடியாது என மறுத்துவிட்டார். அருகிலிருந்த ஒருவர் தனியாக அவரிடம் சென்று ரூ 2/- அவர் சட்டைப்பையில் திணிக்குமாறு சொன்னார்; நானும் அப்படியே செய்தேன். அதை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இதே பெட்டியில் பலர் ஒதுக்கீடு செய்யாமல் ஏறியிருந்தும் அவர்களை ஒன்றும் கேட்கவில்லை. அவர்கள் சொன்னார்கள்; "எங்களிடம் வந்து தகராறு செய்தால் ஓடும் வண்டியிலிருந்து கீழே தள்ளிவிடுவோம் என்று எங்களிடம் வரவில்லை. நீங்கள் தென்னிந்தியர்கள் என்று தெரிந்து தான் உங்களிடம் வந்தார். எங்களில் சிலர் பயணச்சீட்டு இன்றியே பயணம் செய்கின்றோம்" என்று. வடநாட்டின் இருப்பூர்திப் பயணநடப்பு ஒருவாறு புரிந்தது. எங்களையும் இறங்கி வேறு பெட்டிக்குப் போகுமாறு வற்புறுத்தாததால் நாங்களும் சௌகர்யமாகவே அயோத்தி வரை வந்து விட்டோம். இந்தப் பரிசோதகர் நல்லவராகத்தோன்றுகின்றார் என்று எங்களோடு பயணம் செய்தவர்கள் பேசிக் கொண்டதை அறிந்தேன்.

மாலை சுமார் நான்கு மணிக்கு வண்டி அயோத்தி நிலையத்தை அடைந்தது. எங்களுக்காக முதல் நாளே வந்திருந்த பண்டாரம் இரயிலடிக்கு எங்களை வரவேற்க வந்திருந்தார். ஒரு டோங்காவை அமர்த்திக் கொண்டு 'நாட்டுக் கோட்டை நகர சத்திரத்தை (Narkot Sriram

Mandirl Babu Bazaar, Ayodhya, Fyzabad, U.P.) அடைந்தோம். ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக இயங்கி வந்த சத்திரம் இச்சமயம் நிலை சரியில்லாதிருந்தது. தங்குவதற்குப் பாதுகாப்பான இடம். படுக்கப் பாயும் தலையணையும் கிடைத்தன. இங்கும் ஒரு பண்டாரம் தான் சத்திரத்தின் பொறுப்பாளராக இருந்தார். இரவு உணவுக்கு ஒரு சிறு சிற்றுண்டிச் சாலையைக் காட்டினார் காசியிலிருந்து வந்த பண்டாரம். பூரி, பால் கிடைத்தன; கிடைத்தவற்றைக் கொண்டு நாங்கள் திருப்தி அடைந்தோம். மறுநாள் காலை அதிகாலையில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சரயுநதிக்கு நீராட எங்களை இட்டுச் சென்றார் பண்டாரம்.

நாங்க நீராடச் சென்றபோது சரயுநதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. 'சரயு' என்பதற்கு (கைலாசகிரியிலுள்ள) மானச மடுவில் தோன்றுவது என்று பொருள்படும். இருகரையும் வழிந்தோடுவது போன்று வெள்ளம் பெருகியோடினாலும், வெள்ளம் அமைதியாகத் தான் சென்றது. படித்துறையில் அச்சமின்றி நீராடலாம். வெள்ளத்தில் சுழற்சி, இழுப்பு முதலியன இல்லை. இதுவும் கங்கை போன்ற அகலமான நதிதான். நீர் பாசனத்திற்குப் பேரளவில் பயன்படுவதாகச் சொன்னார் வழிகாட்டியாக வந்த பண்டாரம். இந்த வெள்ளத்தைப் பார்த்து வியப்படைந்த என் உள்ளம் சரயுநதியின் வெள்ளத்தைப் பற்றி வருணிக்கும் பாசுரங்களை நினைந்து மகிழ்ந்தேன்.[1] பாசன வசதியைப் பற்றிப் பண்டாரம் கூறியபோது,

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது

1. கம்பால. பால். ஆற்றுப் படலம்—(6—11).

சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்.[2]

[இரவி—சூரியன்; புரவு—பாதுகாத்து வந்த; படி—தன்மை; உரவு நீர்—விரிவும் தன்மையுடைய நீர்]

என்ற கம்பநாடன் பாடல்மனத்தில் குமிழியிட்டது. சரயு, தன் நீரை இவ்வுலகத்தாரை உண்பித்து, உணவுப் பொருள்களை யுண்டாக்கியும் வளர்க்கும். தாரகமாகவும் போஷகமாகவும்இருத்தலினால் தாய் முலைப்பால் உவமையாயிற்று. சூரியகுலத்து மன்னவரின் தொன்று தொட்டு வந்த நல்லொழுக்கம் என்றும் ஒரு படிப்பட்டிருப்பதுபோல இந்தச் சரயு நதியின் நீர்ப் பெருக்கும் ஒருபடியாக ஓடு வதைக்கண்டு மகிழ்ந்தேன். நீராடும்போது நண்டுபோன்று ஒருவகை நீர்வாழ் பிராணி உடம்பை நெருடும்; சிறிது கூச்சத்தை உண்டாக்கினாலும் அச்சமின்றி நீராடலாம் என்று பண்டாரம் சொன்னார். நீராடி மகிழ்ந்தோம்.

சத்திரத்திற்கு வந்து ஈர ஆடைகளை உலர்த்திவிட்டு, அண்மையிலுள்ள சிற்றுண்டி விடுதியில் உணவு கொண்டு ஒரு டோங்காவை அமர்த்திக் கொண்டு அயோத்தியிலுள்ள முக்கிய இடங்களைப் பார்க்கச் சென்றோம். காசியிலிருந்து வந்த பண்டாரம் எங்கட்கு வழிகாட்டியாக இயங்கினார். முதலில் டோங்கா ஒரு மசூதியருகில் வருகின்றது. முகம்மதியர் படையெடுப்பின் பொழுது பழைய திருக்கோயிலை இடித்து அவ்விடத்தில் ஒரு மசூதி எழுப்பப் பெற்றதை அறிகின்றோம். மசூதியின் ஒரு பகுதி இராமன் பிறந்த இடம் எனக் காட்டப் பெறுகின்றது. அம்மி, ஆட்டுக்கல், மருந்தரைக்கும் கல்வம் போன்ற அடையாளங்கள் இங்கு வைக்கப் பெற்றுள்ளன. இவையெல்லாம் பிற்காலத்தில் முகம்மதியர் பழைய திருக்கோயிலை இடித்த பிறகு வைக்கப் பெற்றவை. இந்து—முஸ்லீம் மோதல் நேரிடாத வண்ணம் முன்னூற்றுக்கு மேற்பட்ட போர் வீரர்கள் காவலுக்காக வைக்கப்

2. ஷை—பால். 12:

பெற்றுள்ளனர். இந்த இடம்தான் இன்று செய்தித்தாள்களில் பேர் அடிபடும் இராமஜன்ம பூமி போலும்! இந்த மசூதிக் கருகில் சரயு நதிக்கரையில் தென்னிந்தியப் பாணியில் 'அம்மாஜி மந்திர்' என்ற ஒரு புதிய கோயில் கட்டப் பெற்றுள்ளது. இங்கு இராமன், பிராட்டி, தம்பியர், சிறிய திருவடி சூழ மகுடம் சூட்டிய கோலத்தில் காட்சி அளிக்கின்றான். இவனைப் பார்த்து அழகில் ஈடுபடும்போது,

அரியணை அநுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க
இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.[3]

என்ற கம்பனின் பாடல் நம் மனத்தில் எழுகின்றது. கோயில் மிகத் தூய்மையாக வைக்கப் பெற்றுள்ளது; மூர்த்தியின் திருக்கோலம் கை புனைந்தியற்றிய கவின் பெறு வனப்பெல்லாம் திரண்டு அமைந்துள்ளது. கண்டாரின் கவனத்தை ஈர்க்கவல்ல பெற்றியுடன் திகழ்குன்றது. நாமும் இராமனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டுள்ளோம் என்ற மன நிறைவை அடைகின்றோம்.

இவ்விடத்தில் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின்,

ஆர்க்கும் இது நன்று தீதானாலும் நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பண்ணாதே—சீர்க்கும்

3. கம்பரா யுத்த—திருமுடிசூட்டு-38.

திருவையோத் திப்புயலைச் சீரியமெய் ஞானத்
துருவை யோத்திற் பொருளை யோர்.[4]

[அயோத்திப் புயல்—இராமன்; மெய்ஞ்ஞானத்து
உரு—தத்துவ ஞான சொரூபி; ஓத்து—திருமறை]

என்ற பாடல் நினைவிற்கு வருகின்றது. இது நெஞ்சை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. தருக்கம் வியாகரணம் முதலிய உலகியல் பற்றிய நூல்கள் பல வற்றையும் ஓதிப் பழுதே பல பகலும் போக்காமல், தத்துவ ஞான சொரூபியாகிய இறைவனையே தியானம் செய்யுமாறு மனத்தை ஆற்றுப்படுத்துகின்றார் அய்யங்கார். இதில் ஆழங்கால் பட்டிருக்கும் நிலையில்,

மும்மைகால் உலகுக்கு எல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னை[5]

என்ற கம்பனின் திருவாக்கும் நினைவிற்கு வருகின்றது. இராமனைவிட இராம நாமத்தின் பெருமையினை நன்கு உணர்கின்றோம்.

திரெளபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது
திருநாமமிறே.[6]

என்ற முமுட்சுப்படியின் வாக்கியத்தினையும் சிந்திக்கின்றோம். அயோத்தியில் மட்டிலும் 2700 இராமனின் திருக்கோயில்கள் உள்ளனவென்று கேள்வியுறுகின்றோம்.

4. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி—98.
5. கம்பரா. கிட்கிந்தை—வாலிவதை-71.
6. முமுட்சுப்படி—16.

அயோத்தியில் இல்லங்கள் தோறும் இராமன் திருவுருவத்தை வழிபடுகின்றனர். இவற்றையும் திருக்கோயில்களாகக் கொண்டு கணக்கிட்டனர் போலும். என்றாலும், திருவயோத்தியில் இராம பக்தி உச்சநிலையில் உள்ளது என்பதை மறுத்தற்கில்லை.

இத்திருக்கோயிலிலிருந்து சற்றேறக்குறைய ஆறு கி. மீ. தொலைவில் சரயு நதியில் 'குப்தர் படித்துறை' உள்ளது. இராமன் சரயுநதியில் மூழ்கித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின இடம் இதுதான் என்று சொல்லுகின்றர். இந்த இடம் வந்ததும்,

அன்றுசரா சரங்களை வைகுந்தத் தோற்றி
அடலரவப் பகையேறி அசுரர் தம்மை
வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவி.[7]
[தாமம்—இடம்]

என்ற குலசேகரப் பெருமாளின் திருமொழிப் பகுதியும் நம் நினைவில் எழுகின்றது. இந்நிலையில் நாம் நம்மையும் மறந்து நாமும் முக்தராக வைகுந்தத்திற்குச் செல்லும் அநுபவத்தைப் பெறுகின்றோம். சரயுவில் இருவினைகளும் கழன்று போகின்றன என்ற அநுபவத்தையும் பெறுகின்றோம்.

இங்கிருந்து சரயு நதிக்கரையிலுள்ள 'அநுமான் தேக்ரி' என்று வழங்கப்பெறும் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வருகின்றோம் இங்கு எழுந்தருளியிருக்கும் சிறிய திருவடி பேருருவம் கொண்டவர், தலைப்பகுதி மட்டிலும் வெளியில் தெரியுமாறு அமைக்கப் பெற்றுள்ளது. இதனைக் காணுங்கால் அநுமன் அசோக வனத்தில் சீதாப்பிராட்டிக்குக் காட்டின பேருருவம் நினைவிற்கு வருகின்றது.[8]

7, பெருமாள் திருமொழி 10 : 10
8. கம்ப ரா. சுந்தர. உருக்காட்டுப்—(99—105)

இத்திருக்கோயிலெங்கும் இராம பக்தர்கள் துளசி ராமாயணத்தைப் படித்த வண்ணம் உள்ளனர். தாம் கோரிய யாவற்றையும் அளிக்கவல்லவன் மாருதி என்ற நினைப்பில் இச்சீரிய பணியில் ஈடுபட்டுள்ளனர்போலும்.

அஞ்சிலே ஒன்று பெற்றான்
 அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக
 ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
 அணங்குகண் டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
 அவன் எம்மை அளித்துக் காப்பான்[9]

என்ற பாட்டால் இச்சொல்லின் செல்வனை வணங்கிச் சத்திரத்திற்குத் திரும்புகின்றோம்.

வரும்போது 'அயோத்தி' என்ற சொல் 'போர் செய்து பகைவர்களால் வெல்ல முடியாதது' என்ற பொருளை யுடையது என்று அறிகின்றோம். அரண் முதலியவற்றால் மிக்க பாதுகாவலையுடையது. பழங்காலத்திய அயோத்தி. இப்பொழுதுள்ள தீர்த்தங்களில் ஒன்றாகிய சகஸ்திர தாரையில் மேற்குத் திக்கில் ஒரு யோசனையும், கிழக்குத் திக்கில் ஒருயோசனையும், வடக்குத் திக்கில் சரயு நதியும், தெற்குத் திக்கில் தமசா நதிவரையிலும் இருக்குமாறு பரவியிருந்தது என்று சொல்லப் பெறுகின்றது. இதனையும் அறிகின்றோம். அவசர அவசரமாகச் சிறு விடுதியில் காய்ந்த சப்பாத்தியை' உண்டு இருப்பூர்த்தி நிலையத்திற்கு விரைகின்றோம். வழிகாட்டிய பண்டாரமும் எங்களுடன் வருகின்றார்,

9. கம்ப ரா' பாலகண்டம்—காப்பு (அநுமன் துதி)

கங்கைக்கரையோரத்திலுள்ள பலபகுதிகள் பாலைவனமாக இருப்பதை இருப்பூர்தியில் வரும்போது காண்கின்றோம், இதற்குக் காரணம் என்ன என்று நான் பண்டாரத்தைக் கேட்க அவர் சொல்லுகின்றார்: “இப்பக்கத்து மக்கள் மிகவும் சோம்பேறிகள், சேலம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உழவர்கள் சிறிது தண்ணீர் கிடைத்தாலும் இரண்டு பாத்திகளிலாவது ஏதாவது பயிரிடுவதைப் பார்க்கலாம். அவர்கள் இங்கிருந்தால் இதில் பொன் விளையச் செய்து விடுவர்” என்று. அன்று இரவு எட்டு மணிக்குக் காசி வந்து சேர்ந்தோம்.

குமிழி-1988

## 42. கயைச் செலவு

ஒருநாள் கயைஎன்றதிருத்தலப் பயணத்திற்குத் திட்டமிட்டேன். திரு. வினைத்தீர்த்தான் செட்டியார் முன்னரே கடிதம் போட்டு அந்த ஊரிலுள்ள நாட்டுக்கோட்டை நகர சத்திரப் பொறுப்பாளரை இருப்பூர்திநிலையத்திற்கு வந்து எங்களை அழைத்துப் போமாறும், திதி முதலியவற்றிற்கு நல்ல புரோகிதரை ஏற்பாடு செய்யுமாறும் எழுதியிருந்தார். குறிப்பிட்ட நாளன்று மாலையில் நானும் என் மனைவியும் புறப்பட்டோம். கயைபகுதியில் கொள்ளையர் கூட்டம் அதிகம் என்பதை நான் முன்னரே கேள்வியுற்றிருந்தேன். பல்வேறு செய்திகளையும் நாளிதழ்களில் படித்திருந்தேன். இன்றும் (ஏப்பிரல்-1990) பல கொள்ளை கொலைபற்றிய செய்திகள் நாளிதழ்களில் வந்து கொண்டிருக்கின்றன. தென்னாட்டு நாளிதழ்களில் வாராத செய்திகளும் இருக்கும். சிறிது அச்சத்தி

னுடன்தான் பயணத்தைத் தொடங்கினோம். அதிகாலை 5-30 மணிக்குக் கயையை அடைந்தோம். நகர சத்திரப் பொறுப்பாளர் ஒரு பண்டாரமும் பயணிகளின் தரகரும் வேறொருவருமாக மூவர் எங்களை நிலையத்தில் மேம்பாலத்தில் இறங்கிவரும் போதே வரவேற்றனர். முன்பின் அடையாளம் தெரியாதவர்கள் ஒருவரை யொருவர் விரைவில் புரிந்து கொண்டு ஐக்கியமானது வியப்பினும் வியப்பே. இஃது எப்படி நிகழ்ந்தது?

மூவரும் மேம்பாலத்திலிருந்து இறங்கி வரும்போது வழியில் வழிதிரும்பும் மூலையில் யாரையோ எதிர் பார்த்துக்கொண்டு இருக்கும் பாவனையில் நின்று கொண்டிருந்தனர். மூவரும் தமிழர்கள் என்பது அவர் முகத்திலும் உடுத்திக்கொண்டிருக்கும் ஆடைமுறையிலும் தெளிவாகத் தெரிந்தது. நாங்களும் யாரையோ எதிர் பார்த்தவண்ணம் பையும் கையுமாக வந்து கொண்டி ருந்ததை அவர்கள் கண்ணுற்றனர். ஒரு சில நொடிகளில் பேச்சுக் கொடுத்து ஐக்கியமானது விந்தையினும் விந்தை யாகும். பேசிக் கொண்டே இருப்பூர்தி நிலையத்தைவிட்டு வெளியில் வந்து ஒரு தோங்காவை அமர்த்திக்கொண்டு சத்திரப் பொறுப்பாளருடன் சத்திரம் இருக்குமிடத்திற்கு (174, Chand Chowla, Gaya, Bihar State) வந்து சேர்ந் தோம். சந்திரத்திலேயே காலைக் கடன்களையும் நீராடலையும் முடித்துக் கொண்டோம்.

சத்திரத்துக்குப்பொறுப்பாளரான பண்டாரம்திதிக்குப் புரோகிதரை ஏற்பாடு செய்திருந்தார். இந்தப் புரோகிதர் பெங்களூரைச் சேர்ந்தவர்; தமிழ்ப் பேசுபவர். நல்ல சாத்திர அறிவு பெற்றவர். வடமொழி மந்திரங்களை நன்கு உச்சரிப்பவர். வடமொழி மந்திரங்களில் உச்சரிப்பு தான் முக்கியம் என்பதைத் தவத்திரு சித்பவானந்த அடிகள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். திதி, அருகில் ஓடும்ஆற்றங் கரையிலுள்ள ஒரு மண்டபத்தில் நடைபெற்றது. வசதி

படைத்தவர்கள் 49 திதிகள் செய்யலாம் என்றும், செய்து முடிப்பதற்குப் பதினைந்து நாட்கள் ஆகும் என்றும் புரோகிதர் விளக்கினார். ஆனால் அவரே பல்குனி ஆறு, வடஆலமரம், விஷ்ணுபாதம் என்ற மூன்று இடங்களில் சிறப்பான முறையில் செய்யும் திதிகளினால் 49 திதிகளின் பயனை அடையலாம் என்றும் விளக்கினார். திதிக்கு ரூ 13/- வீதம் மூன்று திதிகள் செய்ய ஏற்பாடு செய்யப் பெற்றது. திதிக்குரிய சாமான்கள் அனைத்தையும் புரோகிதரே வைத்திருந்தார். ரூ 39/- கொடுத்தால் திதிகள் நன்றாக நிறைவு பெறும் என்றும் சொன்னார்.

முற்பகல் ஒன்பது மணிக்குத் திதிகள் ஆற்றங்கரையிலுள்ள மண்டபத்தில் தொடங்கப் பெற்றன. சாமான்களை முறைப்படி பரப்பி வைத்துக் கொண்டு தொடங்கினார். என்னையும் என் துணைவியையும் ஒரு தருப்பையாலான ஆசனத்தில் அமரச் செய்து மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே சடங்குகளை முறைப்படி தொடங்கி முடித்தார். முற்பகல் ஒன்பது மணிக்குத் தொடங்கப் பெற்ற சடங்குகள் பிற்பகல் மூன்று மணிக்கு நிறைவுற்றன. மூன்று இடங்களில் தென்புலத்தார்கட்குப் பிண்டம் போட வேண்டும். முதலில் பல்குனி ஆற்றில் போடச் செய்தார்; பின்னர் விஷ்ணுபாதத்தில் போடச் செய்தார். இந்த விஷ்ணுபாதம் உள்ள கட்டடம் விண்ணை முட்டும் அளவுக்கு மிகவும் உயர்ந்த கட்டடம் ஆகும். திருச்சி புனிதசூசையப்பர் கல்லூரிக்கருகிலுள்ள மாதா கோயிலின் கோபுரத்தைப்போல் மிக உயர்ந்த கோபுரத்தைக் கொண்டது. கோபுரத்தின் உச்சியில் உள்ள கலசம் 100 கிலோ தங்கத்தினாலானது என்று புரோகிதர் சொன்னார். இதில் உண்மையும் இருக்கலாம்; புனைந்துரையாகவும் இருக்கலாம். எனினும் அது தங்கத்தாலாகாவிடினும் தங்கத்தகட்டினாலாவது வேயப் பெற்றிருக்கலாம். இதைப் பற்றிய ஆய்வு நமக்குத் தேவை இல்லை. விஷ்ணுபாதத்தில் ஒன்பது பிண்டங்களைப் போடச்

செய்தார். இச்சடங்கு செய்து விட்டால் பிறகு பெற்றோர் கட்குத் திதியே செய்ய வேண்டியதில்லை என்றும் சொன்னார். வருங்காலத்தில் சாத்திர நம்பிக்கையே அற்றுப் போகும் என்றும், எங்கள் மக்கள் எங்கட்குச் செய்யாமலும் விட்டுவிடலாம் என்றும், அதற்கு நாங்களே எங்கட்குப் பிண்டம் போட்டுக் கொள்ளலாம் என்றும் கூறி எங்கட்கும் விஷ்ணுபாதத்தில் பிண்டங்களைப் போடச் செய்தார்.

அடுத்து, அருகிலுள்ள வடஆலமரத்தின்கீழும் பிண்டங்கள் போடப் பெற்றன. பிறகு எங்களிருவரையும் கிழக்குப் பக்கமாகப் பார்த்துக் கொண்டு நிற்கச் செய்தார். பின்னர் எங்கள் இருவர் கைகளையும் தனித்தனியாகவும் பின்பு ஒன்று சேர்த்தும் கயிற்றைக் கொண்டு பலமாகக் கட்டினார். இப்போது அவர் சொன்னார்: ''ஐயா, கயையில் கொள்ளைக்காரர்கள் மக்களைக் கட்டி வைத்துக் கிட்டியில் மாட்டிப் பணம் பறிப்பார்கள் என்பதை அறிவீர்களா? இப்போது கட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள என்ன தருவீர்கள்?'' என்று. நான் சொன்னேன்: ''எங்களிடம் பொருள் ஒன்றும் இல்லை. வழிச் செலவுக்குத் தான் சொற்பத்தொகை எங்களிடம் உள்ளது. இப்போது தான் திதி கொடுத்தோம். அதிதிகட்கு அமுது படைக்க வேண்டும் என்பது திதி பற்றிய விதி. எங்கட்குச் சமைக்க வழி இல்லை. நாங்களே இன்று அதிதிகளின் நிலையில் உள்ளோம். மூன்று பிராமணர்கட்கு அமுது படைப்போம். மூவரைக் கொண்டு வந்து எங்கள் முன் நிறுத்தினால் தலைக்கு ரூ5/- வீதம் (ஒரு சாப்பாட்டு விலை) ரூ 15/- தருவன்'' என்று. சிறிது நேரத்தில் மூன்று அந்தணர்கள் கள் வந்தனர். அவர்களிடம் ரூ.15/- தந்து கட்டவிழ்ப்பித்துக் கொண்டோம். இப்படிப் புரோகிதர் நகைச் சுவையாகத் திதியை முடித்து மகிழ்ந்தார்; நாங்களும் மன நிறைவு கொண்டோம்.

திதிக்குப் புறப்படுவதற்கு முன்னர் ''திதி முடிய பகல் இரண்டு மணிக்கு மேலாகும். இந்த ஊரில் நல்ல உணவு விடுதிகளும் இல்லை. ஆகவே, நான் நீராடி உங்கட்குத் திதி சாப்பாடு தயார் செய்து வைப்பேன். திதி முடிந்ததும் நேராக உணவுக்கு வரலாம்.'' என்று சொன்னார் பண்டாரம். அவர் சொல்லியவாறே பிற்பகல் 3-30க்கு சத்திரத்திற்குத் திரும்பும்போது உணவு தயாராக இருந்தது. உண்டு மகிழ்ந்தோம். இரவு பாலும் பழமு மாகச் சொற்ப உணவுடன் கழிந்தது. மறுநாள் காலை எட்டு மணிக்குப் புத்த கயைக்குப் போய் வரலாம் என்றும், அதற்காக ஆள் மிதிவண்டி போய் வருவதற்கு ரூ 7/- வாடகையில் பேசி வைத்திருப்பதாகவும் சொன்னார் பண்டாரம். மறுநாள் காலை ஏதோ சிற்றுண்டி தயார் செய்து தந்தார்; புத்த கயையில் சில நல்ல உணவு விடுதி கள் உள்ளன என்றும், உணவுப் பொருள்கள் சற்று விலை அதிகமாக இருப்பினும் தூய்மையாக இருக்கும் என்றும் கூறினார். சரியாகக் காலை எட்டு மணிக்குப் புத்த கயைக்குப் புறப்பட்டோம். சுமார் ஏழு மைல் தூரத்தை ஒன்றரை மணி நேரத்திற்குள் கடந்து விட்டோம். ஆள் மிதிவண்டியை ஓரிடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு இடத்தை நடந்தே சுற்றிப் பார்த்தோம்.

'குவலயத்தில் அருள் மாரி பொழியும் ஐயன்' புத்தர்பிரான் ஞானஒளி பெற்ற இடத்திற்கு வந்ததும் என்னையறியாத புத்துணர்ச்சி என்பால் எழுந்தது. கூச்சல், குழப்பம், கேளிக்கை முதலிய ஒன்றும் இல்லாத அமைதியான இடத்தை முதன்முதலாக இங்குத்தான் கண் டேன். ஒருசிலர் அங்குமிங்கும் நடமாடினாலும் அவர்கள் நடையிலும் பேச்சிலும் அமைதி காணப் பெற்றது. அமைதி யான சூழ்நிலை தியானத்திற்கு ஏற்ற இடமாகத் திகழ்ந்தது. ஏன்? அந்த இடமே தியானத் திருவுருவாக இலங்கியது என்று சொல்லினும் மிகையாகாது. இந்த இடத்தில் போதி மரத்தடியில் 'ஞான ஒளி' கண்ட புத்தர்

பிரான் பின்னர் 'ஆசியஜோதி'யாக மலர்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என் மனத்தில் விரைந்து குமிழியிட்டெழுந்தன. நானும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் புத்தர்பிரான் வாழ்ந்த காலத்துக்குத் தள்ளப் பெற்றேன்—மானசீகமாக. பாவனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன்.

தேவர் அவையில் இறைவன் பேசிய அருளுரை என் மனக்காதில் கேட்டது.

வையகத்தில் உயிர்கள்மிக வாடக் கண்டேன்;
வழியறியாது அவைமயங்கி வருந்தக் கண்டேன்;
மெய்யிதுஎன்று உய்யுநெறி காட்டி நன்மை
விளைவிப்பர் எவரையுமே கண்ணிற் காணேன்.

எண்ணிறிய சென்மங்கள் எடுத்து முன்னம்
எவ்வுடம்பின் எவ்வுயிர்க்கும் இடர்க ளைந்தேன்;
மண்ணுலகம் ஈடேற இன்னும் ஓர்கால்
மனிதஉடல் தாங்கமனத்து ஆசை கொண்டேன்.

இப்பிறப்பை யல்லாது பிறப்பு வேறிங்கு
எனக்குமிலை; என்னைவழி பட்டு வாழும்
ஒப்பரிய அடியவார்கள் எவர்க்கும் இல்லை;
உண்மைஈது எந்நாளும் உண்மை யாமால்

வானெழுந்து வளர்இமய மலையின் தென்பால்
வாழும்உயர் சாக்கியர்தம் மன்ன னுக்கு
யானும்ஒரு மகனாகச் செல்வேன்''[1]

என்று புத்தர் அவதரித்த செய்தி அறிந்தேன். பின்னர் அவர் மக்கள் அல்லலுறுங் காரணத்தை அறிய காடு மலை முதலிய இடங்களிலெல்லாம் அலைந்து திரிந்த வரலாறுகளையெல்லாம் என்மானதக் காட்சியில் புலனாயின. அவர் யசோதரையை மணந்ததும், அவள் அந்தப்புரத்தில் இருந்தபோது அவர்மட்டும் தேவகீதம் கேட்டதும், பின்னர்,

1. ஆசிய ஜோதி—புத்தர் அவதாரம் (1—4)

புழுதி நிறைந்த பூமி எனக்குப்
பழுதி லாத பஞ்சணை யாகும்
பாழிட மான பாலையை நல்ல
வாழிட மாக மதித்து வாழ்வேன்;
ஏழைப் பிராணி எதனொடும் அன்பாய்த்
தோழமை பூண்டு துணைசெய் திடுவேன்;
பணிசெய் பள்ளர் பறையர் அணியும்
துணியை அரையில் சுற்றித் திரிவேன்;
தெருத்தெரு வாகத் திரிந்து பெற்ற
பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன்'[2]

என்று சொல்லிக் கொண்டு துறவு பூண்டதும், யசோதரையை நோக்கி,

''நீள்நில மீது நித்தியா னந்த
வாழ்வை யடையும் வழிஇது வென்று
தீவிர மான தியானத் தாலும்
ஓய்வில் லாத உழைப்பி னாலும்
அறியலா மென்னில் அறிந்து வருவேன்;
வாடி வருந்தி மன்னுயி ரெல்லாம்
அடையும் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்[3]

என்று கூறி வெளியேறியதுமான நிகழ்ச்சிகள் படக்காட்சி காண்பதுபோல் என்மானதக் காட்சியில் தெரிந்தன.

பின்னர், வழி நடந்த களைப்பால் ஓர் ஏழை இடைச் சிறுவன் கலத்தில் கறந்து தந்த பாலைப் பருகித் தளர்ச்சி நீங்கியதும் பிம்பசார மன்னன் செய்யும் வேள்விக் காக நடத்தி செல்லப் பெற்ற ஆட்டு மந்தையைக் கண்டு இரங்கியதும், துள்ளும் மறியொன்றினைச் சுமந்து கொண்டு.

---

2. ஆசிய ஜோதி—சித்தார்த்தன் துறவு-அடி(66-75)
3. ஷை—ஷை—அடி (256—62)

மானேந்தும் ஈசன்உளம் நாண, ஆட்டின்
மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்'[4]

பிம்பசாரனின் மாநகரின் திருவாயில் வந்தபோது கண்ட காட்சிகளும், யாகம் செய்யும் தீட்சிதருக்கும் புத்தர் பிரானுக்கும் இடையே நடைபெற்ற வாதப் பிரதிவாதங் களும், யாக தீட்சிதருக்குப் புத்தர்பிரான் தந்த,

மன்னுயி ரெல்லாம் உலகில்—ஒரு தாயின்
மக்களென் றுண்மை அறிந்திலீரோ'

.... ... ... ... .... ... ... ...... ... ...

தாயென நம்பி வரும்உயிரை—யாக
சாலை நடுவில் கிடத்திஒரு
பேயெனக் கீறிப் பிளப்பதனால்—என்ன
பேறும் பெருமையும் பெற்றீரையா!

.... ... ... ... .... ... .... ... ... .... ...

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம்—ஏழை
ஆட்டின் தலையொடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை—விட்டுச்
செல்வ தொருநாளும் இல்லை ஐயா!

முன்னைப் பிறப்பினில் செய்தவினை—யாவும்
முற்றி முதிர்ந்து முளைத்தெழுந்து
பின்னைப் பிறப்பில் விளைந்திடும் என்பது
பித்தர் உரையென எண்ணினீரோ?

நெஞ்சினில் வாயினில் கையினில்—செய்திடும்
நீதி அநீதிகள் யாவையுமே
வஞ்சமி லாது மறுபிறப்பில்—உம்மை
வந்து பொருந்தாமற் போயிடுமோ?

... ... ... .... ...

---

4. ஷெ. கருணைக் கடல்—16

ஆதலால், தீவினை செய்யவேண்டாம்—ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்கவேண்டாம்;
பூதலந் தன்னை நகரம தாக்கிடும்
புத்தியைவிட்டுப் பிழையும்,ஐயா!''[5]

என்பன போன்ற அறிவுரைகளும் என் மனக் காதில் கேட்டன.

''என்ன, நினைவு மறந்தீர்களா? இன்னும் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்க்க வில்லையே. நேரத்தில் திரும்ப வேண்டும்.மிதிவண்டி ஆள் காத்திருக்கின்றான்''— என்று என் மனைவி சொன்னபோதுதான் நான் புத்தர் 'ஞான ஒளி' பெற்ற போதி மரத்தடியில் இருப்பதை உணர்ந்தேன். பின்னர் மரத்தைச் சுற்றி யிருந்த பூங்காவைக் கண்டுகளித்த வண்ணம் புத்தராலயம் வந்தோம்; அந்த ஞானப் பிழம்பை வழிபட்டோம். பிறகு புத்தரின் கொள்கைகளை என் மனைவிக்குக் கூறிக் கொண்டே பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம்.

புத்தர் கண்ட சமயம் பன்னிரண்டு நிதானங்களை யுடையது. நிதானம் என்பது காரணம். இவை பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு,வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என்று கூறுவர் சீத்தலைச்சாத்தனார்.[6] இந்தப் பன்னிரு சார்பு களின் தன்மைகள் மணிமேகலையில் 30—ஆம் காதையில் தெளிவாக விளக்கப் பெறுகின்றன. இச்சார்புகளினால் தான் பிறப்பு—இறப்பு என்ற சக்கரம் சுழல்கின்றது. சார்புகளைச் சிறிது சிறிதாகக் களைந்தால்தான் 'நிர்வாண மோட்சம்' எனப்படும் வீடுபேற்றினை அடையலாம்;

5. கருணைக் கடல்
6. மணிமேகலை—24; 105—110; 30:45—50

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.[7]

என்ற பொய்யா மொழியாரின் கருத்தும் இதுவேயாகும்.

நிர்வாண மோட்சம் அடைவதற்கு நான்கு உயர்ந்த உண்மைகளை அறிதல் வேண்டும். அவை; துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பன. புத்தர் பெருமான் போதி மரத்தினடியில் மெய்ஞ் ஞானம் பெற்றபொழுது இவற்றை அறிந்தார். இந்த நான்கின் அடிப்படையில்தான் புத்த சமயம் என்ற கட்டடம் நிற்கின்றது. துக்கம் என்பது, நோய்; பிறப்பு துன்பம்; பிணி துன்பம்; மூப்பு துன்பம்; இறப்பு துன்பம்; அன்பில்லாரோடு தொடர்பு துன்பம்; அன்புள்ளாரிடத் தினின்றும் பிரிவு துன்பம்; விரும்பியதைப் பெறாமை துன்பம். சுருங்கக் கூறின், புலன்களால் உண்டாகும் பற்றுகள் யாவும் துன்பம் என்று அறிதலே துக்கம் என்னும் முதல் உண்மையாகும். துக்கத்தோற்றம் என்பது, நோய்த் தோற்றம். பன்னிரு சார்புகளின் தொடர்புதான் பிறப்புக் கும் காரணமாகும்.[8] இங்கும் அங்கும் சிறுபான்மையே நிறைவேறுவதற்குரியனவாகிய காமலோபங்களோடு சேர்ந்த வேட்கை என்பதே இது; இதுவே பிறப் பீனும் வித்து[9]

அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.[10]

என்ற வள்ளுவப்பெருமானின் கூற்றும் இதையே குறிக் கின்றது. இன்ப வேட்கையும், அதிகார வேட்கையும் இதுவேயாகும். இஃது இரண்டாவது உண்மையாகும். சாத்தனாரும்,

7. குறள்—359
8. மணிமேகலை—30: 179—182.
9. ஷை 104—117.
10 குறள்—361

அந்நோய் தனக்குப்
பேதைமை செய்கை அவாவே பற்றுக்
கரும ஈட்டம் இவை காரண மாகும்.[11]

என்று கூறுவது ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

துக்க நிவாரணம் என்பது, நோய் நீங்கும் வாய். ஆசைக்குச் சிறிதும் இடம் கொடாமல் அதனை வேருடன் களைந்து நீக்குவதே மூன்றாவது உண்மையாகும்.

'துன்பம் தோற்றல் பற்றே காரணம்'[12]

என்னும் உண்மையை உறுதியாக உணரவதே இதுவாகும். துக்கத்தை நீக்கினால் பிறவாமையாகிய இன்பதை அடையலாம் இதுபற்றி விநயபிடகத்தில்[13] காணப் பெறுவதைச் சாத்தனார் தெளிவாக மொழி பெயர்த்துக் காட்டுவர்[14] துக்க நீக்கநெறி என்பது, நோய் நீக்கும் நெறி.

---

11 மணிமேகலை—30; 183—185

12 ஷை ஷை—186

13. இது பௌத்த மறைகளுள் ஒன்று. புத்தர் பெருமான் நிர்வாணமோட்சம் அடைந்த சில மாதங் களுக்குப்பிறகு ஐந்நூறு தேரர்கள் வயது முதிர்ந்த பிட்சுக்கள்—கார் காலத்தைக் கழிப்பதற்காக ஒரு மலைக் குகையில் கூடினர். இதுவே பிட்சுக்கள் கூடிய முதல் மாநாடாகும் இது புத்தரின் முக்கிய சீடருள் மகாகாசிபர் தலைமையில் நடைபெற்றது மற்றொரு சீடர்உபாலி என்பார் புத்தர்அருளிய விநயபோதனை களைத் தொகுத்து ஓதினார்; இவை பிட்சுக்களும் பிட்சுணிகளும் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைப் பற்றி யவை. இன்னொரு முக்கிய சீடர் ஆனந்தர் புத்தர் அருளிய தம்ம போதனைகளைத் தொகுத்து ஓதினார்;

'இன்பம் வீடே பற்றிலி காரணம்'[15] என்று கூறுவர் சாத்தனார். நற்சாட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன் முயற்சி, நற்கடைப்பிடி, நல்லமைதி ஆகிய எட்டுவித ஒழுக்கங்களை மேற்கொண்டு ஒழுகுவதே நான்காவது உண்மையாகும். இவை 'அஷ்டாங்க மார்ககம்' என்றும் வழங்கப்பெறும். இதைத் தான் 'விசுத்தி மார்க்கம்' என்றும், பழுதிலா வாழ்க்கை என்றும் கூறுவர். சங்கமே பௌத்த சமயத்தின் ஆணிவேர் போல் நின்று அச்சமயம் உலகமெங்கும் பரவுவதற்குக் காரணமாக இருந்தது 'சங்கம்' என்பது பௌத்த பிட்சுக் களின் கூட்டம்.

புத்தருடைய தியாகமும் அவர் போதித்த அறிவுரை களும் வெளி நாட்டறிஞர்கள் பலரின் மனத்தைக் கவர்ந்தன. யுவான் சுவாங் முதலிய சீன அறிஞர்கள் புத்தர் பிறந்த புண்ணிய பூமியைத் தரிசிக்க விரும்பி நம் நாடு வந்தனர். புத்தர் போதனைகளைக் கற்றுத் திரும்பினர். நம் நாட்டிலிருந்து புத்த பிட்சுக்களும் வெளி சென்று தம் சமயத்தைப் பரப்பினர். புத்தர் பெருமானின் பெருமை சீனா, ஜப்பான் பர்மா, சயாம், இலங்கை முதலிய வெளி நாடுகள் வரை சென்று பரவியுள்ளது. இன்றைய உலகில் பௌத்த சமயத்தைப் பின்பற்றும் மக்கள் அறுபது

இவை அறநெறிகள் பற்றியவை. இவை முறையே விநயபிடகம், தம்மபிடகம் அல்லது அபிதம்மபிடகம் என்றுபெயர் பெற்றன. பிற்காலத்தில் அபிதம்மபிடகத் திலிருந்து சூத்திரபிடகம் தொகுக்கப்பெற்றது. இவை மூன்றும் திரிபிடகம் என்று வழங்குகிறது. இவை பௌத்த மறைகளாகும். பிடகம் கூடை (பாலி மொழி); தொகுப்பு என்பது கருத்து.

14. மணிமேகலை—30: (119—133).

15. ஷை 30 :187.

கோடிக்கு மேல் உள்ளனர் என்பதாகக் கணக்கிடப் பெற்றுள்ளது.

இவற்றையெல்லாம் கூறிய வண்ணம் இலங்கை, பர்மா, ஜப்பான், சயாம் முதலியநாட்டார்கள்இங்கு வந்து தங்குவதற்கென்று அந்நாட்டவர்களால் கட்டப்பெற்றுள்ள விடுதிகளைப் பார்த்தோம். ஒவ்வொன்றும் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாகக் கட்டப்பெற்றுள்ளன. எல்லாம் நவீன வசதிகள் உள்ள பெரிய பெரிய மாளிகைகளாகும். இவற்றையெல்லாம் பார்த்த பிறகு ஒரு சிறு உணவுவிடுதி யில் பூரி உண்டு சுமார் மாலை மூன்றுக்குத் திரும்பினோம்.

'ஆசிய ஜோதி' யாகிய புத்தர்பிரான் தோன்றிய நாட்டை,

பூரண ஞானம் பொதிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே.[16]

என்று பாரதியார் போன்றியதை நினைந்த வண்ணம் மாலை 4-30க்குச்சத்திரம் வந்தடைந்தோம். அடுத்த நாள் காலை பகல் இருப்பூர்தியில் காசி வந்தடைந்தோம். பண்டாரம் இருப்பூர்தி நிலையம் வரையில் வந்து வழியனுப்பினார்.

16. பாரதி : எங்கள் நாடு—2

# 43. திருப்பதி திரும்புகை

தொடக்கக் காலத்திலேயே அயோத்திப் பயணம், கயைப் பயணம் முடித்துக் கொண்டோம், அடுத்து, காசியில் உள்ள இடங்களையும், வெளியில் உள்ள இடங்களையும் பார்ப்பதாகத் திட்டமிட்டிருந்தோம். இவையெல்லாவற்றையும் பார்த்த பிறகுதான் என் மனைவியின் உடல் நிலை கெட்டது; நச்சுக்காய்ச்சல் கடுமையாகத் தாக்கவில்லை. என்றாலும் இரண்டு இரவுகள் பயணம் இருப்பதால், வழியில் ஏதாவது சிரமம் ஏற்பட்டால் சமாளிக்க முடியாது என்றும் நல்ல நிலை ஏற்பட்ட பிறகுதான் திரும்பவேண்டும். என்றும் திரு. வினைதீர்த்தான் செட்டியார்யோசனைப் படித்தங்கிவிட்டோம். காசிமுதலிய திருத்தலப் பயணங்கள் 25 நாட்களில்முடிந்தன. திடீரென்று ஒரு நாள் பயணத்திற்காக இட ஒதுக்கீட்டுக்காச் சென்றேன். உட்காருவதற்குத்தான் கிடைக்கும் என்றும், படுப்பதற்கு இட்டார்சியில் தில்லியிலிருந்து வரும் இருப்பூர்தியில் முயன்று பெறவேண்டும் என்றும் நிலை ஏற்பட்டது. இறைவன் வழிகாட்டுவான் என்று பயணத்தை உறுதி செய்து கொண்டோம்.

நாங்கள் சென்ற இருப்பூர்தியிலேயே தேவகோட்டை ஜமீந்தார் திரு, சோமய்யா அவர்கள் (சோமசுந்தரம் செட்டியார் என்று பெயர் இருக்கவேண்டும் என்பது என் ஊகம்) சென்னை வரைப்பயணம் செய்தார்; அவருடன் தேவகோட்டையைச் சார்ந்த சில ஆச்சிமார்களும் பயணம் செய்தார்கள். எல்லோருக்குமே படுக்க இட ஒதுக்கீடு கிடைக்கவில்லை. வடநாட்டுப் பக்கம் போகிறவர்கள் இட

ஒடக்கீடு செய்யாமல் பயணம் செய்யக்கூடாது. மொழி பெயர்தேயத்தில் அம்மொழி தெரியாத நாம் பல தொல்லைகளை அநுபவிக்க நேரிடும். இந்தி மொழியைத் தவிர வேறு மொழி பேச அறியாதவர்கள் வண்டியில் நிறைந்து விட்டால் தொல்லைகள் அதிகமாக இருக்கும். சாமான்கட்கும் பாதுகாப்பு இராது. திரு. சோமய்யா அவர்கள் இருப்பூர்தி நிர்வாகத்தில் பல்லாண்டுகள் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்தவராதல் அவர் செல்வாக்கைக் கொண்டு இடம் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. எட்டுப்பேர் அடங்கிய எங்கள் குழுவில் நானும் திரு.சோமய்யா அவர்களுமே ஆண்கள்; ஏனைய அறுவரும் பெண்கள். செல்வாக்கு இருந்தாலும் அவரால் எட்டு இடங்கட்கு எப்படி வழி செய்ய முடியும்? என்ற ஐயமும் அச்சமும் என்பால் இருந்தது. 'துணிவே துணையாக' இருந்தோம். திரு. சோமய்யா நகைச்சுவை யாகப் பேசுபவர்; உதவி செய்வதே அவர் இயல்பாக இருந்தது. காரைக்குடியிலிருந்தபோது திரு. ராய. சொ. அவர்களால் நன்கு அறிமுகமானவனாதலால் அவரிடம் நன்றாக 'அரட்டை' அடிக்க முடிந்தது. என்றாலும் சௌலப்பியமே உருவெடுத்த அவரிடம் பழகுவது எளிமை யாகவும் இருந்தது.

இட்டார்ச்சி வந்ததும், வண்டி மாறினோம்; மாலை நேரமாகி விட்டது. எங்கள் அனைவரின் நல்லூழின் காரணமாகப் பதினைந்து இடங்கள் காலியாக இருந்தன. யாதொரு சிரமமுமின்றி கட்டணம் செலுத்தி இட ஒதுக்கீடுகள் செய்து கொண்டோம். திரு. சோமய்யா அவர் கட்கும் தொல்லை இல்லை; அவரும் தெய்வாதீனமாக ஏற்பட்ட நிலைமைக்கு மகிழ்ச்சியுற்றார்.[1] பயணம் இனிதாக அமைந்தமைக்கு காசி விசுவநாதருக்குத்

1. இந்தப் பெருமகனார். இன்று இல்லை ஏப்பிரல்—1990) பல்லாண்டுகட்கு முன்னரே 'சிவப்பேறு' எய்தி விட்டார்.

தான் நன்றி செலுத்த வேண்டும். இறைவன் நினைவுடன் பயணம் செய்தால் எல்லாம் இனிதாகவே முடியும் என்ற உண்மையை என் ஐம்பதாண்டுப் பயண அநுபவத்தில் அறிந்த பேருண்மையாகும் ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்ற முதுமொழி பொய்யாகுமா?

சரியாகப்பகல் பன்னிரண்டு மணிக்கு இருப்பூர்தி கூடூர் நிலையத்தை வந்தடைந்தது. திருப்பதி செல்லும் வண்டி புறப்பட இன்னும் 3½மணி நேரம் இருந்தது. ஆகவே மேல் வகுப்பு பயணிகள் தங்கும் அறையில் பெட்டி படுக்கையை வைத்து விட்டு நானும் என் மனைவியும் ஒருவர்பின் ஒருவராக நன்றாக நீராடி மூன்று நாட்கள் அழுக்கையும் போக்கிக்கொண்டோம். நிலைய உணவு விடுதியில் உணவு கொண்டோம். இரண்டு நாட்கள் கண்டவற்றைத் தின்ற எங்கட்கு தமிழக உணவு தேவாமிர்தமாக இருந்தது. மூன்றுமணிக்கே வந்து திருப்பதி செல்லும் இருப்பூர்தியில் இடம் பிடித்து ஏறிக்கொண்டோம். வண்டி புறப்படும் போதுகூட கூட்டம் அதிகம் இல்லை. இடையிலுள்ள நிலையங்களில்தான் கூட்டம் ஏறியது; இறங்கியது. மாலை 6-30க்கு வண்டி திருப்பதியை அடைந்தது. முன்னரே கடிதம் எழுதியிருந்தமையால் சிறுவர்கள் இருவரும் நிலையத்திற்கு வந்திருந்தனர். சாமான்களைச் சௌகர்ய மாக இறக்கி ஆள் மிதி வண்டியிலேறி வீடு வந்து சேர்ந் தோம். முதுமைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய காசிப் பயணத்தை ஐம்பது அகவைக்குள் முடித்துக் கொண்டது இறைவன் திருவருளாகும்.

## 44. என் டாக்டர் பட்ட ஆய்வு நிறைவு

**1968** - ஆம் ஆண்டு இறுதியில் பிஎச்.டிக்குரிய என் ஆய்வை முடித்துவிட்டேன். இனி தட்டச்சு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். பல்கலைக் கழகத்தில் திரு. பி இராமச்சந்திரா ரெட்டி என்பவரும் (முதல்வர் அலுவலகத்தில் தட்டச்சுப் பணியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்) திரு. கோவிந்தராஜுலு என்பவரும் (பல்கலைக்கழக அலுவலகத்தில் தட்டச்சுப் பணியாளராக இருந்து கொண்டிருந்தவர்) சிறந்த தட்டச்சுப் பணியாளர் என்று புகழ் பெற்றிருந்தவர்கள். முன்னவரிடம் தட்டச்சுப் பொறி இருந்தது. பல ஆய்வுக் கட்டுரைகளைச் சிறந்த முறையில் தட்டச்சு செய்து பெரும் புகழ் பெற்றவர். பின்னவருக்கு இத்தகைய அநுபவம் இல்லை. இருந்தபோதிலும் இவர் பல்கலைக்கழக உடற் பயிற்சி இயக்குநர் திரு. L K. கோவிந்தராஜுலுவிடம் பணியாளராக இருந்த காலத்தில் (1960—64 என்பது நினைவு) என் அலுவல் காரணமான கடிதங்களைத் தட்டச்சு செய்து தந்து உதவியவராதலால் இவருடைய திறமை, பொலிவான முறையில் செய்த பணி, இத்தனைக்கும் மேலாக இவர்தம் அடக்கமான பண்பு என்னைக் கவர்ந்தன. ஆதலால் அவரைப் பார்த்து, ''தம்பி, என் கட்டுரையை அடித்துத் தருவாயா? நான் ஒரு புதிய தட்டச்சுப் பொறியை (Type-Writer) வாங்கித் தந்து விடுகின்றேன். ரூ 1500/-விலை இருக்கும். நல்ல முறையில் திரும்பக் கட்டிய பொறியை (Retail Machine) வேண்டுமானாலும் வாங்கிக் கொள்க. தட்டச்சுக் கூலியே ரூ 1200/- வரும். அதை ஈடு செய்து கொண்டால் பொறி

நினக்கே சொந்தமாகி விடும். இதைக் கொண்டு பலருக்கு உதவலாம்'' என்றேன். அவர், ''ஐயா, என் உடல் நிலை கடுமையான உழைப்புக்கு இயைந்து வருவதில்லை. அலுவலகப் பணி நன் முறையில் ஆற்றி நல்ல பெயர் கிடைத்தால் போதும். என்னைவிட திரு. பி இராமச் சந்திராரெட்டி நன்றாக அடிப்பார். பல கட்டுரைகளை நன்முறையில் அடித்துத் தந்து நற்புகழ் ஈட்டியவர். அவரை அணுகி ஆவன செய்து கொள்ளுங்கள். தாங்கள் தரும் பணியைச் செய்ய முடியாத நிலைமைக்கு வருந்து கின்றேன். தவறாக நினைக்காதீர்கள். மன்னித் தருளுங்கள்'' என்று சொல்லிவிட்டார்.

பின்னர் திரு. பி. இராமச்சந்திரா ரெட்டியிடம் தட்டச்சு செய்யுமாறு கேட்டேன், ''செய்வன திருந்தச் செய்யுமாறு கேட்டேன். ''செய்வன திருந்தச் செய்'' என்ற ஔவைப் பாட்டியின் திருவாக்கைச்சிறு வயலிருந்தே கடைப்பிடிப்பவன் நான். இருவரும் கலந்து யோசித்து தட்டச்சு வேலையில் சில நியதிகளைக் கடைப்பிடிப்ப தெனத் தீர்மானித்தோம்; அவை : (1) Gate-way Bond தாளைப் பயன்படுத்துவது, (2) மைத்தாளில் (Carbon Paper) உயர்ந்த ரகத்தைப் (Black Corbon with plastic back) பயன்படுத்துவது; (3) ஐந்து படிகளுக்கொருமுறை இத்தாளை மாற்றுவது; (4) கறுப்பு வண்ண நாடாவைப் பயன்படுத்துவது; (5) 100 பக்கம் அடிப்பட்டதும் நாடாவை அகற்றுவது (6) மிகக் கவனமாக அடிப்பது; பக்கத்திற்கு இரண்டு பிழைகட்குமேல் வந்து விட்டால் அப்பக்கத்தைத் திரும்ப அடிப்பது'' என்பவை. திரு. ரெட்டி மிக அக்கறையுடன் இப்பணியைச் செய்தார். பிழைகளின்றியே இத்திருப்பணியை நிறைவு செய்தார். கட்டுரை நூல்முகம், உள்ளுறை, பின்—இணைப்புகளுடன் 1200 பக்கங்களில் அமைந்தது. இதனை இரண்டு பகுதி களாகக் கட்டமைத்தேன். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக்கட்டுரை அமைவதில் பக்கவரம்பு

இல்லையாதலால் கட்டுரை வளர்வதைத் தடுக்காமல் விட்டேன். வைணவத்திற்கு ஒரு மூலமுதல் நூலாக (Source Book) இருக்க வேண்டுமென்றே தொடக்கத்தில் திட்டமிட்டேன். எம்பெருமான் திருவுள்ளப்படிக் கட்டுரை நன்கு அமைந்தது.

கட்டுரை ஆங்கிலத்தில் தான் எழுதினேன். ஒரு ரீம் நல்லவழுவழுப்பானதாளை ஃபூல்ஸ்கேப்அளவில் வெட்டிக் கொண்டு அதில் ஆறில் ஒரு பங்கு கீழே விட்டுச் சிவப்புக் கோடு போட்டுக் கொண்டேன். இந்த இடம் அடிக்குறிப்பாக ஒதுக்கப்பெற்ற இடம். நான் எழுதும்போது பெரும்பாலும் அடிக்குறிப்புகள் இல்லாத பக்கமே இராது. முத்துக்கோத்தாற் போல் அழகாக எழுதுவேன். ஆங்கிலத்தில் எழுதுவதால் பல பக்கங்கள் 'அடித்தலும் திருத்தலுமாக' இருக்கும். ஒரு குறிப்பிட்ட இயல் நன்கு எழுதி முடிந்து சரிபார்க்கப் பெற்றதும் அந்த இயலில் அடித்தலும் திருத்தலுமாக உள்ள பக்கங்களை மீண்டும் அழகாக எழுதுவேன். அந்த இயலின் அடிக்குறிப்பிற்குத்தொடர்ந்து வரிசையாக எண்களை இடுவேன். இம் மாதிரியே எல்லா இயல்களையும் நிறைவு செய்வேன். 32 இயல்கள் அமைந்த கட்டுரையை ஆறு பகுதிகளாக அமைத்து ஒழுங்குபடுத்தினேன். ஆய்வுக் கட்டுரையைத் தொடர்ச்சியாக ஒழுங்கு படுத்த முடிவதில்லை. கட்டுரைக் கருத்து நிரல்நிரையாக மனத்தில் ஒழுங்குப்படுத்தப் பெற்றிருக்குமாதலால் ஏறக்குறைய நன்கு அமைந்த இயல்கள் சரிபார்க்கப்பெற்று தட்டச்சுப் பொறியாளரிடம் தரப்பெறும். அவர் அவற்றை முதல் நாளிரவு அமைதியாகப் படித்து ஐயப்படும் சொற்களின் எழுத்துகள் சரியாகப் புரியாதவற்றை எழுதுகோலால் குறித்துக் கொண்டு வருவார். அடுத்த நாள் அவருக்கு எழுந்த ஐயங்களைப் போக்குவேன். அதன் பிறகே அவர் அடித்துத் தருவார். நாடோறும் படித்துப் பக்கங்கட்குக்

குறையாமல் தருவார்; விடுமுறை நாட்கள் வருங்கால் இருபது பக்கங்கட்கு மேலும் தருவார்.

நான் தமிழ்த்துறையில் ஓரேர் உழவன். அடித்தவற்றைக் கையெழுத்துப்படியுடன் ஒப்பிட்டுப் படிப்பதில் துணைசெய்வதற்கு ஒருவரும் இல்லை. பட்டப் படிப்பில் படித்து வந்த என் மூத்த மகன், பத்தாம் வகுப்பில் நடுவண் அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்து வந்த என் இளைய மகன் இவர்களை அவர்கட்கு ஓய்வு இருக்கும்போது பயன்படுத்திக் கொண்டு ஐந்தாவது படியில் திருத்தம் செய்து கொள்வேன். இரண்டு பிழைகட்கு மேல் உள்ள பக்கங்களைத் திரும்பவும் ஐந்துபடிகள் அவ்வப்போது அடிக்கச் செய்துவிடுவேன்; அவற்றை உடனுக்குடன் சரி பார்த்துவிடுவேன். ஏனைய நான்கு படிகளையும் திருத்தம் பெற்ற ஐந்தாம் படியுடன் ஒப்பிட்டுத் திருத்தங்கள் இருப்பின் செய்து கொள்வேன். பெரும்பாலும் திருத்தங்களே இருப்பதில்லை. இயல்களைப் பகுதியாக அமைத்த பிறகு அந்தப் பகுதியில் அடங்கிய இயல்களின் சுருக்கத்தை ஒரு சில பக்கங்களில் எழுதுவேன். சரி பார்த்த பிறகு தட்டச்சு செய்வதற்குத் தருவேன். இவற்றையும் சரி பார்த்து உரிய இடங்களில் அமைத்துவிடுவேன். கைப்படி தட்டச்சுக்குப் போவதற்கு முன்னர் என் அரிய நண்பர் திரு. எஸ். விசுவநாதன்[1] (விரிவுரையாளர், ஆங்கிலத்துறை) ஒருமுறை மேலோட்டமாகப் பார்த்துத் திருத்தம் செய்து விடுவார்; நானும் இவற்றை நன்கு பார்த்து திருத்தங்களை அறிந்து கொள்வேன்

இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆழ்வார் பாசுரங்கள் அல்லது பாசுரப்பகுதிகள் மேற்கோள்களாகவும் சான்றுகளாகவும் காட்டப் பெறவேண்டி வரும். இவற்றைப்

1. இப்போது இவர் டாக்டர். எஸ். விசுவநாதன். ஐதராபாத்தில் நேரு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துணைப்பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.

பாசுர எண்களுடன் தமிழாக்கத்திற்காக இடம் விட்டு எழுதிக் கொள்வேன். பெரும்பாலும் தமிழாக்கத்தை நானே செய்து கொண்டு திரு. விசுவநாதன் அவர்களிடம் திருத்தம் செய்து கொள்வேன். இடர்ப்பாடாக இருப்ப வற்றிற்குத் திரு.விசுவநாதனே தமிழாக்கம் தருவார். இவற்றையெல்லாம் தயாராக வைத்துக் கொண்டுதான் கட்டுரையை எழுதத் தொடங்குவேன். தமிழாக்கங்களை உரிய இடங்களில் பயன்படுத்திய பிறகு பயன்படுத்தப் பெற்றவற்றை அடையாளம் செய்து விடுவேன். ஓரிடத்தில் வந்தவை திரும்பவும் பிறிதோரிடத்தில் வாராதிருப்பதற்கு இந்த அடையாளம் உதவும். ஒத்த கருத்துகள் பல இருக்குமாதலால் பயன்படுத்தியவை போக எஞ்சியவை வேறு இடங்களில் தேவையிருந்தால் பயன்படுத்தப்பெறும்; ஆய்வுக் கட்டுரை எழுதுவோர் எத்தனையோ முறைகளை முன் யோசனை செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பயன்பட்ட நூல்கள், பயன்படும் என்று கருதி பார்த்த நூல்கள் இவற்றை எழுதிய ஆசிரியர், வெளியீட்டாளர், பதிப்பு முதலிய குறிப்புகளுடன் அவ்வப் பொழுது ஒரு தனிக்குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியே அகராதிகள் கலைக் களஞ்சியங்கள், வார மாத, வெளியீடுகள் இவற்றின் விவரங்களையும் அவ்வப்போது குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னிணைப்புகளைத் தயார் செய்யும்போது இவற்றைத் தக்க முறையில் பாகுபாடு செய்து அகரவரிசையில் நிரல்பட அமைக்க வேண்டும் இவற்றையும் ஒருமுறைக்கிருமுறை சரிபார்த்த பிறகே தட்டச்சுக்கு அனுப்பவேண்டும். இதற்கெல்லாம் அதிகக் காலம் ஆகும். எவர் உதவியுமின்றி நானே இவற்றைச் செய்தால்தான் எனக்கு மனநிறைவு ஏற்படுமாதலால் பிறர் உதவியை நாடேன். எல்லாவற்றையும் தட்டச்சு செய்த பிறகு ஐந்து கோப்புகளை வைத்துக் கொண்டு முதல், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து படிகளை

மாறாமல் கோப்புகளில் அமைப்பேன். முதற்படியுடன், இரண்டாவது படியோ, இப்படி ஒன்றுடன் பிற கலக்காதிருக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும். இவ்வாறு வரிசைப்படுத்தி அடுக்கியபிறகு எல்லாப் படிகளையும் மீண்டும் ஒருமுறை ஐந்தாம் படியுடன் ஒப்பு நோக்கி எல்லாவற்றிலும் திருத்தங்கள் செய்யப் பெற்றுள்ளனவா என்பதைச் சோதித்துச் சரிபார்த்த பிறகு மீண்டும் ஒருமுறை ஐந்து படிகளையும் சரிபார்க்க வேண்டும். பக்கங்களின் எண்போடாது தட்டச்சு செய்யப் பெற்றவை யாதலால் சரிபார்ப்பதற்கு அடிக்குறிப்புகளின் எண்கள் துணையாக இருக்கும். இவ்வாறு செய்தபிறகு எண் பொறியால் ஐந்து படிகளிலும் எண்கள் போட வேண்டும்; கட்டமைப்பாளர் இதைச் செய்வார்.

திரு. கண்ணன் என்ற பெயர் கொண்ட கட்டமைப் பாளர் ஒருவர் திருப்பதியில் இருந்தார். இவர் பல்கலைக் கழக நூலகத்திற்குப் பழைய நூல்களைக் கட்டமைத்துத் தருபவர். பலிஜ வகுப்பைச் சேர்ந்தவர். துணைவேந்தர் கோவிந்தராஜுலு நாயுடு காலத்திலிருந்தே நூலகத்திற்குக் கட்டமைப்பு செய்து தரும் பணியை மேற்கொண் டிருந்தார். நான் துறையூரில் பணியாற்றிய காலத்திலேயே (1941-50) இவர் அவ்வூரிலுள்ள ஜனோபகார அச்சகத் தில் பணிபுரிந்தவர். நான் காரைக்குடிக்குப் போன காலத்திலேயே இவரும் திருப்பதிப் பக்கம் வந்துசேர்ந்து விட்டதாகச் சொன்னார். நான் திருப்பதி சென்ற சில நாட்களில் தற்செயலாக இவரை எங்கோ சந்திக்க நேர்ந்தது. நான் துறையூரிலிருந்தபோது இவரிடம் நெருங்கிப் பழகி வந்தேன். சில நூல்களையும் கட் டமைத்துக் கொண்டேன். என்னுடைய ஆய்வுக் கட்டுரையை இவரிடம் நல்ல முறையில் கட்டமைத்துக் கொண்டேன். கட்டுரையின் ஐந்துபடிகளும் பத்துக் கட்டமைப்புப் பகுதிகளாக அமைந்தன. ஐந்துபடிகளில் ஒரு படியை மட்டிலும் வைத்துக் கொண்டு 4படிகளை ஒரு

நல்ல நாளில் உரிய கட்டணத்துடன் பல்கலைக் கழகத்தில் சேர்த்தேன் (செப்டம்பர் 1968). இதன் முடிவு எம்பெருமான் ஏழுமலையான் கையிலுள்ளது என்ற அமைதி கொண்டுவாளா இருந்து விட்டேன். ஐந்தாண்டுகள் உழைத்த பயன் ஆறு திங்களுக்குள்ளாவது தெரிவிக்கப் பெற்றால் ஆய்வாளருக்குப் பேருதவியாக இருக்கும்.

குமிழி — 201

## 45. ஆய்வுக் கட்டுரையின் தேர்வு முறைகள்

ஆய்வுக் கட்டுரையைப் பல்கலைக் கழகத்திற்குத் தருவதற்கு (4 படிகள்) மூன்று மாதத்திற்கு முன்னர் ஆய்வாளர் தம்முடைய கட்டுரையைப் பற்றிய விரிவான குறிப்பை (4 படிகள்) பல்கலைக் கழகத்திற்குத் தருதல் வேண்டும். இச்சமயத்தில் நெறியாளர் அறுவர் பெயர்களை முகவரியுடன் பல்கலைக் கழகத்திற்குத் தருதல் வேண்டும். பல்கலைக் கழகமும் கட்டுரை எந்தப் புலனுக்குரியதோ (Faculty) அந்தப் புலனுக்குரிய பாடத் திட்டக் குழுவின் (Board of Studies) தலைவருக்கு எழுதி அறுவர் பெயர்களை முகவரியுடன் தருமாறு கேட்டு எழுதிப் பெறும். சில பல்கலைக் கழகங்களில் இவ்விருவரும் தனித்தனியாகப் பன்னிரண்டு பெயர்களைத் தரவேண்டும் என்ற நியதியையும் பின்பற்றுகின்றனர். இந்தப் பன்னிரண்டு பெயர்களில் (அல்லது இருபத்தி நான்கு பெயர்களில்) துணைவேந்தர் மூவரைத் தேர்ந்தெடுப்பார். இவர்களில் ஒருவர் தேர்வாளர் குழுவிற்குத் தலைவராக இருப்பார். பல்கலைக் கழகத் தேர்வு அதிகாரி இம்மூவருக்கும் கட்டுரைக் குறிப்பை அனுப்பி இக்குறிப்பிற்

குரிய ஆய்வுக் கட்டுரையை மதிப்பீடு செய்தல் முடியுமா? அப்படிச் செய்வதற்கு ஒப்புக் கொண்டால் (இரண்டு திங்களுக்குள் அல்லது ஆறு வாரத்திற்குள்) ஆய்வுக் கட்டுரை பற்றிய அறிக்கையைத் தர முடியுமா? என்று கேட்டு எழுதி ஒப்புதல்களைப் பெற்றுத் தயாராக வைத்துக் கொண்டிருப்பார்.

ஆய்வாளரிடமிருந்து கட்டுரைப் படிகள் நான்கைப் பல்கலைக் கழகம் பெற்றதும் ஒரு படியைப் பல்கலைக் கழகம் தம்மிடம் இருத்திக் கொண்டு, மூன்று படிகளைத் தேர்ந்தெடுக்கப்பெற்ற மதிப்பீட்டாளர்கள் மூவருக்கும் அனுப்பி வைக்கும். இந்த மூவரில் மதிப்பீட்டாளர் இருவர் தம் மதிப்பீட்டு அறிக்கைகளைக் குழுத்தலைவருக்கு அனுப்பித் தாம் அனுப்பிய செய்தியைப் பல்கலைக் கழகத்திற்கும் தெரியப்படுத்துதல் வேண்டும். மதிப்பீட்டுக் குழுத்தலைவர் இரண்டு வாரத்திற்குள் தம் அறிக்கையுடன் ஏனைய இருவர் அறிக்கைகளைப் பார்த்து ஆய்ந்து தலைவர் அறிக்கையையும் மற்ற இருவர் அறிக்கைகளையும் சேர்த்துப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும். மூவர் அறிக்கைகளும் ஒரு மனத்துடன் உடன்பாடு தெரிவித்தால் ஆய்வாளரின் ஆய்வைப் பல்கலைக் கழகம் ஒப்புக் கொண்டு வாய்மொழித் தேர்வுக்கு வகை செய்யும். வாய்மொழித் தேர்வில் மதிப்பீட்டுக் குழுத் தலைவரும் நெறியாளரும் (Research Guide) குழுவாக அமைந்து ஆய்வாளரைத் தேர்வுக்கு உட்படுத்துவர். கட்டுரையில் ஐயத்திற்குரிய செய்திகளையும், மேற்கொண்ட நெறி முறைகளையும் வேறு பல ஆய்வு முடிவுகளையும் பற்றி வினவுவர். ஆய்வாளர் நல்ல முறையில் அவற்றிற்கு விடை இறுத்து குழுவின் பாராட்டுதலைப் பெறுவர். குழு மன நிறைவு பெற்றால் ஆய்வாளருக்குப் பட்டம் வழங்கலாம் என்று பரிந்துரை செய்யும். இந்தப் பரிந்துரையைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு (Syndicate) ஒப்புக் கொண்டு ஆய்வாளருக்குப் பட்டம் வழங்கலாம் என்று

முடிவு செய்யும்; விரைவில் பட்டமும் வழங்கப் பெறும். நடைமுறையில் இவையனைத்தும் தீவிரமான மறை யாகவே இருக்கும். ஆய்வாளரோ, நெறியாளரோ ஒரு குறிப்பிட்ட ஆய்வுக் கட்டுரைக்கு மதிப்பீட்டாளர்கள் யாவர்? குழுத்தலைவர்யாவர்? என்பவற்றைக் கண்டு கொள்ள முடியாது.

விதிகள் யாவும் நன்முறையில் வகுக்கப் பெற்றுள்ளன. ஆனால் இவற்றைச் செயற்படுத்தும் அனைவரும் தூய்மை யான உள்ளத்துடனும், விருப்பு வெறுப்புமற்ற முறையி லும், காலவரம்புகளை மீறாமலும், ஆய்வாளருக்குத் தம்முடைய கால தாமதமான செயலால் தொல்லை ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்துடனும் செயற் பட்டால் நலம். இதில் யாரோ ஒருவர் காலதாமதத்துடன் செயற்பட்டால், ஆட்சி இயந்திரம் சரிவர இயங்காது போய்விடும். நடைமுறையில் 100க்கு 80 விழுக்காடு சரி யாக நடைபெறவில்லை என்பதை நான் நன்கு அறிவேன். எந்தப் பல்கலைக் கழகமும் இதற்கு விதிவிலக்கு இல்லை. பெரும்பாலானவற்றில் மதிப்பீட்டாளர்களைப் பல்கலைக் கழகம் (அதாவது தேர்வுத்துறையிலுள்ள தேர்வு அதிகாரி) உரிய காலத்தில் அணுகுவதில்லை; மதிப்பீட்டாளர்களும் உடனுக்குடன் தம் ஒப்புதலைத் தெரிவிப்பதில்லை. அப்படி ஒப்புதல் தெரிவித்தாலும், காலா காலத்தில் கட்டுரையின் படி அவர்கள் கைக்குக் கிட்டுவதில்லை. அப்படிக் கிட்டி னாலும் யாரோ ஒருவர் ஆண்டுக் கணக்கில் கூட தேர்வு அறிக்கையைக் குழுத் தலைவருக்கு அனுப்பாத நிலையும் ஏற்படுத்துவதுண்டு. இந்தக் கால தாமதத்தால் பாதிக்கப் பெறுபவர் ஆய்வாளரே. அவர் இளைஞராக இருந்து வேலைக்கு முயல்பவராக இருந்தால், அதில் முயலமுடியாத நிலை ஏற்படலாம். ஏதோ ஒரு பதவியிலிருப்பவர்கள் மேல் பதவிக்கு முயலுவதில் தாமதம் தடைக்கல்லாக அமைந்து விடுவதும் உண்டு. சில சமயம் ஆய்வாளரே உரிய காலத்தில் கட்டுரையை தரமுடியாததாலும் நெறியாளர் சரியாகப்

பாராது தாமதப்படுத்துவதாலும் தடை நேரிடுகின்றது. நெறியாளர் தாமதப்படுத்தினால் தட்டச்சுக்கே கட்டுரை போகாத நிலை ஏற்பட்டுவிடும். இவையெல்லாவற்றையும் விட சிலருடைய விடயங்களில் மறையே காக்கப் பெறுவதில்லை. இதனால் மதிப்பீட்டாளர்கள் தர்மசங்கடத்துக்குள்ளாகின்றனர்; மனச் சான்றுக்குக் குந்தகம் வராமல் செயற்பட முடியாத நிலையும் ஏற்பட்டுவிடுகின்றது. ஒரு சமயம் தமிழகத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் நான் மதிப்பீட்டாளர் குழுவிற்குத் தலைவராக இருக்க நேர்ந்தது. கட்டுரையோ ஒரு பெரிய கல்லூரியில் பணியாற்றும் துணைப் பேராசிரியருடையது. இந்தக் குழுவில் டில்லியிலுள்ள ஒரு பேராசிரியர் மதிப்பீட்டாளர். அவர் கைக்குக் கட்டுரை கிடைப்பதற்கு முன்னரே அரசியலில் உயர் மட்டத்திலுள்ள ஒருவரின் பரிந்துரைக் கடிதம் கிடைத்ததற்கு மிகவும் மனம் வருந்தி "தமிழகம் தாழ்ந்து போய்க் கொண்டுள்ளது" என்று எழுதியிருந்தது என் நினைவிற்கு வருகின்றது.

என் கட்டுரை யார் யாருக்கு மதிப்பீட்டிற்குப்போயுள்ளது என்பதை அறிந்து கொள்ள முயலவில்லை. தாமதமின்றி அனுப்பப் பெற்று விட்டது என்பது மட்டிலும் தெரிந்தது. தமிழகத்தில் அப்போது (1969) ஒரு சிலரே டாக்டர் பட்டம் பெற்றிருந்தனர் என்பதால் யார் யார் மதிப்பீடு செய்கின்றனர் என்பதை ஊகித்து அறிய முடிந்தது; ஊகம் ஐயமேயன்றித் தெளிவு அல்ல. விரைந்து முடிவு தெரிந்தால் அது எனக்குப் பயனுள்ளதாக அமையும். துணைவேந்தர் டாக்டர் V. C. வாமன்ராவ் பதவி முடிய இன்னும் ஆறுமாதங்கள்தாம் உள்ளது. அதற்குள் முடிவு தெரிந்து பட்டமும் பெறவேண்டும் என்ற கவலை தோன்றத் தொடங்கியது. நான் பட்டம் வாங்கிவிட்டால் தம் பதவிக் காலத்தில் துணைப்பேராசிரியராக்கிவிடுவதாக ஐந்தாண்டுகட்கு முன் சொன்னது அன்றும் என் மனத்தில் பசுமையாகவே இருந்து கொண்டிருந்தது. அகவை 52-லும்

நான் விரிவுரையாளராகவே இருந்தது மிக வருத்தத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. நான் திருப்பதி சென்ற பொழுது சிலதுறைகளில் ஆய்வு மாணாக்கர்களாக இருந்தவர்கள் கூட துணைப் பேராசிரியர்களாகி விட்டனர் என்பதை அறியும்போது இந்த வருத்தம் மிகுதிப் பட்டது. என் செய்வது? என் ஊழ் இப்படி.

எவ்வுயிரும் காக்கவோர் ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் நாம்ஒருவர் அல்லவோ—வவ்விப்
பொருகுவது நெஞ்சே புழுங்குவதும் வேண்டா
வருகுவதும் தானே வரும்.[1]

என்ற வாக்கை நினைத்து கொண்டு வாளா இருந்து விடுவேன்.

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.[2]

என்ற அப்பர் பெருமானின் அருள்வாக்கும் ஒளிவிட்டுக் காட்டி என்னை அமைதிப் படுத்தும்.

1. சிவபோக சாரம்—78
2. தேவாரம். 5. 19 : 19 (திருக்கடம்பூர்)

# 46. கைக்குஎட்டியது வாய்க்குஎட்டவில்லை

ஆய்வுக் கட்டுரையின் முடிவு விரைவில் தெரிய வேண்டும் என்று ஆவலாக எதிர்பார்த்திருந்த எனக்கு ஒரு 'சோதனைக் காலம்' ஏற்பட்டது. இதுவே டாக்டர் V. C. வாமன்ராவ் காலத்தில் துணைப்பேராசிரியர் பதவி கிடைக்காததற்கும் காரணமாயிற்று. மதிப்பீட்டாளர்களில் ஒருவர், ''கட்டுரை நீளமாக உள்ளது. 250—300 பக்கங்களில் சுருக்கி எழுதித் திருப்பச் சமர்ப்பிக்கச் செய்தால் நலம்'' என்று பல்கலைக் கழகத்திற்கு எழுதிவிட்டார். இதை ஓர் அறிக்கையாக அனுப்பாமல் பரிந்துரைபோல் கடிதம் எழுதினார். எனக்கு விரைவில் டாக்டர் பட்டம் வரவேண்டும் என்று பல்கலைக் கழக அலுவலகத்தில் விழைந்தவர்கள் பலர். அவர்கள் யாவரும் நான் பதிவு செய்து கொள்வதற்கு எழுதிய பல கடிதங்கள், துணைவேந்தர் கோவிந்தராஜுலு நாயுடுவிடம் 'சடுகுடு' விளையாடி இசைவு பெற்ற விவரங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்கள். முதுமைக் காலத்திலாவது யாதொரு தடையுமின்றி விரைவில் டாக்டர் பட்டம் பெறவேண்டும் என்று துடித்து நின்றவர்கள். தேர்வுத்துறையில் இங்ஙனம் விழைந்தவர்கள் பலர் என்றாலும் திரு. கங்கைய்ய நாயுடு என்பவர் (ஒரு பகுதி மேற்பார்வையாளர்,—(Section Superintendent) குறிப்பிடத் தக்கவர். அவர் மதிப்பீட்டாளரின் கடிதத்தைக் கண்டு வெகுண்டு, ''இந்த மதிப்பீட்டாளரை நீக்கி வேறு ஒருவரை அந்த இடத்தில் நியமிக்க வேண்டும். கட்டுரையைத் திருப்பி அனுப்புமாறு எழுத வேண்டும். கட்டுரையின் பக்க வரையறையைப் பல்கலைக் கழகம் சொல்ல வேண்டுமேயன்றி மதிப்

பீட்டாளர் அல்லர்'' என்று தேர்வு அதிகாரிக்கு (Controller) ஒரு குறிப்பு வைத்தாராம். அப்போது தேர்வு அதிகாரியாகப் பணியாற்றியவர் திரு. எம். குடும்பராவ் என்பவர். அவர் இந்தக் குறிப்பின் வேகத்தைக் குறைத்து, ''எங்கள் பல்கலைக் கழகத்தில் ஆய்வுக் கட்டுரைக்குப் பக்க வரையறை இல்லை. ஆதலால் இருக்கிறபடியே மதிப்பீடு செய்து ஒரு திங்களுக்குள் அறிக்கை அனுப்புங்கள்'' என்று அந்த மதிப்பீட்டாளருக்குக் கடிதம் அனுப்பச் செய்தாராம். பிப்பிரவரி—மார்ச்சு (1969)க்குள் அறிக்கைகள் பல்கலைக் கழகம் வந்து சேர்த்துவிட்டன என்றும், குழுத் தலைவர் வாய்மொழித் தேர்வு தேவை இல்லை என்று எழுதிவிட்டதாகவும் பின்னர் தெரியவந்தது இதனை முன்னரே உசாவி யறிந்து மேற்படி அறிக்கைகளை ஏப்பிரல் மாதம் நடைபெற்ற ஆட்சிக்குழு (Syndicate) கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கச் செய்திருக்கலாம். இத்திசையில் முயலவில்லை. இந்தக் கூட்டம் அனந்தப் பூரில் நடைபெற்றதென்றும், அந்தக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேரவில்லை என்றும் பின்னர்தான் தெரியவந்தது.

*அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி*
*எடுத்த கருமங்கள் ஆகா*[1]

*எண்ணி ஒருகருமம் யார்க்கும்செய் யொண்ணாது*
*புண்ணியம் வந்தெய்து போதுஅல்லால்.*[2]

என்ற ஔவைப் பாட்டியின் வாக்குகள் என் மனத்தில் எழுந்து அமைதியைத் தந்தன. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போனது என் வினைப் பயன் என்பது தெளிவாயிற்று. துணைவேந்தரையும் யான் சந்தித்துப் பேச முடியவில்லை; ஏதேதோ நிகழ்ச்சிகள் தோன்றித் தடைகளாக நின்று தடுத்தன. துணைவேந்தரும் கோடை விடுமுறையில் திருப்பதியில் தங்கவில்லை; ஏப்பிரல்

1. வாக்குண்டாம்—5
2. நல்வழி—4

இறுதியில் ஐதரபாத் சென்றவர் திரும்பவில்லை. இவர் பதவிக் காலமும் ஜூனில் நிறைவு பெற்றது. பொறுப்பைத் தந்து விடுதலை பெறவும் திருப்பதி வரவில்லை. தொலைபேசி மூலம் பொறுப்பைக் கழற்றிக் கொண்டு விட்டார்! பிரிவுபசாரத் தேநீர் விருந்திற்குச் சிலர் எழுதியும் நன்றியுடன் அதனை மறுத்துவிட்டார்.

இதற்கிடையில் பாண்டிச்சேரி ஜவகர்லால் மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்து தொடக்கம் முதல் அதன் வளர்ச்சிக்கும் புகழுக்கும் காரணமாக இயங்கிய டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டி துணை வேந்தராக நியமிக்கப் பெற்ற அறிவிப்பும் வந்தது. ஆனால் அவர் வந்து பணியை ஒப்புக் கொள்வதற்கு மூன்று மாதம் தாமதம் ஏற்பட்டது. தாமதத்திற்குக் காரணம் ஒரு புதிராகவே இருந்தது. பலர் பலவாறு பேசிக் கொண்டனர். அப்போது பாண்டிச்சேரியில் தலைமை நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் எஸ். மகராசன் பின்னர் சென்னைக்கு சில ஆண்டுகள் கழித்து வந்த பிறகு பேச்சு வாக்கில் ஒரு காரணம் சொன்னார். அதுவே சரி என்று என் மனத்திற்குப் பட்டது. அது டாக்டர் D. ஜகந்நாத ரெட்டியின் சொரூபத்தின் ஒரு பகுதியை விளக்குவதாக அமைந்தது. அதனை இங்குக் கூறப் போவதில்லை; வேறு எங்கும் கூறப் போவதில்லை.

## 47. மறக்க முடியாத நிகழ்ச்சிகள்

துணைவேந்தர் டாக்டர் V. C. வாமன் ராவ் ஒரு பச்சைத் தமிழர்; முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். இவரது தாயகம் வேலூர். சுமார் 150 ஆண்டுகட்கு முன்னர் இவரது பாட்டனார் ஐதரபாத் சமஸ்தானத்தில் பணியேற்று ஐதரபாத்தில் குடியேறினவர். இவர் தந்தையார் காலம், இவர் காலம் ஐதரபாத்திலே கழிந்தன. தாய்மொழியை மறந்து கீழ்வகுப்புகளிலிருந்தே உருது மொழியைத் தாய்மொழியாகப் பயின்றவர். உருதுச் சூழ்நிலையில் பணியாற்றியவர். வங்காளப் பெண்மணியை மணந்தவர். இவர்கட்கு ஒரே ஒரு மகள் தான் உண்டு. அந்தப் பெண்ணும் ஐதரபாத்தில் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்ததால் திருப்பதி வரவில்லை. ஒரு ஐந்தாண்டுக் காலத்தில் வேங்கடவனின் தரிசனத்திற்குக்கூடத் தாயும் சேயும் திருப்பதிக்கு வரவே இல்லை. டாக்டர் வாமன்ராவ் தனிமையிலேயே திருப்பதியில் வாழ்ந்தார். ஒரு தமிழர், உருது பயின்றவர், வங்காளப் பெண்ணை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்தியவர்—இவரிடம் மொழி வெறி, சாதி வெறி போன்ற வேண்டாத பண்புகளை இம்மியளவும் காண முடியாது; பரந்த நோக்கமுடைய வராகத் (Cosmopolitan) திகழ்ந்தார். இவர் ஆட்சிக் காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை யாக இன்றும் (ஏப்பிரல் 1990) பசுமையாக என் மனத்தில் உள்ளன.

(1) இவர் காலத்தில் டாக்டர் M. இராதா கிருஷ்ணன் (திருவண்ணாமலையைச் சேர்ந்தவர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்) தற்காலிக விரிவுரையாளராகச் சேர்ந்தார். இவருக்குப் பிறகு வேறு சில தெலுங்கர்களும் தற்காலிகப் பதவியில் இதே துறையில் அமர்ந்தனர். ஈராண்டுகட்குப் பின்னர் ஆறு விரிவுரையாளர் பதவிகளை நிரந்தரமாக்கும் கட்டம் வந்தது. விளம்பரம் செய்தனர். புதிதாகவும் விண்ணப்பங் களும் வந்தன. ஒரு குறிப்பிட்ட நாளில் தேர்வுக் குழு அமைக்கப் பெற்று அறுவரைத் தேர்ந்தெடுத்தனர். இவர்களில் சிலர் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களும் இருந்தனர்; புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களும் இருந்தனர். மூத்தவர் பட்டியல் (Seniority list) தேர்ந் தெடுத்ததில் யார் பெயர் முதலில் இடம் பெற வேண்டும் என்ற ஆராய்ச்சி எழுந்தது. குழுவில் பெரும்பாலோர் ஆந்திரர்கள்; யாவரும் டாக்டர் இராதாகிருஷ்ணன் முதலிடம் பெறக் கூடாது என்று விரும்பினர். ''தமிழர் என்ற ஒரு காரணத்தைத் தவிர திறமைக்குக் குறை வில்லை. ஒத்துப் போகும் பண்புடையவர். இந்த அறுவரில் முதலில் பணியேற்றவர். தமிழருக்கு இடம் இல்லை என்று நீங்கள் கருதினால் முன்னமேயே இவரை நுழைய விட்டிருத்தல் கூடாது; நுழைந்து விட்டார். நானும் தமிழன்தான்; இந்த நிலையில் அவருக்கு முதலிடம் மறுப்பது நியாயம் இல்லை'' என்று கூறி குழுவைத் தன் பக்கமாக அணைத்துக் கொண்டு பட்டியலில் இவருக்கு முதல் இடம் அளித்தார் துணைவேந்தர்.

(2) ஒரு சமயம் நான் அவர் திருமாளிகையில் உரையாடிக் கொண்டிருந்தபோது பேச்சு வாக்கில் ''என் காலத்தில் ஒரு முதலியாரைக் கூட நுழைய வாய்ப்பு அளிக்கமாட்டேன்'' என்று கூறினார். ''ஏன்?'' என்றேன். 'சாதிக்காரனுக்குப் பதவி தந்தான்' என்ற பழி வந்துவிடும். நான் ஏன் அவசியமில்லாத இப்பழியை

ஏற்க வேண்டும்?'' என்றார், நான் சொன்னேன் : ''நீங்கள் பல்கலைக் கழகத்திற்கு ஒவ்வொரு துறைக்கும் ஆசிரியர்களை நியமிக்கின்றீர்கள். அலுவலகப் பணிக்கு பல்வேறு பணியாளர்களை நியமிக்கின்றீர்கள். பல்கலைக் கழகத்திற்கு முதலியார், செட்டியார், ரெட்டி, நாயுடு... என்று எடுப்பதில்லையே. நியமனத்தில் எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். உங்கள் மனச்சான்றை யொட்டி, குழுவின் பரிந்துரைப்படி நியமனம் நடைபெற்றால் எந்தப் பழியும் வராது. பல்கலைக் கழகத்தில் திறமைக்கு முதலிடமேயன்றி சாதிக்கு அன்று என்றுதானே உங்கள் மனச்சான்று சொல்லுகின்றது. அப்படியிருக்க 'முதலியார்' அடையா யத்தை நீங்களே ஒட்டி அவர்களை ஏன் தவிர்க்க வேண்டும்; இதனால் சாதியாரின் சாபம் குவியும்; எல்லோரும் தூற்றும் படியும் நேரும்'' என்றேன். ''நீங்கள் நினைப்பதுதான் சரி'' என்று அவரும் ஒப்புக் கொண்டார்.

(3) ஒரு சமயம் மகளிர் விடுதியிலுள்ள சில மாணாக்கியர் துணைவேந்தரைச் சந்தித்து ''எங்கள் விடுதி அறைகளில் தேள், நண்டுதெறுக்கால், பூரான் தொந்தரவுகள் அதிகமாகிவிட்டன. அச்சமின்றி உறங்க முடியவில்லை. தயவு செய்து ஆளுக்கு ஒரு கட்டில் வீதம் தருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்தனர். மலைச் சாரல்—காடுகள் நிறைந்த இடத்தில் பல்கலைக் கழக வளாகம் அமைந்திருப்பதால் இத்தகைய நச்சு உயிர்கட்குக் குறைவில்லை. வெளியில் சென்றால் பல்வேறு வகைப் பாம்புகளும் குறுக்கிடுவது சர்வ சாதாரணம். இதனை நன்கு உணர்ந்த துணைவேந்தர் 250 இரும்புக் கட்டில்கட்குக் கட்டளை அனுப்பி ஒன்றிரண்டு திங்களில் வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்(203 மகளிர் தங்கியிருந்தனர்).

இச்செய்தி மாணாக்கர் விடுதிக்கும் எட்டியது. ஏழு விடுதிகள் இவர்கட்கு இருந்தன. கிட்டத்தட்ட 2000 பேர் இருந்தனர். வழக்கமாக மாலை 7-30லிருந்து அவர்கள் உணவு கொள்வது வழக்கம். அன்று அவர்கள் மாலை 6-30லிருந்தே கூட்டம் கூட்டமாகக் கூடத் தொடங்கினர். மகளிர் விடுதிக்குக் கட்டில்கட்கு ஏற்பாடு செய்த துணைவேந்தர் தங்களைக் கவனிக்கவில்லையே என்று அடுத்த நாள் வேலை நிறுத்தத்திற்குத் தயார் செய்ய அணிவகுக்கத் தொடங்கினர். இதனை ஒரு பணியாள் துணைவேந்தருக்குத் தெரிவித்தான்; கூட்டம் சுறுசுறுப்பாகக் கூடுகின்றது என்றும் விளக்கினான்; வேலை நிறுத்தத்தின் காரணத்தைக் கூடத் தெரிவித்தான். அப்போது அவர் 'ஹுக்கர்' பிடித்துக் கொண்டிருந்தார்; அது முடியும் சமயம் நானும் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். சாதாரணமாக இல்லத்தில் இருக்கும் போது ஒரு தளர்த்தியான வெள்ளைக் கால் சட்டையுடனும் (Pyjama), ஜிப்பாவுடன்தான் காணப்படுவார். உலாவும்போது பயன்படும் மெல்லிய பிரம்புடனும் செருப்புடனும் கிளம்பிவிட்டார். ''மிஸ்டர் ரெட்டியார், நீங்களும் என்னுடன் வாருங்கள்'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தார். இவருடைய திருமாளிகைக்கு எதிரில்தான் சுமார் 100 மீட்டர் தொலைவில் ஏழு மாணவர் விடுதிகளும் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்திருந்தன.

துணைவேந்தர் தங்களை நோக்கி வருகின்றார் என்ற செய்தி எப்படியோ மாணாக்கர்களை எட்டி விட்டது. துணைவேந்தரிடம் தெரிவித்த அதே பணியாள்தான் இச்செய்தியையும் கொண்டு போயிருப்பான் என்று நான் நினைத்துக் கொண்டேன். எங்களைக் கண்டதும் ஒரு விடுதிக்கு முன்னிருந்த அகன்ற நாற்கோண முற்றத்திற்கு முன் (Qnadrangle) கும்பலாகக் கூடி விட்டனர். துணைவேந்தர் சிறிதும் அலட்டிக் கொள்ளாது அக்கூட்டத்தி

னுள்ளே புகுந்தார். அமைதியாக நானும் அவரைத் தொடர்ந்து சென்றேன். எங்களைச் சுற்றி வட்டமாகக் கூடினர் மாணாக்கர்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பொறுப்பிலுள்ளவர்கள் ஆங்கிலத்தில்தான் பேசுவது வழக்கம். நிர்வாகத்திற்கு அம்மொழிதான் மிலாவகமாக இருக்கும். அதிகார தோரணையும் அதில் தொனிக்கும்.

துணைவேந்தர் அப்போது ஆங்கிலத்தில் பேசவில்லை. சில வளர்ந்த மாணாக்கர்களின் தோளின்மீது கையைப் போட்டுக் கொண்டு தெலுங்கில் பேசினார். தெலுங்கிலும் உருதுவிலும்மிக நன்றாகப்பேசுவர். தாய் மொழியில்பேசும் போதேஅன்பு கசிந்து நிற்கும். தமிழர்கள்தமிழை 'அமிழ்தம்' என்பதுபோல தெலுங்கர்கள் தெலுங்கைத் 'தேன்' என்பார் கள். பாரதியாரும் 'சுந்தரத் தெலுங்கு' என்று போற்றி னாரல்லவா? தங்களுக்கும் கட்டில் வேண்டும்; ஒவ்வொரு அறையிலும் மின் விசிறிகள் சுழல வேண்டும்; இந்தக் எங்கள்கோரிக்கை நிறைவேறாவிடில் வேலை நிறுத்தத்தில் இறங்குவதாக முடிவாகக் கூறினர். துணைவேந்தர் அன்பொழுகப் பேசினார் : ''நீங்கள் கட்டில் வேண்டு மென்று கேட்டீர்களா? மகளிர் மெல்லியலார்: பயந்தாங் கொள்ளிகள். சிறிய நிகழ்ச்சிகட்கெல்லாம் மருண்டு விடு வார்கள். அவர்கள் கேட்டார்கள், இரக்கப்பட்டு உடனே ஏற்பாடு செய்தேன். நீங்கள் கேட்கவில்லையே. நீங்கள் ஆண் சிங்கங்கள்; எதையும் சமாளித்துக் கொள்ளும் வீரம் மிக்கவர்கள். பல்கலைக் கழகம் மாணாக்கர்கள் படிக்க, கல்வி கற்க, ஆராய்ச்சி செய்ய ஏற்பட்டதேயன்றி துணை வேந்தரும், பதிவாளரும், அவருடைய சகாக்களும் பேராசிரியர்களும் அவர்களுடன் இணைந்து பணியாற்று வோரும் சம்மளம் வாங்கிப் பிழைப்பதற்காக அல்ல என் பதை நீங்கள் உணர்தல் வேண்டும். மாணாக்கர்கள் இல்லை என்றால் இத்தனை பேர்கட்கும் இங்கு வேலை இல்லை. உங்கள் உடல் நலன், மன நலன், படிப்பதற் கேற்ற நல்ல சூழ்நிலை, இவற்றுற்கெனவே விடுதிகள் ஏற்

பட்டன. இவ்விடுதிகள் நன்னிலையில் அமைந்தால்தானே நீங்கள் நன்கு படிக்க முடியும்? நாளையே உங்கட்குக் கட்டில்கள் செய்யக் கட்டளை அனுப்பி விடுகின்றேன். மின்விசிறிகள் வேண்டுமென்று வற்புறுத்தாதீர்கள். இங்கு நல்ல காற்று வருகின்றது. தற்சமயம் தேவை இல்லை எனக் கருதுகின்றேன். தவிர நீங்களும் விசிறியைத் தேவை யானபோது போட்டுக் கொள்ளவும், தேவையில்லாத போது நிறுத்தவும் செய்து கொள்ள வேண்டும். வீணாக மின்விசிறிகள் சுழன்று கொண்டிருந்தால் மின் கட்டணம் அதிகமாகும். இங்குப் படிப்பவர்கள் எல்லோருமே செல்வர் கள் அல்லர்; ஏழை வீட்டுப் பிள்ளைகளும் படிக்கின்றனர்; விடுதிச் செலவு குறைந்தால்தான் அனைவருக்கும் நலன் நீங்கள் பொறுப்புணர்ந்தவர்கள். தயவு செய்து மின்விசிறி வேண்டுமென்று வற்புறுத்தாதீர்கள். கட்டில்களுக்கு நாளையே ஏற்பாடு செய்து விடுவேன். எந்தத் தேவையாக் இருந்தாலும் உங்களில் யாராவது இரண்டு அல்லது மூன்று பேர் என்னை வந்து கண்டு சொல்லுங்கள். தயவு செய்து வேலை நிறுத்தத்தில், இப்பொழுதல்ல, எப்பொழுதுமே இறங்க வேண்டா. இந்தச் செயல் சூழ்நிலையின் அமைதியை (Morale)க் கெடுத்து விடும். பல்கலைக் கழகத் தின் பெருமை உங்கள் பெருமை; அதன் நற்பெயர் உங்கள் நற்பெயர். நல்லதும் கெட்டதும் உங்கள் கையில்தான் உள்ளன. நன்றாகப் படியுங்கள்'' என்று உருக்கமான அறிவுரை கூறினார். மாணாக்கர்களும் சிந்தனையற்ற யற்ற தங்கள் செயலுக்கு வருத்தம் தெரிவித்து அமைதி யாக உணவுக்குச் சென்றனர். துணைவேந்தரும் நானும் அமைதியாகத் திரும்பினோம். அடுத்த நாள் துணைக் காப்பாளர்களையும் (Debuty Wardens) தங்கிப் பயிற்சி யளிப்போர்களையும் (Resident tutors) கூட்டி விடுதியின் அமைதி கெடாமல் பாதுகாக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

(4) 1965—66 என நினைக்கின்றேன். சித்தூர் அரசினர் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் தமிழ் சிறப்புப் பாடம் நடைபெறுவதற்கு அங்கீகாரம் வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தனர்.[1] கல்லூரியில் இதற்கு வசதிகள் உள்ளனவா என்று பார்ப்பதற்கு ஓராள்—ஆணையம் அனுப்பி அந்த ஆணையத்தின் அறிக்கைப்படி எல்லா வசதி களும் (ஆசிரியர், இட வசதி, நூலக வசதி) உள்ளனவா என்பதை ஆய்ந்து அனுமதி வழங்குவர். பல்கலைக் கழகத் தில் தமிழ்ப்புலம் (Faculty) ஒன்று இல்லாததாலும், துறை யிலும் துணைப் பேராசிரியரோ, பேராசிரியரோ இல்லாத தாலும், துறை பற்றிய வினாத் தொகுதி (Questionnaire) அனுப்பி அதற்கு முதல்வர் அனுப்பி வைக்கும் விடையை ஆய்ந்து அனுமதி வழங்கலாம் என்ற குறிப்பை வைத்தார் பதிவாளர் துணைவேந்தர் பார்வைக்கு. துணைவேந்தர் அந்தப் பரிந்துரைக் குறிப்பின்மீது பேராசிரியருக்குத் தகுதியுள்ள ஒருவர் விரிவுரையாளராக இருந்தாலும் அவரை ஓர் ஆணையமாக அனுப்பலாம் என்ற கட்டளை யைப் பிறப்பித்தார்.

சித்தூர் அரசினர் கல்லூரியில் திரு. பொன். சௌரிராஜன் என்ற ஒரே ஒரு தமிழ் விரிவுரையாளர். அவர் தம்முடைய சொந்த முயற்சியால் சித்தூரில் பல பெரியோர்களைச் சந்தித்து உயர்நிலைப் பள்ளியில் தமிழ் படித்துக் கல்லூரியில் சேரும் தம் பிள்ளைகளைத் தமிழ் (பொதுவும் சிறப்பும்) எடுத்துப் படிக்கச்செய்ய பிரசாரமே செய்து இரண்டு பிரிவிலும் மாணாக்கர்களின் எண்ணிக் கையை ஆண்டுதோறும் அதிகரிக்கச் செய்து வந்தார். கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேல் நாட்டிலிருந்து நம் நாடு போந்து பணியாற்றும் சமயத் துறவிகளை

1. பி. ஏ.பகுதி I பொது (a) ஏதாவது ஒரு இந்திய மொழி (b) ஆங்கிலம்; பகுதி II சிறப்பு ஏதாவது மூன்று பாடங்கள்; இதில் ஒன்று இந்தியமொழி அல்லது ஆங்கிலமாக இருக்கலாம்.

யொப்பப் பெரும் பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது கல்லூரியில் முதல்வராக இருந்தவர் திரு G.S. N.S. ஆச்சாரியார் என்ற ஒரு வைணவர்; தமிழ்ப் பேசும் தெலுங்குப் பேராசிரியர்; திருப்பதியைச் சார்ந்தவர். தமிழ்த் துறை வளர்வதற்கு இவர் திரு. சௌரிராஜனுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தது பாராட்டத்தக்கது. நான் ஓராள் ஆணையமாகச் சென்றபொழுது உள்ளூர்ப் பெரியவர்கள் சிலரையும் என்னைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்திருந்தார். முதல்வர் இந்தச் சூழ்நிலையைக்கருத்தில் கொண்டும், முதல்வர் அளித்துவரும் ஊக்கத்தைக் கொண்டும் இட நெருக்கடி இருந்தாலும் முதல்வர் அளித்த உறுதி மொழியாலும் இத்தனைக்கும் மேலாக அரசுக் கல்லூரியாதலாலும் சிறப்புத் தமிழ் வகுப்பிற்கு பரிந்துரைத்தேன். அப்போது கல்லூரி முதல்வர் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவில் (Syndicate) உறுப்பினராகவும் இருந்தார். இவ்வாறு பரிந்துரைக்கும்போது 1966—67ல் இப்போது பணியாற்றிவரும் திரு சௌரிராஜனைப் பேராசிரியராக உயர்த்துமாறும், அவருக்கு உதவியாக ஒரு விரிவுரையாளரை நியமிக்கவும் பரிந்துரைத்தேன். இதன்படி அடுத்த ஆண்டில் திரு சௌரிராஜன் பேராசிரியரானார்; அவருக்குத் துணையாகத் திரு T. J. இரகுபதி என்ற ஒருவர் விரிவுரையாளராக நியமிக்கப் பெற்றார்; இவ்வளவு செயல்கள் நடைபெற்றதற்குக் காரணம் திரு G.S.N.S. ஆச்சாரியார் புகழ்பெற்ற முதல்வராக இருந்து சிரத்தையுடன் நடவடிக்கைகள் எடுத்தமையேயாகும். இங்ஙனம் என் தமிழ்ப் பணி சித்தூர் வரையிலும் எட்டியதற்கு என்னுள்ளே அந்தர்யாமியாக வீற்றிருக்கும் ஏழுமலையப்பனின் திருவருளே காரணமாகும் என்பது என் அதிராத நம்பிக்கை.

(5) டாக்டர் V.C. வாமன்ராவ் பேசுவதை விரும்பாதவர். கூட்டங்களில் தலைமைக்கு அழைத்தால், அல்லது

பரிசுகள் வழங்கக் கேட்டுக் கொண்டால் மிக்க சிரமத்துடன் ஒப்புக் கொள்வார். ஆதலால் அவரைப் பெரும்பாலான கூட்டங்களில் பார்க்க முடிவதில்லை ஒரு சமயம் என்னிடம் ''பேச வேண்டுமானால் பேராசிரியர்களையும் துணைப் பேராசிரியர்களையும் கூப்பிடவேண்டும். என் போன்று பேச விரும்பாதவர்களை ஒதுக்கிவிடவேண்டும். அப்படி நான் வந்தே ஆகவேண்டுமானால் பரிசுகள் வழங்கும் பொறுப்புடன் என்னை விட்டுவிட வேண்டும்'' என்று வற்புறுத்திச் சொன்னதாக நினைவு, பலரிடம் இவ்வாறே சொல்லியதாகவே அறிகின்றேன். பல்கலைக் கழகப் பொறுப்புகளை மிகத் தீவிரமாக நிறைவேற்றுவார். பிறருடன் அதிகமாகக் கலந்து கொள்ள விரும்புவதில்லை. தனிமையையே விரும்புவார். ஹுக்கா பிடிப்பார்; அல்லது தோட்டத்தில் உலவுவார். புதிதாகத் திருப்பதி வந்ததும் சித்தூர் சாலையில் காலையில் உலாவப் போவதுண்டு. சாலையில் பேருந்துகள், சாமான் வண்டிகள் அடிக்கடிச் செல்லும் இரைச்சலைக் கேட்டுத் தாங்க முடியாமல் சாலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டார். திருமாளிகைக்குள்ளேயே சுமார் 100 அடி நீளமுள்ள மாமரத்தின் நிழலில் திரும்பத் திரும்ப நடந்து கொண்டிருப்பார் உயிர்க்காட்சிச் சாலையில் கூண்டிற்குள் புனுகுப் பூனை நடப்பது போல். ஆனால் இவரது நடையில் வேகம் இருக்கும். ஒரு சமயம் ஏதோ அவசர வேலையாகக் காலையில் 7-30க்கு அவரைப் பார்க்கச் சென்றேன். அதே சமயத்தில் திரு எம். பலராமரெட்டியும் (பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்) வந்து சேர்ந்தார். ''நான் உலாவுகின்றேன். இன்னும் அரைமணி நேரம் ஆகும். அவசரமாக ஏதாவது பேசவேண்டுமானால் என்னோடு நடக்கத் தயாராகுங்கள். நடந்து கொண்டே பேசி முடிப்போம்'' என்றார் துணைவேந்தர்.

திரு பலராமரெட்டியும் உலாவுவதில் பெருவிருப்பமுள்ளவர். இவர் மாலையில்தான் உலவப் போவது

வழக்கம். மாலையில் நாள் தவறாமல் அலர்மேல்மங்கை புரம் (3 கல் தொலைவு) வரை சென்று திரும்புவதை நான் அடிக்கடி பார்த்திருக்கின்றேன். துணைவேந்தர் கூறியதைக் கேட்டுத் திரு. பலராமரெட்டி அவருடன் நடக்கத் தயாரானார். ஏதாவது நிர்வாகப் பிரச்சினை பற்றிய பேச்சாக இருக்கலாம் என்று நான் ஒதுங்கிக் கொண்டேன். இருவரும் ஏதோ பேசி முடித்துக் கொண்டனர்; திரு. பலராமரெட்டியும் விடைபெற்றுச் சென்று விட்டார். நான் தொலைவிலிருந்து இவர்கள் நடந்து கொண்டே செயலாற்றுவதைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் இருந்தேன். துணைவேந்தர் தம் அறைக்கு வந்ததும் நான் வந்த வேலையை முடித்துக் கொண்டு திரும்பினேன்.

(6) டாக்டர் V.C. வாமன் ராவ் முதன் முதலாகப் பதவியேற்ற சில நாட்களில் என்ன அவசரமாக இருந்தாலும் பெண்பாலார் தம்மைத் தம்திருமாளிகையில்காண்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அவசரமாகப் பேச வேண்டுமானால் தொலைபேசியில் பேசலாம் என்றும், அலுவலகத்தில் எப்பொழுது வேண்டுமானாலும்சந்தித்துப் பேசலாம் என்றும் அறிக்கை அனுப்பினார். ஆண்பாலார் இந்த அறிக்கையைக் கண்டு வியந்தனர்; பெண்பாலார்களில் சிலர் இதைக் கண்டு மகிழ்ந்தனர்; சிலர் முணுமுணுத்தனர். ஒரு சிலர் தமக்குள்ளே எதிர்த்துப் பேசிக் கொண்டிருந்தனர். நிர்வாகத்தில் தலைமைப் பதவியிலிருப்பவரைப் பிடிக்காவிடில் அவர் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து (1) பெண்களுடன் தொடர்புப்படுத்தி அவதூறு செய்திகளை — வதந்திகளைப் — பரப்புவர்; (2) கையூட்டு வாங்குவதாகச் செய்திகளைக் கிளப்புவர். இந்த இரண்டுமே வேண்டாதவர்களைத் தாக்குவதற்கு இவர்கள் கையாளும் 'ஆயுதங்கள்'. இதையெல்லாம் நன்கு அறிந்து தெளிந்தவராதலால் இந்த இரண்டு விஷயங்களிலும் விழிப்புடன் இருந்தார் துணைவேந்தர்.

பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே; மெய்போ லும்மே 2

என்பதை நன்கு அறிந்தவர்.

(7) பதவி முடியும் சில திங்கட்கு முன்னர் ஒருநாள் ஓய்வாகப் பேசிக் கொண்டிருந்தேன் அவர் திருமாளிகையில். எதை எதையோ பேசிக் கொண்டிருந்தோம். இன்னவை என்று நினைவு இல்லை. அப்போது சொன்னேன் : "ஐந்தாண்டுப் பணி முடியப்போகின்றது. புதிய சட்டப்படி துணைவேந்தர் பதவிக் காலம் மூன்றாண்டு என்று குறைக்கப் பெற்றுவிட்டது. பல்கலைக் கழக வளர்ச்சிக்குத் தாங்கள் யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை என்ற குறை பரவலாகச்சுமத்தப்படுகிறது" என்றேன். அதற்கு அவர் "ஏதோ ஓரளவு செய்தேன். நான் நினைத்தபடி செய்யவில்லை. செய்யவும் விரும்பவில்லை. 'ரெட்டி—நாயுடு மோதல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள், நிர்வாக இயந்திரம் அமைதியாக நடைபெறட்டும்' என்ற நீலம் சஞ்சீவ ரெட்டியின் கருத்துப்படி நடத்தினேன். எதிலும் ஆழமாக இறங்கி என்னை உட்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் என் ஆட்சிக் காலத்தில் மாணாக்கர் வேலை நிறுத்தம் இல்லை. பல்கலைக் கழக வாளாகத்தில் சொத்துகளுக்குச் சேதம் இல்லை; எந்தவிதம் கொந்தளிப்புக்கும் நான் இடந்தரவில்லை. இது போதும். 'உரோமாபுரி ஒரே நாளில் கட்டப் பெறவில்லை' என்ற உண்மையை அறிவீர்களன்றோ? நற்பெயர் வராவிட்டால் போகிறது. கெட்ட பெயர் வரவில்லையல்லவா?" என்றார். பொதுவாக இவர் ஆட்சிக் காலத்தில் 'ஓகோ' என்று ஒன்று ஏற்படாவிடாலும், எங்கும் அமைதி நிலவியது என்பதை எவரும் ஒத்துக் கொள்வர்.

---

2. வெற்றிவேற்கை—73

(8) 1969 ஏப்பிரல் மாதத்தில் பறம்புமலையில் நடைபெற்ற பாரி விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அக்காலத்தில் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களைக் கொண்டு எனக்குப் பொன்னாடை போர்த்தச் செய்து 'அருங்கலைக் கோன்' என்ற விருதையும் வழங்கினார்கள். இதைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகின்றேன். இஃது என் அறிவியல் நூல்களைப் பாரட்டி அளிக்கப் பெற்ற விருதாகும். அடிகளாரின் ஆசி எனக்கு நிரந்தரமாக உண்டு.

குமிழி—204

## 48. யுனெஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

1962 என நினைக்கின்றேன். நான் குடும்பம் இன்றி தனியாக திருப்பதி தீர்த்த கட்டத் தெருவிலுள்ள ஓர் அறையில் தங்கி உணவு விடுதி உணவைக் கொண்டு காலம் கழித்தபோது சென்னை ஓரியண்ட்ல் லாங்க் மன்ஸ் கம்பெனியிலிருந்து திருமண் காப்புத் தாங்கிய முகப்பொலிவுடன் ஒரு வைணவ அன்பர் வந்தார்; என் அறையைக் கண்டுபிடிப்பதில் பலர் தொல்லைப் பட்டதை யான் அறிவேன். ஊர்ப்பெருமக்களிடம் சரியாகப் பழகாமையே காரணம் என்பதை நான் அறிவேன். எப்படியோ என் சிறு குடிலைக் கண்டு கொண்டு விட்டார். நான் ஏழுமலையானைக் கண்டது போன்று பெருமகிழ்ச்சி அடைந்தேன். சிறிது நேரம் பொதுச் செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தோம். பின்னர் அவர் என்னைத் தேடிக் கொண்டு வந்ததைப் பற்றிக் கேட்டேன்.

அவர் கையில் UNESCO : Source Book for Science Teaching என்ற நூலின் படியொன்றும் இருந்தது. அது திருத்திப் பெருக்கிய பதிப்பு. அவர் தம் கையிலிருக்கும் நூலை என்னிடம் தந்து 'இதைத் தமிழாக்கம் செய்துதர வேண்டும்; இதற்காகத்தான் உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன்' என்றார். ''தமிழகத்தில் எத்தனையோ ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உள்ளார்களே. அவர்களைப் புறக்கணித்து விட்டு என்னைத் தேடிக் கொண்டு வந்ததன் காரணம் என்ன?'' என்று வினவினேன். ''காரைக்குடியிலிருந்தபோதே தங்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கின்றேன். அறிவியல் படித்த தமிழ்ப் பேராசிரியர்கள் அரியர். அவர்களுள்ளும் எழுத்துப் பழக்கம் உள்ளவர்கள் மிகஅரியர். பயிற்சிக் கல்லூரி அநுபவம் பெற்றவர்களே இல்லை என்று சொல்லலாம். தவிர, உங்கள் தமிழ்ப் பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல், அணுவின் ஆக்கம் போன்ற நூல்களையெல்லாம் பார்த்த பிறகு தாங்கள்தான் இந்த நூலைத் தமிழாக்கம் செய்ய வேண்டும் என்று கேட்கவே வந்தேன். இதைக் காரணமாக கொண்டு ஏழுமலையானையும் சேவிக்கலாமல்லவா?'' என்று குழைந்து பேசினார்.

எனக்கும் அச்சமயம் வேலை நெருக்கடி இல்லாதிருந்தது. பணியை ஒப்புக் கொண்டேன். ராயல் அளவில் இரண்டு பத்திகளாக நூற்றுக்கணக்கான படங்களுடன் கூடிய நூல். இந்து நாளிதழ்களில் உள்ள எழுத்துகள் போல மிகச்சிறிய எழுத்துகளால் அச்சிடப் பெற்றிருந்தது. சன்மானம் பற்றிக் கேட்டபோது ரூ 600/- தருவதாகத் கம்பெனியின் திட்டம்'' என்றார். ''ஓராண்டு முழுவதும் ஓயாமல் செய்தாலும் முற்றும் பெறாது. வேலை அதிகம்'' என்பதை நன்கு அறிந்தும் பணியை ஒப்புக் கொண்டேன்; தொடங்கினேன் பணியை. செய்யும்போது தான் சிரமம் தெரிந்தது. இதே சமயத்தில் இளைஞர் வானொலி, இராக்கெட்டுகள், அதிசய மின்னணு போன்ற சிறு நூல்

களையும் எழுதும் திட்டங்களையும் வைத்திருந்தேன். இவற்றில் ஒவ்வொன்றிலும் ஐம்பதிற்கு மேற்பட்ட படங்களை அமைக்கும் திட்டமும் இருந்தது. 'வாழையடி வாழை' (Genetics) என்ற நூலும் உருவாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொள்வதில் தீவிரமாக முயன்று கொண்டிருந்தேன். இதற்கு இசைவு வந்து விட்டால் இத்தனைத் திட்டங்களும் பணிகளும் நிறுத்தி வைக்கப்பெறும் என்ற அச்சமும் உள்ளூர இருந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் எம்பெருமான் மீது பாரத்தைப் போட்டு மொழி பெயர்ப்புப் பணியைத் தொடங்கினேன். தொடங்கின போது இதன் முழு தாற்பரியமும் தெளிவாகியது. ''இயற்பியல், வேதியியல், தாவர இயல், விலங்கியல், ...னியல், உயிரியல், மானிட இயல்—என்ற இத்தனைத் துறை அறிவு இருந்தால்தான் இதைச் செவ்வையாகச் செய்ய முடியும். அறிவியல் பயிற்றும் முறைகளைப் பற்றிய தெளிவும் இருத்தல் வேண்டும். கலைச் சொற்களின் அறிவு நன்கு அற்றுபடியாயிருக்க வேண்டும். இவை தவிர எழுதுவதில், மொழிபெயர்ப் பதில் ஈடுபாடும் வேண்டும்''- என்ற கருத்து என் மனத்தில் எழுந்தது.

இந்தப் பணிக்கு ஒப்புக்கொண்ட ஊதியம் மிகக் குறைவு. பார்வைப்படிகளைச் சரிபார்ப்பவரே இந்த ஊதியத்தில் இரண்டு மடங்கு பெறுவார் என்பதும் தெரியும். ரூ 1000/- தருவதாக இருந்தால் ஓரளவு கட்டுபடியாகும். நேஷனல் புக் டிரஸ்டு மூலம் இப்பணி கிடைத்தால் ரூ 3000/- கிடைக்கும் என்பதையும் நான் நன்கு அறிவேன். இங்குப் பணிபெறுவதெல்லாம் பரிந்துரை களின்மூலம் நடைபெறுகின்றன. என்றாலும் இப்பணி ''அறிவியல், தமிழ் மக்கள், அறிவியல் பயிற்றும் ஆசிரியர்கள் பயிலும் மாணவர்கள்—இவர்கட்கு அர்ப்பணிக்கும் தொண்டாக இருக்கட்டும்'' என்ற தியாகச் சிந்தைதான்

உந்து விசையாக இருந்து என்னை இப்பணியை முற்று விக்கச் செய்தது.

இப்பணி என்னை இரண்டாண்டு அளவும் இழுத்துச் சென்றது. பணி ஒப்புக் கொண்ட போதிருந்த மேலாளர் ஓய்வு பெற்றார்; புதியவர்—ஒரு கிறித்தவர்—பணி யேற்றார். ரூ 150/-ஊதியம் ஏற்றித் தரும் படியும் பார்வைப் படிவங்களைச் சரிபார்த்து அனுப்புவதற்கு அஞ்சல் செலவாக ரூ 100/- தரும் படியும் புதியவருக்கு எழுதினேன்; ஒப்புக் கொண்டார். நான் குறைந்த ஊதியத் திற்கு வகையாக மாட்டிக் கொண்டேன் என்பதை அவர் நன்கு அறிவார். இல்லாவிட்டால் ரூ. 250/- ஏற்றித்தர ஒப்புக் கொண்டிருக்க மாட்டார். எழுத்துப் பிழைகளை மட்டிலும் சரிபார்த்தால் போதாது. இத்தகைய நூலில் மூலத்தை வைத்துக் கொண்டு படங்களைச் சரிபார்க்க வேண்டும். படங்கள் அமைந்த பிறகு பக்க அழகைப் பார்க்க வேண்டும். அறிவியல் நூல்களைப் படங்களுடன் தயார் செய்யும் ஆசிரியர்தாம் இந்த நுட்பங்களை எல்லாம் நன்கு அறிய முடியும்.

நூலை 1965க்குள் முடித்துக் கொடுத்து விட்டேன், அச்சிடுவதில் பல சிரமங்கள். எட்டு பாயிண்ட் அளவு எழுத்துகளில் செய்யவேண்டும். 10, 11 பாயிண்டு எழுத்து களில் செய்தால் நூல் பெரிதாகும். நூலின் விலை அதிக மாக வைக்க வேண்டி வரும். இவற்றையெல்லாம் கவனித்து அச்சேற்றிப் பார்வைப் படிவங்கள் எனக்கு வருதல் அவற்றைச் சரி பார்த்துத் திருப்பி அனுப்புதல் இவையெல்லாம் நூல் வெளிவருவதைத் தாமதப்படுத்தும். எப்படியோ நூல் ஏப்பிரல்—1969 இல் மிக அழகாக வெளிவந்தது. இஃது என்னுடைய இருபத்திரண்டாவது வெளியீடாகும். அப்போது துணைவேந்தர் டாக்டர் V.C. வாமன்ராவ் பணியில் இருந்தார். ஒரு படி அவருக்கு வழங்கினேன். அவர் ''இஃது ஒரு அசுவமேத யாகம்'' என்று பாராட்டினார்.

# 49. புதிய துணைவேந்தர் டாக்டர் D. சகந்நாதரெட்டி பணி ஏற்றல்

டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டி பதவி ஏற்றது 1969 செப்டம்பர் என்பது என் நினைவு. இவர் பதவி ஏற்ற ஒன்றிரண்டு வாரங்களில் தமிழ் வளர்ச்சிக்கென நான் தமிழக அரசிடம் மானியம் பெறுவதற்கென்று மேற் கொண்ட 'பகீரதப் பிரயத்தனம்' பழம் ஆயிற்று. ஆண்டிற்குப் பத்தாயிரம் வீதம் ஐந்தாண்டுகட்கு மானியம் வழங்குவதென்ற ஆணையைத் தமிழக அரசு பிறப்பித்தது. டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டிக்கு இது பெருமகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டும் என்பதைப் பின்னர் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் ஊகிக்க முடிந்தது.

எந்த துணைவேந்தர் புதிதாக வந்தாலும் ஒவ்வொரு துறையிலும் சங்கக் கூட்டத்தைத் தொடங்கி வைக்கவோ, அல்லது அதன் நிறைவுக் கூட்டத்தை முடிக்கவோ அழைப்புகள் இருக்கும் பல்கலைக் கழக வட்டத்தில் இஃது ஒரு மரபாக வழங்கி வரும் பழக்கமாகும். இதனால் புதிய துணைவேந்தரை எடை போட்டுப் பார்ப்போருக்கு ஒரு வாய்ப்பு; கால் கை பிடிப்போருக்கும் ஒரு வழி டாக்டர் ரெட்டியின் பேச்சு நன்றாக இருக்கும் சிலர் போல் வாய்க்கு வந்தபடிப் பேசமாட்டார்; பேசவேண்டிய பொருளை நன்குச் சிந்தித்து வகைப்படுத்திக்கொண்டு வந்து பேசுவார். பேசுவதற்கும் விரும்புவார். இவரது இந்தப் பழக்கத்தை எல்லோரும் அறிந்து கொள்ள முடிந்தது.

பல கூட்டங்களுக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். தமக்கும் தமிழ் இலக்கியத்தைப்பற்றிச் சிறிது தெரியும்

என்பதைக் காட்டிக் கொள்வார். பேசும் போது நான் இருப்பது அவருக்குத் தெரிந்துவிட்டாலோ தமிழ் இலக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது 'கம்ப ராமாயணத்தின் ஏழு தொகுதிகள்' என்பார்; 'திருக்குறள் உலகப் பெரிய இலக்கியங்களுள் ஒன்று, என்று குறிப்பிடுவார். 'சங்க இலக்கியங்கள்' 'தேசிய கவி பாரதியாரின் படைப்புகள்' என்று பேசுவார். சில கூட்டங் கட்கு நான் போக முடியாத நிலை ஏற்பட்டு விடும். அப்போது 'இவர் கண்கள் என் இருப்பைத் துழாவும்' என்றும் 'மிஸ்டர் ரெட்டியார் எங்கே? வரவில்லையா?' என்று கேட்பார் என்றும் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக் கின்றேன், 'மிஸ்டர் ரெட்டியாரின் முயற்சியால் தமிழக மானியம் வந்திருக்கின்றது; வருகின்ற ஆண்டு தமிழ் முதுகலை வகுப்பு தொடங்கப்படும்' என்று குறிப்பிடுவார். 'நாவலர் நெடுஞ் செழியனைக் கொண்டு விழா அமைத்து முதுகலை வகுப்பு தொடங்கலாமா?' என்பார் நான் கூட்டத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டுவிட்டால். சில சமயம் இவரது பேச்சு 'அரசியல்வாதியின் பேச்சுபோல் ஒளி விட்டுக்காட்டும். கூடியிருப்போர் மகிழ்வதற்காகவே சில நிகழ்ச்சிகளை நகைச்சுவையாகக் குறிப்பிடுவார், பேச்சின் போக்கு இளைஞர்களின் கவனத்தை ஈர்ப்பதாக வும் அமையும்.

பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலுநாயுடு, டாக்டர் V.C.வாமன்ராவ், டாக்டர் D. ஜகந்நாத ரெட்டி, பேராசிரியர் K. சச்சிதானந்த மூர்த்தி என்ற நான்கு துணைவேந்தர்களின் செயல்களை நேரில் கண்டவன் நான். ஆகவே, ஒவ்வொருவடைய நோக்கம், போக்கு, செயலாற்றும் திறன் முதலியவற்றை எடைபோட்டு மதிப்பிட்டுப் பார்க்க முடியவனாகின்றேன். எவர் இருந் தாலும், இல்லாவிட்டாலும் அன்றாடத் தேவைகளை நிர்வாக இயந்திரம் பூர்த்தி செய்துவிடும். கொள்கைகளை வகுத்துக்கொண்டு ஆட்சிக் குழுவினரை அணைத்து

கொண்டு துணைப் பேராசிரியர்களின் யோசனைகட்கு மதிப்பு தந்து, பொதுமக்களின் ஆதரவையும் பெற்றுச் செயலாற்றினால் பல்கலைக் கழகத்தின் பன்முக வளர்ச்சி பாங்குற அமையும். இவற்றையெல்லாம் கருத்திற் கொள்ளாது அதிகார ஆணவத்துடன் தான்தோன்றிதன மாகச் செயற்பட்டால் பல்கலைக் கழக வளாகத்தில் கிளர்ச்சிகள், எதிர்ப்புகள் தோன்றி ஆக்க வேலை கட்குக் குந்தகம் விளைவிப்பதைக்காணலாம். இவை எல்லாவற்றை யும் கருத்திற் கொண்டாலும், மாணாக்கர்களின் தேவை கள், அவர்களின் உள்ளக்கிளர்ச்சிகள், மாணாக்கர்களின் விடுதிகளில் உறைபவர்களின் வசதிகள் இவற்றிற்கு முதலிடம் தருதல் வேண்டும். மாணாக்கர்கட்கு ஒன்றும் தெரியாது, அவர்களைப் பொம்மைகள் போல் இயக்கலாம் என்று கருதிச் செயற்பட்டால் அஃது நெருப்புடன் விளையாடுவது போலாகிவிடும். கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், மாணாக்கர் விடுதிகள் இவற்றில் ஏற்படும் கொந்தளிப்புகளைக் கூர்ந்து நோக்கினால் பெரும்பாலும் இவற்றிற்குரிய காரணம் நிர்வாகத்தையே சார்ந்திருப் பதைக் காணலாம்; அரசியல் கட்சிகள், சாதியுணர்ச்சி களைத்தூண்டி விடும் ஆசிரியர்கள் இவர்களின் தலையீடு மட்டிலும் இல்லாதிருந்தால் மாணாக்கர்களின்மீது குற்றப் பத்திரிகை வாசிப்பதற்கே இடம் இராது என்பது நெஞ்சில் கைவைத்து உணர்பவர்கட்கு, சிறிதும் விருப்பு வெறுப் பற்றுச் சிந்திப்பவர்கட்குப் புலனாகாமற போகாது.

பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர் களும் டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டி அவர்களும் பல்கலைக் கழகப் பன்முகவளர்ச்சிக்கு மேற்கொண்ட முயற்சிகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப் பெற வேண்டியவை. சாதி வெறி சமய வெறி இல்லாமல், புலமைக்கும், செயலாற்றும் திறமைக்கும் தொண்டுள்ளம் கொண்டமைக்கும் மதிப்பு தந்து, மதிப்பீடு செய்யும் பண்புடையவர்களின் கவனத்திற்கு மட்டிலும்தான் இவர்

கள் தன்மை, மனப்பான்மை முதலியவை தட்டுப்படும். பேராசிரியர் கோவிந்தராஜுலு நாயுடுவும் டாக்டர் டி. ஜகந்நாத ரெட்டியும் அல்லும் பகலும் பல்கலைக் கழக் வளர்ச்சியையே சிந்தனையில்கொண்டவர்கள்.

தேவஸ்தான ஆண்கள் கலைக் கல்லூரியின் கட்டடத்தில் பல்கலைக் கழக எல்லாத் துறைகளும் அடங்கிக் கந்தறு கோலமாகக் காட்சியளித்தது அதிலும் அறிவியல் துறைகளாகிய இயற்பியல், வேதியியல் விலங்கியல், தாவர இயல், நில உட் கூற்றியல் ஆகிய ஐந்து அறிவியல் வறைகளும் தளவாடங்களுடன் அடங்கிக் கிடந்த நிலை கந்தறு கோலமாகக் (Pandimonium) காட்சி யளித்தது. ஆங்கிலம், கணிதம், வரலாறு, பொருளாதாரம் புள்ளியியல், தெலுங்கு (தமிழ்), உருது, வடமொழித்துறை கள் நெரிசலாக அடங்கிக் கிடந்த காட்சி பரிதாபத்திற் குரியது. இந்தக் கட்டடத்திலேயே முதல்வர் அலுவலகமும் இரண்டு பெரிய அறைகளை ஆக்கிரமித்துக் கொண் டிருந்தது. ஆடவரும் மகளிரும் சேர்ந்து பயிலும் கல்லூரி களில் மகளிரும் பெண் பேராசிரியர்களும் தனிமையாகத் தங்குவதற்கென்று ஒதுக்கப் பெறுதல் மிகவும் இன்றியமை யாதது. இவர்களுக்குத் தரப்பெற்றிருந்த வசதிகள் இரக்கப்படத்தக்கவையாக இருந்தன. மாணாக்கர்களின் எண்ணிக்கையும் (இளங்கலை, முதுகலை வகுப்புகளிலும்) குறைவாகஇருந்தமையாலும்ஆராய்ச்சிக்குரிய மாணாக்கர் கள் 150 எண்ணிக்கையைத் தாண்டாமலும் இருந்தமை யால் எல்லாம் ஓரளவு சிரமத்துடன் இயங்கி வந்தன.

பல்கலைக் கழக மானிய ஆணையத்திடமிருந்து மானியம்பெறல், ஆந்திர அரசிடமிருந்து மானியம் பெறல், திட்டப்படங்கள் (Plans) தயார் செய்யப் பெற்று அங்கீகாரம் பெறல் இவையெல்லாம் மிக விரைவாக முடுக்கப் பெற்றாலும் 1964இல் தான் இரண்டு அறிவியல் கட்டடத்தொகுதிகள் தயாராயின. இயற்பியல், வேதியியல்

இவற்றிற்குரியவை முதலிலும், ஆறு திங்கள் கழித்து தாவர இயல், விலங்கியல், நிலஉட்கூற்றியல் இவற்றிற் குரியவை தயாராயின. ஆங்கிலம், வடமொழி, வரலாறு, தமிழ், புவியியல், உளவியல், இத்துறைகளுக்குரிய கட்டடத் தொகுதிக்குரிய வேலைகள் ஆமை வேகத்தில் நடை பெற்றன. கட்டடப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே சென்றதால். குத்தகையாளர் கட்டும் வேலையை நிறுத்தி விட்டார். நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால் பல்லாண்டுகள் ஆகுமென்று கருதி புதிதாக உடன்படிக்கை செய்துகொண்டனர். கட்டட அளவுகளில் ஒன்பதில் ஒன்று (நீளம், அகலம், உயரம்) குறைத்துக் கட்ட ஒப்புக் கொண்டார் குத்தகையாளர். 1965—66இல் இக்கட்டடத் தொகுதி வேலையும் நிறைவு பெற்றது. துறைகள் யாவும் புதிய இடத்திற்கு மாறின. பொருளாதாரம், கணிதம், புள்ளியியல், அரசியல், மானிட இயல் (Anthropology') கல்வி, வயது வந்தோர் கல்வித்துறைகள் பழைய கட்டடத் தில் அமைந்தன; இவற்றின் நெரிசல் நீங்கியது. நூலகக் கட்டட வேலை 1962-63க்குள்ளே முடிந்துவிட்டது; நல்ல முறையில் அமர்ந்து கொண்டது. பல்கலைக் கழகத்தில் எல்லாத்துறைகளின் இதயம் போன்ற இதற்கு முன்னுரிமை அளித்தார் முதல் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு.

1959-இல் புதிதாகத் தொடங்கப்பெற்ற பொறியியற் கல்லூரிக்குக் காரைக்குடியில் பணியாற்றிய பேராசிரியர் ஜி. இராமகிருஷ்ணன் தனிஅலுவலராக (Special Officer) நியமனம் பெற்றார், இவர் கோயம்புத்தூரைச் சேர்ந்த வர். நேர்மைக்கும் திறமைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர். இவர் பொறுப்பில் கல்லூரி நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. கட்டடங் களும் திட்டப்படி ஆண்டுதோறும் வளர்ந்தன; மாணாக்கர் விடுதிக் கட்டடங்களும் விரைவில் கட்டப்பெற்றன. புதிய துறைகள், முதுகலை வகுப்புகள் தொடங்கப் பெற்றமைக்

கேற்றகட்டடங்களும் சோதனைக் கூடங்களும் வளர்ந்தன. இடைஇடையே மாணாக்கர்களின் வேலை நிறுத் தங்களும் தோன்றி அனைவருக்கும் கவலை உண்டாக்கும். தற்காலத்தில் இத்தகைய கொந்தளிப்புகள் தவிர்க்க முடியாதவைகளாகி விட்டன.

டாக்டர் டி. ஜகந்நாதரெட்டி காலத்தில் கட்டடங்கள் என்று மில்லாத அசுரவேகத்தில் வளர்ந்தன; விரிந்தன ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் இவரது கவனம் சென்றது. ஒரு பெரிய பொறியியல் வல்லுநர்போல் செயற்பட்டார்; வசதிகள் வளர்ந்தமை ஒரு புறமிருக்க எதிலும் இவர் உள்ளத்தில் முகிழ்த்த கலை உணர்ச்சி கட்டடங்களிலும் வசதிகளிலும் துலங்கின. பல்கலைக் கழக வளாகமே ஓர் இந்திரபவனம்போல் மாறத் தொடங்கியது. வளாகத்தில் குறுக்கும் நெடுக்குமான மண்சாலைகளில் வாகனங்கள் செல்லும்போது புழுதிகளைக் கிளப்பிக் கொண்டு செல்லு வதால் மாணாக்கர்கள், பல்கலைக் கழகத்திற்கு வரும் பெற்றோர்கள் முதலியவர்களின் உடல் நலம் கெடும் என்பதை அறிந்தார் துணைவேந்தர். எங்கெங்கோ ஒதுங்கிக் கிடந்த நிதிகளைத் தேடி எடுத்து முதல் வேலை யாகத் தார் சாலையாக மாற்றச் செய்தார். எத்தனை வாகனங்கள் ஓடினாலும் புழுதியும் தூசியும் கிளம்பாத சூழ்நிலை வளாகத்துக்குப் புதிய பொலிவினை நல்கியது. ஆசிரியர்க்குடியிருப்புபகுதிகளில் உள்ள சாலைகளும் தார் சாலைகளாயின. சாலைகளின் ஓரங்களில் எங்கெங்கு மரங்கள் இருந்தால் அழகு தரும் என்று கருதினாரோ அங்கெல்லாம் மரங்களை நட்டுப் பாதுகாப்புடன் பராமரிக்கச் செய்தார்.

துணைவேந்தர் திருமாளிகை அகன்ற பரப்புள்ள இடத் தில் மாந்தோப்புகளுக்கிடையே அமைந்துள்ளது. அதற்குள் அங்கும் இங்குமாகப் பல கற்சிலைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தன; அவற்றுள் சில குறையுறுப்புகளுடனும் காட்சி

யளித்தன. இவற்றை ஒன்று திரட்டி ஓரிடத்தில் கலைக் கூடமாக்கக் கருதினார். திருப்பதி—சித்தூர் நெடுஞ் சாலையிலிருந்து பல்கலைக் கழக வளாகத்தில் நூலகத் திற்குச் செல்லும் குறுஞ்சாலையின் இருபுறங்களிலும் நேருக்கு நேராக அமையுமாறு நடச்செய்து அவற்றைச் சுற்றி அழகான சிமிட்டி மேடையையும் அமைக்கச் செய்தார். அறிவுக் கலைக்கூடமாகிய நூலகத்திற்குச் செல்வோர் கலையுணர்ச்சியுடன் செல்வதற்கு இச்சிலை கள் வாய்ப்பாக அமைந்தன; பார்ப்பதற்கு இச்சாலை ஓர் அரும்பொருள்காட்சியகக் களையையும் நல்கியது. இன்று அவை அகற்றப் பெற்று விட்டன; அவை ஊருக்குள் உள்ள தேவஸ்தானத்தின் அருங்கலைக் காட்சியகத்தைப் புகலிடமாகக் கொண்டுவிட்டன.

முதல் துணைவேந்தர் பேராசிரியர் நாயுடுகாலத்தில் திட்டமிடப் பெற்றுக் கிடைப்படவடிவில் கிடந்த திட்டங் கள் பல்வேறு காரணங்களால் செயற்படாமற் கிடந்த வற்றை எல்லாம் செயற்படச்செய்து நிறைவு செய்தார். இப்படி நிறைவு செய்த கட்டடங்கள் மூன்று: அவை: (1) பல்கலைக் கழக நிர்வாக அலுவலகம், பதிவாளர் துணைவேந்தர் அறைகள், தேர்வாளர் அலுவலகம், பொறியாளர் அலுவலகம் பேரவை மண்டபம் முதலியவை அடங்கிய பெரிய கட்டடம் இஃது. இன்று 'நீலம் சஞ்சீயரெட்டிபவனம்' என்றதிருநாமத்தால் மிகப்பொலி வுடன் திகழ்கின்றது, இதில் மின்விசை ஏற்றம் பொருத்தப்பெற்றுள்ளது.பேரவையின் இருக்கை வசதிகள் மிக அழகாக அமைந்துள்ளன. ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு மாநிலச்சட்டப் பேரவையிலும் நாடாளும் மன்றப் பேரவையிலும் இருப்பனபோல் ஒலி வாங்கிகள் (Micorphones) பொருத்த பெற்றுள்ளன. நுழைவாயிலை ஏழுமலையான் திருவுருவப் படம் அணிசெய்கின்றது. இருக்கை வசதிகள் படிமேடை முறையில் அமைக்கப்

பெற்றுள்ளன. ஒருபக்கம் வேமனர் திருஉருவமும் அதற்கு எதிர்ப்பக்கம் திருவள்ளுவர் படமும் அணிசெய்கின்றன. ஒவ்வொரு விவரங்களிலும் துணைவேந்தரின் கற்பனை உள்ளத்தையும் கலை உணர்ச்சியையும் கண்டு மகிழலாம்,

(2) கலையரங்கம் (Auditorium): இது உருப்பெறும் போது ஒவ்வொரு சிறு விவரங்களிலும் தம் நேர்க் கவனத்தைச் செலுத்தினார். நீள்வட்ட (Hyperbola) அமைப்பில் உள்ள இம்மண்டபத்தின் உட்புற அமைப்பு கண்டாரை வியக்கவைக்கும் பான்மையது. இருக்கை வசதிகள், நாடக நாட்டியங்களுக்கான மேடை அமைப்பு, திரைச்சீலை அமைப்புகள் இவை மிகநன்றாக அமைக்கப் பெற்றன. இவ்வளவும் தயாராகித் திறப்பு விழாவுக்கும் ஏற்பாடு செய்யப் பெற்றுவிட்டது. இரண்டு நாட்கள் முன்னதாகத் திரைச் சீலைகள் பொருத்தப்பெற்றன. மேடைக்குமேலே மின்சாரத்தைக்கொண்டு ஏதோ பற்றவைக்கப் பெற்றது; வேலையும் இரவில் நடைபெற்றது. தீப்பொறி குறிதவறி வேறுதிசையில் சென்று அரங்கக் கூரையில் தீப்பற்றிக் கொண்டது. (பற்றவைத்தவர் குடிபோதையில் இருந்ததாகக் கருதப்பெறுகின்றது). அங்கிருந்தவர்கட்கெல்லாம் ஒரு பிரமிப்பு ஏற்பட்டுவிட்டது. திரு. வேங்கட்டரங்கம் என்பவர் திரைச் சீலைகளை உருவிக்கொண்டு வெளியில் ஓடிவந்துவிட்டார். பிறரும் வெளியேறினர். சிறிது நேரத்திற்குள் அரங்கக் கொட்டகை முழுதும் தீ சூழ்ந்து கொண்டது; எங்கும் ஒரே புகைப்படலம். தீயணைக்கும் பொறிக்கு ஏற்பாடு செய்வதற்குள் நல்ல உயர்ந்த மெத்தையுடன் கூடிய இருக்கைகள் யாவும் சாம்பலாயின. நேரில் கண்ணுற்றவர்கள் அழாமல் இருக்கமுடியாது. பெருநட்டம் ஒரு புறம் இருக்க, அழகே வடிவங்கொண்ட ஒருகலை மண்டபம் முடியும் நிலையில் இப்படி நாசமானதை நெஞ்சை உருக்கும் செய்தியாகிவிட்டது. தமது கற்பனைச் சிறகைப் பறக்கவிட்டு அல்லும் பகலும் பாடுபட்ட துணைவேந்தர் டாக்டர் ரெட்டியின் மனம்

என்னபாடுபட்டிருக்கும் என்பதை உணர்ந்துகூடப் பார்க்க முடியாது.

துணைவேந்தர் மனம் தளர்ந்து போகவில்லை. இறைவழிபாட்டில் தோய்ந்தவராதலால் இவர் மனம் ஒடிந்துபோகவில்லை. இதை இறைவன் திருக்குறிப்பின் படியே நடைபெற்றிருக்கவேண்டும் என்று நம்பினார். ஒரு சமயம் திருவேங்கடமுடையானை தரிசிக்கச் சென்ற 'குயூ' வரிசையில் நெருக்கித் தள்ளும் நிலை (Stampede) ஏற்பட்டுப் பத்துப் பதினைந்து பேர் இறந்து போகும் நிலை ஏற்பட்டது. பக்தர்கட்குக்கூட—அதுவும் இறைவழி பாட்டில் செல்லும் பக்தர்கட்கும்—இந்நிலை ஏற்பட வேண்டுமா? என்று பக்தர் உலகமே திடுக்கிட்டது; வகை யறியாது குழப்பத்தில் ஆழ்ந்தது. பத்திரிகைகளில் இந்தச் செய்தியைக் கண்டதும் அறிஞர் உலகம் தம்பித்து நின்றது. இறைவழிபாட்டில்நம்பிக்கை அற்றுப் போகுமோ என்று அஞ்சியது. அச்சமயம் காஞ்சி முனிவர் (பெரியவர்) ''திருக்கோயில் நிர்வாகத்தில் ஏதோ குறை இருக்கின்றது; அது இன்னது என்று குறிப்பிட முடியாது. அதன் அறிகுறியே இந்த விபத்து, கோயில் நிர்வாகம் தம்மனத்தைச் சோதித்து குறையினைப் போக்கிக் கொள்வார்களாக'' என்ற செய்தியை வெளியிட்டார். இதனைத் துணைவேந்தர் டாக்டர் ரெட்டி படித்திருக்க வேண்டும்; அதைப் பல முறை சிந்தித்து உணர்த்திருக்க வேண்டும். பல்கலைக்கழகம் கலைமகளின் பெருங்கோயில் அல்லவா?

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
    தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்;
உய்வம் என்ற கருத்துடை யோர்கள்
    உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
    செம்மை நாடிப் பணிந்திடும் தெய்வம்;

கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்.[1]

என்ற பாரதியாரின் பாடல் இதை எழுதுங்கால் மனத்தில் எழுகின்றது. துணைவேந்தர்,

உன்னை உள்ள படியறியோம்;
உலகம் உள்ள திறமுள்ளோம்;
பின்னை யறியோம்; முன்னறியோம்
இடையும் அறியோம் பிறழாமல்;
நின்னை வணங்கி நீ வகுத்த
நெறியின் நிற்கும் அதுவல்லால்
என்னை யடியேம் செயற்பால
இன்ப துன்பம் இல்லோனே.[2]

என்ற பாடல் அறியாராயினும் இதிலுள்ள கருத்துகள் அவர் சிந்தையில் முகிழ்த்திருக்க வேண்டும். உடலிலுள்ள நரைதிரை முதலியன ஆன்மாவைச் சேராதவாறு போல உலகத்து நிகழும் இன்ப துன்பங்கள் உலகத்துயிர்கெல்லாம் உயிரான பரமான்மாவைச் சேரா என்ற கருத்து நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. இறையருளால் முரட்டுத் துணிவோடு செயற்பட்டார் துணைவேந்தர். பல்கலைக் கழகப் பணியாளர் (எல்லா நிலையினரும்) ஒருநாள் ஊதியம் தந்தனர்; சில வங்கிகள் நன்கொடைகள் வழங்கின. தனிப் பட்டோரிடமிருந்து சில பல கம்பெனிகளிடமிருந்தும் நன்கொடைகள் வந்து குவிந்தன. இவையெல்லாம் தீக் கடவுள் இரையாகக் கொண்ட பொருள்கள் வாங்கப் போதா. இறையருளால் கட்டடத்திற்கு அதிகச் சேதம் இல்லை; பொறியாளர்கள் இதனைச் சோதித்து அறிந்

1. பா. க: வெள்ளைத் தாமரை—4.
2. கம்ப. யுத்தகா. பிரம்மாத்திரப்—223.

தனர். ஆறு திங்களில் துணைவேந்தர் மயன் போல் செயற்பட்டார்; மீண்டும் கலையரங்கம் மறு பிறவி எடுத்தது. நிதி போதாததால் புதிய பிறவி இரண்டாந் தரமாக அமைந்தது. இதுவும் இறைவன் செயல் என்று அவரோடு சேர்ந்து பல்கலைக்கழகப் பணியாளர்கள் அனைவருமே மகிழ்ந்தனர்.

(3) மகளிர் விடுதி: மகளிர் தொகை பல்கலைக் கழகத்தில் பெருகி வருவதைக் கண்டார் துணைவேந்தர். தேவஸ்தானத்தைச் சேர்ந்த மகளிர் விடுதிக்குரிய கட்டடம் போதாதிருந்தது (இது தொடக்கக் காலத்தில் பல்கலைக் கழகத்திற்குத் தரப் பெற்று விட்டது). இதனையொட்டி மிகவும் அழகான முறையில் மற்றோர் இரண்டு மாடிக் கட்டடத்தை எழுப்பச் செய்து அவர்கட்கு தேவையான வசதிகளைப் பெருக்கினார். மகளிர் விடுதிகளில் மகளிர்கெனத் தனிப்பட்ட முறையில் தேவைப்படும் சுகாதார வசதிகட்கு வழியமைத்துத் தந்தார். சிறந்த மருத்துவ வல்லுநரல்லவா?

(4) விருந்தினர் மாளிகை: பல்கலைக் கழகம் விரிவிற்கேற்ப வெளியிலிருந்து வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையும் பெருகத் தொடங்கியது. வருகின்றவர்கள் தங்குவதற்கும், உணவு கொள்வதற்கும் வசதிகள் இல்லாமல் தவித்தனர். தேவஸ்தான சத்திரங்கள், விருந்தினர் இல்லங்கள் கை கொடுத்து உதவினாலும் வாகன வசதியில்லாமையால் தொல்லைப்பட்டனர். பல்கலைக் கழக வளாகத்திலேயே தங்குவதற்குப் உணவுக்கும் ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார் துணைவேந்தர் டாக்டர் சுகந்நாத ரெட்டி. பல்கலைக் கழக வளாகத்தில் ஆசிரியர் குடியிருப்பை யொட்டி ஒரு விருந்தினர் மாளிகையை எழுப்பினார். குளியலறை கழிப்பறைகளுடன் அமைந்த தங்கும் அறைகள், குளிர்சாதனமுள்ள சில அறைகள், பலர் சேர்ந்தாற் போல் அமர்வதற்கு இருக்கை

வசதியுள்ள இரண்டு அறைகள், விருந்துகள் நடைபெறு வதற்கேற்ற உண்ணும்அறை-இத்தகைய வசதிகள் உள்ளது. இந்த விருந்தினர் இல்லம் கட்டுவித்ததுடன், ஒவ்வொரு சிறு விவரங்களிலும் தம் கவனத்தைக் கொண்டு செலுத் தியதுதான் பலருடைய பாராட்டுக்கு உரியவரானார்.

(4) ஆய்வுக் கூடங்கள் : பொறியியல் படிப்பு ஏட்டுச் சுரைக்காய் அன்று. மாணவர்கள் எண்ணிக்கை பெருகிய தாலும், புதிய துறைகளை ஏற்படுத்தியதாலும் ஆய்வுக் கூடங்கள் தேவைப்பட்டன. இவற்றின் இன்றியமை யாமையை உணர்ந்த துணைவேந்தர் வெகு விரைவில் இரண்டு மூன்று ஆய்வுக் கூடங்களை எழுப்பித் தேவை யான வசதிகள் கிடைக்கச் செய்தார்.

(5) ஆசிரியர்கள் குடியிருப்பிற்கான பல்வேறு நிலை ஆசிரியர்களுக்கேற்ற வீடுகள் அடங்கிய பிரகாசம் நகர் இவர் காலத்தில்தான் தோன்றியது. அஃது இன்று விரிவாகிக் கொண்டே வருகின்றது. பத்தாண்டுகள் இப்பல்கலைக் கழகத்தில் அநுபவம் பெற்றுள்ள ஆசிரியர்க் கென்று விதிகளை வகுத்துக் கொண்டு இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப் பெற்றன. இந்த விதியின்கீழ் 10 ஆண்டுகள் அல்லலுற்ற அடியேனுக்கு ஓர் இல்லம் ஒதுக்கப்பெற்று அதில் ஏழாண்டுகள் தங்கியிருக்கும் பேறு பெற்றேன். வழக்கமாகச் செய்யும் வேலைகளை விட இரு மடங்கு செய்ய முடிந்தது. துறையிலும் இல்லத்திலும் ஆய்வு மாணவர்க்கான பணிமும்முரமாக நடைபெற இந்த வசதிகள் துணை செய்தன.

(6) பொறியியல் கல்லூரி—இரண்டாவது உணவு விடுதி : பொறியியல் கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போனதால் இன்னொரு விடுதி தேவைப்பட்டது. விரைந்து செயலாற்றி அதைத் தோற்று வித்தார். மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி

மாணவர்களின் வகுப்பு முற்பகல் எட்டு மணிக்கே தொடங்குவதால், விடுதி இவர்கட்கு மிகவும் இன்றியமை யாதது என்பதை அவர்கள் பணியை நேரில் அறிந்தவர்கள் தாம் அவர்களின் தேவையை உணர முடியும்.

இங்ஙனம் டாக்டர் சகந்நாத ரெட்டியின் காலத்தில் பன்முக விரிவு வசதிகளைப் பெற்ற பல்கலைக் கழகம் அரசியல் வாதிகளின் தலையீட்டினால் சீரழிந்து வரு கின்றது. இவற்றையெல்லாம் நோக்கிக் கொண்டு கண்மூடி மௌனியாக இருக்கும் ஏழுமலையான்தான் அரசியல்வாதி களின் குறுக்கீடு பல்கலைக் கழகத்தில் இல்லாமல் செய்தல் வேண்டும். அவன் திருவுள்ளத்தில் இருப்பதை நம் போலியர் அறியக் கூடுமா, என்ன? இந்த வளர்ச்சிகளை யெல்லாம் நேரில் கண்டவனாதலால் அடியேனின் நினைவுக் குமிழிகளில் இவை இடம் பெறுகின்றன.

முதல் துணைவேந்தர் கட்டடங்களை நிர்மாணம் செய்வதில் 'விசுவகர்மா' என்று கூறினால், மூன்றாவது துணைவேந்தரை 'மயன்' என்று சொல்லலாம். இவர்கள் இருவரும் பல்கலைக் கழக வளர்ச்சியையே தம் மூச்சாவும் பேச்சாகவும் கொண்டு பணியாற்றினர்என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

# 50. இராமகிருஷ்ணன் மருத்துவக் கல்லூரியில் சேர்வதில்

**PUC** தேர்வு முடிவுகள் வெளிப்படுவதற்கு முன்பே மருத்துவக் கல்லூரி சேர்வது பற்றிய விளம்பரம். வந்தது. மருத்துவத்துறை இயக்குநருக்கு எழுதி விண்ணப்ப பாரம், விவரங்கள் தருவித்தேன். முதலில் சேர்வதற்குத் தகுதி உள்ளதா என்பதைச் சோதித்ததில் 'உறைவிடம்' என்ற தலைப்பின்கீழ் உள்ள குறிப்பு இது: ''பத்து ஆண்டுகள் பையன் ஆந்திர மாநிலத்தில் தங்கிப் படித் திருக்க வேண்டும்—அல்லது—பையனின் பெற்றோர் இந்த மாநிலத்தில் அலுவல் பார்த்திருக்க வேண்டும்'' என்பது. அடுத்தது : ''பையன் PUCயில் 50% விழுக்காடுக்குக் குறை யாமல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்'' என்பது. பையன் நான்கு ஆண்டுகள்தான் திருப்பதியில் படித்தான். நான் 1.8.60 முதல் 31.7.70 வரை திருப்பதியில் வேலை பார்த்திருந்தேன்; தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக் கின்றேன். இவற்றால் பையன் சேர்வதற்குத் தகுதி வந்து விடுகிறது.

பொதுவாக முன்னைய ஆண்டுகளில் விண்ணப்பங்கள் பெறும் இறுதிநாள் ஜூலை 15 என்றுதான் இருந்தது. இந்த ஆண்டு அரசு நுழைவுத் தேர்வுக்கு ஏற்பாடு செய்திருந்ததால் விண்ணப்பம் பெறும் இறுதிநாள் 15.8.70 என்றிருந்தது. அரசுத் தேர்வுக்கு ஏற்பாடு செய்யாமல் 15.7.70 என்று இறுதிநாள் குறிக்கப் பெற்றிருந்தால் பையனுக்கு மருத்துவக் கல்லூரியில் அந்த

ஆண்டு சேர்வதற்கு தகுதி இல்லாமல் போயிருக்கும். ஏழுமலையான் கருணை இல்லாதிருந்தால் இந்த நிலை உருவாகி இருக்க முடியாது என்பதை நினைந்து நினைந்து அவன் திருவருளைச் சிந்திக்கின்றேன். இருப்பிடம் பற்றிய சான்றிதழை வட்ட ஆட்சியாளர் தருவதற்குத் தகுதியில்லை என்றும், மாவட்ட ஆட்சியாளர் அல்லது துணை ஆட்சியாளர் (Collector or Sub—Collector) தான் வழங்க வேண்டும் என்றும் விதி இருந்தது. அப்போது துணை ஆட்சியாளர் அலுவலகம் திருப்பதி-சந்திரகிரி சாலையிலிருந்து சந்திரகிரிக்கு இப்பக்கமேபிரிந்து மதன பள்ளிக்குச் செல்லும் சாலையில் மூன்று கல் தொலைவில் இருந்தது

பல்கலைக் கழகக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் K. A. நீலகண்டத்திடமிருந்து நான் 10 ஆண்டுகள் அலுவல் பார்த்ததமைக்கு ஒரு சான்றிதழ் வாங்கி என் பையனிடம் தந்து, இருப்பிடம் பற்றிய சான்றிதழ் வழங்குமாறு பையனின் விண்ணப்பத்துடன் துணை ஆட்சியாளரிடம் அனுப்பினேன். அந்த நாள் இரண்டாம் சனிக்கிழமையாக அமைந்து விட்டது. பையன் பேருந்தில் சென்று பிரிவு சாலையில் இறங்கி 2 கல் தொலைவு நடந்து துணை ஆட்சியாளர் அலுவலகம் அடைந்தான். நல்ல வேளையாகத் தலைமை எழுத்தர் அலுவலகத்தில் இருந்தார். துணை ஆட்சியாளர் IAS; இளைஞர். IAS தேர்வில் வெற்றி பெற்று முதன் முதலாக இந்த ஊருக்கு அனுப்பப் பெற்றிருந்தவர். பெயர் சத்தியநாராயணன் என்பது. முதலில் பையன் தலைமை எழுத்தரைப் பார்த்து விண்ணப்பத்தை இணைப்புடன் தந்தான். தலைமை எழுத்தர் ''இன்று விடுமுறை; நாளை மறுநாள் திங்களன்று வருக'' என்று சொல்லி விட்டார். ''துணை ஆட்சியாளர் இருக்கின்றாரா?'' என்று பையன் வினவ, ''இருக்கின்றார்; அடுத்த அறையில் உள்ளார். சென்று பார்க்கலாம்'' என்று கூற, பையனும் அங்ஙனமே சென்று அவரைப் பார்த்துக் கேட்டான் சான்றிதழ் வழங்குமாறு.

சுறுசுறுப்புள்ள ஆட்சியாளர் பையனிடம் "தலைமை எழுத்தரை நான் அழைப்பதாகத் தகவல் தருக" என்று சொல்ல, பையனும் அவ்வாறே செய்ய, தலைமை எழுத்தர் துணை ஆட்சியாளரைப் பார்த்தார். "மிஸ்டர் ஹெட்கிளார்க், நீங்கள் இருக்கிறீர்கள்; நானும் இருக்கின்றேன். விடுமுறை என்று பாராது சான்றிதழ் வழங்குக; பையன் சுட்டிப் பயலாகக் காணப்படுகின்றான். இவனை அலைக்கழிப்பதால் நமக்குப் பயன் இல்லை, பையனுக்கும் பெரும் பயன்" என்று சொல்ல, தலைமை எழுத்தரும் சான்றிதழ் தயாரித்து துணை ஆட்சியாளரிடம் கையெழுத்து வாங்கினார்; தலைமை எழுத்தரும் துணை ஆட்சியாளர் முத்திரை இட்டு சான்றிதழைப் பையனிடம் தந்தார். இருவருக்கும் நன்றி தெரிவித்துவிட்டு பையன் பகல் 12 மணிக்குள் வீடு திரும்பினான்.

அனுப்ப வேண்டிய காலத்திற்குள் விண்ணப்பம் அனுப்பப் பெற்றது (எல்லா இணைப்புகளுடன்); விண்ணப்பமும் சேர வேண்டிய தேதிக்குள் சேர்ந்து விட்டது. ஒரு வாரத்தில் தேர்வு நாள் குறிப்பிட்டு, பாடத்திட்டத்துடன் மருத்துவ — இயக்குநரிடமிருந்து கடிதமும் வந்துவிட்டது. இந்த ஆண்டு மாணவாகள் சேர்வதில் தாமதம் ஏற்படும் என்றும், இடம் கிடைப்பதில் ஏதாவது தடை ஏற்பட்டால் பையனின் ஓராண்டுக் காலம் வீணாகும் என்று கருதி பையனைக் கலைக் கல்லூரியில் யில் பி.எஸ்சி. வகுப்பில் விலங்கியல் பிரிவில் சேர்த்து விட்டேன். ஒழுங்காகக் கல்லூரிக்குப் போய் வந்து கொண்டிருந்தான். பாடங்களையும் கருத்துடன் பயின்று வந்தான். அரசுத் தேர்வின் மாதிரி வினாத்தாளும் வந்தது. வினாக்கள் புறவய வகையாக (Objective type) அமைந்திருந்தன. இதற்காகப் பல இடங்களில் தனிப் பயிற்சிக்கல்லூரிகள் தோன்றி கொள்ளை இலாபம் அடிக்கத் தொடங்கி விட்டன, முதன் முதலாக குண்டூரில்

இத்தகைய ஒரு கல்லூரி தோன்றியுள்ளதாக வி
பார்த்தேன்; $1\frac{1}{2}$ மாதப் பயிற்சி என்றும்,
கட்டணம் என்றும் விளம்பரப்படுத்தப் பெற்றிரு
திருப்பதியிலிருந்து பல மாணவர்கள் அதில் (
பயிற்சி பெற்றனர்.

நான் பையனை அக்கல்லூரியில் சேர்க்க விரும்பவில்லை; நானே தேர்வுக்குப் பயிற்சி தரத் தொடங்கி விட்டேன். PUCக்கு உள்ள அறிவியல் பாடநூல்களையும் வேறு வினா-விடை நூல்களையும், அரசு அனுப்பிய பாடத்திட்டத்தையும் நன்கு ஆய்ந்து ஆயிரக்கணக்கான சிறுசிறு வினாக்களை உண்டாக்கி அவற்றிற்குரிய விடைகளையும் சிந்தித்து வைத்திருந்ததால் தேர்வு எழுதுவதற்கு எளிதாக இருந்தது. முதலாண்டு தேர்வு தொடங்குவதால் தனியாக வினாத்தாள்களும் தனியாக விடை ஏடுகளும் தரப்பெற்றிருந்தன; இதனால் வினாத் தாள்களை வெளியிற் கொணர வாய்ப்பிருந்தது. விடை ஏடுகளில் வினா எண்—அதன் பிரிவு எண் குறிப்பிட்டு விடை அளித்தால் போதும். பையன் வினாத் தாள்களைக் கொண்டு வந்த அப்பொழுதே விடையிறுக்க சொல்லிச் சரிபார்த்ததில் இயற்பியல்-வேதியியல் தாளில் 89% உம் உயிரியல் தாளில் 73% உம் கிடைக்கும் என்று அறுதியிட்டேன்.

அரசு தேர்வுக்கு ஏற்பாடு செய்தது முறைகேடானது என்று சொல்லி 153 மாணாக்கர்கள் ஐதரபாத் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தனர். 15 நாட்களில் அவை ஒரு தனி நீதிபதியால் தள்ளுபடி செய்யப் பெற்றன. எல்லா மாணவர்களும் வழக்கு மன்ற நடுவர் குழுவிற்கு ((Bench) மேல்வழக்கு (Appeal) தொடுத்தனர். ஒரு மாதத்தில் நடுவர் குழு ''பல்கலைக் கழகத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையும் அரசு நடத்திய தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையும்

கூட்டி, பிற்போக்கு மாணவர்கள், அரிசன மாணவர் கள், இவர்கட்கு ஒதுக்கீடு செய்யப் பெற்ற இடங்களை நீக்கி, கூட்டி வந்த மதிப்பெண் தொகை கட்கு நிலை (Rank) தயாரித்து முதல் இடம் உள்ளவரை நிரப்ப லாம்'' என்று முடிவு சொல்லியது. இதனால் நவம்பர்வரை மாணவர்கள் சேர முடியவில்லை. நடுவர் குழுவின் நீதி சரி இல்லை என்று அரசு கருதி தில்லி உச்சநீதி மன்றத்தில் மேல் வழக்கு தொடர்ந்தது, அந்த மன்றம் ஒரு திங்களில் வழக்கு விசாரிப்பதற்கு முன்னர் சொன்ன தீர்ப்பு இது; ''பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண், அரசுத் தேர்வில் பெற்ற மதிப்பெண் இவற்றைத் தனித் தனியாக வரிசைப்படுத்தி நிலையைக் (Rank) கணக்கிட்டு இரண்டு வரிசைகளிலும் ஒரே நிலை பெற்றவர்க்கு 1முதல் 405 வரை (80%விழுக்காடு இடங்கள் — 550 இடங்கள் இருந்தன) நிரப்ப வேண்டியது. மீதி 145 இடங்களை வழக்கின் தீர்ப்பு சொன்னபடி செய்யவேண்டியது'' என்று ஆணை பிறப்பித்தது. 405 இடங்கள் பெற்றவர்களின் பதிவு எண்கள் செய்தித் தாள்களில் வெளி வந்தன. இராமகிருஷ்ணனின் பதிவு எண் அவற்றுள் காணப் பெறவில்லை.

இஃது எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சியை நல்கியது. திருப்பதி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் V. இராமச்சந்திரராவ் தேர்வுக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்; அவரிடம் விண்ணப்பித்து அரசுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை வாங்கினோம். அவர் தந்தபடி இயற்பியலில் 89%உயிரியலில் 30% என்று இருந்தது. உயிர்யலில் 30%பெற்றதாகத் தந்தது தவறு என்பதை உறுதி செய்து கொண்டு பையனையும் கூட்டிக் கொண்டு ஐதரபாத் சென்றேன். ரிட்மனுக்களைச் சிறந்த முறையில் தந்து வெற்றி காண்பவர் திரு P. பாபுலுரெட்டி என்ற வழக்குரைஞர் என்பதாக அறிந்து அவரைக் கொண்டு வழக்கு தொடுப்பதாக முடிவு செய்தேன்.

ஒரு சனியன்று காலை 9 மணிக்கு ஐதராபாத் சென்று அடைந்தோம். நாம்பள்ளி இருப்பூர்தி நிலையத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்த மைசூர் உணவு விடுதியில் ஓர் அறை வாங்கிக் கொண்டு அதில் தங்கினோம். (இதில் தான் பின்னர் தோன்றிய ஐதராபாத் மத்திய பல்கலைக்கழகம் முதலில் தொடங்கப் பெற்றது). பழைய கட்டடங்கள் இடிக்கப் பெற்றுப் புதிய கட்டடம் இந்திரப்பிரஸ்தம்போல் காட்சி அளித்தது; இந்தக் காட்சியை 1977செப்டம்பரில் கண்டேன்). நீராடல் முதலிய பணிகளை முடித்துக் கொண்டு மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் சென்றோம். டாக்டர் ரமேஷ் பாய் என்பவர் (கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்; தமிழ், தெலுங்கு கன்னடம் நன்கு பேசுபவர்) இயக்குநர். ஆனால் தேர்வுப்பொறுப்பு துணை இயக்குநர் கையில் இருந்தது. அவர் ஊரில் இல்லை. டாக்டர் பாய் அவர்களைச் சந்தித்து பையன் எழுதிய விடைத் தாள்களையும் அவன் பெற்றுள்ள மதிப்பெண் களையும் அவை சரியாக மதிப்பெண் பட்டியில் (Master Roll) பதியப் பெற்றுள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும் என்று வேண்டினேன்.

அவர் பேச்சில் சதுரர். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழியை அறிவீர்கள். நீங்கள் உங்கள் பையனைப் பெரிதாக நினைத்துக்கேட் கின்றீர்கள். இப்படியே எல்லோரும் கேட்டால் எப்படிக் காட்டமுடியும்?" என்றார். "மாணவர்கட்காகத்தான் அரசு. மாணவர்கள் இல்லாவிட்டால் கல்லூரி இல்லை; மருத்துவ மனைகள் இல்லை. அதிகம் பேசுவானேன்? உங்கள் துறையும் இல்லை; அவர்கள் கேட்டால் தரவேண்டியது உங்கள் கடமை. பையனுக்கு நான் தகப்பன்; ஆசிரியனும் கூட, நான் சொல்லிக் கொடுத்து இத்தேர்வை எழுதினவன். இயற்பியல்—வேதியியலில் 89% வாங்கியுள்ளான்; உயிரியலில் 73%வந்திருக்க வேண்டும்.

30%தான் போடப் பெற்றுள்ளது. இதில் எங்கோ தவறு நடந்துள்ளது. நீங்கள் பல்கலைக் கழகத்தை ஐயுற்றுத் தேர்வு நடத்தினீர்கள். இப்போது பொதுமக்கள் அரசை ஐயுறுகின்றார்கள். அங்கும் மனிதர்கள்; ,'இங்கும் மனிதர்கள். மனிதர்கள் தவறு செய்கின்றவர்கள்.'' என்றேன் நன்றாகப் பேசுகின்றீர்கள். துணை இயக்குநர் பொறுப்பில் தேர்வுகள் நடைபெற்றன. அவர் விடுப்பில் உள்ளார். ஆகவே காட்டுவதற்கில்லை. அவர் இருந்தாலும் இதையே தான் சொல்லுவார்'' என்றார். ''நீங்கள் தேர்வு வைத்த தால் வழக்குகள் ஏற்பட்டு ஆறு மாதம் தள்ளிப்போய் விட்டது மாணவர்களைச் சேர்ப்பதில், தாளுக்கு ரூ. 200/- வீதம் கட்டச் சொல்லி 10 அலுவலர்களை நியமித்து மதிப் பெண்கள் விடையேடுகள் இவற்றைப் பார்க்க ஏற்பாடு செய்யலாம். மதிப்பெண் சரியாக இல்லாவிட்டால் பணம் போய்விடும். அது சரியாக இருந்தால் பணம் வாப்ஸ்என்ற திட்டம் இருக்கலாம். எல்லோரும் வந்து கேட்பார்கள் என்றீர்கள். அது வெறும் கற்பனை'' என்றேன். ''மேலும் இஃதுஎன்ன மாமியார்—மருமகள், கதைபோலிருக்கிறது?'' என்றேன். இயக்குநர் நல்ல மன நிலையில் வேலை நெருக் கடியின்றி உட்கார்ந்திருந்தார். ''அந்தக் கதை என்ன?'' என்றார்; புதிதாக மருமகள் ஒருத்தி, தாராள மனப்பான்மை இல்லாதவள். பிச்சைக்காரன், ஒருவன் வந்து பிச்சைக்கேட்டான். ''ஒன்றும் இல்லை போ போ'' என்று சொல்லி விரட்டி விட்டாள். தோட்டத்திலிருந்த மருமகள், வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த மாமியார் இதைப் பார்த்தாள். அவள் 'ஏ பிச்சைக்காரா?இங்கு வா' என்று அழைத்தாள். பிச்சைக்காரனும் ஏதோ கிடைக்கும் என்று ஆவலாக வந்தான். மாமியார் ''நேற்று வந்தவ ளுக்கு 'இல்லை' என்று சொல்வதற்கு என்ன அதிகாரம்? இப்போது நான் 'இல்லை' என்று சொல்கிறேன்; போ' என்றாள் என்பது கதை'' என்றேன். இயக்குநர் சிரித்தே விட்டார். ''மதிப்பெண்கள், மாணவர் விடையேடுகள் இவற்றைச் சோதிக்காமல் விடப்போவதில்லை. வேறு

முறையில் முயல்வேன். இதுகாறும் அன்பாகப் பேசி 'இல்லை' என்று சொன்னதற்கு நன்றி'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டேன்.

நேராக பர்கத்புரா (ஐதரபாத்தில் ஒரு பகுதி) வந்து திரு.P.பாபுலு ரெட்டியைப் (வழக்குரைஞர்) பார்த்து விவரம் தெரிவித்து ரிட் விண்ணம் போடவேண்டும் என்றேன். அவரும் ஒப்புக் கொண்டு மறுநாள் (ஞாயிறு) காலை 8 மணிக்கு வருமாறு பணித்தார். இரவு 8 மணிக்கு அறைக்குத் திரும்பினோம். சிற்றுண்டி உண்டு ஓய்வு கொண்டோம். மறுநாள் காலை நீராட்டம் சிற்றுண்டி இவற்றை முடித்துக் கொண்டு பர்கத்புரா வந்து வழக்குரைஞர் இல்லத்திற்கு வந்து சேர்ந்தோம். வழக்கு ரைஞர் இந்து நாளேட்டைப் படித்துக் கொண்டிருந்தார். 8 மணியிலிருந்து 10 மணிவரை 'வேத பாராயணம் பண்ணு வதுபோல்' செய்தித் தாளில் ஆழ்ந்து கிடந்தார். 'இது தான் பற்றற்ற நிலையில் ஓய்வு கொள்ளுவது போலும்!' என்று நினைத்துக்கொண்டேன். 9 மணிக்குச் சேட் ஒருவர் வந்தார். ஒரு பழைய அழுக்கேறியிருந்த ஒரு கித்தான் பையைத் தந்து 'இதில் 10 ஆயிரம் உள்ளது' என்று சொன்னார். அதில் 100, 50, 10, 5 ரூபாய் நோட்டுகள் கற்றைக் கற்றையாய்க் கிடந்தன. அவற்றை எண்ணாமல் பெரிய மேசையின் கீழ் உள்ள பெரிய உள்அறையில்ஒன்றில் அப்படியே கொட்டிக் கொண்டு பையைத் திருப்பித் தந்தார். அப்போது வழக்குரைஞர் ஏதோ வேலையாக வீட்டுக்குள் சென்றார். அப்போது 'என்னவழக்கு?' என்று சேட்டைக்கேட்டேன். அவர் ''ஓர்இடவிஷயமானதகராறு. ரிட்போடுவதற்கு ஃபீஸ் இது'' என்று சொல்லிய துடன் நில்லாது, எங்கள் போன்ற வியாபாரிகட்கு ஒரு ரிட் மனுவுக்கு 10 ஆயிரம் ஃபீஸ்; உத்தியோகஸ்தர் கட்கு இரண்டாயிரம்; மாணவர்கட்கு ஆயிரம். ஆனால், ஃபீஸ் அதிகமானாலும் வழக்கு வெற்றியாகும். வக்கீல் கோடீஸ்வரன். இந்த வீட்டையே இரண்டு இலட்சத்திற்கு வாங்கி விட்டார்; இப்போது 20 இலட்சம் பெறும். ஏராளமான பெரிய பெரிய

காலியிடங்களை மலிவாக முஸ்லீம்களிடம்வாங்கிச் சிறுசிறு பகுதிகளாக மனைகளாகப் பிரித்து கிராக்கியாகவிற்றுக் கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்துள்ளார், வக்கீல் தொழிலில் மாதம் ஐம்பதாயிரத்திற்குக் குறையாமல் வருமானம் வரும்'' என்றார், ' நீங்கள் வந்த விஷயம்?'' என்று கேட்க, நான் ''மருத்துவக் கல்லூரியில் சேரும் விஷயமாக ஒரு ரிட் போட'' என்றேன். ''உங்கட்கு வெற்றி உறுதி'' என்றார். சேட், இதற்குள் உள்ளே சென்றிருந்த வழக்குரைஞர் வந்துவிட்டதால் எங்கள் உரையாடலை நிறுத்திக் கொண்டோம்.

'எங்கள் விஷயத்தைக் கவனிக்க வேண்டும்' என்றேன். ''பேராசிரியர் அவர்களே, உங்கட்கு இதுபெரியது. எனக்கு இது என்மேல் உட்காரும் கொசுவைத்தட்டி விடுகிற மாதிரி, உதவி வக்கீல்கள் 10 மணிக்கு வருவார்கள், ஒரு மணி நேரத்தில் முடித்து அனுப்பிவிடுகின்றேன் ' என்றார். மணி 10 அடித்தது. ஒரு வக்கீல் வந்தார். விண்ணப்பம் தயாராயிற்று. 9, 10, வகுப்பிலும், மெட்ரிக், P.U.C யில் வாங்கின மதிப் பெண்களையும் 4 படிகள் தயாரித்து வைத்திருந்தேன். அவற்றில் இரண்டு படிகளைத் தந்தேன். ஒருபடியை விண்ணப்பத்துடன் இணைப்பாகச் சேர்த்துக் கொள்ளுமாறு உதவிவக்கீலிடம்சொன்னார். விண்ணப்பத்தின்வேண்டுகோளில் (1) இந்த விண்ணப்பத்தின் முடிவு தெரியும் வரையில் திருப்பதி மருத்துவக் கல்லூரியில் ஓர் இடம் நிரப்பப் பெறாமல் வைத்திருக்க வேண்டும். (2) பையன் எழுதிய விடை ஏடுகள் மூல மதிப்பெண் பதிவேடு, வினாத் தாள்களின் விடை (Key) நீதிமன்றத்திற்கு அரசு கொண்டு வரவேண்டும் என்று சேர்க்குமாறு கேட்டுக் கொண்டேன். அங்ஙனமே இவை சேர்க்கப் பெற்றன. ரூ250/ செலவுக்கு வேண்டும் என்றார். தந்தேன். ஃபீஸ் 1000/ என்றார். ரூ750/ தந்து மீதியை ஒருவாரத்தில் தருவதாகச் சொன்னேன்; ஒப்புக் கொண்டார்.

நான் ரிட்மனு தாக்கல் செய்தது கிறிஸ்துமஸ் விடுமுறையில்; நீதிமன்றமும் விடுமுறை; திங்களன்று தாக்கல் செய்யப் பெற்றது. செவ்வாயன்று (மறுநாள்) வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது. வழக்குரைஞர் 10 மணித் துளிகள்தாம் பேசினார்; வழக்கை மிக அற்புதமாக எடுத்துரைத்தார். உடனே நீதிபதி திருப்பதி மருத்துவக் கல்லூரியில் ஓர் இடத்தை நிரப்பாது வைத்திருக்க வேண்டும் என்று ஆணைபிறப்பித்தார். ஒருவாரத்திற்குள் அதில் மதிப்பெண் பதிவேடு, பையன் எழுதிய விடை ஏடுகள், வினாத்தாள்கள் (ஒருபடி), தேர்வாளர் தயாரித்த விடை (Key) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மருத்துவத் துறை இயக்குநருக்கு ஆணை போயிற்று. எங்கட்கு ஆணையின் முதற்படி தரப்பெற்றது. நான் பையனைக் கூட்டிக் கொண்டு அறை வந்து சேர்ந்தேன். அன்று ஓய்வு. மறுநாள் காலை சிற்றுண்டிக்குப்பின் கோல்கொண்டா கோட்டையைப் பார்க்கச் சென்றோம். பாமினி சுல்தான்கள் இங்குத் தங்கிக் கொண்டு விசயநகரப் பேரரசுடன் மோதிக் கொண்டான் என்பதைப் பையன் நினைவுகூர்ந்தான், இராமதாசு என்ற பக்தரின் பசனைக் கூட்டத்தைக் கண்டு இஃது ஓர் உள்நாட்டுக் கலகத்தைத் தூண்டிவிடக்கூடும் என்று அஞ்சி அவரைக் கோட்டைக்குள் சிறைவைத்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து கொண்டேஅவர் வைக்கப் பெற்றிருந்த சிறைச் சாலையைக் கண்டோம். அவருக்கு மேலிருந்து உணவு போடப் பெற்ற துவாரத்தையும் பார்த்தோம். கோட்டையைச் சுற்றிப் பார்த்தபிறகு பகல் ஒரு மணிக்கு அறை வந்து சேர்ந்தோம். பிற்பகல் ஓய்வு கொள்ளாமல் உஸ்மானியா பல்கலைக் கழகம் சென்று சுற்றிப் பார்த்துத் திரும்பினோம்; அறைக்குப் பக்கத்திலுள்ள 'அபிட்ஸ்' கடைத்தெருவைச் சுற்றினோம்; திரும்பினோம். மறுநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு நேரு பூங்காவிற்குச் சென்று வந்தோம். இது எங்கட்கு நல்ல காட்சி விருந்து; 12 மணிக்கு அறைக்கு வந்து உணவு

கொண்டு, ஓய்வு கொள்ளாது அருங்காட்சியகம் (Museum) சென்று சுற்றிப் பார்த்தோம். இதுவும் எங்கள் கண்களுக்கு நல்ல விருந்தாக அமைந்தது. மாலை 5 மணிக்குக் காட்சியகம் மூடப்படும். வெளியில் வரும் வாசல் அருகில் 5 மணிக்கு ஒரு பொம்மை வந்து மணி யடிப்பதைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் சார்மினார் சென்று, அங்குள்ள கடைத் தெருவைச் சுற்றிப் பார்த்து விட்டு அறைக்குத் திரும்பினோம்.

மறுநாள் ஓய்வாக அறையில் தங்கியிருந்தோம். நாம்-பள்ளி நிலையத்தில் அன்றைய பயணத்திற்குப் படுக்கை வசதிக்கு ஒதுக்கீடு செய்திருந்தோம். மாலையிலேயே இரவு உணவை முடித்துக் கொண்டு திருப்பதி திரும்பினோம். திருப்பதி திரும்பிய ஒன்றிரண்டு நாட்களில் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளுமாறு மருத்துவஇயக்குநரிட மிருநது கடிதம் வந்துவிட்டது. வழக்குரைஞரிடமிருந்தும் கடிதம் வந்தது. அதில் அசல் மதிப்பெண் பதிவேட்டில் இயற்பியல்—வேதியியலில் 89% உம், உயிரியலில் 73% உம். இருந்ததாகவும் ஆந்திர மாநிலத்தில் அரசுத் தேர்வில் முதலாவதாகத் தேறியுள்ளதாகவும் குறிப்பிடப்பெற்றிருந்தது. செலவுத் தொகைக்கு அரசுமீது வழக்கு தொடுக்குமாறு வழக்குரைஞருக்கு எழுதினேன். "அது வேண்டா; எவ்வளவு செலவாகியிருந்தாலும் ரூ250/- தான் கிடைக்கும். அவ்வழியில் போக வேண்டா. எனக்குத் தர வேண்டிய ரூ 250/- ஐத் தர வேண்டா" என்று பதில் எழுதினார் வழக்குரைஞர்.

டாக்டர் V. இராமச்சந்திரராவ் மருத்துவக் கல்லூரி யின் முதல்வர்; திருவேங்கடவன் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர். இவரை நான் நன்கு அறிவேன். ஆதலால் பையன் கல்லூரியில் சேர்ந்த அன்று நானும் கல்லூரி சென்று வந்தேன். "மாநிலத்தில் முதல் மாணவனாகத் தேறியும் (அரசுத் தேர்வில்) உனக்கு இடம் கிடைக்காமற்

போனது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். ரிட் வழக்கு போட்டதால் உனக்குக் இடம் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் இன்னும் ஆறு திங்களில் ஓய்வு பெற்று எங்கோ இருப்பேன். நீ நன்றாகப் படித்து மாநிலத்தில் முதல் மாணவனாக வரவேண்டும் என ஆசி கூறுகின்றேன். நன்றாக படி. இதுதான் நின் தந்தைக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடன்'' என்று கூறி விடை கொடுத்தார். அவர் ஆசி கூறியபடியே பையனும் மிக்க ஊக்கத்துடன் பயின்று ஐந்தாண்டுகளிலும் எல்லாத் தாள் களிலும் முதல் மதிப்பெண் பெற்றுத் தேர்ந்தான்; இதனால் கல்லூரியிலும் முதல் மாணவன்; பல்கலைக் கழகத்திலும் முதல் மாணவன்.

இவன் மூன்றாவது ஆண்டு தேர்வு எழுதும்போது ஒருநாள் அதிகமாகக் கண்விழித்துப் படித்தான். அன்று தேர்வு நன்றாக எழுதி விட்டான். மாலையிலும் இரவிலும் நீராக வாந்தி எடுத்தான்; உடலின் வெப்பம் மிக அதிக மாகி கவலைக்கிடமாக்கியது. நன்றாக உறங்கும்படி செய்தேன். கண் விழித்துப் படிக்க வேண்டா என்று சொன்னேன். அடுத்த நாள் அதிகாலையில் எழுந்தான்; உடலுக்கு ஒன்றும் இல்லை. மேலோட்டமாக அன்றைய தேர்வுக்கு ஏதோ படித்தான். மிதி வண்டியில் தேர்வுக்கு அனுப்ப மனம் வரவில்லை. மிதிவண்டி ரிக்ஷாவில் ஆய்வு மாணவர் ஒருவரையும் சேர்த்துத் துணைக்கு அனுப்பினேன்; இதன் பிறகு எழுத வேண்டிய தேர்வு கட்கும் ஆய்வு மாணவர் துணையுடனேயே சென்றுவர ஏற்பாடு செய்தேன். தெய்வாதீனமாக அந்த ஆண்டு எல்லாத் தேர்வுகளையும் நன்றாக எழுதித் தேர்ந்தான்.

மருத்துவக் கல்லூரியில் பயின்றபோது முதல் இரண்டு ஆண்டுகள் பையனைச் சிறிது கவனித்தேன். இந்தக் கவனம் கூட தேவை இல்லை. பையனே நன்றாகப் படித்துக் கொண்டதை அறிந்தேன். உடற்கூற்றியல்

(Anatomay) தேர்வு மிகவும் கடினம் என்று சொல்வார்கள். பெரும்பாலோர் இதில் தோல்வியடைவது கண்கூடு. இதிலும் கூட முதல் மதிப்பெண் பெற்றுத் தேர்ந்துவிட்டான். மருத்துவப் பாடங்கள் பயின்ற போது "மருத்துவத்தில் ரேடியோ ஐஸோடோப்புகள்" (Appication of isotopes in Medicine) என்ற தலைப்பில் கட்டுரையொன்று நான் எழுதி தந்திருந்தேன். அணுவைப் பற்றிப் பல்லாண்டுகள் காரைக்குடியில் பயின்றபோது பெற்ற அறிவின் பயன் இது. இந்த வினா நான் எதிர்பார்த்தது போலவே தேர்விலும் வந்தது. மிக நன்றாக எழுதி அந்தத் தாளிலும் முதல் மதிப்பெண் பெற்றதை இன்றும் நினைவுகூர்ந்து மகிழ்கின்றேன். திருப்பதியிலே ஓராண்டு House surgeon பயிற்சியும் பெற்றான். 1977 அக்டோபரில் நான் ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டதால் M.D யைச் சென்னையில் பயில ஏற்பாடு செய்வதில் முயன்றேன். அதை அடுத்த குமிழியில் வெளிப்படுத்துவேன்.

குமிழி—207

## 51. தமிழ்த் துறைப் பணியாளர் நியமனத் தொடக்கம்

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை, மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்புஅரிய ஆர்அமுதை அரங்கம் மேய
அந்தணனை அந்தணர்தம் சிந்தை யானை
விளக்கொளியை மரகதத்தை திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே[1].

1. திருநெடுந்தாண்டகம்-14

என்ற திருமங்கையாழ்வார் பாசுரச் சிந்தனையுடன் இக் குமிழி வெளி வருகின்றது. இங்குத் தமிழ்த்துறை தொடங்கப் பெற வேண்டும் என்று (1960-61)இல் முகிழ்த்த என் எண்ணம் (1970-71)இல் பழமாயிற்று. 1969-அக்டோபரில் தமிழக மானியம் கிடைத்ததால், (1969-70)இல் தமிழ் எம்.ஏ, வகுப்பு தொடங்க முடியாத நிலை உண்டாகி விட்டது. எனவே, (1970-71) முதல் எம்.ஏ.வகுப்பு செயற்படத் தொடங்கியது. ஆறு மாணாக்கர்கள் சேர்ந்தனர். 1960-ஆகஸ்டில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களால் போடப்பட்ட தமிழ் விதை முளைத்தாலும் விரைவாக வளர முடியாத நிலை— ஒரு பெரிய தேக்கம்—ஏற்பட்டு விட்டது. ஒரு பத்தாண்டுகள் இரண்டு இலைக்குமேல் விடவில்லை தமிழ்விதை.

தமிழ்த் துறைக்குப் பேராசிரியர்—1, துணைப் பேராசிரியர்-1, விரிவுரையாளர்-1 தேவை என்று விளம்பரம் செய்யப் பெற்றது. பேராசிரியர் பதவிக்கு (1) பத்தாண்டுகள் எம்.ஏ. வகுப்பு பயிற்றியதன் அநுபவம், (2) டாக்டர் (Ph. D.) பட்டம் பெற்றிருக்க வேண்டும், (3) டாக்டர் பட்டம்பெறவிழையும் மாணாக்கர்கட்கு வழிகாட்டும் அநுபவம் வேண்டும் என்றும்; துணைப் பேராசிரியருக்கு (1) 5 ஆண்டுகள் எம்.ஏ. வகுப்பு பயிற்றிய அநுபவம், (2) டாக்டர் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்ற அநுபவம், (3) டாக்டர் பட்டம் பெறுவோருக்கு வழிகாட்டிய அநுபவம் வேண்டும், (இருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம்) என்றும்; பேராசிரியர், துணைப் பேராசிரியர், விரிவுரையாளர் இப்பதவிக்கு எம்.ஏ., முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் தேறியிருக்க வேண்டும் என்றும் தகுதிகள் விளம்பரத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தன. இந்த விளம்பரத்திற்கு மூன்றே விண்ணப்பங்கள் வந்திருந்தன. இவற்றைப்பற்றிப் பின்னர் விளக்குவேன்.

துணைவேந்தர் டாக்டர் டி. சகந்நாத ரெட்டி இருப்பூர்தி வண்டி தண்டவாளத்தில் ஓடுவதுபோல் சட்டத்தின்படி நடப்பவராதலால் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர்கட்குக் கடிதம் எழுதி தக்கவர் ஒருவரைப் பேராசிரியர் பதவிக்குப் பரிந்துரைக்குமாறு கேட்டிருந்தார். அந்தக் காலத்தில் (1970) நான் அறிந்தவரை டாக்டர்பட்டம்பெற்றவர்கள் நால்வரேஇருந்தனர். ஒருவர் டாக்டர் மு. வரதராசன். இவர் பல்லாண்டுகள் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் எம்; ஏ. மாணாக்கர்கட்குப் பயிற்றின அநுபவம் பெற்றிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியேற்ற பிறகு (1962 என்பதாக நினைவு) சிலருக்கு பிஎச். டி பட்டத்திற்கு வழி காட்டிய அநுபவமும் அவர் பெற்றிருந்தார். யாரோ ஓர் ஆராய்ச்சி மாணவர் (திரு நாகு என நினைக்கின்றேன்) டாக்டர் பட்டமும் பெற்றிருந்ததாக நினைவு. திரு மொ. அ. துரை அரங்கசாமிக்கும் டாக்டர் பட்டம் இருந்தது. இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியபோது டாக்டர் பட்டத்திற்கு ஆய்ந்து பட்டம் பெற்றவர். இதற்குமுன் இவர் சில ஆண்டுகள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். அப்போது அக்கல்லூரியில் தமிழ் எம். ஏ, வகுப்பு நடைபெற்றதாகத் தெரியவில்லை. மதுரைப் பல்கலைக்கழகம் தோன்றிய பின்னர், அங்குப் பேராசிரியர் பதவி பெற்று ஒரு சில ஆண்டுகளே பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தார். மூன்றாமவர் டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்லாண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி எம். ஏ. மாணவர்கட்கு பயிற்றிய அநுபவம் பெற்றவர். சென்னைச் சட்டமன்ற மேலவைக்கு ஆசிரியர் தொகுதியில் உறுப்பினர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றவர். இதனால் பல்கலைக் கழகத்தினருக்கும் இவருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையினால் பேராசிரியர் பதவியைத் துறந்தவர்.

அந்தச் சமயத்தில் (1958-59 என்பதாக நினைவு) சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பெற்ற ஆங்கில-தமிழ் அகராதிப் பணியில் தலைமைப் பதிப்பாசிரியராகச் சேர்ந்து பல்லாண்டுகள் சிறப்புடன் பணியாற்றித் திட்டத்தை வெற்றிபெறச் செய்தவர். பின்னர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நான்காமவர் கோவை பூ சா. கோ. கலைக் கல்லூரியில் பணியாற்றிய T. E. ஞானமூர்த்தி என்பார்.

திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை பற்றிய விளம்பரம் வந்தபோது பேராசிரியர் பதவிக்குத் தகுதியாக இருந்தவர்கள் நால்வரில் டாக்டர் ஏ. சி. செட்டியார் திருநாடு அலங்கரித்து விட்டார். டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். இவருக்குப் பத்தாண்டுகள் எம். ஏ. மாணவர் கட்குக் கற்பித்த அநுபவம் இருந்ததா என்பது ஐயமே. அங்ஙனமே பிஎச். டி. பட்ட மாணாக்கர்கட்கு வழிகாட்டிய அநுபவம் இருந்ததா என்பதும் ஐயமே. ஆனால் எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தவர் டாக்டர் மு வரதராசன் ஒருவரே. அப்போது அவர் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

துணைவேந்தர் டாக்டர் ரெட்டி எழுதிய கடிதங்கட்கு மூன்று துணைவேந்தர்களிடமிருந்து வந்த மறுமொழி பற்றியும் குறிப்பிடுகிறேன். (1) முதலில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் டாக்டர் ஆதி நாராயணா தந்த மறுமொழி: ''இந்தப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் அ. சிதம்பர நாதனைத்தவிர பேராசிரியர்கள் ஒருவருக்குமே டாக்டர் பட்டம் இல்லை. டாக்டர் செட்டியார் அவர்களும் அண்மையில் மறைந்து விட்டார். இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை மூலம் பிஎச். டி பட்டம் பெற்றவர்கள் ஒருவருமே இலர்.'' என்று எழுதி விட்டார், (2) சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதியது : "இப்பல்கலைக் கழகத்தில் எம். ஏ. வகுப்புகள் இல்லை; கற்பித்தலே இல்லை. தமிழ்த்துறையில் டாக்டர் மு. வரதராசனே பிஎச்.டி. பட்டம் பெற்ற பேராசிரியர். அவர்மூலம் யாரோ ஓர் ஆராய்ச்சி மாணாக்கர் அண்மையில் பிஎச். டி. பட்டம் பெற்றதாக அறிகின்றேன். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மட்டிலும்தான் எம். ஏ. வகுப்பு நடைபெற்று வருகின்றது. அங்கு வித்துவான் பட்டம் பெற்றவர்கள்கூட எம்.ஏ. கற்பிக்க அநுமதிக்கப் பெற்றுள்ளனர். ஆகவே, தாங்கள் கருதுகிறபடி ஆட்களே இல்லை. அங்குள்ள டாக்டர் சுப்பு ரெட்டியார் பிஎச். டி. பட்டம் பெற்றவர்; தரமான பன்னூல்களைப் படைத்தவர். அவரை வைத்துக்கொண்டு காலத்தை ஓட்ட வேண்டியதுதான்" என்று மறுமொழி தந்து விட்டார். (3) மதுரைப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் திரு. தெ பொ. மீனாட்சிசுந்தரனார் எழுதியது : "டாக்டர் மொ. அ. துரைஅரங்கனார், டாக்டர் T. E. ஞானமூர்த்தி, அ. ச. ஞான சம்பந்தம், டாக்டர் ஆறுமுகனார் என்ற நானகு பெயர்களைக் குறிப்பிட்டு இவர்கள் தகுதியானவர்கள்" என்று எழுதி விட்டார். இத்துடன் இவர் நிற்கவில்லை. டாக்டர் T. E. ஞானமூர்த்தியையும் டாக்டர் ஆறுமுகனாரையும் விண்ணப்பிக்குமாறும் தூண்டிவிட்டார். ஏனைய இருவர்களிடம் என்ன சொன்னார்? அவர்கள் மறுமொழி தந்ததென்ன? என்பது அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம். திரு. கு. தாமோதரனுக்குச் சொல்லி விண்ணப்பம் போட வைத்தார் என்று பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் ஊகிக்க முடிகின்றது.

துணைவேந்தர் டாக்டர். டி. சகந்நாதரெட்டி விதிவரம்புகளிலேயே நிற்பவர். நேர்மையானவர்; மறைமுகமாகவோ வஞ்சகமாகவோ ஒன்றும் செய்யார். ஒருநாள் என்னை அவருடைய அறைக்கு வருமாறு சொல்லியனுப்பியிருந்தார். திரு தெ. பொ. மீ. அவர்கள் எழுதிய கடிதத்தை என்முன் வைத்து அதில் குறிப்பிடப் பெற்றி

ருந்த நால்வர்களைப் பற்றியும் விவரங்கள் கேட்டார். நான் இவர்களைப் பற்றித் தெரிவித்தவை : "(1) டாக்டர் மொ: அ. துரை அரங்கசாமி. இவர் டாக்டர் பட்டம் பெற்றவர். ஓராண்டு பச்சையப்பன் கல்லூரியில் கற்பித்த தாக நினைவு; எம். ஏ. வகுப்புக்குக் கற்பித்திருத்தல் கூடும். மதுரைத் தியாகராயர் கல்லூரியில் ஒருசில ஆண்டுகள் பணியாற்றியவர். அப்போது அங்கு தமிழ் எம். ஏ. வகுப்பு தொடங்கப் பெற்றிருந்ததா என்பது நினைவில் இல்லை; தொடங்கப் பெறவில்லை என்பதுதான் நினைவு. சில ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியவர் (துணைப் பேராசிரியாக); இங்கு எம். ஏ. வகுப்பு இல்லை. அப்போதுதான் அவர் பி. எச். டி. பட்டம் பெற்றார். பின்னர் மதுரைப் பல்கலைக் கழகம் தொடங்கப் பெற்றபோது அங்குச் சில ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மதுரையில் சில ஆண்டுகள் எம். ஏ. கற்பித்திருக்கலாம். இவரிடம் ஆய்வு மாணாக்கர்கள் பதிவு செய்து கொண்டார்களா என்பது அறியக்கூட வில்லை. இவர்மூலம் ஒருவரும் பி. எச். டி. பட்டம் பெறவில்லை என்பது மட்டிலும் உறுதி. ஓய்வு பெற்ற வர்களும் விண்ணப்பிக்கலாம் என்று விளம்பரத்தில் குறிப்பிடப் பெறவில்லை. (2) டாக்டர் T. E. ஞானமூர்த்தி; இவர் கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரியில் பணியாற்றுபவர். இவர் ஓய்வு பெறுவதற்கு ஆறு திங்கள் தான் உள்ளன. அக்கல்லூரியில் ஓராண்டு விட்டு ஓராண்டு தான் தமிழ் எம். ஏ. வகுப்புக்கு மாணாக்கர்களைச் சேர்க் கின்றனர். இவருக்கு எம் ஏ. கற்பித்த அநுபவம் ஆறு திங்களே. ஆய்வு மாணாக்கர்கட்கு வழிகாட்டிய அநுபவமே இல்லை. (3) அ. ச. ஞானசம்பந்தம்: இவர் பல்லாண்டுகள் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றியவர். பத்து ஆண்டு கள் எம். ஏ. வகுப்பு கற்பித்தாரா என்று சொல்ல முடியாது. ஆசிரியப் பணியை துறந்து சில ஆண்டுகள் சென்னை அனைத்திந்திய வானொலியிலும், சில ஆண்டு

கள் 'அரசு தமிழ் வெளியீடுகள் கழகத்தில்' செயலாளராகவும் பணியாற்றியவர். மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டாகப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர். இவருக்குப் பி எச். டி. பட்டமும் இல்லை; ஆய்வு மாணாக்கர்கட்கு வழிகாட்டிய அநுபவமும் இல்லை. இவ்வாறு கூறித் துணைவேந்தரிடம் விடைபெற்றேன். அவரும் எனக்கு "நன்றி" தெரிவித்தார். உள்ளத்தில் அழுக்கு இருந்திருந்தால் இக்கடிதங்களை எனக்குக் காட்டியிருக்கமாட்டார் என்பது என் கருத்து.

குமிழி—208

## 52. துணைப்பேராசிரியர் பதவிக்குப் பேட்டி

மன்னிய வேங்கடக் குன்றினில்
மேவும் மழைமுகிலே!
நின்னருள் யாண்டும் ததும்பிக்
கிடந்தும் நெறியறியேன்;
பன்னருந் துன்பினிற் சாலவும்
நொந்தேன்; படர்தடத்துத்
துன்னிய மீனின் சிறுநா
வறண்டு துவள்வுறுமே.[1]

மலையைக் குடைத்து எலியைப் பிடித்ததுபோலாயிற்று. எனக்குப் பேட்டிக்குக் கார்டு கிடைப்பதற்கே வேங்கடம் மேவியவிளக்கின் ஒளி—கருணை வெள்ளம்—இராவிட்டால் இதுவும் நழுவிப் போயிருக்கும். விளம்பரத்தின்படி பேட்டி நடைபெறுவதாகக் நாள் குறிப்பிடப் பெற்றுக் கடிதங்கள் அனுப்பப் பெற்றனவாகத் தகவல் எட்டியது, நீலம் சஞ்சீவரெட்டிபவனத்தில் வாழும் ஓர் ஊர்க் குருவி என்

1. இராமராசன் எஸ். கே: அலங்காரம் (திருமலையப்பன் மீது பாடிய நூல்)

செவியில் மெல்ல ஊதியது. கோவை பூ.ச. கோ. கலைக் கல்லூரியில் பணியாற்றிய டாக்டர். தா. இ. ஞான மூர்த்திக்கு மட்டிலும் பேட்டிக்குரிய கடிதம் அனுப்பப் பெற்றிருப்பதாகவும் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் இவர்கள் இருவரும் வல்லுநர் குழுவாக அமைந்ததையும் அறிந்தேன். பேராசிரியர் பதவி வழங்கப் பெறும்போது மூன்று பேராசிரியர்கள் குழுவில் இருக்க வேண்டும் என்பது விதி. இருவர் மட்டிலும் குழுவில் இருக்கும் ஏற்பாடு இருந்ததால் துணைவேந்தர் டாக்டர் சகந்நாதரெட்டி பேராசிரியர் பதவியை ஒருவருக்கும் தரப் போவதில்லை என்பது வெள்ளிடை விலங்கலாகத் தெள் பட்டது.

எனக்குப் பேட்டிக்குரிய கடிதம் வரவில்லை. மூன்று நான்கு நாட்களே இருந்தன. உடனே துணைவேந்தருக்கு ஒரு கடிதம் வைத்தேன்; நேரில் பேச வேண்டும் என அதில் குறிப்பிட்டிருந்தேன். இசைவு தரப் பெற்றது; நான் துணைவேந்தரைப் பார்க்கும்போது இருவரிடையே யும் நடைபெறும் உரையாடலைப் பதிவு செய்து கொள்வதற்கெனத் துணைவேந்தரின் சொந்த உதவியாளர் (Personal Assistant) குறிப்பேடும் எழுதுகோலும் கையில் வைத்துக் கொண்டு தயாராக இருந்தார். அவர் இளைஞர்; பெயர் குருநாதன் என்பது.

நான் : பேட்டிக்குக் கடிதம் எனக்கு அனுப்பப் பெறாத தன் காரணம் யாது?

துணைவேந்தர் : உங்கட்கு எம். ஏ. கற்பித்த அநுபவம் இல்லாததால், உங்கட்குப் பேட்டிக்குவருவதற்குத் தகுதி இல்லை என்று அலுவலகத்தில் உங்கள் விண்ணப்பம் புறக் கணிக்கப்பெற்றது; அதனால் நீங்கள் பேட்டிக்குரிய கடிதம் பெறவில்லை.

நான் : டாக்டர் ஞான மூர்த்திக்கு மட்டிலும் கடிதம் போயிருப்பதாக அறிகின்றேன். அவருக்கு ஆறுமாதம் தான் எம். ஏ. கற்பித்த அநுபவம் உண்டு; இன்னும் ஆறு திங்களில் ஓய்வு பெறப்போகின்றார். எந்த விதியின்கீழ் அவருக்குக் கடிதம் அனுப்பப் பெற்றது?

து. வே : (பேச நா. எழவில்லை). நான் தேர்வு ஆணையத் தலைவர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விளம்பரப்படித் தகுதி இல்லை. அலுவலகத்தார் உங்கள் விண்ணப்பத்தைத் தனியாகப் பிரித்து வைத்து விட்டனர். அதனால் கடிதம் அனுப்பப் பெறவில்லை. தவிர, டாக்டர் ஞானமூர்த்திக்கு அனுப்பப் பெற்றதற்குக் காரணம் அவரை ஓர் ஒப்பந்தப்படி நியமிக்கலாமா? அவர் அதற்கு ஒப்புக் கொள்கிறாரா? என்பதை அறிவதற்காகத்தான்.

(நேராகப்பேசுவதற்கு வகை தெரியாது பேச்சை வேறு விதமாகத் திருப்புகின்றார்).

நான். விளம்பரப்படித் தகுதியுள்ளவர்களைத்தான் நீங்கள் நியமிக்க வேண்டும். அப்படித் தகுதியுள்ளவர்கள் இப்போது (1970) எவரும் இல்லை. டாக்டர் ஞான மூர்த்தியை எந்த முறையிலும் ஒப்பந்தத்தில் நியமிப்பது அறமாகாது. இப்படித் தகுதியற்ற ஒருவரை வெளியிலிருந்து கொணரும் முயற்சி ஆண்டவனுக்கே அடுக்காது. பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஒருவரை (அதுவும் வெளியிலிருந்து கொணர்பவரைவிட அதிகமாகவே தகுதி பெற்றிருந்தும்)புறக்கணித்து விதி வரம்பிற்குப் புறம்பாகக் கொணர்வது அறமாகாது என்பதை நான் தங்கட்குக் கூறுவது மிகை.

து. வே : குருநாதன் கூட இப்போது பதிவாளராக விரும்புகின்றார். நான் அவரை நியமிக்க முடியுமா?

நான் : தாங்கள் கூறும் ஒப்புமை சரி இல்லை. வயதுக் குறை என்ற ஒன்றைத் தவிர அவருக்கு ஏனைய தகுதிகள் இருந்தால் அவருக்குப் பதிவாளர் பதவி தரவேண்டியது தானே.

உரைமுடிவு காணான்
　　இளமையோன் என்ற
நரைமுது மக்கள்
　　உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான்
　　சோழன்[2]

என்ற கரிகாற் பெருவளத்தான் வரலாற்றை நீங்கள் அறிந் திருப்பீர்கள். அந்தச் சோழன் நிலையில் இருப்பவர் இந்தக் குருநாதன். தவிர, இந்த மாதிரி 'நக்கல் பேச்சை' நான் விரும்பவில்லை. என்னையும் குருநாதத்தையும் ஒப்புமைப் படுத்திப் பேசுவது ஒருவித கிண்டல். தயவு செய்து இவ்விதக் கிண்டலை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள் என்பது என் பணிவான வேண்டுகோள்.

தேர்வு ஆணையத் தலைவராகக் கருதிக் கொள்ளச் சொன்னீர்கள். அதற்கு இசைகின்றேன். அப்படியானால் தேர்வு ஆணைய அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவனாக என்னைத் தாங்கள் கருதிக் கொள்ளவேண்டும் என்பது என் வேண்டுகோள். என்னைவிடத் தகுதியுள்ளவர்கள் வெளியிலும் இல்லை என்பதைத் தாங்கள் நன்கு உணர்ந் திருப்பீர்கள். நியமனக் குழுவிற்கு முன் என்னையும் பேட்டி காண வாய்ப்பு அளியுங்கள் என்பது என் பணிவான வேண்டுகோள். இந்த வேண்டுகோளையும் புறக்கணித்து குழுவைக் காண வகை செய்யாவிடில் ஆண்டவனிடம் தான் முறையிடவேண்டும். உங்களை நான் வந்து காண்பதைப் போல் ஆண்டவனை நான் சந்தித்துப் பேச முடியாது. அத்தகைய ஞானியின் பக்குவம் எனக்கு

2. பழமொழி—6.

ஏற்படவில்லை. ஆனால், அந்த ஆண்டவன் நிலையில் இருந்து கொண்டு நீதியை நிலை நாட்டும் ஐதரபாத் உயர்நீதிமன்றத்தின் முன்தான் நான் முறையிடவேண்டும். அந்த இறுதி நிலைக்கு என்னைத் தள்ள மாட்டீர்கள் எனக் கருதுகின்றேன். அந்த நீதி மன்றத்திற்குப் போகுமாறு அரசு என்னைத் தள்ளியது—என் மகன் மருத்துவக் கல்லூரியில் சேரும் விஷயத்தில். நீதி கிடைத்தது; என் மகனும் மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றான்.

இப்படி உணர்ச்சி வயப்பட்டு நான் பேசியதும், துணைவேந்தர் தொலைபேசியின் மூலம் பதிவாளரைக் கூப்பிட்டு "டாக்டர் ரெட்டியாருக்குப் பேட்டிக் கடிதம் கொடுங்கள்" என்றார். நான் துணைவேந்தரின் அறையை விட்டு வெளியேறுவதற்கு முன் பதிவாளர்த் திரு கே.எஸ்.எஸ். சுப்பராஜு கடிதத்துடன் துணைவேந்தர் அறைக்கே வந்து விட்டார். துணைவேந்தர் பார்வையிலேயே கடிதத்தை என்னிடம் தந்துவிட்டார். அறப்போரில் ஆண்டவன் அருளால் ஒரு பாதி வெற்றியாயிற்று. அடுத்த பாதி அறப்போரிலும் ஏழுமலையான் திருவருள் இருக்கும் என்றே நம்பித் துணைவேந்தரின் அறையை விட்டு மகிழ்வுடன் வெளியேறினேன்.

மூன்று நாட்கள் கழித்து பேட்டி நடைபெற்றது. மதுரையிலிருந்து துணைவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரமும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனும் தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இரு உறுப்பினர்கள் இருப்பதைக் கொண்டே பேராசிரியர் பதவி நிரப்பப் போவதில்லை என்ற பல்கலைக் கழகத்தின் கருத்து தெ. பொ. மீ.க்குப் புலப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர் விதிகளை மீறுவதையே மரபாகக் கொண்டவராயிற்றே. கோவையிலிருந்து டாக்டர் ஞானமூர்த்தியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து கு.தாமோதரனும் பேட்டிக்காக வந்திருந்தனர். முதலில் டாக்டர்

ஞானமூர்த்திக்குப் பேட்டி அளிக்கப் பெற்றது. அன்று அறையில் நடை பெற்றது அம்பலமாயிற்று. துணைவேந்தர் தெ.பொ.மீ. அவர்கள் எப்படியாவது டாக்டர் ஞானமூர்த்தியை ஓர் ஐந்தாண்டு ஒப்பந்தத்தில் பேராசிரியர் பதவியில் அமர்த்திவிடவேண்டும் என்று 'பகீரதப் பிரயத்தனம்' செய்ததாகவும், அதற்குத் துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டி சிறிதும் இணங்கவில்லை என்றும் தெரிந்தது. ஆனால் துணைப் பேராசிரியர் சம்பளத் திட்டத்தில் (Reader's Scale) மேல் எல்லையாகிய ரூ 1250/ தருவதாகவும், ஆனால் ஒப்பந்தம் இரண்டாண்டிற்கு மேல் தரமுடியாது என்றும் சொல்லி விட்டதாகவும் அறிந்தேன். பேட்டி முடிந்ததும் டாக்டர் ஞானமூர்த்தி என்னிடம் நேராக வந்து, ''நான் பணியை ஒப்புக்கொள்ளவில்லை; நீங்கள் நன்முறையில் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றுங்கள்'' என்று வாழ்த்து கூறிக் கைகுலுக்கிச் சென்றார். 'வரவில்லை' என்று கடிதம் வைத்து விடுங்கள் என்றேன். கோவை சென்று எழுதுவதாகச் சொல்லிச் சென்றார்.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பத்தாண்டுகள் பணியாற்றியதும், பன்னூல்களை எழுதிக் குவித்தவன் என்பதையும் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு அறியும். நான் ஆறு ஆண்டுகள் குடும்பத்தைத் துறந்து திருப்பதியில் பிச்சைக்காரர்களில் ஒருவன்போல் சிரமப் பட்டதை ஒரு வரும் அறியார்; தமிழக அரசு மானியம் பெறுவதற்கு ஒன்பதாண்டுகள் சென்னைக்குக் காவடி எடுத்ததையும் அதில் நான் பெற்ற தொல்லைகளையும் ஒருவரும் அறியார்—டாக்டர் மு. வ. வைத்தவிர. தெ.பொ.மீ. அவர்கட்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் நான் டாக்டர் (பிஎச்.டி,) பட்டம் பெறுவதற்குப் பல்லாண்டுகள் முயன்றதையும் பன்னூல்களை எழுதி வெளியிட்டதையும் நன்கு அறிவார். என்னுடைய 'கவிதை யநுபவம்' என்ற பெரிய தொரு நூலுக்கு

அணிந்துரையும் வழங்கியுள்ளார். என்னுடைய திறமையை யும் உழைப்பையும் சுமார் இருபதாண்டுக் காலத்திற்கு மேல் நன்கு கவனித்து வந்தவர்.

என்னைப்பற்றி இந்த அளவு எல்லா விவரங்களையும் என்னுடைய தகுதிகளையும் அறிந்திருந்த தெ.பொ.மீ.க்கு என்னைப் புறக்கணித்துத் துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டி பேராசிரியர் பதவிக்குத் தகுதியான வர்களைத் தெரிவிக்குமாறு கடிதம் எழுதினபோது தெ. பொ. மீ. உள்ளத்தில் என்னைப்பற்றி ஏதாவது தவறான கருத்து தோன்றியிருக்க வேண்டும். டாக்டர் ரெட்டிக்கு என்னைப் பிடிக்கவில்லையோ என்ற கருத்தாவது தோன்றியிருக்க வேண்டும். இதைப் பயன் படுத்திக் கொண்டு தமக்கு வேண்டியவர்களைத் திருப்பதி யில் நுழைத்துவிடலாம் என்ற சிந்தனை இவர் மனத்தில் முகிழ்த்திருக்கவேண்டும்.

டாக்டர் சகந்நாத ரெட்டி தண்டவாளத்தில் இருப்பூர்தி ஓடுவது போல் விதியில் சிறிதும் வழுவாத வண்ணம் நடந்து கொள்பவர் என்பதைத் தெ. பொ. மீ. சிறிதேனும் சிந்தித்தாரிலர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு டாக்டர் ரெட்டி யின் மனநிலையை நன்கு அறிந்து கொண்டிருந்தார். அப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு.வ.வும் டாக்டர் ரெட்டியின் மனப் போக்கைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். ஆகவே, முன்னவர் டாக்டர் ரெட்டி எழுதிய கடிதத்திற்கு எழுதிய மறுமொழி தரும் போது ''நீங்கள் நினைக்கின்றபடி ஆளே இல்லை'' என்று எழுதிவிட்டார். அதற்கு மேல் 'எல்லாத் தகுதியும் பெற்றுச் சிறப்புடன் பணியாற்றும் டாக்டர் சுப்புரெட்டியாரையே பதவியில் உயர்த்தி ஆவன செய்து கொண்டால் துறையின் வளர்ச்சியும் பாங்குடன் அமையும்' என்று குறிப்பிட்டும் எழுதிவிட்டார். டாக்டர் மு.வ. வல்லுநர் குழுவில் இடம்

பெற்று வரும்போதும் திறந்த மனத்துடனேயே வந்தார். பேட்டியின்போதும் தோன்றும் கருத்தினைத் தெளிவாக உணர்த்திவிடுவதாக எண்ணியே வந்து சேர்ந்தார்.

தெ.பொ.மீ. மட்டிலும் துணைவேந்தர் டாக்டர் ரெட்டியைத் தவறாகப் புரிந்து கொண்டு தாம் நினைத்த இருவரை எப்படியாவது நுழைத்து விடவேண்டும் என்ற முடிவு எடுத்துக் கொண்டே வந்திருந்தார். என்னை எப்படியாவது வினாமாரியால் மடக்கி இப்பதவிக்கு அருகதையற்றவர் என்பதை நிலைநாட்டவே கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருந்தார் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. என்னை நீண்ட நாட்களாக அறிந்திருந்தும் என் திறமையை நன்கு தெளிந்து தெரிந் திருந்தும் அவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளி என்னைப் புறக்கணிப்பதற்காகவே முடிவுசெய்து கொண்டு வந்திருந்தார் என்பதை அவர் மேற்கொண்ட செயல் களால் அறிந்து கொள்ள முடிந்தது.

சில திங்கள்களில் ஓய்வு பெறப் போகும் டாக்டர் ஞானமூர்த்தியின்மீது பற்றும் பாசமும் வைத்திருந்தார். தெ. பொ. மீ.எப்படியாவது ஒப்பந்தத்தில் ஐந்தாண்டுகள் (அறுபத்தைந்து அகவை முடியும் வரை)அவரைப் பேராசிரி யராக நியமித்து விடுவது என்பது அவர் கொண்டிருந்த முடிவு கு. தாமோதரன் அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தில் தெ. பொ. மீ. பேராசிரியராகப் பணியாற்றியபோது அவர்கீழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். மதுரைப் பல்கலைக் கழகத்தில் தெ. பொ. மீ. துணைவேந்தராகப் பணியாற்றிய காலத்தில் தமிழ்த் துறைக்குத் துணை யாசிரியர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தார் தாமோதரன். அப்போது இவர்தகுதியைப் போல் தகுதி பெற்றிருந்த தெ.பொ.மீ யின்மருகர்(மகளின் கணவர்)திரு.ஆர்.சண்முக மும் விண்ணப்பித்திருந்தார். அவரைத் தலையைச் சுற்றி மூக்கைப் பிடிக்கும் வழியில் அதிக சம்பளத்தில் நியமித்து

விட்டார். இப்போது தாமோதரனை எப்படியாவது திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரிய ராக்கி விட வேண்டும் என்ற முடிவுடன் வந்திருந்தார். தெ. பொ. மீ. திருப்பதி வருவது தெரிந்து தாமோதரன் அவரைச் சந்தித்துப் 'பிரபத்தி' செய்துவிட்டு வந்ததாக வும், அடுத்து டாக்டர் மு. வ.வையும் சந்தித்து அவரிடமும் இதே முறையைக் கையாண்டு வந்ததாகவும் பின்னர் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. தெ. பொ. மீ. டாக்டர் ஞானமூர்த்தியைப் பேராசிரியராக்குவதற்கு எங்கள் துணைவேந்தர் டாக்டர் ரெட்டி சிறிதும் இடம் கொடுக்கவில்லை. தப்புக் கணக்கு போட்டுக் கொண்டு வந்த தம் எண்ணம் பலிக்கவில்லை என்பதைச் சிறிதும் உணர்ந்தாரிலர். தாமோதரனைத் தாம் நினைத்தபடித் துணைப் பேராசிரியராக்கி விட்டார். இதில் டாக்டர் செகந்நாத ரெட்டியை எப்படியோ இணங்க வைத்து விட்டார். ஒரு துணைவேந்தர் மற்றொரு துணை வேந்தரின் விருப்பத்திற்கு விட்டுக் கொடுப்பது என்பது இயல்பேயாகுமன்றோ? எனவே, தாமோதரன் திரு. வேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில்(டாக்டர் பட்டம் இல்லாதிருந்தும்) துணைப் பேராசிரியராகி விட்டார். இதற்கு அவருடைய நல்லூழே காரணமாக அமைந்து விட்டது. எல்லாத் தகுதிகளிலிருந்தும் என்னைப் புறக்கணித்து விரிவுரையாளராகவே வைத்து விட வேண்டும் என்ற தெ. பொ. மீயின் உள்ளெண்ணத்தை டாக்டர் மு. வ. புரிந்து கொண்டு விட்டார். டாக்டர் ரெட்டியும் அறிந்து கொண்டு விட்டார். திருமலையின் மீது எழுந்தருளியிருக்கும் சீநிவாசனும் நன்கு அறிவான். தெ. பொ. மீயும் பின்னர் தம்முடைய தீய எண்ணத்தை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பதை அவர் டாக்டர் சௌரிராசனிடம் பேசிய பேச்சாலும் ஒரு சில திங்கள் கழித்து என்னுடன் உரையாடியதிலிருந்தும் அறிந்து கொள்ள முடிந்தது. ஏன்? தெ. பொ. மீ. தீய எண்ணமே உருக் கொண்ட கயவரல்லரே. இவ்வளவு

நடை பெற்ற பிறகும் நான் தெ. பொ. மீயிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தேன். அவருடைய அந்தரான்மா (Consciense) அவரைத் தொடர்ந்து வருத்தியிருக்க வேண்டும். என்னுடைய உழைப்பையும் தூய்மையான எண்ணத்தையும் நன்கு அறிந்த ஏழுமலையான் எனக்கு உலகியலை நன்கு புகட்ட வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு நாடகம் நடை பெறச் செய்திருக்க வேண்டும் என்று என் மனம் எண்ணுகின்றது. 'திக்கற்றவருக்கு தெய்வம் தானே துணை?'

குமிழி—209

## 53. முறையற்ற முறையில் நடைபெற்ற என் பேட்டி

ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப,
 ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து
என்மதியும் கடந்தண்ட மீது போகி,
 இருவிசும்பி னூடுபோய் எழுந்து மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
 தாரகையின் புறந்தடவி, அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
 மலர்புரையும் திருவடியே வணங்கினேனே.[1]

என்ற திருமங்கை மன்னனின் பாசுரம் என் மனத்தில் எழுகின்றது இக்குமிழியின் தொடக்கத்தில். எந்தநோக்கத்துடன் நல்ல பதவியைத் துறந்து, மூன்று மாத சம்பளத்தை

1. திருநெடுந். 5

யும் தந்து விடுதலை பெற்றுத் திருப்பதி வந்தேனோ அந்த நோக்கம் நிறைவேறும் நன்னாள் இந்நாள் என்ற நினைவுடன் பேட்டிக்குத் தயாரானேன். நான் அன்றைய தேதி வரை எழுதி வெளியிட்ட நூல்கள் 22லும் ஒவ்வொரு படியையும்[2] கட்டிக் கொணர்ந்திருந்தேன். என் வாழ் நாளில் இந்தப் பேட்டி வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்பதால் பேட்டியில் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் இக்குமிழியில் எழச் செய்கின்றேன்-

நான் வல்லுநர் குழு இருந்த அறையில் நுழைந்தவுடன் துறையில் பணியாற்றி வந்த வேலையாள் என்னுடைய 22 நூல்களையும் கொணர்ந்து மேசையின்மீது வைத்தான் முதலில் எங்கள் துணைவேந்தர் தான் பேட்டியைத் தொடங்கினார்.

து. வே : நீங்கள் எப்படி உத்தியோக வாழ்க்கையைத் தொடங்கி இன்றிருக்கும் நிலையை அடைந்தீர்கள்?

நான் : நான் ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டதும் புதிதாகத் தொடங்க இருந்த ஒரு நடுநிலைப் பள்ளியின் முதல் தலைமையாசிரியராக நியமனம் பெற்றேன். ஒன்பதாண்டுகள் ஓயாது உழைத்து அதனை உயர் நிலைப் பள்ளியாக வளரச் செய்தேன். 154 மாணாக்கர்களுடன் தொடங்கப் பெற்ற நடுநிலைப் பள்ளியை 1000க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளியாக வளர்த்தேன். சீரும் சிறப்புமாக இருந்த நிலையில் காரைக்குடியில் தொடங்கப் பெற்ற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த் துறையின் தலைவனாகப் பணியை ஏற்குமாறு அழைப்பு வந்தது. மூன்று மாத சம்பளம் கட்டித் தலைமையாசிரியர் பணியை

2. இதை எழுதிய போது 87 நூல்கள் வெளிவந்து விட்டன. திருப்பதியில் ஓய்வு பெற்றுச் சென்னை வந்தபோது 42 நூல்கள் வெளி வந்திருந்தன.

துறந்து கல்லூரியில் பதவி ஏற்றேன். பத்தாண்டுகள் துறையைச் சீரிய முறையில் வளர்த்திருந்த காலையில் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவி விளம்பரப் படுத்தப் பெற்றிருந்தது. இப்பொழுதும் மூன்று மாதம்சம்பளம் கட்டி விடுதலை பெற்றுத் திருப்பதியில் பணியேற்றேன். தமிழக அரசின் மானியம் பெற ஒன்பதாண்டுகள் சென்னைத் தலைமைச் செயலகத்துக்குக் காவடி எடுத்தேன். மானியமும் வந்தது. தாங்கள் பெருமனங் கொண்டு துறையை முதுகலை, ஆராய்ச்சி பெற வாய்ப்பளிக்கும் ஒரு துறையாக வளர்க்கத் திட்டமிட்டீர்கள். இப்போது உங்கள் முன் பேட்டிக்கு வந்துள்ளேன்.

து. வே. : சரி; உங்கட்குக் கல்வித்துறை பொறுப்பு அளிக்கப்பெற்றால், தாய்மொழிமூலம் கல்வி கற்பிப்பதில் உங்கள் கருத்தென்ன? பாடங் கற்பிக்கும்போது வகுப்பிலும், பாடநூல்கள் எழுதும்போது நூல்களிலும் கொச்சை மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில் உங்கள் கருத்தென்ன?

நான் : எல்லாமட்டங்களிலும் பலநிலைகளில் தாய்மொழிமூலம் கற்பிப்பதை நடைமுறைப் படுத்த முயல்வேன்; கற்பிப்பவர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு தான் செயற்படுத்துவேன். தான்தோன்றித் தனமாகச் செயற்படுத்துவதைத் தவிர்ப்பேன். வகுப்பறையில் வேண்டுமானால் வாய்மொழிமூலம் கற்பிக்கும் போது கொச்சைமொழிச் சொற்கள் கலந்து வருவதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் நூல்கள் எழுதும்போது இவை எழுத்து மொழியில் கலப்பதை அனுமதிக்க மாட்டேன்.

து.வே: இக்காலத்தில் அமைச்சர்கள் முதலியோர் கொச்சை மொழியை ஆதரிக்கின்றனர். இந்த ஆதரவும் ஒருவித வேகத்தை அடைந்து வருகின்றதே.

நான் : அமைச்சர்கள் அறிஞர்கள் அல்லர்; மக்கள் பிரதிநிதிகள். மக்கள் ஆதரவு பெறுவதற்காக எதையும் பேசுவார்கள். இந்த அரசியல் பேச்சுக்கு மதிப்பு தரலாகாது. அறிஞர்கள் கூட்டம் இதனை வன்மையாக எதிர்க்க வேண்டும். அறிஞர்கள் சங்கம் அமைத்துக் கொண்டு இத்தகைய போக்கிற்குக் கண்டனக் குரல் எழுப்ப வேண்டும்.

து.வே : அரசுக்கு எதிராக நீங்கள் இப்படிப் பேசினால் உங்களைச் சிறையில் போட்டு விடுவார்கள் இங்குப் பேசியதை நீங்கள் வெளியில் பேசினால் உடனே இப்பலன் உங்கட்குக் கிட்டி விடும்.

நான் : நான் 'அரசியல் வாதி' அல்லன். நீங்கள் என் சிந்தனையைத் தூண்டினீர்கள். நான் கவடில்லாத மறு மொழி பகர்ந்தேன். உண்மையை நிலை நாட்டுவதில் எந்தவிதமான தியாகத்தையும் மேற்கொள்ளலாம்.

து.வே : நீங்கள் துணிவானவர். உண்மையைப் பேசு கின்றீர்கள். இதைக் கருதியே நான் உங்கட்கும் பேராசிரியர் பதவி தருவதற்கு யோசித்துக் கொண்டிருக் கின்றேன்.

இத்துடன் தம் வினாக்களை நிறுத்திக் கொண்டு வல்லுநர் குழுவிற்கு வாய்ப்பளித்தார் துணைவேந்தர். வல்லுநர் குழுவிலிருந்த மதுரைப் பேராசிரியர் துணை வேந்தர் முதலில் கேட்கத் தொடங்கினார் அவர் தொடங் கினால் இன்னொரு உறுப்பினர் இருப்பதை மறந்து விடு வார். தாமே கேட்டுக் கொண்டிருப்பார்.

தெ பொ.மீ. : நீங்கள் துறையூரில் தலைமை யாசிரியராக இருந்தீர்கள். அந்த நல்ல பதவியை ஏன் விட்டீர்கள்?

நான் : (இவர் எங்கேயோ என்னை இழுத்துச் செல்கின்றார் என்பதை ஒரு கணத்தில் ஊகித்துக் கொண்டேன் இவரிடம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் என்னைச் சரிப்படுத்திக் கொண்டு) பதவியை விடுவது அல்லது அதில் நீடிப்பது என் விருப்பம். மாண்புமிகு வல்லுநர் குழு உறுப்பினர் என் சொந்த விஷயத்தில் தலையிடுவது தம் உரிமை மீறுவதாகும் (சற்று என் வேகத்தை அடக்கிக் கொண்டு) என் குருதேவ்[3] அவர்கள் என் சொந்த விஷயத்திலும்அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. காரைக்குடிக் கல்லூரி நிர்வாகம் எனக்கு அழைப்பு அனுப்பியது. (நான் விண்ணப்பம் கூட அனுப்பவில்லை என்பதையும் சுட்டி) ஆகவே, காரைக்குடிக்குடியில் பணியேற்றேன். வள்ளல் டாக்டர் இராம. அழகப்பர் தாம் புதிதாகத் தொடங்கின ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அனுபவம் மிக்க உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களையே பேராசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்று விரும்பியதால் கம்பன் அடிப் பொடி பரிந்துரையின் பேரில் முதல்வர் தந்திமூலம் அழைப்பு அனுப்பினார். அதனால் அழைப்பை ஒப்புக் கொண்டு காரைக்குடி சென்றேன்.

தெ.பொ.மீ : நீங்கள் காரைக்குடி சென்றிருக்க வேண்டியதில்லை. தலைமையாசிரியன் சம்பளம் உயர்த்தப் பெற்றதனால் நீங்கள் துறையூரிலேயே தங்கியிருந்திருக்கலாம்?

நான் : நான் துறையூரில் தங்குவதும் காரைக்குடி செல்வதும் என் விருப்பத்தைப் பொறுத்தது. நான் ஒன்பதாண்டுகள் நன்முறையில் பணியாற்றி நற்புகழ் பெற்றேன்; நற்பயனையும் அடைந்தேன். தலைமையாசிரியர் பணி போதும் என்று நினைத்தேன். என்

3. நானும் என் போன்ற நெருங்கியவர்களும் தெ.பொ.மீ.யைக் 'குருதேவ்' என்று அழைப்பது வழக்கம்.

எண்ணம் மேற்கல்வியை நாடிச்சென்றது. கல்லூரி வாழ்வில் ஓய்வு இருக்கும். ஓய்வில் மேலும் கற்கலாம்; ஆய்வையும் மேற்கொள்ளலாம் என்று என்மனம் எண்ணிய இந்த எண்ணம் நான் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே அரும்பியது. சந்தர்ப்பத்தாலும் சூழ்நிலையாலும் எம். ஏ., எம். எஸ்சி. பட்டம் இல்லாததாலும் என் ஊழ் என்னை உயர்நிலைப் பள்ளி வாழ்வில் தள்ளியது. ஆனால் மேற்கல்வி உந்தலால் 'வித்துவான்' தேர்வில் வெற்றி பெற்றேன். விதிகள் எம். ஏ. பயில அநுமதிக்காத தால் பி. ஏ. பயில வேண்டியதாயிற்று. பி. ஏ.யில் தமிழில் மாநிலத்திலேயே முதல்வனாகத் தேறினேன். எம். ஏ. க்குப் பயின்று கொண்டிருந்தேன். இந்நிலையில்தான் கல்லூரிப் பணி அழைப்பாக வந்தது. 'எப்படிக் கல்லூரியில் நுழைவது? யார் பரிந்துரையைப் பெற்றால் கல்லூரில் பணி கிடைக்கும்?' என்று சதா சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு அழைப்பு 'தானாக' வந்தது. இஃது என் நல்லூழ் என்றே எண்ணினேன். பள்ளி நிர்வாகத்தை அண்மி 'விடுதலை' தருமாறும், இயன்றால் தொடர்புரிமை (Lien) யுடன் ஓராண்டு விடுமுறை அளிக்குமாறும் வேண்டினேன். இரண்டையும் நிர்வாகம் மறுத்ததால் ஒப்பந்தப்படி மூன்று மாத சம்பளத்தைத் தந்து என்னைப் பணியிலிருந்து விலக்கிக் கொண்டு காரைக்குடி சென்றேன். என் வாழ்நாளில் சம்பளத்தை முதன்மையாகக் கருதிய தில்லை; பணியையே அங்ஙனம் கருதினேன். தலைமை யாசிரியர் சம்பளம் ஏறியதாகச் சொன்னீர்கள். நான் காரைக்குடி சென்றது பணிமாற்றத்தைக் கருதியேயன்றி, சம்பளத்தைக் கருதி யன்று. சம்பளத்தைக் கருதிச் சென்றிருந்தால் ரூ 30+25=55 இழப்பில் சென்றிருக்க மாட்டேன். காரைக்குடி சென்றும் இந்த இழப்பை ஈடுசெய்யுமாறு கேட்டிருந்தால், என் வேண்டுகோளுக்குக் கல்லூரி நிர்வாகம் செவிசாய்த்து இழப்பைத் தவிர்த் திருக்கும். ஆனால் நான் அதற்கு முயலவில்லை. (இங்ஙனம் மறுமொழி தந்து கொண்டிருக்கும்போதே என் மனம்

சிந்தனையில் ஆழ்ந்தது. தலைமையாசிரியர் சம்பளம் கணிசமாக உயர்ந்தது 1950இல் அன்று. 1960இல் தான் என்ற உண்மை மின்வெட்டுபோல் என் மனத்தில் பளிச்சிட்டது). உடனே சொன்னேன்; "சம்பளம் உயர்ந்தது 1960லேயன்றி 1950இல் அன்று பின்னால் சம்பளம் உயரும் என்பதை முன் கூட்டியே அறிந்து கொள்ள நான் உபநிடத முனிவனாகிய வசிட்டனும் அல்லன்; வாமதேவனும் அல்லன்" என்று.

இந்த என் விடையைக் கேட்டு வல்லுநர் குழுவும் துணைவேந்தர், ஜகந்நாதரெட்டி பதிவாளர் புலத் தலைவர் (Dean) உட்பட அங்கிருந்த அனைவரும் தம்பித்துப் போயினர். என்னை நோக்கினர்; தெ. பொ மீயை நோக்கினர் சில நிமிடங்கள் மாறி மாறி நோக்கினர். தெ. பொ. மீ. முகத்தில் ஈஆடவில்லை. முகம் சுருங்கியதை என்னால் காண முடிந்தது. அங்கிருந்தோர் அனைவரும் இதனைக் கவனித்திருக்கலாம். 'ஆசை வெட்கம் அறியாது' என்பது பழமொழியன்றோ? எதையோ என்னிடமிருந்து சிறிது சிறிதாக வெளிக் கொணர (elicit)[4] எண்ணி வந்தார் என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால் என் விடைகள் வேறு திசையில் சென்று விட்டதால் ஏமாந்தார் என்பது என் கருத்து. துறையூர் களத்திலிருந்து விலகி, காரைக்குடிக் களத்திற்கு வருகின்றார். போரை வேறுமுனையில் தொடங்க நினைக் கின்றார். மேசையின்மீதிருந்த 22 நூல்கள் அவர் கண்ணை

4. நிர்வாகத்தின்மீது வழக்கு தொடர்ந்தேன். இதை ஒருகால் என்னிடமிருந்து வருவிக்க நினைத்தார் என்பது என் ஊகம். இது வெளிப்பட்டிருந்தால் என் முறை முடிந்ததும் 'இவர் வம்புக்காரர்; இவரைத் தலைமையிலிருந்து தவிர்ப்பது நல்லது' என்பதை வலியுறுத்திப் பேச நினைத்தாரோ என்பதும் என் ஊகம்.

உறுத்தியிருக்க வேண்டும். அவற்றைக் 'குப்பை' என்று அலட்சியப்படுத்தி விடலாம் என நினைக்கின்றார். வல்லுநர் குழு உறுப்பினர் அல்லவா? எதை வேண்டுமானாலும் கேட்கலாமே. தமிழ் நடையாடாத தேசமாதலால். டாக்டர் ரெட்டியும் இதை நம்பலாம். பின்னர் அவர் விடுத்த வினாக்கள் இப்போக்கிலேயே இருந்தன. தொடங்குகின்றார்.

தெ. பொ. மீ; காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வாரத்திற்கு எத்தனை மணிநேரம் பணியாற்றினீர்கள்?

நான் : விதிப்படி 14 மணி நேரம் பணியாற்ற வேண்டும். அப்படி ஆற்றியிருப்பேன்.

தெ. பொ. மீ : டாக்டர் ரெட்டியார், நீங்கள் பதினான்கு மணிநேரம் பணி ஆற்றியிருக்க முடியாது. பயிற்சிக் கல்லூரி என்றால் 'வேலையே இல்லை' என்பது பொருள்.

நான் : துணைவேந்தர் பணி விதிகளைப் பிறப்பிப்பது; அவற்றை நடைமுறைப் படுத்துவது கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும். ஏனைய கல்லூரிகளில் உள்ள பணிக்கும் பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள பணிக்கும் வேறுபாடு மிக அதிகம். ஏனைய கல்லூரிகளில் பாடங்களைப் போதிப்பது, தேர்வுகள் நடத்துவது இவற்றுடன் பணி முடிகின்றது. பயிற்சிக் கல்லூரிகளில் பாடம் போதிப்பது, தேர்வுகள் நடத்துவது இவற்றுடன் பல்வேறு விதமான பணிகளும் உள்ளன. இங்குப் பட்ட தாரிகளை 'ஆசிரியர்களாக்குவது.' இதில் எத்தனையோ படிகள் உள்ளன. இந்த விவரங்களையெல்லாம் துணைவேந்தர் அறிவதற்கு வாய்ப்பில்லை.

இதற்குமேல் தெ. பொ. மீ. யால் தொடர முடியவில்லை. இங்கும் அவர் நினைத்த எண்ணத்தைச் செயற்படுத்த முடியவில்லை. முகத்தில் அசடு வழிவதை என்னால்

காண முடிந்தது. குழுவிலிருந்த அனைவரும் அவருடைய பரிதாப நிலைக்கு இரங்கியிருக்க வேண்டும். மேசையின் மீதிருந்த நூல்களில் 'முத்தொள்ளாயிர விளக்கம்' என்ற பல்கலைக் கழகம் வெளியிட்ட என் நூலை எடுக்கின்றார். ஏதோ கேட்க வேண்டுமல்லவா? கேட்கின்றார்.

தெ. பொ. மீ: இந்த நூலுக்குப் பலர் உரை எழுதியிருக்கிறார்களே. நீங்கள் இதில் செய்த சிறப்பென்ன?

நான் : நான் உரை என்று எழுதவில்லை. ஒவ்வொரு பாடலிலும் பாட்டநுபவம் பெறும் முறையை எடுத்துக் காட்டி படிப்பவர்கள் அநுபவித்தற்கும் வகை செய்துள்ளேன். தமிழ் நடையாடாத பிற மாநிலத்திலுள்ளாரும் இந்நூலைப் பற்றி ஓரளவு புரிந்து கொள்வதற்கு 'ஆங்கில அறிமுகம்' ஒன்று நூலின் முன்வாயிலாக அமைத்துள்ளேன்.

தெ. பொ. மீ. : முத்தொள்ளாயிரக் கால ஆராய்ச்சியால் ஏதாவது முடிவுக்கு வந்துள்ளீர்களா?

நான் : முயன்றுள்ளேன். நம் நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் காலத்தைப்பற்றிக் கவலை கொள்ளுவதில்லை. ஆகவே தாம் வாழ்ந்த காலம் பற்றி எவ்விதக் குறிப்பையும் விட்டுச் செல்வதில்லை. இதனால் முத்தொள்ளாயிர ஆசிரியர் காலத்தைப் பற்றி எந்தவித முடிவிற்கும் வரமுடியாது அப்படியே விட்டு வைத்துள்ளேன். வேறு ஆதாரங்கள் கிடைக்கும்போது மேலும் ஆராய்வேன்.

இதுகாறும் பேட்டியின் காலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு டாக்டர் மு. வ. வுக்கு வினவ வாய்ப்பே தரவில்லை. அவர் முகத்தில் பொறுமையை இழக்கும் குறிப்பு கூட தென்பட்டு விட்டது. இந்நிலையில் அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

மு. வ: கம்பனுடைய புலமைச் சிறப்பு பற்றி உங்கள் கருத்தென்ன?

நான்: கம்பன் மக்கட்கவி. அரசு ஆதரவு அவனுக்கு இல்லை. ஆழ்வார்கள் பாசுரங்களில் உள்ளத்தைப் பறி கொடுத்தவன். இதன் காரணமாகக் 'காசில் கொற்றத்து இராமன் காதையைக்'[5] காவியமாக்கித் தமிழகத்தில் இராம பக்தியைப் பெருக்கெடுத்தோடச் செய்தவன். விருத்த யாப்பை அற்புதமாகக் கையாண்டு அதில் பல 'சாகசங் களைக்' காட்டி விளையாடியவன். 'விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'[6] என்ற தனியனின் சொற்றொ டாலும் 'வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்றாரே'[7] என் பாடற் பகுதியாலும் இஃது அறியப்படும்.

மு. வ.: இக்காலத்தில் கம்பன் புகழ் பெருகி வருவ தற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று கருது கின்றீர்கள்?

நான்: காவியத்தில் தன்னியல்பாகவே பெருமை சேர்ந்து விட்டது; 'சரக்கு முறுக்கானதால்' மக்கள் அதனை நாடுகின்றனர். நாடளாவியுள்ள கம்பன் கழகங்கள் நடத்தும் விழாக்களால் அவன் புகழ் மேலும் பரவுகின்றது. ஆராய்ச்சி அறிஞர்களும் ஆய்வு மாணவர் களும் கம்பன் காவியத்தைப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்து மகிழ்கின்றனர். ஆனால் சிலர் ஒரு சில குறிப்பு களை ஆதாரமாக வைத்துக் கொண்டு இக்கால அறிவியல் கூறுகளும் அதில் இருப்பனவாகக் கூறுவது பொருத்தமாக இல்லை.

---

5. கம்ப. பாலகா. தற்சிறப்பு—4
6. 'வெண்பாவிற் புகழேந்தி' என்று தொடங்கும் தனிப்பாடல்.
7. கம்ப. பாலகா. தற்சிறப்பு-21.

மு. வ : உங்கள் கூற்றுக்குச் சான்றுகள் தர முடியுமா?

நான் : முடியும் 'வலவனேவா வானவூர்தி' என்ற சொற்றொடரிலிருந்து அந்தக் காலத்தில் (புறநானூற்றுக் காலத்தில்) வானவூர்தி இருந்ததாக கூறுவது பொருத்தமில்லை. கவிஞன் கற்பனையிலெழுந்த விசயை செலுத்திய மயிற் பொறியைக் காட்டலாம். 'அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்' என்ற சொற்றொடரைக் கொண்டு கம்பன் காலத்திலேயே அணுவாற்றலைப் பற்றித் தமிழ் மக்கள் அறிந்திருந்தனர் என்று கூறுவது பொருந்துமாறில்லை.

தெ. பொ. மீ ; 'கோண்' என்பது அணுவின் ஒரு பகுதி என்பதால் 'அணுப் பிளவு' (Atomic Fission) பற்றித் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்று கொள்ளலாமன்றோ?

நான் : அங்ஙனம் கொள்ள முடியாது. அணு என்பது கண்ணுக்குப் புலனாகா சிறு துகள் என்று கருதியிருக்கலாம். அதில் நூறில் ஒரு பங்கிட்ட பகுதிக்கு 'கோண்' என்று பெயர் சூட்டியிருக்கலாம். 'கோண்' என்பது ஓர் அளவு. அணுத்துகள்களான (Atomic particles) புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் மேசான், பாசிட்ரான் போன்றவை அன்று.

மு. வ: பாரதியாரின் கவிதைகளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

நான் : தேசப்பற்று மொழிப்பற்று, சமயப்பற்று, பரந்த சமய நோக்கு போன்றவைகளைக் கொண்ட அற்புதக் கவிஞர். இக்காலத்தில் வசன கவிதையின் தந்தை புதுக்கவிதையின் பிதாமகன். புதிய முறையில் காவியம் இயற்றி பாமர மக்கட்கும் கவிதைச் சுவையூட்டிய கலை உணர்வு மிக்க பெருமகன். ஆனால் மிக்கக் கலையுணர்வு ஊட்டக்கூடிய பாஞ்சாலி சபதத்தில் இவரே

செய்த 'இடைச் செருகல்' இந்த அழகிய காவியத்தின் தரத்தைக் குறைத்து விட்டது.

தெ. பொ. மீ : எந்த இடைச் செருகல்? காட்ட முடியுமா?

நான் : காட்ட முடியும்; காட்டுவேன்.

தெ. பொ. மீ: காட்டுங்கள், பார்க்கலாம்.

நான் : பிரச்சினையை விருப்பு வெறுப்பற்ற முறையில் அணுகவேண்டும். உணர்ச்சி வசப்பட்டுப் பேசினால் உண்மை மறைந்து விடும். நம்முடைய 'ஆணவ மலம்' தான் உண்மை காண்பதில் திரையிடுவது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று கருதுகின்றேன்.

சபதச் சருக்கத்தில் (ஐந்தாவது சருக்கம்) 'தீமையில் அண்ணனை வென்ற துச்சாதனன்' திரெளபதியின் துகிலை உரிகின்றான்.

'பிச்சே றி யவனைப்போல்—அந்தப்
பேயனும் துகிலினை யுரிகையிலே
உட்சோதி யிற்கலந்தாள்;—அன்ன
உலகினை மறந்தாள் ஒருமையுற்றாள்

என்ற அடிகட்குப்பின்,

'ஹரி, ஹரி ஹரி என்றாள்—கண்ணா!
அபயம் அபயம் உனக் கபயம் என்றாள்'

என்ற அடிகளில் 'சரணாகதி' முடிந்து விடுகின்றது. அதற்கு பின்னர்,

'கரியினுக் கருள்புரிந்தே—அன்று என்பது தொடங்கி'

'ஹரி ஹரி ஹரி ஹரி ஹரி என்றாள்' என்பது வரையில் சுமார் 50 அடிகட்குமேல் உள்ள 'இடைச் செருகல்"

காவியத்தின் வனப்பிற்கு ஒரு 'சொட்டு' வைத்ததுபோல் ஆகி விடுகின்றது. இந்த 'சகஸ்ரநாம அருச்சனை'யை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம். சரணாகதி ஆன பிறகு எந்த வழிபாடும் தேவை இல்லை என்ற வைணவ சித்தாந்தத்தை பாரதியார் அறியாதவர் என்று சொல்ல முடியாது. 'ஏன் நுழைத்தார்? என்பதை ஊகித்துச் சொல்ல முடியவில்லை. 'அபயம் என்றாள்' என்று சொல்லி முடிந்தவுடன்,

'பொய்யர்தம்' துயரினைப்போல்— நல்ல' என்று தொடங்கி,

வண்ணப்பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன வளர்ந்தனவே!

என்று முடிகின்றது. பின்னர் எண்ணத்திலடங்காத நிறங்களைப் பேசுகின்றார் கவிஞர். இடையிலுள்ள செருகலைத் தவிர்த்திருந்தால் காவியத்தின் அழகு குன்றாமல் இருந்திருக்கும்.

தெ. பொ. மீ: ஐம்பதிற்கு மேற்பட்ட அடிகள் இருக்க முடியாது.

நான்: முதலில் செருகல் தேவைஇல்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். அடிகளின் எண்ணிக்கையைப்பற்றிக் கவலை வேண்டா. 40 அடிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

தெ.பொ.மீ: அதுவும் இருக்க முடியாது.

நான்: 'பாரதியாரின் கவிதைகள்' நூல் இருந்தால் கணக்கிட்டே காட்டி விடுவேன். எங்கள் துணைவேந்தர் நூலகருக்குத் தொ.பே. மூலம் சொன்னால் நூலே இங்கு வந்து விடும். 40 அடிகளை ஒப்புக் கொள்ளாவிட்டால் 30 அடிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் 'இடைச் செருகல் தேவையற்றது' என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

தெ.பொ.மீ: அதுவும் இருக்க முடியாது.

நான்: 20 அடிகள் என வைத்துக் கொள்ளுங்கள். இதற்குக் கீழ் நான் இறங்க ஒருப்படேன்.

தெ.பொ.மீ: என்ன டாக்டர் ரெட்டியார், 50க்கு மேல் என்று சொல்லி 20க்கு வந்து விட்டீர்கள்?

நான்: தங்கள் திருவுள்ளத்திற்கு மதிப்பு தருவதற்காகவே. ஆனால் என்னைப் பொறுத்தவரை 50க்கு மேல் தான் என்று சொல்வேன்.

தெ.பொ.மீ முகத்தில் அசடு வழிந்ததை எல்லோருமே கண்டனர். டாக்டர் மு.வ.வின் முகம் சரியாக இல்லை, எங்கள் துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டியின் முகத்திலும் ஈ ஆடவில்லை. தெ.பொ.மீ. நடந்து கொண்டது முறையற்ற செயல் என்பதாக எல்லோருடைய கருத்தும் இருந்ததை அவரவர் முகச் சாயல்களினின்றும் அறிந்து கொள்ள முடிந்தது. டாக்டர் ஞானமூர்த்தி தாம் வரப்போவதில்லை என்பதாக என்னிடம் தெரிவித்தாரேயன்றி பேட்டியில் குழுவிடம் சொல்லவில்லை. தம்மூர் சென்று தம் துணைவி யாரைக் கலந்து கொண்டு எழுதுமாறு தெ. பொ. மீ. வற்புறுத்தியதால் எழுதாது சென்றுவிட்டார் என்பது பின்னர் தெரிய வந்தது.

ஆகவே குழுவின் முடிவு இவ்வாறு அமைந்திருந்தது. ''டாக்டர் ஞானமூர்த்தியை ரூ1250/- மாத ஊதியத்தில் துணைப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் நியமிப்பது; அவர் வராவிட்டால் டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரை முதல் துணைப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் திரு.கு. தாமோதரனை இரண்டாவது துணைப் பேராசிரியராகவும் நியமிப்பது'' என்பதாக. டாக்டர் ஞானமூர்த்தி வரமாட்டார் என்பதை நன்கு அறிந்தே குழு இவ்வாறு முடிவு செய்ததாக அறிந்தேன்.

தெ.பொ.மீ. திரு.கு. தாமோதரனைத் துணைப் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் நியமிப்பது என்று குழுவை வற்புறுத்தியதாகவும், அப்படி ஏதாவது நடைபெற்றால் டாக்டர் மு.வ. வன்மையான மாறுபடும் குறிப்பு (Strong dissenting note ) வைத்து விடுவதாகச் சொல்லவே இம்முயற்சி கைவிடப் பெற்றது என்பதையும் பின்னர் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. திரு. தாமோதரனுக்கும் இந்த விவரம் தெரிந்திருக்கும். தெ.பொ.மீ. இதனைத் தெரிவித்திருப்பார். இதன் காரணமாகத்தான் அவர் தமக்கு எல்லாத் தகுதியும் இருப்பதாக நினைத்துக் கொண்டு ஏழரையாண்டுக் காலம் எனக்கு ஓயாத தொல்லை கொடுத்தாரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. நளனைப் பிடித்த கலி ஏழரையாண்டில் நீங்கியது. ஆனால் நள ஆண்டில் பிறந்த டாக்டர் சுப்புரெட்டியார் என்ற 'நளனை'க் (நள ஆண்டில் பிறந்தவன்) கலி ஏழரையாண்டுகள் சொல்லொணாத் துயரை விளைவித்தான்—தாமோதரன் வடிவில். இந்தக்காலம் வரையிலும் என்னைப் பிடித்த கலி துறையைப் பிடித்துக் கொண்டது. என் பதவிக் காலம் முடிந்ததால் கலியை விட்டு நான் நீங்கினேன். ஆனால் அந்தக்கலி—துறையைப் பிடித்து கொண்ட கலி—பின்னர் ஓரிரு ஆண்டுகளில் டாக்டர் தாமோதரன் அகால மரணத்தைச் சந்திக்க நேர்ந்ததால் நல்லகாலமாக நீங்கியது.

டாக்டர் ஞானமூர்த்தி வரமாட்டார் என்பதைத் துணைவேந்தர் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். இந்தத் தெளிவின் காரணமாகவே குழுவின் பரிந்துரை மேற்கூறியவாறு அமைந்தது என்பது எனக்குத் தெளிவாகியது. தெ.பொ.மீ. பச்சைக் கொடி காட்டாததால் தான் டாக்டர் ஞானமூர்த்தி மூன்று மாத காலம் எடுத்துக் கொண்டார். இந்த மூன்று மாத காலமும் நானே

"ஓரேர் உழவன் போல்"[7] தன்னந் தனியாக எம்ஏ. வகுப்பிற்குக் கற்பித்து வந்தேன். சில சமயம் சோர்வு வந்து ஆட்கொண்டு விடும். ஒருவாறு பொறுத்துக் கொள்வேன். கற்பிப்பதை நிறுத்தி மாணவர்களை அனுப்பி விடுவேன். மாணவர்களும் என் நிலையைக் கண்டு கழிவிரக்கம் கொள்வர். இப்படியாக மூன்று திங்கள் கழிந்தன.

இவற்றையெல்லாம் நினைவுகூரும்போது நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது உணர்ச்சி வசப்பட்டுக் கோப தாபங்கட்கு ஆளானாலும், இப்போது மன அமைதி கொள்ளுகின்றேன். தாமோதரன் நிலைக்கு இரக்கப்படுகின்றேன்; பெரிய மனிதராகத் திகழ்ந்த தெ.பொ.மீ. மனத்தூய்மைக்குப் பேர் போனவர். தாம் நினைக்கும் ஒருவருக்கு உதவும்போது இதனால் பாதிக்கப் பெறுபவர் ஒருவர் உள்ளார் என்பதைச் சிந்தித்தார் இலர். இஃது அவர்தம் இயல்பாக இருப்பதை அவர்தம் வாழ்க்கையினின்றும் உணர முடிகின்றது.

இவ்வாறு நான் பல்வேறு தொல்லைகட்கு ஆட்பட்டதற்கு என்னுடைய தீயூழ்தான் காரணம் என்று கருதுகின்றேன்; மன அமைதியும் கொள்ளுகின்றேன். எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்ன?

---

7. புறம்—193. ஓரேர் உழவர் ஒரு புலவர்; குறுந். 131 என்பதில் இந்த உவமை வருகின்றது.

## 54. தமிழ் எம்.ஏ. வகுப்புத் தொடக்க விழா

ஜூலை மாதம் இறுதியில் எ.ஏ. வகுப்பு தொடங்கியது. அக்டோபர் 20 ந்தேதி வரை எனக்கு துணைப் பேராசிரியர் நியமன ஆணை பிறப்பிக்கப் பெறவில்லை. டாக்டர் ஞானமூர்த்தி தாம் வர இயலாது என்று எழுதுவதற்கு மூன்று மாதகாலம் எடுத்துக் கொண்டார்!

எனக்கு ஆணை பிறப்பித்த அன்றே திரு தாமோதரனுக்கும் ஆணை பிறப்பிக்கப் பெற்றது. ஆனால் அவர் திருப்பதி வருவதற்குத் தயங்கிக் கொண்டிருந்ததாக அறிந்து அவருக்குக் கடிதம் எழுதினேன்; வந்து சேர்ந்தால் நன்றாக இருக்கும் என்று வற்புறுத்தி எழுதினேன். அவரும் வீடு பார்த்து வைக்கும்படி எழுதினார். நான் அப்போது கபீல தீர்த்தம் சாலையிலுள்ள (கீழ்த்திசைக் கலைக் கல்லூரிக்கு எதிரில்) உமாமகேசுவரரெட்டிக் குடியிருப்பில், இருந்து கொண்டிருந்தேன். அக்குடியிருப்பில் பத்து வீடுகள் வரிசைக்கு ஐந்து வீதம் இரண்டு வரிசைகளில் அமைந்திருந்தன. அவற்றுள் ஒன்றில் குடியிருந்தவர் காலி செய்து கொண்டு போவது தெரிந்தது. அதனைத் திரு. தாமோதரனுக்குத் தருமாறு வேண்டினேன். நான் 1966-இல் வந்தபோது ரூ 80 வாடகை, தண்ணீருக்காக ரூ—10/ தந்தேன். தாமோதரன் வந்த ஆண்டில் (1970) புதிதாக வருபவர்கட்கு ரூ—90 + ரூ 10/- என்று உயர்த்தி விட்டார். எனக்கு (1966 க்கு முன்) குடியிருந்தவர்கள் ரூ 70+10 தந்து கொண்டிருந்தனர். திரு. உமாமகேசுவர ரெட்டி உயர்ந்த மனிதர். ஒரு குறிப்பிட்ட வாடகைக்கு ஒருவர் வந்தால் அவர் காலி செய்யும் வரை வாடகையை உயர்த்த மாட்டார். புதிதாக வருபவர்கட்குத்தான்

உயர்த்திய வாடகை. நான் வந்த ஆண்டு வாடகை உயர்த்தப் பெற்றதால் ரூ 80+10 தர வேண்டி வந்தது. திரு. தாமோதரன் வந்தபோது ரூ 90+10 ஆக உயர்ந்தது. அதனால் அவர் ரூ 100/-தரும்படி நேர்ந்தது. இதனால் அவர் என்னுடைய செயலை ஐயுறத் தொடங்கினார். அவர் வீட்டுக்காரரிடம் இதைப் பற்றிப் பேசியபோது அவர் நிலைமையைத் தெளிவாக்கியும் அவர் என்மீது கொண்ட ஐயம் நீங்கவில்லை என்பதைச் சிலர் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது, நான் வீடு அமர்த்திக் கொடுத்தது பெரும் பிழை என்பதை நினைந்து வருந்தினேன்.

நான் முதன் முதலாகக் குடும்பத்தை திருப்பதிக் கொணர்ந்தபோது (1966) மூன்று நண்பர்களிடம் ஒரு நல்ல வீடு பார்த்து வைக்குமாறு சொல்லிப் போயிருந்தேன். ஒருவரும் இதில் ஈடுபடவில்லை; எல்லோருமே செயற்படாது நழுவினர். ஒருவர்கூட என் விஷயத்தில் அக்கறை காட்டவில்லை. திரு. தாமோதரன் போன்று 'ஐயுறும் பேர்வழிகளை நினைந்தே வீடு பார்ப்பதில் அக்கறை காட்டவில்லை. போலும்!' என்பதை இப்போது சிந்தித்துப் பார்க்கின்றேன். நான் வீட்டிற்காகப் பத்து நாட்கள் அலைந்ததையும் இப்போது நினைவுகூர்கின்றேன். 1966-ல் நான் திருப்பதிக்குக் குடும்பத்துடன் வருவதற்கு முன் காரைக்குடியில் ரூபாய் பதினேழாராயிரத்துக்கு ஒரு வீடு வாங்கினேன். அந்த வீட்டில் பெரும்பாலான சாமான்களைப் போட்டுவிட்டு தேவைக்கு வேண்டிய சாமான்களை மட்டிலும் இருப்பூர்திப் பார்சலில் அனுப்பி விட்டுத் திருப்பதி வந்தோம். வந்தவுடன் தேவஸ்தான பழைய சத்திரத்தில் அறையொன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு 10 நாட்கள் அதில் தங்கியிருந்தோம். விடுமுறை 10 நாட்கள் இருக்கும்போதே திருப்பதி வந்து சேர்ந்தோம். மலைமேல் இரண்டு நாட்கள் தங்கி

எம்பெருமான் ஏழுமலையானைச் சேவித்தோம். பிறகு திருப்பதியில் கோவிந்தராஜப் பெருமாள், அலர்மங்கை புரத்தில் தாயார் இவர்களைச் சேவித்தோம். பத்து நாட்களும் நாங்கள் நால்வரும் உணவு விடுதியில்தான் உணவு கொண்டோம். நானும் என் மூத்த மகன் இராமலிங்கமும் (அப்போது பி.எஸ்சி. வகுப்பில் சேர இருந்தவன்) திருப்பதி பூராவும் வீட்டிற்காக ஒரு வாரம் அலைத்து திரிந்தோம். நடுவண் அரசுப் பள்ளி கபில தீர்த்தம் சாலையில் இருந்தது சிறுவன் அதிக நடையில்லாமல் பள்ளிக்கருகிலேயே வீடு அமர்த்த நினைந்து பள்ளியிருந்த பகுதியிலேயே வீட்டுக்கு அலைந்தோம். தெய்வசங்கல்பத்தால் பள்ளிக்கு எதிரிலிருந்த உமாபதி ரெட்டிக் குடியிருப்பிலேயே வீடு கிடைத்தது. திரு. தாமோதரனை இப்படி அலைய வைத்திருக்க வேண்டும்; நான் வீடு பார்த்துத் தந்தது பெருந் தவறு என்பதை இப்போது நினைந்து வருந்துகின்றேன்.

ஒரு மனிதருடைய பண்பை அறிந்து கொள்ள வேண்டுமானால் அவர்தம் செயல்களை நன்கு கவனிக்க வேண்டும். திரு. தாமோதரனின் செயல்களிலிருந்து அவர் பண்பை நன்கு அறிந்து கொண்டேன். அச்செயல்களை எல்லாம் நினைவுக்கு வந்தாலும் ஒன்றை மட்டிலும் ஈண்டுக் குறிப்பிடுவேன். நான் 1941 ஜூன் திங்கள் முதல் 'இந்து' என்னும் ஆங்கில நாளேட்டிற்குக் கட்டணம் செலுத்திப் படித்து வருபவன். திரு. தாமோதரன் திருப்பதியில் என் வீட்டருகில் குடியேறியவுடன் கட்டணத்தை இருவரும் பகிர்ந்து கொள்ளலாம் என்று தெரிவித்தார். "அது வேண்டா; நானே செலுத்துவேன். உங்கள் வீட்டில் தாளைப் போடுமாறு சொல்கிறேன். நீங்கள் படித்துவிட்டு அனுப்புங்கள்; பிறகு நான் படித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி அவர் வீட்டில் போடுமாறு ஏற்பாடு செய்தேன். அவர் "உங்கள் வீட்டில் மூவர் படிக்கின்றீர்களா?

(என் மைந்தர்கள் இருவரையும் சேர்த்து)'' என்றார். இதனை என் இளைய மகன் இராமகிருஷ்ணன் (பத்தாவது படித்துக் கொண்டிருந்தவன்) செவியுற்று ''கட்டணத்தில் நாலில் ஒரு பங்கு கொடுக்கலாம் என்று நினைத்தார் போலும்! என்ன பெரிய 'பிசுநாறி' யாக இருப்பார் போலிருக்கின்றதே'' என்று அவர் பேச்சைத் திறனாய்வு செய்து விட்டான். அவர் கூறியதைப் பற்றிச் சிந்திக்க வில்லை; ஏதோ சொல்லு கின்றார் என்று விட்டு விட்டேன். என் மகனின் கூர்ந்தமதி என்னை வியக்க வைத்தது.

நானும் தாமோதரனும் அக்டோபரில் (1970) முன் பின்னாகப் பதவி ஏற்றோம். ஒரு சில நாட்களில் புதிய துறைகள் (தமிழ், சட்டம், மானிட இயல், அரசியல்) தொடங்கும் விழா எடுக்கப் பெற்றது. எந்தவிழாவாக இருந்தாலும் துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டி மிகச் சிறிய விவரங்களிலும் கருத்தைச் செலுத்தி விழாவை மிகவும் பொலிவுடையதாகச் செய்வார். மூன்று நான்கு நிகழ்ச்சி களில் துறைகள் தொடங்குவதும் ஒன்று. நான்கு அமைச்சர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டதாக நினைவு. திரு. விசயபாஸ்கர ரெட்டி, திரு. பி. திம்மா ரெட்டி (வருவாய்த் துறை அமைச்சர்) கலந்து கொண்ட தாக நினைவு. விழா அக்டோபர் 25இல் (1970) நடை பெற்றது. திரு. பி. திம்மாரெட்டிதான் துறைகளைத் தொடங்கி வைத்தார். இதற்குக் கல்வெட்டுச் சான்றும் பல்கலைக் கழகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

விழா நடைபெற்ற அன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக மகிழ்ச்சிக் கடலில் மிதந்திருப்பர். இஃது அவரவர் இருக்கும் நிலையைப் பொறுத்தது. புதிதாகத் தொடங்கப் பெற்ற நான்கு துறைகளில் தமிழ்த் துறையைத் தவிர ஏனைய மூன்று துறைகளும் 'சுகப்

பிரசவத்தில்' பிறந்தவை. தமிழ்த்துறை ஒன்றுதான் ஆயுதப் பிரசவம் போல் அமைந்தது. ஏறக்குறைய பத்தாண்டுகள் (குழந்தைக்கரு வளர்வதற்குப் பத்துத் திங்கள்தான்) சென்னைத் 'தமிழ்ப் பயணமும்' ஏறக்குறைய இக்காலத்தில் 100 நாட்கள் விடுப்பும், சில ஆயிர ரூபாய் சொந்தப் பொறுப்பில் ஏற்ற செலவும், தலைமைச் செயலகத்தில் வட்டமிட்டதும், 'கண் மூடி மௌனியாக நிற்கும் ஏழுமலையானின் திருவுள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். ''படமுடியா தினித்துயரம் பட்டதெல்லாம் போதும்'' என்ற மன நிலை ஏற்பட்டபோது எம் பெருமான் திருவருள் சுரந்தது. ஒரு சமயம் மானியத்திற்கு விண்ணப்பம் அனுப்பவே மறுத்ததும், அப்போது துணைவேந்தராக இருந்த 'வாமன மூர்த்தி' துணை நின்று அனுப்பச் செய்ததும் பெரும் புலவர் மு. ரா. பெருமாள் முதலியாரும் திரு இராசாக்கண்ணனாரும் தமிழ்வளர்ச்சிப் பொறுப்பிலிருந்தும் சிறிதும் உதவாது 'வளவள' என்று கைவிரிப்புச் செய்ததும், கல்வித் துறையில் துணைச் செயலாளராகப் பணியாற்றிய தமிழ்பற்று மிக்க திரு. கோ. முத்துப்பிள்ளை என்மீது கழிவிரக்கம் கொண்டு உதவ முன்வந்ததும், ஒல்லும் வகையெல்லாம் உதவியதும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவில் எழுகின்றன. 1960-முதல் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பெயரளவில் இருந்த 'தமிழ்த்துறை' 1970 முதல் ஆல்போல் தளிர்த்தது; அருகுபோல் வேரூன்றியது. செயலாற்றும் துடிப்பும் நினைத்ததை முடிக்கும் எண்ணமும் மிக்க துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டி முத்தாய்ப்பு வைத்தமாதிரி என் முயற்சிக்கு மகுடம் சூட்டினார். இப்போது,

'எண்ணிய எண்ணியாங் கெய்து எண்ணியார்
திண்ணியராகப் பெறின்[1]

1. குறள்—666.

என்ற பொய்யா மொழியின் உண்மை என் வாழ்க்கையி லேயே தெளிவாகின்றது,

பதின்மூன்று ஆண்டுகள் 'மக்கள் பேறு' வாய்க்கப் பெறாதிருந்தபோது புதிதாகத் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சியிலேயே என் கவனம் சென்றதால் மக்கட்பேறு பற்றிய எண்ணம் என் மனத்தில் ஏழாதிருந்தது. என் மனைவியும் என் அன்னையும் தான் இதுபற்றி மிகவும் கவலைப் பட்டனர். அவர்கள் வற்புறுத்தலின்பேரில் இரண்டு மாத காலம் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டேன்; இராமேச்சுவரத்தில் பல்வேறு 'வைதிகக் கருமங்களை' மேற் கொண்டேன். எனக்கு மக்கட்பேறு (1949) ஏற்பட்டது. அப்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியைவிட, இப்போது துறை பிறந்தபோது பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டது. விழாக் கொட்டகையில் அமர்ந்து கொண்டு திரு. பி. திம்மா ரெட்டி துறைகளைத் திறந்து வைத்த போது கண்கள் குளமாயின! இரண்டு கன்னத்திலும் நீர் வழியத் தொடங்கியது. அருகிலிருந்த அன்பர்கள் 'என்னவாயிற்று? ஏன் அழுகின்றீர்கள்? என்று கேட்க, 'ஒன்றுமில்லை; இஃது ஆனந்தக் கண்ணீர்!' என்று மறுமொழி பகர்ந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

மேற்கு முகமாக மேடையை நோக்கி அமர்ந்திருந்த போது வடபுறமாகப் பார்த்த போது வேங்கட வெற்பு என் கண்ணில் படுகின்றது 'திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே'[2] என்ற நம்மாழ்வார் வாக்கு நினைவிற்கு வருகின்றது. உடனே என்மனம் தேசிகனின் பாசுரத்தில் ஈடுபடுகின்றது.

கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு;
    கடுவினையர் இருவரையும் கடியும் வெற்பு;
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு;
    தெளிந்தபெருந் தீர்த்தங்கள் திகழும் வெற்பு;

2. திருவாய். 3.3.8,

புண்ணியத்தின் புகலதெனப் புகழும்வெற்பு;
பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும்வெற்பு;
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு;
வேங்கடவெற் பெனவிளங்கும் வேதவெற்பே.
என்ற பாசுரத்தை மெல்ல ஓதுகின்றது என்மனம்.

குமிழி—211

# 55. மலை நாட்டுத் திருத்தலப் பயணம்

பாண்டி நாட்டுத் திருத்தல வழிபாட்டை முடித்துக் கொண்டு நாகர்கோயிலில் வசதியாகத் தங்கியிருந்த போது எங்களுடைய மலைநாட்டுத் திருத்தலப் பயணம் தொடங்குகின்றது. முதல் நாள் காலை (1969—ஜூன் மாதம்) திருவண்பரிசாரம் என்ற திருத்தலத்திற்கு வருகின்றோம். இது நாகர்கோயிலுக்கு வடதிசையில் நெல்லை—நாகர்கோயில் நெடுஞ்சாலையில் 2 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதி உண்டு. நகரப் பேருந்தில் ஏறி நெடுஞ்சாலையில் ஒரு வாய்க்கால் பாலத் தருகில் இறங்கி முக்கால் கல்தொலைவு நடந்து கோயிலை அடைய வேண்டும். மலைநாட்டுக் கோயிலின் 'களை' இங்கேயே தென்படுகின்றது. எம்பெருமானின் திருநாமம் 'திருவாழ்மார்பன்' என்பது; நல்ல தமிழ்ப் பெயர். இது தான் வடமொழியில் 'சீநிவாசன்' என்று வழங்குகின்றது. சீ(ஸ்ரீ)—திரு; நிவாஸ்—வாழ்கிற இடம். பெரிய பிராட்டியார் வாழ்கின்ற இடத்தையுடையவன் என்பது பொருளாதல் காண்க. 'அகிலல்லேன் இறையும்' என்று

3. தே.பி. 82 (அதிகாரசங் கிரகம்—43)

அலர்மேல் மங்கை உறையும் திருமார்பை உடையவன் அல்லவா? சேவையை முடித்துக் கொண்டு தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பினோம். திருவண்பரிசாரம் என்ற ஊர் 'திருப்பதிசாரம்' என்று மக்களிடையே வழங்கி வருகின்றது. திருப்பதி சென்று வந்தால் அதனால் கிடைக்கும் பலன்கள் எல்லாம் திருவண்பரிசாரத்திற்கு வந்தால் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையே இப்பெயர் சிதைவுக்குக் காரணமாகின்றது என்று கருதலாம். நம்மாழ்வாரின் திருத்தாயார் உடைய நங்கையார் பிறந்த ஊர் இத்திருத்தலம்.

மாலையில் கன்னியாகுமரி வருகின்றோம். 'நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நித்தம் தவம் புரிந்து' வரும் குமரித் தெய்வத்தை வணங்குகின்றோம். ஊரைச் சுற்றிப் பார்க்கின்றோம். விவேகாநந்தர் பாறையைத் தொலைவிலிருந்தே கண்டு மகிழ்கின்றோம்! எதிர்பாராத விதமாக அன்று பௌர்ணமி. கடலோரத்தில் நின்று கொண்டு மேற்கே பகலவன் மறைவதையும் கிழக்கே முழுமதியம் உதயமாவதையும் ஒரே சமயத்தில் கண்டு களிக்கின்றோம். அதன்பிறகு சுசீந்திரம் வந்து தாணுமாலயனைச் சேவித்துக்கொண்டு நாகர்கோவிலை வந்தடைகின்றோம். ஒரு நல்ல உணவு விடுதியில் சிற்றுண்டியை உண்டு தங்கியிருந்த இடத்தை அடைந்து ஓய்வு கொள்ளுகின்றோம்.

அடுத்த நாள் அதிகாலையில் நீராட்டத்தை முடித்துக்கொண்டு திருவனந்தபுரத்தை நோக்கிப் புறப்படுகின்றோம். வழியில் 16 கல் தொலைவில் உள்ள 'திருவாட்டாறு' என்ற திவ்விய தேசத்தில் இறங்குகின்றோம். பேருந்தில் வரும் போதே இருபுறமுள்ள சோலைகள், தோட்டங்கள், நெல்வயல்கள், ஆறுகள், அவற்றினின்றும் கால்களாகப் பிரிந்து சென்று நிலங்களை வளமாக்கும் கால்வாய்கள் இவற்றைக் கண்டு அநுபவித்த வண்ணம் இவ்வூரை அடைகின்றோம். ஆறும் அதன்

கால்வாய்களும் சூழ்ந்திருப்பதால் ''திருவட்டாறு—திருவாட்டாறு''என்ற பெயர் ஏற்பட்டிருக்குமோ என்பது ஊகம்.

'திருவாட்டாறு' என்ற திருப்பதியை நம்மாழ்வாரே நமக்கு நன்றாக அறிமுகம் செய்து வைக்கின்றார்.

திகழ்கின்ற திருமார்பில்
    திருமங்கை தன்னோடும்
திகழ்கின்ற திருமாலார்
    சேர்விடம்தண் வாட்டாறு

என்பதாக.அலர்மேல்மங்கை உறைமார்பன் வாழும் இடம் திருவாட்டாறு என்பது ஆழ்வாருடைய குறிப்பு. சாதாரணமாக உலக வழக்கில் எல்லோரும் திருவாளர், (சீமான்) என்று சொல்லப்பெறுகின்றனரே, அப்படி அன்று இங்கு. திருமங்கை தன்னோடும் திகழ்கையினாலே, அஃதாவது (தன்மார்பில்) திருவுடன் (இலக்குமியுடன்) விளங்குகின்றவனாதலின் உண்மையிலேயே திருவாட்டாற்றான் 'திருவாளர்' என்ற அடைமொழிக்குப் பாத்திரனாகின்றான்.

'ஆதிகேசப் பெருமாள்' என்பது இத்திருப்பதி எம்பெருமானின் திருநாமம்; தாயாரின்பெயர் மரகதவல்லி. மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நமக்குச் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். திருவனந்தபுரத்திலிருப்பது போலவே, இங்கும் மூன்று சந்நிதிகள் உள்ளன. மூன்று சந்நிதிகளின் அளவுக்கு நீளப் பள்ளி கொண்டிருக்கின்றான் எம்பெருமான். இடப்புறச் சந்நிதி வழியாகத் திருமுக மண்டலக் காட்சி தருகின்றான். நடுவிலுள்ள சந்நிதி வழியாக அவனுடைய திருவுந்திக் கமலத்தைக் கண்டு களிக்கின்றோம். வலப்புறச் சந்நிதி வழியாகக் கழல் இணைகள் நம் கண்ணுக்கு விருந்தாக அமைகின்றன. ''என் அமுதினைக் கண்ட

1. திருவாய். 10. 6ꜝ: 9

கண்கள் மற்றொன்றினைக் காணாவே''[2] என்ற பாண் பெருமாளின் அநுபவத்தைப் பெறுகின்றோம்.

இத்திருக்கோவிலின் கருவறை, அர்த்தமண்டலம், இவ்விரண்டின் தளங்களும், ஒரே கல்லினாலானவை. ஆகவே, அர்த்தமண்டபத்திலிருந்த வண்ணம் பிரசாதங் களைப் பெற்றால் கருவறையின் தூய்மை கெட்டு விடும் என்று கருதி, அங்கு அவை வழங்கப் பெறுவதில்லை. அர்த்தமண்டபத்தினின்றும் இறங்கித் தரையிலிருந்த நிலை யில் சந்தனம், திருத்துழாய் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நியதி இன்றும் வழக்கத் திலிருந்து வருகின்றது.

அடுத்து, திருவனந்தபுரம் செல்லும் பேருந்தில் ஏறி, அனந்தபுரம் பயணமாகின்றோம். பேருந்து திருவனந்த புரத்தை நோக்கிச் செல்லுங்கால் எம்மருங்கும் அடர்ந்த தோப்புகள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள், பூக்கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்குமாக வலைப் பின்னல் போன்றுள்ள பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய் கள் இவற்றை கண்டு களிக்கின்றோம்.

ஓங்குமரன் ஓங்கிமலை
ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர்
சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ்
சூழலது குன்று[3]

என்று கம்பன் காட்டும் சூழ்நிலை நமது நினைவிற்கு வரு கின்றது. அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமனுக்கு பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக்காட்டுவது இப்பாடல், நாகர் கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல்

2. அமல. 10
3. கம்ப. ஆரணி—அகத்தி. 57

தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலைதான். சில இடங்களில் பகலவன் கதிர்களும் உள்புகா நிலை.

நாம் செல்லும் பேருந்து நிலையத்தை அடைகின்றது. திருவனந்தபுரம் இருப்பூர்தி நிலையமும் பேருந்து நிலையமும் எதிரெதிராக மிக அருகிலுள்ளன. அந்தப் பக்கத்திலேயே உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் உள்ளன. 1948-மே மாதத்தில் மக்கட்பேறு ஏற்படாத முன்னர் தங்கியிருந்த 'குமரன்' விடுதியிலேயே தங்குகின்றோம். நீராடிச் சிற்றுண்டி அருந்தி வந்த களைப்பைப் போக்கிக் கொள்ளுகின்றோம், மாலை ஐந்து மணி சுமாருக்குத்திருக் கோயில் செல்லுகின்றோம். திருக்கோயில் திருவாட்டாற்றுத் திருக்கோயில் போலவே சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. பல படிகள் ஏறியே கோயிலினுள் நுழைதல் வேண்டும். கோயிலின் நாற்புறமும் கனமான கோட்டைச் சுவர்கள் சூழ்ந்துள்ளன. திருக்கோயிலுக் கருகிலேயே திருவாங்கூர் அரசர் அரண்மனையும் உள்ளது. அவர் அரண்மனையிலிருந்து திருக்கோயில் வந்து போவதற்குத் தனிச் சுரங்க வழி உண்டு. அதனையும் காண்கின்றோம்.

கோயிலின் உட்பகுதியிலுள்ள பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபத்திற்கு வருகின்றோம். இந்த மண்டபத்தின் அடித்தளக் கருங்கல் 20 அடி சதுரத்தைக் கொண்டது; கனம் 2½ அடி. இம் மண்டபம் ஒற்றைக்கல் மண்டபம் என்று வழங்கப்பெறுகின்றது. இத்தகைய அடித்தளக் கல்லையுடைய மண்டபத்தைத் திருவாட்டாற்றுத் திருக் கோயிலிலும் கண்டோம். கிட்டத்தட்ட இரண்டு கோயில்களும் ஒரே மாதிரி அமைப்பினைக் கொண்டவை. ஆனும் சிற்பங்கள் முதலியவற்றை நோக்கத் திருவாட்டாற்றுக் கோயில் பழைமையுடையதெனத் தோன்றுகின்றது. அங்குப் பெரும்பாலும் கேரள நாட்டுப் பாணி மீதூர்ந்து நிற்கின்றது. திருவனந்தபுரத் திருக்கோயிலில் தமிழ்ப்

பண்பாடும் கலந்து மிளிர்கின்றது. ஒற்றைக்கல் மண்டபத்தி லிருந்து கொண்டு மூன்று திருவாயில்கள் மூலமாகவும் தெற்கு நோக்கிச் சாய்ந்த திருவபிடேகமும் வடக்கு நோக்கு நீட்டிய திருவடிகளையும் கொண்டு கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அனந்தன்மீது பள்ளி கொண்டுள்ள அனந்த பதுமநாபனைக் கண்ணாரக் கண்டு சேவிக்கின்றோம். அவனது திருவருளுக்குப் பாத்திரமாகின்றோம். 'கெடும் இடர் ஆய எல்லாம் கேசவா! என்ன'[4] என்ற நம்மாழ்வாரின் திருவாக்கு நம் மனத்தில் எழுந்தவாறு எம்பெருமானிடம் விடை பெற்றுத் திரும்புகின்றோம்.

மறுநாள் காலை சிற்றுண்டி முதலியன முடித்துக் கொண்டு உயிர்காட்சிச் சாலை, கோவலம் கடற்கரை, குடிநீர்த் திட்டம் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு பிற்பகல் இரண்டு மணிக்கு விடுதிக்கு வந்து உணவு கொள்கின்றோம். சிறிது நேரம் ஓய்வு கொண்டு பேருந்து மூலம் கொல்லத்திற்கு வருகின்றோம். கேரளத்தில் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த கோயில்கள் 13 உள்ளன. இன்னும் 10 ஐச் சேவிக்க வேண்டும், அவை உள்ள இடம் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. கொல்லத்தில் சிமாட்டித் துணிக் கடைக்கு வருகின்றோம், ஏற்கெனவே என் வருகையைத் தெரிவித்து கோட்டயத்தி லுள்ள சிமாட்டித் துணிக்கடைக்கு திரு, வீ. திருவேங்கட ரெட்டியாருக்கு எழுதியுள்ளதையும் கடையில் உள்ள வருக்குத் தெரிவித்தோம். பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரி சுவாமிகள் நூல்கள் மூலம் மலை நாட்டுத் திருப்பதிகளை நான்கு பிரிவுகளாகச் சேவிக்க வேண்டும் என்று அறிந்திருந்தேன். அவை திருவண்பரிசாரம் திருவாட்டாறு, திருவனந்தபுரம் இம்மூன்றும் ஒரு பிரிவு; திருவாறன்விளை, திருச்சிற்றாறு, திருக்கடித்தானம் திருவல்லவாழ், திருவண்வண்டூர், திருப்புலியூர் இவை

4, திருவாய்—10,2;1

ஆறும் மற்றொரு பரிவு; திருக்காட்கரையும் திரு. மூழிக்களமும் வேறொரு பிரிவு; திருவித்துவக்கோடும் திருநாவாயும் பிறிதொரு பிரிவு. இந்த நான்கு பிரிவு களிலும் உள்ள திவ்விய தேசங்களை மங்களா சாசனம் செய்து அருளினவர் நம்மாழ்வார்; மூன்று பிரிவுகளில் உள்ளவற்றைப் பாடிச் சிறப்பித்தவர் திருமங்கையாழ்வார்; ஒரு பிரிவில் உள்ளவற்றை மட்டிலும் போற்றியுரைத்தவர் குலசேகரப் பெருமாள்.

கடையிலிருந்தவரிடம் இந்த நான்கு பிரிவிலுள்ள திருக்கோயில் விவரங்களைத் தெரிவித்தோம்; முதற் பிரிவிலுள்ளவற்றைச் சரியாகச் சேவித்து விட்டதாகவும் தெரிவித்தோம். இந்த விவரங்களைத் தொலை பேசி மூலம் கோட்டயத்திற்குத் தெரிவித்தார் கடையிலுள்ள பொறுப்பாளர். உடனே திருவேங்கட ரெட்டியார் கோட்டயம் வருமாறு பணித்தார். நாங்கள் இரவில் கடையருகிலுள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்து மறுநாள் அதிகாலையில் புறப்பட்டுக் கோட்டயம் சென்று கடையில் திரு. ரெட்டியாரைப் பார்த்தோம். அவர் இரண்டு நாட்கள் எங்களைத் தம் விருந்தினராக வைத்துக் கொண்டார். நாங்கள் முற்பகல் 10 மணிக்கு வந்து அன்று முழுதும் ஓய்வு கொண்டோம். கோட்டயம் மேடு பள்ளங்கள் நிறைந்த ஒரு நகரம். மிதிவண்டி அந்த ஊருக்குப் பயன்படாது. ஆட்டோ, டாக்சி தான் எங்கும் காணப்பட்டன். அடுத்த நாள் எங்களைக் காரில் இட்டுச் செல்லும் வண்டி யோட்டியை வரவழைத்துப் பேசினார். இரண்டாவது பிரிவிலுள்ள ஆறு திவ்விய தேசங்களும் கோட்டயத்திற்கு 25 கல் சுற்றளவிற்குள் இருப்பதைத் தெரிந்து கொண் டோம். மறுநாள் காலையில் சிற்றுண்டிக்குப் பிறகு போவதாகத் திட்டம் போட்டோம்.

திருவேங்கட ரெட்டியார் ஆலப்புழை வீரய்யா ரெட்டியாரின் முதல் திருமகனார்; சட்டம் படித்துக்

கடையைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வியாபாரத்தைக் கவனித்து வந்தார். 'சீமாட்டி' என்ற பெயரிலேயே கோட்டயம், கொல்லம், செங்கணாச்சேரி வேறு ஏதோ மூன்று இடங்களில் துணிக்கடைகள், இருந்தன. கேரளத்தில் துணிகளைக் கடனுக்குக் கொடுத்து வாங்கும் வியாபாரமே அதிகம். பாக்கியை வசூல் செய்வதற்கே இந்த ஆறு இடங்கட்கும் 17 அம்பாசடார் கார்கள் இருந்தன. வெள்ளி, சனி, ஞாயிறு - இந்த மூன்று நாட்களிலும் வசூல் செய்வதற்கென்றே பொறுப்புள்ளவர்கள் இந்தக் கார்களில் செல்வார்கள். ஆண்டொன்றுக்கு 60 கோடிக்குத் துணி வியாபாரம் நடக்குமாம்.

திருவேங்கட ரெட்டியாரின் திருமாளிகை அமைப்பு மிகவும் விநோதமாக இருந்தது; மூன்று மாடிக் கட்டடம் இது. இருப்பிடம் பல சாலைகள் போகவும் வரவும் உள்ள தெருவின் ஒரு மூலையில் கட்டப்பெற்ற கட்டடம். தரைதளம், முதல் தளம், இரண்டாவது தளம் ஆகிய மூன்றிடங் கட்கும் கார் வந்து போக வசதிகள் உள்ளன. காலையில் சிற்றுண்டி உண்டவுடன் தரைதளத்திலிருந்து கடைக்குப் போகலாம்; பகலில் ஓய்வு கொள்ள நடுத்தளத்திற்கு வரலாம்; இரவில் படுக்கைக்காக இரண்டாவது தளத்திற்குக் காரில் வரலாம். திருவேங்கட ரெட்டியார் இவற்றையெல்லாம் எங்கட்குக் காட்டினார்.

மறுநாள் காலையில் சிற்றுண்டிக்குப் பிறகு எங்களைக் காரில் அனுப்பினார். வண்டி யோட்டி விவரம் தெரிந்த மனிதர். கேரளத்தில் திருக்கோயில்கள் காலை 7 மணி முதல் 11 வரையிலும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும் திறந்திருக்கும். இந்த நேரங்களில் இறைவனை தரிசிக்க முடியும். ஆகவே காலத்தை வீணாக்காமல் சுறுசுறுப்பாக இயங்குகின்றோம். முற்பகல் திருவாறன் விளை, திருச்செங்குன்றூர், திருக்கடித்தானம், திருவல்லவாழ் என்று நான்கு தலங்களையும் மாலையில்

திருவண்வண்டூர், திருப்புலியூர், என்ற இரண்டு தலங்களையும் சேவித்துக் கோட்டயம் வந்து சேர மாலை 7½ மணியாகின்றது, இரவு உணவிற்குப் பின் ஓய்வு கொள்கின்றோம். அடுத்த நாள் சிற்றுண்டிக்குப் பிறகு இருப்பூர்தி நிலையத்திற்கு எங்களைக் காரியில் அனுப்புகின்றார் திருவேங்கடம் ரெட்டியார். இதற்குள் எர்ணாகுளத்தில் தங்கி திருக்காட்கரை, திருமூழிக்களம் என்ற இரண்டு தலங்களையும் சேவிக்க வேண்டும் என்பதை அறிகின்றோம்.

எர்ணாகுளத்தில் விடுதியொன்றில் தங்குகின்றோம். உணவு முதலியவற்றை இருப்பூர்தி நிலையத்தில் கொள்ள ஏற்பாடு செய்து கொள்ளுகின்றோம். ஒருநாள் காலை திருக்காட்கரை போகின்றோம், இத்திருத்தலம் எர்ணாகுளத்திலிருந்து சுமார் 10 கல் தொலைவில் உள்ளது. பேருந்து வசதியுண்டு; ஆனால் அடிக்கடி இல்லை. புதிய இடம் ஆகையால் விசாரித்துக் கொண்டு போவதில் தாமதம். திருக்கோயிலை அடையும் போது முற்பகல் 11 மணிக்கு மேல் ஆய்விட்டது. கோயில் சாத்தப் பட்டு விட்டது. 12 மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை காத்திருக்க நேரிட்டுவிட்டது; காத்திருந்தோம். மாலை ஐந்து மணிக்குத்தான் சேவித்தோம், நம்மாழ்வார் மட்டிலும் மங்களாசாசனம் செய்த திருத்தலம். இத்தலத்திற்குரிய பதிகம் மிகவும் அற்புதமானது. ஒரு பாசுரம்;

வாரிக் கொண்டு உன்னை
விழுங்குவன் காணில்என்று
ஆர்வுற்ற என்னைஒழிய
என்னில் முன்னம்
பாரித்துத் தான்என்னை
முற்றப் பருகினான்;

கார்ஒக்கும் காட்கரை
அப்பன் கடியனே.[5]

என்பது. இறைவனைக் கண்டால் அப்படியே விழுங்கி விடுவதாக ஆசைப் பட்டிருந்தார் ஆழ்வார்; ஆனால் இப்படிச்செய்யவேண்டும் என்று தனக்கு முன்பே இறைவன் எண்ணித் தன்னை அடியோடு பருகிவிட்டான். ஆழ்வாருக்கு இறைவன் ''உண்ணும் சோறு பருகும் நீர்''[6] என்னலாம் படி இருந்தான். அங்ஙனமே இறைவனுக்கும் ஆழ்வார் ''உண்ணும் சோறு பருகும் நீர்'' என்று ஆகிவிட்டார். திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பாசுரம் உயிரானது என்பது வைணவர்களின் திருவுள்ளம்.

திருக்காட்கரை அப்பனையும் பெருஞ்செல்வ நாயகியை யும் சேவித்து விட்டு மாலை ஆறு மணிக்குத் திரும்பு கின்றோம். அடிக்கடி பேருந்துகள் இல்லாததால் தொல்லைகள். வழியில் ஓரிடத்தில் பெரிய சாலை புதிதாக போடப்பட்டு வேலை நடந்து கொண்டிருந்தது. அது புதிதாகத் திறக்கப்பெற்றுள்ள கொச்சிப் பல்கலைக் கழகத்திற்குப் போகும்வழி என்றுசொன்னார்கள், சரியாக மாலை ஏழு மணிக்கு தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்கின்றோம். இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து இரவு உணவுகொண்டு ஓய்வு கொள்ளுகின்றோம்.

மறுநாள் காலை திருமூழிக்களம் போய்வர எண்ணு கின்றோம். இந்த ஊர் எர்ணாகுளம் ஷோரனூர் இருப்புப் பாதையிலுள்ள ஆல்வே நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் இவ்வூரை அடைய வேண்டும் என்ற செய்தியை அறிந்து கொண்டு சரியாகக் காலை 7½ மணிக்குப் புறப்படுகின்றோம் இருப்பூர்தியில். அங்கு 10 கல் தொலைவு பேருந்தில் சென்று ஓரிடத்தில் இறங்கி 60

5. திருவாய் 9.6.10
6. ,, 6.7.1.

கெஜ தூரம் நடந்து திருக்கோயிலை அடைகின்றோம். நம்மாழ்வார் இத்தலத்து எம்பெருமானை நாயகி நிலையி லிருந்து தூது விடுவதாக அமைந்த பாசுரத்தால் சேவிக் கின்றார். அற்புதமான பதிகம் இது. பாசுரங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்து திருமூழிக்களத்தானையும் மதுரவேணி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். அங்கிருந்து திரும்பி பகல் 12 மணிக்கு எர்ணாகுளம் வந்து சேர்கின்றோம்; பகலுணவு இருப்பூர்தி நிலையத்திலுள்ள உணவு விடுதியில். அறைக்குச் சென்று காலி செய்து விட்டு சாமான்களுடன் மீண்டும் நிலையத்துக்கு வந்து சேர் கின்றோம்.

இன்று குருவாயூர் அப்பனைச் சேவிக்க வேண்டும் என்பது திட்டம். நீண்ட தூரம் கடக்க வேண்டியிருப்பதால் இருப்பூர்திப் பயணமே சிறந்தது. விரைவு வண்டி யொன்றில் ஏறி திருச்சூர் வந்து சேர்கின்றோம். அங்கிருந்து சுமார் 15 கல் தொலைவு பேருந்தில் பயணம் செய்து குருவாயூரை அடைகின்றோம். பலத்த மழையில் மாட்டிக் கொண்டு மிக்க சிரமத்துடன் வந்து சேர்கின்றோம். தெய்வ சங்கல்பத்தால் மிக்க சிரமத்துடன் தேவஸ்தான விடுதியில் தங்குவதற்கு ஓர் அறை கிடைக் கின்றது. அதில் தங்குகின்றோம். ஏதோ ஓர் உணவு விடுதி யில் உணவு கொண்டு இரவில் ஓய்வு. மறுநாள் காலை குருவாயூர் அப்பன் சேவை. அன்று காலையில் சந்தனக் காப்புடன் திகழ்ந்தான் கிருஷ்ணன். அழகெல்லாம் திரண்டு ஓரிடத்தில் இருந்தாற்போன்ற திருமேனியில் உள்ளத்தைப் பறிகொடுத்தோம், இத்திருக்கோயிலில் துலாபாரப் பிரார்த்தனைக்கும் வழி செய்திருப்பதைக் கண்டோம். கோயிலிலிருந்து திரும்பும்போது கோயிலின் அருகில் பல யானைகளைக் கண்டோம். இக்காட்சி எங்கள் மனத்தைக் கவர்ந்தது.

அறையைக் காலி செய்து கொண்டு இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து வண்டியேறி ஷோரனூர் வந்தோம்.

அங்கு ஒரு இஸ்லாமியருக்குரிய தங்கும் விடுதியில் தங்கினோம். இந்த ஊரில் எங்கும் மரக்கறி உணவு விடுதி இல்லை. இருப்பூர்தி நிலையத்தில் உள்ள விடுதியிலும் உணவு சரியாக இல்லை. உணவுக்கு மிகவும் சிரமப் பட்டோம். வந்த அன்று மறுநாள் காலையில் திருநாவாய் என்ற திவ்விய தேசத்தைச் சேவிக்க நினைத்தோம். இது ஷோரனூர்—மங்களூர் இருப்பூர்தி வழியில் 25 கல் தொலைவிலுள்ளது. திருநாவாய் ஓர் இருப்பூர்தி நிலையம். நிலையத்திலிருந்து திவ்விய தேசம் 1½ கல் தொலைவிலுள்ளது. நடராஜா சர்வீசைத் தவிர வேறு வழி இல்லை. நடந்து சென்றுதான் சேவிக்கின்றோம். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இந்த எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர். நம்மாழ்வாரின் பாசுரம் தலைவி பாசுரமாக நடைபெறு கின்றது. பராங்குச நாயகி இருந்த இடத்திலிருந்து கொண்டே எம்பெருமானை அநுபவிக்கின்றாள்.

அறுக்கும் வினையாயின
  ஆகத்து அவனை
நிறுத்தும் மனத்தொன்றிய
  சிந்தையி னார்க்கு
வெறித்தண் மலர்ச்சோலைகள்
  சூழ்த்திரு நாவாய்
குறுக்கும் வகையுண்டு
  கொலோகொடி யேற்கே[7]

"அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராதவமுதமாக இருக்கும் எம்பெருமானைத் தங்கள் உள்ளத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினையுடைய வர்கட்கு" திருநாவாய் அண்மைக்கு வரும்படியான உபாயம் உண்டோ? என்பது பராங்குச நாயகியின்

7. திருவாய் 9.8:1

எண்ணம். 'வினையாயின' என்பதனால் விரோதிகளைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். அந்த விரோதிகள் சொரூப விரோதி, உபாய விரோதி, பிராப்யவிரோதி என்று திருமந்திரத்தில் கூறப்பெறும் மூன்று விரோதிகளாகும்.[8] இவற்றைத் தவிர சஞ்சிதம் (பழவினை), பிராரப்தம் (நுகர் வினை), ஆகாமியம் (எதிர்வினை) போன்ற வினைத் தொகுதிகளும் உள்ளன. இவையனைத்தும் அடங்கியவையே 'வினையாயின'வாகும் எம்பெருமானை உள்ளத்தில் நிலைநிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களிடம் இவ்விரோதிகள்யாவும் அணுகா என்பது கருத்து.

பராங்குசநாயகி 'வெறித்தண்...கொடியேற்கே' என்பதில் அந்தத் திவ்விய தேசத்திற்கு அண்மையில் வாழும்படியான உபாயம் உண்டோ? என்று எண்ணுகின்றாள். 'குறுக்கும் வகை' என்பது மலையாள மொழி வழக்காகப் பாட்டில் அமைந்து கிடக்கின்றது. இதுபற்றி ஓர் ஐதிகம் சொல்லுவதுண்டு. ஒரு சமயம் இராமாநுசர் மலைநாட்டுத் திருத்தலப் பயணமாகச் சென்றிருந்தார். திருநாவாய்க்கு அணித்தாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது எதிரிலே வந்து கொண்டிருந்த மலையாளர்களை நோக்கி 'திருநாவாய் எவ்வளவு தூரமுண்டு' என்று வினவ, அவர்கள் 'குறுக்கும்' என்றார்கள்; அண்மையில் உள்ளது என்பது இதன் பொருள். எம்பெருமானார் இதனைக் கேட்டு 'இப்பகுதிமொழியாலேயன்றோ அருளிச் செய்துள்ளார் ஆழ்வார்?' என்று பாசுரத்தில் மிகவும் ஈடுபட்டதாக ஒரு வரலாறு உண்டு.

திரும்பி இருப்பூர்தியில் வரும்போது பட்டாம்பி என்ற நிலையத்திற்கு அருகே வண்டி வருங்கால் பாரதம் புழா என்ற ஆறும் அதன் கரையிலுள்ள திருவித்துவக் கோட்டம்மான் திருக்கோயிலும் தென்படுகின்றன. வண்டி

8. முழுட்சுப்படி—83, 84, 85

யிலிருந்த வண்ணம் அந்த அம்மானுக்கு ஒரு 'கும்பிடு' போடுகின்றோம்; 11-30 மணிக்கு ஷோரனூர் வந்து விடுகின்றோம். நிலையத்திலுள்ள உணவு விடுதியில் உணவு கொண்டு அறைக்குத்திரும்பி ஓய்வு கொள்ளுகின்றோம். மாலையில் பேருந்து நிலையம் வந்து 'திருமிற்றக்கோடு' என்ற ஊருக்குப் புறப்படுகின்றோம். இவ்வூருக்கு அடிக்கடி பேருந்து வசதி உண்டு. இந்த ஊர் ஷோரனூர்— குருவாயூர் நெடுஞ்சாலையில் ஷோரனூரிலிருந்து 10 கல் தொலைவிலுள்ளது. சாலையின் மேலேயே ஊர் உள்ளது. நாம் திருமலைக்குப்பேருந்தில் செல்லும்போது கொண்டை ஊசி வளைவுப் பாதையில் பேருந்து செல்லும்போது மலையின் இயற்கைக் காட்சியில் நுகர்ந்தவண்ணம் செல்வதைப் போலவே, ஷோரனூருக்கும் வித்துவக் கோட்டிற்கும் இடையிலுள்ள ஒரு பெருங்குன்றினை இத்தகைய வளைவுப் பாதையில் நாம் செல்லும்போது மலையின் இயற்கைக் காட்சியில் தோய்ந்த வண்ணம் செல்லுகின்றோம். எங்கோ பிறந்து வளர்ந்த பாரதப் புழா என்ற ஆறு வளைந்து வளைந்து சென்று வித்துவக் கோட்டு அம்மானை நாடி அவன் திருவடிகளை வருடிச் செல்லும் அற்புதக் காட்சியினைக் கண்டு களிக்கலாம். நாம் மலைப் பாதையில் வளைந்து வளைந்து செல்லும் போதெல்லாம் வளைந்து வளைந்து செல்லும் ஆற்றையும் பலமுறை கண்டு அநுபவிக்கின்றோம்,

இங்ஙனம் போய்க் கொண்டிருக்கும்போது

தெளிது ஆக உள்ளத்தைச்
    செந்நீறீஇ ஞானத்து
எளிதுஆக நன்கு உணர்வார்
    சிந்தை — எளிதுஆகத்
தாய்நாடு கன்றேபோல்
    தண்துழா யான்அடிக்கே
போய்நாடிக் கொள்ளும்
    புரிந்து.[9]

---

9. முதல். திருவந்.39

என்ற பொய்கையாழ்வாரின் வாக்கு பண்பட்ட நம் உள்ளத்தில் குமிழியிட்டு எழுகின்றது. பல்லாயிரப் பசுத் திரளினுள் ஒரு சிறிய கன்று தன் தாயைக் கண்டறிந்து ஆவலுடன் அதனையடைவது போலவே, பரமான் மா—சீவான்மா உறவை நன்கறிந்த நம் மனம் பதறிக் கொண்டு அவ்வெம்பெருமானையே எண்ணிய வண்ணம் மிக ஆவலுடன் செல்லும் உணர்ச்சியைப் பெறுவதை உணரலாம்.

வித்துக்கோடு என்ற ஊரில் இறங்கி வலப்புறமாகத் தோப்புகளினிடையே ஒரு சிறு சாலை வழியாக நான்கு ஃபர்லாங்கு தொலைவு நடந்து கோயிலை அடைகின்றோம். கோயில் பெரிய கோயிலன்று. ஒரே ஒரு பிரகாரத்தைக் கொண்டது. இந்தப் பெருமாள் மிக அழகானவர்! நாங்கள் சென்றபோது சந்தனக்காப்புடன் திகழ்ந்தார். நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திரு முகமண்டலத்துடன் சேவைசாதிக்கும் உய்ய வந்த பெருமாளையும் தாயார் வித்துவக்கோட்டு வல்லி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். குலசேகரப் பெருமாள் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் நினைவிற்கு வருகின்றன. சீமன் நாராயணனையன்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை ஆழ்வார் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்திக் கூறியுள்ளமையை நினைந்து போற்றுகின்றோம்.

தருதுயரம் தடாயேல்உன்
சரண்அல்லால் சரண்இல்லை;
விரைகுழுவும் மலர்ப் பொழில்சூழ்
வித்துவக்கோட்டு அம்மானே!

அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி!
அதுவேபோன்று இருந்தேனே.[10]

எம்பெருமானைத் தாயாகப் பாவித்து நாம் குழந்தை நிலைக்கு வந்து விடுகின்றோம். சினத்தினால் ஒருதாய் தான் பெற்ற குழவியை ஒரு சமயம் வெறுத்துத் தள்ளினாலும், தாயின் கருணையையே கருதி குழந்தை அழுது அழுது அவன் கருணைக்குப் பாத்திரமாகின்றது. 'அழுதால் உன்னைப் பெறலாமே'[11] என்றபடி அழுது அடி அடைந்த மணிவாசகரைப் போலவே, கண்களில் நீர்மல்க அழுகின்றோம். இந்நிலையில் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவு முறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்ற உணர்வில் ஆழ்ந்து நிற்கின்றோம். இப்பதிகத்திலுள்ள உவமைகள் யாவும்கேரள நாட்டு வாழ்க்கையைச்சித்திரிப்பனவாக அமைந்துள்ளன. நாம் வந்த அன்று எங்கோ மழை பெய்து திடீரென்று ஆறு வெள்ளப்பெருக் கோடியதைக் கண்டு வியந்தோம்!

பின்னர்ப் பேருந்தில் திரும்பி ஷோரனூர் வந்து சேர்ந்தோம். அன்றிரவே இருப்பூர்தியில் ஏறிகோவை வந்து சேர்ந்தோம். பழநியாண்டியைச் சேவிக்க வேண்டும் என்ற அவாவால் உந்தப்பெற்று கோவையிலிருந்து பழநி வந்தடைந்தோம். அப்போது காலை மணி ஐந்து. தேவஸ்தானத்து விடுதியொன்றில் அறையொன்றை ஒதுச்கிடு செய்து வைத்திருந்தார் ஆ.மு, பரிமணம் (தமிழ்ப் பேராசிரியர், பழநி யாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி). நாங்கள் நீராடி மலைக்குப் போகத் தயாராக இருந்த போது எங்களை வந்து சந்தித்தார். விபூதி, பஞ்சாமிர்தம்

10. பெரு. திரு. 5 :
11. திருவா. திருச்சத. 90

வாங்க வேண்டுமானால் சித்தநாதன் கடையில்வாங்குமாறு பணித்தார். இனி அலைய வேண்டாம் என்று சொல்லி யனுப்பினோம்; அன்று மாலையே கோவை புறப்படுவதாக வும் கூறினோம்.

காலை 6-30க்கு சிற்றுண்டி உண்டு மலை ஏறினோம். மலை ஏறுவதில் இருகுமாரர்களும் உற்சாகம் காட்டினர். நல்லதரினம் ஆயிற்று.

நாளென் செயும்வினை தானென்
செயும்எனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென்
செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.[12]

என்ற அருணகிரியாரின் வாக்கால் சேவித்தோம். கோயிலைச் சுற்றினோம். திருச்சுற்றில் குடிநீர்க்குழாய் கள் பொருத்தப் பெற்றிருந்தன; அதில் நீர் பருகினோம். மலையேறுவதற்கு இருப்பூர்தி வசதி செய்யப்பெற்றிருந்த தையும்அதில் ஏறி வருவதையும் இறங்கிச் செல்வதையும் பார்த்துக் கொண்டு படி வழியாகவே இறங்கினோம். மலையடிவாரத்தில் சித்தநாதன் கடையில் விபூதிப் பொட்டலங்களையும் பஞ்சாமிர்தத்தையும் வாங்கிக் கொண்டு திரும்பினோம். வரும்வழியில் சரவணப் பொய்கையை என் குமாரர்களுக்குக் காட்டி அதன் வரலாற்றைக் கூறினேன்.

12. கந். அலங் : 38

வரும்வழியில் திரு ஆவினன் குடித்திருக்கோயிலுக்குச் சென்றோம்; முருகனை வழிபட்டோம். இது 'ஆவினன் குடி' என்னும் ஊரைச் சேர்ந்த பழைய கோயில்; திரு முருகாற்றுப் படையில் குறிப்பிடப் பெற்றிருப்பது இத்திருக்கோயிலே. மலையின்மீதுள்ள தண்டபாணிக் கோயில் பிற்காலத்தது என்பர். இக்கருத்து ஆய்வுக்குரியது. பிறிதொருகுறிப்பு: ஆவியர் என்ற வேளிர் வகுப்பினரின் தலமே ஆவி நன்குடி.[13] 'பொதினி' என்று சங்க இலக்கியத்தில் (அகநானூறு) காணப்பெறும் சொல் காலப் போக்கில் 'பழநி' என்று திரிந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்து. சங்க காலத்தில் பழநிமலை நாட்டை வேள் ஆவியின் குடியினர் ஆண்டு வந்தனர். அவர்களுள் கடை எழுவள்ளல்களுள் ஒருவனான வையாவிக் கோப்பெரும் பேகன் என்பவன் மயிலுக்குப் போர்வை தந்த வள்ளல், ஆவிக்குடியினர் வாழ்ந்த ஊர் 'ஆவிகுடி' என்று வழங்கப் பெற்று 'ஆவி நன்குடி' என்ற சிறப்புப் பெயராக மாறியது போலும். 'ஆவிநன்குடி என்ற பெயர், ஆவினன்குடி' எனத் தவறாக எழுதப்பெற்றுச் சில புராணக் கதைகளுக்கும் காரணமாயிற்று. 'திரு'வாகிய பெரிய பிராட்டியாரும் (இலக்குமி), 'ஆ' என்ற காமதேநுவும், 'இனன்' ஆகிய சூரியனும் வழிபட்டதால், திரு ஆவினன் குடி' எனக் கோயிலுக்குப் பெயர் வந்ததாகத் தல புராணம் கூறு கின்றது! இவை மட்டுமா? 'குடி' என்பதில் 'கு' என்பதற்குப் 'பூமி' என்றும், 'டி' என்பதற்கு 'அக்கினி' என்றும் பொருள் கொண்டு நிலமகளும் நெருப்புக் கடவுளும் கூட சிவபெருமானை வழிபட்டு அருள் பெற்றனர் என்று செப்புகின்றது தல புராணம், இந்த இருவருக்கும் கூட மற்றவர்களுடன் இத்திருக்கோயில் மண்டபத்தில் உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன! புராணச் செய்திகள் வரலாற்று நிகழ்ச்சிகளை மறைத்து விடுகின்றன என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

13. அகம்-1, 61.

திருமுருகாற்றுப் படையில் குறிப்பிடப் பெற்றுள்ள செய்தி இது: பிரணவத்தின் பொருள் அறியாத நான்முகன் முருகனால் சிறையிடப் பெற்றான். அந்த நான்முகனை விடுவிப்பதற்காக முன்னே முனிவர்கள் புக, அவர்கட்குப் பின்னர் கந்தருவரும் அவர் மகளிரும் பாடிவர, புள்ளணி நீள் கொடிச் செல்வனும் (திருமால்), மூவெயில்முறுக்கிய முரண்மிகு செல்வனும்(சிவபெருமான்), யானை எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும் (இந்திரன்), மூப்பத்து மூவர் தேவருடனும் பதினெண் கணங்களுடனும் திருவாவிநன்குடிக்கு வருகின்றனர். உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் வேறொரு வரலாற்றைக்குறிப்பிடுவர்: முருகன் சூரனையும் அவுணர்களையும் வென்று அமரலோகத்தைப் பழையபடியே தேவர்கட்கு உரிமையாக்குகின்றான். இதற்கு நன்றியறிதலைக் காட்டும் முகத்தான் இந்திரன் தன் மகள் தெய்வயானையை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றான். முருகன் அப்பொழுது தன் வேலே இந்த வெற்றிச் செயலுக்குக் காரணம் என்று கூறுகின்றான். அது கேட்ட நான்முகன் அந்த வேலிற்குரிய ஆற்றல் தன்னால்தான் வந்தது என்று தருக்கிக் கூறுகின்றான் இதனைப் பொறாத முருகன் நான்முகனைப் பூமியில் பிறக்குமாறு சாபம் இடுகின்றான். அச்சாபத்தின்படி பூமியில் பிறந்துழலும் நான்முகனின் சாபத்தைப் போக்கியருளுமாறு முறையிடுவதற்காகவே இவர்கள் பூமிக்கு வருகின்றனர் என்பதாக.

இந்தப் பழநிக்கு நான் வந்தது நான்காவது பயணம். முதற் பயணம் 1928-இல் எனக்கு முடி இறக்குவதற்காக வந்தது. சில மாதங்களில் என் தம்பிக்கு முடி இறக்குவதற்காக வந்தது இரண்டாவது பயணம். 1956-இல் என் மக்கள் இருவருக்கும் முடி இறக்குவதற்காக வந்தது. மூன்றாவது பயணம். முதற்பயணத்தின் போதும் மூன்றாவது பயணத்தின் போதும் என் அன்னையார் எங்களுடன் வந்தார்.

இந்தப் பயணத்தில் அறைக்குத் திரும்பும் போது பகல் 12 மணி; வழியில் ஒரு விடுதியில் உணவு கொண்டு திரும்பினோம். மாலை 3 மணிக்கு இருப்பூர்தியில் ஏறிக் கோவை வந்து சேர்ந்தோம்.

அன்றிரவே நீலகிரி விரைவு வண்டியில் ஏறி இரவு 11½ மணிக்கு சேலம் (சூரமங்கலம்) சந்திப்பை வந்து சேர்ந்தோம். நிலையத்தில் ஓய்வு கொள்ளும் அறை கிடைக்காததால் ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு சேலத்திற்கு (டவுன்) வந்து ஒரு விடுதியில் தங்கினோம். அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து நீராட்டத்தை முடித்துக் கொண்டு சிற்றுண்டி உண்டு சூரமங்கலம் வந்து சேர்ந்தோம். 6-30 மணிக்கு மேட்டூர் செல்லும் இருப்பூர்தி ஏறி சுமார் 8-15க்கு மேட்டூரை அடைந்தோம். அணையை நடந்தே பார்த்தோம். முதலில் மிதமிஞ்சிய தண்ணீர் வெளிப்படுவதற்கு ஏற்பாடாகவுள்ள 16 கண்கள் உள்ள இடத்திற்கு வந்தோம். அடுத்து அணையின்மீதே நடந்து தென் கோடிவரையிலும் வந்தோம். கோடை காலமாதலால் அணையில் தண்ணீர் அதிகமாக இல்லை. மேலிருந்தபடி அணைக்கீழ்புறம் உள்ள இடங்களைப் பார்த்தோம். பூங்காக்கள் யாவும் வாடிய நிலையில் இருந்ததைக் கண்டோம். தென்கோடியில் இறங்கி அணைக்கு உட்புறமாகவுள்ள சுரங்கப் பாதையை வெளியிலிருந்தே கண்டோம்; உள்ளே செல்ல இசைவு பெறமுடியவில்லை, இந்தப்பாதை அமைப்பினால் எவ்வளவோ கல், சிமிட்டி மிச்சம் என்பதை என் குமாரர்கட்கு விளக்கினேன். பசி வந்து விட்டது- கையிலிருந்த பிஸ்கெட் பொட்டலத்தைப் பிரித்து உண்டு பசியை ஒருவாறு போக்கிக் கொண்டோம்; குடிநீருக்குப் பஞ்சம் இல்லை. இப்படி நடந்து கொண்டே மேட்டூருக்கு வரும் போது நேரம் 12-மணி. ஓர் உணவு விடுதியில் உணவு உண்டு அரைமணி நேரம் இளைப்பாறி பேருந்து நிலையத்திற்கு வந்து பேருந்தில் சேலம் திரும்பினோம். இப்போது மாலை மணி 3.50.

இந்த மேட்டூர்ப் பயணம் எனது நான்காவது பயண மாகும். முதல் பயணம் 1933 ஆகஸ்டில் (நான் ஐந்தாவது படிவம் முசிறியில் பயின்றபோது) மேற்கொண்ட சுற்றுலா வாகும். அப்போது அணை வேலை முற்றுப் பெறா திருந்தது, எல்லா வேலைகளும் ஒருவாறு முடிந்து நடுவில் சுமார் 100 அடி மூடப் பெறாதிருந்த நிலை. 1940 சனவரியில் நான்என் மாமனார் வீட்டில்(பொட்டணத்தில்) இருந்தபோது நான் என் மனைவி, மனைவியின் தாயார், மாமனார் ஆகிய நால்வரும் வந்தோம். இது என் இரண்டாவது பயணம். 1948 டிசம்பர் மாதத்தில் என் நண்பர் A. இராமசாமியைப் பார்க்க வந்தேன். இது என் மூன்றாவது பயணம். அப்போது என் நண்பர் ஒய். ஆர். குருசாமி (என் ஆசிரியர் இராமச்சந்திர அய்யர் மகன்) இல்லத்தில் மாலை சிற்றுண்டி காஃபி அருந்தியது என் நினைவில் இன்றும் (ஏப்பிரல் 1990) சுவையாக உள்ளது. முதல் தடவைச் செலவு என் அன்னை தந்த பணத்தால் நடைபெற்றது. இரண்டாவது தடவை செலவானது என் மாமனார் பணம். மூன்றாம் தடவையும் நான்காம் தடவையும் செலவானது நான் ஈட்டிய பணம்.

அன்று இரவு நீலகிரி விரைவு வண்டியில் ஏறி அதிகாலையில் 3.30க்கு காட்டுப்பாடி வந்து சேர்ந்தோம்; ஐந்து மணிக்கு வேறொரு வண்டி ஏறி காலை 8-மணி சுமாருக்குத் திருப்பதி வந்து சேர்ந்தோம். திருப்பதி வந்த பிறகு 1970-ஜூன் மாதம் எம். ஏ. வகுப்பு தொடங்கப் பெற்றது. 1971-சனவரியில் பல்கலைக் கழகத்தில் பிரகாசம் நகரில் துணைப் பேராசியருக்குரிய வீடு (8, ரீடர் குடியிருப்பு, பிரகாசம் நகர்) கிடைத்தது. உமாமகேசுவர ரெட்டிக் குடியிருப்பில் இருந்தபோது மலைநாட்டு திருப்பதிப் பயணத்தை 13 கட்டுரைகளாக எழுதி முடித் தேன். இந்தப் பதின்மூன்று கட்டுரைகளிலும் ஆழ்வார் களின் பக்தியுணர்ச்சியின் கொடு முடிகளைக் காணலாம். சில இடங்களில் சுட்டப் பெற்றுள்ள எடுத்துக்காட்டுகளால்

பாசுரத்தின் சொல் வளத்தையும், உரையின் நயத்தினையும் உணரலாம். பக்தி இலக்கியத்தில் அகப்பொருள் துறைகள் அமைந்துள்ள சிறப்பைக் கண்டு சுவைக்கலாம். எல்லாக் கட்டுரைகளிலுமே 'ஆசாரி ஹிருதயத்தின்' நாடி துடிப்பதனை அறியலாம் இக்கட்டுரைகளைப் படிப்போரிடையே வைணவ இலக்கியத்தின்பால் அவாவினை எழுப்புவதையும் உணரலாம்.

இந்த பக்திப் பனுவலுக்கு—திருத்தலப்பயண நூலுக்கு-அணிந்துரை வழங்கி ஆசி கூறியவர் சென்னை உயர்நீதி மன்றநீதிபதி எஸ். மகராசன் அவர்கள். இந்த நூலைக் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளின் எண்பதாவது ஆண்டு நிறைவில் (சதாபிஷேகம்) நடைபெற்ற அகண்ட திவ்வியப் பிரபந்த சேவையின்போது அந்த அடியார் திருக்கூட்டத்தில் பழவகைகளுடன்,

வடமொழிச் சுவையை தென்றமிழ்ப் பயனை
மாநிலம் வியப்புறப் பருகித்
திடமுறு ஞானக் கொண்டலாய் வளர்ந்து
சேதனர் எனும்பயிர் முளைக்கக்
கடலுல குவக்க மழைபொழி அண்ணங்
கரரவர் திருவடி மலரில்
சுடர்மிகப் பெற்று வயங்குக என்றித்
தூயநூல் சமர்ப்பணம் புரிந்தேன்

என்ற பாடலால் அன்புப்படையலாக்கினேன். எஸ். ஆர். சுப்பிரமணியப் பிள்ளையவர்களால் வெளியிடப் பெற்ற (மார்ச்சு-1971) மலைநாட்டுத்திருப்பதிகள் என்ற இந்நூல் என்னுடைய இருபத்துமூன்றாவது வெளியீடாகும்.

இந்த நூலை ஒரே மூச்சில் படித்து முடித்த அண்ணங்கராசாரிய சுவாமிகள் எனக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிப்பது: ''உண்மையில் பக்தர்கட்கு இந்நூல் நல் விருந்து. ஜஸ்டிஸ் முன்னுரை மிகப் பொருத்தமாக அமைந்

துள்ளது......'திருக்கோயில்' பத்திரிகை தொடக்கமான காலத்தில் 'மலைநாட்டுத் திருப்பதியநுபவம்' என்ற கட்டுரை இரண்டாண்டளவும் எழுதித் தந்தேன். பிரசுரமாயிற்று...... அதனிற் சிறந்த அநுபவம் உமது என்று அறுதியிட்டேன். அடிக்கடியெடுத்து வாசிக்கத் தூண்டும் நூலிது.'' கிடைத்தற்கரிய பாராட்டு இது. இதைச் சுவாமிகளின் ஆசியாகப் போற்றுகின்றேன்.

குமிழி—212

## 56. பரணிப் பொழிவுகள்

1965-66 ஆண்டில் நான் முன்னிருந்து தொடங்கி நிலை பெறச் செய்த பாக்காலா தமிழ்ச் சங்கம் அவ்வூரில் வாழ்ந்து வரும் தமிழ்ப் பெருமக்களும் பேரளவில் இருப்பூர்தித் துறையில் (Railway Department) பல்வேறு நிலைகளில் பணியாற்றும் தமிழ் மக்களும் பயன்படும்படியாகக் கலிங்கத்துப் பரணி என்ற சிற்றிலக்கியத்தில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தத் திட்டமிட்டேன். இவை திருவேங்கடம் பல்கலைக்கழகம், பாக்காலா தமிழ்ச்சங்கம் இரண்டின் கூட்டு ஆதரவில் 'விரிவுச் சொற்பொழிவுகள்' என்ற திட்டத்தில் நடைபெற்றன. ஆறுவாரங்களில் ஞாயிறு மாலை ஆறு மணிக்கு இவை வழக்கமாக நடைபெற்றன. பாக்காலாவில் இவற்றைப் பொறுப்புடன் முன்னின்று நடத்தியவர்கள் திரு. ஜகதீசன் (நலவாழ்வு அதிகாரி, இருப்பூர்தித் துறை), இருப்பூர்தித் துறையின் கீழ் நடைபெற்ற பள்ளியின் தலைமையாசிரியர் G. கோபாலகிருஷ்ணன், வேறு சில நண்பர்கள், உள்ளூர் சிற்றுண்டி விடுதி அய்யர் ஒருவர் ஆகியோர் இவர்கள் நல்ல ஒத்துழைப்பு நல்கினர்.

பல்கலைக் கழகத்தின் விரிவுச் சொற்பொழிவுகள் திட்டத்தினால் விளையும் பயன்கள் மிகப் பல. புலத்துறைப் பேராசிரியர்கள் பொதுமக்களிடம் தொடர்பு கொண்டு தம் ஆராய்ச்சியால் பெற்ற அறிவை அவர்கட்கு வழங்குகின்றனர்; இதனால் பல்கலைக் கழகம் தன்னைச் சுற்றிலும்—பல்கலைக் கழகத்திற்கு வெளியே—உள்ள அறிஞர்களுடன் தொடர்பு கொள்ள இவை வழியமைத்துத் தருகின்றன. இதனால் பல்கலைக் கழகத்தின் ஒரு சமூகப் பொறுப்பு நிறைவேறுகின்றது. தாயகத்தை விட்டு பிழைப்பின் நிமித்தம் மொழிபெயர் தேயத்தில்—தெலுங்கு பெருவழக்காக நிலவும் பகுதியில்—பணியாற்றும் தமிழர்கட்குத் தாய்மொழி இலக்கியங்களைப்பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லை. அங்ஙனமே, தாய்மொழியாகிய தமிழ் மொழியைப் பேச்சளவில் கையாண்டு மொழியைப் பயிலவோ இலக்கியங்களைப் பற்றி அறிந்து கொள்ளவோ வாய்ப்பின்றித் தவிக்கின்றார்கள். தமிழ் மொழியைப் படிக்கத் தெரியாவிட்டாலும் தம் மூதாதையர் திரட்டி வைத்ததை இலக்கியச் செல்வத்தைக் கேள்வி வாயிலாகக் கிடைக்கும்போது பேரார்வத்துடன் கேட்டு மகிழ்கின்றனர். இதனை நான் நேரில் கண்டு அநுபவித்தேன்.

முதற்பொழிவு: கலிங்கத்துப்பரணி—அறிமுகம் என்ற தலைப்பில் நடைபெற்றது. இச்சிறு காவியம் போர் பற்றி எழுந்தது என்றும், பணிக்கோர் சயங்கொண்டான் என்று போற்றப்பெறும் சயங்கொண்டான் என்ற கவிஞர் கோமானால் இயற்றப் பெற்ற ஓர் அற்புதக் காவியம் என்றும் விளக்கப் பெற்றது. பரணி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். பரணி நாளில் கொண்டாடப் பெறும் போர் வெற்றி விழாவைச் சிறப்பித்துப் பாடப் பெற்றதால் 'பரணி' என்பதன் இலக்கணம் தெரிவிக்கப் பெற்றது. தோற்றவர்களின் பெயர்களால் பரணி பனுவல்களின் பெயர்கள் அமைந்திருப்பது ஊன்றி நோக்கத் தக்கது.

பின்னர் நூல் தோன்றும் சூழ்நிலை, கலிங்கத்துப்பரணி தோன்றியதன் காரணம், நூலமைப்பு, தாழிசையாப் பால் அமைந்த காவியம் என்பன போன்ற கருத்துகள் உரைக்கப் பெற்றன.

இரண்டாம் பொழிவு : 'கடை திறப்பு' என்ற தலைப்பில் நிகழ்த்தப் பெற்றது. இதுபற்றி உள்ள இருவேறு கருத்துகள் : ஒன்று; போருக்குச் சென்ற வீரர்கள் திரும்பி வரக் காலம் தாழ்க்க, அதனால் அவர்களின் மனைவிமார் கதவுகளை அடைத்துக் கொண்டு உள்ளே இருக்க, கவிஞர் பெருமான் அவர்களின் இல்லத்தின்முன் நின்று கொண்டு அம்மகளிரின் இயற்கை யழகு, செயற்கை அழகு, மென்மைத் தன்மை முதலிய வற்றை எடுத்துக்கூறி அவர்களை அழைத்துக் கதவு திறக்கவும் போரின் வெற்றியைக் கேட்கவும் வேண்டும் என்பது. மற்றொன்று செருக்களம் சென்ற தம் கொழுநர் குறித்த காலத்து வாராது தாழக்கக் கவலையுற்றும் ஊடியும் கதவுகளைத் தாளிட்டுக் கொண்ட மகளிரைத், தம் மன்னனும் அவனுடைய தானைத் தலைவனும் அடைந்த கலிங்க வெற்றியைப் பாடுவதற்குத் தலைநகரிலுள்ள பல்வேறு மகளிரும் நாட் காலையே எழுந்து வாயிற் கடை நின்று துயில் எழுப்புதல் என்பது. முதற்கருத்து அசம்பா விதத்தை எழுப்புவதால் அது தவிர்க்க கூடியது என்று பல காரணங்கள் கூறி விலக்கப் பெற்றது; இரண்டாவது கருத்து இயல்பானது என்றும், பொருத்தமானது என்றும் கூறி இக்கருத்து திருப்பாவை—திருவெம்பாவை முதலிய நூல்களில் பயின்று வந்துள்ள மரபுகளை அடியொற்றி வந்துள்ளதாக கொள்ளல் சிறப்புடையது என்றும் எடுத்துக் காட்டப் பெற்றது.இப்பகுதியில் சில சுவையான காட்சிகள் இலக்கிய நயம், கவிதை நயம் தோன்ற விரித்துக் காட்டப் பெற்றன. புறப்பொருளில் அகப்பொருள் கலந்து வந்த அற்புதமும் எடுத்துக் காட்டப் பெற்றது.

மூன்றாம் பொழிவு: இது 'பேய்கள் உலகம்' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பெற்றது. இதில் இலக்கியத்தில் கற்பனை, காட்டின் இயல்பு, பாலைத் திணையின் பாங்கு, பேய்களின் தோற்றமும் இயல்பும், காளிதேவியின் திருக்கோயில், அன்னை யின் திருவோலக்கம், அன்னை வழிபாடு முதுபேயும் இந்திரசாலமும், பேய்களின் முறையீடு, கலிங்கப் பேயின் வருகை, அக்கூளி கூறியவை, போர்க்களக் காட்சிகள், கூழடுதல், கூழுண்ணல், ஊமைப் பேய் குருட்டுப் பேய் மூடப் பேய் இவற்றின் செயல்கள், உண்டகளிப்பு என்ற சிறு தலைப்புகளில் 'பேய்கள் உலகம்' மிக்க சுவையுடன் அறிமுகம் செய்யப் பெற்றது.

நான்காம் பொழிவு: 'வரலாற்றுக் குறிப்புகள்' என்ற தலைப்பில் நடைபெற்றது. இப்பொழிவில் வரலாற்றின் இன்றியமையாமை, வரலாற்று மூலங்கள், சோழர்காலச் செய்திகள், சோழ அரசர்களின் குடிவழி, கலிங்கத்துப் பரணியில் போற்றப் பெறும் அரசனின் சிறப்பு, கால்முடப் பேய்கள், கைமுடப் பேய்கள், செவிட்டுப் பேய்கள், குருட்டுப் பேய்கள்—இவர்களை அறிமுகம் செய்வது போல் குலோத்துங்கனின் வெற்றிச் செயல்களை விளம்பும் கவிஞரின் கற்பனைத்திறன், அரசர் இயல்புகள், போர் முறைகள், சில வழக்காறுகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இவை விரித்துரைக்கப் பெற்றன. இப் பொழிவில். சில சுவையான கவிதைகள் விளக்கப்பெற்றுக் கேட்போர் நெஞ்சம் நிறைய இலக்கியச் சுவை ஊட்டப் பெற்றது.

ஐந்தாம் பொழிவு: 'பரணி காட்டும் சுவைகள்' என்ற தலைப்பில் அமைந்தது இப்பொழிவு. முதலில் 'சுவை' என்ற கருத்து தொல்காப்பிய அடிப்படையிலும் வட மொழிவாணர் நூல்களின் அடிப்படையிலும் விளக்கப் பெற்றது. அடுத்து நூலில் ஒன்பது சுவைகள் அமைந்திருக்கும் பாங்கு சில எடுத்துக்காட்டுகளால் விளக்கப்பெற்றது

இப்பொழிவுதான் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக் கூடியதாக இருந்தது.

ஆறாம் பொழிவு : 'மும்மணிகள்' என்ற தலைப்பில் நடைபெற்றது இப்பொழிவு. இதில் குலோத்துங்கன், கருணாகரத் தொண்டைமான், கவிஞர் பெருமான் சயங் கொண்டான் என்ற மும்மணிகள் நல்ல முறையில் அறிமுகம் செய்யப்பெற்றனர்.

இந்த ஆறு சொற்பொழிவு பற்றிய விரிவான குறிப்பு களைப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். 1971 ஜூலை மாதம் என்று நினைக்கின்றேன்; ஒவ்வொரு துறையிலுள்ள ஆசிரியர்களும் ஏதாவது ஆய்வுப்படி வைத்திருந்தால் அதை வெளியிடுவதற்கு நிதி வழங்கப்பெறும் என்றும், அது பற்றிய விவரம் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புமாறும் சுற்றறிக்கை ஒன்று வந்தது. 'பரணிப் பொழிவுகள்' என்ற கைப்படி ஒன்று இருப்பதாகவும், அது 'விரிவுப் பொழிவுகள்' என்ற திட்டத்தின் கீழ் நிகழ்த்தப் பெற்ற ஆறு பொழிவு கள் பற்றியது என்று தெரிவித்தேன். அந்த ஆண்டு எந்தத் துறையினின்றும் எவரும் கைப்படி உள்ளது என்று எழுதிய தாகத் தெரியவில்லை. பிப்பிரவரி மாதம் ரூ 2500/- தமிழ்த் துறைக்கு ஒதுக்கப் பெற்றுள்ளது என்றும், இதைக் கொண்டு நூல் மார்ச்சு 31ந் தேதிக்குள் வெளியிட வேண்டும் என்றும் கடிதம் வந்தது. பல்கலைக் கழகம் அச்சகத்தில் தந்தாலும் இவ்வளவு குறுகிய காலத்தில் அச்சிட முடியாது. இந்த மாதிரி விஷயங்களில் இப்படி முடிவு எடுத்தால் அச்சிடுவது சாத்தியப்படத் தக்கது அன்று என்பதை கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை யிலும் அதிகாரிகள் சிறிதேனும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. 'காலம்' என்ற கருத்தே அவர்கள் சிந்தையில் உதிப்பதில்லை. என்ன செய்வது? கடமை உணர்ச்சி இல்லாதவர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

உலகியல் இப்படித்தானே உள்ளது? இதில்தானே நாம் காலம் தள்ள வேண்டியுள்ளது? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டுமல்லவா? பணம் கிடைக்கும் போதுதானே நூலைவெளியிட முடியும்? சுற்றறிக்கை வந்தவுடன் 1965—66 இல் விரிவாக வைத்திருந்த குறிப்புகளைக் கொண்டு ஆறு பொழிவுகளை எழுதிவிட்டேன். நவம்பருக்குள் எழுத்து வேலை முடிந்தது. கைப்படி அச்சுக்குத் தயாராக இருந்தது. தொகைக்கு வழிபிறந்ததும் S R.S. பதிப்பகத்தார் கம்பெனி மேலாளராக இருந்த கந்தனடிமைசண்முகம்பிள்ளைக்கு எழுதினேன். ''முடித்துத் தரலாம்'' என்ற பதில் வந்தது. உடனே பல்கலைக் கழகத்திற்கு எழுதி, ரூ 2500/க்குக் காசோலை வாங்கினேன். தொகையையும் கைப்படியையும் அனுப்பி வைத்தேன். விரைவாக வேலை தொடர்ந்துநடைபெற்றது. மார்ச்சு 31 இல் அச்சுவேலை முடிந்தது என்றும் கட்டமைப்பில் உள்ளது என்றும் பல்கலைக் கழகத்திற்கு எழுதிவிட்டேன். மே இறுதியில் நூல்களின் படிகளைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி விட்டார்கள்.

இந்த நூலைத் தமிழகத்தை விட்டுப் பிழைப்பின் நிமித்தம் உலகெங்கும் பரவித் தமிழ் பேசிக்கொண்டு, தமிழ்மொழியின் மீது ஆராக்காதல் கொண்டும் உள்ள தமிழ் கூறு நல்லுலகத்தினருக்கு,

வண்ணமார் கடலை மலைகளைக் கடந்து
வயங்குபன் னாடுதோ றுற்று
திண்ணிய அறிவாற் கரத்தினாற் பணிகள்
சீருறப் புரிந்துநல் லுளத்தில்
பண்ணிசைத் தெய்வத் தமிழினை மறவாப்
பாங்குறு சகோதரர் தங்கள்
கண்ணியஞ் சான்ற நண்பினுக் குவந்து
கனிந்தகா ணிக்கையிந் நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இஃது என்னுடைய இருபத்து நான்காவது (மார்ச்சு 1972

வெளியீடாகும். இப்படி ஒரு தமிழ்த் தொண்டு புரிய இறைவன் என்னைக் கருவியாக்கிக் கொண்டான்.

குமிழி—213

# 57. நடு நாட்டுத் திருத்தலப் பயணம்

நடுநாட்டுத் திருப்பதிகள் 2. திருவயிந்திரபுரம், திருக்கோவலூர். என்ற இரண்டும் நடுநாட்டில் சேர்ந்தவை. நான் திருப்பதியில் பணியாற்றிய முதல் ஆறாண்டுக் காலம் என் குடும்பம் காரைக்குடியில் இருந்தது. ஆகவே, செப்டம்பர் விடுமுறை (உ வாரம்), டிசம்பர்—சனவரி விடுமுறை (3 வாரம்), கோடை விடுமுறை (2 மாதம்) ஆகிய விடுமுறைகளில் காரைக்குடிக்கு வருதல்—திருப்பதி திரும்புதல் வழக்கமாக நடைபெற்று வந்தன. இந்தப் பயணங்களின் ஒரு பயணத்தில் (1965 டிசம்பர்—சனவரி) திருப்பாதிரிப்புலியூர் இருப்பூர்தி நிலையத்தில் இறங்கி பீமவிலாஸ் என்ற தங்கும் விடுதியில் அறையொன்று ஒரு நாள் வாடகைக்கு எடுத்தேன். அதில் காலைக் கடன்கள் நீராட்டம் இவற்றை முடித்துக் கொண்டு பேருந்து நிலையம் வந்தேன்.

பேருந்து நிலையத்திலிருந்து மேற்குத் திசையில் திருவயிந்திரபுரம் மூன்று கல் தொலைவு. பேருந்தில் சென்றேன். சாலையின் இருபுறங்களிலும் அமைந்துள்ள இயற்கைச் சூழல்கள் என் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. சாலையின் இருபுறமும் பச்சைப் பட்டு விரித்தாலெனப் பரந்து கிடக்கும் நெல்வயல்கள். இங்கும் அங்குமாகத் திகழும் சிறுசிறு தோப்புகள், பூங்கொத்துகள் குலாவும் குளிர்சோலைகள், வலைப்பின்னல் போல்

குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து செல்லும் கால்வாய்கள், இவற்றைக் கண்டுகளித்துக் கொண்டே செல்லுகின்றேன், திருப்பாதிரிப்புலியூரிலிருந்து திருஅயிந்திரபுரம் வரை இதே சூழ்நிலைதான். சித்தும் அசித்தும் எம்பெருமானுடைய திருமேனியாக அமைந்துள்ள தத்துவ உண்மை என் சிந்தையில்—சிந்தனையில்—எழுகின்றது.

திரு அயிந்திரபுரத்தை அடைந்ததும் இந்த ஊரின் பெயர் பற்றிய சிந்தனை என் மனத்தை ஆட்கொள்ளுகின்றது. சாரத்தை அறிந்தவர்களாகிய (சாரக்ராஹிகள்) பாகதவதர்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு பகவத்பாகவத குணாநுபவக்களிப்பாலே எம்பெருமானைப் பற்றிய இசைப்பாடல்களைப் — ஆழ்வார்களின் பண்ணார்ந்த பாசுரங்களைப் — பாடிக்கொண்டு எம்பெருமானின் திருவடிப் பேற்றினையே நினைந்து கொண்டு வாழும் இடம் திருவயிந்திரபுரம் ஆகும். 'அகீந்த்ர புரம்' என்ற வடசொல் 'அயிந்திர புரம்' என்று விகாரப் பட்டது. 'அஹீந்தரன்'—திருவனந்தாழ்வான்; அவன் வழிபட்டதலமாதலால் 'அயிந்திரபுரம் என்ற திருநாமம் ஏற்பட்டு 'திரு' என்ற அடைமொழியுடன் சேர்ந்து 'திரு அயிர்திரபுரம்' என்பதாக வழக்காறு பெற்றது என்று அறிய முடிகின்றது.

பல கோணங்களில் எம்பெருமான் உறையும் இடத்தைக் காட்டுவார் மங்கை மன்னன். ஒரு கோணத்தில் பார்க்கப்பெறும் சூழ்நிலை இது,

''பின்னும் மாதவிப் பந்தலில்
பெடைவரப் பிணியவிழ் கமலத்து
'தென்ன'—என்றுவண் டின்னிசை
முரல்தரு திருவயிந்தி புரமே.[1]

1. பெரி.திரு.3.1:2

[மாதவி—குருக்கத்தி; பெடை—பெண் அன்னம்; பிணி—கட்டு; கமலம்—தாமரை; முரல்தரு—பாடாநிற்கின்ற]

வண்டுகள் தம்முடைய பெண்வண்டுகளுடன்கூடித் தாமரை மலரின்மீது இருந்து கொண்டு 'மது பானம்' பண்ணு கின்றன. தம்பதிகட்குள் ஊடல் (பிரணய கலகம்) ஏற்படு கின்றது. பெண்வண்டு ஆண்வண்டை விட்டு நீங்கிக் குருக்கத்திப் பந்தரில் புகுந்து ஒளிந்து கொள்ளுகின்றது. அதனைப் பிரிந்து ஆற்ற மாட்டாத ஆண்வண்டு தனது துணைவண்டு ஊடல் தீர்ந்து ஓடிவருமாறு தாங்கொணாத தனது சிரம நிலையை வெளியிடுகின்ற இன்னிசைப் பாடல் களைத் தாமரை மலரில் இருந்து கொண்டு பாடுகின்றது. இப்படிப்பட்ட பொழில் வாய்ப்புப் பொருந்தியது இந்தத் திவ்வியதேசம். வண்டானது, கிளைகளின் (சாகை களின்) நுனியிலே திரியுமாப் போலே வேதசாகையின் நுனியில் (உபநிடதங்களில்) விளங்குகின்ற எம்பெருமான், எம்பெரு மாட்டியுடன் ஊடல் கொண்டு செய்யும் செயல் களைச் சொல்லுவதாகக் கொள்வர் வியாக்கியாதாக்கள் ''பிராட்டியும் தானுமான சேர்த்தியில் ப்ரணய கலகம் மாறாதே செல்லுமாப் போலேயாயிற்று அங்குத்தைத் திர்யக்குகளுடைய யாத்ரையும்''[2] என்ற இன்சுவை மிக்க பெரியவாச்சான் பிள்ளையின் அருளிச் செயலில் ஆழங் கால் படுகின்றேன்.

திருக்கோயிலின் கருவறைக்குச் சென்று கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத் தில் சேவை சாதிக்கும் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வ நாயகனையும், வைகுண்டவல்லித் தாயாரையும்

2. அங்குத்தை-அவ்விடம்; திர்யக்குகள்-விலங்குகள். பல கோணங்களில் காட்டப் பெறும் சூழ்நிலை களை 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்'-பக்.241 -248 காண்க.

(ஹேமாப்ஜ நாயகி) வணங்கி ஆழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலி கொண்டு ஓதி உளங் கரைகின்றேன். இத்திருக் கோயிலில் தாயாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. இந்தப் பயணத்தில் "போய பிழைகள், புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசாகும்"[3] என்ற உணர்ச்சியைப் பெறுகின்றேன். இந்தத் திவ்விய தேசத்தில் வேதாந்த தேசிகனுக்கு ஒரு பெரிய சந்நிதி உள்ளது. இளமையில் அந்தச் சுவாமி இங்கு வாழ்ந்தமைக்குச் சுவாமியின் திருமாளிகையும் திருக்கிணறும் சான்றுகளாக நிற்கின்றன. திருக்கோயிலுக்கு அருகிலுள்ள ஒளஷதாத்திரியில் (மருத்து மலையில்)[4] பெரிய திருவடியும் ஹயக்கிரீவனும் சுவாமிக்கு நேரில் காட்சி தந்ததாக வரலாறு. ஆகவே, ஹயக்கிரீவன் 'ஸ்வயம்வியக்தமான' (தானே தோன்றிய) திவ்விய தேசமாகின்றது. இத்தலத்து எம்பெருமான்மீது தேசிகன் வடமொழியில் 'தேவ நாயக பஞ்சாசத்' 'அச்யுதசதகம்' என்ற இரண்டு நூல்களையும்; தமிழில் மும்மணிக் கோவை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல், நவமணிமாலை ஆகிய ஏழு சிற்றிலக்கியங்களையும் அருளியுள்ளார். இவற்றையெல்லாம் அறிந்த வண்ணம் திருப்பாதிரிப் புலியூருக்குத் திரும்பி அன்றிரவே இருப்பூர்தியில் திருப்பதி வந்து சேர்கின்றேன்.

அடுத்த ஆண்டு (1966) பிப்பிரவரியில் திருக்கோவலூர் சேவை நடைபெறுகின்றது. காரைக்குடியிலிருந்து இராமேசுவரம் விரைவு வண்டியில் இரவு 3 மணிக்கு விழுப்புரம் வந்து சேர்கின்றேன். அதிகாலை 5 மணிக்கு விழுப்புரம்—காட்டுப்பாடி இருப்பூர்தியில் ஏறி சுமார்

---

3. திருப்.5

4. அநுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்து இலங்கையை நோக்கி வந்த காலத்தில் ஒரு சிகரம் முறிந்து விழுந்ததாகவும் அதுவே இம்மலை என்பதாகவும் ஐதிகம்.

6 – 30க்கு திருக்கோவலூர் நிலையத்தில் இறங்குகின்றேன். கையில் ஒரு சிறு பைதான்—மாற்று ஆடையுடன். ஆகவே பயணம் எளிதாயிற்று. பதினொரு மணிக்குத் திரும்பி இருப்பூர்தியைப் பிடித்து காட்டுப்பாடிக்குத் திரும்ப வேண்டியிருப்பதால் ஒரு கல் தொலைவு நடந்தே—ஆற்றின் குறுக்காக—திருக்கோவலூரை அடைகின்றேன்.

இருப்பூர்தி நிலையத்துக் கருகிலுள்ளது அரகண்ட நல்லூர். அதைக் கடந்து பெண்ணை ஆற்றில் இறங்கித் தீர்த்தமாடுகின்றேன்; வெள்ளப் பெருக்கு இன்மையால் பளிங்குபோன்ற நீரில் குளித்தது உடலுக்கு இதமாக இருந்தது.

ஆற்றைக் கடந்து அதன் தென் கரையிலுள்ள திருக்கோவிலூரை அடைகின்றேன். திருக்கோவிலூர் ஒரு சிற்றூரே. இதில் மேலூர், கீழூர் என்ற இரு பகுதிகள் உள்ளன. இரண்டு ஊர்களும் ஆற்றின் தென்கரையில் தான் உள்ளன. ஆற்றையொட்டி இருப்பது கீழூர். இந்த ஊரில் வீரட்டானேசுவரம் என்ற ஒரு பெரிய சிவத்தலம் உள்ளது. அப்பர் பெருமானும் காழிப் பிள்ளையாரும் பாடிய தலம் இது. சிவபெருமான் அரக்கர்களை வதைசெய்த எட்டு வீரட்டத் தலங்களில் இங்கு அந்தகாசுரனைச் சங்கரித்ததாக வரலாறு. மேலூரில்தான் திருமால் சந்நிதி உள்ளது; இதுதான் திரிவிக்கிரமன் கோயில் கொண்டிருக்கும் திருஆலயம்.

திரிவிக்கிரமன் நீர் வளமும் நில வளமும் மிக்க அழகான சூழ்நிலையில் கோயில் கொண்டிருக்கின்றான். ஆண்டவனின் உடலாக இருக்கும் அசித்தின் அழகினை இப்பகுதியில் கண்டு களிக்கலாம். முதலாழ்வார்கள் மூவரும் திருமங்கை யாழ்வாரும் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளனர். இத்திருப்பதின் நீர் வளம், நில வளங்கள் திருமங்கை யாழ்வாரின் பாசுரங்களில் அழகாகச் சித்திரிக்கப்

பெற்றுள்ளன. தோப்புகளும் சோலைகளும் சூழ்ந்த அழகானப் பகுதியில் இவ்வூர் அழகாக அமைந்துள்ளது. தென்னந் தோப்புகள் கமுகந் தோட்டங்கள் மாஞ்சோலைகள் முதலியவற்றை எம்மருங்கும் காணலாம்!

கோங்கரும்பு சுரபுன்னை
குரவுஆர் சோலைக்
குழாம்வரிவண்(டு) இசைபாடும்
பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும்
கழனி சூழ்ந்த
திருக்கோவலூர்[5]

[கண்வளரும்—கணுக்கள் வளரும்; உறங்குவுமாம்]

என்பது காண்க. கோங்கு அரும்புகளும் சுரபுன்னைகளும் குரவ மலர்களும் நிறைந்த சோலைகளில் கூட்டம் கூட்டமாகவுள்ள வண்டுகள் பூக்களிலுள்ள மதுவினை யுண்டு அந்தக் களிப்பினால் இன்னொலிகளை எழுப்புகின்றன. அந்த இசைப்பாடல்களின் 'இன்பச் சாறு' பாயப் பெற்ற வயல்களிலுள்ள கரும்புகளின் கணுக்கள் வளர்கின்றன. வண்டுகள் பாடும் இசையைக் கேட்டு அஃறிணைப் பொருளாகிய கரும்பும் அசைவற்று நிற்பதாகக் கூறும் பாசுர நயம் எண்ணி எண்ணி அநுபவிக்கத் தக்கது.

இன்னும் நம் கற்பனை சிறகுகள் கொண்டு பறக்கக் கூடுமாயின் ஈண்டுத் திருக்கோவலூர் எம்பெருமானையே கரும்பாகக் குறிப்பிட்டதாகவும் கொள்ளலாம். வண்டுகள் வெறும் இன்னொலிகளை எழுப்பாமல் முதலாழ்வார்களின் பாசுரங்களையே இன்னொலிகளாக எழுப்பினதாகக் கருதலாம். அமுதூறும் அப் பாசுரங்களின் இன்பப் பெருக்கில் திளைக்கும் 'திருக்கோவலூர்த் தீங்கரும்பு' (எம்பெருமான்) கண்வளர்கின்றதாகவும் கருதலாம்.

5. பெரிதிரு 2.10:4

இங்ஙனம் அவரவர்களுடைய பக்திக்கேற்றவாறு கற்பனையும்வளரும்; அதில் கவிதையநுபவத்துடன் பக்தியநுபவமும் கலந்து ஊற்றெடுத்து நம்மைப் பேரின்பக் கடலில் கொண்டு செலுத்தும். பத்தியநுபவத்தின் கொடுமுடியைக் கண்ட திருமங்கையாழ்வார் திருக்கோவலூர்த் திரிவிக்கிரமனை இங்ஙனம் எல்லாம் சிந்தித்து அநுபவித்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறு இல்லையல்லவா?

முதலாழ்வார்கள் மூவரையும் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலை உருளைகளாகவும் அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய திருக்கோவலூர் அருகில் விளையும் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் வேதாந்த தேசிகர் குறிப்பிட்டுள்ளமை[6] ஈண்டு நினைவுக்கு வந்து மகிழ்ச்சியூட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட ஆழ்வாரின் பாசுரமே இச் சுலோகத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும். திவ்வியப் பிரபந்தம் முதன் முதலாகத் தோன்றியது இத் திருக்கோவலூரில்தான். முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதி தொடுத்த தலமும் இதுவேயாகும். இந்த வரலாற்றை,

பாவரும் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி[7]
முகுந்தனைத் தொழுதநன் னாடு

[முகுந்தன்—திருமால்]

என்று போற்றிப் புகழ்ந்ததும் என் நினைவில் எழுகின்றது. வேதாந்த தேசிகர்,

பாட்டுக்(கு) உரிய பழையவர்
மூவரைப் பண்(டு) ஒருகால்
மாட்டுக்(கு) அருள்தரும் மாயன்
மலிந்து வருத்துதலால்

6. தேகளீச் ஸ்துதி—சுலோகம்—7.
7. வில்லிபாரதம்—சிறப்புப் பாயிரம் —9.

நாட்டுக்(கு இருள்செக நான்மறை
அந்தி நடைவிளங்க
வீட்டுக்(கு) இடைகழிக் கேவெளி
காட்டும்அம் மெய் விளக்கே[8]

[பழையவர்—முதலாழ்வார்கள்; மலிந்து அதிகமாக; மாடு—செல்வமாகிய ஆன்மா; மாயன்—திருமால்; இருள் செக அஞ்ஞானம் நீங்க; நான்மறை அந்தி—உபநிடதம்; நடை—வழி; வெளி—உபாயங்கள்]

என்று இந்நிகழ்ச்சியைப் பாரரட்டியுள்ளதையும் நினைந்து பார்க்கின்றேன்.

இந்த நினைவுகள் மனத்தில் எழுந்த வண்ணம் ஊரின் நடுவேயுள்ள திருக்கோயிலுக்கு வருகின்றேன். கருவறையில் 'வியந்தவர் வெருக் கொள விசும்பின் ஓங்கிய' உலகளந்த திரிவிக்கிரமனைக் காண்கின்றேன். கிழக்கு நோக்கிய திருமுகங்கொண்டு சேவை சாதிக்கும் இப் பெருமான் பெயரளவிலேயன்றி வடிவிலும் விண்ணுற நிமிர்ந்து நிற்கும் திரிவிக்கிரமனாகவே காட்சி தருகின்றான். காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயில் சுவரின் மீது செதுக்கியுள்ள சிற்பம் இந்தப் பெருமான் தனியே நிற்கும் வடிவமேயாகும். இவர் மரத்தாலானவர். முகத்தில் நல்ல களை. எம்பெருமானின் ஒரு திருவடி மகாபலிச் சக்கரவர்த்தியின் தலைமீது வைத்த நிலையிலும் மற்றொரு திருவடி விண்ணை அளப்பதாகத் தூக்கிய நிலையிலும் காணப்பெறுகின்றன. இரண்டடி நிலம் போக 'எஞ்சின ஓரடி நிலம் எங்கே? என்று மாவலியை வினவுவது போல் வலக்கையின் ஒருவிரல் நீட்டிய நிலையில் காணப் பெறுகின்றது. மாவலியை வெற்றி கொண்ட எக்களிப்பால் இடக்கையில் இருக்க வேண்டிய சங்கினை வலக்கையில் ஏந்திய நிலையில் காணப்பெறுகின்றார் எம்பெருமான்.

8. தே. பி. 89

இந்தக் கோலத்தில் எம்பெருமானைக் காணுகின்ற நிலையில்,

ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து(து)
எண்மதியும் கடந்(து)அண்ட மீது போகி
இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து, மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே.[9]

[ஒண்மிதி—ஓரடி இட்டு; புனல்—ஆவரண நீர்; அவுணன்—மாவலி; எண்மதி—நினைத்திருக்கும் எண்ணம்; விசும்பு—ஆகாயம்; மதி—சந்திரன்; தாரகை—நட்சத்திரம்; மலர்புரையும்—மலரை யொத்த]

என்ற திருமங்கையார் பாசுரத்தை வாய் ஓதுகின்றது. இரண்டாவது சுற்றிலுள்ள தாயார் சந்நிதிக்குச் சென்று அவரையும் சேவிக்கின்றேன். இவர் திருநாமம் புஷ்ப வல்லித்தாயார் (பூங்கோவில் நாச்சியார்).

வேறு வரலாறுகள்: ஆழ்வார்கள் வாழ்ந்த காலத் திற்கு முன்பாகவே திருக்கோவலூர் புகழ் பெற்றிருந்தது. சங்கப்புலவர்களை ஆதரித்து வந்த கடையெழுவள்ளல் களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரி இவ்வூரைச் சார்ந்தவன். பெண்ணையாற்றங்கரையிலுள்ள பகுதி அக்காலத்தில் 'மலாடு' என்ற பெயரால் வழங்கியது. மலையமான் திருமுடிக்காரி திருக்கோவலூரைத் தலை நகராகக் கொண்டு இந்நாட்டை ஆண்டு வந்தான் (அகம், 35). மேலும் பாரி மகளிர் அங்கவை சங்கவை என்பவர்களை மணம் புரிந்த தெய்விகன் என்ற அரசன் அரசோச்சிய இடமும் இத்திருக்கோவலூராகும். இவன் வழிவந்தவர்களே மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க

9. திரு நெடுந். 5

முனையரையர் முதலியவர்கள். தெய்விகன் மலையமான் திருமுடிக்காரியின் வழித்தோன்றல்.

ஔவையார் இவ்வூரில் தனக்கு ஆதரவளித்த ஆயர் குல நங்கையர் இருவருக்கு மூவரசரை வரவழைத்துச் சிறப்பாகத் திருமணம் நடத்தி வைத்தாக ஒரு வரலாறு உண்டு.

பொன்மாரி பெய்யும் ஊர்
　　பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயலாகி
　　ஆகும்ஊர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த
　　சேதிமா நாடதனில்
ஓங்குதிருக் கோவ
　　லூர்[10]

என்று ஔவையார் பாடியதாக ஒரு தனிப் பாடலும் உண்டு. இன்னும் பாரி மகளிரின் திருமணம் பற்றி ஔவையார் பாடியதாக வேறு பல பாடல்களும் உள்ளன. இவை யாவும் இலக்கியப் புலவர்கட்கு இன்பம் பயப்பதாயினும் உண்மையை அறிய விழையும் வரலாற்று அறிஞர்கட்குத் தலைவலியைத் தருபவை.

மேலூரை விட்டுக் கீழூரிலுள்ள வீரட்டனாரையும் சேவித்து ஆற்றைக் கடந்து வரும்போது ஆற்றின் நடுவில் வீரட்டானேசுவரர் கோயிலுக்கருகில் ஒரு பெரும் பாறையைக் காண்கின்றோம். இப்பாறையின் மீதுள்ள கோயிலும் அதனை அடைய அமைந்துள்ள படிக்கட்டுகளும் ஓர் இடைச்சியால் கட்டப் பெற்றவை என்று கூறுவர் அப்பகுதி மக்கள். ஆகவே அப்பாறை 'இடைச்சிக் குன்று' 'இடைச்சிக் கல்' என்று வழங்கப்பெறுகின்றது, வெண்ணைய்

10. தனிப்பாடல் திரட்டு (கழக வெளியீடு)- முதற் பகுதி—68.

உருகும் முன் பெண்ணை பெருகும் என்பது ஒருபழமொழி. ஒரு சமயம் இடைச்சி ஒருத்தி திருக்கோவலூரிலிருந்து ஆற்றைக் கடந்து வந்தபோது அக்கரையில் இறங்கும் போது நீரே இல்லாதிருந்த ஆற்றில் இக்கரையை அடையும் முன்னரே வெள்ளம் பெருகியதாகவும், அவ் விடைச்சி அப் பாறையில் ஒதுங்கி நின்று தப்பித்த தாகவும், அவளே அச்சிவன் கோயிலைக் கட்டிப் படி களை அமைத்ததாகவும் ஒரு செவிவழிச் செய்தி வழங்கி வருகின்றது.

அடுத்து ஆற்றின் வடகரையிலுள்ள அறையணி நல்லூர் (இஃது அரகண்ட நல்லூர் என்று வழங்கப் பெறு கின்றது) அறையணி நாதரையும் அவரது துணைவி அறையணி நாயகியையும் கண்டு வழிபடுகின்றேன். இருப்பூர்தி நிலையத்திலிருந்து சாலை வழியாகத் திருக்கோவலூருக்குச் செல்லும் வழியில் 'பிருந்தாவனம்' என்ற ஓர் இடத்தில் மாத்வ சுவாமிகள் மடம் ஒன்று உண்டு. நாட்டின் பல பகுதியிலுள்ள மக்கள், சிறப்பாக மாத்வர், இங்கு வந்து ஆசி பெற்றுச் செல்வர். மக்கட் பேறு இல்லாதவர்கள் இங்கு முக்கியமாக வந்து ஆசி பெறுவதுண்டு. பகல் 11 மணிக்கு இருப்பூர்தி நிலையத் திற்கு வந்து வண்டியேறி திருப்பதி வந்து சேர்கின்றேன்.

# 58. தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம்

எம்பெருமானைப் பல்வேறு விதமாக அநுபவிக்கலாம். அவற்றுள் ஒன்று அவன் உகந்தருளின திவ்விய தேசத்திற்கு திருத்தலப் பயணம் மேற்கொள்வதாகும். தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் 22. இவற்றை இரண்டு சுற்றில் சேவித்து நிறைவு செய்தேன்.

முதல் சுற்று : 1966-சனவரித் திங்களில் என் அரிய நண்பர் வடமொழிப் புலவர் திரு. சீநிவாச வரதன் (திருவேங்கடவன் பல்கலைக் கழகக் கீழ்த்திசை ஆராய்ச்சித் துறையில் பணியாற்றினவர்) அவர்களின் துணைகொண்டு என் தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தின் முதல் சுற்று தொடங்கியது. முதலில் இருவரும் காஞ்சிக்கு வந்தோம். 'காஞ்சி' என்று வழங்கப் பெறும் காஞ்சிபுரம் மிகவும் முக்கியமானது. இதனை வேதாந்த தேசிகர்

காசிமுத லாகியநன் னகரி யெல்லாம்
கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா.[1]

என்று புகழ்வர். 'அருளாளர் கச்சி' என்று அன்பாக தேசிகர் புகழ்வதைப் போலவே, ஏழை ஏதலர்களின் தூய மனத்தில் 'கஞ்சி வரதப்பன்' நிலைத்து வாழ்கின்றான். வரதப்பனுடன் ஊரும் சேர்ந்து வாழ்கின்றது. 'கஞ்சி வரதப்பா!' என்றால் 'எங்கு வருதப்பா?' என்று கேட்கும் சொற்றொடர்கள் நாம் கேட்டுப் பழகியவையன்றோ?

1. தே. பி. 237

(1) குகை நரசிம்மரைச் சேவித்த நிலையில் (பெருமாள் கோயிலில்)[2] சில படிகள் ஏறி ஒரு சிறு மண்டபத்தை அடைகின்றோம். இம் மண்டபத்திலிருந்து 24படிகள் ஏறிக்கடந்து அத்திகிரியை அடைகின்றோம். இந்தப் படிகளை ஏறிச் செல்லுங்கால் எம்பெருமான் இவ்வுலகைப் படைத்த 24 தத்துவங்கள் நினைவிற்கு வருகின்றன. அவை தந்மாத்திரைகள் 5; ஞானேந்திரியங்கள் 5; கருமேந்திரியங்கள் 5; பூதங்கள் 5; ஆக இவை 20. இவற்றுடன் பிரகிருதி 1, மகான் 1, அகங்காரம் 1, மனஸ் 1 ஆகிய நான்கும் சேர 24 தத்துவங்களாகின்றன. (இவற்றுடன் புருடன் (சீவான்மா) 1, மகா புருடன் (பரமான்மா) 1 சேர்ந்து வைணவ தத்துவம் 26 ஆகின்றது.

மேலும் ஆறு படிகளை ஏறிக் கடந்து அத்திகிரி அருளாளனின் கருவறைக்கு வருகின்றோம். நீண்டு உயர்ந்து நின்ற திருக்கோலத்தில் தங்கக் கிரீடமும் தங்கக் கவசமும் அணிந்த நிலையில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கும் பேரருளாளனையும் அடுத்து பெருந்தேவித் தாயாரையும சேவித்து அவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களாகின்றோம்.

(2) அடுத்து வரதராசர் கோயிலிலிருந்து முக்கால் கல் தொலைவிலுள்ள அட்டபுயகரம் வருகின்றோம். இங்குள்ள மூலவர் எட்டுத் திருக்கைகளையுடையவர். ‘தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான் அட்டபுயகரத்தான்’[3] என்பது பேயாழ்வாரின் திருவாக்கு. ‘எட்டுப்படையாவன’ : வாளி, வில், கதை, திருச்சங்கு,

---

2. பெருமாள் கோயில்—வரதராசர் கோயில்; கோயில்—திருவரங்கம் பெரிய கோயில்; திருமலை—திருவேங்கடம்.

3. மூன்—திருவந். 99

வாள், திருவாழி, கேடயம். மலர் ஆகியவை. நின்ற திருக் கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு சேவை சாதிக்கும் ஆதிகேசவப்பெருமாளையும், தனிக் கோயில் கொண்டிருக்கும் அலாமேல் மங்கைத் தாயாரையும் சேவிக்கின்றோம். நாம் வந்த போது பகல்பத்து—இராப் பத்து உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. முன் மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணியிருந்த உற்சவர் ஆழ்வார் ஆசாரியர்கள்—இவர்களையும் சேவிக்கின் றோம். திருக்கோயிலை விட்டு வெளி வந்தபோது திருத்தலப்பயணத்தை மேற்கொண்டிருந்த காரைக்குடி ராய. சொ. கானாடு காத்தான் C. V. CT.V. வெங்கடா சலம் செட்டியாரையும் சந்தித்தோம்.

(3) அடுத்து இச்சந்நிதிக்கு வடக்கில் அரை ஃபர்லாங் தொலைலில் உள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயிலுக்கு (யதோத்காரி) வருகின்றோம். இது காஞ்சியில் பழமையான கோயில். சங்க இலக்கியத் தில் சுட்டப்பெறும் திருவெஃகா என்பது இத்திருக் கோயிலே. இங்கு வந்து மேற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு புயங்கசயனமாக இடக்கையைத் தலையணையாக்க கொண்டு சேவை சாதிக்கும் சொன்ன வண்ணம் செய்த பெருமாளையும், தாயார் கோமளவல்லி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். உற்சவர் கண்டாரை ஈர்க்கும் திருமேனியையுடையவர். ஐம்பொன் கலப்பில் பொன் சற்று அதிகமாக இருப்பதால் பேரொளியில் திகழ் கின்றார். இங்குள்ள திருக்குளத்தில் தான் பொய்கையாழ் வார் அவதரித்தார். திருமழிசையாழ்வார், அவரது சீடர் கணிகண்ணன் இவர்களின் வரலாற்றுச் சிறப்புடையது இத்திருத்தலம்.

(4) பின்னர் திருத்தண்கா என்ற திவ்விய தேசத் திற்கு வருகின்றோம். இஃது அட்டபுயகரத்திலிருந்து மேற்குத் திசையில் 2 ஃபர்லாங் தொலைவில் உள்ளது.

இத்திவ்விய தேசம் வேதாந்த தேசிகரின் பிறப்பிடம். இத் திருக்கோயில் சற்றுப் பெரியது. மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் தீபப்பிரகாசரையும் (விளக்கொளிப் பெருமாள்) மரகதவல்லித் தாயாரையும் வணங்குகின்றோம். இத்தலத்து எம்பெருமான் பண்டைக் காலத்தில் சயனத் திருக்கோல மாக எழுந்தருளியிருந்ததாகப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தாலும், அரும்பத உரையினாலும், மற்றும் சில குறிப்புகளாலும் அறியக் கிடக்கின்றது.

(5) அடுத்து நாம் சேவித்தது வேளுக்கை என்பது 'வேளிருக்கை' மருவி 'வேளுக்கை'யாயிற்று. வேதாந்த தேசகர் பணித்த துதியொன்றில் இதைக் காமாஸிகா என்று வழங்குவர். காமாஸிகா = காம + ஆஸிகா— விருப்பம் பற்றி நிற்கும் இடம். விளக்கொளிப் பெருமாள் சந்நிதியிருந்து தென்திசையில் 4பர்லாங்கல் தொலைவி லுள்ளது. நான் சென்றபோது கைங்கரியம் நடைபெறாத திருக்கோயில்; சிதைந்த நிலையில் இருந்தது. இச்சந்நிதி யின் எம்பெருமான் ஆள் அழகிய சிங்கர் (முகுந்த நாயகன்) நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றார். இவரையும் வேளுக்கைவல்லித் தாயாரையும் வணங்குகின்றோம்.

(6) திருப்பாடகம் (பாண்டவ தூதர் சந்நிதி) பெரிய காஞ்சிபுரத்தில் ஞானப்பிரகாசர் திருமடத்திற்கு அருகி லுள்ளது. பாடு + அகம் பாடகமாயிற்று. பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் இடம் என்பது இதன் பொருள். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு வீற்றிருக் கும் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார் பாண்டவ தூதர். இவரையும் உருக்குமிணி, சத்தியபாமை என்ற திருத்தாயார்களையும் வணங்குகின்றோம்.

(7) நிலாத்திங்கள் துண்டம் என்ற திவ்விய தேசம் காஞ்சி ஏகாம்பர நாதர் திருக்கோயிலின் முதற்சுற்றில் உள்ளது.

நீருரும் செஞ்சடையாய் நெற்றிக் கண்ணா
நிலாத்திங்கள் துண்டத்தாய், நின்னைத்தேடி
ஓருரும் ஒழியாமே ஒற்றித் தெங்கும்
உலகமெலாம் திரிதந்து நின்னைக் காண்பான்
தேருரும் நெடுவீதி பற்றி நின்றேன்.[4]

என்ற அப்பர் பெருமானின் திருப்பாடலை ஓதுவார் 'நிலாத்திங்கள் துண்டத்தான்' சிவபெருமானே என்று நினைப்பது இயல்பு. ஆனால், அவர்கள் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு வந்த பின்னர்த் தம் தவற்றைத் உணர்வர். இந்த எம்பெருமான்— நிலாத்திங்கள் துண்டத்தான் என்ற திருநாமத்தைக் கொண்டவர்—ஏழு தலை நாகத்தைக் குடையாகக் கொண்டு மேற்குநோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவரையும் இவர் அருகில் உள்ள நேரொருவர் இல்லா வல்லித் தாயாரையும் சேவிக்கின்றோம். இந்த எம்பெருமானுக்கு ஒரு சைவரே கைங்கரியம் செய்து வருகின்றார். 'மறந்தும் புறந்தொழா' வீர வைணவர்கள் இந்தச் சந்நிதிக்கு வருவதில்லை.

(8) திருக்கள்வனூர்: இத்திவ்விய தேசம் பெரிய காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மன் திருக்கோயிலினுள் உள்ளது. இந்த எம்பெருமான் நுழைவாயிலின் இடப்புறச் சுவரிலுள்ள மாடம் ஒன்றில் எங்கோ திருடிவிட்டு ஒளிந்து கொண்டிருக்கும் கள்வனைப் போல் ஒளிந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இது கருதியே இவரைக் "கள்வா!"[5] என்று ஒரே தொடரில் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தார் போலும்! 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றவாறு கள்வர் தலைவரான இந்த ஆழ்வாருக்குத்தான் இவர் கிடைத்தார். வேறு ஆழ்வார்

4. அப்பர் தேவாரம் — 6.25:9
5. திருநெருந்.8.

கட்கு இந்த எம்பெருமான் கிட்டவில்லை. திருக்குருகூரில் திருப்புளியாழ்வாரின்கீழ் இருந்து கொண்டு மானசீகமாக மங்களாசாசனம் செய்த நம்மாழ்வாரையும் அவர் பாசுரங்களில் அகப்படாது ஏமாற்றிவிட்ட 'கள்வன்' இந்த எம்பெருமான். இந்தத் திவ்வியதேசமும் தேவதாந்தரம் சம்பந்தப் பட்டதென்று வீரவைணவர்கள் தலைகாட்டப் பெறாதது. எம்பெருமான் ஆதிவராகப் பெருமாளையும தாயார் அஞ்சிலைவல்லி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். என் நண்பர் ஸ்ரீநிவாசவரதனும் இந்த இரண்டு திவ்விய தேசச் சேவையைப் புறக்கணித்து விட்டார்.

(9) திருஊரகம்: பெரிய காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்தருகில் உள்ளது உலகளந்த பெருமாள் சந்நிதி. இத்தலத்து எம்பெருமான் உரக வடிவமாகவும் சேவை சாதிப்பதால் திருஊரகம் என்ற இப்பெயர் ஏற்பட்டது என்பர். உரகம்—பாம்பு. கருவறைக்கு முன்பாக இடப்புறச் சுவரில் உரக வடிவமாக இருக்கின்றார் இந்த எம்பெருமான். கருவறையில் திரிவிக்கிரம வடிவில் சேவை சாதிப்பவர் உலகளந்த பெருமாள். இவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவரைச் சேவிக்கின்றோம்.

(10) திருக்காரகம்: உலகளந்த பெருமாள் சந்நிதியின் திருச்சுற்றில் உள்ள ஒரு சிறிய மாடக் கோயில். தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. எம்பெருமான் கருணாகரப் பெருமாளையும் தாயார் பத்மாமணி நாச்சியாரையும் சேவிக்கின்றோம். எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு காட்சி தருகின்றார். மேகத்தின் தன்மைகள் போன்றவற்றைக் கொண்ட திருக்குணங்கள் நிறைந்த எம்பெருமான் கோயில்கொண்ட தலமாதல் பற்றி இதற்குக் 'காரகம்' என்ற திருநாமம் பெற்றதாகக் கூறுவர் பெரியோர்.

(11) திருநீரகம் : உலகளந்த பெருமாள் சந்நிதியின் வடக்குத் திருச்சுற்றில் உள்ள சந்நிதி. நீரின் தன்மை யுடையவனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல் பற்றி 'நீரகம்' என்று திருநாமம் பெற்றதாகப் பெரியோர் பணிப்பர். இந்தத் திவ்விய தேசத்துப் பெருமான் ஜகதீசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு நிலமங்கை வல்லித் தாயாருடன் சேவை சாதிக்கின்றார். இவர்களை வணங்குகின்றோம்.

(12) கார்வானம் : இதுவும் உலகளந்த பெருமாள் சந்நிதியில் உட்சுற்றில் உள்ள ஒரு சிறு மாடக் கோயில். திருக்கோயிலைக் கடந்தவுடன் வலப்புறமாகத் திருச் சுற்றில் அமைந்துள்ளது. இதிலுள்ள எம்பெருமான் கள்வர்; நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றார். தாயார் கமலவல்லி நாச்சியார் இவர்களைச் சேவிக்கின்றோம்.

(13) அடுத்தது நாம் சேவிப்பது திருபவளவண்ணம். இது காமாட்சி அம்மன் சந்நிதிக்கு அருகில் (மேற்கே) சென்னைப்பேருந்து வரும் வழியில் உள்ளது. இத்திருக் கோயிலின் எம்பெருமான் பவளவண்ணன் நின்ற திருக் கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான். தாயார் பவளவல்லி நாச்சியார். இருவரையும்சேவிக்கின்றோம்,

(14) வைகுண்டப் பெருமாள் சந்நிதி: ஆழ்வார் (திருமங்கையாழ்வார்) பாசுரத்தில் பரமேச்சுவர விண்ண கரம் என்று காணப்பெறும். பரமேச்சுவரன் (பரமபத நாதன்— தேவாதி தேவன்) எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசம் ஆதல்பற்றிப் ''பரமேச்சுர விண்ணகரம்' என்று வழங்கி வருகின்றது. இது பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. இதனைக் கட்டுவித்தவன் பரமேசுவரவர்மன் என்ற பல்லவ மன்னன்,இவனுடைய தந்தை இராஜசிம்மன்.

இவன் காஞ்சி கைலாச நாதர் கோயிலை நிறுவியவன். இரண்டு திருக்கோயில்களும் 'நீலப்பலகையின் பாதுகாப்பில்' உள்ளன. இரண்டும் சிற்பக் கலைக்குப் பேர் போனவை. வைகுண்டப்பெருமாள் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பரமபதநாதன். இவன் பரமபதத்தில் வீற்றிருப்பது போல் இருந்த திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிப்பவன். தாயார் வைகுண்டவல்லி இருவரையும் சேவிக்கின்றோம்.

(15) மாலை ஐந்து மணிக்கு மேல் காஞ்சியிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் 12 கி.மீ. தொலைவிலிருக்கும் திருப்புட்குழி என்ற திவ்விய தேசத்திற்கு இட்டு வருகின்றார் என் நண்பர் கே. சீநிவாசவரதன். பேருந்தினின்றும் இறங்கிக் குறுக்குச் சாலை வழியாக 4ஃபர்லாங் தொலைவு நடந்துதான் இத்திவ்விய தேசத்தை அடைதல் வேண்டும். பெரிய உடையார் என வழங்கும் சடாயுவைத் தகனம் செய்த இடம். இதனால் புட்குழி என்ற பெயர் ஏற்பட்டது என்பர் (புள்—சடாயு). இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஜயராகவப் பெருமாள். இவர் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவரது இடப் பக்கத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருபவர் தாயார் மரகதவல்லி. இருவரையும் சேவித்துத் திரும்புகின்றோம்.

திருப்பதியில் வக்கீல் தொழில் புரியும் என் நண்பர் திரு. விஜயராகவன் இவ்வூரைச் சார்ந்தவர். இத்திருக்கோயில் பட்டாச்சாரியாரின் முதல் மனைவியின் திருக்குமாரர். பாட்டி வீடு திருப்பதி. இவர் தமிழ் பேசும் வைணவர். இவர் திருப்பதி கலாச்சாரச் சங்கத்தின் தலைவராகச் சில ஆண்டுகள் பணியாற்றினவர். தமிழ்ப் பற்று மிக்கவர். இவர் சொன்னது; "என் தந்தையார்

இரண்டாது மனைவியை மணந்து கொண்ட பிறகு தாயை இழந்த நிலையில் உள்ள எனக்கு இத்திருக்கோயில் பிரசாதம் வழங்கி 'இதுதான் என்னால் உனக்குத் தர முடிந்த சொத்து' என்று கூறி என் பாட்டி வீட்டிற்கு அனுப்பினார். அந்தப் பிரசாதத்தின் பலத்தால் நான் வக்கீல் படிப்புவரைப் படித்து இப்போது நன்றாகச் சம்பாதிக்கின்றேன்' என்று. இந்தத் திவ்விய தேசத்திற்கு வந்தபோது இது என் நினைவிற்கு வருகின்றது.

(16) மறுநாள் காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு மாமல்லபுரம் வருகின்றோம் நாங்கள் இருவரும்-கடல் மல்லைக் கிடக்கும் கரும்பாகிய தலசயனப் பெருமாளைச் சேவிக்கும் நோக்கத்துடன். பேருந்து கோயில் வாசலிலேயே எங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றது. நேராகக் கோயிலை அடைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு புயங்க சயனத்தில் சேவைசாதிக்கும் தலசயனத்துறைவாரையும் சந்நிதிக்கருகே தனிக்கோயிலில் உள்ள நிலமங்கைநாச்சியாரையும் சேவிக்கின்றோம். 'எம்மானைக் கண்டு கொண்டேன், கடிபொழில்சூழ் கடல் மல்லைத் தலசயனத்தே' (2.5:3) என்ற திருமங்கை மன்னனின் உணர்ச்சியையும் பெறுகின்றோம். விரைவாக ஊரைச் சுற்றியுள்ள சிற்பங்களைக் கண்டுகளிக்கின்றோம்.

(17) அடுத்து, பேருந்தில் ஏறி 'திருஇட எந்தை' என்ற திருத்தலத்திற்கு வருகின்றோம். இத்தலத்து எம்பெருமான் தனது தேவியை இடப்பக்கத்தில் தாங்கிக் கொண்டிருத்தலால் இத்தலம் 'திரு இட எந்தை' (திரு—இலக்குமி) என்ற திருநாமம் பெற்றது. பேருந்து இறக்கிய இடத்திலிருந்து 3 ஃபர்லாங் தொலைவு நடந்து திருக்கோயிலை அடைகின்றோம். எம்பெருமான்—திருவிட எந்தை—கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் அகில வல்லித் தாயாரைத் தமது இடக்

கரத்தில் ஏந்திய நிலையில் பரம ரசிகராய்ச் சேவை சாதிக்கும்மூலவர் ஆதிவராகப்பெருமாளை உளமாரத் துதிக்கின்றோம். உற்சவர் நித்திய கல்யாணப் பெருமாளும் கோமல வல்லித்தாயாரும் திருக்கல்யாண அவசரத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையில் அவர்களையும் சேவிக்கின்றோம்.

(18) திருவிட எந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு ஒரு பேருந்தில் ஏறி 'போதுமோ நீர்மலைக்கு என்னும்'[6] என்று பரகாலநாயகி (திருமங்கையாழ்வார்) பயணம் எடுத்ததுபோல் திருநீர்மலைக்குப் புறப்படுகின்றோம். பல்லாவரம் பேருந்து நிலையத்தில் இறங்கி ஒரு குதிரை வண்டியைப் போகவும் வரவும் அமர்த்திக் கொண்டு 3-கல் தொலைவிலுள்ள திருநீர்மலையை அடைகின்றோம். அடிவாரத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் நீர்வண்ணப் பெருமாளையும், அணிமாமலர்மங்கைத் தாயாரையும் சேவிக்கின்றோம். மலையின் மீதேறி சயனத் திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு சேவை சாதிக்கும் அரங்கநாதரையும், திருச்சுற்றில் கிழக்கு நோக்கிய திருமுகமண்ட மண்டலங் கொண்டு சேவை சாதிக்கும் சக்கரவர்த்தித் திருமகன் அழகியசிங்கர் (சந்தான நரசிம்மர்) உலகளந்தபெருமாள் (திரிவிக்கிரமன்) இவர்களைச் சேவித்துத் திரும்புகின்றோம். வந்த குதிரை வண்டியிலேயே பல்லாவரத்திற்குத் திரும்புகின்றோம். அங்கிருந்து அன்றிரவே காஞ்சிக்கு வந்து மறுநாள் காலை திருப்பதி திரும்புகின்றோம். என் நண்பர் கே. சீநிவாசவரதனின்[7] புருஷ

6. பெரி திரு. 2. 7:8

7. இந்த நண்பர் இன்று (12-4-90) இல்லை. ஐந்து ஆண்டுகட்கு (1985) முன் திருநாடு அலங்கரித்து விட்டார்

காரத்தால் 18 திவ்விய தேசங்களைச் சேவிக்கும் பேறு பெற்றேன்.

இரண்டாம் சுற்று: 1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் என் மூத்தமகன் திரு S. இராமலிங்கத்துடன் திருக்கடிகை, திருஎவ்வுளூர், திருநின்றவூர், திருவல்லிக்கேணி ஆகிய எஞ்சியுள்ள 4 திவ்விய தேசங்களையும் சேவித்து தொண்டை நாட்டுத் திருப்பதிப் பயணத்தைத் தலைக் கட்டலாம் என்பது என் திட்டம்; இறையருளும் இதனைக் கூடுவித்தது.

(19) திருக்கடிகை: முதல் நாள் திருத்தணி முருகனைச் சேவித்த நாம் மறுநாள் அதிகாலையில் 5-30 பேருந்து மூலம் சோழ சிங்கபுரம் வருகின்றோம். இது திருத்தணி—சித்தூர் நெடுஞ்சாலையில் திருத்தணியிலிருந்து சுமார் 10 கல் தொலைவில் உள்ளது. ஊருக்குள் ஒரு விடுதியில் சிற்றுண்டி கொண்டு சுமார் 2 கல் தொலைவிலுள்ள மலையடிவாரத்திற்கு வருகின்றோம். அடிவாரம் 'கொண்ட பாளையம்' என்று வழங்கப் பெறுகின்றது. தெலுங்கும் தமிழும் கலந்து நிலவும் பகுதியாதலால் 'மலை' என்று பொருள்படும் 'கொண்ட' என்ற தெலுங்குச் சொல்லும் 'பாளையம்' என்ற தமிழ்ச் சொல்லும் காதல் மணம் பூண்டு ஊர்ப் பெயராக அமைந்து கிடக்கின்றது. மலைமேல் ஏறுவதற்கு ஆற்றல் இல்லாததால் ரூ 7/-க்கு 'டோலி'யில் சென்றேன்; என்மகன் நடந்து வந்தான். சுமார் 45 நிமிடத்தில் மலை உச்சிக்குச் சென்றுவிட்டோம். இத்தலத்து எம்பெருமான் யோகநரசிம்மர் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவரையும் தனிச் சந்நிதியில் கோயில் கொண்டுள்ள அமிர்த வல்லித் தாயாரையும் சேவிக்கின்றோம்; இந்த எம்பெருமானுக்குத் 'தக்கான்' என்றும் 'அக்காரக் கனி' என்றும் வேறு திருநாமங்களும் உண்டு.

யோக நரசிம்மர் இருப்பது பெரியமலை, 45 நிமிடத்தில் கொண்ட பாளையத்திற்குத் திரும்பிவிடுகின்றோம்.

கொண்ட பாளையத்திலிருந்து சின்னமலை என்ற இடத்தில் தக்கானுக்கும் மிக்கானாக விளங்கும் யோக ஆஞ்சனேயர் திருக்கோயில் கொண்டிருக்கின்றார். இக் கோயிலில் நாங்கள் போன சமயம் திருப்பணி நடை பெற்றுக் கொண்டிருந்தது. எனக்கு மலை ஏற ஆற்றல் இல்லை. இராமலிங்கம் மட்டிலும் சென்று சிறிய திருவடியைச் சேவித்துத் திரும்பினான். வந்த குதிரை வண்டியிலேயே சோழசிங்கபுரம் திரும்பினோம். ஓர் உணவு விடுதியில் பட்டை சாதம் உண்டு திருஎவ்வுள்ளூர் வருகின்றோம்.

(20) திருவெள்ளூர்: 'திருஎவ்வுள்ளூர்' என்ற சொல் மருவி 'திருவெள்ளூர்' என்று வழங்கி வருகின்றது. இது சென்னைக்கு வடமேற்கே 30 கல் தொலைவில் உள்ளது. திருப்பதி செல்லும் சில பேருந்துகள் இந்த ஊர் வழியாகச் செல்லுகின்றன. இந்த எம்பெருமான் மூலவர் எவ்வுள் கிடந்தான் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக் கின்றான். இவனுக்கு அருகில் வடிவழகில் ஒப்புயர்வற்ற வீரராகவன் (உற்சவர்) உபயநாச்சியாருடன் சேவை சாதிக்கின்றான். பெருமாள் சந்நிதிக்குத் தெற்கு பகுதியில் தனிக் கோயில் கொண்டு சேவை சாதிக்கும் கனகவல்லித் தாயாரையும் சேவிக்கின்றோம். இவருக்கு வசுமதி என்ற மற்றொரு திருநாமமும் உண்டு. நகரப் பேருந்து மூலம் திருவெள்ளூர் இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம். இருப்பூர்தி மூலம் திருநின்றவூர் வருகின்றோம்.

(21) திருநின்றவூர்: சென்னை அரக்கோணம் இருப்பூர்திவழியில் ஒருதலம். நிலயத்தில் இறங்கி ஒரு

கல் தொலைவு நடந்து திருக்கோயிலை அடைந்து கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் பெரிய பிராட்டியார் பூமிப் பிராட்டியார் இவர்களுடன் சேவை சாதிக்கும் பக்தவத் சலரைச் (பத்தராவிப் பெருமாள்) சேவிக்கின்றோம். இத்தலத்திற்கு எந்த ஆழ்வாரும் வந்து தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யவில்லை. அர்ச்சாவதார சேவா ரசிகரும் 86 திவ்விய தேசங்களைச் சேவித்த திருமங்கையாழ்வாரும் கூட இந்தத் திருத் தலத்துக்கு வரவில்லை. இது நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. ஆனால், திருக்கடல் மல்லைத் தலசயனரை மங்களாசாசனம் செய்யும்பொழுது நின்றவூர் நித்திலத்தை'' (பெரி. திரு. 2.5:2) என்றும் திருக்கண்ணமங்கை எம்பெருமானுக்குச் சொல் மாலைகள் சாத்தும்பொழுது ''நின்றவூர் நின்ற நித்திலத்தொத்தினை'' (ஷெ 7.10 15) என்றும் மங்களா சாசனம் செய்துள்ளதை நினைக்கின்றோம். இரண்டாவது ''துணுக்குப் பாசுரத்தில்'' அந்த எம்பெருமான் சேவை சாதிக்கும் திருக்கோலத்தையே காட்டுவதைக் கண்டு வியக்கின்றோம். ஆழ்வாரும் இந்த திவ்விய தேசத்திற்கு வந்து மங்களாசாசனம் செய்தது போன்ற பெருமை யையும் பெற்று விடுகின்றார்.

காஞ்சிப் பிரதிவாதிபயங்கரம் ஆசாரிய சுவாமிகளின் திவ்வியார்த்ததீபிகையில் கண்ட ஒரு திருக்குறிப்பு நினைவிற்கு வருகின்றது. ''ஆழ்வார் எவ்வுள் கிடந்தானைச் சேவித்த பின்பு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருள்வதற்கு முன்பே திருநின்றவூரைச் சேர்ந்தார்; அத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள பத்தராவிப் பெருமாள் அப்போது ஆழ்வாருக்கு முகம் கொடாமல் பிராட்டியாரோடு சரச சல்லாபம் செய்து கொண்டு பராமுகமாக இருந்திடவே, ஆழ்வார் அத்திருப்பதியை விட்டு அப்பால் சென்று திருவல்லிக்கேணியையும்

திருநீர்மலையும் சேவித்து, அதன் பின்னர் திருக்கடல் மல்லையை அடைந்து அத்தலத்துப் பெருமானைச் சேவித்து நிற்கும் பொழுது, திருநின்றவூர் எம்பெருமான் திருமகளால் தூண்டப் பெற்று இவ்வாழ்வார் திருவாக்கினால் பாடல் பெற்றுச் சிறப்புறக் கருதிக் கடல்மல்லையில் வந்து சேவை சாதிக்க, இப்போது,

> நின்றவூர் நித்திலத்தை; ..............
> ........................
> கண்டது நான் கடல்மல்லைத்
> தலசயனத்தே (பெரி.திரு. 2.5.2)

என்ற திருநின்றவூர்ப் பத்தராவிப் பெருமானையும் இங்கே சேவிக்கப் பெற்றதாக அருளிச் செய்கின்றார்' என்பது பெரியோர்களின் நிர்வாகம்''[8] அடுத்து இருப்பூர்தி நிலையத்திற்கு வந்து சென்னை சென்று கந்தனடிமை எஸ்.பி. சண்முகம் பிள்ளையுடன் (6. பிலிப்ஸ்தெரு, சென்னை-1) தங்குகின்றோம்.

(22) **திருவல்லிக்கேணி:** மறுநாள் நீராட்டம், சிற்றுண்டி முடித்துக் கொண்டு

> குரவமே கமழும் குளிர்பொழி லூடு
> குயிலொரு மயில்கள்நின் றாட
> இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியா
> திருவல்லிக்கேணி[9]
>
> பெரி. திரு. 2.3.7

வருகின்றோம். இத்திருக்கோயில் நிலவி வரும் சம்பிரதாயப்படி பார்த்தசாரதியைச் சேவிப்பதற்கு முன்பு **வேதவல்லித் தாயார், வரதராசர், அழகிய சிங்கர்**

8. பெரி. திரு. 2.5:2 (திவ்யார்த்தீபிகை)
9. பெரி. திரு. 2.3:7

ஆண்டாள், அரங்கநாதன், சக்கரவர்த்தி திருமகன் இவர்களையெல்லாம் முறையே சேவித்துக் கொண்டு

பார்ஏறு பெரும்பாரம் தீரப் பண்டு
பாரதத்துத் தூதுஇயக்கிப் பார்த்தன் செல்வத்
தேர்ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை
செருக்களத்துத் திறல்அழியச் செற்றான்
தன்னை[10]

என்று மங்கைமன்னன் காட்டும பார்த்தசாரதியின் சந்நிதிக்கு வருகின்றோம். கருவறையில் கம்பீரமான நீண்டுயர்ந்த தோற்றத்துடனும் முறுக்கிய மீசையுடனும் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு சேவை சாதிக்கும் மூலவர் வேங்கடகிருட்டிணனையும் உற்சவர் பார்த்தசாரதியையும் சேவித்து மகிழ்கின்றோம். அன்று மாலையிலேயே திருப்பதி திரும்புகிறோம்.

திருப்பதியில் இருந்தபொழுது வகுப்பு வேலை ஆராய்ச்சி மாணவர்க்கான வேலை அலுவலக வேலை போக மீதி நேரத்தில் பெரும்பாலும் இரவு வேளைகளிலும் அதிகாலையிலும் தலங்களைச் சேவித்த அநுபவத்துடன் ஆழ்வார் பாசுர அநுபவங்களையும் சேர்த்து கட்டுரை களாக எழுதினேன். நடு நாட்டுத் திருப்பதிகட்கும் உரிய கட்டுரைகளையும் சேர்த்து 15 கட்டுரைகள் உருவாயின. இவற்றைத் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் என்ற தலைப்பில் வெளியிட்டேன். இதற்கு அணிந்துரை வழங்கி ஆசி கூறியவர் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள். இந்தப் பக்திப் பனுவலை சிறு வயதில் திருவேங்கடம் எ று அழைக்கப் பெற்ற டாக்டர் மு. வரதராசன் அவர்கட்கு,

10. பெரி. திரு. 2.10: 8

மங்கலப் புதினப் படைப்பினால் இளைஞர்
மனத்தினைத் திருத்திய கலைஞன்;
சங்கநூற் பொருளை யாவரும் உணரத்
தகவொரு விளக்கிய செம்மல்;
துங்கமார் மதுரைப் பல்கலைக் கழகம்
துலக்குறும் தனித்துணை வேந்தன்;
பங்கமில் உளத்தன; தூயநன் மு.வ.
பண்பினுக் குரியதிந் நூலே

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன.

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து' என்பர் பெரியோர், ஒரு சான்றோர் திருத்தலப் பயணத்திற்குப் வழிகாட்டியாக அமைந்தார்; மற்றொருவர் அணிந்துரை வழங்கினார்; மூன்றாமவருக்கு இந்நூல் அன்புப்படையலாக அமைந்தது. இவற்றை நினைவு கூரும்போது எல்லையற்ற மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றேன். இஃது என்னுடைய இருபத்தைந்தாவது வெளியீடு (ஆகஸ்டு—1973)



# 59. அம்புலிப் பயணநூல் தோற்றம்

நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாகவே இரவு நேரத்தில் ஒளியை அளித்து மக்களுக்குக் களிப்பினை யூட்டி வரும் சந்திரன் அவர்கள் கவனத்தைக் கவர்ந்து வந்திருக்கின்றான். பால் மணம் மாறாப் பச்சிளங் குழவி களும் வான்மதியின் அழகில் ஈடுபட்டுக் களிப்படைவதை நாம் இன்றுங் காணலாம். இளவேனிற் காலத்தில் மப்பு மந்தாரம் இல்லாத இரவு நேரத்தில் தாய்மார்கள்

தங்கள் குழவிகளை ஏந்திக் கொண்டு 'அமுதளிக்கும் அம்புலி'யைக் காட்டி அகமகிழச் செய்வது இன்றுங் கண் கொள்ளாக் காட்சியாக இருந்து வருகின்றது. திங்களைச் சுட்டிக்காட்டி,

நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா
மலைமீது ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா

என்ற குழந்தைப் பாடலால் மகிழ்வித்துக் கொண்டு வருவதை இன்றும் நாம் காணலாம்.

இங்ஙனம் அம்புவியில் வாழும் எல்லா நாட்டுக் கவிஞர்களும் அம்புலியின் வனப்பில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து இனிய பாடல்களை ஆக்கி உள்ளனர். தமிழ் மொழியில் 'பிள்ளைக்கவி' என்று வழங்கப்பெறும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் மிகவும் பேர் போனவை. இதில் 'அம்புலிப் பருவப் பாடல்கள்' புலமைக்கு விருந்தாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். தமிழ் இலக்கியத்தில் இத்தகைய பாடல்கட்கு முதன் முதலில் வித்திட்டவர் தாயுள்ளம் படைத்த பெரியாழ்வார் என்ற வைணவப் பெரியார். தாம் யசோதைப் பிராட்டியாக நின்று பேசுவதாக அமைந்த பாடியவாய் தேனூறும் பாசுரங்கள் சிந்தைக்கும் செவிக்கும் வாய்க்கும் அமுதாக இனிக்கின்றன.

அம்புவியில் வாழும் மனிதன் அம்புலியை எட்டிப் பிடிக்க இயலாது என்றிருந்த காலம் மாறிவிட்டது. அமெரிக்க உருசிய அறிவியலறிஞர்களின் அயரா உழைப்பினால் இன்று அம்புலியில் அடி வைத்து விட்டான் மனிதன். அது மட்டுமன்று. அம்புலிக்குப் பயணம் செய்வது—அதனால் ஏற்படும் பயணங்களை ஆராய்வது—என்று இன்ன பிற ஆராய்ச்சிகள் விரைந்து நடைபெற்று

வருகின்றன. நான் திருப்பதிக்கு வந்த நாள் முதல் (ஆகஸ்டு, 1960) 'விண்வெளிச் செலவு' பற்றிய செய்திகளில் மிகவும் அக்கறை கொண்டிருந்தேன். 'அமெரிக்கன் ரிப்போர்ட்டரும்', 'சோவியத் செய்தியும்' இத்தகைய செய்திகளைத் தாங்கிக் கொண்டு வந்தன. Life என்ற ஆங்கில இதழிலும் இத்தகைய செய்திகள் வண்ணப்பட விளக்கத்துடன் வெளிவந்தன. Hindu, கல்கி, ஆனந்த விகடன் என்ற இதழும் பருவவெளியீடுகளும் இத்தகைய செய்திகளை வெளியிட்டு மகிழ்ந்தன. விண்வெளிப் பயணம்பற்றி ஆங்கிலத்தில் பல சிறிய பெரிய நூல்களும் வெளிவந்து கொண்டிருந்தன. சென்னை அமெரிக்க நூலகத்தின் துணைகொண்டு இந்த நூல்களைப் பெற்றுப் படித்து வந்தேன்.

1961.இல் அமெரிக்க மக்கள்தலைவர் ஜான் கென்னடி '1970-க்குள் மனிதன் அம்புலியில் சென்று இறங்குவதை நமது இலட்சியமாகக் கொண்டு உழைப்போம்' என்று விட்ட அறை கூவல் அறிவியலறிஞர்களின் இதயத்தைத் தொட்டது. நம் நாட்டுக் கவிஞர் பாரதியாரும்,

> சந்திர மண்டலத்தியல்
> கண்டு தெளிவோம்.[1]

என்ற கனவு கண்டார். இத்தகைய கனவினை மேற்புற நாடுகள்—குறிப்பாக அமெரிக்காவும் உருசியாவும்—நனவாக்கி வந்தன. திட்டங்களை வகுத்துக் கொண்டு அவற்றைப் படிப்படியாக வெற்றியுடன் நிறைவேற்றி வந்தன. அமெரிக்காவில் (நாசா)(NASA)[2] இயக்கத்தினைச் சார்ந்த அறிவியலறிஞர்கள் மூன்று திட்டங்களை வகுத்துக் கொண்டு செயற்பட்டனர். இந்த மூன்று திட்டங்களும் மனிதன் மதிமண்டலத்திற்குச் சென்று திரும்பும் வழிகளை வகுத்து அவற்றை வெற்றியுடன் செயற்படுத்துவதற்

1. பாரதியார் கவிதைகள்—பாரததேசம்—11
2. NASA—National Aeronautics and Space Administration.

காகவே உருவாக்கப் பெற்றவை. இயல்பாகவே அறிவியல் துடிப்பையுடைய நான் இத்திட்டங்கள் செயற்படுவதைக் கூர்ந்து கவனித்து அவ்வப்போது வெளியான செய்திகளை யும் அறிவியல் கருத்துகளையும் குறிப்பெடுப்பதை வழக்க மாகக் கொண்டிருந்தேன். இந்த மூன்று திட்டங்களைப். பற்றியும் சுருக்கமாக விளக்கியுள்ளேன்.[3]

**மெர்க்குரித்திட்டம்:** ஒரு கூண்டுக்குள் ஒரு மனிதனை ஏற்றி அக்கூண்டினை விண்வெளிக்கு அனுப்பி அதனைப் பூமியைப் பலமுறை சுற்ற வர செய்து அதன் பின்னர் அதனைப்பூமிக்கு மீட்பதேஇத்திட்டத்தின் நோக்கம்ஆகும் அமெரிக்கா ஒன்றன் பின் ஒன்றாக ஃபிரெண்ட்ஷிப்—7, அரோரா 7, சிக்மா—7, ஃபெயித்—7 என்ற நான்கு விண்கலங்களை அனுப்பி வெற்றி கண்டது. இந்த நான்கு விண்கலங்களும் திட்டமிட்டபடி கடலில் இறங்கியது. அங்கிருந்து விண்வெளி வீரர்கள் மீட்கப் பெற்றனர்.

உருசியாவிலும் இந்த விண்வெளிச் செலவு சுறுசுறுப் பாக நடைபெற்றது. அமெரிக்க வீரர்கள் விண்வெளியை அடைவதற்கு முன்னதாகவே உருசியா வாஸ்டாக்-1 என்ற விண்வெளிக்கலத்தின்மீது யூரிககாரின் என்பவரை விண்வெளிக்கு அனுப்பி அழியாப் புககழ்பெற்றது (1961 ஏப்ரல் 12 ஆம் நாள்), அடுத்து வாஸ்டாக்-2, 3, 4, 5, 6 விண்வெளிக் கலங்கள் விண்வெளிக்கு அனுப்பப்பெற்று அரிய சாதனைகள் புரிந்தன.

**ஜெமினித்திட்டம்:** இத்திட்டம் அமெரிக்காவின் இரண்டாவது திட்டம் ஆகும். இது 1963-இல் தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பெற்ற பன்னிரண்டு விண்வெளிச் செலவுகளில் முதலிரண்டுச் செலவுகள் ஆளில்லாத விண்வெளிச்செலவுகளாகும்.

---

3. அம்புலிப் பயணம்—(கழகவெளியீடு) —(பக். 29—83)

(ஜெமினி—1, 2,), ஜெமினி-3இல் இரண்டு விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குச் சென்று மூன்று முறை தங்கள் கலத்தைப் பூமியின் சுற்று வழியில் இயக்கினர். (1965-ஆம் ஆண்டு மார்ச்சு 23—ஆம் நாள்). இத்திட்டதின்கீழ் மேற்கொள்ளப் பெற்ற பன்னிரண்டு விண்வெளிச் செலவுகளும் வெற்றியுடன் நிறைவேறின. அம்புலியில் இறங்குவதற்குத் தேவையான எல்லாத் துறை-நுட்பச் சோதனைகளிலும் வெற்றி கண்டனர். விண்வெளியில் முன்னேற்பாட்டின்படி குறிப்பிட்ட இடத்தில் விண்வெளி வீரர்கள் சந்தித்தல், இரண்டு விண்வெளிக் கலங்களை இணைத்தல், மனிதன் நீண்டகாலம் தொடர்ந்து விண்வெளியில் இருத்தல்— இவை இத்திட்டத்தின் முதல் நோக்கங்களாக இருந்தன. இவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பெற்ற விண்வெளிச் செலவுகளால் நிறைவேறின மனிதர்கள் விண்வெளிக் கலங்களைத் திறம்படக் கையாள முடியும் என்பது மெய்ப்பிக்கப்பெற்றது. மேலும், அவர்கள் ஒரு சுற்று வழியினின்றும் பிரிதொரு சுற்று வழிக்குச் செல்லல் விண்வெளிக் கலத்திற்கு வெளியில் ஒருவிதக் கட்டுப் பாட்டின்கீழ் விண்வெளியில் நடத்தல், சுற்றுவழியில் வேறொரு விண்கலத்தின் இருப்பிடத்தை அறிந்து. அதனைத் தொடர்ந்து சென்று அதனுடன் இணைதல், அம்புலிக்குச் சென்று திரும்புவதற்கு வேண்டிய கால அளவில் இரண்டு மடங்கு கால அளவிற்கு நீண்டகாலம் தொடர்ந்து விண்வெளியில் தங்குதலைச் சமாளித்தல் ஆகியவை இச்செலவுகளால் தெளிவாயின.

உருசியாவும் விண்வெளிக் கலங்களை விண்வெளியில் இணைக்கும் செயலையும், அண்ட வெளியில் விண்வெளி வீரர்கள் தாம் இருந்த கலங்களினின்றும் இடம் மாறும் செயலையும் நிறைவேற்றி அழியாப் புகழ்பெற்றது. சோயுஸ் —4, 5, 6, 7, 8 என்ற விண்வெளிக் கலங்களைக் கொண்டு இச்செயல் நிறைவேறியது.

**அப்போலோ திட்டம்:** நாசா இயக்கத்தினர் வகுத்த மூன்றாவது திட்டம் இது. இதில் ஒரு மனிதனைப் பாதுகாப்பான விண்வெளிக் கலத்தில் திங்கள் மண்டலத்திற்கு அனுப்பி மீட்க வேண்டும். மனிதனைச் சந்திரனுக்கு அனுப்புவதற்கு முன்னால் பல படிகளில் சோதனைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இச்சோதனைளை முதலில் பூமியின் சுற்றுவழியில் செய்து பார்த்தல் வேண்டும். முதலில் ஆளில்லாத விண்கலங்களைக் கொண்டும், அதன் பிறகு மூன்று விண்வெளி வீரர்களைக் கொண்டும் இச்சோதனைகள் செய்யப்பெறுதல் வேண்டும்.

இத்திட்டத்தில் அப்போலோ-1 முதல் 17 வரை 17 கலங்கள் செயற்பட்டன. முதல் ஆறு கலங்கள் ஆளில்லாத பயணம் ஆகும். அப்போலோ-4 பயண ஒத்திகை நடைபெற்றபோது மூன்று விண்வெளி வீரர்கள் இறந்தனர். (1967-ஆம் ஆண்டு சனவரி 27-ஆம் நாள்), அப்போலோ-7 முதல்17வரைமேற்கொள்ளப் பெற்ற பயணங்கள் ஆளுள்ள பயணங்களாகும். இந்தப்பயணங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவை அப்போலோ-8, 11 பயணங்களே. இந்த இரண்டு விண்கலங்களும் சாட்டான்-5 என்ற மாபெரும் இராக்கெட்டின் உதவியினால் விண்வெளிக்குச் செலுத்தப் பெற்றன. இவை கென்னடி முனையிலிருந்து செலுத்தப் பெற்றன.

அப்போலோ-8 இன் விண்வெளிப் பயணம் ஈடும் எடுப்பும் அற்றது. இதுகாறும் கண்டு பிடிப்பிற்காக மேற்கொள்ளப் பெற்ற எந்தப் பயணமும் 147 மணிநேரம் பயணம் சென்ற இதன் பயணத்துடன் ஒப்பிடும் தகுதியுடையதன்று. மேலும், இதுகாறும் ஆளுடன் சென்ற பதினேழு அமெரிக்க விண்வெளிப் பயணங்களோ இதற்கு நிகர் அன்று. காரணம், இவையாவற்றிலும் சென்ற விண்வெளி வீரர்கள் அனைவருமே பூமியின் சுற்றுவழியிலேயே தங்கியிருந்தனர்; அன்றியும் அவர்கள் பூமியின் அருகிலேயும் இருந்தனர்.

அப்போலோ-8 இன் விண்வெளி வீரர்கள் இதுகாறும் மனிதர்கள் எட்டியிராத மணிக்கு 38,674 கி.மீ. வேகத்தை எட்டினர்; புவியின் ஈர்ப்பு விசைச் சூழலைத் தாண்டியபோது இஃது ஏற்பட்டது. இதுகாறும் மனிதர்கள் சென்றிராத தொலைவினை—3, 72, 800 கி. மீட்டர்கள்—இவர்கள் கடந்தனர். அம்புலியைச் சுற்றியபோது இது நேரிட்டது, முதன் முதலாக அம்புலியை வட்டமிட்டதும், முதன்முதலாக பூமியின் ஈர்ப்புச் சூழலைக் கடந்ததும், முதன் முதலாக அம்புலியின் ஈர்ப்பு ஆற்றலைக் கண்டதும், முதன்முதலாகப் பூமியின் தொடர்பின்மையை முற்றிலும் அற்றதும், முதன் முதலாக அம்புலியின் மறுபுறம் கண்டதும் இப்பயணத்தின்போதே நிகழ்ந்தது.

இந்தப் பயணத்தில் எதிர்பாராமல் நேரிடும் விபத்துகளைச் சமாளிக்க எடுத்துக் கொள்ளப் பெற்ற மாற்று ஏற்பாடு முக்கியமானது. எந்த ஏற்பாடு தவறாகப் போயினும், அதற்குப் பதிலாக இன்னொரு ஏற்பாடு தயாராக இருந்தது. 1967—இல் கென்னடி முனையிலுள்ள தளத்தில் தீ விபத்து ஏற்பட்டு மூன்று விண்வெளி வீரர்கள் பலியான பிறகு இப்போது விண்வெளிக் கலத்தின் உட்புறச் சாதனங்கள் எளிதில் தீப் பற்றாத பொருளால் உருவாக்கப்பெற்றுள்ளன. எந்த நெருக்கடியிலும் பூமிக்குத் திரும்பிவிட அமைப்புகள் இருந்தன. அம்புலி மண்டலத்திலிருந்து பூ மண்டலத்திற்குத் திரும்ப ஏற்படும் காலதாமதம் ஒன்றுதான் பிரச்சினையாக இருந்தது. 3. 2 இலட்சம் கி. மீ. க்கு மேலல்லவா கடந்து பூமிக்கு வரவேண்டும்? பூமியைச் சுற்றி வருவதற்கு மேற்கொள்ளப்பெற்ற பயணத்தில் ஓர் ஆபத்து நேரிட்டால் அதிக பட்சம் மூன்று மணி நேரத்தில் திரும்பி விட முடியும். ஆனால் அம்புலியைச் சுற்றி வரும் விண்கலம் பூமிக்குத் திரும்ப இரண்டு நாட்களுக்கு மேலாகும்.

அப்போலோ—11 இன் பயணம் மயிர் கூச்செறியக் கூடிய ஒரு மாபெரும் பயணம் ஆகும். இதில் பங்கு கொண்டவர்கள் நீல் ஆர்ம்ஸ்ட்ராங், எட்வின் ஆஸ்டிரின், மைக்கல் கால்வின்ஸ் என்போர். இந்த மூவரிடமும் சில ஒற்றுமைகள் இருந்தன. மூவரும் 1930-இல் பிறந்தவர்கள்! மூவரும் 75. கி. கி. எடையை யுடையவர்கள்! இருவரின் உயரம் 378 செ மீ. மற்றொருவரின் உயரம் 175 செ. மீ! மூவரும் திருமணம் ஆகி மக்கட் பேறு பெற்றவர்கள்! மூவரும் விமானம் கடவுவதில் நல்ல அநுபவம் உடையவர்கள்; நாலாயிரம் மணி நேரத்திற்குக் குறையாமல் விண்வெளியில் பறந்தவர்கள். மூவருமே முன்பு நடை பெற்ற விண்வெளிப் பயணங்களின் போது ஒவ்வொரு முறை பங்கு பெற்றவர்கள்.

இராக்கெட்டுத் தளத்திற்குச் சற்றுத் தொலைவில் பூமிக்கு அடியில் கட்டப் பெற்றுள்ள பிளாக் ஹவுஸ் (Block house) என்ற மாபெரும் நிலவறை ஒன்றில் பல பொறிஞர்கள் இருந்து கொண்டு தம் காதுகளில் அணிந்த தொலை பேசிகள் மூலமாகவும் மற்றும் பல கருவிகள் மூலமாகவும் விண்வெளி வீரர்களுடன் தொடர்பு கொண்டு விண்கலத்தின் பல் வேறு விசைகள் இயங்குவதை அடிக்கடி சரிபார்த்துக் கொண்டிருந்தனர். பெரிஸ்கோப் (Pariscope) என்ற கருவியைப் பயன் படுத்தியும் தொலைக் காட்சித் திரைகளிலும் இராக்கெட்டு செல்லும் வழியைக் கண்டு தெளிந்தனர். அப்போலோ—11 பயணம் தொடங்குவதைச் செய்தித் தாள் பொறுப்பாளர்கள் முதலானோர் இராக்கெட் தளத்திற்கு 5. கி. மீ. தொலைவிலிருந்துதான் கண்டுகளிக்க அநுமதி பெற்றனர்.

இராக்கெட்டுடன் சென்று விண்வெளியில் பூமியைச் சுற்றி வரும்விண் கலத்திலுள்ள விண்வெளி வீரர்களுடன் தொடர்பு கொள்வதற்கென்று உலகின் பல பகுதிகளில்

கண்காணிப்பு நிலயங்கள் நிறுவப் பெற்றிருந்தன. இவற்றில் ஐந்து நிலையங்கள் அமெரிக்காவிலும், பத்து நிலையங்கள் ஆஸ்திரேலியா, ஸ்பெயின் முதலிய நாடுகளிலும் இருந்தன. இவற்றைத் தவிர நான்கு கப்பல்களிலும் எட்டு விமானங்களிலும் கண்காணிப்பு நிலையங்கள் இயங்கி வந்தன. விண்வெளி வீரர்கள் இவற்றுள் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு வைத்துக் கொண்டே இருந்தனர். ஒவ்வொரு விநாடியும் இவர்களின் உடல் நிலை, கலத்தின் வேகம், அஃது இருக்கும் இடம், அதற்குள் உள்ள வெப்ப நிலை முதலிய பல எடுகோள் விவரங்களையும் இந்த நிலையங்கள் கண்காணித்து வந்தன.

மனித வரலாற்றிலேயே மாபெரும் சிறப்புமிக்க இந்த விண்வெளிப் பயண ஏற்பாட்டினை உலகெங்கிலுமுள்ள கோடிக் கணக்கான மக்கள் தொலைக் காட்சி மூலம் கண்டு களித்தனர்; வானொலிமூலம் கேட்டு மகிழ்ந்தனர், பூமியிலிருந்து மனிதர்கள் இன்னொரு விண்கோளுக்குச் செல்லும் இணையற்ற அருஞ் செயலுக்கு இணையாக இருந்தது; உலகமெல்லாம் இங்ஙனம் ஒரே சமயத்தில் ஒரு செய்தியினைக் கேட்ட சிறப்பு. இது இங்ஙனம் அவர்கள் செய்திகளை அறிவதற்கு உடனுக்குடன் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய அட்லாண்டிக், பசிஃபிக், இந்திய மாக்கடல் கட்கு மேல் "இண்டல் ஸாட்" செயற்கைக் கோள்கள் நிலையாக அமைக்கப் பெற்றிருந்தன. மேலும் அம்புலித் தரையில் மனிதன் இறங்கப் போகும் இந்த விண்வெளிச் செய்திகளை அறிவித்தற்குப் பல நாடுகளின் வானொலி நிலையங்களும் ஒருங்கு இணைந்திருந்தன. வரலாற்றிலேயே மிகப் பெரிய வானொலி இணைப்பாகும் இது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒலிபரப்புக் கிளையும் உலகத்திலேயே மிகப் பெரிய அமைப்புமாகிய "வாய்ஸ்

ஆஃப் அமெரிக்க' (வி. ஓ. ஏ.), பிரிட்டிஷ் பிராட் காஸ்டிங் காரிப்பிபாரேஷனுடனும் (பி. பி. சி.) மற்றும் பல வானொலி அமைப்புகளுடனும் இணைந்து இந் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பியது. பி. பி. சி. தன் உள் நாட்டு ஒலி பரப்புகளிலும் உலகளாவிய ஒலி பரப்பு களிலும் வி. ஓ. ஏ. யின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அப்படியே திரும்பவும் ஒலி பரப்பு செய்ய ஏற்பாடு செய் திருந்தது. தென் அமெரிக்க நாடுகளிலுள்ள 2600 வானொலி நிலையங்களும் வி. ஓ. ஏ. நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய ஏற்பாடு செய்திருந்தன. விண் வெளித் திட்டத்தை ஒளிவு மறைவு இன்றி உலகம் நன்கு பார்த்துக் கொண்டிருக்கும்படி நடைபெறச் செய்வதுதான் அமெரிக்காவின் சிறந்த மரபாக இருந்து வருவதை நாம் அறிவோம்.

தாய்க்கலமாகிய கொலம்பியாவும், அம்புலி ஊர்தி யாகிய கழுகும் இணைந்த வண்ணம் படிப்படியாகச் சந்திரனின் ஈர்ப்பு ஆற்றல் சூழ்நிலையை நெருங்கின. பிறகு அந்த ஆற்றலின் காரணமாகச் சந்திரனைச் சுற்றி வந்தன. நான்காம் நாள் அது சந்திரனில் இறங்க வேண்டிய நாள். அம்புலியில் இறங்கப் போகும் ஆர்ம்ஸ்ட்ராங்கும் ஆல்டிரினும் தாங்கள் இருந்த கொலம்பியாவினின்றும் குகைபோன்ற ஓர் அமைப்பு வழியாக அம்புலி ஊர்தியினுள் நுழைந்து அதனை விண் கலத்தினின்றும் பிரிந்தனர். இப்போது இரண்டும் அம்புலியைச் சுற்றி வந்து கொண்டிருந்தன. தாய்க் கலத்திலிருந்து கொண்டே காலினிஸ் அம்புலியைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். அவருக்குக் கீழாக அம்புலி ஊர்தியிலிருந்து கொண்டு ஏனைய இருவரும் அம்புலியைச் சுற்றிக் கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும்தாம் ஆறாம் நாள் சந்திரனில் இறங்கவேண்டும் என்பது திட்டம்.

சந்திரனுக்கு அண்மை உயரத்தில் சுற்றி வந்து கொண்டிருந்த 'கழுகி'லுள்ள சில விசைகளை இயக்கி

அதனை அம்புலித்தரையில் இறக்கினர் விண்வெளி வீரர்கள். இனிமையாக உண்டு அமைதியாக எட்டுமணி நேரம் உறங்கி ஓய்வு கொண்டனர். ஓய்விற்குப் பிறகு ஆர்மஸ்ட்ராங்கும் ஆல்டிரினும் விண்வெளி உடைகளை அணிந்து கொண்டனர். தம்மிடமிருந்து கிட்டத்தட்ட 112 கி.மீ. உயரத்தில் அம்புலியைச் சுற்றி வந்து கொண்டிருந்த மைக்கேல் காலின்சுடன் உரையாடினர். பூமியிலுள்ள அறிவியலறிஞர்களுடனும், தொடர்பு கொண்டனர். 'இறங்கலாம்' என்ற கட்டளை கிடைத்ததும் 'கழுகின்' கதவுகளைத் திறந்து கொண்டு முதலில் ஆர்ம்ஸ்ட்ராங் இறங்கினார்; பத்தொன்பது நிமிடத்திற்குப் பிறகு ஆல்டிரினும் அவருடன் வந்து சேர்ந்தார்.

இரண்டு விண்வெளி வீரர்களும் அண்ணாந்து நோக்கினர். பகலவன் அப்போதுதான் சந்திரனின் தொடுவானத்தில் தோன்றினான். தொலைவில் அரை வட்டமாகப் பூமி காட்சியளித்தது. அதன் ஒரு பாதி பகலவனின் ஒளியால் ஒளிர்ந்தது; மற்றொருபாதி இருண்டு கிடந்தது. அம்புலியில் ஒரு பகல் பூமியில் பதினான்கு நாட்கள் என்பதையும் இரவும் அப்படியே என்பதையும் நாம் அறிவோம். வளிவண்டலமே இல்லாத அந்தப் பாழ்வெளியில் பகலவனின் கதிர்கள் அம்புலியைக் கடுமையாகத் தாக்கும். ஆயினும், விண்வெளி உடை அணிந்திருந்த வீரர்கள் இருவரும் அந்தக் கடும் வெப்பத்தால் பாதிக்கப் பெறவில்லை.

அம்புலித் தரையில் ஆர்ம்ஸ்ட்ராங் நடக்கத் தொடங்கினார். பூமியில் நடப்பதுபோல் அங்கு நடக்க முடியாது. இலேசாக கங்காருபோல் எழும்பிக் குதித்து நடக்க வேண்டும். ஆர்ம்ஸ்டிராங் இதைப் பூமியில் எத்தனையோ முறை செய்து பழகியிருந்தமையால் இப்போது அவ்வாறு நடப்பது அவருக்கு எளிதாகஇருந்தது. சந்திரனில்இருக்கும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் மூன்று மணிநேரம் என்ற

விகிதத்தில் அவர் பூமியிலேயே செயற்கையாக நிறுவப் பெற்ற சந்திரமண்டலச் சூழ்நிலையில் ஒத்திகை பார்த்துப் பழகியிருந்தார். விண்வெளி வீரராவதற்கு அவர் பெற்ற எத்தனையோ பயிற்சிகளில் இஃது ஒரு சிறு பகுதியே யாகும்.

ஆர்ம்ஸ்ட்ராங்கின் எடை 165 இராத்தல்; அவர் அணிந்திருந்த விண்வெளி உடையின் எடை 54 இராத்தல்; அவர் முதுகில் தூக்கிச் சென்ற உயிரியம் (Oyxgen) அடங்கிய அமைப்பின் எடை 120 இராத்தல். இத்தனையும் சேர்ந்து அம்புலியில் 57 இராத்தல்களே! இந்த வேற்றுமை காரணமாக வழக்கம்போல் அவர் நடந்தால் தடுமாறி விழுந்துவிடக் கூடுமாதலால் மெல்லக் குதித்து முன்னேற வேண்டியதாயிற்று. விரைவில் அவரும் அவர் தம் தோழரும் அமெரிக்கக் கொடி ஒன்றைச் சந்திரனில் நட்டனர். வளிமண்டலமற்றச் சூழ்நிலையில் அது பறக்காது என்ற காரணத்தால் நாலா பக்கமும் இழு விசைக் கம்பிகள் கொடியை இழுத்துப்பிடித்து நீண்டிருக்குமாறு அமைத்தனர். அடுத்து, அம்புலி மண்டலத்திலிருந்து சில பாறைகளைப் பூமிக்குக் கொண்டு வருவதற்காகச் சேகரித்தனர். சில அறிவியற் கருவிகளைச் சந்திர மண்டலத்தில் நிறுவினர்; ஒளிப்படங்கள் (Photographs) எடுத்தனர். சினிமா, தொலைக் காட்சிக் காமிராக்களை இயக்கிப் படங்கள் எடுத்தனர்.

ஆல்டிரினும் ஆர்ம்ஸ்ட்ராங்கும் அம்புலியில் தன்னந் தனியாக இருந்த போதிலும் பூமியில் கோடிக்கணக்கான மக்கள் அவர்களுடனேயே இருக்கும் உணர்வைத் தொலைக்காட்சிமூலம் பெற்றனர். அவர்களுடைய தலைக் கவசத்திற்குள் (Helmet) நுண்ணிய ஒலிவாங்கிகள் (Microphones) இருந்தன. சிறிய ஒலிபரப்புச் சாதனங்களை அவர்கள் முதுகில் சுமந்து கொண்டிருந்தனர். அம்புலி ஊர்தியிலும் ஒலி பரப்புக் கருவிகள் இருந்தன.

இவற்றால் அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் பூமியில் உடனுக்குடன் ஒலிபரப்பாயிற்று. மக்கள் அதனைக் கேட்டு மகிழ்ந்தனர். தொலைக்காட்சிக் காமிராவை அவர்கள் இயக்கத் தொடங்கியதும் உடனுக்குடன் அக்காட்சிகள் உலகின் பல பகுதிகளிலும் தொலைக்காட்சிச் சாதனங்கள் உள்ள இல்லங்கள்தோறும் தெரிந்தன; அவர்கள் மக்கள் கண்டு மகிழ்ந்தனர். இதற்கு ஒலிபரப்புச் சாதனங்களுடன் உலகினைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் செயற்கைத் துணைக்கோள்கள் கைகொடுத்து உதவின.

இந்த இரண்டு விண்வெளிவீரர்களும் அம்புலியில் 22 மணிநேரம் கழித்தனர். பின்னர் இவர்கள் 'கழுகில்' ஏறிச் விசைகளை முடுக்கியதும் அந்த ஊர்தி மேலே கிளம்பிச் சந்திரனை வட்டமிட்டது; இதுகாறும் வட்டமிட்டுக் கொண்டிருந்த 'கொலம்பியா'வுடன் இணைந்து கொண்டது. விண்வெளி வீரர்கள் இருவரும் மீண்டும் அம்புலி ஊர்தியிலிருந்து தாய்க் கலத்திற்குக் குறுகிய குகை வாயில் வழியாக வந்து சேர்ந்தனர். அவர்களைக் காலின்ஸ் அன்பொழுக வரவேற்றார். இப்போது தேவை யற்ற 'கழுகினைக்' கழற்றி விட்டனர் அது தன்னந்தனி யாகச் சந்திரனை வட்டமிட்ட வண்ணம் இருந்தது.

தாய்க் கலத்திலிருந்த மூன்று விண்வெளி வீரர்களும் அதிலுள்ள இராக்கெட்டுப் பொறியைத் தக்க சமயத்தில் இயக்கினர். விண்கலம் மேல் நோக்கிக் கிளம்பி விரைவில் அதன் ஈர்ப்பு விசையினின்றும் விடுபட்டுப் பூமியை நோக்கி விரைந்தது. மணிக்கு 8,976 கி.மீ. வேகத்தில் அது வந்து கொண்டிருந்தது. இந்த விண்கலத்திலும் இருபகுதிகள் இருந்தன. பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலத்தை நெருங்குவதற்குச் சற்று முன்னதாகத் தேவையற்ற ஒரு பகுதியை கழற்றிவிட்டனர். அது வளிமண்டலத்தைத் தாண்டும்போது உராய்வினால் அதிக வெப்ப மடைந்து எரிந்து சாம்பலாகிவிட்டது, விண்வெளி வீரர்கள் அமர்ந்

திருந்த பகுதிகள் மட்டிலும் மணிக்கு 40,000 கி.மீ. வேகத்தில் பூமியை நெருங்கியது. இந்த விண்கலம் வெப்ப மடைந்து எரிந்து சாம்பராகா திருக்க விண்கலத்தைச் சுற்றி வெப்பத் தடுப்புக் கவசம் ஒன்றிருந்தது விண்கலம் 5000° F வெப்பத்துடன் பழுக்கக் காய்ச்சியது போன்றிருந் தாலும், வீரர்கள் இருந்த அறை குளிர்ச்சியாகவே (81°F) இருந்தது.

விண்கலம் பூமியிலிருந்து 72,00 மீட்டர் உயரத்தி லிருந்தபோது இரண்டு குதிகுடைகள்விரிந்து கொடுத்துக் கலத்தின் வேகத்தைத் தணித்தன. 3000 மீட்டர் உயரத்தில் மேலும் மூன்று குதிகுடைகள் விரிந்து கொடுத்தன. இதனால் விண்கலம் அதிக அதிர்ச்சி யின்றிப் பசிபிக்மா கடலில் குறிப்பிட்ட இடத்தில் வந்து விழுந்தது. (வட்டமிட்ட வண்ணமிருந்த ஹெலிகாப்டர் விமானங்களில் ஒன்று விண்வெளி வீரர்களை மீட்டு அருகிலிருந்த போர்க்கப்பலில் கொண்டு போய்ச்சேர்த்தது. மா லுமிகள் விண்கலத்தைப் பாதுகாக்கும் பொறுப் பேற்றனர்.

இந்த விவரங்களையும் இன்னோரன்ன பல ஏனைய விவரங்களையும் கொண்ட 'அம்புலிப் பயணம்' என்ற நூலை 1970 இல் அப்போலோ11 பயணம் முற்றுப் பெற்ற சில திங்களில் பிறந்தது. பல்வேறு காரணங்களால் தவழ்ந்துவரக் காலந் தாழ்த்தது. அதனால் அப்போலோ - 12 முதல் 17 முடிவுள்ள பயணங்களைப் பற்றிய செய்தி களையும் தொடர்பாக இந்த நூலில் சேர்த்தேன். இதனால் இந்த நூல் அம்புலிப் பயணப் பற்றிய எல்லாக செய்திகளும் அடங்கிய ஒரு கருவூலம் ஆயிற்று. நூலும் கழக வெளியீடாக (டிசம்பர்—1973) வெளி வந்தது. இஃது என்னுடைய **இருபத்தாறாவது** வெளியீடாக அமைந்தது.

இதனைத் திருவேங்கடம் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த டாக்டர் டி. செகந்நாத ரெட்டி அவர்கட்கு,

நள்ளிரு ளிடையே முளைத்தசெஞ் சுடர்போல்
    நலமுறத் தோன்றிய சீலன்;
ஒள்ளிய அறிவின் நற்பய னாய
    ஒழுக்கமும் திறமையும் பெற்றோன்;
தெள்ளிய வுளத்தன்; பல்கலைக் கழகச்
    செவ்விய இதயமே போல்வான்;
விள்ளரும் புகழான்; சீர்செகந் நாத
    வேந்தனுக் குரியதிந் நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கினேன். இந்நூலின் 'நூல்முகத்தில்' எழுதிய இவரைப்பற்றிய குறிப்பு இது:

"டாக்டர் டி. செகந்நாதரெட்டி அவர்கள் மருத்துவத்துறையில் டாக்டர் A. L. முதலியாரை யொப்பப், பெரும்புகழ் பெற்ற பேரறிஞர். இரண்டாம் உலகப் பெரும்போரில் பல்வேறு இடங்களில் எட்டாண்டு கட்கு மேலாகப் பணியாற்றியவர். அடுத்துச் சென்னை மருத்துவமனை மருத்துவர், விசாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர், குண்டூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் மீண்டும் விசாகப்பட்டினம் மருத்துவமனையில் நோயியல் (Pathology) இயக்குநர் என்று சுமார் பதினெட்டு ஆண்டுகள் பணியாற்றிய பெருந்தொண்டர். இவரது சலியாத உழைப்பையும் தன்னலமற்ற சேவையையும் பாராட்டும் முகத்தான் நடுவரசு இவருக்குப் பாண்டிச்சேரியிலுள்ள சவகர்லால் நேரு முதுகலை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலையத்தில் முதல்வர் பணியை அளித்தது. ஐந்தாண்டுக் காலத்தில் டாக்டர் ரெட்டி அவர்கள் அதன் வளர்ச்சியை வீறு கொண்டெழச் செய்து அதன் தனி இருப்பை நாடறியச்

செய்தார். செயல் திறம்மிக்க இவருடைய சுறுசுறுப்பையும் 'மெய் வருத்தம் பாராதும், பசி நோக்காதும், கண் துஞ்சாதும், பணியாற்றும் திறமையையும் அறிந்த ஆந்திர மாநில அரசு திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவியை அளித்தது) பதவியேற்ற நாலாண்டுக் காலத்திற்குள் இங்குப் பல புதிய, துறைகளைப் பிறப்பித் தார். முதுகலையுடன் கூடிய தமிழ் ஆராய்ச்சித் துறையும் அவற்றுள் ஒன்று. பல்கலைக் கழகத்தில் பல்லாண்டுகள் உறங்கிக் கிடந்த திட்டங்களையெல்லாம் உயிரியம் (Oxygen) ஊட்டிச் செயற்படச் செய்து மருத்துவ நிபுணத்துவத்தை ஆட்சி முறையிலும் காட்டின பெருந்தகை இவர். முதல் துணைவேந்தர் பேராசிரியர் எஸ் கோவிந்தராஜுலுவை 'விசுவகர்மா' என்றால், மூன்றாம் துணைவேந்தர் டாக்டர் ரெட்டியை 'மயன்' என்று கூறலாம்.''

''இவருடைய அரும்பெரும் பணிச்சிறப்புகளைப் பல்கலைக் கழக வளாகத்தில் பல இடங்களிலும் காண லாம். பாண்டி மருத்துவ ஆராய்ச்சி நிலையமும் திருப்பதி பல்கலைக் கழகமும் இவருடைய நினைவுச் சின்னங் களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை''

''இவருடைய கடைக்கண் நோக்கு தமிழ்த்துறை பாலும் உண்டு ஆதலால் இவருடைய ஆட்சிக்காலத்தில் இங்குப் பணியாற்றப் பேறுபெற்ற நான் இவரது அரும்பெருஞ் சேவையின் நினைவாக இச்சிறு நூலை இவருக்கு மகிழ்ச்சியுடன் அன்புப் படையலாக்குகின்றேன். அமெரிக்கர்கள் அம்புலிப் பயணத்திட்டங்களை விரைவாக நிறைவேற்றினது போல் இவரும் பல்கலைக் கழக வளர்ச்சி யின் பயனுள்ள திட்டங்களை மின்னல் வேகத்தில் நிறைவேற்றுவதால் இந்நூலை இவருக்குப் படைப்பது சாலப் பொருத்தமாகும் என்று கருதுகின்றேன்''[4]

4. அம்புலிப் பயணம்—நூல்முகம்-பக் (6-7).

இந்த நூல் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையின் ஆதரவில் நடைபெற்ற ஒரு வெளியீட்டு விழாவில் (ஏப்பிரல்-1974) இதன் முதற்படியை இவரது துணைவியார் திருமதி இலக்கு மிடி. சகந்நாதரெட்டி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்த விழா வில் டாக்டர் எம், அனந்தசயனம் அய்யங்கர் நூலை வெளியிட்டார்; பல்கலைக் கழகப் பதிவாளர் பேராசிரியர் எம்.கே.இராமகிருஷ்ணன் தலைமை தாங்கி னார். விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது; இது புதிய தமிழ்த் துறைக்கும் ஒரு 'களையைத்' தந்தது. இந்த நூல் என்னுடைய இருபத்தாறாவது வெளியீடு (திசம்பர்-1973).

குமிழி — 216

# 60. இரண்டு தங்கப் பதக்கங்கள்

உலகில் நன்றாகப் பணியாற்றுபவர்கட்கு ஊதியம் உயர்த்தப் பெறுகின்றது; பதவி உயர்வும் கிடைக்கின்றது. இந்த உண்மையை அப்படியே வீட்டில் குழந்தையின் பெற்றோர்கள் கையாளுகின்றனர். 'விசிறி எடுத்துக் கொண்டவா; கற்கண்டு தருகின்றேன்' என்கின்றாள் அன்னை. 'எண்ணெய் தேய்த்துக் குளித்தால் பொம்மை வாங்கித் தருவேன்' என்கின்றார் தந்தை. வீட்டில் முன்னறி தெய்வமாகிய அன்னையும் பிதாவும் கையாளு கின்ற முறையையொட்டியே ஆசிரியர்கள் மாணவர்களின் நடத்தையிலும் கற்றலிலும் இத்தகைய ஒரு முறையைக் கையாளுகின்றனர், தமிழ் எம்.ஏ. வகுப்பு தொடங்கப் பெற்றதும் (1970-71) முதலாவதாக முதுகலைப் பட்டம் பெறுபவர்களில்மொத்த மதிப்பெண்களில் முதலாவதாகப்

பெற்ற மாணவருக்கு ஒரு தங்கப் பதக்கமும், இலக்கியத் திறனாய்வுத் தாளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு ஒரு தங்கப் பதக்கமும் வைக்க வேண்டும் என்ற எண்ணம் என் சிந்தையில் தோன்றியது. இதனை நிறைவேற்றுவது எப்படி? ஏழுமலையான்தான் வழிகாட்ட வேண்டும்.

அவனை மனத்தில் இருத்தி 'திருவள்ளுவர் தங்கக் குழு' என்ற ஒரு குழுவை உருவாக்கினேன். அடியேன் பேருக்குத் தலைவன். சித்தூரில் திரு.இராசமாணிக்கம் செட்டியார் (வெல்லம் மண்டி) அவர்கள் செயலராகவும், திரு.A.K. ஆனந்தம் செட்டியார்(இராமர்கோயில், துணிக் கடை)பொருளாளராகவும் இருக்க ஒப்புக்கொண்டார்கள். இவர்களைத் தவிர திருப்பதியில் விசயராகவ அய்யங்கார், (கல்யாணம் அய்யங்கார்)டாக்டர் G. T.கோபாலகிருஷ்ண நாயுடு, சென்னை கந்தனடிமை எஸ். பி. சண்முகம்பிள்ளை கோட்டாத்தூர் K.N. நல்லப்ப ரெட்டியார் வேறு சிலர் குழு உறுப்பினர்களாகவும் இருக்க ஒப்புக் கொண்டனர். ரூ. 100, அதற்கு மேல் தொகைகள் ஏற்றுக் கொள்ளப் படும் என்று பல செல்வர்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கு வேண்டுகோள் அறிக்கைகள் அனுப்பப் பெற்றன. எதிர் பார்த்த அளவுக்கு யாரும் கொடுக்க முன் வரவில்லை. ஏதோ அத்தி பூத்த மாதிரி ஒன்றிரண்டு டிராப்டுகள் வந்து கொண்டிருந்தன. சித்தூரில் பாரத ஸ்டேட்வங்கியில் கணக்கு திறந்து அதில் தொகைகள் சேமிக்கப்பெற்றன.

1972-ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவருக்கே பதக்கங்கள் வழங்கப் பெறவேண்டும் (1973 பிப்பிரவரியில் நடைபெறும் பட்டம் அளிப்பு விழாவில்) என்ற குறிக்கோள் இருந்தமையால் நானும் திரு. P. சவுரிராஜனும் சித்தூர் சென்று இராசமாணிக்கம் செட்டியாரைச் சந்தித்து அவர் அன்பளிப்பை வழங்குமாறு கேட்டோம். அவர் ரூ. 200/- வழங்கினார். அவர் வழங்கியதைப் பார்த்து வேறு மூவர்

வழங்குவர் என்ற சம்பிரதாயம் ஒன்று இருப்பதாகச் சுட்டிக்காட்டித் தொகையை அதிகப்படுத்துமாறு வேண்டினோம். அவர் ரூ 500/- தந்தார். அப்படியே வேறு மூவர் ரூ. 500/- வீதம் வழங்கினர். வேறு சிலர் ரூ 50/- வழங்க முன் வந்தனர். அந்தத் தொகைகளையும் ஏற்றுக் கொண்டோம். அனைத்தையும் ஆனந்தம் செட்டியாரிடம் ஒப்படைத்தோம். அவர் அவற்றை வங்கியில் செலுத்தி விட்டார்.

இன்னும் ஒரு மாதத்தில் ரூ. 3500/-ம் அந்த ஆண்டு பதக்கத்திற்குரிய ரூ 500/-ம் ஆக 4000-ம் பல்கலைக் கழகத்தில் செலுத்த வேண்டியிருந்ததால் ரூ 2000/- கடனாகத் தருமாறு இராச மாணிக்கம் செட்டியார் அவர்களைக் கேட்டேன். தேவையான தொகையைத் தேவையிருக்கும்போது தருவதாக வாக்களித்தார்; என் கடிதம் கண்டு ஆனந்தம் செட்டியாரிடம் தந்து விடுவதாகச் சொன்னார். நானும் திரு. சவுரிராசனும் திருப்பதி திரும்பினோம். கடைசி நாள் குறிப்பிட்டுப் பலருக்கு எழுதியிருந்தமையால் நாங்கள் ஊர் வந்து சேர்ந்ததும் ரூ 2000/-க்கு மேற்பட்ட தொகைகள் டிராப்டுகளாக என் பேருக்கு அனுப்பியிருந்தார்கள். நான் அவற்றை வங்கியில் செலுத்தி ஒரே செக்காக ஆனந்தம் செட்டியாருக்கு அனுப்பி வைத்து ரூ. 4000- க்கு ஒரு காசோலையைப் பல்கலைக் கழகப் பதிவாளர் பெயருக்கு எடுத்து என் பேருக்கு அனுப்புமாறு கேட்டு எழுதினேன், அவரும் அப்படியே அனுப்பி வைத்தார்.

நானும் பதிவாளருக்கு ஒரு கடிதத்துடன் இந்த ரூ. 4000/-க்குரிய காசோலை அனுப்பி வைத்தேன். கடிதத்தில் குறிப்பிட்டிருந்த செய்திகள் : (1) திருவள்ளுவர் பெயரில் St Thiruvalluvar Gold Medal என்று ஒரு தங்கப் பதக்கம் தமிழ் எம்.ஏ யில் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறினவருக்கு வழங்கப்பெறுதல் வேண்டும். தங்கப்

பதக்கம் பத்து காரட் தங்கத்தில் பத்து கிராம் எடை இருக்க வேண்டும். ரூ 3500/- லிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு இது செய்யப் பெற லாம். நடப்பு ஆண்டு (1972)க்குத் தனியாக ரூ 500/-, அனுப்பப்பெற்றுள்ளது. இதனை இந்த ஆண்டுக்குரிய தங்கப்பதக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.''

1972 சனவரியில் முன்பின் அறிமுகமாகாத பொள்ளாச்சி வள்ளல் திரு. நா. மகாலிங்கத்திற்கு புதி தாகத் தொடங்கப்பெற்று எம். ஏ வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் இலக்கியத் திறனாய்வில் 60 விழுக் காட்டிற்குமேல் முதல் மதிப்பெண் பெறுபவருக்கு வழங்கும் படியாக ஒரு தங்கப் பதக்கத்திற்கு உதவ வேண்டும் என்று எழுதியிருந்தேன். அவரும் ''இப்போது வடலூரில் திருப்பணி வேலை நடைபெற்றுக் கொண் டுள்ளது. ஆறு திங்களில் இப்பணி நிறைவெய்தி விடும். அதன் பிறகு எழுதுக'' என்று மறுமொழி தந்திருந்தார். அதன்படி 1972—ஜூன் மாதம் அவர் கடிதத்தை நினைவூட்டி மீண்டும் எழுதினேன். அவர் ''எவ்வளவு தொகை வேண்டும்?'' என்று கேட்டு எழுதினார். நான் ''நடப்பு ஆண்டு பதக்கத்திற்கு ரூ 500/ம் தொடர்ந்து ஆண்டு தோறும் வழங்கப்படவேண்டியதற்கு மூலதனமாக ரூ. 3500/-ம் தேவை; இந்தத் தொகையை (ரூ. 4000/-ஐ) திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பதிவாளர் பெயருக்கு டிராப்ட் எடுத்து எனக்கு அனுப் பினால் நலம்'' என்று எழுதினேன். அங்ஙனமே வள்ளல் சொற்படி கோவையிலுள்ள, 'சக்தி சுகர்ஸ்' என்ற நிறுவனத்திலிருந்து ரூ 4000/-க்குப் பதிவாளர் பெயருக்கு உள்ள டிராப்ட் வந்தது. அதனை அப்படியே கோவையி லிருந்து வந்த கடிதத்தின் நகலுடன் பதிவாளருக்கு அனுப்பி விட்டேன். திருவள்ளுவர் தங்கப்பதக்கத்தைப் போல, இராமலிங்கர் பேரில் ஒரு பதக்கம் (St. Ramalinga Swamigal Gold Medal)என்றுவைக்குமாறு எழுதிவிட்டேன்.

1972 தேர்வில் மொத்த மதிப்பெண்களில் முதல் வகுப்பு மதிப்பெண்கள் பெற்று முதலாவதாகத் தேர்ந்தவர் தேவசங்கீதம் என்பவர்; இலக்கியத் திறனாய்வில் முதல் வகுப்பு மதிப்பெண்கள் பெற்று முதலாவதாகத் தேர்ந்தவர் சாமுவேல் என்பவர். இருவருக்கும் 1973 பிப்பிரவரியில் நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டங்களுடன் தங்கப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. இந்தத் திட்டம் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. பதக்கங்கள் பெற்ற மாணவர்களின் பெயர்கள் பெற்ற ஆண்டுடன் பெயர்ப் பலகைகளில் பொறிக்கப் பெற்று துறையில் வைக்கப்பெற்றுள்ளன.

திருவள்ளுவர் தங்கப் பதக்கத்திற்காகத் தண்டப் பட்ட பணத்தில் ரூ 2100/- மீதி இருந்தது. சித்தூர் பாரத ஸ்டேட்டு வங்கியில் இருந்து வந்தது. அதனைப் பயன் படுத்திய முறையைப் பின்வரும் குமிழியொன்றில் விளக்குவேன்.

குமிழி—217

## 61. திருக்குறள் கருத்தரங்கு

முதலாண்டு (1970—71) முழுவதும் ஆசிரியர்கள் நியமனத்தில் துணைவேந்தர் டாக்டர் சகந்நாதரெட்டி அவர்கள் நடந்துகொண்ட முறை என் மன அமைதியைக் கெடுத்தது. என்றாலும் மன உறுதியுடன்—மன அமைதியுடன் — பணியாற்றினேன். சனவரியில் (1971) தான் திரு P. செளரிராசன் விரிவுரையாளராகச் சேர்ந்தார். வேலை பளு சிறிது குறைந்தது. மாணாக்கர்களை நன்கு

கவனித்துத் தேர்வுக்கு அனுப்ப முடிந்தது. இரண்டாவது ஆண்டு முழுவதும் தேர்வில் வெற்றியடையும் முதல் மாணவர்க்கு தங்கப் பதக்கங்கள் வைக்கும் முயற்சியில் முழுக் கவனத்தையும் திருப்பவேண்டியதாயிற்று. மூன்றாவது ஆண்டில்தான் பாடங் கற்பிக்கும் பணியைத் தவிர பிற பொதுப்பணியில் கவனம் செலுத்தினேன். 1972-73 இல் கூட இதில் தனிக் கவனம் செலுத்த முடியவில்லை; ஓரளவுதான் கவனம் செலுத்த முடிந்தது. எனினும் பொதுவான இலக்கியப்பணி என் மனத்தில் கால் கொண்டது.

1973-74 ஆண்டில் கருத்தரங்கு பற்றிய சிந்தனை தீவிரமாகச் செயற்படத் தொடங்கியது. கருத்தரங்கு நடைபெற வேண்டியதற்குப் பணம் வேண்டுமல்லவா? திரு இராகவரெட்டி என்பவர் வளர்ச்சித்துறை (Development) அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்துத் தமிழக அரசு தந்த மானியத்தில் ஏதாவது மீதி இருக்கின்றதா என்று வினவினேன். முதல் மூன்று ஆண்டுகளில் கிடைத்த மானியத் தொகைகளை ஆசிரியர் மேசை, நாற்காலிகள்; நூல்கள் வைப்பதற்கும் அலுவலகப் பதிவேடுகள் வைப்பதற்கும், பீரோக்கள்; வகுப்பறையில் மாணவர்கட்கு இருக்கை வசதிகள் — இவற்றிற்காக செலவு செய்து கொண்டிருந்ததால் நிதி இருப்பைப் பற்றி விசாரிக்க நேர்ந்தது. அவரும் 4000/- மேல் இருப்பு இருப்பதாகச் சொன்னார். ஏதாவது துறைச் செலவுக்குத் தேவைப்பட்டால் எழுதுமாறும் சொன்னார். அவர் சொற்படி கருத்தரங்கு நடத்துவதற்கு ரூ3000/-தருமாறு எழுதினேன். கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

என்ன பொருள் பயிற்சி கருத்தரங்கு நடத்துவது என்பதைப்பற்றிச் சிந்தித்தேன். உலகுக்கென்று ஒரு

நூலை அளித்த பெருமை தமிழகத்துக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் பெருமை அடையலாம். இத்தகைய பெருமை திருவள்ளுவருக்கு உண்டு; இவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையுமாகும்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு[1]

என்று பாரதியாரும் பாடியுள்ளாரல்லவா? திருக்குறள் 'உலக நூல்' என்பதற்கு திருக்குறளிலேயே சான்றுகள் உள்ளன. அறமும் பொருளும் இன்பமும் ஒரு சமயத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒருநாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்குப்—உலகுக்குப்-பொது. நூலிலும் தொடக்கம் முதல் இறுதி வரை பொதுமைப் பொருளுணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் தக்க இடங்களில் பளிச்சிடுகின்றன. இக்குறிப்புகள் நூலை உலக நூல் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. ஆகவே, இந்த நூலைக் கருத்தரங்குப் பொருளாகத் தேர்ந்தெடுத்தேன். இதுவே தமிழ்த்துறையின் முதல் கருந்தரங்கில் ஆயப்படவேண்டும் என்பது என் ஆசை. கருத்தரங்கு நிகழ்ச்சிகள் முழுவதும் ஆங்கிலத்தில் அமைதல் வேண்டும் என்பது என் ஆசை. அஃது இயலவில்லை. தொடக்க விழா நிகழ்ச்சிகள் யாவும் ஆங்கிலத்தில் அமைந்தன. ஏனைய நான்கு அமர்வுகளில் ஒரு சில ஆங்கிலக் கட்டுரைகளும் வந்தன; அவ்வளவே.

பல்கலைக் கழக முறைப்படி-மரபுப்படி-துணைவேந்தர் தலைமை வகிப்பார். வள்ளுவனுக்கே தம் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்துத் தம் மகனுக்கு வள்ளுவன் என்ற பெயரையும் இட்டு மகிழ்ந்த தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு (துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்) அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி

1. பா. க: செந்தமிழ்நாடு—7

வைக்க, என் அருமை நண்பர், கல்லூரியில் ஒரு சாலை மாணாக்கர்—பிரபல வழக்குரைஞர், பல பேருந்துகளின் உரிமையாளர்—1952-57 வரை சென்னை சட்டமன்ற உறுப்பினர் — P.அரங்கசாமி ரெட்டியார் வள்ளுவர் படத்தைத் திறந்துவைக்க தவத்திருகுன்றக்குடி அடிகளார் ஆசி கூற தொடக்க விழா அமர்வு அற்புதமாக அமைந்தது.

அடுத்து அமைந்த 4 அமர்வுகள் (1) திருக்குறள்—கலையும் அறிவியலும் (2) தமிழ் இலக்கியத்தில் திருக்குறள் (3) திருக்குறளும் சமயமும் (4)திருக்குறளும் பிறமொழி இலக்கியங்களும் என்று அமைந்து ஒவ்வொன்றிலும் ஐந்து ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப் பெற்றன. தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆந்திரம் ஆகிய நான்குப் பகுதிகளிலுள்ள அறிஞர்களும் நிகழ்ச்சிகட்கு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியது கருத்தரங்கிற்குப் பொலிவும் பெருமையும் அளித்தன. பல்கலைக் கழக வளாகத்தில் ‘தமிழ்த்துறை’ என்ற ஒன்று உண்டு என்பதை ஆந்திரத்திற்குப் பறை சாற்றின.

மிக்க சிரமத்துடன் அறிஞர்களின் கட்டுரைகளின் எழுத்து வடிவத்தைப் பெற்றேன். இந்த அநுபவத்தைப் கருத்தரங்கு அமைப்பாளரே நன்கு அறிவார் இக்கட்டுரைகளை நூல் வடிவம் பெறச் செய்ய வேண்டும் என்பது என் ஆசை, இதற்குப் பணம் வேண்டுமே, வெறுங்கையால் எப்படி முழம் போடுவது? ‘பைந்தமிழ்ப்’ பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல்’ ஏழுமலையான் வழி காட்டினான். என் அரிய நண்பர் கந்தன் அடிமை எஸ்.பி. சண்முகம் பிள்ளையவர்களைச் செலவு போட்டு அச்சடிக்க வேண்டினேன். ஒப்புக் கொண்டார். தமிழ்ப் புத்தகாலயம், பாரிநிலையம், கழகம்—இவர்கட்கு எழுதி 100 படிகளை உடனே ஏற்குமாறும், அவற்றின் விலையை ($100 \times 6 = 600$) முன் பணமாகத் தருமாறும்வேண்டினேன். முதலிருவர் வேண்டியவாறே தந்தனர்; கழகம் விற்றுதான் தரமுடியும் என்று தெரிவித்தது. இந்த விவரங்களைப்

பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்து நூலாக வெளியிட இசைவும் பெற்றேன், இந்த ஏற்பாட்டில் அச்சுக்கூலி போக மீதி ஏதாவது வரும் வருமானத்தைப் பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்கப்படும் என்ற குறிப்பையும் காட்டியிருந்தேன்.

நூலும் வெளியாயிற்று. விலை ரூ 6/ என்று வைக்கப் பெற்றது. 25% கழிவு போக தமிழ்ப் புத்தகாலயத்திலிருந்து பெற்ற ரூ450/யும், பாரிநிலையத்திலிருந்து பெற்ற ரூ450/யும் அச்சுக் கூலி, தாள்விலை இவற்றிற்குத் தரப்பெற்றன கழகம் தரும் பணம் மெதுவாகத் தான் வரும் என்று சண்முகம்பிள்ளையிடம் தெரிவித்தேன்; அவரும் ஒப்புக் கொண்டார். இப்படியாக பகீரதப்பிரயத்தனமாக நூல் வெளிவந்தது. 500 படிகளே அச்சிடப் பெற்றன. இப்படியாகத் திருக்குறள்கருந்தரங்குமலர் -1974' ஆண்டி கட்டிய மடம்போல் வெளிவந்தது. இதில் என் வரவேற்புரை (ஆங்கிலம்), டாக்டர் ஜகந்நாதரெட்டியின் தலைமையுரை (ஆங்கிலம்), நெ.து சுந்தரவடிவேலுவின் பாராட்டுரை (ஆங்கிலம்)திரு P. அரங்கசாமி ரெட்டியாரின் உரை (ஆங்கிலம்), தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆசியுரை (தமிழ்) ஆகியவை இடம் பெற்றுள்ளன. எல்லாக் கட்டுரைகளும் அவரவர்களின் பெயர்களுடன் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்திலிருந்து பிழைப்புக்காக ஆந்திரம்முழுவதும் பரவலாக வாழும் எல்லா நிலைத் தமிழ் அன்பர்களை அன்புடன் போற்றிக் கலந்து மகிழும் ஆந்திர சகோதரர்கட்கு இந்நூலை,

செந்தமிழ்த்தாய் இதயத்தே முகிழ்த்தெழுந்த
சீர்சான்ற கோபுரங்கள் சமயச் சோலை
விந்தைமிகு சிற்பங்கள் யாவும் அன்று
வீசியவெம் புயலாலே அழிந்திடாமல்

சந்தமுறும் இமயம்போல் நிமிர்ந்து நின்று
தகவுடனே காத்தபரம் பரையில் வந்து
சிந்தைவளர் ஆந்திரர்க்குக் கனிவி னோடு
திறஞ்சான்ற இந்நூலைச் சமர்ப்பிக் கின்றேன்.

என்ற பாடலால் அன்புப்படையலாக்கி மகிழ்ந்தேன். இந்த நூல் என்னுடைய இருபத்து ஏழாவது (ஜுலை—1974) வெளியீடாகும் (பதிப்பு). 1974 பிப்பிரவரியில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சிகளை ஐந்தே மாதத்தில் வெளியிடத்துணை புரிந்த, குன்றின்மீது விளக்காக, கோயில் கொண்டிருக்கும் வேங்கடத்தெம்மானை மனம் மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி, வணங்கு கின்றேன். வெறுங்கையால் முழம் போடுவதற்கு வழி யமைத்துத் தந்த அந்தத் தமிழ்க் காதலன் என் நெஞ்சை விட்டு நீங்காது நிலைத்துவிட்டான்.

குமிழி—218

## 62. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நிகழ்ச்சிகள்

1. 1973-நவம்பர் என்று நினைக்கின்றேன். பேராசிரியர் ரா. பி. சேது பிள்ளை வெள்ளிவிழா அறக் கட்டளைச் சொற்பொழிவுகளைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்துமாறு பதிவாளரிடமிருந்து அழைப்பு வந்தது. அதனைத் தொடர்ந்து 'திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் இரண்டு அல்லது மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினால் அது நான் திருப்பதியில் பணியாற்றுவதற்குப் பொருத்தமாகவும் இருக்கும் என்று

என் அரிய நண்பரும் என் ஆசிரியப்பெருந்தகை பேராசிரியர் நடேச முதலியார் (திருச்சி) அவர்களின் திருமகனாரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவரும் பேராசிரியருமான டாக்டர் ந. சஞ்சீவிபிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. இது வேங்கடத்து எம்மான், "அன்பனே, என்னையும் என் ஊரையும் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் நீ, என் மீதும் நான் கோயில் கொண்டிருக்கும் பதியாகிய திருப்பதியின்மீதும் எழுந்த தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் சிறிது சிந்திப்பாயாக" என்று என்னைப் பணிப்பது போல் இருந்தது.

இங்ஙனம் ஒரு பெருங்கடமையை எங்ஙனம் ஆற்றுவது என்று திகைத்துக் கொண்டிருக்கும்பொழுது நம்மாழ்வார் இறைவன் இருப்பைப் பற்றிக் கூறியுள்ள,

கறந்தபால் நெய்யே நெய்யின்இன் சுவையே
 கடலினுள் அமுதே அமுதில்
பிறந்தஇன் சுவையே சுவையது பயனே![1]

என்ற பாசுரப்பகுதி நினைவிற்கு வந்தது. தமிழ் இலக்கியக் கடலிலும் திருவேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் அங்ஙனமே இருப்பதாக எண்ணினேன். எள்ளினுள் எண்ணெய்போல் இருக்கும் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலின்' இருப்பிடமும் அங்ஙனம் தானே இருக்கமுடியும்? கடிதம் பெற்ற நாள் தொட்டு சில வாரங்கள் இப்பொருள் பற்றியே என் சிந்தனை ஓடிய நிலையிலிருந்தது. இறுதியில் (1) சங்ககால வேங்கடம், (2) இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம், (3) திருவேங்கடத்தின்மீது எழுந்துள்ள நூல்கள் என்ற மூன்று தலைப்புகளில் என் பொழிவுகளைத் திட்டமிட்டேன். திருப்பதியிலுள்ள நூலக வசதிகளுக்கேற்பவும், என் ஓய்வுக் கேற்பவும், என் அறிவிற்கேற்பவும் இப்பொழிவுகள் அமைந்தன. பிப்பிரவரி 28, மார்ச்சு 1, 2 (1974)

1. திருவாய் 8 1 : 7

நாட்களில் நிகழ்த்தப் பெற்றன. இதற்கு மேலும் திருவேங்கடத்தைப் பற்றிய இலக்கியச் செய்திகளைத் திரட்ட இப்பொழிவுகள் ஒரு தூண்டு கோலாக அமைதல் கூடும் என்ற நிலையில் அமைதி பெற்றேன்.

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஆராய்ச்சி உலகிற்கும் பொது மக்கள் உலகிற்கும் இடையே ஒரு பாலம்போல்—சேதுபோல்—அமைந்து திகழ்ந்ததைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு அறியும். பிள்ளையவர்கள் அறிஞர்கள் ஆராய்ச்சியால் கண்டறிந்த கருத்துகளையெல்லாம் பொதுமேடையில் எளிய முறையில் வாரி வழங்கிப் பொது மக்களிடையே சிந்தனை மனப்பான்மைக்கு வித்திட்டு அதனை வளர்த்தவர். தம் சொல்வன்மையால் பொதுமக்களிடம் அழகிய குழைவுத் தமிழில் இலக்கியச் சுவையை நன்கு ஊட்டிய தால் இன்று அவர்கள் உள்ளத்தில் 'சொல்லின் செல்வராக' நிலையான இடம் பெற்றுத் திகழ்கின்றார். இத்தகைய பெரியார் அவர்களின் நினைவுச் சொற் பொழிவுகளை ஆற்றும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்ந்தேன். இனி இந்த மூன்று பொழிவுகளில் அமைந்த கருத்துகளை சுருக்கிக் கூறுவேன்.

முதற் பொழிவு: இதில் சங்ககால வடவேங்கடம் வேறு, இன்றைய திருவேங்கடம் வேறு என்ற கருத்தைச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் வேறுபடுத்திக்காட்டியுள்ளேன். 'வேங்கடம்' என்ற சொல்லும் காலந்தோறும் மாறிப் புதுப் புதுப் பொருள்களைப் பெற்றுப் பொலிவதையும் விளக்கி யுள்ளேன். சிலப்பதிகார ஆசிரியர் 'வடவேங்கடம்' என்ற சொல்லை ஆண்டுள்ளார்—வடக்கிலுள்ள 'வேங்கடம்' என்பதற்கு மேல் இதற்குப் பொருள் இல்லை; இக்கருத்தை யொட்டியே பாரதியாரும் திருப்பதி மலையை 'வடமாலவன் குன்றம்' என்று காட்டினார். இஃது எல்லை யைக் குறிப்பிடுவதால், இது 'தவறான வழக்கு' என்பது

தெளிவு. தொல்காப்பியம் குறிப்பிடும் 'வடவேங்கடம்' தான் உண்மையில் எல்லையைக் குறிப்பது. தமிழ்கூறு நல்லுலகிற்கு வடபால் உள்ள நாட்டுப் பகுதியும் சங்க காலத்து வேங்கட நாட்டுப் பகுதியும் இயற்கையமைப்பிலும் தட்பவெப்ப நிலைகளிலும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் காணப்படுவதால், சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் குறிப்பிடும் 'வடவேங்கடம்' என்ற சொல் தமிழ் கூறு நல்லுலகிற்கு வடதிசையில் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக்கடற்கரை வரையிலுமுள்ள நீண்ட மலைத் தொடர்கள், பொறுக்க முடியாத வெப்பத்துடன் கூடிய காடுகள் சுவடுகள் இவற்றுடன் கூடிய குன்றுகள், சிறுசிறு குன்றுகள் அடங்கிய பகுதியையே குறிக்கின்றது என்பதை நன்கு விளக்கியுள்ளேன். சங்க இலக்கியங்கள் இப்பகுதியை 'மொழி பெயர் தேயம்' என்று குறிப்பிடுவதாலும் இப்பகுதிகளில் 'கன்னடமும் களி தெலுங்கும்' பேசப்பெறுவதாலும் இவை என் கருத்திற்கு அரணாக அமைகின்றன.

இரண்டாம் பொழிவு: இந்தப் பொழிவின் சுருக்கம் இது; (1) திருமலையின் பெருமை தேசிகர் பாடலால் ''கண்ணன் அடியிணை'' (தே. பி. 82) எடுத்துக் காட்டி 'வேங்கடம்' என்ற சொல்லின் பொருள் மாற்றத்தை விளக்கியுள்ளேன்.

(2) மதிப்பிற்குரிய பெருமகனார் திரு. K. கோதண்டபாணிபிள்ளையவர்கள் இளங்கிரி (இரண் திருவந். 53) என்ற சொல்லுக்கும் 'இளங்கோயில்' (இரண் திருவந். 54) என்ற சொல்லுக்கும் கொண்ட பொருள் தவறு என்பதை விரிவாக விளக்கியுள்ளேன்.

(3) ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினோராம் நூற்றாண்டில்தான் பெரும் புகழ் அடைந்ததற்கு இராமாநுசர் திருவேங்கட

முடையான்மீது காட்டிய அக்கறையும் அவருடைய சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக் கோயிலின் பெருமையை உயர்த்தி விட்டது என்பதைப் பல வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கியுள்ளேன்.

(4) 'வேங்கடம்' முருகனுக்கு உரியது என்று கூறுவோரின் கருத்து தவறானது என்பதைப் பல்வேறு சான்றுகளால் மறுத்தும், அது திருமாலுக்கே உரியது என்பதை சான்றுகளால் மெய்ப்பித்தும் காட்டியுள்ளேன்.

(5) இடைக்கால இலக்கியமாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலிருந்து திருமலையின் இயற்கைக் காட்சிகள், வேங்கடத் தெம்மானின் பெருமை, சூடிக் கொடுத்த சுடற்கொடி வேங்கடம் மேவிய விளக்கிற்கு அனுப்பிய மூன்று செய்திகள், அகப்பொருள் தத்துவம் பாசுரங்களில் அமைந்திருக்கும் அற்புதம் முதலியவற்றை யும்; மற்றோர் இலக்கியமாகிய கம்பராமாயணத்தில் சுக்கிரீவன் வாக்காக வரும் வேங்கடத்தின் வளம்,பெருமை, அங்கு வதியும் மாமுனிவர்களின் சிறப்பு ஆகியவற்றையும்; பிறிதோர் இலக்கியமாகிய வில்லிபாரதத்தில் அருச்சுனனின் தீர்த்தயாத்திரையை விளக்கும் முகத்தான் வேங்கடத் தின் பெருமையை எடுத்துக் காட்டியுள்ளதையும் விளக்கி யுள்ளேன்.

மூன்றாம் பொழிவு: வேங்கடத்தின் மீதும் வேங்கட வாணன்மீதும் எழுந்துள்ள (1) திருவேங்கடத் தந்தாதி (2) திருவேங்கட மாலை (3) திருவேங்கடக் கலம்பகம் என்ற மூன்று நூல்கள் (4) ஆசிரியர் பெயர் அறிய முடியாத சேடமலை பதிற்றுப்பத் தந்தாதி, (5) திரு வேங்கடத்தலபுராணம். (6) மணவை திருவேங்கட முடையான் மேகவிடுதூது. (7) திருவேங்கடமுடையான் திருவாயிரம் (8) திருவேங்கடமாலை என்றஎட்டு நூல்களி லிருந்தும் திருமலையின் இயற்கைக் காட்சிகள், தத்துவக் கருத்துகள், திருவேங்கடமுடையானின் பெருமை,

திருவேங்கடத்தின் சிறப்பு, எம்பெருமானின் வீரச்செயல் களும் வெற்றிச் சிறப்புகளும், இலக்கிய நயங்கள் ஆகியவை எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

இந்த பொழிவுகளை பல்கலைக் கழகம் நூல் வடிவ மாக்கக் கருதவில்லை. அவர்கள் இசைவு பெற்று பாரி நிலையத்தின் மூலம் (184, பிரகாசம் சாலை, சென்னை–600108) வெளியிட்டேன். இந்த அரிய நூலுக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு அரியதோர் அணிந்துரை வழங்கி ஆசி கூறினார். நூலைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் 52-ஆவது பிறந்தநாள் விழாவின் நினைவாக,

பொற்புறு தமிழ்த்தாய் மலரடி பிணித்த
புல்லிய விலங்கினைத் தகர்த்து
நற்புகழ் தமிழர் இதயமாம் அணையில்
நாவலர் போற்றிட அமர்த்திச்
சிற்பவண் குறளாம் ஆணையெப் புறத்தும்
திகழ்ந்திடத் தமிழ்ப்பணி புரியும்
அற்புதக் கருணா நிதியெனும் தலைவர்
அன்பினுக் குரியதிந் நூலே

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன்.

இந்த நூலின். நூல் முகத்தில் கலைஞரைப் பற்றி யான் எழுதிய குறிப்பு : ''தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பீடும் பெருமையும் நிறைந்த ஆட்சி இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலு மிருந்தும் ஒரே கருத்துடன் பாராட்டைப் பெற்றுத் திகழ் கின்றது. கலைச் சுவையும் தமிழ்ச் சுவையும் ஈத்துவக்கும் இன்பமும் ஒருங்கே நிறைந்த இவரிடமிருந்து கருணை வெள்ளம் பல்வேறு துறைகளில் இவர் மேற்கொண்ட சமூக நலத் திட்டங்களில் பாய்ந்து செல்கின்றது. பிச்சைக் காரர்கள், கண்ணிழந்தோர், உடல் ஊனமுற்றோர்,

ரிக்ஷா வண்டிக்காரர்கள், சாலையோரம் வாழ் ஏழை மக்கள் ஆகியோர் இவர்தம் கருணையின் பலனைத் துய்த்து இவரை வாழ்த்துகின்றனர். இவர் ஆட்சியில் தமிழும் திருக்குறளும் ஏற்றமான உயரிய இடங்களைப் பெற்றன; தமிழாசிரியர்களின் நிலையும் உயர்ந்தது. இவரது ஆட்சி காலத்தில்தான் இவருடைய கடைக் கண் பார்வையினால் திருப்பதி திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை எம். ஏ., எம். ஃபில். பிஎச். டி. அளவில் பெருகிச் செழிப்புடன் வளர்ந்து வருகின்றது. கருணாநிதியாகிய இவருடைய கருணை என்றுமே இத் துறையில் உண்டு என்ற நம்பிக்கை நிலையாகவே என்னிடம் உள்ளது. தமிழகத்தின் எல்லையாகத் திகழும் "'வட, மாலவன் குன்றத்திற்கும் தமிழுக்கும்' உள்ள உறவினைக் காட்டும் இந்நூலை இவரது 52-வது அகவை நிறைவின் நினைவாக அன்புப் படையலாக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்."

இந்த நூல் எனது இருபத்தெட்டாவது வெளியீடாகும் (ஜூலை—1975).

(2) இந்த ஆண்டில் இதற்குச் சற்று முன்னதாக 22-1-73 முதல் 31-1-73 வரை நடைபெற்ற 'தெய்வத் தமிழ்' என்ற தலைப்பில் நடைபெற்ற பத்து நாள் பொது நிலைக் கருத்தரங்கில் 'வைணவ சமய நூல்கள்' என்ற தலைப்பில் பத்தாம் நாள் ஜஸ்டிஸ் N. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைப்பில் பேசும் வாய்ப்பு கிட்டியது. இதில் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்ற நூல் பற்றியே பேசப் பெற்றது; ஆய்வுக் கட்டுரை தரப் பெற்றது. (1) விரிவஞ்சி நூலாசிரியர்களின் காலம் விரிவாக ஆராயப் பெறவில்லை; கால எல்லை மட்டிலுமே குறிப்பிடப் பெற்றது. (2) நூல்களும் விரிவான திறனாய்வுக்கு உட்படுத்தப் பெறவில்லை. குறிப்பாக அவற்றின் சில சிறப்பியல்புகள் மட்டிலுமே எடுத்துக்காட்டப் பெற்றன. பேச்சின் இறுதியில் தமிழ்த் துறையினரும், அவையோரும்

பல வினாக்களை எழுப்பினர். அவற்றுக்கெல்லாம் இயன்ற அளவு விடைகள் தரப் பெற்றன. ஆய்வுக் கட்டுரையும் வினாக்களும் விடைகளும் நூல் வடிவம் பெற்ற 'தெய்வத் தமிழ்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. கட்டுரை அச்சேறும் போது தட்டப் படிவத்துடன் கைப்பிடியை ஒப்பு நோக்கிப் பார்க்கப் பெறாததால் சொற்றொடர்கள், சொற்கள், சில இடங்களில் வாக்கியங்கள் விடுபட்டு -பிழைமலிந்த சருக்கமாகத் தோற்றமளிக்கின்றது. (தெய்வத் தமிழ்—சென்னைப் பல்கலைக் கழகம், 1975)

குமிழி—219

## 63. சிலப்பதிகாரக் கருத்தரங்கு

பல்கலைக் கழகங்கள் உயர் கல்வியில் கருத்தைச் செலுத்தி வரும் பொறுப்பிலிருந்தாலும் அவ்வப்பொழுது உயர்கல்வியின் ஆராய்ச்சியால் அடைந்த கருத்துகளைத் தன்னைச் சூழ்ந்துள்ள சமூகத்தினிடையே பரப்பும் பொறுப்பும் அதற்கு உண்டு. பல்கலைக் கழகத்திலுள்ள பல துறைகளிலுள்ளபேராசிரியர்களிடம்இக்கருத்து துடிப்புடன் செயற்படவேண்டும். இன்றைய சூழ்நிலையில் இக்கருத்து செயற்பட்டு வந்தாலும், மனநிறைவு தருவதாக இல்லை. பல்கலைக் கழக மானிய ஆணையமும் கருத்தரங்குகள், விரிவுச் பொற்பொழிவுகள், தனிப்பட்ட பேராசிரியர் கள் பல பல்கலைக் கழகங்கட்குச் சென்று சில நாட்கள் தங்கிச் சொற்பொழிவுகள்மூலம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுதல் போன்ற திட்டங்கட்கு நிதியை வாரி வழங்கு கின்றது. நான் திருப்பதியில் பணியாற்றிய காலத்தில்

1970க்குப் பிறகுதான் இவ்வாறு மானியம் வழங்கும் திட்டம் ஆரம்ப நிலையில் செயற்படத் தொடங்கியது.

1974—75இல் சிலப்பதிகாரக் கருத்தரங்கு நடத்தத் திட்டமிட்டு மானியம் பெற முயன்றேன். அதற்குரிய விண்ணப்பமும் பல்கலைக் கழக மானிய ஆணையத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன். ரூபாய் 6000/- கிடைத்த தாக நினைவு. தமிழ்வளர்ச்சிக்காகத் தமிழகஅரசிடமிருந்து ஊக்கு மானியம் பெற்று வரும் சில பல்கலைக் கழகங்களுள் திருவேங்கடவன் பல்கலைக் கழகம் குறிப்பிடத் தக்கது. இங்குப் பயின்று தமிழ் எம்.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி பட்டங் கள் பெறும் மாணாக்கர்கள் தமிழகத்தில் உள்ள பல்கலை கழகங்களில் படித்துப் பட்டங்கள் பெறும் மாணாக்கர்களின் தரத்தைவிட எவ்வகையிலும் சிறிதும் குறைதல் கூடாது என்ற குறிக்கோள் என் மனத்தில் நிலையாக அமைந்திருந்ததால் அத்திசையில் என் பணி சென்று கொண்டிருந்தது. இந்தக் குறிக்கோளைச் செயற் படுத்தி வந்தபொழுதெல்லாம் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல்' ஏழுமலையான் தான் என்னை இயக்கி வந்தான் என்பது என் அதிராத நம்பிக்கை.

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே[1]

என்று சொல்லிச் சென்றார் பேரருட் செல்வர் திருமூலர். நம்மாழ்வாரும்,

என்றைக்கும் என்னை
உய்யக்கொண்டு போகிய
அன்றைக்கு அன்றுஎன்னைத்
தன்னாக்கி என்னால்தன்னை
இன்தமிழ் பாடிய ஈசன்.[2]

1. திருமந்திரம்—81
2. திருவாய் 7.9:1

என்சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்து
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன்,[3]

என்று சொல்லுவார். இங்ஙனம் அருளாசிரியர்கள் கூறியுள்ள 'தெய்வத்தின் குரல்'தான் என்னை ஊக்குவித்து தமிழ்ப் பணி ஆற்றச் செய்தது; இன்றும் செய்து வருகின்றது.

ரூ 6000/- கருத்தரங்கிற்காக செலவு செய்ய அனுமதி வழங்கியது பல்கலைக் கழக மானிய ஆணையம். பிப்பிரவரியிலேயே கருத்தரங்கை நடத்திவிட முயன்றேன். சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்க வேண்டுமல்லவா? அந்தப் பூசாரி வடிவில் அமைந்தார் டாக்டர் D. சகந்நாத ரெட்டி (துணைவேந்தர்). தமிழகத்திலிருந்து மானியம் பெற்றுத் தொடங்கப் பெற்ற ஒரு தமிழ்த் துறையைப் பார்வையிடும் வாய்ப்பு கிடைக்கும் என்று கருதி தமிழக அமைச்சர் ஒருவரைக் கொண்டு கருத்தரங்கைத் தொடங்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கருதினேன். அப்பொழுது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெற்று வந்தது. நாவலர் டாக்டர். V. R. நெடுஞ்செழியன் கல்வி—நிதி அமைச்சராக இருந்தார். அவரை அழைக்க நினைத்தேன். என் கருத்தைத் துணைவேந்தரிடம் தெரிவித்தேன். அவர் அதற்கு இணங்கவில்லை. தமிழ்த்துறை தொடங்குவதற்கு முன்—தமிழக அரசின் மானியம் வந்த நாள் தொட்டு (செப்டம்பர்-1969 என்பதாக நினைவு) நாவலரைத் தான் அழைக்க வேண்டும் என்று கூட்டங்களில் சொல்லிக் கொண்டிருந்த துணைவேந்தரின் உள் எண்ணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது அவ ரயும் அறியாமல் அவர் மனம் செயற்படுகின்றது என்பது எனக்குப் புரிந்தது.

3. திரு. 7.9:2

இதை எழுதும் போது என்றோ உளவியல் நூல்களில் என் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கற்றபோது மன நிலைகளைப் பற்றிப் படித்த ஒரு கருத்து நினைவிற்கு வருகின்றது. நீண்ட காலமாக மக்கள் உளத்திலுள்ள நனவுப் பகுதியை மட்டிலுமே 'உளம்' என்று கருதி வந்தனர். இன்று ஃபிராய்டு என்ற உளவியலறிஞர் மேற் கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக இக்கருத்து முற்றி லும் மாறிவிட்டது. நனவு நிலை (Conscious level), 'நனவிலி நிலை' (Unconscious level), நனவடி நிலை (Sub-conscious level) என்று உளம் முப்பகுதிகளாகச் செயற்படுவதாகக் கூறுகின்றார் ஃபிராய்ட். இக்கருத்தினை உளவியலறிஞர்கள் அனைவரும் ஒரு மனத்துடன் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த உளநிலைகளை விளக்குவதற்கு வில்லியம் ஜேம்ஸ் (William James) என்ற உளவியலறிஞர் ஓர் அரிய உவமையைக் கையாளுகின்றார், வடபெருங்கடலி னின்றும் (Arctic Ocean) பெரும் பனிக்கட்டி மலைகள் விடுபட்டு அட்லாண்டிக் மாபெருங் கடலில் புகும். இம்மலைகளின் கொடுமுடிகளின் எட்டில் ஒரு பகுதியே புறத்தே புலனாகும். பனிகட்டி மலையொன்றினை முழு உளத்துடன் ஒப்புமைப் படுத்திக் கூறும் பொழுது சிறிதளவு தோன்றும் கொடு முடியை நனவு உள்ளத்தோடு ஒப்புமை கூறலாம். அங்ஙனம் நிலையாகத் தோன்றிக் கிடக்கும் பகுதிக்குக் கீழேயுள்ள சிறு பகுதி சுற்றியுள்ள அலை வீச்சினால் ஓரளவு தோன்றியும் வரும். இதனை நனவடி உளத்துடன் ஒப்புமை கூறலாம். இதற்குக் கீழாகப் பெருமலைபோல் கிடக்கும் பகுதி தாக்கினால் பெருங் கப்பல்களும் அச்சுவேறு ஆணிவேறாகச் சிதையக் காண் கின்றோம். இதனை நனவிலியுளத்திற்கு ஒப்பிடலாம். நனவு உளம் முழுஉளத்தில் கோடியில் ஒரு பங்கே என்றும் கூறிவிடலாம். புறக்காற்றாலும் பிறவற்றாலும் இந்தப் பனிக்கட்டி மலை தலைகீழாகப் புரளுவதும் உண்டு. அது

போலச் சில சமயம் நனவிலியுளமும் நனவு உளமாக மாறுவதும் உண்டு. இத்தகைய உளமாற்றம் சிறுகச் சிறுகவும் எழலாம்; திடீர் என்றும் நேரிடலாம். எப்படிப் பனிக்கட்டி மலையில் (Ice-berg) பெரும்பகுதி புறத்தே புலனாகாமல் நீரின் அகத்தே ஆழ்ந்துள்ளதோ, அதே போன்று நனவிலியுளமும் உள்ளே ஆழ்ந்துள்ளது. எங்ஙனம் புறத்தே புலனாகும் பனிக்கட்டி மலைக்கு நீரின் அகத்தே ஆழ்ந்துள்ள பகுதி அடிப்படையாக உள்ளதோ அங்ஙனமே நனவிலி உளமும் நனவு உள்ளத்திற்கு அடிப் படையாக உள்ளது. புறத்தே தோன்றும் பனிக்கட்டி மலையின் பகுதியும், நீரில் ஆழ்ந்து கிடக்கும் அதன் அடிப் பகுதியும் ஒரே மலையின் இரு பகுதிகள் என்பது வெளிப்படை. அங்ஙனமே நனவு உளமும் நனவிலியுளமும் ஒரே உளத்தின் இருபகுதிகளாகும் என்பது கருதத்தக்கது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் துணைவேந்தரின் உளத்தைக் காண என் மனம் எண்ணியது. தொடக்கக் காலத்தில் நாவலரை ஆதரித்த அவர் உளம் அவரது இரண்டாவது காலத் துணைவேந்தர் பதவியின்போது நாவலரை ஆதரிக்காததற்குக் காரணம் என்ன? தெலுங்கு மொழி பேசுபவராகவும் தெலுங்கு மொழி பயின்றவராக வும் உள்ள டாக்டர் ரெட்டி தமிழகத்தில் பிறந்தவர்; வளர்ந்தவர்; மருத்துவக் கல்வி (M.B.B.S) பயின்றவர். அவரது மனநிலை, மனப்பான்மை தமிழ்ப் பண்பாட்டை யொட்டியிருந்தது. இரண்டாம் உலகப்பெரும் போரின் போது போர்த்துறையில் சேர்ந்து பணியாற்றியவர். சில ஆண்டுகள் கழித்துத் திரும்பி மீண்டும் மருத்துவக் கல்லூரி யில் சேர்ந்து M.D (Pathology) பயின்றவர் (சென்னையில்). போரில் பணியாற்றிய சலுகையினால் விசாகப்பட்டினம், குண்டூர் மருத்துவக் கல்லூரியில் சில ஆண்டுகள் பணியாற்றித் தம் திறமை, நேர்மை, ஒழுங்கு முறை இவற்றை நிலை நாட்டியவர். புதுச்சேரியில் மைய அரசு சவகர்லால் மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலையம்

தொடங்கினபோது இவருடைய திறமை முதலியவற்றுடன் போர்ப் பணி அநுபவம் கைகொடுத்து உதவியதால் அதன் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அதன் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் அரும்பாடுபட்டு உழைத்தார். ஆந்திரத்தில் பணியாற்றியபோது சில அரசியல் வாதிகள், பெரியவர்கள் இவர்கள் நட்பினைப் பெற்றிருக்கலாம்; இவரது திறமையும் நேர்மையும் அவர்களின் கருத்தைக் கவர்ந்திருக்கலாம். இதனால் துணைவேந்தர் பதவி திருப்பதியில் கிடைத்தது. அதனை அற்புதமாக வகித்து அரும் பணியாற்றினார். இக்காலத்தில் அவர் தம்மை ஆந்திரர் என்று காட்டிக் கொள்ளும் போக்கில் அரசியல் வாதிகள் பேசும் பாணியில் பேசி வருவதை என்னால் காண முடிந்தது. கால தேச வர்த்தமானத்தின் காரணமாகப் புதிய துறைகள் நான்கையும் (தமிழ்த்துறை உட்பட) ஆந்திர அமைச்சர் ஒருவர் திறந்து வைத்தார். இக்காலத்தில் சில அரசியல் வாதிகளின் விருப்புக் கானத் திற்குச் சரியாகத் தாளம் போடாது நேர்மையான போக்கில் செயற்பட்டதால் அவர்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம்.

முதலில் துணைவேந்தர் பதவி சிரமம் இல்லாமல் வந்தது. இரண்டாவது காலப் (மூன்றாண்டுகள்) பகுதியில் அது கிடைக்க பகீரதப்பிரயத்தனம் செய்ய வேண்டி யிருந்தது. திரை மறைவில் நடைபெற்ற பலநிகழ்ச்சிகளைப் பல்கலைக் கழகப்பேராசிரியர்களும்பிறரும் ''கிசுகிசுத்தது'' என் காதிற்கும் எட்டியது. இப்போது தெலுங்கர்களை அதிகமாகப் போற்றவில்லை; அவர்கள்மீது அன்பும் இல்லை என்பது அவரது நடவடிக்கைகளால் புலனாயிற்று அவரது நனவிலியுளத்தில் என்ன எண்ணம் ஓடியது என்பதை டாக்டர் மாத்ருபூதம் என்ற (அண்ணாநகர்) உளவியல் மருத்துவரால்தான் உறுதி செய்ய முடியும். இந்தக் குழப்ப நிலையிலிருக்கும்போதுதான் நாவலரை அழைக்க இணங்காதிருந்தார். நானும் பொறுமையாகத்

தேதிகளைத் தள்ளி வைத்துக் கொண்டே அவர் படம் எடுத்து ஆடியதற்கேற்ப மகுடி ஊதி என் கருத்துக்கு இணங்க வைத்து நாவலரை அழைக்க இசைவு பெற்றேன். சென்னைக்கும் காவடி எடுத்து நாவலரை இணங்கவைத்தது பெரும் பாடாய்ப் போய் விட்டது. அவரைக் கொண்டுக் கருத்தரங்கைத் தொடங்குவது என்பது உறுதியாயிற்று.

பல்கலைக் கழகத்தில் எந்த நிகழ்ச்சியானாலும் திருப்பதியில் என் அரிய நண்பர்களான பேராசிரியர் G. லீலாகிருஷ்ணன் (தாவர இயல்துறை—கோவிந்தராஜ சுவாமி கலைக்கல்லூரி), திரு. A. நடராஜன் (இயற்பியல் துறை—வேங்கடேசுவரா கலைக் கல்லூரி) இவர்களைக் கலக்காமல் எந்த முடிவுக்கும் வருவதில்லை. இளங்கோ அடிகளின் படத்தைத் திறந்து வைத்து அப்பெருமானின் இதயத்தைத் திறந்து காட்டும் பாங்கில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தவும் ஒருவர் வேண்டுமே என்று என் நண்பர்களிடம் சொல்ல அவர் டாக்டர் V.C. குழந்தைசாமியின் (இயக்குநர் தொழிற் கல்வி, தமிழ் நாடு) பெயரைச் சொல்ல அவருக்கு ஒரு திங்களுக்கு முன்னரே எழுதி ஒப்புதல் பெற்றேன். கருத்தரங்கின் அடிப்படைக் கருத்தை விளக்கும் பாங்கில் சொற்பொழிவு (Key-note address) நிகழ்த்த என் அரிய நண்பர் பேராசிரியர் **ச. வே. சுப்பிரமணியம்** (இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, அடையாறு) அவர்களின் இசைவு பெற்றேன்.

மூன்று நாள்கருத்தரங்கில் திறப்பு விழா போக 'ஐந்து அமர்வுகட்கு 25 பேராசிரியர்கள் (அமர்வு ஒன்றுக்கு ஐந்து பேர் வீதம்) கேரளம், ஆந்திரம், தமிழகம், கர்நாடகம் பகுதிகளிலிருந்து வந்து கலந்து கொள்ள முடிவுசெய்தேன். ஏப்பிரலில் (1975) கருத்தரங்கு அற்புதமாக நடைபெற்றது. இதனால் பல துறைப் பேராசிரியர்களின் பாராட்டுதலையும் பெற்றேன். முதல் திறப்பு விழா நிகழ்ச்சிகளை ஆங்கிலத்திலேயே நடைபெறச் செய்த

தால் பேரவை மண்டபம் வழியும் நிலையில் கூட்டம் கூடியது.

இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்த மாகும். டாக்டர் V.C. குழந்தைசாமியைத் துணை வேந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தபோது அவர் ''அந்த அறிமுகத்தைச் சுவைக்கவில்லை'' என்பது அவர் முகத்தில் தெரிந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியு மன்றோ? டாக்டர் V. C. குழந்தைசாமியின் உரை அற்புதமாக அமைந்தது; ஆராய்ச்சிக் கருத்துகள் நிரம்பி வழிந்தன. பேச்சின் பளிச்சிட்ட சொல்வளம் (Diction), வாக்கிய அமைப்பு, ஆங்கிலத்தை மிக எளிதாகக் லாவக மாகக் கையாண்ட முறை இவை யாவும் ஆங்கிலப் பேராசிரியர்களே மூக்கில் விரலை வைத்துப் பாராட்டும் முறையில் அமைந்தது. பேச்சு முடிந்து டாக்டர் V, C. குழந்தைசாமி இருக்கையில் அமரும்போது துணை வேந்தர் அவர் கையைக் குலுக்கின போது, அவர் கையையே தனியாகப் பிரித்து விடுவார் போலிருந்தது; அவ்வளவு வலிவுடன் குலுக்கினார். டாக்டர் குழந்தை சாமியின் பேச்சு தனிச் சிறப்புடன் திகழ்ந்ததை அனை வருமே பாராட்டினர். நான் டாக்டர் குழந்தை சாமியைத் துணைவேந்தருக்கு அறிமுகம் செய்தபோது சாதாரண மாக மலராது இருந்த அவரது முகம் பேச்சு முடிந்த போது மலர்ச்சியுடன்—ஒளியுடன்—ஒளிர்வதைக் கண்டு மகிழ்ந்தேன். நன்றாகப் பேசும் துணைவேந்தரின் மனம் நன்றாகப் பேசின டாக்டர் குழந்தைசாமியின் பேச்சால் ஈர்க்கப் பெற்றதில் வியப்பில்லை. பாம்பின் கால் பாம்பறியுமன்றோ?

# 64. ஆசிரியர் நியமனத்தில் சில முறை கேடுகள்

உள்ளத் தூய்மையும் நிர்வாகத் திறமையும் மிக்க டாக்டர் சகந்நாத ரெட்டியின் காலத்தில் அதிகமாகத் துன்பப்பட்டவன் அடியேன். இதை ஏழுமலையான் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். பல்கலைக் கழக வாழ்க்கையை ஒரு தவ வாழ்க்கையாகக் கொண்டு செயற் பட்டதால் இத்தொல்லைகளையெல்லாம் தாங்குவதற் கேற்ற ஆற்றலை நல்கி என்னை உய்வித்தான் என்பதை இன்று நினைந்து பார்க்கின்றேன். துன்பப்பட்டது என் நுகர்வினையால் (பிராரத்தத்தால்) வந்தது என்ற உண்மையையும் அவனே என்னை உணரச் செய்ததால் என்னிடம் தாக்குப் பிடிக்கும் ஆற்றலும் வளர்வதற்கு அதுவே காரணமாயிற்று.

துன்பப் படும்போதெல்லாம் அதையும் இறையரு ளாகக் கொள்வேன். வள்ளுவப் பெருந்தகையும் எனக்கு வழி காட்டுவான். 'தவம்' என்ற அதிகாரம் துறவியலில் உள்ளது. தவக் கோலம் கொண்டு துறவிகள் வாழ்வதைக் கண்டு, ''தவம் நமக்கு உரியது அன்று; துறவிகளுக்கே அது முடியும்'' என்று இல்லறத்தார் விட்டு விடுகின்றனர்; இது தவறு. தவம் எல்லோருக்கும் பொதுவானது; இல்லற வாழ்க்கையிலிருந்தே தவம் செய்ய முடியும்; சிலர் குடும்ப வாழ்க்கையைத் துறந்தே செய்ய முடியும். உண்மை இவ்வாறு இருக்க, இல்லறத்தார் தவத்தை மறப்பதற்குக் காரணம் என்னவோ? துறவிகளுக்கு உணவு முதலிய வற்றை உதவுவதே தம் கடமை என்று தவத்தைத் துறந்

தார்க்கே உரியதாக்கி விட்டு ஒருகால் மறந்திருக்கக் கூடுமோ? இல்வாழ்க்கையிலும் பகைவரை அடக்கித் திருத்துவதற்கும் நண்பரை மதித்து உயர்த்துவதற்கும் ஆற்றல் வேண்டுமல்லவா? அந்த ஆற்றல் தவத்தால்தான் கிடைக்கும். விரும்பியவற்றை விரும்பியவாறே பெறக் கூடிய தன்மை இருப்பதால், செய்வதற்கு உரிய தவத்தை இல்வாழ்க்கையிலும் முயல வேண்டும். தமக்கு உரிய கடமைகளை வழுவாது செய்தாலும், இறைவன் நமக்கு வழங்கியுள்ள பொறுப்புகளை விருப்பு வெறுப்பின்றி செய்து வந்தாலும் அதுவும் தவம் என்றே கொள்ளப் பெறும்.

தமக்கு வரும் துன்பத்தையெல்லாம் பொறுப்பதும் ஒருவகைத் தவமேயாகும். ஆனால், துன்பம் மேன்மேலும் வந்து கொண்டிருந்தால் என்ன செய்வது? துன்பம் மேன் மேலும் வந்து வருத்த வருத்த தவம் சிறந்து விளங்கும்; அது சுடச்சுட மாசு நீங்கி ஒளிவிடும் பொன் போன்றது.

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.[1]

என்பது வள்ளுவர் வாய்மொழி. இஃது என் வாழ்க்கையில் கண்ட உண்மை; பேருண்மை. நான் திருப்பதியில் அநுபவித்த தொல்லைகளையும் துன்பங்களையும் தவ மாசக்கொண்டு பணியாற்றியதால் இறைவன் எனக்கு எதையும் தாங்கும் இதயத்தையும் நல்கியுள்ளான். இப் படியே பணி செய்து கொண்டு எஞ்சிய வாழ்க்கையையும் முடித்துக்கொண்டு திடீரென்று ஒருநாள் ஆவி பிரிய நேர்ந்திருக்குமாயின் அதுவே கிடைத்தற்கரிய என் பேறாக முடியும்.

எல்லோரும் இப்படி நினைத்துக் கொள்ளலாம்; வாயாலும் பேசலாம். ஆனால் மனச்சான்று என்ற ஒன்று உண்டு; அதுவே அந்தர்யாமியாக நம்முன் கோயில் கொண்டிருக்கும் இறைவன். அவனை ஏமாற்றமுடியாது.

1. குறள்—267 (தவம்)

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.[2]

என்பது வள்ளுவர் வாக்கு. இந்த உண்மைகள் எல்லோர்க்கும் தெரியும். ஆனால் செல்வச் செருக்கு, அதிகாரச் செருக்கு இவை ஆணவ மலமாகப் பரிணமித்து (இல்லை, ஆணவமலமே இவ்வாறு செருக்குகளாகப் பரிணமித்து) தகாத செயல்களில் நம்மை உட்படுத்தும். இந்த ஆணவ மலத்தின் ஆற்றலை தூய்மையான உள்ளத்தில் எழும் பக்தியால் குறைக்கலாம்; குறைத்து விடவும் முடியும்.

இந்த எண்ணங்களின் பின்னணியில் இயற்பியல் துறையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றைக் கருதலாம். இயற்பியல் துறையில் பேராசிரியர் பீம்சேனாச்சார் ஓய்வு பெற்றார். அந்த இடம் நிரப்பப் பெற வேண்டியிருந்தது. பொதுவாகப் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் பதவிகள் காலியாகும்போது எல்லாத் துறைகளிலுமுள்ள காலியிட விவரங்களை அறிந்து ஒட்டுமொத்தமாக விளம்பரம் செய்வதுதான் முறை; இதுவே நடை முறையிலும் இருந்து வந்தது. இன்னும் பல துறைகளில் பேராசிரியர் பதவிகள் காலியாகத்தான் இருந்தன. இவற்றைக்கருத்தில் கொள்ளாது இயற்பியல் பேராசிரியர் பதவியை மட்டிலும் விளம்பரம் செய்தார் துணைவேந்தர். இரண்டு பத்திகளைச் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் விளம்பரம் வந்தது. துறையிலேயே இருவர் பதவிக்குத் தகுதியுடையவர்களாக இருந்தனர். ஒருவர் டாக்டர் P ஜெயராமரெட்டி; மற்றொருவர் டாக்டர் S.V.J. இலட்சுமணன். இந்த நியமனம் நியாயமாக நடைபெறவில்லை என்பது வெள்ளிடை மலை.

பேட்டி நடந்த மறுநாளே ஆட்சிக் குழுக் கூட்டம் வைத்துக் கொள்ளப்பெற்றது. டாக்டர் இலட்சுமணன்

2. குறள்—271 (கூடா ஒழுக்கம்)

ரிட் வழக்கு போட ஐதரபாத் சென்றார்; வழக்கும் போடப்பட்டது. ஆட்சிக்குழுவின் நிகழ்ச்சி நிரலின் முதற் பொருள் இயற்பியல் துறை பேராசிரியர் நியமனம் என்பது கூட்டத்தில் இந்தப் பொருள் முடிவு செய்யப்பட்டதும் டாக்டர் ஜெயராம ரெட்டி நியமிக்கப் பெற்றதாக ஆணை தட்டச்சு செய்யப்பெற்று பதிவாளர் கையெழுத்தாகி ஜெயராம ரெட்டியின் கைக்குக் கிடைக்கச் செய்து அவரும் பணியில் சேர்ந்து விட்டார். எந்தப் பல்கலைக் கழகத் திலும் இப்படி நியமனம் நடைபெற்றிராது. உலகம் கேட்டி ராத முறை இது; ஆணவத்தின் கொடு முடியில் நடை பெற்ற செயல் இது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற வழக்காகி விட்டது. இந்த நிகழ்ச்சியில் டாக்டர் ஜெயராம ரெட்டி பேராசிரியர் பதவிக்கு தகுதியற்றவர் என்பது அல்ல; முற்றிலும் தகுதியுடையவரே; மற்றொரு வரும் தகுதியுடையவரே! மரபுப்படி, பதற்றமில்லாமல், இயல்பாக நடை பெற்றிருந்தால் யாரும் குறை சொல்ல மாட்டார்கள். அரசியல்வாதிகள்கூட இத்தகைய நீதிக்குப் புறம்பான செயலில் இறங்கியிருக்க மாட்டார்கள் என்பது பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முதிய பேராசிரியர் களின் கருத்து.

இயற்பியல் பேராசிரியரை மட்டிலும் அவசரமாக நியமிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எல்லா ஆசிரியர்களின் நியமனத்துடன் இதையும் சேர்த்திருக் கலாம். எந்தத் துறையிலும் இம்முறையில் நியமனம் நடை பெறவில்லை. இதில் பதிவாளர் துணைவேந்தருக்குவேண்டி யவர்; ஆட்சிக்குழுவில் பலர் டாக்டர் ஜெயராம ரெட்டிக்கு வேண்டியவர்கள். இந்த நியமன நாடகத்தில்—இசைக் கச்சேரியில்—பாட்டு, ராகம், தாளம், ஸ்துதி முதலிய வற்றை முன்னரே சரிப்படுத்திக் கொண்டு நடத்தி முடித் தனர். துரியோதனாதியர் அன்று நடத்திய பல செயல் களை ஒத்தது இது.

பொதுவாக ஆட்சிக்குழுக் கூட்டம் நடைபெற்று தீர்மானங்களை தட்டச்சு செய்து, சரி பார்த்து. பல படிகள் எடுக்கச் செய்து ஆட்சிக் குழுவினர் ஒவ்வொரு வருக்கும் அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகட்கும் அனுப்பிய பிறகு ஆசிரியர் நியமனப் பிரிவிலிருந்து ஆணை கள் தயாரிக்கப் பெற்று உரியவர்கட்கு அனுப்பப்பெறும். இதற்குக் குறைந்தது 15 நாட்கள் ஆகும். இந்த மரபுப்படி நடைபெறவில்லை. இந்த நியமனத்தில் செயல்கள் யாவும் காய்ச்சல் வேகத்தில் (Feverish haste) நடைபெற்றன. பல்கலைக் கழக நிர்வாகத்தில் மக்களுக்கு நம்பிக்கை யில்லாத நிலைமையை ஏற்படுத்தி விட்டார் துணை வேந்தர். இந்த அதிர்ச்சி தரும் நடவடிக்கையில் ரிட் விண்ணப்பம் போட்ட டாக்டர் இலட்சுமணன் ரிட் மனுவைத் திரும்பப் பெற்றுகொண்டது சோக நாடகக் (Melodrama) களை தட்டும்படி செய்து விட்டது. இது பல்கலைககழக வளாகத்திலேயே இலட்சுமணன் கோழை யாகக் காட்சி அளித்தார். பலர் அவரை மனுவைத் திரும்பப் பெற்றதற்குக் காரணம் கேட்டபொழுது எதிர் காலத்தில் வரும் வாய்ப்பிலும் துணைவேந்தர் தடையாக இருந்தால் என்ன செய்வது? என்றாராம். எண்ணித் துணி யாத இத்தகையோரை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். டாக்டர் தாமோதரன் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் பதினோராண்டுகள் பணி செய்தது உண்மைதான். அங்கு தமிழ் எம்.ஏ , எம். ஓ. எல் வகுப்பு கள் நடைபெற்றன என்பதும் உண்மையே. அங்குச் சுமார் இருபத்தைந்து ஆசிரியர்கள் தமிழ்த்துறையில் பணியாற் றினர் என்பதும் நான் அறிந்ததே. இவர் பி. யு. சி. பி.ஏ. வகுப்புகள்தான் கற்பித்திருக்கவேண்டும்; எம். ஏ, வகுப்பு கள் கற்பிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்திராது. அநுபவமுள்ள பழம் பெரும் புலவர்கள்தாம் அவ்வகுப்பு கட்குக் கற்பித்திருக்க வேண்டும் என்பது என் மனத்தில் படவில்லை. இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றி இருந்தால் இதைச் சோதித்து அறியவேண்டும் என்று ஒரு

கடிதம் பல்கலைக்கழகத்திற்கு எழுதியிருப்பேன்; உண்மை நிலையும் வெளிப்பட்டிருக்கும். இந்த எண்ணம் என் மனத்தில் தோன்றாதது டாக்டர் தாமோதரனின் நல்லூழே என்று எண்ணத் தோன்றுகின்றது. துணிவே துணையாகக் கொண்ட எனக்கு இந்த எண்ணம் தோன்றாதது எனக்கு ஊழின்மையேயாகும்.

தத்துவத்துறையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இப்போது நினைவிற்கு வருகின்றது. இத்துறைக்குப் பேராசிரியர் பதவிக்கு ஏற்பட்ட நியமனக் குழுவில் உளவியல் பேராசிரியர் ஒருவர் உறுப்பினராக அமர்ந்து விட்டார், இது தவறாக நிகழ்ந்து விட்டது. பேட்டியும் நிகழ்ந்து விட்டது. அப்போது துணைப்பேராசிரியராக இருந்த திருமதி சரசுவதி சென்னகேசவன் என்பாரும் (துறையிலே பணியாற்றிக் கொண்டிருந்தவர்) இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். பேட்டியும் முடிந்தது; முடிவு வெளியிடப் பெறவில்லை. ஆனால் பேட்டியில் உளவியல் பேராசிரியரைக் கண்ட அம்மையார் இதை எதிர்த்துப் பல்கலைக்கழகத்திற்கு எழுதினார்; தத்துவப் பேராசிரியர் இருக்க வேண்டிய இடத்தில் உளவியல் பேராசிரியர் அமர்ந் திருப்பது தவறு என்பதைப் பல்கலைக் கழகத்திற்குச் சுட்டிக் காட்டினார். பல்கலைக்கழகமும் தவறுதலை உணர்ந்தது. இந்தப் பேட்டியின் முடிவை அமுல் படுத் தாமல் மீண்டும் ஒரு புதிய குழு அமைத்து புதிதாகப் பேட்டியும் ஏற்படுத்தியது. தவறுதலைச் சுட்டிக்காட்டிய அம்மையாருக்கும் இந்தப் பதவி கிடைத்தது. இது டாக்டர் டி. சகந்நாத ரெட்டி துணைவேந்தராக இருந்த காலத்தில் நிகழ்ந்தது.

இவர் காலத்தில் நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியும் ஈண்டு நினைவிற்கு வருகின்றது. இது வரலாற்றுத்துறை பற்றியது. இத்துறையில் பணியாற்றிய டாக்டர் வி. எம். ரெட்டிக்கு ஒன்பதரையாண்டுகள்தாம் எம். ஏ.க்குக் கற்பிக்கும் அநுபவம் இருந்தது. வல்லுநர் குழு

இவரைப் பேராசிரியராகத் தேர்ந்தெடுத்தது. ஆனால் ஆறு திங்கள் கழித்துதான் (அதாவது பத்தாண்டு அநுபவம் பெற்ற பிறகுதான், இவருக்குப் பேராசிரியர் பதவிக்கு ஆணை அனுப்பப் பெற்றது. டாக்டர் டி. சகந்நாத ரெட்டி மருத்துவராதலால் தாய் மகப்பேறு அடைவதற்குப் பத்துத் திங்கள் நிறைவு பெறவேண்டும் என்பதை நன்கு அறிந்தவராவார். இதனைப் பேராசிரியர் பதவிக்குஎம்.ஏவகுப்புக்குக்கற்பிக்கும் பத்தாண்டுஅநுபவம் நிறைவுபெற்றிருக்க வேண்டும் என்று கருதினார் போலும்! சில வாரங்கள் குறைவாகக் 'குறைமாதப் பிரசவத்தால்" பிறக்கும் குழவிகளும் உயிர் வாழ்கின்றன என்பதையும் இவர் அறிந்திருக்க வேண்டும். ஒன்பதரையாண்டுகள் அநுபவம் பெற்ற டாக்டர் வி.எம். ரெட்டியை நியமித்திருந்தால் என்ன கெட்டுப் போகும் என்பது அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம்! ஆறு திங்களில் அவர் சாதித்தது என்ன என்பதும் அந்த வேங்கடக்குன்றின் மேலிருப்பவனே அறிவான் இப்படியெல்லாம் நினைத்தவர் பேட்டிக்கே அனுமதித் திருக்கக் கூடாது. என் நியமனத்தில் பேட்டிக்குக் கடிதம் அனுப்பாமல் அல்லவா தொல்லை கொடுத்தார்?

மற்றொரு துறையில்—அதாவது வணிகத்துறையில்—நடந்த வல்லுநர் குழு முன்னர் நடைபெற்ற பேட்டியில் பத்தாண்டுகள் எம்.ஏ. வகுப்புக்குச் கற்பித்த அநுபவம் பத்தாண்டுகள் நிறைவு பெற்றவர்—சில ஆண்டுகள் முதல்வராகவும் இருந்தவர் டாக்டர் ஓ. ஆர். கிருஷ்ணசாமி என்பவர். பேராசிரியர் பதவிக்கு வந்த இவரை மடக்கி இரண்டாண்டுகள் பல்கலைக் கழக அநுபவமாவது இருக்க வேண்டும் என்று கூறித் துணைப்பேராசிரியராக நியமனம் செய்தார் துணைவேந்தர். அவரும் இரண்டாண்டுகள் நிறைவு பெறுவதற்கு முன்னர் பெங்களூர்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் 'டீன்' (Dean) ஆகவும் நியமனம் பெற்று வெளியேறிவிட்டார்.

உளவியல் துறையிலும் விலங்கியல் துறையிலும் இத்தகைய 'வேடிக்கைகளை' நடத்திக் காட்டினார். துணைவேந்தர். புள்ளியியல் துறையையும் இவர் விட்டுவைக்கவில்லை. உள வியல் துறையில் பேராசிரியர்எஸ்.கோவிந்தராஜுலுகாலத் தில் மேஜர் பார்த்தசாரதி என்பாரை (இவர் போர்ப் பணி யாற்றித் திரும்பியவர்), டாக்டர் பட்டம் பெறாதிருந்தும், அவருடைய தகுதியையும் திறமையையும் அளந்தறிந்து அவரைப் பேராசிரியர் பதவிக்கு உயர்த்தியிருந்தார். அவர் ஓய்வு பெற்றதும். அத்துறையில் பல ஆண்டுகள் விரிவுரை யாளராகவும் துணைப் பேராசிரியராகவும் பணியாற்றித் திறமை மிக்க டாக்டர் எஸ். நாராயணராவுக்குப் பதவி உயர்வு தாராமல் இழுபறியாக வைத்திருந்தார் டாக்டர் ரெட்டி. இதனால் டாக்டர் எஸ். நாராயணராவ் மனம் உடைந்து போனார். இதய நோயால் தாக்கப் பெற்று சில மாதங்கள் படுக்கையாகக் கிடந்தார். துணைவேந்தர் டாக்டர் ரெட்டி இதை அறிந்தார். உடல்நோய்களைத் தெரிந்து கொள்ளும் அறிவு படைத்தவர்—இவர் நோய்க் கூறு மருத்துவர் (Pathologist) உளநோய்க் கூறுகளையும் ஓரளவு அறிந்திருக்கவேண்டும். வாழ்க்கையில் நல்ல அநுபவம் மிக்க அறிஞர்களும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்ணுறுங் கால் இவற்றின் மூலகாரணத்தை நன்கு அறிய முடியும்போது மருத்துவத் துறை அறிஞருக்கு இதனை அறிய முடியவில்லை என்று சொல்லுவதற்கில்லை. அறிந்து கொண்டார்; இல்லம் சென்று டாக்டர் ராவைப் பார்த்து வந்தார் என்றும் கேள்விப்பட்டேன். சில திங்களில் டாக்டர் ராவுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. உள்ளம் திருப்தி அடைந்தது; நோயும் நீங்கி விரைவில் குணம் அடைந்தார். மனத் திண்மை இல்லாதவர்கள் சிறிய அதிர்ச்சியாலும் மனம் உடைந்து போவர் என்பதற்கு டாக்டர் நாராயணராவ் ஓர் நல்ல எடுத்துக் காட்டாக அமைகின்றார்.

விலங்கியல் துறையில் இவர் மேற்கொண்ட முறை மிகவும் அடாதது. இத்துறையில் பல்லாண்டுகள்

உழைத்து டாக்டர் பட்டமும் பெற்றுத் துணைப் பேராசிரி ராகப் பணியாற்றிய டாக்டர் கே. எஸ். சுவாமிக்கும் பதவி உயர்வு கொடுக்கவில்லை. ஒன்றிரண்டு ஆண்டுகள் மூதறிஞர் பட்டப் படிப்பு மாணாக்கர்கட்குக் கற்பித்த அநுபவம் பத்தாண்டுகள் நிறைவு பெறவில்லை என்ற காரணமே டாக்டர் சாமியின் பதவி உயர்வுக்குத் தடையாக இருந்திருக்கலாம். ஆனால் அவருக்கு மேல் சென்னைப் பல்கலைகழகத்தில் ஒய்வு பெற்ற டாக்டர் கிருஷ்ணன் என்பவரைப் பேராசிரியராக (இரண்டாண்டு ஒப்பந்தத் தில்) கொணர்ந்தது துறையிலுள்ளார் அனைவருக்குமே வயிற்றெரிச்சலை விளைவிப்பதாக இருந்தது என்றால் துறைத் தலைவராகத் தொடர்ந்து இருந்து பேராசிரியர் பதவியை அவாவி நிற்கும் துணைப் பேராசிரியர் டாக்டர் கே. எஸ். சுவாமியின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை ஊகித்துதான் அறிந்துகொள்ளவேண்டும். இறையருளால் டாக்டர் சுவாமியின் மனம் தளரவில்லை; திடசித்தத்துடன் பணியாற்றினார். டாக்டர் சுவாமி சிறந்த ஆய்வாளர், நல்லாசிரியர், நல்ல உழைப்பாளி என்பவற்றையெல்லாம் துணைவேந்தர் டாக்டர் ரெட்டி அறியாதவரல்லர். இரண்டாண்டுகள் கழித்து டாக்டர் சுவாமிக்குப் பேராசிரியர் பதவி கிடைத்தது. டாக்டர் கிருஷ்ணனைக் கொணராமல் உளவியல் துறையில் டாக்டர் நாராயணராவைத் துறைத் தலைவராக வைத்திருந்ததைப் போலவே, டாக்டர் சுவாமியையும் துறைத்தலைவராகவாவது வைத்திருந்திருக்கலாம், டாக்டர் கிருஷ்ணனின் இரண்டாண்டுப் பிரவேசத்தால் துறையில் என்ன வளர்ச்சி ஏற்பட்டது என்பதற்கு அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம்!

3. டாக்டர் சுவாமி இன்று இல்லை. இரண்டாண்டுக்கு முன்னர் (1988) தற்கொலை செய்து கொண்டதாக செய்தித்தாள்கள் மூலம் அறிந்தேன்.

திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் டாக்டர் எம். இராதாகிருஷ்ணன் என்பவர் ஒரு விரிவுரையாளர் இங்கேயே எம். ஏ. வகுப்பிற்குக் கிட்டத்தட்டப் பத்து ஆண்டுகள் கற்பித்த அநுபவம் இவருக்கு இருந்தது. இவர் துணைப்பேராசிரியர் (Reader) பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். தனிச் சிறப்புக்கூறு (Specialization) பற்றி ஏதோ ஐயத்தை எழுப்பிக் கொண்டு (துறைத்தலைவர் பீம்பசேனாச்சாரின் கைங்கரியம் இது) இவருக்கு பேட்டியே மறுக்கப்பட்டது. ஆனால் ஒன்றிரண்டு ஆண்டுக்குள் சென்னைப் பல்கலைக் கழகக் கோவை மையத்தில் இவர் விரிவுரையாளர் பதவியிலிருந்து நேராக பேராசிரியர் பதவியில் நியமனம் பெற்றார்; பேராசிரியர்க்குரிய ஊதியத் திட்டத்திலும் இரண்டு உயர்வுப் படிகளையும் (Increments) பெற்றது எல்லோரையும் வியக்க வைத்தது. தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு காலத்தில் இது நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சகந்நாதரெட்டி பதவியைவிட்டு விலகுவதற்கு முன்னர் போட்ட திட்டம் இறையருளால் பயனற்றதாய்ப் போய் விட்டது. இறையருள் தான் இத்திட்டத்தைக் குலைத்து திட்டமிட்டவரையும் திட்டத்திற்குள் உட்படுத்தப்பட்டவர்களையும் காத்தது— கண்ணன் பஞ்ச பாண்டவர்களை ஒருநெருக்கடியான நிலையில் காத்தது போல. உவமையை விரித்து விளக்கினால் நன்கு தெளிவாகும் அவசர காலநிலை (Emergency) நிலவின சமயம். துணைவேந்தர் முதல்வரை தத்துவத்துறைத் துணைப்பேராசிரியர் ஹெர்பர்ட், மானிட இயல் துணைப்பேராசிரியர் முனிரத்னம்ரெட்டி, தமிழ்த் துணைப்பேராசிரியர் துறைத் தலைவர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் இந்தித்துறைப் பேராசிரியர் டாக்டர் S. T. நரசிம்மாச்சாரியார் ஆகிய நால்வரையும் தற்காலிகப் பதவி நீக்கம் செய்வதற்குப் பரிந்துரைக்குமாறு கேட்க அவரும்அவ்வாறேசெய்தாராம்;

அப்போது முதல்வராக இருந்தவராக ஆங்கிலப் பேராசிரியர்M.V. இராமசர்மா. அங்ஙனமே தேர்வுஅதிகாரி M. குடும்பராவ் என்பாரையும் தற்காலிகப் பதவி நீக்கத் திற்குக் குறிவைத்தார். இஃது எப்படியோ பரவிக் கல்வி அமைச்சர் M U. கிருஷ்ணராவ் காதிற்கும் எட்ட, அவர் அரசியல் சார்பாகவுள்ள ஆட்சிக் குழுவினர்களின் காதைக் கடித்து அனுப்பினார். திரு குடும்பராவ் M.V. கிருஷ்ண ராவுக்கு உறவினர்; மிகவும்வேண்டியவர். இதனால் அவர் காக்கப் பெற்றார். இவர் காரணமாக அனைவரும் காக்கப்பெற்றனர்.

ஆட்சிக்குழுக் கூட்டத்தில் நடைபெற்றது என்ன? அரசு சார்பாக வந்த ஓர் உறுப்பினர்; ''பதவிலிருந்து விலகிப் போகும் துணைவேந்தருக்கு அதுவும் அவர் கலந்து கொள்ளும் இறுதிக் கூட்டத்தில், இத்தகைய தீங்கு விளைவிக்கும் செயல் எதற்கு? புதிய துணைவேந்தர் இந்த விஷயத்தைக் கவனித்துக் கொள்வார். இந்தக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலிலுள்ள எந்தப் பொருளைப் பற்றியும் தீர்மானிக்கவேண்டா. ஆறு ஆண்டுகளாகப் பல்கலைக்கழகத்தை நன்முறையில் நடத்திய துணைவேந்த ருக்கு நன்றி செலுத்தி சிற்றுண்டி விருந்துடன் கூட்டத்தை நிறைவு செய்வோம்'' என்று கூறியதால் கூட்டம் நிறைவு பெற்றதாம். திருமதி இந்திராகாந்தி நாட்டின் ஒழுங்கு முறைக்காக கொண்டு வந்த அவசரகால நிலையை பல்வேறு துறைகளில் மேல்மட்டத்தில் பணியாற்றிய பல கயவர்கள் இந்தத் திட்டத்தையே குலைத்து அந்த அம்மையாருக்கு அழியாப் பழியைத் தேடித் தந்தனர்; சர்க்காரியா கமிஷனும் தோன்றியது. நாட்டின் செல்வம் சர்க்காரியா கமிஷனால் வீணாகக் கரைந்தது. ஏதோ திருப்பதியில் பணியாற்றிய காரணத்தால் டாக்டர் ஜகந்நாதரெட்டியின் தீச்செயலை ஏழுமலையான் தடுத்து நிறுத்தி அவரைக் காத்தான். அவசரகால நிலையில் கயவர்களின் கைங்கரியத்திற்குப் பலியாகி சொல்

லொணாத் துயரத்தை அனுபவித்த நல்லவர்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவியும், சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரமும் அடங்குவர். காங்கிரஸ் ஆட்சிக்கு அடுத்து பதவியேற்ற ஜனதாகட்சியின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய "அழுக்குகள்" போக்கப்பெற்றன,

பாரதப் போரின் இறுதியில் அசுவத்தாமன் செய்ய இருந்த தீச்செயலினின்றும் பாண்டவர்களைக் காத்தான் கிருஷ்ணன். அதுபோலவே ஜகந்நாத ரெட்டிபுரிய இருந்த தீச்செயலினின்றும் ஐவரையும் கிருஷ்ணராவ் என்ற பெயர் கொண்ட ஓர் அமைச்சர் காத்தார். அவசர கால நிலையில் நாட்டிற்குஏற்பட்டநன்மைகளைவிடத் தீமைகள் தாம் அதிகமாயின. ஆங்காங்கே அசுரர்களின் ஆட்சிதான் நடைபெற்றது. இத்தகைய அசுரர்களைத் தொலைப்ப தற்கு ஆண்டவன் துணை நிற்கவில்லை.

குமிழி—221

## 65. பேராசிரியர் K. சச்சிதானந்த மூர்த்தி

டாக்டர் D. சகந்நாத ரெட்டியை அடுத்துத் துணைவேந்தராக வந்தவர் பேராசிரியர் டாக்டர் கே. சச்சிதானந்த மூர்த்தி. இவர் ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராக இருந்தவர்; அமைதியான போக்கையுடையவர், நன்கு கற்றறிந்த சான்றோர். ஐம்பத்திரண்டு அகவையிலேயே துணைவேந்தர்பதவியை எட்டிப்பிடித்தார் என்றால், படிப்பும், திறமையும் பிற தகுதிகளும் மட்டும் காரண மன்று. சாதிச் செல்வாக்கு, அரசியல் செல்வாக்கு இவை இருந்தமையால்தான் இவருக்கு இப்பதவி வந்தது என்பதை பல்கலைக் கழகத்து வளாகத்திலே கிளம்பிய பேச்சு. இவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் (அப்போது நடுவண் அரசில் நாடாளுமன்றச் செயல்களின் அமைச்ச

ராக இருந்தவர்) ஐதரபாத்தில் 10 நாட்கள் முகாம் போட்டுத் தங்கி துணைவேந்தர் நியமனத்திற்குரிய ஆணையைப் பிறபித்த பிறகுதான் தில்லி திரும்பினார் என்பது நம்பகமான வட்டாரப் பேச்சாகப் பரவியது. இப்படியெல்லாம் சொல்லுவதால் தகுதியற்ற ஒருவர் தகாத முறையில் பதவிபெற்றார் என்று சொல்லுவதாகக் கருதக் கூடாது. நாட்டுநடப்புகளைச் சீர்தூக்கி ஆய்ந்தால் நாட்டிலுள்ள துணைவேந்தர்கள் யாவருமே இந்த முறையில்தான் பதவிக்கு வந்தனர் என்று கூறினால் அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதற்கு இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. திரை மறைவில் நடைபெற்றாலும் புதிர்க்கதிர்க் (X-Ray) கண்களுக்குத் தெரியாமற்போகாது. எலக்ட்ரான் செவிகட்குக் கேட்காமல் போகாது. இளைஞர்கட்கு I A S தேர்வுகள் இருப்பது போல் அறுபது வயதை எட்டும் முதியவர்கட்கு துணைவேந்தர் பதவிக்கென எழுத்து முறைத் தேர்வு, வாய்மொழித் தேர்வு முதலிய புறவயமான (Objective) முறைகளில் தேர்வுகள் வைத்தால் இது காறும் பதவிக்கு வந்தவர்கள் (நாடு விடுதலை பெற்ற பிறகு) பெரும்பாலோர் இந்தப் பதவியைப் பெற்றிருத்தல் முடியாது. நேர்வழியைவிடக் குறுக்குவழி தானே எளிதானது; அடைய வேண்டிய இடத்தைஎளிதாகவும் சீக்கிரமாகவும் அடைய முடியும், இதுகாறும் பதவி வகித்துஓய்வு பெற்றவர்களின்செயல்திறன் நிர்வாகத்திறன் ஆக்கமுறைச் செயற்பாடுகள் முதலியவற்றை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தால் மலைக்கும்மண்ணாங்கட்டிக்குமுள்ள வேறுபாடுகள் அங்கை நெல்லியாகப் புலனாகும். சிலரது காலத்தில் நிர்வாகமே குலைந்து போயிருத்தலையும் காணலாம்.

எந்தத் துணைவேந்தர் பதவியேற்றாலும் பதவியேற்ற அன்றே துறைத்தலைவர்களைப் பார்த்துப் பேசுவது மரபு, டாக்டர் சகந்நாதரெட்டி காலத்திலும் இது நடைபெற்றது; டாக்டர் K. S. மூர்த்தி காலத்திலும் நடை

பெற்றது. இந்தக் கூட்டம் ஒருவரையொருவர் அறிமுகப் படுத்திக் கொள்வதற்குரிய ஒரு வாய்ப்பேயன்றி, அதற்கு மேல் பலன் ஒன்றும் இல்லை. நாளடைவில்தான் செயல் திறனால் (இல்லை காக்கை—கால்+கை=காக்கை—பிடித்தலினால்) ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்: எந்தத் துணைவேந்தரும் புதிதாகப் பதவியேற்ற வுடன் துறைப் பேராசிரியர்கள் தங்கள் துறையிலுள்ள கழகத் தொடக்க விழாவிற்கோ நிறைவு விழாவிற்கோ அவரை முதன்முதலாக அழைத்துப் பேசச் செய்வது வழக்கம். பேராசிரியர் K. S. மூர்த்தியவர்கள் தத்துவத் துறையைச் சேர்ந்தவராதலால் தத்துவத்துறை முதன் முதலாக அவரை அழைத்தது. முதல் கூட்டமாதலால் பல துறைகளிலுமிருந்தும் அதிகமான பேர்கள் வந்திருந்தனர்.

பேராசிரியர் K. S. மூர்த்தியவர்கள் நல்ல பேச்சாளர் அல்லர்; டாக்டர் சகந்நாதரெட்டியைப் போல் நன்கு தயார் செய்து கொண்டு வந்து பேசுபவரும் அல்லர். அன்று ஏதோ பேசினார்; புதிய கருத்துகள் ஒன்றும் பேச்சில் குமிழியிடவில்லை. பழைய கருத்துகளைப் புதிய நோக்கில் எடுத்துரைக்கவும் இல்லை. கூட்டத்தைத் திசை திருப்ப நினைத்து கூட்டத்தின் இறுதியில் வினாக்கள் எழுப்பலாம் என்று சந்தர்ப்பம் தந்தார். பெரும்பாலோர்-வேறு துறைகளிலிருந்து வந்திருந்தோர்-வாயைத்திறக்கவே இல்லை. தத்துவத்துறையிலுள்ளவர்களும் வினாக்கள் விடுக்கத் தயங்கினர். பல ஆண்டுகளாக நான் தத்துவத் துறையில் ஆழங்காலபட்டவனாதலால் ஒரு வினாவை விடுக்க நினைத்தேன். வினாவிற்கு விடை தெரியாமல் விடுக்கவில்லை. மறுமொழி கூறும் முறையைத் தெரிந்து கொள்ளவே விடுத்தேன். திருப்பதியில் தமிழ்த் துறையைத் தவிர வேறு எந்தத் துறையிலும் தமிழ்புழங்குவதைக்காண முடியாது; தமிழ் ஒலியையும் கேட்க முடியாது. ஆங்கிலம் புழங்குவதுதான் பெரு வழக்காக இருந்தது.

நான் ஆங்கிலத்தில் தொடுத்த வினா இது: துவைதம், விசிட்டாத் வைதம், அத்வைதம்—என்ற மூன்று தத்துவங்கள் உண்டல்லவா? இந்த மூன்றுக்குரிய வேறுபாடுகளை இங்குள்ளவர்கட்கு விளக்க வேண்டுகின்றேன்.'' என்றேன். ''டாக்டர் ரெட்டியார், இது சிக்கலான வினா. எளிதில் விளக்க முடியாது. வடமொழித் துறையை நாடி அங்குத் தெரிந்து கொள்ளலாம்'' என்ற பதில் வந்தது. நான் சொன்னேன்; ''ஐயா இது சிக்கலான வினாவன்று. எளிதாக மூன்று வாக்கியத்தில் விளக்கலாம். எனக்கு விடை தெரியாமல் இதை விடுக்கவில்லை. எல்லோரும் அறிந்து கொள்ளவே இதை விடுத்தேன். தாங்கள் இசைவு தந்தால் இரண்டே மணித்துளிகளில் விளக்குவேன்'' என்றேன். ''விளக்குங்கள்'' என்றார். இந்த வினா விவேகாநந்தரோ அல்லது யாரோ ஒரு சீடர் இராம கிருஷ்ணபரம ஹம்சரை நோக்கி விடுக்கப்பட்டது. அதற்கு அம்முனிவர் கூறிய விடை இது. ''வழிப் போக்கர் ஒருவர் எய்ப்பினில் வைப்பாக இருக்கட்டும் என்று கட்டுணவு எடுத்துச் செல்லுகின்றார். இப்போது கட்டுணவு, எடுத்துச் செல்பவர் தனித்தனியாகவுள்ள பொருள்கள்; சீவான்மாவும் பரமான்மாவும் தனித்தனியாகவுள்ள துவைதம் போன்றது இந்நிலை. சில கல் தொலைவு நடந்து சென்ற பிறகு பசி வருகின்றது. வழிப்போக்கர் கட்டமுதை உண்கின்றார். இப்போது கட்டமுது அவரது வயிற்றை அடைகின்றது. இப்போது இரண்டும் (அவரும் கட்டமுதும்) தனித்தனியாகக் காணப் பெற்றாலும் இரண்டும் ஒரே நிலையில் உள்ளன. இது தான் பரமான்மாவும் சீவான்மாவும் விசிட்டாத்வைதத்தில் இருக்கும் நிலையைக் காட்டுவது. வழிப்போக்கன் பல கல் தொலைவு நடந்து செல்லுகின்றான். கட்டமுது உருவம் தெரியாமல் செரிமானம் ஆய்விடுகின்றது; உடலில் கலந்து விடுகின்றது. இதுதான் சீவான்மா பரமான்மாவுடன் கலந்து விடும் அத்துவித நிலை (இரண்டல்லாத நிலை)யை விளக்குகின்றது'' என்றேன். உடனே பேராசிரியர் K. S.

மூர்த்தி (துணைவேந்தர்) ''மிக நன்று. இங்குள்ளோர் சார்பாக டாக்டர் ரெட்டியாரைப் பாராட்டுகின்றேன்; சாதாரண மக்களும் புரிந்து கொள்ளுமாறு எடுத்துரைத் தமைக்கு மிக்க நன்றி'' என்று கூட்டத்தை முடித்தார். இந்தக் கூட்டம் நடந்த நாள் முதல் பேராசிரியர் K. S. மூர்த்தி என்மீது தனி மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

பேராசிரியர் மூர்த்தி பதவியேற்றவுடன் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் பல மாற்றங்களைச் செய்தார். பேராசிரியர்கள் நியமிக்கப்பெறாத துறைகளில், துணைப் பேராசிரியர்கள் துறைத் தலைவர்களாக இருந்தபோதிலும் அத்துறைகளுக்குரிய பாடதிட்டக் குழுவின் தலைவராக வேறு பல்கலைக் கழகப் பேராசிரியர்களை நியமிக்கும் மரபு இருந்து வந்தது. இதனால் 1970-71இல் தமிழ்த்துறை தொடங்கப் பெற்று துணைப் பேராசிரியராக இருந்த பாடதிட்டக்குழுவின் தலைவராக முடியவில்லை. டாக்டர் மு. வரதராசனே தலைவராகத் தொடர்ந்து இருந்து வந்தார். அவர் மறைந்த பிறகு திரு. தி. மு. நாராயண சாமிப்பிள்ளையை ஓர் ஆண்டு தலைவராக இருக்க ஏற்பாடு செய்தேன். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் பாடதிட்டக் குழுவின் தலைமைப் பொறுப்பைப் பல்லாண்டுகள் வகித்து வந்தவர். அடுத்து, இக்குழு மாற்றியமைக்கப் பெற்றபோது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரைக் குழுத் தலைவராக நியமித்தது. பேராசிரியர் மூர்த்தி வந்த பிறகு துறைத்தலைவராகவும் துணைப்பேராசிரியராகவும் இருக்கும் ஒருவர் பாடத்திட்டக்குழுவின் தலைவராக இருக்கலாம் என்ற மரபைப் புகுத்தினார். இதனால் துணைப் பேராசிரியராக இருந்த எனக்குப் பாடத்திட்டக் குழுவின் தலைவராகும் வாய்ப்பு 1976-முதல் ஏற்பட்டது. இவர் இந்த மரபைக் கொண்டு வராதிருந்தால் திருப்பதியில் இந்த வாய்ப்பு எனக்கு ஏற்பட்டே இருந்திராது.

டாக்டர் D. சகந்நாதரெட்டி காலத்தில் வரவு—செலவுத் திட்டத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியர் பதவி சேர்க்கப் பெற்றிருந்தது. அதை நீக்கி அப்பதவியை விரிவுரையாளர் பதவியாக மாற்றியமைத்தார். துறையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் அடாத செயல் இது. நான் இதைக் கண்டு எதிர்ப்புக் கடிதம் எழுதியும் பலன் அளிக்கவில்லை. பேராசிரியர் மூர்த்தி வந்த பிறகு பல துறைகள் பற்றிய கோப்புகளையெல்லாம் நன்கு துளைத்துப் பார்த்து பல துறைகளில் டாக்டர் சகந்நாதரெட்டி விளைவித்திருந்த ஊழல்களையெல்லாம் போக்கினார். இந்த நிலையில்தான் தமிழ்த்துறை தொடர்பான கோப்புகளைப் பார்க்கும் போது பேராசிரியர் பதவிக்குரிய தொகை குறைக்கப் பெற்று விரிவுரையாளர் பதவிக்குரிய தொகையாக இருப்ப தாகக் கண்டார். அந்தப் பதவியை மீண்டும் பேராசிரியர் பதவியாக உயர்த்தி அதற்குத்தேவையான தொகையையும் வரவு—செலவுத் திட்டத்தில் சேர்த்துப் பேரவையின் அங்கீகாரத்தையும் பெற்றார். என்னுடைய வயது, தகுதி முதலியவற்றையும் நான்பட்ட துன்பங்களையும் உசாவி யறிந்து எப்படியாவது (ஓர் ஆண்டாவது) பேராசிரியராக உயர்த்த வேண்டும் என்று முடிவு எடுத்து அதற்குத் தகுந்த வாறு நடவடிக்கைகளை எடுத்ததைப் பின்னர் என்னால் அறிய முடிந்தது. இதற்கு எந்த முயற்சியும் நான் எடுக்க வில்லை; அவராகவே செய்த அவரது பரந்த மனப்பான்மை பொன்னெழுத்துகளால் போற்றத் தக்கது என்பதை ஈண்டுக் குறிப்பிடாமல் இருக்க முடிய வில்லை. ''வருவது தானே வரும். தீதும் நன்றும் பிறர்தர வாரா.''

பேராசிரியர் மூர்த்தி என்னை அடிக்கடிக் காணு மாறும், துறைக்கு வேண்டிய தேவைகளைத் தாராள மாகக் கேட்குமாறும் பணிப்பார், நாயுடு—ரெட்டி என்ற போராட்டம் ஆந்திர மாநிலத்திற்குரியது என்று தெளி வாக அறிந்த துணைவேந்தர் தமிழகத்திலிருந்து போந்த என்னை அந்தப் போராட்டத்தில் சேர்க்கவில்லை; ஆனால்

டாக்டர் தாமோதரன் இந்தப் போராட்டத்தில் தன்னை உட்படுத்திக் கொண்டிருந்ததையும் இதில் பட்டுக் கொள்ளாமல் நான் ஒதுங்கியிருந்ததையும் கண்டு கொண்டார். பலரை உசாவியறிந்தும் எங்கள் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கியும் எங்களை அளந்தறிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதும் எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று.

போகும் போதெல்லாம் துணைவேந்தர் துறையின் வளர்ச்சி பற்றியே பேசுவார். தத்துவங்களைப் பற்றி அதிகம் பேசுவார். ஒரு சமயம் அக்கமணியைப் (உருத்திராக்சம்) பற்றிய பேச்சு எழுந்தது. அதைத் தரித்துக் கொண்டிருப்பதால் உடலுக்கு நல்லது என்றார். அதைத் தரித்துக் கொண்டு நீராடும்போது அதில்பட்ட நீர் உடலிலும் படுவதால் அதிலுள்ள மருந்துக் குணம் உடல் நலத்தைப் பேணும் என்றார். நான் காசியிலிருந்து பெற்ற 108 மணிகளைத் தங்கத்தால் மாலையாகக் கட்டி வைத்திருந்ததைப் பார்த்து நல்ல மணிகள் என்றார், எப்போதும் தரித்துக் கொண்டிருப்பது நல்லது என்றும் பரித்துரைத்தார். சில சமயம் தத்துவ ஆராய்ச்சியிலும் பேச்சுசெல்லும். என்னென்னவோக பேசினோம். பெரும்பாலும் அவை சித்தாந்தத்தைப் பற்றியே இருக்கும். வைணவ சமயத்தைப் பற்றி அதிகம் பேசாததால் அதில் அவருக்கு ஈடுபாடு இல்லை என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

பல்கலைக் கழக வளாகத்தில் அவரைச் சாதி வெறியர் என்று ரெட்டி குலத்தைச் சேர்ந்தவர்கள் பேசுவதைக் கேட்டிருக்கின்றேன், ஆயினும் நான் அறிந்த வரை அப்படிப்பட்டவராகத் தோன்றவில்லை. எல்லா சாதியாரிடமும் நன்றாகத்தான் பழகிக் கொண்டிருந்தார். ஆனால் கம்மா நாயுடு சாதியைச் சேர்ந்தவர்கள்— பெரும்பாலும் வெளியார்—அதிகம் நெருங்குவதை நேரில் பார்த்திருக்கின்றேன். இதனால் கம்மா நாயுடு

சாதியாருக்கு அதிக நன்மைகள் செய்கின்றார் என்று சொல்ல முடியவில்லை. அதிகமாக நாடும் அச்சாதியாரிடம் அந்த வெறி இருந்திருக்கலாம். அவர்கள் தங்கட்கு உதவுவார் என்று கருதியிருக்கலாம். இவரும் அவர்களுடன் உலகியலையொட்டி நெருங்கிப் பழகியிருக்கலாம். செயலில் தனிப்பட்ட முறையில் எத்தகைய சலுகைகளும் காட்டியதாகத் தெரியவில்லை. ரெட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் இங்ஙனம் சாதிவெறியர் என்று பேசிக் கொண்டிருந்தனர். இது அழகான இளம் பெண்ணைப்பற்றி இளைஞர்கள்—ஒருதலைக் காதலில் திளைப்பவர்கள்—பேசும் அலரைப் போன்றது என்றுதான் நினைக்கச் செய்தது. பெண் கற்புடையவள் என்பதைச் சிலர்தான் அறிய முடியும். இந்தக் கதை போலத்தான் ரெட்டி வகுப்பினரின் பேச்சு இருந்ததைக் கண்டேன்.

நான் துணைவேந்தரின் இல்லத்திற்குப் போகும் போதெல்லாம் 10 பேருக்குக் குறையாத ஒரு சிறு கூட்டத்தைக் காண்பதுண்டு. இந்தக் கூட்டம் திருமாளிகைக்கு வெளியில் சாலையோரத்தில்தான் இருக்கும். ஏதோ தெலுங்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். தெலுங்குப் பேச்சு ஓரளவு, எனக்குப்புரியுமாதலால் என் காதில் படும் ஒரு சில வாக்கியங்களைத் 'தெரிந்து' கொள்ள முடிந்தது. ''எப்படியாகிலும் இதை நீங்கள்தான் முடித்துத் தர வேண்டும்'' என்று கூட்டத்திலுள்ள ஒருவர் சொல்வார். ''முடித்துத் தருவது என் பொறுப்பு'' என்று சொல்லி விட்டு ஒருவர் திருமாளிகைக்குள் நுழைவார். 15 மணித் துளிகள் உள்ளேயே உலவுவார். மாமரத்தைச் சுற்றுவார். அரசு—வேம்பு சேர்ந்த அமைப்பு ஒன்றும் அங்கு இல்லை. இருந்திருந்தால் அதைச் சுற்றியிருப்பார். வெளியில் வந்து கூட்டத்தினரிடம் ''சொல்லி விட்டேன், கவனிப்பதாகச் சொன்னார். கவலை வேண்டாம்'' என்று சொல்லுவார். கூட்டமும் கலையும்.

இப்படிப் பலமுறை நேரில் கண்டதையும் காதில் விழுந்த பேச்சுகளையும் துணைவேந்தரிடம் எடுத்துக் கூறியுள்ளேன். ‘‘உங்கள் சாதியார் உங்கள் நற்பெயரை இப்படி நாடோறும் கெடுத்துக் கொண்டு வருகின்றனர்’’ என்று சொல்லி எச்சரிப்பதுண்டு. அதற்கு அவர் ‘‘இவற்றை நானும் அறிவேன். இஃது அரசியல்வாதிகளின் போக்கு, நான் மனச் சான்றுபடி நடப்பவன். யாரையும் கடிந்து கொள்ளாமல் இனிமையாகப் பேசி அனுப்பி விடுவேன்’’ என்று சொல்லுவார். இங்ஙனம் நான் எஸ். கோவிந்தராஜுலு நாயுடு (முதல் துணைவேந்தர்), டாக்டர் V. C. வாமன்ராவ் (இரண்டாம் துணைவேந்தர்) டாக்டர் K. S. மூர்த்தி (நான்காம் துணைவேந்தர்) இவர்களுடன் நன்கு பழகுவேன். எப்பொழுது சந்தித்தாலும் என் பதவி உயர்வு பற்றியோ, வேறு சொந்த சலுகைகள் பற்றியோ ஒருபொழுதும் பேசுவதில்லை என்பதை ஏழுமலையான்தான் அறிவான்.

குமிழி—222

## 66. டாக்டர் மு.வ.வின் இலக்கியப் படைப்புகள் பற்றிய கருத்தரங்கு

டாக்டர் மு. வ. 1974இல் திருநாடு அலங்கரித்தார். சிறுவயதில் அவருடைய பாட்டனார் பெயரும் வரதராசன் என்பதால் அவரை வீட்டிலுள்ளார் (பாட்டனார் மறையும் வரை) ‘திருவேங்கடம்’ என்றுதான் அழைப்பார்கள் என்று அவர் என்னிடம் பலமுறை சொல்லியதுண்டு. இதனால்நான் அவர் பேரில் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் ஏதாவது நினைவுச் சின்னம் ஏற்படுத்துதல் வேண்டும் என்று என் மனம் அடிக்கடி எண்ணியது. இதற்காக ஒரு சிறு குழு அமைத்து தொகை திரட்ட

முயன்றேன். பாரி நிலைய உரிமையாளர் K. A. செல்லப்பனைப் பொருளாளராக இருக்குமாறு கேட்டுக் கொண்டேன்; அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால், நான் நினைத்தபடி குழு வேலை செய்யவில்லை. மலேயா பல்கலைக் கழகத்திலிருந்து மு. வ. மாணவர் டாக்டர் தண்டாயுதம் என்பவர் மட்டிலும் (அவர் இப்போது இல்லை. சில ஆண்டுகட்கு முன்னர் திருநாடு அலங்கரித் தார்) ரூ.5000/த்து சில்லறை பல்கலைக் கழகப் பதிவாளர் பேருக்கு நான் கேட்டபடி டிராப்ட் வாங்கி எனக்கு அனுப்பி வைத்தார்; அதை நான் பதிவாளர் பேருக்கு அனுப்பி வைத்து விட்டேன்.

இஃது இப்படியிருக்க, மு.வ. படைப்பு இலக்கியம் பற்றி ஒரு கருத்தரங்கு நடத்த நினைத்தேன். பல்கலைக் கழக மானிய இணையத்திற்கு எழுதினால் தனிப்பட்டவர் பெயரில் நடைபெறும் கருத்தரங்கிற்கு நிதி கிடைக்காது என்று நினைத்து விண்ணப்பம் அனுப்பவில்லை. கருத்தரங் கைப் பணம் இல்லாது எப்படி நடத்துவது? யோசித்தேன் யோசித்தேன், யோசித்தேன். யோசனையால் ஒளி உதய மாயிற்று. துணைவேந்தரை நாடி ரூ. 1000/- வழங்குமாறு கேட்பது; இத்தொகை ஒருநாள் கருத்தரங்கிற்கு வருவோ ருக்கு உணவு, அழைப்பிதழ் அச்சடிக்கும் செலவு, அஞ்சல் செலவு, பல்கலைக் கழகச் சிற்றுந்தைப் பயன்படுத்தினால் அதற்குக் கட்ட வேண்டிய செலவு முதலியவற்றிற்குப் போதும் என்று நினைத்தேன். மு. வ. மாணாக்கர்களில் பலர் பேராசிரியர்களாக உள்ளனர்; அவர்களை அவரவர் செலவில் வந்து போகுமாறு கேட்பது என்று முடிவு செய்தேன். ஒருநாள் கருத்தரங்கு போதும் என்றும் முடிவு செய்தேன். இதிலும் இறைவன் வழிகாட்டுவான் என்ற நம்பிக்கையோடு செயற்பட்டேன்.

ஒருநாள் துணைவேந்தர் பேராசிரியர் K. S. மூர்த்தியைச் சந்தித்து என்னுடைய திட்டத்தை

அவர் முன் வைத்து ரூ.1000/- பல்கலைக் கழகப் பொது நிதியிலிருந்து வழங்குமாறு வேண்டினேன். வேங்கட வாணன் அவர்மூலம் அதைக் கிடைக்கச் செய்ததால், துணைவேந்தர் மனமுவந்து ஒருப்பட்டார். துணைவேந்தர் வந்த ஆறு திங்களுக்குள் தமிழ்த் துறையின்மீது அன்பு கொண்டது பெருவியப்பாக இருந்தது.

கருத்தரங்கின் தலைவர் துணைவேந்தர்தான் என்பது பல்கலைக் கழக மரபு. எதற்கும் அவரை அண்மிக் கேட்ட போது அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். திரு. அன்பழகன் (மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர்) டாக்டர் மு.வ.வுடன் பணியாற்றினார் என்றும், அவரைக் கொண்டு மு.வ.படத்தைத் திறந்து வைக்கச் செய்யலாமா என்றும் கேட்டதற்கு அவர் ''மிகவும் பொருத்தம்'' என்றார்; தானே அமைச்சருக்குக் கடிதம் எழுதுவதாகவும் சொன்னார்; எழுதினார். நானும் அவரை நேரில் பார்த்தும், எழுதியும் கேட்டேன்; அவரும் மனமுவந்து ஒப்புக் கொண்டார். மு.வ. மாணவர் டாக்டர் தண்டாயுதத்திற்குத் தலைப்பு தந்து அதுபற்றி ஆய்வுக் கட்டுரை வழங்குமாறு கேட்டு எழுதினேன்; அவரும் அனுப்பி வைத்தார். இது தவிர, டாக்டர் மு.வ.வின் நெருங்கிய நண்பரும் தமிழக உணவுச் செயலருமான திரவியம் அவர்களைக் கொண்டு கருத்தரங்கைத் தொடங்க நினைத்தேன்; அவரும் அதற்குப் பச்சைக் கொடி காட்டினார்.

இனி, இந்தியாவில் பல்வேறு இடங்களில் பணியாற்றி வரும் மு. வ. மாணவர்களில் டாக்டர் ம ரா.போ. குருசாமி (கோவை பூ.சா.கோ. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்), டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் (தமிழ்த் துணைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்), டாக்டர் P. சௌரி ராஜன் (தமிழ்த் துணைப்பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம்) S. வேங்கடராமி

(துணைச் செயலர், தமிழ் நாடு அரசு), K. A. இரகு நாயகம் (வணிகர், திருப்பத்தூர்), கு. இராஜவேலு (இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ் நாடு அரசு) இவர்கட்கெல்லாம் தலைப்புகள் தந்து ஆய்வுக்கட்டுரை கள் தருமாறு எழுதிக் கேட்டிருந்தேன். கு. இராஜவேலு ஏதோ காரணத்தால் கருத்தரங்கில் கலந்து கொள்ள வில்லை; ஏனையோர். கட்டுரைகள் வழங்கினார்கள். திரு. க. திரவியத்தை அழைத்து வரும் பொறுப்பை திரு. S. வேங்கடசாமிக்கு விட்டிருந்தேன். அவரும் க. திரவியத்தை காரிலேயே அழைத்து வந்து விட்டார். பல்கலைக்கழகத்திலிருந்து 1000/-இல் கார் பயணப்படியாக ரூ 200/- சில்லறைதிரு க. திரவியத்திற்கு வழங்கியதாக நினைவு. ஏனையோருக்குத் தங்கவசதி, விருந்துஇவைதான் வழங்க முடிந்தது.

கருத்தரங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. (சனவரி-1976) திருப்பதி இசைக் கல்லூரி இசைப் பேராசிரியர் திரு. பசுபதி இறைவணக்கம் பாட, அவர் துணைவி சுதி கூட்டினார். பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்து ரிக்கார்டு மூலம் நடைபெற்றது. நான் வரவேற்புரை நல்கினேன். மாண்புமிகு அமைச்சர்பேராசிரியர் அன்பழகன் மு. வ. படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். க.திரவியம் அற்புதமாக ஆங்கிலத்தில் உரையாற்றி கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அவர் பேச்சைக் கேட்டு ஆங்கிலப் பேராசிரியர்கள்கூட மூக்கின்மீது விரலை வைத்தனர். துணைவேந்தரின் தலைமையுரைக்குப் பிறகு டாக்டர் P. சௌரிராசன் நன்றி நவில, முற்பகல் நிகழ்ச்சி இனிமையாக நிறைவேறியது.

விருந்தினர் மாளிகையில் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கட்குத் துணைவேந்தர் விருந்தளித்தார். விருந்திற்குப் பிறகு துணைவேந்தார் பலர் முன்னிலையில், "டாக்டர் ரெட்டியார் மிகத் திறமையாகப் பணியாற்றி வருகின்றார். ஒல்லும் வகையெல்லாம் தமிழ்த் துறையின்

மேம்பாட்டுக்காக உழைக்கின்றார் 1977 இல் ஓய்வு பெறுகிறார். இவர் பதவிக் காலத்தை ஐந்தாண்டுகள், நீட்டிக்கலாமா என்று நினைக்கின்றேன்'' என்று திரு அன்பழகனிடம் கூறினார். அவருடைய நல்லெண்ணத்தை அங்கிருந்த அனைவரும் பாராட்டினர். டாக்டர் தாமோதரனின் மனம் மட்டிலும் சுருங்கியதை அனைவரும் கண்டனர்.

சரியாக 2-30க்கு பிற்பகல் நிகழ்ச்சிகள் தொடங்கின. டாக்டர் ம. ரா. போ. குருசாமி நிகழ்ச்சிக்குத்தலைமை தாங்கி அவருடைய ஆய்வுக்கட்டுரையைப் படித்தார். டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் P. சௌரிராஜன் ஆய்வுமாணவர் தேவசங்கீதம்[1] அவரவர்களின் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். டாக்டர் தண்டாயுதம் அனுப்பிய ஆய்வுக் கட்டுரையைத் தமிழ்ச் சங்கம் மாணவத் தலைவர் படித்தார், மாலை 5 மணிக்கு பிற்பகல் நிகழ்ச்சிகளும் இனிது நிறைவு பெற்றன.

டாக்டர். மு. வ.வின் மாணவர் K. A. இரகுநாயகம் மனைவியுடன் வந்து கருத்தரங்கைச் சிறப்பித்தார். அவருக்கு ஒரு கட்டுரைபடிக்கும் வாய்ப்பு கொடுக்காது போனதற்கு வருந்தினேன். மு. வ.வுக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்த நிதி தண்டப்படுகிற செய்தியைச் சொன்னேன். அவர் ஊர் திரும்பியவுடன் குடியாத்தம் திருமகள் நூற்பாலை நிறுவனத்திலிருந்து ரூ 500/- டிராப்ட் மூலம் பாரிநிலைய அதிபர் K.A. செல்லப்பனுக்கு(பொருளாளர்) அனுப்பிவைத்தார். வேறு மூவர்தலா 100/- வீதம் தந்திருந்தனர். திருவள்ளுவர் தங்கக் குழுக் கணக்கில் தூங்கிக் கொண்டிருந்த ரூ 2100/- க்கு

1. இவர் 1972 முதல் மு.வ. புதினங்கள் பற்றி டாக்டர் (பிஎச். டி) பட்டத்திற்கு ஆய்ந்து கொண்டிருந்தவர்.

பதிவாளர் பெயருக்கு டிராப்ட் வாங்கி ஆனந்தம் செட்டியார் எனக்கு அனுப்பிவைத்தார் (ஓய்வு பெற்று நான் சென்னைக்கு வந்த பிறகு). நான் அதைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்து விட்டேன். இப்பொழுது மு. வ. பேரிலுள்ள அறக்கட்டளையில் ரூ 7000/-சில்லறை பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அக்காலத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கு ரூ 15,000/- தரவேண்டும் என்பது விதி, மக்கள் ஒத்துழைக்காததால், நானும் ஓய்வு பெற்று விட்டதால், நிதி திரட்ட முடியவில்லை.

பாரிநிலைய அதிபரிடம் தந்த 3 செக்குகள் (100 வீதம்), ரூ 500/- க்குரிய டிராப்டுகளை பாங்கியில் போடாமல் வைத்திருந்தார். வைத்த இடம் தெரியவில்லை. தேடினார், தேடினார், தேடினார். அவை 9 ஆண்டுகள் கழித்து 1985-இல் கிடைத்தது. அவற்றின் தேதிகளை மாற்றி உயிர்பெறச் செய்து ரூ 800/- சேர்த்தேன். இந்தநிலையில் தமிழ்த்துறையின் வெள்ளி விழாவும் வந்தது. அதற்குள் இத்தொகையைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்து விட்டேன். ரூ 7000/-க்கு ஒன்பது ஆண்டு வட்டியும் சேரவே, தொகை ரூ 11000/- க்கு மேல் பெருகியிருந்தது இதன் வட்டியிலிருந்து பி.எச்.டி., எம். ஃபில் ஆய்வு மாணவருக்கு ரூ 100/- வீதம் அவர் ஆய்வு முடியும் வரை வழங்கலாம் என்று பல்கலைக்கழகத்திற்கு எழுதி 10 ஆண்டுகளாக என்னிடம் இருந்த கோப்பையும் தமிழ்த்துறையில் ஒப்படைத்து என்னுடைய பொறுப்பையும் முடித்துக் கொண்டேன்.

# 67. என் மணிவிழா

என் மணிவிழா நடைபெற்றவன்று சிந்தித்த அதே பாசுரத்தை இன்று (14-4-1990) — பதினான்கு ஆண்டுகள் கழித்து மணிவிழாவைப் பற்றிச் சிந்திக்கும் இன்று—சிந்திக்கின்றேன்.

'அகலகில்லேன்' இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகர்இல் புகதாய்! உலகம்மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகர்இல் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!

என்பது பாசுரம்; பிரபத்தி மார்க்கத்தைக் காட்டும் உயிரான பாசுரம் இது. 1976-ஆகஸ்டு-27 இல் நான் பிறந்து 60 ஆண்டு முடிந்து அறுபத்து ஒன்றாம் ஆண்டில் கால் வைக்கின்றேன்.

பிறந்தது ஆயில்ய நட்சத்திரம். அதே நட்சத்திரத்தில் 'சில்வாழ் பல்பிணிச்சிற்றுயிராகிய' என் (எங்கள்—என் மனைவி உட்பட) பிறந்த நாளைக் கொண்டாடுவதை விட 'பிறப்பிலி எம்பெருமான்' சீமன் நாராயணனின் திருக்கல்யாண உற்சவத்தைக் கண்டுகளிக்க எண்ணினேன். ஆகஸ்டு மாதம் (1976) ஆயில்ய நட்சத்திரத்தில் இந்த

1. திருவாய் 6.10:10

உற்சவம் நடைபெறுவதற்காக தேவஸ்தான அலுவலகத்தில் ரூ 1000/- செலுத்தி நாளை உறுதிசெய்தேன். உற்சவ நாளன்று நாங்கள் தங்குவதற்கு ஒரு குடிசையை (A. T. C. Cottage) ஒதுக்கீடு செய்து கொண்டேன். வேலூரிலிருந்து என் முதல் மகன் இராமலிங்கம் திருமணத்தால் ஏற்பட்ட சம்பந்திகள் வந்திருந்தனர். என் கல்லூரி வாழ்க்கை தொடங்கின நாள் முதல் (ஜூன்-1934) அன்று வரை நெருங்கிய நண்பராக—உடன்பிறவாச்சோதரராக—இருந்துவந்ததிரு.P. அரங்கசாமி ரெட்டியாரும் (வழக்குரைஞர்) வருகை புரிந்திருந்தார். திருக்கல்யாண உற்சவம் பகல் ஒரு மணிக்குத் தொடங்கி மாலை 3-30க்கு முடிந்தது, அன்று 25 திருக்கல்யாணங்கள் சேர்ந்தாற்போல் நடைபெற்றன. சம்பந்திகட்குப் புத்தாடைகள் வாங்கித் தரப்பெற்றன. நாங்களும் புத்தாடைகள் அணிந்து கொண்டோம். என் மூத்த மகன், மருமகள் இளைய மகன் இவர்களும் புத்தாடைகள் அணிந்து கொண்டனர்.

ஐம்பது பேர்கட் பரிமாறக் கூடிய பிரசாத வகைகள் நாங்கள் தங்கியிருக்கும் குடிலுக்கு வந்தன. நாங்கள் ஏழுபேர்தான். விரிவாக யாரையும் அழைக்கவில்லை. கல்லூரி வேலை நாள் ஆனதால் துறையிலிருந்து ஒருவரும் வரவில்லை; இரவு வீட்டிற்குதான் வந்தனர். பிரசாத வகைகளை உண்டனர். இங்ஙனம் எங்கள் மணி விழாவை எம்பெருமானின் திருக்கல்யாண உற்சவமாகக்கொண்டாடி அவன் திருவருளைப் பெற்றோம்.

நான் திருப்பதியில் பணியாற்றியபோது பல சிறப்பு மலர்கள், பெரியார்களின் மணிவிழா மலர்கள். பல இதழ்களின் வெள்ளி விழாமலர்கள், கருத்தரங்குகளில் படிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் சில தமிழ்ச் சங்க வெள்ளிவிழாமலர்கள் இவற்றில் வெளியான 10 கட்டுரைகளைத் தொகுத்து 'அறிவியல் தமிழ்' என்ற

தலைப்பில் என்மணிவிழா நினைவாக என் மக்கள் வெளியிட்டனர். என் அருமை மாணவர் திரு சிலம்பொலி சு. செல்லப்பன் (இப்போது தமிழ் வளர்ச்சி இயக்குநராகப் பணியாற்றி, ஓய்வு பெற்றபின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராக இருப்பவர்). ஓர் அணிந்துரையால், இந்நூலைச் சிறப்பித்தார். இதில், 'ஆசிரியரின் இந்த அரிய முயற்சியைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்குவரவேற்குமாக இவருடைய நூற்றாண்டு விழாவின் போதுஇத்தகைய தொரு நூலைத் தொகுத்து இவர்கையில் தந்து மகிழும் பேறு மாணாக்கனாகிய எனக்குக் கிட்ட வேண்டுமென்ற விழைவுடன் என் ஆசிரியப் பெருமகனார் பன்னெடுங் காலம் பயன் பெருக்கி வாழவேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்'' என்ற பகுதி எவர் மனத்தையும் கவரும். 'அறிவியல் தமிழ்' என்ற இந்த நூல் என்னுடைய இருபத்தொன்பதாவது (மார்ச்சு—1976) வெளியீடாகும். இதன் இரண்டாவது பதிப்பு (ஜூலை—1981) 'தமிழ் இலக்கியத்தில் தொலைக் காட்சி' என்ற புதிய தொரு கட்டுரையுடன் என் 64-வது அகவை நினைவு வெளியீடாக வெளிவந்தது.

குமிழி—224

## 68. 'தொலை உலகச் செலவு' வெளியீடு

விபுவான (எங்கும் நிறைந்த) ஆண்டவன் ஞானசொரூப முடையவன் என்றும், அங்ஙனமே அணுவளவான ஆன்மாவும் ஞானவடிவுடையது என்றும் வேதாந்த நூல்கள் விரித்துப் பேசும். ஆண்டவன் வினைகட்கு அப்பாற்பட்டவன்; ஆன்மாவோ வினைகளினால் கட்டுண்டு கிடப்பது. ஞானவடிவான ஆன்மாவிற்கும் ஒரு ஞானம் உண்டு. அது **'தர்மபூத ஞானம்'** எனப்படும்.

ஆண்டவன் அருள் இருப்பின் தியானத்தினால் மனம் ஒன்றித் தர்மபூத ஞானம் மலர்ந்து ஆன்மா ஆண்டவனையே காணும் ஆற்றலைப் பெறும். ஞானிகள் இந்த ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்கள் கால எல்லையையும் (Time) கடந்து நடந்ததையும் நடக்கப் போவதையும் முற்கூறும் ஆற்றல் பெற்றவர்கள். வசிட்டர், வாமதேவர், யக்ஞய வால்க்கியர் போன்ற உபநிடத முனிவர்கள் இந்த ஞானியர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்; அங்ஙனமே விஞ்ஞானிகள் (அறிவியலறிஞர்கள்) மனம் ஒன்றி ஆய்வுகளால் இடத்தைக் (Space) கடந்து பல உண்மைகளைக் காணவல்லவர்கள். அதனால்தான் தாம் போகாமலேயே மதிமண்டலம், செவ்வாய் மண்டலம் போன்ற இடங்களின் தன்மைகளை நன்கு அறிந்து அவர்களால் பயணங்களை மேற்கொள்ள முடிகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆளுள்ள பயணங்களை மேற்கொண்டு அம்புலிக்குச் சென்று மீண்டனர். அண்மையில் செவ்வாய்க்கு ஆளில்லாப் பயணங்களை மேற்கொண்டு வெற்றி கண்டனர். செவ்வாய்க் கோளில் உயிர் உண்டா என்ற சோதனையும் நடத்தி வருகின்றனர்.

இங்ஙனமே, கவிஞர்களும் சில சமயம் தம்மை அறியாமல் கற்பனையினால் தொலைவிலுள்ள உலகங்களையே மானசீகமாகக் கண்டுகளிக்கின்றனர், பாரதியாரும்,

> பூமிக் கெனைய னுப்பினான்—அந்தப்
> புதமண் டலத்திலென் தம்பி களுண்டு[1]

என்று புதன் மண்டலத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாடியுள்ளார் போலும். இன்னும் வருங்காலத்தில் மனித மனம் எல்லாக் கோள்கட்கும் பயணம் செய்யவும் அங்குள்ள நிலைமைகளை ஆராயவும் முயன்று வரும் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை. இங்ஙனம் மனித மனம் மேற்

1. கண்ணன் பாட்டு—கண்ணன்—என் தந்தை அடி (1—2)

கொள்ளும் செயல்களையெல்லாம் பொதுமக்களும் பள்ளிச் சிறார்களும் அப்பொழுதுக் கப்பொழுது அறிந்து கொள்ள வாய்ப்பளிப்பது அறிஞர்களின் கடமையாகும். எளியமுறையில் கவர்ச்சியூட்டும் வண்ணம் சிறிய சிறிய அறிவியல் நூல்களை எழுதி அவர்கள் கைக்குக் கிட்டச் செய்தல் வேண்டும். பல நுட்பமான அறிவியல் உண்மைகளையும் எளிய முறையில் விளக்குவனவாக நூல்கள் அமைதல் வேண்டும். இந்த முறையில் இந்த வரிசையில் வெளிவரும் நூல்கள் பெரும் பணியாற்றும் என்ற நம்பிக்கையுடன் இம்முயற்சியில் ஈடுபடலானேன்.

1970—இல் அப்போலோ—11 பயணம் முற்றுப் பெற்ற சிலநாட்களில் 'அம்புலிப் பயணம்'[2] என்ற நூலுடன் இந்நூல் இரட்டைக் குழந்தை போல் பிறந்தது. மூன்றாண்டுகள் இறகுகள் முளைக்காத சிறுகுஞ்சு போல் கிடந்து 'அம்புலிப் பயணம்' 1973—இல் இறகுகள் முளைத்துப் பறக்கத் தொடங்கியது ஆனால், இந்த நூல் செவ்வாய்க் கோள் ஆய்வு வெற்றியை ஏந்திக் கொண்டு பறக்க வேண்டும் என்று காத்துக் கிடந்தது போலும்! அந்த வெற்றியின் எக்களிப்பினால், இதற்கும் இறகுகள் முளைத்தன; தமிழ்கூறு நல்லுலகில் பறக்கவும் தொடங்கியது. இனி, இந்த இரண்டு நூல்களும் தமிழ் கூறு நல்லுலகெங்கனும் இராமஇலட்சுமணர்கள்போல் இணைந்தே பறந்து செல்லும் என்ற என் நம்பிக்கையை உண்மையாக்கி வருவதைக் கண்டு மகிழ்கின்றேன்.

எந்த நூலை எழுதினாலும் அதற்கு அணிந்துரை ஒருவரிடமிருந்து பெறுவதையும், பண்பினாலும் பணியினாலும் பல்லோர் உள்ளத்தையும் கவர்ந்த பெரியார் ஒருவருக்கு அன்புப் படையலாக்கு வதையும் ஒரு மரபாகப் பின் பற்றிவருவதை வழக்கமாகக் கெண்டுள்ளேன். ஆனால்

2. இது திசம்பர்—1973இல் என்னுடைய 26 வது நூலாக வெளி வந்தது (குமிழி—213) காண்க.

சைவசித்தாந்தக் கழகத்தின் மூலம் சிறுவர்கட்கும் வயது வந்தோர்க்கும் என நினைத்து வெளியிட்ட பொது விருப்பார்ந்த நூல்கள் ஏழுக்கும் அணிந்துரை பெறும் மரபைக்கை விட்டேன். அறிவியல் பயிற்றும் முறை. கவிதை பயிற்றும் முறை என்ற கற்பிக்கும் முறை இரண்டு நூல்கட்கும், மானிட உடல், யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல்நூல், வேமனர், சி.ஆர். ரெட்டி, குரஜாட என்ற ஐந்து தமிழாக்கம் நூல்கட்கும் அணிந்துரை யாரிடமும் பெறவில்லை; யாருக்கும் அன்புப் படையலாக்கவும் இல்லை. ஏனைய நூல்கள் யாவும் இரண்டும் பெற்று வெளிவந்துள்ளன.

'தொலைவுலகச் செலவு' என்ற நூலை திரு வேங்கடவன் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் V.C. வாமனராவுக்கு (ஓய்வு பெற்ற ஏழாண்டு கட்குப் பிறகு),

கலைமகள் இதயப் பெற்றியை உணர்ந்தோன்;
கருத்தினில் ஒளியினை வளர்ப்போன்;
நிலையினில் திரியாப் பண்பினில் ஒளிர்வோன்;
நேயமே பொருளெனக் கொண்டோன்;
மலைவிளக் காகும் பல்கலைக் கழக
மாண்பினுக் குறுதுணை யானோன்;
தலைமைசால் புகழ்சேர் வாமன ராவின்
சால்பினுக் குரியதிந் நூலே.

என்ற பாடலின் மூலம் அன்புப் படையலாக்கிமகிழ்ந்தேன். இஃது என்னுடைய முப்பதாவது (செப்டம்பர்—1976) நூலாக வெளிவந்தது.

இந்த நூலில் இவரைப் பற்றிக் கூறிய குறிப்பு இது: "திருவேங்கடவன் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் V.C. வாமன்ராவ் அவர்கள் கல்வித் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். கல்வித்துறையில்

பல மட்டங்களில் பல்வேறு பொறுப்புள்ள பதவிகளி லிருந்து பணியாற்றி ஆந்திர மாநிலக் கல்வித்துறை இயக்குநர் பதவியை வகித்தவர். இதிலும் பல்லாண்டுகள் திறம்படப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர்த் தானாக இவரை நாடி வந்த இப்பல்கலைக் கழக துணைவேந்தர் பதவியை ஐந்தாண்டுக் காலம் வகித்து மிகத் திறம்படக் கண்காணித்து எல்லோர் மனத்தையும் கவர்ந்தவர். குறிப்பாக மாணாக்கர்களிடம் செல்வாக்குடன் திகழ்ந் தவர். எவர் மனத்தையும் புண்படச் செய்யாப் பொன்னான உள்ளத்தைக் கொண்டவராதலால் இவர் புகழுடன் திகழ்ந்ததில் வியப்பொன்றும் இல்லை. இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எப்படியோ எனக்கு ஏற்பட்டது இறைவன் திருவுள்ளமாகும். 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற வாய்மொழியின் உண்மையை இவரிடம் கண்டு மகிழ்ந்தேன். இவர்மூலம் பல வாழ்க்கை உண்மைகளையும் ஆட்சி முறை நுட்பங்களையும் அறியும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அவற்றிற்கெல்லாம் அறிகுறியாக இச்சிறு நூலை இவருக்குப் படைத்து மகிழ்வது பொருத்தமாகும் என்று கருதுகின்றேன்.''

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் என்னுடைய ரிட் (உரிமை) வழக்கு சம்பந்தமாக நான் ஐதரபாத்தில் இருக்க நேரிட்டபோது இவரைச் சந்திக்க ஆர்வங் கொண்டேன். ஏற்கெனவே இவர் முகவரி 3-5-788, ஐதரபாத்—29 என்பது தெரிந்திருந்தாலும் முன்பின் அறியாத ஊரில் இதைக் கண்டுபிடிப்பது பகீரதப் பிரயத்தனமாக இருந்தது. 'பழைய எம்.எல்.ஏ. உணவு விடுதி' பக்கம் இருக்கிறதாகச் சொன்னதை நினைவில் வைத்துக் கொண்டு கண்டுபிடித்து விட்டேன்.

என்னைக் கண்டதும் மிகவும் அன்பாக வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தார். எங்கோ வெளியில் சென்று வீடு திரும்பிய இல்லக் கிழத்தியாருக்கும் என்னை அறிமுகப்

படுத்தினார். ''திருப்பதியில் நான் இருந்த காலத்தை எல்லோரும் மறந்து விட்ட நிலையில் இந்தப் பைத்தியக் காரப் பேராசிரியர் இன்னும் நினைவு வைத்துக் கொண்டு இருக்கின்றார். இதற்கு நிரந்தர வடிவம் கொடுக்கும் சின்னமாக இந்த நூலை (நூலை அவருக்கு எடுத்துக் காட்டி) எனக்கு அன்புப் படையலாக்கியுள்ளார்'' என்று கூறி மகிழ்ந்தார். தேநீர் வழங்கச் செய்தார். பழைய நினைவுகள் திரைக்காட்சிப் படங்கள்போல் மனத்தில் தோன்றிய வண்ணம் பிரியாவிடை பெற்றுத் திரும்பினேன்.

குமிழி—225

## 69. தமிழ்த் துறையில் என் மணிவிழா

உயர் நிலைப் பள்ளியில் என்னைச் சேர்த்த தொடக்க நிலைப் பள்ளி ஆசிரியர் சேர்க்கும்போது என் பிறந்த நாளை 7-9-1917 என்று தந்து விட்டதால் இந்தத் தேதிப்படி என் மணிவிழா ஆண்டு 1977 ஆக அமைந்தது (சரியானது 27-8-1916) இறைவன் திருவுள்ளப்படி நான் ஓய்வு பெற்ற ஆண்டும் இதுவேயாக அமைந்தது. இந்த ஆண்டில் என் மணிவிழாவைத் துறையில் கொண்டாட வேண்டுமென்று டாக்டர் செளரிராசனும் (துணைப் பேராசிரியர்) என் ஆய்வு மாணவராக இருந்து டாக்டர் பட்டம் பெற்றவர்) டாக்டர் தேவசங்கீதம் (விரிவுரை யாளர்—என் ஆய்வு மாணவராக இருந்து டாக்டர் பட்டம் பெற்றவர்), திரு N.கடிகாசலம் (என் ஆய்வு மாணவர்) வேறு ஆய்வு மாணவர்களும் நினைத்துச் செயற்பட்டனர். ஒரு மணிவிழா மலரும் வெளியிடக் கருதினர்.

சிறிய மணிவிழாக் குழு ஒன்று அமைத்துக் கொண்டு தனிப்பட்டவர்கள் பலருக்கும் பல நிறுவனங்கட்கும் எழுதி விளம்பரங்கள் பெற்றனர். என் அரிய நண்பர் திரு

P. ஆதிமூலம் M.A (ஆசிரியர், பொய்யா மொழி, கௌடிய மடம் சாலை, இராயப் பேட்டை, சென்னை-600014) மலரை அச்சுவடிவம் தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இந்த விழாவைக் குறித்து தமிழகத்திலுள்ள மடாதிபதிகள் பல்கலைக் கழக மானியக்குழு ஆணையம், துணைவேந்தர்கள், பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள், என்னுடைய ஆசிரியர்கள், மேல்நிலை நீதி மன்றம் (தில்லி), சென்னை உயர்நீதி மன்ற நீதி பதிகள், அரசியல் தலைவர்கள் என்னுடன் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தோழ ஆசிரியர்கள், என்னுடைய நண்பர்கள், திரு வேங்கடம் பல்கலைக் கழகப் பேராசிரியர் கள், பிற பல்கலைக் கழகங்கள் கல்லூரிகள் இவற்றிலுள்ள பேராசிரியர்கள், என்னுடைய பழைய மாணவர்கள், என்னுடைய இன்றைய மாணவர்கள் இவர்கட்கெல்லாம் எழுதி ஆசீச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள் பெற்று இவற்றை என் மணிவிழா மலராக ஆக்கினர். பொய்யா மொழி ஆசிரியர் திரு P. ஆதிமூலத்தால் மலர் வடிவம் அருமையாக அமைந்தது. என்னிடம் இருந்த ஒளிப்படங் களையெல்லாம் மலரில் சேர்த்து மலரைப் பொலிவு பெறச் செய்தார்.

இந்த விழாவிற்கு தலைமை தாங்குவதற்காகச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் எஸ். சூரிய மூர்த்தி (கல்லூரியில் ஒரு சாலை மாணாக்கர்) ஒப்புக் கொண்டார். என்னுடைய அருமை மாணவர் ஜார்ஜ் ஸ்டீபன் (எம்ஃபில் ஆய்வு மாணவர்), துறைக்கு அளித்த என்னுடைய ஒளிப்படத்தைத் திறந்து வைக்க என் கல்லூரி வாழ்க்கை முதல் ஒரு சாலை மாணவராக இருந்து 40 ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய திருச்சி வழக்குரைஞர் திரு. P. அரங்கசாமி ரெட்டியார் ஒப்புக் கொண்டார்; இதனைத் துறைக்காகப் பெற்றுக் கொள்ள டாக்டர் கு. தாமோதரன் ஒப்புக்கொண்டார். (பின்னர் பின் வாங்கியதால் தமிழ்ச்சங்க மாணவத் தலைவர்

N. கிருபானந்தம் பெற்றார்). ஏதோ காரணத்தால் ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி வர முடியாமற் போனதால் திரு அனந்த சயனம் அய்யங்கார் (முன்னாள் பீகார் மாநில ஆளுநர்) அவர்கள் (திருப்பதி வாழ்க்கையில் தந்தையாக இருந்து என்னை வாழ்த்திக் கொண்டிருந்தவர்) தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அன்று மாலை (24-9-77) என்னுடைய செலவில் கூடியிருந்த சுமார் 150 பேருக்கு ஒரு சிறிய சிற்றுண்டி விருந்து அளித்தேன். மேடையில் ஒரு சிலர் என்னை வாழ்த்தினர்; கூட்டத்திலுள்ள அனைவரும் என்னைப் பேசாத பேச்சாகி வாழ்த்தியிருக்க வேண்டும், இத்தனை பேர்களின் வாழ்த்தினாலும் இறைவன் திருவருள் பலத்தாலும் இன்றும் (ஏப்பிரல்-1990) நான் உடல்நலத்துடனும் இருந்துகொண்டு தமிழ்ப்பணியும் தெய்வப்பணியும் ஆற்ற முடிகின்றது, என் ஆசையெல்லாம் பாரதியாரின் ஆசைதான்.

மனத்திற் சலன மில்லாமல்
 மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
 நிலைவந் திடநீ செயல்வேண்டும்
கனக்கும் செல்வம், நூறுவயது:
 இவையும் தரநீ கடவாயே[1]

என்று அவர் வேண்டுவதைப்போல் நானும் கணபதியை வேண்டுகின்றேன்.

இந்தக் குமிழியில் மணிவிழா மலரில் வாழ்த்திய சில நெஞ்சங்களைக் காட்டுவேன். எல்லா நெஞ்சங்களும் அன்புடையவைதாம். கவிதை வடிவில் உள்ள சில கற்கண்டு போல் இனிப்பதால் அவற்றை மட்டிலும் ஈண்டுக் காட்டுவேன்.

---

1. பா. க: தோத்திரப் பாடல்கள். விநாயகர் நான்மணிமாலை—7.

பேராசிரியர் க. வெள்ளைவாரணன் வாழ்த்து (5 பாடல்களில் 2):

உழைப்பினால் உயர்வதுவே உரவோர்தம்
 செயலெனவே உலகு போற்றப்
பிழைப்பினா லன்றியே பேருழைப்பால்
 தமிழ்த்துறையின் பெற்றி நாட்டி
அழைப்பினால் நல்லறிஞர் பேரவையைத்
 திருப்பதியில் அமைத்து நன்னூல்
இழைப்பினால் டாக்டர்என இயல்பட்டம்
 பெற்றுமகிழ் இனிய நண்பர்.

சுப்புரெட்டி யாரெனவே தூயதமிழ்
 அறிஞரெல்லாம் போற்ற நாளும்
ஒப்பிலா தமிழ்ப்பணிசெய் திருவாளர்
 உழைப்பினுக்கோர் உருவ மாக
இப்புவியோர் பாராட்ட விளங்குபே
 ராசிரியர் இமையா முக்கண்
அப்பன்அரு ளால்மக்கள் சுற்றமுடன்
 நீடூழி அமர்ந்து வாழி.[2]

திரு. பெ. இராமானுசரெட்டியார் (தேவானூர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்) வாழ்த்து (9 பாடல்களில் 3):

தன்னையொரு தமிழ்த்தும்பி என்றே அன்று
 சாற்றியஎம் சுப்புஎனும் தகைமை யாளன்
சொன்னதிலோர் சுவைகண்டேன் பேதைத் தும்பி
 துழாவிபல மலர்தேடித் தேனைச் சேர்த்து
என்னே!தான் துய்க்காது பறிகொ டுக்கும்
 ஏழைப்போல் அன்றியிவர் தாமும் துய்த்து
மன்னுலகில் என்போல்வார் தெவிட்டா துண்ண
 வழங்கிவரும் வளமைக்கோர் வரம்பும் உண்டோ?

2. மணிவிழாமலர்—பக். 46.

தன்னிலைமை தானறியாத் தன்மை யாளன்
சாதிவெறி சமயவெறி சற்று மில்லான்
துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்
தூயதிருக் கச்சிநகர் அண்ணங் கரராம்
மன்னியவாச் சாரியரின் மலர்த்தாள் போற்றி
வைணவத்தின் வளமனைத்தும் உணரப்
பெற்றோன்.
பன்னியதை ஏட்டினிலே பரவச் செய்தான்
பலவுரைத்தென்? அவன்திறனைப் பகரல்
ஆற்றேன்.

அன்பும் பண்பும் வளர்ந்திடவே
அறமும் அறிவும் தழைத்திடவே
துன்பும் பயமும் தொலைந்திடவே
தூயோன் எமது சுப்புஎனும்
அன்பன் என்றும் இன்றேபோல்
அண்ணல் சீதா பதியடியை
மன்பே ருலகில் வாழவருள்
என்றே வாழ்த்தி வணங்குவனே.[3]

'கவிஞர்கோ' 'வித்துவான் பூ. அமிர்தலிங்கம் எம். ஏ. (தமிழ்த் துணைப்பேராசிரியர், அழகப்பா கல்லூரி) அவர்களின் வாழ்த்து (7 பாடல்களில் 5):

புன்முறுவல் பூத்தமுகம்
பொழுதெல்லாம் சோர்வின்றிப்
பன்னூல்கள் எழுதியகை
படர்ந்துவரும் அறிவியலின
தன்மையெலாம் தாய்மொழியில்
தரவிழையும் தமிழ்நெஞ்சம்
என்னுளத்தில் மகிழ்வூட்டும்
இனியவனை வாழ்த்துகின்றேன்

3. மணிவிழா மலர்—பக் 15-26.

பழந்தோழர் தமைக்கண்டு
பாசமுடன் அரவணைத்துத்
தொழுதகைய பெரியாரைத்
துணையாக்கிப் பத்தியினால்
கொழுந்தனைய இருமகற்கும்
குலராமன் பெயரமைத்துச்
செந்தமிழைத் திறனாயும்
சீர்த்தியினை வாழ்த்துகின்றேன்.

நண்பர்களின் நடுவினிலே
நகைத்துமகிழ் பேறுடையான்
எண்ணியதை முடிப்பதிலே
ஏறனைய வீறுடையான்
பண்ணொழுகும் ஆழ்வார்தம்
பாசுரத்தின் ஆறுடையான்
புண்ணியத்தின் கூறுடையான்
புகழோங்க வாழ்த்துகின்றேன்.

கற்பிக்கும் முறைகண்ட
கணக்காயன் வாழியரோ!
அற்புதமாம் அணிநூலுக்
கரசாங்கப் பரிசுபெறும்
விற்பன்னன் வாழியரோ!
வேங்கடவன் கடிதத்தால்
உற்பவிக்கும் கருக்காக்க
உரைவகுத்தோன் வாழியரோ!

மணிவிழாக் கொண்டாடும்
மாண்சுப்பு ரெட்டியவர்
துணையாக மணமக்கள்
சுற்றமெலாம் பாராட்ட
இணையில்லாப் புகழெய்தி
'இன்னுமொரு நூற்றாண்டு'
மணிவண்ணன் தண்ணருளால்
மங்கலமாய் வாழியரோ![4]

திரு எஸ். கே. இராமராசன் (கம்பராமன்) அனுப்பிய வாழ்த்துச்செய்தி (6 பாடல்கள்)

செந்தமிழ்த்தாய் பல்லாண்டு கனிந்து செய்த
திருத்தவத்தின் பயனாய புனிதக் கோயில்
நந்தலிலாக் கோபுரங்கள் தெய்வம் யாவும்
நலிவெய்தா தன்புடனே பாது காக்கச்
சுந்தரமார் தென்னகத்தின் மகிழ்வோ குற்ற
தூயதனிப் பண்டகுல விளக்கம் போல
வந்துதித்த சான்றோனே! விஞ்ஞா னத்தின்
வளங்கண்டு பொலிசுப்பு நம்பி வாழ்க!

வண்ணமுறு கோட்டாத்தூர் தன்னில் தோன்றி
வளனார்தம் கல்லூரி சிறக்கக் கற்றுப்
புண்ணியமார் துறைசைநகர்ப் பள்ளி யோங்கப்
பொலிவுடைய தலைமையினை விரும்பி யேற்றுத்
தண்ணளியார் காரையினில் பயிற்சிக் கல்வி
தனைவளர்த்து வேங்கடத்தில் அறிஞர் போற்ற
நண்ணுகலைத் தமிழ்த்துறைக்குத் தலை வனாகி
நலமுற்ற முயற்சிக்குப் பொலிவு தந்தாய்

காலந்தான் கண்போன்ற தென்றும், உற்ற
கடமைதான் பொன்போன்ற தென்றும், மிக்க
சீலந்தான் பண்போன்ற தென்றும், கண்ட
திருவாள! நின்னுடைய முயற்சி யாவும்
ஞாலந்தான் இலக்கியமாய்க் கண்டு துய்க்க
நாடோறும் பல்கலைகள் ஆய்ந்து தேர்ந்தாய்!
பாலந்தான் நின்னூல்கள் அறியா மைக்குப்
பலியாகா துலகமெலாம் அதனால் உய்யும்

கற்றவர்க்குப் புலனாகாக் காப்பி யத்தைக்
கலைமெருகு கொடுத்தினிதே யறியச் செய்தாய்
பொற்றொடியார் தமைமணக்கும் காளைகயர்க்குப்
பொலிவுடையில் லறநெறியைப் புரியச் செய்தாய்

4. மணிவிழாமலர்—பக். 64.

கொற்றமுறும் அணுநுட்பம் இனிதே யாய்ந்து
குளிர்தமிழிற் பகர்ந்துள்ளம் தெளியச் செய்தாய்
உற்றகலை திங்கட்குப் பயணம் செய்த
ஒளிநெறியை உளந்தோறும் விரியச்செய்தாய்

மலருற்ற வாசம்போல் விழிக்கெட் டாமல்
மனத்தினிலே உணர்வளிக்கும் கவிதை தன்னை
நலமுற்ற சான்றோர்கள் வியப்புக் கொள்ள
நயமுற்ற பெருநூலில் இனிதே யாய்ந்து
வலமுற்ற சான்றோர்கள் நாளும் நாளும்
வாழியநம் சுப்புநம்பி என்று போற்றப்
புலமுற்ற உயர்வாழ்க்கைப் பெற்றாய்! பெற்றாய்!
பொலிவுடைய இமயம்போல் கீர்த்தி யுற்றாய்

உன்னுகின்ற போதெல்லாம் இன்பம் நல்கும்
ஒப்பற்ற வாய்மொழியை இனிதே யாய்ந்து
நன்னயஞ்சால் நம்பிள்ளை முதலாம் சான்றோர்
நல்வழியில் இனிதேகிக் காரி மாறன்
பன்னியதத் துவம்கண்டு டாக்டர் என்று
பார்புகழச் சிறப்புற்றாய்! சுப்பு நம்பி!
இன்னும்பல் நூல்யாத்து வாழ்க! வாழ்க!
ஏற்றமுடன் பல்லூழி வாழ்க! வாழ்க![5]

திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார் (வி. பூதூர் அஞ்சல், வழி—வளவனூர், தென்ஆர்க்காடு மாவட்டம்) வாழ்த்து (3 பாடல்கள்):

உழைப்பதனால் மிக உயர்ந்தோன்; யார்க்கும் நல்லோன்;
உண்மையுணர் நன்னெஞ்சன்; உணர்ச்சி மிக்கான்;
அழைப்புவிடு மாநிலங்கள் பலவும் சென்றோன்;
ஆழ்வார்கள் கருத்துணர்ந்தோன்: அயர்வே இல்லான்;

5. மணிவிழா மலர்—பக் 14—15

தழைப்பவரு சமயவேற் றுமைக்கா ணாதான்;
 தண்டமிழும் ஆங்கிலமும் தேர்ந்த ஞானி;
மழைப்பருவம் கண்டமயில் இனம்போல் அன்பர்
 மகிழவரு சுப்புரெட்டி என்பான் மன்னோ.

இலக்கியமா? இலக்கணமா? இயல்விஞ்ஞான
 எழிற்கலையா? உளநூலா? எதிலும் வல்லான்.
கலக்கமிலா தாராய்ச்சி முடிவு காட்டிக்
 களிப்புறுவோன்; அறிஞரெலாம் கருத வாழ்வோன்;
புலக்கண்உற உரைகாண்பான்; நூலும் காண்பான்
 போதகா சிரியனுமாய்ப் போந்தான் கண்டீர்;
தலக்கணிவன் தனக்குநிகர் தானாய் நின்ற
 சான்றோன்காண் சுப்புரெட்டி என்பான் மன்னோ.

அறிவுடைநூல் பலதமிழில் தந்த நந்தம்
 அறிஞர்பிரான் சுப்புரெட்டி யாரென்றுற்றோன்;
இறையருளால் அறுபதாண் டெய்தி நின்ற
 இவன்திருவேங் கடத்தெந்தை யருளால் இன்னம்
துறைபலவா விரிந்த பன்னூல் தோய்ந்து தோய்ந்து
 சொல்லமுதம் நமக்களிக்க சிறுவர் தம்மோ
டுறவினரும் அயலவரும் போற்ற வாழ்க
 உறற்கரிய வளம்பலவும் உறுக மாதோ.

புலவர் த. பெரியாண்டவன் எம். ஏ., (மொழி பெயர்ப்புத்துறை தனி அலுவலர், தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை-600108) வாழ்த்தியது (10 பாடல்களில் 8 பாடல்கள்):

சொல்லிலே இனிமை! தூய
 நெஞ்சிலே தமிழ்உ ணர்ச்சி
அல்லுநன் பகலும் நல்ல
 ஆய்வுகள் செய்த வண்ணம்

---

6. மணிவிழா மலர்—பக் 24—25

பல்துறை வாயி லாகப்
 பைந்தமிழ்த் தொண்டு செய்தல்!
தொல்லறி வாளர் பெற்றத்
 திறம்பெற்றுச் சிறந்தார் சுப்பு

கன்னலின் இனிமை; தீந்தேன்
 கவின்சுவை இனிமை; பக்தி
முன்னிய ஆழ்வார் பாட்டில்
 முழுநாளும் தோய்ந்து நிற்பார்
தன்னிகர் இன்றி யாய்ந்தே
 தமிழ்ப்பணி செயமுன் நிற்பார்;
மன்னவர் இன்றி ருந்தால்
 மாண்புகள் இவர்க்குச் செய்வார்!

வெயிலது வெம்மை தன்னை
 விளைக்கின்ற வேங்க டத்தில்
புயலென அருள்நீர் பாய்ச்சிப்
 புரிகின்றான் வேங்க டத்தான்!
புயலருள் மழைநீர் கொண்டே
 புதுத்தமிழ்ப் பயிர்வி ளைக்கும்
வியன்மிகு ஆற்றல் கொண்டார்
 வீறுமாக் குயர்ந்த சுப்பு!

உளவியல் நூல்கள் செய்தார்
 உயர்விண்ணின் பயணம் சொன்னார்
அளந்திட இயலா துள்ள
 அணுநுட்ப விளக்கம் சொன்னார்
தெளிந்திட அறிவு நூல்கள்
 துறைதோறும் குவித்துத் தந்தார்
களிதரும் கவிநூல் கற்றுத்
 திறனாய்வு நூல்கள் தந்தார்!

ஆழ்வார்கள் பாடல் தன்னில்
ஆழ்ந்தின்பம் துய்த்த தாலே
சூழ்ந்துள தொல்லை தம்மை
சுடர்முகத் தாலே வெல்வர்!
வீழ்கின்ற நாட்டை மீட்டும்
வீறுடன் திகழச் செய்ய
சூழ்ந்தநற் கல்வி யாலே
அணிமணி தமிழ்க்குத் தந்தார்!

ஆங்கில மொழிவ ளப்பம்
அருந்தமிழ் பெறுதல் வேண்டும்
தூங்காத அறிஞரா லே
துறைதோறும் நூல்கள் வேண்டும்!
ஏங்கிடும் தமிழ்த்தாய் ஏக்கம்
என்றென்றும் நீங்க எண்ணிப்
பாங்குடன் உழைத்துத் தொண்டால்
பன்னூல்கள் படைத்தார் வாழி!

பைந்தமிழ்ப் பின்னால் சென்ற
பசுங்கொண்டல் நெடிய மாலே!
சுந்தரன் தமிழ்ப்பாட் டுக்குச்
சொக்கிய சிவனே! அன்று
செந்தூரில் குருப ரற்குச்
செந்நாவை வளைத்த வேலா!
செந்தமிழ் பாடல் கேட்டுச்
முத்தாரம் அளித்த கண்ண!

பைந்தமிழ்ப் பாட்டுக் காக
பரிவுடன் ஏக்கங் கொண்டு
முந்தியே வந்த நல்ல
முழுமுதற் கடவு ளர்காள்!

செந்தமிழ்த் தொண்டர் சுப்பு
    ரெட்டியின் பணிசி றக்க
வந்துபல் லாண்டு தந்து
    வாழ்த்துக! வாழ்க! வாழ்க![7]

டாக்டர் பு. மு. சாந்தமூர்த்தி, (தமிழ்ப் பேராசிரியர் துறைத்தலைவர் சௌராட்டிரக் கல்லூரி, மதுரை, (என் ஆய்வுமாணவர்) வாழ்த்து:

வேங்கடவன் திருவருளால் வினைகள் வென்று
    வீறுதமிழ் நூலார்ந்த வெற்றிச் செல்வர்
ஓங்குபுகழ் தமிழாய்வில் உயர்ந்த செம்மல்
    உள்ளத்தின் நற்பண்பை உயர்த்தும் ஆசான்
பாங்கறிந்து செயலாற்றிப் பழகும் நெஞ்சர்
    பல்லாண்டு வாழ்கஎனப் பாடும் பாட்டில்
தாங்குமுளம் தாம்பெற்ற தமிழர் வாழ்க
    தமிழ்சுப்பு ரெட்டியார்தம் தொண்டு வாழ்க!

தொண்டுள்ளம் மறவாமல் துங்கும் பாதை
    தூயமனச் செம்மலெனத் தோன்றும் வாழ்க்கை
கண்டுயர்ந்த ஆராய்ச்சிக் களத்தின் வேந்தர்
    கனித்தமிழின் சாறளிக்கும் குறிஞ்சிக் கோமான்
பண்பிற்கோர் காட்டாகப் பழகும் பண்பர்
    பயன்கூறி ஊக்குவிக்கும் ஆய்வுக் கண்ணர்
தண்டமிழின் இனிமையெனத் தழைத்து வாழ்க!
    தனிப்பார்வைப் பேராசான் நெஞ்சம் வாழ்க!

நீக்கமற நிறைகின்ற இறையைக் காட்டும்
    நிலையுயர்ந்த வாழ்வுரைக்கும் எங்கள் ஆசான்
நோக்கத்தால் இமயமலை வடிவம் காண்பார்
    நுண்ணறிவால் காவிரியின் வளமை காண்பார்

7. மணிவிழாமலர்—பக் 29.

ஆக்கத்தால் பாரதியின் வண்ணம் காண்பார்
அன்புரையால் திரு. வி. க. அகமே காண்பார்
காக்கின்ற இறையருளில் முன்னோர் காண்பார்
கனிந்தசுப்பு ரெட்டியார்தாம் இவையாய் வாழ்க!

கொஞ்சுதமிழ்ப் பேராசான் வாழ்க்கைச் செம்மை
கூறுகின்ற வாழ்வொன்றே கல்வி என்போம்;
நெஞ்சுவளர் அறிவாற்றல் நீர்மைச் செம்மை
நேரிருக்கும் வழியொன்றே கடமை என்போம்;
விஞ்சுபுகழ் வேங்கடவன் விருப்பில் வாழும்
வெற்றிநல வினையொன்றே உரிமை என்போம்;
தஞ்சமென வேங்கடவன் திருத்தாள் சார்ந்து
தாமுரைக்கும் மொழியொன்றே
பாடம் என்போம்.

சொல்லார்ந்த நாவன்மைச் செம்மை தந்து
சுவையார்ந்த அறிவியலின் வளங்கள் தந்து
நல்லாரின் நடுவினிலே உயர்ந்த நல்லார்
நாடுகின்ற ஏற்றத்தில் நன்மை தந்து
வில்லார்ந்த வேங்கடவன் மொழிகள் தந்து
விருப்பத்தில் தமிழ்க்காதல் இறைமை தந்தார்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் போதில்
பரமனவன் திருவருளே வாழ்த்து மன்றோ

இனித்தமுகம் எழுந்துவரும் அன்புப் பார்வை
இறையோர்க்குத் துணையாக இசைந்த மாட்சி
பனித்தமலர் மென்மைக்குள் தோய்ந்த காட்சி
பரம்பொருளின் நலமாய்ந்த ஆழ்வார் பாடல்
கனிந்தவளம் பாராட்டும் கடமைச் சொற்கள்
கவிதைவளம் துய்க்கின்ற காதல் மேன்மை
தனித்தமொழிச் சீராளர் போற்றும் மும்மைத்
தமிழ்சுப்பு ரெட்டியார்தம் அன்பு வாழ்க!

அணிசிறக்கும் வேங்கடத்தான் அருளின் பார்வை
அழகெல்லாம் பருகுகுன்ற தமிழின் ஆசான்
மணித்தமிழின் சாலையிலே புதுமை செய்தார்
மானுடத்தின் வெற்றிகூறும் அறிவுச் செல்வம்
தணியாத அன்பாலே தழைக்கச் செய்தார்
தாமுணர்ந்த அறிவியலைத் தமிழுக் கீந்தார்
மணிவிழாவின் திருநாளில் யாவும் வாழ்த்தும்
மங்கலங்கள் என்றென்றும் வளர்க, வாழ்க!

விழிச்சிறப்பே! மணிவிழா வைக்காணும் ஆசான்
விருப்பங்கள் வெல்கவெனப் பார்வை காண்க!
மொழிக்களமே! எம்மாசான் கல்வி நெஞ்சில்
முகிழ்த்தவைதாம் கேட்கவென ஒலிக்கக் காண்க!
வழித்துணையே! சீராளர் கண்ட பாதை
வகுத்தவெலாம் வளர்கவெனப் பயணம் காண்க!
எழிற்குலமே! நம்சுப்பு ரெட்டி யாரின்
இனியவாழ்வு வாழ்கவென எழுதக் காண்க!

இந்தப்பாடல்களில் எல்லாம் என் தமிழ்த்தொண்டு, நற்குணங்கள், உயர்பண்புகள் காட்டப் பெற்றுள்ளன. உயர்வு நவிற்சிக்கு இடமே இல்லை; 'சாதிவெறி சமயவெறி இல்லாமை காட்டியது சத்தியமாகவே உள்ளது.

என் அருமை நண்பர் சிந்தனைச் செம்மல் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி என்பால் கண்டவை: "பகைச்சுவை அறியாத நகைச்சுவைப் பண்பாளராகிய அப்பெருமானால் போதிக்க வேதிக்க சாதிக்க முடியாதது ஒன்று உண்டோ! அவரிடம் இல்லாத செல்வம் இல்லை. அறிவுச் செல்வம், உழைப்புச் செல்வம் அருட்செல்வம் எல்லாம் அவரிடம் அள்ளஅள்ளக் குறையாமல் உண்டு. சிக்கனச் செல்வமும் சீராக உண்டு! (மதிப்பெண்கள் தருவதில் மட்டும் இந்தச் சிக்கனம் இம்மியும் இராது!)...நன்றி உணர்வு நிறைந்தவர்; நடுநிலை பிறழாதவர். பிறழ்ந்தாலும்கனவாலும் பிறர்க்குத்

8. மணிவிழா மலர்—71-72

தீமை புரியாத கருணைக் கடல்'. திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையை அவர் உருவாக்கியிருக்கும்—திருவாக்கியிருக்கும்—உரன் திறன் வியந்து வியந்து மகிழ்ந்து மகிழ்ந்து போற்றுதற்குரியது... பேராசிரியரின் மனைவியும் மக்களும் அவர் மனத்திற்கு ஏற்ற மாண்பினர்...எவர்க்கும் இனியராய், உழைப்பின் உருவமாய், விளங்கும் பேராசிரியர் ரெட்டியார் விரும்பும் காலமெல்லாம் வாழ்ந்து வேண்டும் பணிகளெல்லாம் புரிய மாமனாரும் மருமகளும் ஒருங்கிணைந்து திருவருள் புரிவார்களாக''

நானும் அறுபது வயதில் என்னைத் தற்சோதனைக்கு (Self Examination) உட்படுத்தி உள்நோக்கும்போது நான் கண்டவையே பிறர் கண்டவையாக இருப்பதைக் காணும் போது என் உள்ளம் களிப்பெய்துகின்றது. இவ்வாறு என்னை நல்வழியில் நடத்திய எம்பெருமானின் கருணை வெள்ளத்தைப் போற்றுகின்றேன். மணிவிழாவில் ஆங்கிலத்தில் வந்த ஆசிச்செய்திகளும் என்னைப் புறவயமாகவே (Objective) காட்டுகின்றன.

9. மணிவிழா மலர்—பக் 62-63

# 70. பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு

என்குடும்பம் காரைக்குடியிலிருந்த போது 1965-செப்டம்பர் விடுமுறைக்குக் காரைக்குடி வந்திருந்தேன். அப்போது ஆலத்துடையாம்பாடி என் அண்ணன் திரு. மு கிருஷ்ணசாமிரெட்டியார்(என் மனைவியின் அத்தைமகன்) நெஞ்சில் சளி அடைத்துக் கொண்டதை நிவர்த்தி செய்யும் பொருட்டுக் காரைக்குடி வந்து 15 நாள் தங்கியிருந்தார். டாக்டர் P.K. நாராயண அய்யரிடம் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். இந்த விடுமுறையின்போது பாண்டி நாட்டிலுள்ள சில வைணவத் திருப்பதிகளைச் சேவிக்க நினைத்தேன். ஒருநாள் திரு. மெய்யத்தையும் மற்றொரு நாள் திருக்கோட்டியூரையும் சேவித்தேன் என் இளைய மகன் இராமகிருஷ்ணனுடன். அப்போது அவன் மூன்றாம் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தான்.

பிறிதொருநாள் திருப்புல்லாணியைச் சேவித்தேன். அங்கிருந்து இராமநாதபுரம் வந்து இராமநாதபுரம் மன்னர் அரண்மனை, தாயுமானவர் சமாதி முதலிய வற்றைப் பார்த்தோம். பின்னர் இராமேசுவரம் சென்று அங்குள்ள கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். கந்தமாதன பர்வதம், பல்வேறு தீர்த்தங்கள், அக்கினி தீர்த்தம் முதலிய வற்றைச் சிறுவனுக் காட்டினேன். அப்பொழுது காரைக்குடி பயிற்சிக் கல்லூரி குடிமைப் பயிற்சி முகாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முகாமின் உணவு வசதிகள் எங்கட்கும் கிடைத்தன. ஒருநாள் பிற்பகல் பயிற்சிக் கல்லூரி மாணவர்கட்கு ஒரு மணி நேரம் பேசினேன். மறுநாள் பயிற்சி முடிந்து மாணவர்கள் ஊருக்குத் திரும்பினர் பகல் 12-மணிக்குக் கிளம்பும் இராமேஸ்வரம் விரைவு வண்டியில்.

நாங்களும் அதே வண்டியில் திரும்பினோம். இங்ஙனம் காரைக்குடியைச் சுற்றியிருக்கும் மூன்று தலங்கள் சேவையாயின.

பிறிதொருநாள் மதுரைக்குச் சென்று மங்கம்மாள் சத்திரத்தில் தங்கிக்கொண்டு அழகர் கோவில் (திருமாலிருஞ்சோலைமலை) சென்று சுந்தரராசனையும் திரும்பிவரும்போது திருமோகூர் காளமேகத்தையும் சேவித்தோம். அன்று மாலையில் கூடலழகரைச் சேவித்து அவரது ஆசிபெற்றோம். அடுத்த நாள் சிரீவல்லிப்புத்தூர் சென்று அரங்க மன்னாரையும் (ஆலிலைப் பள்ளியான்) அன்னை ஆண்டாளையும் சேவித்தோம்; அங்கிருந்து திருத்தண் காலைச் சேவித்துக்கொண்டுவிருது நகர் வழியாக மதுரைக்குத் திரும்பினோம். இரவு ஓய்வு. அடுத்த நாள் திருப்பரங்குன்றம் சென்று வந்தோம். மாலையில் மீனாட்சியம்மன் கோயில், புதுமண்டபம், மகால் முதலியவற்றைப் பார்த்தோம். இந்தச்சுற்றுலா பையனுக்கு மிகவும் பயன்பட்டதாக அமைந்தது. இத்தனை இடங்களைப் பார்பது உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவனுக்கு ஒரு சிறந்த அநுபவந் தானே. அங்கிருந்து அன்றிரவு திருச்சி சென்று மாயவரம் விடுதியில் தங்கி சோழநாட்டுத் திருத்தலங்களில் ஆறினைச் சேவித்துக் கொண்டு காரைக்குடி திரும்பினோம். இது பாண்டிநாட்டுத் திருத்தலப் பயணத்தில் முதல் சுற்று.

இரண்டாவது சுற்றுப் பயணம் 1969 ஜுன் திங்கள் தொடங்கியது. திருப்பதியிலிருந்து புறப்பட்டுக் காரைக்குடிக்கு வந்தோம். இந்தப் பயணத்தில் நான், என் மனைவி, என் மக்கள் இராமலிங்கம் இராமகிருஷ்ணன் ஆகிய நால்வரும் கலந்து கொண்டோம். காரைக்குடியில் புதிதாக வாங்கப் பெற்ற வீட்டைத் திறந்து பார்த்து விட்டு ஒருநாள் தங்கினோம். அடுத்த நாள் தேவக் கோட்டை ரஸ்தாவில் இராமேசுவரம் விரைவு வண்டி ஏறி

இராமேசுரவம் வந்து கண்டனூரார் விடுதியில் தங்கினோம். அந்த விடுதியின் பொறுப்பாளர் முன்னமே அறிமுகமானவராதலால் அங்குத் தங்குவதில் சிரமம் ஏற்படவில்லை. 1968-இல் காசி சென்றபோது எடுத்து வந்த தீர்த்தத்தைக் கையில் கொண்டு வந்திருந்தோம். அது பித்தளைச் செம்பில் அடைக்கப் பெற்றிருந்தது. தாமிரச் செம்புடன் தீர்த்தத்தைத் தந்தால் சிறப்பு என்று அர்ச்சகர் சொன்னதால் ரூ9/-க்கு ஒரு தாமிரப் பாத்திரம் வாங்கித் தீர்த்தத்தை அதில் ஊற்றித் தந்தோம். இராமலிங்கத்திற்கு (இறைவன்) இத்தீர்த்தத்தைக்கொண்டு அபிஷேகம் செய்யப் பெற்றது.

அக்கினி தீர்த்தத்தில் நீராடித் திருக்கோயிலுள் உள்ள தீர்த்தத்தில் நீராடிய பிறகுதான் அபிஷேகம் செய்யப் பெற்றது. பின்னர் கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். முதல் நாள் மாலையே கந்தமாதன பர்வதம், வழியிலுள்ள பல தீர்த்தங்கள் இவற்றைச் சுற்றிப் பார்த்து விட்டோம்.

பிற்பகல் கோவை விரைவு வண்டியில் ஏறி மதுரை வந்து இரண்டாவது சுற்றாக **சிரீவில்லிப்புத்தூர், திருத்தண்கால், அழகர் கோயில், கூடலழகர், திருமோகூர்** ஆகிய தலங்களைச் சேவித்தோம். இவ்வாறு ஐந்து திருத்தலங்களின் சேவை முடிந்தது, அடுத்து மங்கம்மாள் சத்திர அறையைக் காலிச் செய்து விட்டு திருநெல்வேலி சென்றோம். இருப்பூர்தி சந்திப்புக்கருகிலுள்ள ஒரு விடுதியில் (ஓர் இஸ்லாம் அன்பருக்குச் சொந்தமானது) தங்கிக் கொண்டோம். ஏற்கெனவே நவதிருப்பதிகளையும பார்ப்பதற்கு எஸ். ஆர். சுப்பிரமணியப் பிள்ளையவர்களின் கார் அல்லது சிற்றுந்து (Van) தந்து உதவுமாறு எழுதியிருந்தேன், திருநெல்வேலி வந்ததும் அவர்கள் புத்தகக் கடை சென்று இந்த வேண்டுகோளைத் தெரிவித்தேன். நெல்லையில் சாலைக் குமரன், நெல்லையப்பர், காந்திமதியம்மை

குறுக்குத் துறை முருகன் இவர்களின் தரிசனத்தை ஒரு நாளில் முடித்துக் கொண்டோம். அடுத்த நாள் சிற்றுந்து வசதி இருந்தமையால் ஆழ்வார் திருநகரி, திருக்கோளூர், திருப்பேரெயில், சிரீவைகுண்டம், வரகுண மங்கை, திருக் குளந்தை, திருப்புளிங்குடி, தொலைவிலி மங்கலம் (இரட்டைத திருப்பதிகள்) ஆகிய ஒன்பது தலங்களின் சேவையும் ஒரே மூச்சில் நிறைவெய்தியது, இறுதியாகச் சேவித்தது திருப்பேரெயில் சேவை முடிந்து திரும்பும்போது சிற்றுந்து பழுதாயிற்று. அவர்களைப் பழுது பார்த்து வருமாறு சொல்லிவிட்டு நாங்கள் பேருந்தில் நெல்லை திரும்பி விட்டோம். நெல்லை திரும்பியதும் புத்தகக் கடைக்குச் சென்று செங்கையா பிள்ளையைக் கண்டு நன்றி தெரிவித்துவிட்டு விடுதியில் வந்து ஓய்வு எடுத்துக் கொண்டோம்.

நவதிருப்பதி சேவையில் இரட்டைத் திருப்பதிகளின் சேவை மிக்க சிரமத்துடன் கிடைத்தது. தண் பொருநை ஆற்றின் இக்கரையில் வண்டியை நிறுத்தி வீட்டு சரியான வெயிலில் ஆற்றைக் கடக்கும்போதும் திரும்பும் போதும் பொடி தாங்க முடியவில்லை. தவக்கனல்போல் அதை நன்கு அநுபவித்து மகிழ்ந்தோம். அடுத்த நாள் இருப்பூர்தியில் சாவகாசமாகத் திருச்செந்தூர் சென்று செந்தில்குமாரனைத் தரிசித்துப் திரும்பினோம். மறுநாள் திருக்குறுங்குடிச் சேவையையும் வானமாமலைச் (நாங்கு நேரி)சேவையையும் நிறைவு செய்துகொண்டுநாகர்கோவில் வந்து சேர்ந்தோம். நாகர்கோயிலில் எஸ். ஆர். எஸ். கடை இருந்தது. கடையாட்கள் தங்க ஒரு பெரிய வீடும் இருந்தது. இங்குத் தங்கி மலை நாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தொடங்கினோம். திருப்பதி திரும்பியதும் 'பாண்டிநாட்டுத் திருப்பதிகள்' என்ற தலைப்பில் 18 கட்டுரைகள் எழுதி நூலாக வெளியிட்டேன். (மார்ச்சு— 1977). இஃது என்னுடைய முப்பத்தொன்றாவது வெளியீடு.

தில்லி மேல் நிலை மன்ற (Supreme court) நீதிபதி ஜஸ்டிஸ் P. S. கைலாசம்[1] அவர்களின் அணிந்துரை நூலைப் பெருமைப்படுத்துகின்றது. இதனைத் திருவரங்கம் பெரிய ஆசிரமம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகட்கு,

நீண்டவன் குணத்தில் தோய்குரு கூரன்
    நேயத்தோ டருள்கனிச் சாறும்
வேண்டிய தளிக்கும் வடமொழி தந்த
    வித்தக நான்மறைத் தேனும்
ஈண்டியெஞ் ஞான்றும் பாய்தலால் அமுதாம்
    இதயத்தைப் பெற்றிடு சீமத்
ஆண்டவன் பாத மலரினில் வண்டாய்
    அருளினைத் துய்க்க இந்நூலே.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். அவருடைய ஆசியால் திருமால் வழிபாடும் வைணவ சமயத்தில் ஈடுபாடும் வளர்வதையும் உணர்கின்றேன்.

1. இவர் இப்போது இல்லை. முருகன் திருவடிப்பேறு பெற்றார்.

# 71. கம்பராமாயணக் கருத்தரங்கு

கம்பன்புகழ் பாடிக்
கன்னித் தமிழ் வளர்ப்போம்

என்பது காரைக்குடிக் கம்பன் அடிப்பொடிக் கண்ட இலக்கியப் போர்க்குரல் (Slogan). திருப்பதியிலும் இதைச் செய்ய நினைத்தேன் 1976-இல். பல்கலைக் கழக மானிய இணையத்திற்கு விரிவான திட்டம் அனுப்பி ரூ. 6000-மானியம் பெற்றேன். இதில் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழை (சுமார் 40 ஆண்டுகளாக) வளர்த்து வரும் கம்பன் அடிப்பொடி (காரைக்குடி சா. கணேசன்), ஜஸ்டிஸ் எஸ். மகராசன், தமிழ் இலக்கிய வரலாற்றை விரிவாக எழுதி வரும் அறிஞர் மு. அருணாசலம், டாக்டர் B. கோபாலரெட்டி இவர்களை கலந்து கொள்ளச் செய்ய நினைத்தேன். இந்த ஆண்டு நான் ஓய்வு பெறப்போகும் ஆண்டு (செப்டம்பர்-1977). இந்த எண்ணத்தைத் துணைவேந்தரிடம் தெரிவித்து அவருடைய இசைவையும் பெற்றேன். கருத்தரங்கு ஆகஸ்டு 1-3 1977)-ல் நடைபெற்றது மிகச் சிறப்பாக.

டாக்டர் B. கோபால ரெட்டி அவர்கள் ('சுதர்சனம்' நெல்லூரில்) வசித்து வருபவர். சென்னையில் இராஜாஜி முதன்முதல் முதல் அமைச்சராக இருந்த காலத்திலும் மீண்டும் சுதந்திரத்திற்குப் பிறகு நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் தமிழக அமைச்சரவையை அணி செய்த பெருமகனார். ஆந்திரம் தனியாகப் பிரிந்த பிறகு அங்கும் அமைச்சராகப் பணியாற்றி பின்னர் நடுவண் அரசில் நேருவின் அமைச்சரவையில் சில ஆண்டுகள்

பணியாற்றியவர். இறுதியில் ஐந்தாண்டுகள் உத்தரப் பிரதேசத்து ஆளுநராகப் பணியாற்றி ஓய்வு பெற்று நெல்லூரில் வாழ்ந்து வருகின்றார். இவருக்கு நான் எழுதியதுடன் துணைவேந்தரையும் எழுதச் செய்து கருத்தரங்கைத் தொடங்கி வைக்கக் கேட்டுக் கொண்டோம்; ஒப்புக் கொண்டார். கம்பன் அடிப் பொடியை முதல் அமர்வுக்குத் தலைமை தாங்க ஒப்புக் கொள்ளச் செய்தேன். கம்பன் அடிப்பொடி இல்லாத கம்பராமாயணக் கருத்தரங்கு பருப்பு இல்லாத கல்யாணம் போன்றதல்லவா? கம்பனில் திளைத்து ஆங்கிலத்திலும் கம்பனைக் காட்டும் ஜஸ்டிஸ் S. மகராசன் (நீதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்று சட்ட ஆணையத்தின் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்) தொடக்க விழாவில் அடிப்படைக் கருத்தமையும் (Key-not address) சொற்பொழிவை நிகழ்த்தவும், இலக்கியவரலாற்று அறிஞர் மு. அருணாசலத்தைக் கம்பன் படத்தைத் திறந்து வைக்க வும் கேட்டுக் கொண்டதற்கேற்ப ஒப்புக் கொண்டார்கள். வழக்கப்படி துணைவேந்தர் பேராசிரியர் K. S. மூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

எனது வரவேற்பு உரையில் திரு கோபால ரெட்டியைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியை (1960) நினைவுக்குக்கொணர்ந்து அவரையும் அவையோரையும் வியக்க வைத்தேன். நான் 1960-இல் திருப்பதிப் பணிக்காக விண்ணப்பம் அனுப்பிய வுடன் சென்னையில் அமைச்சராக இருந்தபோது வசந்த விகாரில் (சென்னை—600 028) சந்தித்த ஒருநாளை நினைவூட்டி திருப்பதிப் பணி கிடைக்க உதவுமாறு எழுதி யிருந்தேன். அதற்கு அவர் எழுதிய மறுமொழி: ''மிஸ்டர் ரெட்டியார், உங்கள் கடிதம் வந்தது. திருப்பதியில் பணி யாற்ற நினைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சி. வேறு விண்ணப்பதாரர்கள் யாவர் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு நல்ல நிர்வாகத்தில் தலையிட விரும்ப வில்லை. நீங்கள் உங்கள் சொந்தக் காலிலேயே நிற்க

முயல வேண்டும். வாழ்த்துகள்'' என்பது. பதவிக்கான பேட்டி சென்னையில் துணைவேந்தர் இல்லத்தில் (ஆர்மஸ் சாலை, கீழ்ப்பாக்கம்) நடைபெற்ற பேட்டியில் தேர்ந்தெடுக்கப் பெற்றேன். சில நாட்களில் நியமன ஆணையும் வந்தது. மீண்டும் திரு. ரெட்டிக்குஎழுதினேன். ''பெரியீர், தங்கள் யோசனைப்படி சொந்தக் காலில் நின்றே, யாரொருவரின் பரிந்துரையுமின்றி 'நியமனம் பெற்றேன்'' என்று. அதற்கு அவர் எழுதிய மறுமொழி. ''மிஸ்டர் ரெட்டியார், உங்கள் கடிதம் வந்தது. நியமனம் பெற்றது பற்றி மிக்க மகிழ்ச்சி. பிறர் தலையீடின்றி ஒருவர் தம் முயற்சியாலேயே பதவிகிடைத்தால் அதனால் அவர் அடையும்மகிழ்ச்சிக்கு ஈடே இல்லை. இதைக் கருதிதான் உங்கள் காலில் நிற்குமாறு பணித்தேன். வாழ்த்துகள்'' என்பது. என் வரவேற்பு உரையில் இரண்டு கடிதங்களின் வாசகங்களையும் அப்படியே சேர்த்துப் படித்தேன். தில்லி அரசு முத்திரையுடன் எழுதிய இரண்டு கடிதங்களையும் (1960) அவையோருக்கும் காட்டினேன் (1977) திரு. ரெட்டி வியந்து போனார். அவர் அடைந்த மகிழ்ச்சியால் முகம் மலர்ந்ததை அனைவரும் கண்டனர்; கையொலி எழுப்பினர். பேராசிரியர் K. S. மூர்த்தியும் அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்தார். ''இத்தகைய தூய்மையான உள்ளத்துடன் அரசுப் பணிகளைத் தெய்வப் பணியாக ஆற்றி ஓய்வு பெற்று இன்றும் நம்மிடையே அவையை அலங்கரிக்கும் பெரியாருக்கு துறையின் நன்றி என்றும் உரியது'' என் வாசகத்தைப் படித்ததும் மீண்டும் ஒரு கைதட்டல் கேட்டது. தொடக்க விழாவின்போதே கம்பன் அடிப்பொடியை[1] அவையோருக்கு அறிமுகப்படுத்தும் பாங்கில் ஒரு வரவேற்புரையும், (பாடல் கம்பராமன் எழுதியது) திரு. கோபால ரெட்டியை அறிமுகப்படுத்தும் போக்கில்

1. கம்பன் அடிப்பொடியும் ஜஸ்டிஸ் மகராசனும் சில ஆண்டுகட்கு முன்னர் திருநாடு அலங்கரித்து விட்டார்கள். (1990)

தெலுங்குக் கவியில் ஒரு வரவேற்புரையும் (பாடல், கணிதப் பேராசிரியர் P. V. அருணாசலம் எழுதியது) படித்துக் கொடுக்கப் பெற்றன. கம்பனடிப்பொடிக்குத் தந்த வரவேற்புரை இது.

### வரவேற்பு மடல்

வண்ணமுறும் பொதியமலை தன்னில் தோன்றி
வளம்நல்கும் வையையினில் தவழ்ந்து வேம்பன்
புண்ணியநற் சங்கத்தில் வீற்றிருந்து
புகழ்பெற்ற தமிழன்னை செங்கோல் ஓச்சக்
கண்ணனைய பெருங்கோயில் கண்ட நம்பீ!
கலைத்தமிழுக் குணர்வளிக்கும் புனித நம்பீ!
தண்ணமுதம் எனக்குளிர்ந்த உள்ள நம்பீ!
சால்புநிறை நின்வரவால் உயர்ந்தோம் வாழி!

மாதகவார் காந்தியருள் நெறியில் ஏகி
மாசற்ற சத்தியத்தின் சுடரைக் கண்டாய்!
போதமுறு பாரதியின் வதன சோதிப்
பொலிவினால் இலக்கியத்தின் நுட்பங் கண்டாய்
கோதங்கன்ற ராஜாஜி நட்பினாலே
கொள்கையினில் தளராத உறுதி கண்டாய்
ஏதமிலா புகழுடைய கணேச நம்பீ!
இவற்றாலே தமிழகத்தின் தீப மானாய்!

செந்தமிழ்த்தாய் ஒருகோடி யாண்டு செய்த
செழுந்தவத்தின் பயனான கம்ப நாடன்
சந்ததமும் புரிந்திட்ட நோன்பினாலே
தகவுடனே அவதரித்தாய்! கலைஞர் கோவே!
முந்துறயாம் பகர்ந்தமொழி முகமன் அன்று
மூவாத தமிழகத்துப் பட்டி மன்றம்
சிந்தைநிறை கவியரங்கம் கம்ப னுக்குத்
திகழ்கின்ற பதிப்புக்கள் யாவும் சாட்சி

சிற்பத்தில் கல்வெட்டில் புனிதப் பண்ணில்
சீர்மிக்க சொல்லாய்வில் மருத்து வத்தில்
கற்பனையின் முதிர்ச்சிவளர் கவிதை யாய்வில்
கம்பனடிப் பொடியே! நின் ஒப்பா ரில்லை
பொற்புறுநின் முற்றத்தில் சிந்தும் சொல்லைப்
பொலிவுடனே தொகுத்தவர்கள் டாக்ட ராகி
முற்பட்ட புகழ்பெறுவர் கவிஞர் கோவாய்
மூவாத கம்பனுக்கே அடிமை யாவார்.

மங்கலமார் கம்பனடிப் பொடியே! நீங்கா
மகிழ்வுடன்நீ புரிதொண்டு முற்றும் கண்டோம்;
பொங்குமனக் களிப்புற்றோம்; இதயத் தாலே
புகழ்மிக்க தமிழ்த்தாய்க்கு வடிவம் தந்தாய்;
கங்கையெனச் சிறப்புறுக; வேங்க டத்தில்
கருணையே வடிவாக மேவு கின்ற
பங்கயக்கண் எம்பெருமான் அருளி னாலே
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

—தமிழ்த் துறை அன்பர்கள்

இந்த விழாவிற்குத் வந்த திரு. கோபால ரெட்டியும் கம்பனப் பொடியும் முதன் முதலில் கண்ட போது பேரவை மண்டபத்தின் முன்னுள்ள அறையில் ஒருவரையொருவர் தழுவி வரவேற்றுக் கொண்டது வந்திருந்தோர் கண்பெற்ற பயன், இருவரும் நாட்டு விடுதலை வேள்வியில் சிறைச் சாலை நண்பர்கள்!

மறுநாளும் அதற்கு அடுத்தநாளும் நான்கு அமர்வுகள் நடைபெற்றன. கம்பனைப் பலகோணங்களில் ஆய்ந்த ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப் பெற்றன. வேங்கடத்தின் சிறப்பை,

இருவினையும் இடைவிடா எவ்வினையும்
இயற்றாதே இமையோர் ஏத்தும்
திருவினையும் இடுபததேர் சிறுமையையும்
முறையொப்பத் தெளிந்து நோக்கிக்

கருவினைய திப்பிறவிக் கென்றுணர்ந்தங்
    கதுகளையும் கடையின் ஞானத்து
அருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுளரீண்
    டிருந்தும்அடி வணங்கற் பாலார்.

தோதவத்தித் தூய்மறையோர் துறையாடு
    நிறையாறுஞ் சுருதித் தொன்னூல்
மாதவத்தோர் உறைவிடனும் மழையுறங்கும்
    மணித்தடமும் வான மாதர்
கீதமொத்த கின்னரங்கள் இன்னரம்பு
    வருடுதொறும் கிளக்கும் ஓதை
போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழும்
    உறங்கிடனும் பொருந்திற் றம்மா![1]

என்று காட்டிய கம்பநாடனின் புகழ் அதன் அடிவாரத்தில் திகழும் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் சார்பில் நடைபெற்ற கம்பராமாயணக் கருத்தரங்கில் விரித்தோதப் பெற்றது. தமிழ்த் துறையினரும் பிறரும் தமிழ்த்தொண்டு புரிந்த மனநிறைவு பெற்று மகிழ்ந்தனர்; எம்பெருமானின் திருவருளுக்கும் பாத்திரமாயினர்.

இன்னொரு குறிப்பு ஈண்டுக் காட்டவேண்டியது இன்றியமையாததாகின்றது. துணைவேந்தர் தம் தலைமையுரையில் நான் ஓய்வு பெறப் போவதாகவும், விதி இடங்கொடுக்காததால் என்னை 65 - வயது வரை வைத்துக் கொள்வதற்கு இயலவில்லை என்றும் கூறினார். அடுத்து ஜஸ்டிஸ் மகராஜன் பேசும்போது அவரும், "விதி இடங்கொடுக்காவிட்டாலும் துணைவேந்தர் நினைத்தால், ஒரு திறமையானவருக்கு விதிவிலக்கு அளித்துப் பதவிக் காலத்தை நீட்டிக்கலாம் என்றும், டாக்டர் ரெட்டியாரின் திறமையும் பக்தியுடன் பணி யாற்றும் முறையும் துணைவேந்தர் மனத்தைக் கவர்ந்து

1. கிஷ்கிந்தை - நாடவிட்ட 27, 28

விட்டது என்பது அவரது தலைமையுரையால் தெளிவாகப் புலனாவதால் துணைவேந்தர் தம் கருத்தினை மறு ஆய்வு செய்து பதவியை நீட்டித்தால் துறைக்கு நல்லது என்றும், பல்லாண்டுகள் பேராசிரியர் பதவி கிடைக்காமல் துன்பப் பட்டதெல்லாம் பதவி நீட்டிப்பால் தீரும் என்றும் நானும் உடல்நலத்துடன் காணப் பெறுவதால் துணைவேந்தர் இரண்டிரண்டு ஆண்டுகளாக நீட்டிப்பதைக் கருதலாம் என்றும்இடைப்பிறவரலாகப்பேசிகூட்டத்தை உருகவைத்து விட்டார். துணைவேந்தர் பேசும் போது டாக்டர் தாமோதரனின் மனம் மலர்ச்சியுடன் காணப்பட்டதையும், ஜஸ்டிஸ் பேசும்போது மனம் சுருக்கம் அடைந்ததையும் மலர் என்னிடம் சொன்னார்கள். கூட்டம் முடிந்ததும் மனம் தாளாமல் ஜஸ்டிஸ் அவர்களைப் பார்த்து ''உங்கள் பேச்சு துணைவேந்தர் உள்ளத்தை உருக்கி விட்டது. நீங்கள் அனாவசியமாகப் பேசி டாக்டர் ரெட்டியாருக்கு ஆசையை உண்டாக்கி விட்டீர்கள்'' என்றாராம். அதற்கு ஜஸ்டிஸ் அவர்கள் ''நல்லதைத்தானே சொன்னேன். டாக்டர் ரெட்டியாருக்குப் பதவி நீட்டிப்பு கிடைத்தால், இந்த மரபின் பயனை நன்கு பணியாற்றுவோர்களெல் லாம் பின்னால் அநுபவிக்கலாமல்லவா? துறை வளர்ச்சிக் கும் இது நல்லதுதானே. அவருக்குக் கிடைப்பதால் உங்கட்கு மகிழ்ச்சி இல்லையா?'' என்று சொன்னாராம். பகல் விருந்திற்குப் பிறகு பிற்பகல் என்னிடம் இதை ஜஸ்டிஸ் தெரிவித்தார். ''அவர் யார்? மட்டரகமான பேர் வழியாக இருப்பார் போல் காணப்படுகின்றாரே'' என்றார். 'பொறாமைக்கு இலக்கணம்' இவர் என்று சொல்லி வாளா இருந்துவிட்டேன்.

# 72 என். பிஎச் டி. ஆய்வுக் கட்டுரை வெளியீடு

நான் ஒய்வு பெறுவதற்குமுன் என்னுடைய பி எச். டி ஆய்வுக் கட்டுரையை பல்கலைக் கழக வாயிலாக வெளியிட அருப்பாடு பட்டேன். முடியவில்லை. திருவேங்கடவன் பல்கலைக்கழகம் இதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. இப்படிச் சொல்வதை விட பொதுவாக ஆராய்ச்சி வெளியீடுகள் வெளிவருவதில் உற்சாகம் காட்ட வில்லை. இதற்கென்று திட்டவட்டமாகச் சொல்லப் பெறாத (Unassigned) மானியக் கணக்கில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒதுக்கப் பெறும். அதை ஒவ்வொரு துறைக்கும் பகிர்ந்து அளிக்கப்பெறும். இத் தொகையைப் பகிர்ந்தளிப்பதில் பொறுப்பற்ற செயல் நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு துறையிலுமிருந்து இத்தகைய வெளியீடுகளுக்கு உத்தேச மதிப்பு கேட்டு அதன் பின்னர் இருப்பில் இருக்கின்ற தொகையை எப்படிப் பகிர்ந்தளிக்கலாம் என்பதைப் பற்றி பல்கலைக் கழக நிர்வாகமோ அல்லது பேராசிரியர்களைக் கொண்ட ஒரு சிறு குழுவோ அமைத்து அதன் யோசனைப் படியோ செலவிடும் முறையைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து அதன் படி செயற்படலாம். திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் எந்த ஒரு முறையினையும் மேற்கொள்வதாகத் தெரிய வில்லை. ஆய்வுக்கட்டுரையை வெளியிடுவதற்கு உதவு மாறு பலதடவைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதியும் மறு மொழி இல்லை.

இதைப்பற்றி நான் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு நாள்

ரூ 2500/= தமிழ்த் துறைக்கு ஒதுக்கப் பெற்றிருப்பதாகக் கடிதம் வந்தது. பல துறைக்கும் இருப்புத் தொகையை இவ்வாறு கிருஷ்ணன் கோயிலில் சுண்டல் தருவதுபோல் பகிர்ந்தளிக்கப் பெற்றது போலும் என்று நினைத்துக் கொண்டேன். ஒரு சில ஆண்டுகளைக் கவனித்ததில் எந்தத் துறையிலும் எந்த நூலும் வெளிவந்ததாகத் தெரிய வில்லை. பெரும்பாலும் இவ்வாறு ஒதுக்கப்பெற்ற தொகைகளைப் பெரும்பாலான துறைகள் பயன்படுத் தாமல் உரிமையழிந்து போயிருத்தலைக் கண்டேன். இப்படிப் போகாமல் தேவையான துறைகட்கு மட்டிலும் உத்தேசச் செலவு கேட்டு வழங்கப்பெற்றிருப்பின் அத்தொகைகள் பயனுள்ள முறையில் செலவிடப் பெற்றி ருக்கும். பசியே இல்லாதவனுக்கு சோறுபோட்டால் அவன் அதை என்ன செய்ய முடியும்? சோறுதான் வீணாகும் இது போன்ற செயல்தான் தேவையில்லாதிருக்கும் துறை கட்குப் பகிர்ந்தளிப்பது. இப்படித்தான் நிர்வாகம் சிந்தனையற்றுச் செயற்பட்டால் அது 'வெறும் வினை' யாக முடியும். நல்வினை தீவினை செய்பவனிடம் செயற் படுவது போல 'வெறும் வினை' யாருக்கும் பயன்படா தொழியும்.

ரூ2500/- தாள் வாங்குவதற்குக் கூடப் போதாதே; இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்று மனம் தீவிரமாகச் செயற்பட்டது. என்னுள் அந்தர்யாமியாக வீற்றிருக்கும் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலாகிய ஏழுமலையப்பன் ஒளிகாட்டி வழிகாட்டி னான். தமிழக அரசு தந்த மானியத்தில் ஏதாவது எஞ்சி யிருக்குமா என்று உசாவ என்னை நெறிப்படுத்தினான். வளர்ச்சித்துறை அலுவலர் திரு. இராகவ ரெட்டியைச் சந்தித்து விவரம் கேட்டேன். முதிர்ந்த நிலையிலிருந்த அப்பெருமகன் கிட்டத்தட்ட ரூபாய் 6000/- வரை இருக்கும் என்று தெரிவித்தார். "என்னுடைய ஆய்வுக் கட்டுரை வெளியிட ரூ 2500/- தான் பல்கலைக் கழகம்

அனுமதித்துள்ளது. தாள் வாங்குவதற்குக் கூட இது போதாது. இந்நிலையில் இந்த ரூ 6000/- ஐதமிழ்த் துறைக்கு ஒதுக்கித் தந்தால் கட்டுரை வெளிவருவதற்கு முயலலாம்" என்று அவரிடம் சொன்னபோது, "இவற்றையெல்லாம் தெரிவித்து விவரமாக ஒரு கருத்துரு (Proposal) தயார் செய்து பல்கலைக் கழகத்திற்கு எழுதுங்கள். நான் துணைவேந்தருக்குக் குறிப்பு வைத்து இசைவு பெறுகின்றேன்" என்று அவர் அன்புடன் தெரிவித்தார். நானும் உடனே இந்த விவரங்களை யெல்லாம் உட்கொண்ட விண்ணப்பத்தை அனுப்பி வைத்தேன்.

இங்ஙனம் செய்த பிறகும் எனக்கு இருப்பு கொள்ள வில்லை. பல்கலைக் கழக அச்சகத்தின் இயக்குநராக ஐந்தாண்டு ஒப்பந்தத்தில் பணிசெய்து கொண்டிருந்தவர் திரு.B.S.K. இராமச்சந்திரன்; இவர் வேலூரைச் சேர்ந்த பிராமணர். இவர் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தில் அஞ்சல் வழிக் கல்வி மூலம் பி.ஏ. பட்டம் பெறுவதற்கு ஒல்லும் வகையெல்லாம்உதவினேன்; பட்டமும் பெற்றார். இதற்கு முன்னர் அவர் இடைநிலை வகுப்புத் (Inter-mediate) தேர்வு பெற்றிருந்தார். இவர் என் வேலையை உடனே எடுத்துக் கொண்டு முடித்துத் தருவதாக வாக்குறுதி தந்தார். "ரூ 8500/- தான் உள்ளது; இதற்கு மேல் கிடைக்க வழி இல்லை. நான் அறிந்த வரையில் ரூ 10,000க்கு மேல் செலவாகலாம். என்ன செய்வது என்று தெரியவில்லை." என்று சொன்னபோது "உங்கள் கட்டுரையைத் தாருங்கள். உத்தேசச் செலவு போட்டுப் பார்க்கலாம். அதன் பிறகு முடிவு சொல்லுகின்றேன்" என்று அன்புடன் சொன்னார். இஃதெல்லாம் டாக்டர் D. சகந்நாத ரெட்டி துணைவேந்தராக இருந்தபோது நடந்தன.

இரண்டு தொகுதிகளாகக் கட்டமைத்துத் தந்திருந்த ஆய்வுக் கட்டுரையைத் தந்தேன். அவர் தாள் செலவு,

அச்சுக்கூலி, கட்டமைப்புக் கூலி இவற்றை விவரமாகக் கணக்கு போட்டு ரூ 8500/- தொகையைக் கொண்டு 250 படிகள்தாம் அடிக்கலாம் என்று சொன்னார். நானும் இந்த விவரங்களையெல்லாம் குறிப்பிட்டு ரூ 8500/-ஐ அச்சகக் கணக்குக்கு மாற்றுமாறும், இத்தொகையைக் கொண்டு 250 படிகள்தாம் தயாரிக்க முடியும் என்று தெரிவித்தும் பல்கலைக் கழகத்திற்கு மீண்டும் எழுதினேன். நான் கேட்டவாறே ரூ 8500/- அச்சகக் கணக்கிற்கு மாற்றப்பெற்றது; 250 படிகள் அடிக்குமாறும் அச்சகத்திற்கு ஆணையும் பிறப்பிக்கப் பெற்றது. வேலையும் வேகமாக நடந்தது. கிட்டத்தட்ட அச்சிலேயே ஆயிரம் பக்கம் வரும் நூல் இரண்டாண்டுகள் வரை அச்சி வேலை தொடர்ந்தது. பல்கலைக் கழகப் பல வேலைகளுடன் இந்த வேலையும் நடை பெற்றதால் இடைஇடையே சுணக்கம்; 1977 மார்ச்சு வாக்கில் வேலையும் முடிந்தது.

ஆய்வுக் கட்டுரை "Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar" என்ற தலைப்பில் அமைந்தது; நூல் ஆங்கிலத்தில் 960 பக்கமாக வளர்ந்தது. துணைவேந்தர் தத்துவத் துறையைச் சேர்ந்தவராதலாலும் நூலும் தத்துவத்துறை (விசிட்டாத்வைதம்) பற்றியதாதலாலும், அஃது ஆங்கிலத்தில் அமைந்திருந்தாலும் துணைவேந்தரை Forword ஒன்று தருமாறு வேண்டினேன்; அவரும் ஒப்புக் கொண்டார். அச்சிட்ட படிவங்களினை அவரிடம் தந்திருந்தேன். ஒன்றிரண்டு மாதங்கள் கடந்த பின்னர் "நூல் பெரிதாக உள்ளது. படிக்க நேரம் இல்லை. தங்கட்கு ஏமாற்றத்தை விளைவித்தற்கு வருந்துகின்றேன்" என்று சொல்லி விட்டார். மேலும் "டாக்டர் தாமோதரன் கூட ஒரு நூலுக்கு அணிந்துரை கேட்டார். அவருக்கும் முடியாது என்று தெரிவித்து விட்டேன் என்றார். "அவர் ஒன்றும் நூல் எழுத வில்லையே" என்று கூறும்போது, "அவர் ஆசாரிய இருதயம்என்றநூல்பற்றிஎழுதிய(M. Litt)ஆய்வுக்கட்டுரை

ஆய்வுக்கட்டுரைக்குத் தருமாறுகேட்டார். நூல் 'சர்.சி.பி. இராமசாமி அய்யர் முன்னுரை எழுதி வெளிவந்தநூலுக்கு முன்னுரை தருமாறு கேட்டார். நான் 'சர்.சி.பி எழுதி விட்ட பிறகு, நூலும் வெளிவந்த பிறகு என் முன்னுரை தேவையற்றதே' என்றேன். அதற்கு அவர் 'சர் சி.பி. இப்போது இல்லை. அதனாலே கேட்டேன்' என்றார். இம்மாதிரி முன்னுரை வழங்குவோர் இறந்த பிறகு மீண்டும் முன்னுரை பெற்றுக் கொண்டே போனால் நூல் முன்னுரைகளை விடச் சிறிதாய்த் தோன்றுமே' என்றேன். அதன் பிறகு அவரும் போய்விட்டார்'' என்று சொன்னார். நான் ''தாங்கள் என் நூலுக்கு முன்னுரை வழங்குவதைத் தடுப்பதற்காகவே இத்திட்டம் அவர் திட்டம் நிறைவேறியது'' என்று சொல்லிக் கொண்டு படிவங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு வருத்தத்துடன் திரும்பினேன். துணைவேந்தர் முகத்தி லும் 'சோகக்களை' தென்பட்டது.

அப்பொழுது 'இராஜாஜி' வாழ்ந்திருந்தார். கேட்டி ருந்தால் கிடைத்திருக்கும். இராஜாஜியை ஆந்திரர்கள் வெறுப்பவர்கள். அவர் முன்னுரை தவறான கருத்தை விளைவிக்கும் என்று கருதி அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். பின்னர் ஓய்வு பெற்ற முன்னாள் குடியரசுத் தலைவர் எஸ். இராதா கிருஷ்ணனுக்கு முன்னுரை (Forword) தருமாறு எழுதினேன். அவருடைய தனி அலுவலர் தற்சமயம் மனநிலை சரியில்லையென்றும் டாக்டர் முற்றும் ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு கூறி யிருப்பதாகவும் ஆதலால் அவர் தருவதற்கில்லையென்றும் வருத்தத்துடன் மறுமொழி தந்தார். அதன் பின்னர் திரு. S.A. அனந்தசயனம் அய்யங்கார் (முன்னாள் பீஹார் ஆளுநர்) அவர்களை நாடினேன். என்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தவராதலால் தருவதற்கு ஒப்புக் கொண்டார். தமக்குக் கண்ணொளி மங்கி விட்ட தென்றும், 10 நாட்கள் நாடோறும் மாலை ஐந்து

மணிக்குத் தம் இல்லம் போந்து, நூல்பற்றி விளக்க வேண்டும் என்றும், சில இயல்களில் முக்கிய பகுதிகளைப் படித்துக் காட்டவேண்டும் என்றும் கூறினார். நானும் அவ்வாறே அவர் இல்லம் சென்று படித்துக் காட்டினேன்; மிகவும் கூர்ந்து கவனித்தார்.

பத்தாம் நாள் தம்முடைய சுருக்கெழுத்தாளரை வரச் சொல்லி தாம் நல்கும் முன்னுரையைக் கூறினார். நூலிலுள்ள பொருளைப்பற்றி விவரமாகக் கூறியதைப் பற்றி வியந்து போனேன். ஆச்சரியமான நினைவாற்றல் கொண்ட ஒரு மாமேதையை அன்றுதான் காண முடிந்தது. அடுத்த நாள் வந்து தட்டச்சு செய்த படியை வாங்கிப் போகுமாறு பணித்தார். அடுத்த நாள் சென்றபோது தட்டச்சுப்படி தயாராக இருந்தது. என்னை ஒருமுறை அதனை வாய்விட்டுப் படிக்கச் செய்தார்; அதைத் தானே நன்கு அநுபவித்ததை அவர் முகத்தில் காண முடிந்தது. பின்னர் அவரை வணங்கி ஆசியுடன் தந்த முன்னுரையைப் பெற்றுக் கொண்டேன். என்னுடைய நூல்முகத்துடன் அதையும் நூலின் முற் பகுதியில் சேர்க்க வேண்டியவற்றையும் அச்சகத்தில் சேர்த்தேன். இந்த அரிய பெரிய நூலை நம் நாட்டின் தத்துவ மேதை டாக்டர் சர்வே பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கட்கு அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். ஒரு வைணவப் பெரியாரின் முன்னுரையும் ஒரு தத்துவ மேதைக்குத் தந்த அன்புப் படையலும் நூலைப் பொலி வடையச் செய்தன. இஃது என்னுடைய முப்பத்திரண் டாவது வெளியீடாகும். (மே—1977). இது பல்கலைக் கழக வெளியீடாகவும் அமைந்தது என்னுடைய பெரும் பேறாகும். இந்த நூலை வைணவக் களஞ்சியம் என்று பலர் போற்றுவது என் காதில் விழுந்து கொண்டுள்ளது.

# 73. நினைவுச் சிதறல்கள்

என் திருப்பதி வாழ்வு கிடைத்தற்கரிய ஒரு திவ்வித தேச வாழ்வாகும். இந்த வாழ்வின் இறுதிக் காலத்தை மனத்திற் கொண்டு இந்தப் 17—ஆண்டு வாழ்வில் இன்னும் ஏதாவது நிகழ்ச்சிகள் விட்டுப் போயினவா என்பதை நினைவுகூர்கின்றேன். அரிமா நோக்காக நினைவில் எழுபவற்றை இந்தக் குமிழியில் வெளியிடுகின்றேன்.

ஃ ஃ ஃ

நான் அறையில் தனியாக வாழ்ந்த காலத்தில் இந்தித் துறை அன்பர்கள் திருமலைக்கு நடந்து போய் நடந்து திரும்பத் திட்டமிட்டனர். அவர்களுடன் சேர்ந்து அதிகாலையில் 4 மணிக்கே கிளம்பினேன். காலை 7 மணிக்குத் திருமலையை அடைந்தோம், கோனேரியில் தீர்த்தமாடி ஏழுமலையானைச் சேவித்தோம். தீர்த்தமாடிக் கரையை அடைந்தபோது ஒரு கறுத்தப் பெரிய திருமேனியைக் கொண்ட ஒருவரைக் கண்டோம். அவர் இரண்டு சிறிய பாட்டல்களில் வெள்ளைத் திருமண், திருச்சூர்ணம் இவற்றைக் கரைத்த நிலையில் வைத்துக் கொண்டு தீர்த்தமாடி வருபவர்க்குத் திருமண் சாத்தும் கைங்கரியத்தை மேற் கொண்டிருந்தார். திருமண் சாத்தப் பெற்றவர்கள் 50 பைசா, 1 ரூபாய்....என்று அவருக்குச் சன்மானம் செய்தனர். சில வடநாட்டுச் சேட்டுகள்—செல்வச் செழிப்புள்ள சீமான்கள்—ரூ. 5/— கூடத் தந்ததை நேரில் கண்டேன். அவரிடம் பேச்சுக் கொடுக்க ஆர்வங் கொண்டு பேசியபோது தமக்குத் தினந் தோறும் இவ்வகையில்ரூ. 25/—க்குக் குறையாதவருமானம்

கிடைப்பதாகவும் சில நாட்களில் இந்த வருமானம் ரூ. 50/- யும் எட்டும் என்றும் கூறினார். நாடோறும் இரவில் ஒரு முழுக் கோழி உணவில் சேர்ந்தால்தான் தமக்கு மன நிறைவு ஏற்படும் என்றும் சொல்லி முறுவலித்தார். இப்படியும் ஏழுமலையான் ஒருவருக்கு தினசரிப் படி அளப்பதைக் கண்டு நாங்கள் வியந்து போனோம். ஏழுமலையானின் சேவை முடிந்ததும் ஆகாய கங்கை, பாபநாசம், கோகர்ப்பம் முதலான இடங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு மாலை 6 மணிக்கு மலையடிவாரத்தை வந்தடைந்தோம். அடிவாரத்திற்கு வந்தவுடன் ஒரு அடி கூட என்னால் நடக்க முடியவில்லை; காலில் ஒரே வலி ஒரு ஆள் மிதிவண்டியில் ஏறி அறை வந்து சேர்ந்தேன். நண்பர்கள் யாவரும் இளைஞர்களாதலால் அவர்கட்கு வாகனம் தேவைப் படவில்லை; அவர்கள் நடந்தே வந்தனர். நண்பர்கள் யாவரும் 35 வயதுக்குக் கீழான வர்கள். என் வயது ஐம்பதை எட்டுவதாக இருந்தது.

இன்னொரு நாள் பேருந்தில் காளத்தி சென்றோம். அடிவாரத்தில் கோயில் கொண்டிருக்கும் காளத்தி நாதனைச் சேவித்தோம். பின்னர் மலையேறி கண்ணப்பர் வழிபட்ட குடுமித் தேவரைத் தரிசித்தோம். இப்போது சேக்கிழார் பெருமானின்,

> கானவர் பெருமா னார்தங்
> கண்ணிடத் தப்பும் போதும்
> ஊனமு துகந்த ஐயர்
> உற்றுமுன் பிடிக்கும் போதும்
> ஞானமா முனிவர் கண்டார்:
> நான்முகன் முதலா யுள்ள
> வானவர் வளம்பூ மாரி
> பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப

பேறினி இதன்மேல் உண்டோ?
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக் கொண்(டு) என்வலத்தில்
மாறிலாய்! நிற்க'' என்று
மன்னுபேர் அருள்பு ரிந்தார்[1]

என்ற பாடல்கள் நினைவிற்கு வர, நானும் அக் காலத்திற்குத் தள்ளப்பெற்று அவர்களுள் ஒருவனானேன். பின்னர் காளத்திவேடன் அன்று காடு மலையெல்லாம் சுற்றி அலைந்த கதையை நண்பர்கட்குச் சொல்லிக் கொண்டே மலையைச் சுற்றினோம். சுற்றும் போது,

வன்புலிக் குருளை யோடும்
வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறும கார்கள்
புரிந்துடன் ஆட லன்றி
அன்புறு காதல் கூர
அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி ஆடும்
எயிற்றியர் மகளிர் எங்கும்

வெல்படைத் தறுகண் வெஞ்சொல்
வேட்டுவர் கூட்டந் தோறும்
கொல்லெறி குத்தென் றார்த்துக்
குழுமிய ஓசை யன்றிச்
சில்லரித் துடியும் கொம்பும்
சிறுகண்ஆ குளியும் கூடிக்
கல்லெனும் ஒலியின் மேலும்
கறங்கிசை அருவி எங்கும்

1. பெ.பு: கண்ணப்ப. 184, 185.

ஆறலைத் துண்ணும் வேடர்
அயற்புலம் கவர்ந்து கொண்ட
வேறுபல் உருவின் மிக்கு
விரவுஆன் நிரைக ளன்றி
ஏறுடை வானந் தன்னில்
இடிக்குரல் எழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும்
மதக்கைமா நிரைகள் எங்கும்[2]

என்ற சேக்கிழார் பாடல்கள் நினைவிற்கு வர இந்த இயற்கைக் காட்சிகளையெல்லாம் நண்பர்கட்கு ஆங்கிலத்தில் விளக்கினேன்.

இப்போது நண்பகல். ''உண்ணும் சோறு பருகும் நீர்'' எங்கள் கையில் இருந்தன, அவற்றை உட்கொண்டு பசியாறினோம். ஓர் இனிய புங்கமரத்தின் நிழலில் ஓய்வு கொண்டோம். பெரும்பாலும் நான் என் நண்பர்களின் வீர வழிபாட்டுக்குரியவனாக இருந்தேன். என்னுடைய நகைச்சுவைப் பேச்சையும், செயற்கைப் பேச்சுத் திறமையையும் டாக்டர் **சந்திரபானு ராவுத்**, டாக்டர் **ஸ்ரீதர்சிங்**, டாக்டர் **ராம் பாபு சர்மா**, டாக்டர் **ஜனார்தன செல்லேர்**, டாக்டர் **போரா** முதலியோர் மிகவும் ஈடுபட்டுச் சுவைப்பர். இவற்றையெல்லாம் இப்போது நினைவு கூர்ந்து அசை போடுகின்றேன்.

ஃ ஃ ஃ

குடும்பம் காரைக்குடியிலிருந்தபோது மானியம் பெறும் விஷயம் சம்பந்தமாக அடிக்கடிச் சென்னைப் பயணம் இருந்து வந்தது. ஒருநாள் தி. நகர் அரங்கநாதன் தெருவிலுள்ள சிற்றுண்டி விடுதியில் சிற்றுண்டி உண்டதாக நினைவு. அப்போது சென்னையில் பரவலாக இருந்த **'டிங்கிக் காய்ச்சல்'** என்னைப் பற்றிக் கொண்டது. திருப்பதி வந்ததும் நடக்க முடியாத நிலை.

2. பெ. பு: கண்ணப்ப. 4, 5, 6

ஆள் மிதிவண்டியில் கூட மருத்துவர் வீட்டிற்குச் செல்ல முடியாத நிலை. அருகிலுள்ள ஆரோக்கியபவன் அய்யர் பட் என்பார் இரண்டு நாட்கள் அறைக்கே சிற்றுண்டி பால் அனுப்பினார். கழிப்பறைக்கு நகர்ந்து கொண்டுதான் சென்று வரும் நிலை ஏற்பட்டது. ஏழுமலையானே மருத்து வனாய் நின்று என்னைக் காத்தான் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. தியானமும் இறைவன் நினைவும் இத்தகைய சந்தர்ப்பங்களில் காத்து வருகின்றன.

☐ ☐ ☐

பல்கலைக் கழக நூலகத்தில் தமிழ் உருது நூல்கள்தாம் வகைப்படுத்தப் பெறாமல் கிடக்கின்றன. ஒரு நூலைத் தேடி எடுப்பதில் அதிகக் காலம் வீணாகின்றது. நான் அங்கு இருந்தபோது M. R. சந்திரன் என்ற உதவி நூலகரைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 25 நூல்கள் வீதம் வகைப் படுத்திக் கொண்டு வந்தேன். சுமார் 3000 நூல்கள் இவ்வாறு வகைப்படுத்தப் பெற்றன. ஆண்டுதோறும் நூல் கள் வாங்கப்பெற்று வருகின்றன. வகைப்படுத்தும் வேலை தொடர்ந்து நடைபெறவில்லை.

☐ ☐ ☐

டாக்டர் மு. வ. திருநாடு அலங்கரித்த(1974)நாளன்றுநான் துக்கம் விசாரிக்கச் சென்னை வர முடியவில்லை. 10-ஆம் நாள் நிகழ்ச்சிக்குத்தான் வந்தேன். இரண்டு நாள் முன்ப தாக புத்தூரில் ஓர் இலக்கிய விழாவில் தலைமை வகித் தேன். அன்றே உடல்நிலை சிறிது கெட்டது; பசியில்லாத நிலை. இந்நிலையில்தான் 10-ஆம் நாள் நிகழ்ச்சிக்குச் சென்னை வந்தேன். அவர் இல்லத்தில் தேவாரம் ஓதப் பெற்றிருந்ததாக நினைவு. அவர் வானொலியில் தாயுமானவர் பற்றிப் பேசிய பேச்சு நாடாப்பதிவு செய்யப் பெற்றிருந்தது. அதை மீண்டும் கருவியில் போட்டு பலரை யும் கேட்கச் செய்தனர். பகல் விருந்து இருந்தது. பசி இல்லாததால் சிறிது மோர் உணவு, கத்தறிக்காய் கூட்டு,

பாயசம்—இவற்றை மட்டிலும் உண்டேன். கத்தறிக்காய்க் கூட்டு மிக நன்றாக அமைந்திருந்ததால் அதை மட்டிலும் இரண்டு கரண்டி அளவு உண்டேன்,

திருப்பதி திரும்பியதும் மறுநாள் தொடங்கி வயிற்றோட்டமும் தொடங்கியது. உடல்நல மையத்தி லிருந்து (Health Centre) தருவிக்கப்பெற்ற மருந்தில் பயன் இல்லை; டாக்டர் இலட்சுமண மூர்த்தி இருமுறை இல்லம் வந்து ஊசி போட்டார். வயிற்றோட்டம் நிற்கவில்லை. பகலில் மட்டிலும் மருத்துவ மனையில் தங்க வசதி இருந்தது. ஒருவாரம் தங்கியிருந்தேன். நாடோறும் இரண்டுமுறை 250c.c. வீதம் உப்புத் தண்ணீர் உடலில் செலுத்தப் பெற்றது. வீட்டிலும் மருத்துவமனையிலும் என் மாணவர்கள் நன்கு கவனித்தனர் திரு. செல்லக்குமார் என்ற கிறித்தவ மாணவர் எனக்குச் செய்த தொண்டை நினைக்கும் போது அழுகையாக வருகின்றது இயேசு நாதரின் சீடன்போல் மகிழ்ச்சியுடன் தொண்டாற்றினார். ஓரிரண்டு நாட்கள் டாக்டர் மு. வ. வைத் தொடர்ந்து வைகுண்டம் சென்று விடுவது போன்ற நம்பிக்கையும் தோன்றி விட்டது.

நாளடைவில் வயிற்றுப்போக்கு அதுவாகவே நின்றது. இது உணவில் சேர்ந்த நஞ்சு என்பதை உணர்ந்து கொண்டேன். நஞ்சின் வேகம் குறைந்ததால் வயிற்றுப் போக்கும் நின்றது என்பது என் கணிப்பு. டாக்டர் ஒரு வாரம் கால்ஷியம் குளுகனேட் ஊசி மருந்தை தினம் ஒன்றாக ஒரு வாரம் குத்திப் புகுத்தினார். நான் படுத்த படுக்கையாக இருந்த செய்தி அதிகம் பரவவில்லை. என் வீட்டிற்கு அருகில் குடியிருந்த டாக்டர் கிருஷ்ணா ரெட்டி, டாக்டர் ஜெயராம ரெட்டி, துணைப்பதிவாளர் அஞ்சனப்பா டாக்டர் கமலநாதன், டாக்டர் ராம் பாபு சர்மா, டாக்டர் ஸ்ரீதர் சிங்க், டாக்டர் சந்திரபானு ராவுத் இவர்கள் மட்டிலுமே அடிக்கடி வந்து பார்த்துச் சென்றனர். திருமதி இலட்சுமி ஜகந்நாத ரெட்டி இருமுறை பழங்களுடன் வந்து

பார்த்துதுணிவு ஊட்டிச்சென்றார், டாக்டர்பி.ஆர். ரெட்டி (வீட்டு அறிவியல்) ஒருமுறை வந்து சென்றார். தேவ சங்கீதம், கடிகாசலம் (ஆய்வு மாணவர்கள்), டாக்டர் சௌரிராசன் (விரிவுரையாளர்) அடிக்கடி வந்து கவனித்துக் கொண்டனர். டாக்டர் S. நாராயணராவ் படுக்கையாக இருந்தபோது அவரைப் பார்க்கச் சென்ற டாக்டர் D. சகந்நாத ரெட்டி படுக்கையாய்க் கிடந்த என்னைப் பார்க்க வரவில்லை. ''இவன் ஒழிந்தால் டாக்டர் தாமோதர னுக்குப் போட்டியும் ஒழியும்; பேராசிரியராக்கி விடலாம்'' என்று நினைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. டாக்டர் சகந்நாத ரெட்டி வரவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அவரது பாரபட்சத்தைக் காட்டவே இதனை எடுத்துக் காட்டினேன், எல்லாவற்றையும் இறைவனுக்கு விட்டு விட்ட என்னைப் பார்க்க யார் வந்தால் என்ன? வாராது போயினால் என்ன? என் உடல் நிலை சீரான பின்பு பல நாட்கள் கழித்து மு. வ. வீட்டு விருந்தில் பயன்படுத்தப் பெற்ற கத்தரிக்காயில் பூச்சி மருந்து அடித்ததால் ஏற்பட்டதன் விளைவு என்ற செய்தி எட்டியது. சுமார் விருந்துண்ட 500 பேருக்கு இப்படி வயிற்றுப்போக்கு ஏற்பட்டதையும் அறிந்தேன். அதிக மாகக் கூட்டை உண்டதால் எனக்கு அதிகத் தொல்லை ஏற்பட்டது.

□ □ □

டாக்டர் D. சகந்நாத ரெட்டியை ஓர் இதய மருத்துவர் என்று சொல்லாம், கல்வி உலகிற்கு ஓர் இதயம் போன்றி ருக்கும் பல்கலைக் கழகத்தின் தூய்மையைக் காத்தவர். அதன் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் கட்டடத்தின் உட்புறச் சூழ்நிலையையும் பேணிக் காத்தவர். சில சமயம் அவர் ஏறவும் —இறங்கவும் பயன்படுத்தப் பெறும் மின் பொறியைப் (Electric Lift) பயன்படுத்தாமல் கால் நடை யாகவே ஏறுவார். தாம் செல்லும் வழியில் (கட்டடத்திற் குள்) ஒரு சிறு காகிதத் துண்டு கிடந்தாலும் அதைக்

குனிந்து எடுத்து அதை ஒரு மூலையில் வைக்கப் பெற்றுள்ள குப்பைத் தொட்டியில் போடுவார்; பலருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக மெதுவாகவே இதைச் செய்வார்; நல்லெண்ணத்தோடுதான் இதைச் செய்வார்; பிறரும் இவ்வாறு செய்தல் வேண்டும் என்பதற்காகவே செய்து காட்டுவார். இதைச் சில எழுத்தர்கள், கடைநிலை ஊழியர்களில் யாரோ ஒருவர் துணைவேந்தர் செய்யும் பாவனையில் செய்து காட்ட, பிறர் இதைக் கண்டு நகைப்பர். இச்செயல் நாடகபாணியில் செய்யப் பெறுவதால் நகைப்பிற்கு இடமாகிச் சிரிப்பை விளைவிக்கும்; இச்செயல் ஒருவித போலி நடிப்பாகத் (Mimicry) தோற்றும். இவர் காலத்தில் பல்கலைக் கழகத்தில் நிலவிய ஒழுங்குமுறை வரவரத் தளர்ந்து இப்போது அதுவே இல்லை என்ற தோற்றம் அளிக்கின்றது.

இவரையும் இவர் காலத்தில் பதிவாளராக இருந்த M.K. இராமகிருஷ்ணனையும் (ஆங்கிலப் பேராசிரியர்) சில நகைச்சுவைப் பேராசிரியர்கள் டான்குக்ஸாட் சாங்கோ பான்சாவாக உருவகப்படுத்திப் பேசுவதுண்டு. துணைவேந்தர் தெலுங்கர் (இல்லை, தமிழர்); பதிவாளர் ஒரு மலையாளி (கேரளத்தைச் சேர்ந்தவர்). வட்டரங்குகளில் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களை அடக்கி யாள்பவர் பெரும்பாலும் மலையாளிகளாகவே இருப்பர். இக்காட்சியை நினைந்த வண்ணம் சிலர் துணைவேந்தரைச் சிங்கமாகவும் பதிவாளரை அதை நெறிப்படுத்தும் மலையாளியாகவும் உருவகப்படுத்திப் பேசுவதுண்டு. பொதுவாக இத்தகைய கேலிப் பேச்சில் உண்மையும் இருக்கும். ஆனால் எவரும் இருவர் உள்ளத்தையும் துன்புறுத்தும் நோக்கில் செய்வதில்லை. இவர்கள் காலத்தில் நடைபெற்ற நிர்வாகம்போல் இவர்கட்குப்பின் இன்றளவும் அமையவில்லை.

☐ ☐ ☐

டாக்டர் K. சச்சிதானந்த மூர்த்தி துணைவேந்தராக இருந்தபோதுதான் 1976-பிப்பிரவரியில் என் மூத்தமகன்

இராமலிங்கத்தின் திருமணம் வேலூரிலும், இளையமகன் டாக்டர் இராமகிருஷ்ணனின் திருமணம் 1977 ஜூனில் திருச்சியிலும் நடை பெற்றது. இவற்றையொட்டி திருப்பதியில் 700 பேருக்கு என்று திட்டம் போட்டு வரவேற்பு நிகழ்ச்சியொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். இரண்டிற்கும் துணைவேந்தர் டாக்டர் K. சச்சிதானந்த மூர்த்தியும் பதிவாளர் டாக்டர் கேசவமூர்த்தியும் வரவில்லை. எங்கேயோ இருந்து வந்த தமிழ்ப் பேராசிரியர் வீட்டு நிகழ்ச்சிக்குப்போனால் என்ன? போகாவிட்டால் என்ன? என்று நினைத்துக் கொண்டுவராதிருந்த விட்டார்கள். துணைவேந்தர் D. சகந்நாதரெட்டியும் பதிவாளர் திரு. M. K. இராமகிருஷ்ணனும் பதவியில் இருந்திருப்பார்களேயாயின் கட்டாயம் வந்திருப்பர். திரு. S. A. அனந்தசயனம் ஐய்யங்காரும் என் அருமை நண்பர் அரங்கசாமி ஐய்யர் (இலால் குடி தலைமையாசிரியர்) கூட மகன் வீட்டிலிருந்ததால் மருமகளுடன் வந்து சிறப்பித்தார். திரு. அனந்தசயனம் ஐய்யங்கார் சுமார் 1½ மணிநேரம் தங்கிப் பேசிக் கொண்டிருந்ததை இன்னும் என் நினைவில் பசுமையாகவுள்ளது. நூலக அன்பர்கள் திரளாக வந்திருந்தனர். பதிவாளர் அலுவலகத்தில் ஒருவர் கூட வரவில்லை. முதல்வர் அலுவலகத்திலிருந்து K. சந்திரசேகரும் சஞ்சீவிநாயுடும் வந்து சிறப்பித்தனர். சிற்றுண்டி அதிகமாக மிஞ்சிவிட்டது. பொட்டலங்கள் கட்டி அக்கம் பக்கத்திலுள்ள முப்பது வீடுகட்கு அனுப்பிவைத்தேன். காஃபி கெடாமலிருந்ததால் மறுநாள் காலை விறகு பொருக்க வருபவர்கள், பால்காரர்கள், பல கடை நிலை ஊழியர்கள் (தோட்டிகள்) இவர்கட்கெல்லாம் வழங்கி விட்டேன். வீட்டில் இடமில்லாததால் கொட்டகை போட்டு மின்விளக்கு அமைப்புடன் ஏற்பாடு செய்திருந்தேன். வீட்டில் வாழை மரங்கள் தோப்பாக வளர்ந்திருந்ததால் அவற்றை வெட்டிக் கொட்டகையில் கட்டினேன். நிகழ்ச்சி சிறப்பாகவே அமைந்து விட்டது.

நான் குடியிருந்த புது வீட்டில் வீட்டிற்குள் ஒருமுற்றம் இருந்தது. அது சிமிட்டித் தரையாக்கப் பெறாமல் இருந்தது. அதைச் சிமிட்டித்தரையாக்கினால் திருமண வரவேற்புக்கு வசதியாக இருக்கும் என்று பல்கலைக் கழகப் பொறியாளர் திரு. சந்திரமௌளிரெட்டிக்கு எழுதிக் கேட்டேன். அதற்கு நிதி இல்லை என்று கையைவிரித்தார். பக்கத்தில் குடியிருக்கும் டாக்டர் கமலநாதன் வீட்டிலும் துணைப்பதிவாளர் அஞ்சனப்பா வீட்டிலும் போடப் பட்டுள்ளதே! இவற்றிற்கு மட்டிலும் நிதி எப்படி வந்தது? என்று கேட்டதற்கு "அவை மேல் மட்ட விஷயம்" என்றார்; என் செலவில் போட ஒப்பினால் உடனே செய்து தருவதாக வாக்களித்தார். அப்படிச் செய்யுமாறு கடிதமும் எழுதினேன். இரண்டே நாட்களில் வேலையை முடித்துத் தந்தார்; ரூ350/-க்குப் பில்லும் வந்தது. வரவேற்பு நிகழ்ச்சி முடிந்து ஒரு வாரத்தில் துணை வேந்தரைச் சந்தித்து என் செலவில் போடப்பெற்ற சிமிட்டி தரைக்கான செலவு குறித்துப் பேசினேன். "இன்னும் மூன்று மாதத்தில் ஓய்வு பெறும் நான் இந்த பில்லைக் கட்டவேண்டுமா?" என்று கேட்டதற்கு "பில்லை இணைத்துப் பதிவாளருக்குக் கடிதம் எழுதுங்கள்" என்றார். அவ்வாறு செய்து இந்தச் செலவைத் தவிர்த்தேன்.

☐ ☐ ☐

இராமலிங்கத்திற்குத் திருமணம் ஆகி மூன்று மாதத்தில் வீட்டில் ஒரு களவு நிகழ்ந்தது. இராமலிங்கமும் அவன் மனைவியும் சாளரத்தின் ஓரத்தில் படுத்திருந்தனர். சாளரத்தைச் சுற்றிலும் முக்கால் அடி மறைப்புச் சுவர் இருந்தது; ஆள் ஏறி சாளரத்தில் உட்கார்ந்து கொண்டால் தெருவில் போவாருக்கு ஆள் உட்கார்ந்திருப்பது தெரியாது. வீடுகளும் ஊரைத்தாண்டி 2 மைல் தொலைவில் கட்டப் பெற்றிருந்ததால் ஆளரவம் அதிகம் இருப்பதில்லை; திருடுகிறவர்கட்குச் சரியான வாய்ப்பு. யாரோ இரவு

இரண்டு மணிக்கு வந்து சாளரத்தில் ஏறிப்பார்த்திருக்க வேண்டும். பையன் சாளரத்தின் ஓரத்தில் படுத்திருந்தான்; பயனில்லை என்று கள்வன் போய்விட்டான். மூன்று மணிக்கு வந்து பார்த்தபோது மருமகள் சாளரத்தின் ஓரத்தில் படுத்திருக்க கண்டு தாலித் சங்கிலியை (10 சவரன்) அறுத்துக் கொண்டு போய்விட்டான். போலீசில் புகார் செய்தேன்; வந்து பார்க்கக்கூட இல்லை. துணைவேந்தர், பதிவாளரைப் போலீசுக்கு தொலைபேசி மூலம் பேசச் சொன்னேன்; பேச மறுத்து விட்டனர். பல்கலைக் கழக வீடுகளில் குடியிருந்ததால் இதைச் செய்திருக்கலாம்; செய்யவில்லை. என்ன செய்வது? பல்கலைக் கழக நிர்வாகம் அப்படி. பின்புறமும் முன்புறமும் உள்ள கதவுகளில் கள்ளன் தாழ்ப்பாள் போட்டுவிட்டால் வீட்டை விட்டு வெளியில் வந்து பிறர் உதவியை நாடவும் முடியவில்லை. இது ஒருவகை அநுபவம்

□ □ □

இரகுபதி என்பவர் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 4 ஆண்டுகள் பணி புரிந்தார். துணைவேந்தர் தயவால் வந்தவர்; என் உதவியும் சிறிது இருந்தது. 4 ஆண்டுகட்குப் பிறகு அவர் மனக் கோளாறு அடைந்தார். வகுப்பு எடுப்பதில்லை. பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஓராண்டு பொறுத்துப் பார்த்தேன். பல்கலைக் கழகத்திற்கு எழுதி அவரை விலக்கச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பிறகு ஒன்றரை ஆண்டுக் காலம் அவர் இடத்திற்கு ஆளே போடவில்லை. எத்தனையோ கடிதங்கள் எழுதியும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வேலையை தேவசங்கீதம் என்ற ஓர் ஆராய்ச்சி மாணவருக்குத் தந்தேன். மாணாக்கர்கள் தேர்வு எழுத வேண்டியவர்கள் அல்லவா? தேவசங்கீதத்திற்கு பல்கலைக் கழக மானிய ஆணையம் ரூ 750/-படிப்புதவி அளித்தது. ஆயினும் ஓராண்டு வகுப்பு வேலை செய்ததால் அவரது ஆய்வுப்

பணி கெட்டது; சுணங்கியது. ஓர் ஆண்டுகள் கழிந்ததும் குறிப்பிட்ட காலத்தில் பிஎச்.டி. ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க முடியவில்லை. படிப்புதவி பெறாத ஆய்வு மாணவர்கள் வகுப்பு வேலை செய்ய நேரிட்டால் வாரம் ரூ 50/- அனுமதிக்கலாம் என்று சுற்றறிக்கை ஒன்று பல்கலைக் கழகத்திலிருந்து வந்திருந்தது. அதைப் பயன் படுத்திக் கொண்டு ஆறுமாதம் வகுப்பு வேலை (எந்தப் படிப்புதவியும் இல்லாமல்) செய்த தேவசங்கீதத்திற்கு ரூ 1200/- வழங்க வேண்டும் என்று கடிதம் எழுதினேன், சுமார் 1½ ஆண்டு வகுப்புப் பணி செய்ததில் ஓராண்டு பல்கலைக்கழக மானிய ஆணையம் படிப்புதவி பெற்ற தனால் அந்தக் காலப் பகுதிக்குக் கேட்கவில்லையென்றும் பல கடிதங்கள் பதிவாளருக்கு எழுதியும் விரிவுரையாளரை நியமனம் செய்யாததால் இந்நிலை எழுந்தது என்றும், தேர்வுக்குப் போகும் மாணவர்களின் நலனைக் கருதி இந்த ஏற்பாடு செய்ய வேண்டி நேரிட்டது என்றும் விளக்கி எழுதினேன்.

பல்கலைக் கழக அனுமதி இல்லாமல் தேவசங்கீதத் திற்கு வேலை தந்ததற்குத் தக்க சமாதானம் கேட்டுக் கடிதம் வந்தது. 1½ ஆண்டுகளாக விரிவுரையாளர் நியமனம் செய்யுமாறு கேட்டு எழுதியும் பல்கலைக் கழகம் தக்க நடவடிக்கை எடுக்காததாலும், மாணவர்கள் தேர்வுக் குப் போக வேண்டியிருந்ததாலும், தேவசங்கீதத்திற்கு ரூ 750/- படிப்பூதியம் கிடைத்து வந்ததாலும், படிப்புதவி இல்லாதவர்கள் வகுப்பு வேலை செய்யும் சுற்றறிக்கை யைப் பார்க்க நேரிடவில்லை என்றும், அவர் கட்டுரை சமர்ப்பிப்பதில் ஆறுமாதம் தாமதம் ஏற்பட்டதால் அக்காலப் பகுதிக்கு மட்டிலும் கேட்டு எழுதியதாகவும், கட்டுரை சமர்ப்பித்த பிறகு இச்சுற்றறிக்கையைப் பார்க்க நேரிட்டது என்றும், இதன் காரணமாகத்தான் சுற்ற றிக்கையின் பலனை அவனை அனுபவிக்கச் செய்யலாம் என்று எழுதியதாகவும். அதற்காக காலத்தில் எழுதாத

இந்த தவறுதலைப் பொறுத்து மாணவனுக்கு உதவ வேண்டும் என்றும், அப்படி உதவப் பல்கலைக் கழகம் முன்வராவிட்டால் தாம் செய்த பணி மாணவர் நலனுக்குக் காகச் செய்த தியாகமாக மாணவர் கருதுவதாகவும் பணிவாக ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய உள்ளம் தூய்மையாக இருந்ததாலும், மாணவனும் தன் பணியைத் தியாகமாகக் கருதும்படி கூறியதாலும் இறைவன் அருள் செய்தான்; பல்கலைக் கழகமும் ரூ 4200/- தேவசங்கீதம் பேருக்குக் காசோலை அனுப்பி உதவியது. இப்படி யெல்லாம் மாணாக்கர் நலனுக்கு உழைத்ததை நினைக்கும் போது என் மனம் பூரிக்கின்றது.

□ □ □

தமிழ்த்துறை இருந்தும் வகுப்புகளைத் தவிர வெளி யில் தமிழ் ஒலிகளைக் கேட்கும் வாய்ப்பில்லை; ஏற்கெனே 'தமிழ்த் தாய் வாழ்த்து' பற்றிய இசைத் தட்டு வாங்கி எல்லாக் கூட்டங்களிலும் அதை முதலில் பாடும் வழக்கத்தை ஏற்படுத்தியிருந்தேன். இசைத் தட்டுகள் போடும் கருவியொன்றும் துறைக்கு வாங்க வேண்டும் என்று என் மனம் கருதியது. பணம் வேண்டுமே. யோசித்துக் கொண்டிருக்கையில் 'பொய்யா மொழி' ஆசிரியர் A. ஆதிமூலத்தின் நினைவு வந்தது. இவர் பி.ஏ., எம்.ஏ. அஞ்சல் வழிக் கல்வி மூலம் பெறுவதற்கு அவ்வப்போது சிறிது உதவினோம். இவரது திருமகன் மெட்ரிக் தனியாகப் படிக்கும் போது தேர்வுச் சமயத்தில் ஒரு மாதம் என் இல்லத்தில் தங்கிப் படித்தான்; என் பிள்ளை போல் உண்டி உறையுள் தந்து உதவினேன். திரு. ஆதிமூலம் தெய்வ சிந்தனையுள்ளவர். இயலும் வகைகளிலெல்லாம் பிறருக்கு உதவும் பண்பினர். செல்வச் செழிப்பிற்கும் குறைவில்லாதவர். நாளிதழ்களின் ஏஜண்டாகவுள்ள பணியிலும் நல்ல வருவாய் வந்து கொண்டிருந்தது. சென்னையில் ஏதோ வேலையாக வந்திருந்தபோது "இசைத்தட்டு போடும் கருவி (Record Player) ஒன்று துறைக்கு வேண்டும். யாராவது

நன்கொடை தந்தால் வாங்கலாம். யாரைக் கேட்பது என்ற ஐயத்தால் தயங்கிக் கொண்டிருக்கின்றேன்'' என்றேன். உடனே அவர் என்னை அவர் காரிலேயே இட்டுச் சென்று (ரூ 525/-விலை என்பதாக நினைவு) கருவியொன்றையும் சில நல்ல இசைத்தட்டுக்களையும் வாங்கித் தந்து என்னை மகிழ்வித்தார்; துறையினரிடையே யும் மகிழ்ச்சி பொங்கக் காரணமாயிருந்தார். திருப்பாவை, திருவெம்பாவை, வெண்ணீற்றுப் பதிகம், போன்ற இசைத் தட்டுகளை துறைக்கென்று சேமித்து வைத் துள்ளேன். துறையில் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடை பெறும்போது இவற்றைப் பயன்படுத்தி வந்தேன்.

□ □ □

முதுகலை வகுப்பு தொடங்கப் பெறுவதற்கு முன் விரிவுரையாளர் பதவிக்கு மட்டிலும் பணம் ஒதுக்கப் பெற்றிருந்தது. இந்த வகுப்பு தொடங்கப் பெற்றபோது பேராசிரியர்—1, துணைப் பேராசிரியர்—1, விரிவுரை யாளர்—1 என்ற பதவிகட்குப் பணம் ஒதுக்கப் பெற்றது. தொடக்கக் காலத்தில் இரண்டு துணைப் பேராசிரியர்கள் நியமனம் பெற்றனர். மூன்றாவதாக ஒரு விரிவுரையாளர் (திரு. P. சௌரிராசன்) நியமனம் பெற்றார் (சனவரி—1971). அடுத்து, சூன் சூலையில் (1971) இன்னொரு விரிவுரையாளரும் (T.J. இரகுபதி) நியமனம் பெற்றார். இன்னொரு விரிவுரையாளர் பதவிக்கும் பல தடவை பல்கலைக் கழகத்திற்கு எழுதி இசைவு பெற்றேன். இப்போது துறைக்கென்று ஐந்து பேருக்கு வாய்ப்பு இருந்தது. பேராசிரியர் பதவிக்குரிய தொகையைக் குறைத்து அதை விரிவுரையாளர் பதவியாக்கினார் டாக்டர் ரெட்டி; அவர் காலத்தில் ''தமிழ்ப்பேராசிரியர்'' பதவி யாருக்கும் தரப்போவதில்லை என்பதைத் தெளிவாக்கினார் துணைவேந்தர் டாக்டர் D. சகந்நாத ரெட்டி. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் இவர். தன்னை ஆந்திரர் என்று காட்டிக் கொண்டு இருந்தவர். அடுத்து துணை வேந்தராக வந்த பேராசிரியர்

K. சச்சிதானந்த மூர்த்தி என்பவர்—இவர் ஆந்திரர்—பேராசிரியர் பதவிக்குப் பணம் ஒதுக்கீடு செய்து பேராசிரியர் பதவியையும் நிரப்பியவர். பேராசிரியர் இல்லாத துறையே இருத்தல் கூடாது என்று திட்டம் போட்டு செயற்படுத்தின பெருமகன் இவர். மனிதருக்கு மனிதர் கொள்கைகளிலும் உயர் நோக்கங்களிலும் செயற்படுவதிலும் வேறுபடுகின்றார்கள். டாக்டர் D. சகந்நாத ரெட்டியின் செயலை நோக்குமிடத்து அவர் சாதி அடிப்படையில் செயற்பட்டார் என்று கருதுபவர்க்கு அவர் ஒரு விநோதமான மனிதர் என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஆந்திரரெட்டிகளில் டாக்டர் ஜெயராமரெட்டியின்மீது காட்டிய பரிவு வேறு ரெட்டிகளிடம் காட்டவில்லை. தமிழர்களில் (இருவர் தாம் இருந்தனர்) திரு T, J. இரகுபதியிடம் காட்டிய பரிவு (அவர் சொந்தவூருக்கு அருகிலுள்ள சிற்றூரைச் சேர்ந்தவர்) என்னிடம் காட்டவில்லை; மாறாக, தீங்கு செய்யாவிடினும், நன்மை செய்யவில்லை; செய்யவும் நினைக்கவில்லை. ஆனால் சாதிக் கொள்கைக்கு அப்பாற்பட்டவன் நான்; இதனால் அவர் எது செய்தாலும் நான் சாதி அடிப்படையில் அதைநோக்குவதில்லை. வேறொரு சாதியியைச் சேர்ந்தவர் மிகத் திறமையினராக இருக்கும்போது தம் சாதியினரைச் சார்ந்தவர் ஒருவர் அவரை விடக்குறைவான திறமையுள்ளவரை ஒரு பதவியில் அமர்த்துதல், விதிகளை வளைத்து நியாயப்படுத்திக் காட்டல், கொலைக்குற்றம் புரிபவரை விடக் கொடுமையானவர் என்பது என் கருத்து.

□ □ □

பெரியபதவியிலிருப்பவர்கள், ஆணவத்தால், தவறான முடிவு எடுக்கும்போது, குழப்பமும் கொந்தளிப்பும் எழும். துன்பப்படுபவர்கள் போர்க் கொடி எழுப்புவார்கள். இன்று கல்விக் கூடங்களில் ஏற்படும் குழப்பத்திற்கு உயர் பதவியிலிருப்பவர்கள் எடுக்கும் தவறான முடிவுகளே

காரணமாகும். மாணவர்கள் மனமுதிர்ச்சியின்மையால் சில செயல்களைப் புரிந்தாலும் அவர்களிடம் பரிவுடன் பேசித் திருத்தலாம்; அவர்களை ஐயக்கண் கொண்டு பார்த்தல் ஆகாது. அவர்களை அணுகுவதில் தந்தை-தனயன் பாசம் வேண்டும். ஒரு சமயம் தேர்தல் சமயத்தில் மாணவர்கள் தேர்வுகளை ஒரு மாதம் தள்ளி வைக்கும் படி பல்கலைக் கழகத்திற்கு வேண்டுகோள் விடுத்தனர். துணைவேந்தர் டாக்டர் ரெட்டி பரிவுடன்தான் செயற் பட்டார்; ஆட்சிக்குழுக் கூட்டத்தில் வைத்து தேர்வை 3 வாரம் தள்ளி வைக்க அனுமதி பெற்றார். கூட்டம் முடிந்து துணைவேந்தர் தம் அறைக்குத் திரும்பியதும் பத்துப் பன்னிரண்டு மாணவர்கள் துணைவேந்தரைப் பார்த்து முடிவு தெரிந்து கொள்ளக் காத்திருந்தனர்; அவரையும் பார்த்தனர். ''நான் ஆட்சிக் குழுவினரைச் சரிப்படுத்தி உங்கள் கோரிக்கையை நிறைவேறச் செய் தேன். நீங்கள் கவலைப்படவேண்டாம், அறைக்குத் திரும்பி நன்றாகப் படியுங்கள். மாணவர்கட்குத் தானே பல்கலைக் கழகம் உள்ளது? என்னால் இயன்ற வரை உங்கட்கு வேண்டிய நன்மைகளைச் செய்வேன்'' என்று அன்பாகப் பேசி ஆறுதல் கூறி அனுப்பியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

சீறினார்; சினந்தார். கண்ணோட்டம் சிறிதுமின்றி நடந்து கொண்டார். 'தன்னைத்தான் காக்கின் சினங் காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்' (குறள்—305) என்ற வள்ளுவர் வாக்கை அறியாது செயற் பட்டார். சினம் பலிக்குமிடத்தில் காத்துக் கொள்பவரே சினம் காப்பவர். இது அருளுடையவர் செயல். பாரதியாரும்,

சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவார் ஒப்பாவார்; சினங்கொள்வார்தாம்
மனங்கொண்டு தம் கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார்; மானு வாரா[3]

என்று சொல்லியுள்ளார். சினங்கொள்ளும் போது குருதியும் கொதிக்கும்; இதைக் கூட மருத்துவ நிபுணராகிய டாக்டர் ரெட்டி அறியவில்லையே. கூட்டத்தைச் சமாளிப்பதற்கு உளவியல் உண்மை தெரிந்திருக்க வேண்டும். பொறுமையுடன் பேசினால் படமெடுத்தாடும் நாகப்பாம்பு வேருக்கு முன் பணிவதுபோல் சீறியெழும் மாணவர்கள் பணிந்து விடுவார்கள். ஆனால் டாக்டர் ரெட்டி என்ன செய்தார்: 'நீங்கள் உங்கள் தாடி வளர்ந்து நரைகாணும் வரையிலும் போராடினாலும் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது; என்னை ஓர் அங்குலம் கூட உங்களால் நகர்த்தமுடியாது; பணிய வைக்க முடியாது. வெளியே நடங்கள்'' என்றார். மாணவர்கள் கீழே இறங்கி ஓடி வந்தார்கள். வாயில்படியில் நின்ற காரை நொறுக்கி நொாங்க வைத்தார்கள். பெட்ரோலைத் திறந்து விட்டுக் காரை கொளுத்த நினைத்தார்கள். ஒருவர் கையிலும் தீப்பெட்டி இல்லை. அதற்குள் பல்கலைக் கழகச் சிப்பந்திகளில் சிலர் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி விட்டார்கள். இதற்குள் தேர்வுகள் தள்ளி வைக்கப் பட்ட செய்தியும் பரவியது; கொந்தளிப்பும் அடங்கியது.

கட்டில் வேண்டுமென்று மாணாக்கர்கள் வேலை நிறுத்தம் தொடங்க நினைத்தபோது டாக்டர் V.C. வாமன் ராவ் சமாளித்ததை நேரில் கண்டேன். டாக்டர் சகந்நாத ரெட்டி முடிவு எடுத்த பிறகும் அதைச் சொல்லாமல் சீறி எழுந்ததையும் கண்டேன். கடுமையாக உழைத்தால் மட்டிலும் போதாது; மனிதருக்கு இங்கிதமும் வேண்டும்.

3. பாகவ : சுயசரிதை (பாரதி அறுபத்தாறு—8)

ஆணவமலம் செயற்படத் தொடங்கினால் அறிவு செயற்படுவதை அது மறைத்து விடும் என்ற சிந்தாந்த உண்மையை நினைத்துக் கொண்டேன்.

குமிழி—230

## 74. 'வேமனர்' உதயமும் என் பதவி உயர்வும்

**1976**-ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். சென்னையிலுள்ள சாகித்திய அக்காதெமியிலிருந்து ஒரு வேண்டுகோள் வந்தது—திரு.வி. ஆர். நார்லா எழுதிய **வேமனர்** என்ற சிறு ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்ய வேண்டும் என்று; ஒப்புக் கொண்டேன். பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் இப்பணியை ஒரு தெய்வப் பணியாக ஏற்றுக் கொண்டேன். இதற்குக் காரணம் என்ன? வேமனர் தெலுங்கு மொழியில் ஒரு மாபெருங்கவிஞர்; மக்கட் கவிஞர். இவரைப்பற்றித் தமிழ்ப் பெருமக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு தருவதற்கு ஒரு கருவியாகப் பயன்படப் போகின்றேன் என்ற ஒரு பெருமித உணர்ச்சி என்பால் எழுந்தது; எக்களிப்பும் தோன்றியது. இதுகாறும் உயிரியலில் (மானிட உடல்) ஒன்றும் இயற்பியலில் (அணுக்கரு பௌதிகம்) ஒன்றுமாக இரண்டு அறிவியல் நூல்களை மொழிபெயர்த்துள்ளேன். தவிர, அறிவியல் பயிற்றலில் (யுனெஸ்கோ; அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்) ஒன்றையும் மொழிபெயர்த்துள்ளேன்; இவை மூன்றும் தமிழ்ப்பெரு மக்களின் பாராட்டைப் பெற்றன; இரண்டாவதாகக் குறிப்பிட்ட நூல் சென்னைப் பல்கலைக் கழகப் பரிசையும் பெற்றது.

இலக்கியத்திலும் அதுவும் பிறமொழியிலிருந்து, தமிழுக்கு வரும் ஓர் இலக்கியத்தைப் பற்றிய ஓர் அறிமுகம் செய்யும் அளவில் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது குறித்துப் பெரும் பேறாகக் கருதி வேமனர் நூலை மொழி பெயர்க்க ஒப்புக் கொண்டேன். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சிறிது சிறிதாகச் செய்து தமிழாக்கப் பணியை ஒருவாறு நிறைவேற்றினேன்.

இந்தத் தமிழாக்கப் பணியைச் செய்யும் போது என்னுடைய பிஎச். டி. ஆய்வு நூல் (இஃது ஒரு பெரு நூல் — அச்சில் சுமார் 950 பக்கங் கொண்டது) அச்சாகி வந்தது. நாடோறும் பார்வைப் படிகளைச் சரி பார்க்க வேண்டும்; உடனுக்குடன் பல்கலைக்கழக அச்சகத்தில் சேர்க்க வேண்டும். இரண்டு 'பிஎச், டி. ஆய்வு மாணாக் கர்கள் கட்டுரைகளைப் பல்கலைக் கழகத்திற்குத் தர வேண்டிய காலகட்டங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. அவர்களுடைய கட்டுரைகளைத் (ஆங்கிலத்தில் எழுதப் பெற்றவை) தட்டச்சுக்குப் போவதற்குமுன் வரி வரியாகப் பார்த்துச் செய்ய வேண்டிய பணி இருந்து வந்தது. முதல் முறை தட்டச்சு செய்தவற்றையும் சரி பார்த்துப் பச்சைக் கொடி காட்டும்' பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தேன். ஒருவர் ஒருவாறாக முடித்துத்தரும் நிலைக்கு வந்து விட்டார்; இறுதியில் தந்து பட்டமும் பெற்றுக் கொண்டார். மற்றொருவர் வேகமாக எழுதித் தட்டச்சு செய்துகொண்டிருந்தார். இதைச் சரிபார்க்க வேண்டும் சில மாதங்கள் வீட்டில் இரவு கண் விழித்துச் செய்ய வேண்டி யிருந்தது. இன்னொரு எம், ஃபில் கட்டுரையையும் சரி பார்க்க வேண்டியருந்தது. இதுவும் ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற கட்டுரை. ஏதோ என்னுடைய அறிவுக் கெட்டிய படி பிஎச், டி. எம். ஃபில் கட்டுரைகளை ஆங்கிலத்தில் தான் எழுத வேண்டும் என்றும் இவற்றுக்குரிய எழுத்துத் தேர்வுகளையும் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும் என்ற மரபையும் ஏற்படுத்தியிருந்ததால் மாணாக்கர்களும் கடின

உழைப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது; எனக்கும் அதிகமான வேலை குவிந்தது.

சாகித்திய அக்காதெமிக்கு வேமனரின் தமிழாக்கத்தில் இரண்டு படிகள் தர வேண்டும். திருப்பதியில் தமிழ் தட்டச்சு செய்ய வாய்ப்பும் வசதியும் இல்லை. என் சொந்தப் பணியை — அது எந்த விதமான பணியாக இருந் தாலும் — என் மாணாக்கர்கட்கு இடுவதில்லை. தாங்க முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டு விட்டதால் ஃபூலஸ் கேப் அளவு தாளில் உள்ள 220 பக்கங்களை ஏழெட்டு மாணாக்கர்களிடம் பிரித்துத் தந்து படி எடுக்கச் சொன்னேன். சாகித்திய அக்காதெமியிலிருந்து தொடர்ந்து நினைவூட்டுக் கடிதங்கள் வந்த வண்ணம் இருந்ததால் இவ்வாறு மாணாக்கர்களிடம் இப்பணியை ஒப்படைக்க வேண்டியிருந்தது. பிறகு இவ்வாறு பலரால் படியெடுக்கப்பட்டதை தலையாய ர் ஆய்வு மாணாக்கரை வைத்துக் கொண்டு நானே சரி பார்த்தேன். படியெடுத்தல் பணியை ஒருவர் கூடச் சரியாகச் செய்யவில்லை என்பதை அறிய முடிந்தது. ஒற்றுப் பிழைகள், வரிகளைவிட்டெழுது தல், சொற்கள் சொற்றொடர்களை விட்டெழுதுதல். நிறுத்தற்குறிகளைக் கவனியாதெழுதுதல் போன்ற பல்வேறு பிழைகள் மலிந்திருந்தன. இவற்றையெல்லாம் திருத்தி கைப்படிகளைச் சாகித்திய அக்காதெமிக்கு அனுப்பிவைத்தேன். ஆனால் நூல் உடனே வெளிவர வில்லை., ஆமை வேகத்தில் அச்சு வேலை நடைபெற்றது; நத்தை வேகத்தில் பார்வைப் படிகள் வந்தன. நான் திருத்தித் திருத்தியனுப்பிய பார்வைப் படிகள் 'விரைவு வண்டி' வேகத்தில் சென்றன; ஆனால் நூல் நான் ஓய்வு பெற்றுச் சென்னையில் குடியேறிய பின்னர்தான் வெளி வந்தது (1978). இஃது என்னுடைய முப்பது மூன்றாவது வெளியீடு.

இந்தக்கால கட்டத்தில் இன்னொரு முக்கிய நெருக்கடி நிலை—இஃது என் வாழ்வு பற்றியது—

ஏற்பட்டது, துணைவேந்தர் டி. சகந்நாத ரெட்டியின் ஆட்சிக் காலத்தில் (1969-75) கொடுக்காமல் தேக்கி வைக்கப் பெற்றிருந்த பதவி உயர்வு(அதாவது பேராசிரியர் பதவி) துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் கே. சச்சிதா நந்த மூர்த்தி காலத்தில் எனக்குக் கிடைக்கக்கூடிய ஊழ் ஏற்பட்டது. நான் ஓய்வு பெறுவதற்கு இன்னும் ஓராண்டுக் காலமே இருந்ததையும், என்னுடைய சுறுசுறுப்பாக இயங்கும் பண்பையும், கடுமையாக உழைக்கும் ஆற்றலை யும், சுமார் நாற்பதிற்கு மேற்பட்ட வெளியீடுகளையும் நேரில் நன்கு கண்டு தெளிந்த பேராசிரியர் மூர்த்தி அவர்கள், பல்வேறு பதவிகட்கு விளம்பரம் செய்யும்போது தமிழ்ப் பேராசிரியர் பதவியையும் விளம்பரத்தில் சேர்த்து விளம்பரம் செய்தார். எல்லாத்துறைகட்கும் பேட்டிகள் நடைபெற்றன; தமிழ்த் துறைக்கும் பேட்டி நடை பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் N சஞ்சீவியும், மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் முத்து சண்முகமும் நியமன நிபுணர்க்குழுவில் இடம் பெற்றிருந்தனர். நானும் டாக்டர் தாமோதரனும் விண்ணப்பித்திருந்தோம். வேறு விண்ணப்பங்கள் வரவில்லை. எனக்கு எம். ஏ. கற்பித்தலில் பத்து ஆண்டுகள் இல்லாததால் எனக்கு இப்பதவி கிடைக்கக் கூடாது என்று பல ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தவர் இப்போது என்ன என்ன வெல்லாம் செய்து கொண்டிருப்பார் என்பதை நான் விளக்க வேண்டியதில்லை. வாசகரே ஊகித்துக் கொள்ள வேண்டியது.

'கொடுக்கிற தெய்வம் இருந்தால் அது கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்பது மக்களிடையே வழங்கும் ஒரு பழமொழி. பேராசிரியர் பதவி விளம்பரம் செய்யப் பெற்றதே எனக்குக் கிடைப்பதற்கான 'அறிகுறி' என்பது எல்லோர் கருத்திலும் பட்டது. இப்போது,

பெய்யு மாரியால் பெருகு வெள்ளம்போம்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
'ஐயநின்மகற்கு அளவில் விஞ்சைவந்து
எய்து காலமின்று எதிர்ந்த நரம் என்றான்[1]

என்ற கம்பராமாயணப்பாடல் நினைவுக்கு வருகின்றது. இது வசிட்டர் 'இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புக' என்றலைத் தெரிவிப்பது. 'அரசனே! பெய்கின்ற மழையினால் பெருகுகின்ற வெள்ளங்கள் சென்று கடலில் விரைந்து சேருவது போல், இராமனுக்கு அளவில்லாத வித்தைகள் வந்து சேரும்படியான நற்காலம் இன்று நேர்ந்ததாகும்' என்கின்றார். 'எனக்கு இந்தப்பதவி வருகின்ற காலம் எய்துகின்றதால்தான் இது விளம்பரப் படுத்தப் பெற்றுள்ளது' என்று நினைத்தேன்.

டாக்டர் கு. தாமோதரன் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தார். துணைவேந்தர், பதிவாளர், முதல்வர், டீன் இவர்களை எல்லாம் பார்த்துப் பேசினார், என்னைப்பற்றி அபாண்டமாகப் புறங்கூறி மகிழ்ந்தார். விண்ணப்பம் போட்டதைத் தவிர நான் எந்த முயற்சியும் செய்யவில்லை. 'வேங்கடவாணனின் அருள் இருந்தால் கிடைக்கட்டும்' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வாளா இருந்து விட்டேன். பேட்டியும் முடிந்தது. பேட்டி முடிந்ததும் குழு கலந்தாயும் போது கடுமையாக வாதங்கள் இருந்தனவாம். டாக்டர் சஞ்சீவி, 'நானும் டாக்டர் ரெட்டியாரும் (அப்போது இருவருக்குமே டாக்டர் பட்டம் இல்லை) 1960-இல் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தோம் என்னைவிட அநுபவம் மிக்கவராகவும், பலதரமான நூல்களின் ஆசிரியராகவும் இருந்தார்; வயதிலும் முதிர்ந்தவராக இருந்தார். தவிர, அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியர் (Professor) பதவியிலும் இருந்

1. கம்ப.. பாலகா. கையடை—15

தார். இத்தகுதிகள் எல்லாம் எனக்கு இல்லாதிருந்தும் அவருக்குப் போக வேண்டிய பதவி என் தலையில் விழுந்தது. அன்று அது அவர் தலையில் விழுந்திருந்தால் இப்போது நான் இருக்கும் நிலையில் (சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் இந்த நியமனக்குழு உறுப்பினராகவும்) அவர் இருப்பார். இப்போது இந்த இருவர் தகுதிகளையும் ஒப்பிடுங்கால் சம்பந்தா சம்பந்தமே இல்லை. டாக்டர் ரெட்டியார் எங்கே? டாக்டர் தாமோதரன் எங்கே? உழைப்பிலாவது ஒப்பீடு உண்டா? இல்லவே இல்லை என்பது தெளிவு. டாக்டர் ரெட்டியாரின் நூல்களே அவர்க்குப் பரிந்துரைகளாக இருக்கும். ஆதலால் இப்பதவி டாக்டர் ரெட்டியாருக்குக்தான் போக வேண்டும்'' என்று உருக்கமாக வாதித்து என்னை நியமிக்க வேண்டும் என்ற தீர்மானத்திலும் கையெழுத்திட்டாராம். ஏனையோரும் ஒப்புக் கொண்டனராம். இந்தச் செய்தியை ஓர் ஊர்க்குருவி என் காதோடு காதாகச் செப்பியது ஆயினும் எனக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் இச் செய்தி கிடைத்தது.

டாக்டர் தாமோதரனுக்கு இச்செய்தி குழுவின் கூட்டம் கலைந்ததும் ஓர் ஊர்க் குருவி மூலம் உடனே இச் செய்தி கிடைத்ததாம். டாக்டர் சஞ்சீவியையோ டாக்டர் முத்து. சண்முகத்தையோ வழியனுப்ப இருப்பூர்த்தி நிலைத்துக்கு நான் செல்லவில்லை. இங்ஙனமே அவர்களை வரவேற்கவும் செல்லவில்லை. பின்னர் அவர்கள் தங்கி யிருந்த இடத்திற்கும் சென்று அவர்களை நான் பார்க்கவும் இல்லை. முதலில் இது நாகரிகம் இல்லை; அடுத்து அவர் களை இக்கட்டான நிலைக்கும் ஆளாக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் டாக்டர் தாமோதரன் இருப்பூர்தி நிலையத்தில் பலர் இருந்தும் அவர்களைப் பொருட்படுத்தாமல்''என்ன சார், எனக்கும் ரெட்டியாருக் கும் ஏணி வைத்தாலும் எட்டாது; அவர் மிக உயரத்தி லிருக்கிறார் என்று சொன்னீர்களாமே'' என்று

கேட்டாராம். அதற்கு டாக்டர் சஞ்சீவியும், ''உண்மையைத் தான் சொன்னேன்; உங்கள் நெஞ்சில் நீங்களே கையை வைத்துப் பாருங்கள்'' என்று சொன்னாராம் இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த எல்லா ஊர்க் குருவிகளும் என்னிடம் வந்து கரைந்தன இதில் மூடி மறைக்க வேண்டியது ஒன்றுமில்லாமையால்.

இன்னும் டாக்டர் தாமோதரன் என்னென்ன கேடு நினைக்கின்றாரோ, செய்யப் போகின்றாரோ என்று என் மனம் நினைத்ததில் வியப்பொன்றும் இல்லை. ஆந்திரத்தில் திரு என். டி. இராமாராவை எதிர்த்துத் திரு என். பாஸ்கரராவ் (13-9-84) செயற்பட்டதுபோல் அன்று எனக்கு எதிராகச் செயற்பட்டார் திரு. தாமோதரன்; திரைமறைவில் செயற்பட்டார். நாயுடுமார்களின் கூட்டம் இதற்கு உறுதுணையாக இருந்தது. 'சாதி வெறி சமய வெறி இல்லாத என்னை' இப்படி ஏன் துன்புறுத்துகின்றனர் என்பது எனக்குப் புரியவில்லை. துணைவேந்தர் கம்மா நாயுடுவாக இருந்தும் அவர் செய்த செயலுக்கு எதிராக இப்படி ஏன் நாயுடுமார்களே எதிரம்பு கோத்து நிற்கின்றார்கள் என்பதையும் என்னால் ஊகிக்க முடியவில்லை. நானும் சாதாரண மனிதனாக இருப்பதால் என் மனம் கோபதாபங்கட்கு அப்போது உட்பட்டிருந்தது. ஆட்சிக் குழுவில் ஒன்றிரண்டு ரெட்டிப் பிரமுகர்களிலிருந்தும், உள்ளூரிலும் ஓரிரு ரெட்டிப் பெரியார்களிருந்தும் அவர்கள் உதவியை நாடவில்லை. காரணம் நான் சாதி வெறியினால் எந்தப் பெரியார்களிடமும் பழகவில்லை. இப்போதும் அவர்களை நாட என் மனம் ஒருப்படவில்லை. ஆனால் மனம் மட்டிலும் பல்வேறு விதமாகக் குமுறிக் கொண்டிருந்தது.

இப்போதைய மனநிலை அன்றில்லை என்பது வெள்ளிடை மலை. பன்னிரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. மனமும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. மனம் இரு

வினை யொப்பைச் சிந்திக்கின்றது; அதில் ஆழங்கால் படுகின்றது.

முப்பதுசென் றால்விடியும் முப்பதுஞ்சென் றாலிருளும்
அப்படியே ஏதும் அறிநெஞ்சே—எப்பொழுதும்
ஆங்காலம் எவ்வினையும் ஆகும் அது தொலைந்து
போங்காலம் எவ்வினையும் போம்.[2]

என்ற குருஞான சம்பந்தரின் பொன் மொழியை எண்ணுகின்றது. 'நல்வினைகளும் தீவினைகளும் தத்தம் கால எல்லையில் மாறிமாறி வருதலல்வது அவற்றை ஏய்துவோரது விருப்பத்தின் வழி வருதலும் போதலும் இல்லை' என்ற உண்மையை இப்போது தெளிகின்றேன். 'எல்லாம் சிவன் செயலே' என்ற உண்மையும் மனத்திற்குத் தட்டுப்படுகின்றது. 'வவ்விப், பொருகுவதும் புழுங்குவதும் வேண்டா; வருகுவதுந் தானே வரும்'[3] என்ற உண்மையிலும் மனம் தோய்ந்து விடுகின்றது.

2. சிவபோக சாரம் – 79
3. ஷை—78

# 75. பதவி உயர்வு ஆணை பெறுவதில் தடையும் அது நீங்கலும்

நியமனக் குழுக் கூட்டங்கள் நிறைவுற்றுப்பதினைந்து நாட்களுக்குள் ஆட்சிக் குழுக் (Syndicate) கூட்டமும் நடைபெற்று எல்லா நியமனங்களையும் ஒப்புக் கொண்டது. வெளிப்படையாக நடைபெற்ற பே(ா)ட்டியில் எல்லாம் நியாயமாக நடைபெற்றன. ஆனால் உள்ளுக்குள் மறையாக நடைபெற்ற பே(ா)ட்டியில் அநியாயம் தலைதூக்கி விட்டது. சாதிச் சதியால் நான்கு துறைகளில் நான்கு பேர் நியமனம் நிறுத்தி வைக்கப் பெற்றது; ஏனையோருக்கெல்லாம் நியமன ஆணை பிறப்பிக்கப் பெற்றது. இந்த நான்கு பேருக்கும் சில ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தடைக் கற்களாக அமைந்தனர். தமிழ்த்துறைக்கு டாக்டர் தாமோதரன் தலையீட்டால் திரு. சி. அண்ணராவ் தடைக்கல்லானார் என்பது வெள்ளிடை மலை; வேறு ஒன்றிரண்டு உறுப்பினர்களும் காரணமாக இருந்திருக்கலாம். அவர்கள் யாவர் என்பதை என்னால் அறியக்கூடவில்லை. இவர்கள் யாவரும் அரசினால் நியமிக்கப் பெற்றவர்கள். நெருக்கடி நிலை பிரகடனம் (Emergency) ஆனதிலிருந்து (1975) வேறு தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால் பல்கலைக் கழகப் பேரவை கல்வி ஆலோசனை அவை ஆகியவற்றில் பல்லாண்டுகள் தேர்தல்கள் நடத்தப் பெறவில்லை.

ஒருநாள் துணைவேந்தர் பேராசிரியர் மூர்த்தி தன்னை வந்து காணுமாறு ஆள் அனுப்பினார். உடனே சென்று அவரைப் பார்த்தேன்.

து. வே. சொன்னார்: ''டாக்டர் ரெட்டியார், நீங்கள் பேராசிரியராக ஓய்வு பெறவேண்டும் என நினைத்து முயன்றேன். அதற்கு இப்படி ஒரு தடை ஏற்பட்டுவிட்டது. சுயநலம் என்று வந்து விட்டால் மனிதர்கள் கீழான நிலைக்கு இறங்கிவிடுகின்றனர். பண்பாடு, நாகரிகம் முதலிய அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு விடுகின்றனர். இப்பொழுது ஒன்றும் மிஞ்சிப் போய்விடவில்லை.'' என்றார்.

நான்: ''வாழ்க்கையில் நான் கசப்பையே சந்திக் கின்றவன் Better என்று நினைத்து முயல்கின்றவை எல்லாம் Bitter ஆகப் போகின்றது. என் பிராரத்தம் (நுகர்வினை) இப்படி என்னை ஆட்டுகின்றது. ஏழுமலையான்தான் காப்பாற்ற வேண்டும். பிராரத்த மாக இருந்தால் அவனாலும் காப்பாற்ற முடியாது. ஆகாமியமாக இருந்தால் துடைத்து விடுவான்'' என்றேன்.

அவர்: ''நான் தங்களை வெறும் இலக்கிய அறிஞர் என்றுதான் நினைத்தேன். தத்துவ அறிஞராகவும் இருக்கின்றீர்கள். தத்துவத்தை ஏட்டுச் சுரைக்காயாக்கா மல் கறிக்கு உதவச் செய்கின்றீர்கள். ஒருவகையில் இந்த மனப்பான்மை மிகவும் நல்லது. ஆண்டவன் காப்பாற்றுவான்'' என்றார், மேலும் தொடர்ந்து ''என் மனத்திற்கு இரண்டு வழிகள் தென்படுகின்றன. ஒன்று; 'பத்தாண்டு அநுபவம்' என்பதை 'ஐந்தாண்டு' என்று குறைத்தும் 'தரமான வெளியீடுகள்' என்று சேர்த்தும் விளம்பரம் செய்யலாம் என நினைக்கின்றேன். இவ்வாறு செய்யட்டுமா?'' இரண்டு: 'நிதிக்குழு' (Finance Committee) என்ற ஒன்றை ஆட்சிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தி பிரச்சினைகளைத் தீர்வுக்கு அதன் முன் வைக்கட்டுமா?'' என்று வினவினார்.

நான்: ''விளம்பரம் செய்தால் அது காலதாமதத்தில் கொண்டு செலுத்தும். நான் ஓய்வுபெற இன்னும் ஓராண்டு தான் உள்ளது. நான் பேராசிரியராக்க கூடாது என்று நினைப்பவர்களின் கருத்துக்குச் சாதகமாக அமைந்து விடும். பிரச்சினையை குழுவின் முன் வைத்தால் விரைவில் காரியம் முடியும். பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் பயணப்படி முதலிய செலவுகளையும் தவிர்க்கலாம்'' என்றேன்.

து. வே: ''நீங்கள் பொருளாதார நிபுணர் போலவும் தோன்றுகின்றீர்கள், சரி, குழுவிற்கே முடிவுக்கு விட்டு விடுவோம். நெல்லூர் சென்று திரு. ஆனம்சஞ்சீவ ரெட்டியைச் சந்தித்து வாருங்கள். அவருடைய உதவி வேண்டும் என்று மட்டிலும் கேட்டு வாருங்கள். மீதியை நான் பார்த்துக் கொள்ளுகின்றேன்'' என்றார்.

நான்: ''அவரை எனக்குத் தெரியாது. முதல் முறை அவரைப் பார்க்கும்போது என்னை முதலில் அறிமுகப் படுத்திக்கொள்ள வேண்டும். நானே என்னைப் பற்றி 'இந்திரன்' 'சந்திரன்' என்றெல்லாம் சொல்லிக் கொள்ள வேண்டும். இது எனக்கு நாணமான செயலாகத் தோன்று கின்றது'' என்றேன்.

து. வே. ''நீங்கள் ஒன்றுமே சொல்லிக்கொள்ள வேண்டாம். ''நியமனத்தில் தங்கள் உதவி தேவை. துணைவேந்தரும் உங்களைச் சந்தித்துப் பேசிவரச் சொன்னார்'' என்று மட்டிலும் சொல்லி வாருங்கள். மீதியை நான் பார்த்துக் கொள்ளுக்கின்றேன்'' என்றார்.

என் மனம் வேகமாகச் சிந்திக்கத் தொடங்கியது. இந்தக் குழுவில் திரு. சி. அண்ணாராவ், திரு. ஆனம் சஞ்சீவரெட்டி இருப்பார்கள் என்றும் நினைத்தேன், திரு. சி. அண்ணராவ் இந்நிலைமை உருவானதற்குக் காரணம் என்றும், அவர் டாக்டர் தாமோதரனைத்

தாங்கி நின்றால் என்னைத் திரு ஆனம்சஞ்சீவரெட்டி தாங்கட்டும் என நினைக்கின்றார் போலும் என் பொருட்டுத் துணைவேந்தர் கண்ணனாக நின்று என்னுடைய எதிர் சக்திகளை முறியடிக்க நினைக்கின்றார் போலும் என்று என்மனம் கருதத் தொடங்கியது. நெல்லூர் சென்று வருவதற்கு ஒப்புக் கொண்டேன். "போய் வாருங்கள். எல்லாம் வெற்றியாக முடியும்" என்று விடைகொடுத்தனுப்பிவிட்டார்.

அக்டோபர் திங்கள் இறுதியில் ஒருநாள் காலையில் நெல்லூர் சென்றேன். திரு. ஆனம்சஞ்சீவ ரெட்டி காப்பு வீதியில் இருப்பதாகக் கேள்வியுற்று அவர் இல்லத்திற்கு ஆள் மிதிவண்டியில் சென்று அவரைச் சந்தித்தேன். காப்பு வீதி பெரிய பெரிய பிரபுக்களின் மாளிகை நிறைந்த இடம். எல்லோருமே சுகவாசிகள். பெயரட்டையை ஆள்மூலம் அனுப்பி காத்திருக்கும் அறையிலிருந்தேன். கட்டளை வந்ததும் வரவேற்கும் அறையில் சென்று பேசினேன். பிரச்சினையை எடுத்து விளக்கினேன். "எல்லாம் தெரியும். வெற்றியாக முடிப்பேன்" என்று உறுதி கூறினார். அவருடைய பேச்சுத் தொனியில் திரு. சி. அண்ணாராவின் திருவிளையாடலை அறிந்து கொள்ள முடிந்தது. பிறகு அவரிடம் விடைபெற்று ஊர் திரும்பினேன்.

நிதிக்குழு கூட்டம் திசம்பர் 17-ஆம் நாள் (1976) நடைபெறுவதாக நாள் குறிப்பிடப் பெற்றிருந்தது. திசம்பர் திங்கள் தொடக்கத்தில் ஆந்திரத்தில் ஏற்பட்ட புயல் அந்த மாநிலத்தை நிலைகுலைய வைத்துவிட்டது. சுமார் இருபத்தைந்து நாட்கள் பிற இடங்களுக்கு நெல்லூர்த் தொடர்பே அற்றுப்போய் விட்டது. நெல்லூர் வழியாக ஓடும் இருப்பூர்திகளும் நின்றன; சாலைகள் பல இடங்களில் துண்டுபட்டதால் பேருந்துகள் ஓட வில்லை, தந்திக் கம்பிகள், தொலைபேசிக் கம்பங்கள் பல இடங்களில் சாய்ந்தன; கம்பிகள் அறுபட்டுப் போயின.

இதனால் செய்தித் தொடர்பும் இல்லாதொழிந்தது. திசம்பர் இருபத்தைந்து தேதி வரையிலும் எல்லாம் சீர்படுவதாகத் தெரியவில்லை. திசம்பர் 17-தேதி நடைபெறும் கூட்டத்திற்குத் திரு. ஆனம்சஞ்சீவரெட்டி எப்படி வர முடியும்? திரு. ரெட்டி வந்தாலும் வராவிட்டாலும் கூட்டம் நடைபெற்றுவிடும். ஏனெனில் திரு அண்ணாராவ் திருப்பதியிலிருப்பவர். துணைவேந்தரும் திருப்பதியில் தான் உள்ளார். இருவரைக் கொண்டு கூட்டம் நடைபெறலாம். இதில் தலைபோகிற காரியம் ஒன்றுமில்லை; திரு. C. அண்ணாராவ் 'வாயடி கையடி' அடித்துத் தம்முடைய சாணக்கியத்தால் பேராசிரியர் பதவி எனக்குக் கிட்டாது செய்து விட முடியும். துணைவேந்தரோ மிகவும் சாதுவானவர். கூட்டத்தை வேறு தேதிக்கு மாற்றி வைக்கவும் அவருக்குத் துணிவு இராது. மாற்றி வைத்துக் கொண்ட தகவல் நெல்லூருக்கு எட்டவும் வழியே இல்லை; கூட்டத்தில் அடித்துப் பேசவும் துணிவு இராது. ஆதலால் எனக்குப் பதவி வராது என்று உறுதி கொண்டு விட்டேன்.

ஏழுமலையானின் கண் திறந்தது. 'கரியவாகிப் புடை பாந்து செவ்வரியோடிய கண்ணின்' வழியாக கருணை வெள்ளம் கரைபுரண்டோடத் தொடங்கியது. வெள்ளத்தால் சேதப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்க்க மாண்புமிகு ஆந்திர முதல்வர் **ஜலகம் வெங்கல் ராவ்** டிசம்பர் 16ஆம் நாள் ஹெலிகாப்டரில் நெல்லூர் வந்தார்; சுற்றிப் பார்த்தார். இவர் வரும்போதெல்லாம் திரு. ஆனம்சஞ்சீவ ரெட்டியின் இல்லத்தில்தான் தங்குவாராம். ஐதரபாத் செல்லும்வரை ஹெலிகாப்டரில் ஆற்றல்மிகு பெட்ரோல் (High Power petrol) இல்லாது போய்விட்டது. நெல்லூரில் அந்த எண்ணெய் இல்லை. 17-ஆம் தேதியன்று ரேணிகுண்டா அல்லது கடப்பையில் இருக்குமென்று கருதி அவ்விடங்களுக்குப் போகத் திட்டமிட்டார் முதல்வர். திருஆனம் அவர்கள் உடனே "எனக்கு இன்று

திருப்பதியில் ஒரு கூட்டம் உள்ளது. நானும் உங்கள் ஹெலிகாப்டரில் ரேணிகுண்டா வரையில் வருகிறேன்'' என்று சொல்லிப் பிற்பகல் இரண்டு மணியளவில் ரேணி குண்டா வந்து சேர்ந்தார். தொலைபேசி மூலம் துணைவேந்தரிடம் தொடர்பு கொண்டு ''நான் ரேணிகுண்டா வானவூர்தி நிலையத்துக்கு வந்துவிட்டேன். வண்டி அனுப்புங்கள். கூட்டத்தை ஒரு மணி நேரம் தள்ளி வையுங்கள்'' என்று சொல்லி விட்டார். அப்படியே வண்டி வந்தது. மூன்று மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் ஆணை அனுப்பப் பெறாது இருந்த நால்வருக்கும் ஆணை பிறந்தது. டிசம்பர் 25 நாள் முதல் ஜனவரி (1977) 17 தேதி வரை கிறித்துமஸ் விடுமுறை. அதனால் நடைமுறை விதிப்படி சனவரி 17-ஆம் நாள்தான் பேராசிரியராகப் பதவியேற்றேன். புதிதாக வெளியிலிருந்து சேர்பவருக்கு இந்த விதி பொருந்தும் என்று கருதலாம். ஆனால் துறையில் துணைப்பேராசிரியராகப் பணியாற்றுபவருக்கு, அதுவும் விடுமுறையிலும் தொடர்ந்து அலுவலக வந்து கடிதங்கள் முதலியவற்றைப் பார்த்து மறுமொழி எழுதுபவருக்கு இந்த விதி பொருந்து மாறில்லை என்பதை ஆட்சியாளர் சிந்திப்பதே இல்லை. நடைமுறைக்கு ஒவ்வாத இந்த விதி மாற்றப் பெறவேண்டும். ஆட்சிப் பொறுப்பி லிருப்பவர்கள் இதைக் கவனிப்பார்களா?

மேற் குறிப்பிட்ட நால்வருக்கும் (என்னையும் சேர்த்து) ஊழ் இருந்ததால் பதவி உயர்வு கிடைத்தது. எதிர்த்துச் சாணக்கியம் செய்தவர்கள் ஏமாந்தனர். 'திக்கற்றவருக்கு தெய்வமே துணை' என்ற முதுமொழி பொய்யா மொழியாக ஒளிர்ந்தது. திரை மறைவில் அன்று நடைபெற்ற நாடகம் இன்று இந்தக் குமிழியில் ஒலிபரப்பப் பெறுகின்றது. ஒவ்வொருவருக்கும் தத்தம் வாழ்க்கையில் எத்தனையோ இக்கட்டுகள் நிகழலாம்; இடர்ப்பாடுகள் நேரிடலாம். தெய்வத்தின்மேல் நம்பிக்கை வைத்துப் பொறுமையாக இருப்பது நல்லது. இந்த 'வேதாந்தம்'

எல்லாருக்கும் ஒவ்வாது; ஒத்தும் வராது. பக்குவப் பட்ட மனத்தர்கட்கு மட்டிலும் இஃது ஏற்றது. இந்தப் பரந்த உலகில் மனப்பக்குவம் அடைந்தவர்கள் எத்தனை பேர் இருக்க முடியும்? இன்று இதை எழுதும்போது எனக்கிருக்கும் மன நிலை—அமைதியான மனநிலை—நான் துன்பம் அநுபவித்தபோது எனக்கில்லை. கோபதாபங்கட்கு ஆட்பட்டிருந்ததை இப்போது நினைந்து பார்க்கின்றேன். கூட்டம் முடிந்து திரு. ரெட்டி நெல்லூருக்குத் திரும்ப முடியவில்லை. ஒரு வாரம் தம் உறவினர் இல்லத்தில் திருப்பதியில் தங்க நேரிட்டு விட்டது. போக்கு வரவு வசதிகள் சீர்படாததால்.

குமிழி—232

# 76. நான் கலந்து கொண்ட இலக்கிய மாநாடுகள்

நான் திருப்பதியிலிருந்தபோது அனைத்திந்திய நிலையில் பல இலக்கிய மாநாடுகளில் கலந்து கொண்டதுண்டு. இந்த மாநாடுகள் தமிழகத்தில் நடைபெற்றால் ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் எழுதிச் சமர்ப்பிப்பதும் வெளி மாநிலங்களில் நடைபெற்றால் ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிச் சமர்ப்பிப்பதுமான வழக்கத்தை மேற்கொண்டிருந்தேன். ஏற்கெனவே முன் குமிழிகளில் நான் ஜப்பல்பூர், சென்னை, தில்லி, வாரணாசி என்ற இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்டதைக் குறிப்பிட்டுள்ளேன். இவை தவிர, விட்டுப் போன, நான் கலந்து கொண்ட மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் அவற்றில் என் பங்கையும் நினைவு கூர்கின்றேன்

1963-பிப்பிரவரி 8,9,10 நாட்களில் திருவேங்கடவன் பல்கலைக் கழக வடமொழித்துறை ''அருமறைகள்'' பற்றி ஒரு கருத்தரங்கை நடத்தினர். அதில் என்னைக் கலந்து கொள்ளுமாறு கேட்டிருந்தனர். நான் இதற்கு ஒப்புக் கொண்டு ''The Vedic Influence in the Ancient Tamil Literature'' என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதிச் சமர்ப்பித் தேன். இத்தகைய கட்டுரைகள் யாவும் ''Collected Papers'' என்ற தலைப்பில் நூல் வடிவம் பெறவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன்.

1964 திசம்பரில் நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டின் 22வது அமர்வு கௌகாதியில் (அஸ்ஸாம் மாநிலம்) நடைபெற்றது பல்கலைக் கழகம் என்னைப் பேராளராகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு அளித்தது. ஆனால் நான் பிஎச். டி எழுத்து முறைத் தேர்வு சனவரியில் (1965) நடைபெற இருந்ததால் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இயலவில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இயலவில்லையென்றாலும், 'High-Lights of Cultural Influence Abroad in the Classical Period'' என்ற ஆய்வுக் கட்டுரையை அனுப்பினேன். இந்த ஆண்டு திராவிட மொழிப்பகுதிக்குப் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் (பேராசிரியர், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். என் கட்டுரையை யாரையாவது கொண்டு கூட்டத்தில் படிக்கச் செய்யுமாறு கேட்டு எழுதினேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்விப் புலத்துறை யின் விரிவுப்பணித்துறையின் ஆதரவில் 'தமிழ் பயிற்றும் முறை' பற்றி ஒரு கருத்தரங்கு 1964 சனவரி 24, 25, 26 ஆகிய மூன்று நாட்கள் தஞ்சையில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ளவும் தகுவழி காணும் திறமுடையவ ராக (Resource Person) இருக்கவும் கேட்டிருந்தனர். இதில்

கலந்து கொண்டேன். இதனால் என்னிடம் பி. டி. பயின்ற பல தமிழாசிரியர்களுடன் வேறுபல தமிழாசிரியர்களுடனும் பழகவும் கலந்து மகிழவும் வாய்ப்பாக அமைந்தது. 'இராஜாதங்கும் விடுதியில்' (Rajas Choultry) தங்கியிருந்தேன். இன்று புதுப்பிக்கப் பெற்று இருக்கும் நிலையில் அன்றில்லை; அன்றிருந்த நிலை 'சத்திரம்' என்ற பெயருக்கேற்ப இருந்தது. கவிதை கற்பித்தல், உரை நடை பயிற்றலும் மொழிப் பயிற்சிகளும், இலக்கணம் கற்பித்தலும் கட்டுரைப் பயிற்சிகளும் என்ற பொருள்கள் பற்றி நான் பேசிய பேச்சுகளும் கருத்தரங்கின் வேறு நிகழ்ச்சிகளும் பின்னர் நூல் வடிவம் பெறச் செய்து ஆசிரியர்கள் கைக்குக் கிட்டச் செய்தார் இணைப்பாளர் திரு எம். துரைசாமி. இந்த நூல் ஆசிரியர்கட்குப் பயன் படும் கையேடாக அமைந்தது.

1965-ஜூன் 2-4—ஆம் நாட்கள் சென்னைமாநிலக் கல்வி மாநாடு காரைக் குடியில் நடை பெற்றது. டாக்டர் V. K. R. V. ராவ் திறந்து வைத்தார்; பேராசிரியர் M. இரத்தினசாமி மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். நான் விடு முறையில் காரைக்குடியில் தங்கியிருந்தபோது பல்கலைக்கழகப் பிரிவில் ஓர் ஆய்வுக் கட்டுரை வழங்கு மாறு கேட்டனர் மாநாட்டு அமைப்பாளர்கள். மாநாடு, நான் பணியாற்றிய டாக்டர் அழகப்பச்செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடை பெற்றது. நான் 'Standards of University Education என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தேன். பேராசிரியர் அ சீனிவாச ராகவன் (முதல்வர், வ. வு. சி. கலைக்கல்லூரி, தூத்துக்குடி) தலைமையில் இந்தக் கட்டுரையைப் படித்தேன் பேராசிரியர் இராகவன் என் நெடு நாளையநண்பர்[1] துறையூரில்நான் பணியாற்றியபோது—1947என்று நினைக்கின்றேன்—நாமக்கல் உயர் நிலைப் பள்ளியில் நடை

1. இப்போது அவர் இல்லை; பல ஆண்டுகட்கு முன்னரே அவர் திருநாடு அலங்கரித்து விட்டார்).

பெற்ற ஒரு விழாவில் தலைமை வகித்துப் பேசினார். அப்போது என் நண்பர் திரு P. R. சுப்பிரமணியம் (தலைமையாசிரியர், கழக உயர் நிலைப்பள்ளி, நாமக்கல்) அழைப்பின் பேரில் அந்த விழாவிற்குப் போயிருந்தேன். அப்போது என் நண்பர்மூலம் பேராசிரியர் இராகவன் எனக்கு அறிமுகம் ஆனார். நான் காரைக்குடியில் பணியாற்றிய போது பேராசிரியருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது.

மாநாடு நடை பெற்றது கடுமையான கோடையில். கல்லூரிக்கு வந்த பிறகு வெப்பம் தாங்க முடியாமல் நூலக அறையில் படுத்துக் கொண்டு விட்டேன். மாலை 3—மணிக்கு நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளும் போது மிகவும் சோர்வுற்றிருந்தேன். மிகச் சிரமத்துடன் கட்டுரையைப் படிக்கும்போது என் தளர்வு நிலை தெரிந்தது. பேராசிரியர் இராகவனும் என் நண்பர் பேராசிரியர் திருவேங்கடாச்சாரியும் என் கட்டுரையை நன்கு விளக்கிப் பேசினார்கள்.

1966—அக்டோபர் 27, 28, 29 நாட்களில் அலிகாரில் நடை பெற்ற கீழ்த்திசை மாநாட்டிலும் (23-வது அமர்வு) நான் கலந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய பிஎச். டி. ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் இதில் கலந்து கொள்ள விரும்பவில்லை; ஆய்வுக் கட்டுரையும் அனுப்பவில்லை

1968-சனவரி 3-10 இல் சென்னையில் நடை பெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டேன். இந்தக் கருத்தரங்கிற்கு Nature Poetry in the Azhvars' என்ற ஆய்வுக் கட்டுரையை அனுப்பி வைத்தேன்—10 பக்கங்களில். கட்டுரையையும் மாநாட்டு விதிப்படி ஒரு குறிப்பிட எழுத்தில் அடிக்க வேண்டியிருந்தது; அப்படியே அடித்து அனுப்பினேன். அதை எட்டுப் பக்கங்களில் சுருக்கி எழுதி அனுப்புமாறு கட்டுரை

திரும்பி வந்தது. அப்போது தான் என் பிஎச். டி. ஆய்வுக் கட்டுரை தட்டச்சு செய்யப்பட்டு வந்தது. மாற்றி எழுத நேரம் இல்லாததால் கட்டுரை தரும் பொறுப்பை விலக்கிக் கொண்டேன். அரசே முன்னின்று நடத்தியதால் வசதிகட்குக் குறைவில்லை. விருந்து 'போதும் போதும்' என்றாய் விட்டது. இதை என்னால் சுவைக்க முடிய வில்லை. ஒரு நாள் அருண் ஓட்டலில் தங்கினேன். இலங்கையிலிருந்து வந்தவர்களும் அங்குத்தான் தங்கினர். திடீரென்று வந்த மறு நாளே சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு மாற்றிக் கொண்டனர். என்னால் தனிமையாக இருக்க முடியாததால் நானும் அந்த விடுதிக்கு மாற்றிக் கொண்டேன். பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த காலத்தில் இந்த மாநாடு நடை பெற்றதால் மாநாட்டிற்கு 'நல்ல களை' தென்பட்டது. காலை சிற்றுண்டி நண் பகல் விருந்து சட்ட மன்ற உறுப்பினர் விடுதியில் நடை பெற்றன. மாலை சிற்றுண்டி, இரவு விருந்து வெவ்வேறு இடங்களில் நடை பெற்றன. காலை சிற்றுண்டி மட்டிலும் மாநாட்டு அமைப்பாளர் செலவில் நடை பெற்றது. ஏனையவை யாவும் தனிப்பட்ட வணிக மன்னர்கள், பட முதலாளிகள் இவர்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றன. எம். ஜி. ஆர். ஏ. வி. எம்., தினமணி—எக்ஸ்பிரஸ் நிறுவனம், கல்கி நிறுவனம், V. பெருமாள் செட்டி அண்டுசன்ஸ், மருதைப்பிள்ளை ராஜா சர். முத்தையாசெட்டியார் இவர்கள் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் கண்ட வழியைப் பின் பற்றி விருந்தளித்தனர். சேரலாதன் பாரதப் போரில் பங்கு பெற்றவர்கட்கு விருந்தளித்ததுபோல் இவர்கள் யாவரும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பங்கு கொண்ட அறிஞர்கட்கு விருந்தளித்தனர். மாநாட்டின் நினைவாகச் சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி நிரந்தர மாக நடை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப் பெற்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் மூன்று இலட்சம்

வீதம் அரசு அளித்தது பாராட்டத் தக்கது. அண்ணாவின் நீள்நோக்கு இன்றும் நமது மனத்தில் பசுமையாகவே உள்ளது.

அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டுக் கருத்தரங்கு—24-வது அமர்வு அக்டோபர் 12, 3, 4 நாட்களில் (1968) வாரணாசியில் நடைபெற்றது. முதலில் என் சொந்தச் செலவில் போகலாம் என்று பல்கலைக் கழகம் எழுதியது. பின்னர் துணைவேந்தர் டாக்டர் V.C. வாமனராவிடம் நேரில் பேசிய பிறகு பல்கலைக் கழகமே பேராளராக அனுப்பியது. இக்கருத்தரங்கு வடமொழிப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. நான் என் மனைவியையும் பேராளராக்கி எங்கள் செலவில் கூட்டிச் சென்றேன். நாங்கள் காசி நகரத்தார் விடுதியில் தங்க ஏற்பாடு செய்து கொண்டோம். மாநாட்டு நாட்களில் மாநாட்டு ஏற்பாட்டில் உணவு கொண்டோம். இந்த மாநாட்டிற்கு நான் 'Nature Poetry in the Azhvars' என்ற ஆய்வுக் கட்டுரை அனுப்பி வைத்தேன். இங்கும் திராவிட ஆராய்ச்சிப் பகுதிக்கு பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ (அப்போது மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார் அவர் வர முடியாமையால் டாக்டர் **மொ. அ. துரை அரங்கசாமி** (மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்) அத்தலைமைப் பொறுப்பு ஏற்றார். வாரணாசிக்குச் சென்ற வாய்ப்பைக் காசி, அயோத்தி, கயை, புத்தகயை, திரிவேணி (அலகபாத்) திருத்தலப் பயணங்களாகவும் ஆக்கிக் கொண்டோம்.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றமும் மதுரைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தி முதல் கருத்தரங்கு தியாகராஜர் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது (மே 30, 31, ஜூன் 1-1969), இந்தக் கருத்தரங்கிற்கு என்னையும் தெலுங்குத் துறை டாக்டர்

T. கோதண்டராமய்யாவையும் பேராளர்களாகக் கலந்து கொள்ள அனுப்பியது பல்கலைக் கழகம். நான் 'கம்பன் கண்ட மெய்ப்பொருள்' என்ற ஆய்வுக்கட்டுரையை அனுப்பி வைத்தேன். இந்தக்கட்டுரை என் மணிவிழா வெளியீடாக வந்த **அறிவியல் தமிழ்** என்ற நூலில் சேர்ந்தது. முதல் கருத்தரங்கு மூன்று நாள் சிறப்பாக நடைபெற்றது. என் கட்டுரை டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமித் தலைமையில் படிக்கப் பெற்றது.

1969-அக்டோபர் 29, 30, 31 நாட்களில் அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டு கருத்தரங்கின் 25-வது (வெள்ளிவிழா) அமர்வு கல்கத்தாவில் ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. என்னையும் தெலுங்குத் துறையில் இருவரையும் பல்கலைக் கழமே பேராளர்களாகக் கலந்து கொள்ள அனுமதித்தது. சென்னையிலிருந்து நான் புறப்பட்ட இருப்பூர்தியிலேயே டாக்டர் மு. வ., டாக்டர் சங்கரராஜு நாயுடு (இந்திப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்), டாக்டர் K K. இராஜா (வடமொழிப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்) ஆகியோர் பயணம் செய்தமையால் இருப்பூர்திப் பயணம் அற்புதமாக அமைந்தது. என்னுடைய நகைச்சுவைப் பேச்சும்சுவையான பலகுட்டிக்கதைகளையும் எல்லோரும் நன்கு சுவைத்தனர்.

சில வாரங்கட்கு முன்னர்தான் சென்னையில் டாக்டர் K.K. இராஜாவுக்கு பேராசிரியர் பதவி கிடைத்திருந்தது. நான் டாக்டர் இராஜாவுக்கு வாழ்த்து தெரிவித்தேன். அவர் அதைச் சுவையுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சொன்னார். "என்னைமதிப்பிட உங்கள்T.K.கோபாலசாமி அய்யங்கார் வல்லுநர் குழுவில் இருந்தது எனக்கு அவமானமாய்ப் போயிற்று. என் உற்சாகம் முழுவதும் சிதைந்தது. பதவி உயர்வு எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை" என்றார்.

2. டாக்டர் கோதண்டராமய்யா இன்று (17-4-90) இல்லை. பல்லாண்டுகட்கு முன்னரே திருநாடு அலங்கரித்துவிட்டார்.

இந்த T.K. கோபாலசாமி அய்யங்கார் யார்? இவர் திருப்பதியைச் சேர்ந்தவர். வைணவ ஆச்சாரியாரான திருமலை நம்பியின் வமிச வழி வந்தவர். பல்கலைக் கழகம் தொடங்கப் பெற்ற சமயத்தில் எம். ஏ. யில் மூன்றாவது வகுப்பினராக இருந்துப் அக்காலத்தில் மிக்க செல்வாக் குடைய இராமானுஜ தாத்தாச்சாரியாரின் உதவி கொண்டு பல்கலைக் கழகத்தில் நுழைந்து விட்டார். படிப்பறிவை வளர்த்துக் கொள்ளாதவர். பல்கலைக் கழகத்தில் நுழையாததற்கு முன்னர் தேவஸ்தான நிர்வாகத்திலுள்ள கீழ்த்திசைக் கல்லூரியில் பணியாற்றியவர். மனிதர் அழகாக இருப்பார். செம்மேனி எம்மான். பஞ்ச கச்சம் மூடிய மேலங்கி (Close Coat), வெண்மையான தலைப் பாகை, நெற்றியில் வடகலைத் திருமண்காப்பு—இவற் றுடன் இவரைப் பார்க்கும்கால் கண்டாரை ஈர்க்கும் தோற்ற முடையவர். என் அரிய நண்பர் திரு வீரராகவன் (தத்துவத்துறை) இவரைச் 'சுந்தர வதனம்' என்றே கிண்டலாக அழைப்பார்.

கால்கை (காக்கை) பிடிப்பதில் மன்னர். ஆண்டு தோறும் திரு. எ.எல். முதலியாரை (துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்) அவருடைய பிறந்த நாளன்று சந்தித்துப் பெரிய துளப மாலை, பெருமாள் பிரசாதமாகிய லட்டு, திருமால் வடையுடன் சந்தித்து ஒரு வடமொழி சுலோகத்தால் வாழ்த்தி அவர் மனத்தைக் கவர்ந்தவர் என்றும், இதனால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பலவித சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வருகின்றவர் என்றும், திருப்பதிப் பல்கலைக் கழகத்து வளாகத்தில் பலர் பேசி வருவதைக் கேட்டிருக்கின்றேன். இப்படித்தான் மூன்றாவது வகுப்புடன் விரிவுரையாளராக இருந்தும் பேராசிரியர் நியமனத்தின் வல்லுநர் குழுவில்

3. திரு T. K. கோபாலசாமி அய்யங்காரும் இன்றில்லை (17-4-90); பல ஆண்டுகட்கு முன்னர் ஆசாரியன் திருவடி நிழலை அடைந்தார்.

இடம் பெற்றார் என்று K.K. இராஜா "மனத்தாங்க லுடன்" சொன்னார்; இதனால்தான் தன் பதவி உயர்வு தனக்கு மகிழ்ச்சி தரவில்லை எனக் குறிப்பிட்டார் போலும்!

உடனே என் மனத்தின் ஆற்றல் தன்மையால் (Presence of mind) ஒரு வடமொழி சுலோகத்தின் கருத்து (என் ஆராய்ச்சியின் போது ஈட்டுரையில் கண்டது) நினைவுக்கு வந்தது. "டாக்டர் இராஜா தங்கத்தை மதிப்பிடக் குப்பையில் கிடக்கும் குன்றி மணியைப் பயன் படுத்துவதைக் கண்டிருப்பீர்கள். தங்கம் தன் மனவருத்தத் தைச் சொல்லிக் கொள்வதாக ஒரு வடமொழி சுலோகத் தைப் படித்திருக்கின்றேன். தங்கம் சொல்லிற்றாம்: "என்னை நெருப்பில் உருக்குவதை நான் தாங்கிக் கொள்ளு கின்றேன்; சம்பட்டியால் புடைத்து மெல்லிய தகடாக்கு வதையும் பொறுத்துக் கொள்ளுகின்றேன். மெல்லிய துளையுள் செலுத்தி கம்பியாக இழுப்பதையும் பொறுத்துக் கொள்ளுகின்றேன். ஆனால் குப்பையில் கிடக்கும் குன்றிமணியால் என்னை மதிப்பிடுவதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை" என்றதாம் அருகி லிருந்த அறிஞர் ஒருவர், 'தங்கத்தை நோக்கி, "கவலைப் படாதே. நிறுக்கும்போது குன்றிமணிக்குப் பெருமை இருப்பதாகத் தோன்றினாலும், நிறுத்தல் வேலை முடிந்த பிறகு தங்கம் தங்கமாகவே தன்நிலை மாறாமல் உள்ளது; குன்றி மணி குப்பைக்குப் போய் விடுகின்றது என்று சமாதானப்படுத்தினாராம்" என்று கூறி "நீங்கள் தங்கம்; திரு. கோபாலசாமி அய்யங்கார் குப்பையில் கிடக்கும் குன்றிமணி. தங்கம் அதற்குரிய இடத்தில் உள்ளது; குன்றிமணி குப்பைக்குப் போய்விட்டது" என்று சொன்னேன், டாக்டர் இராஜாவின் மனத்தில் இருந்த மனக்குறை (Obsession) நீங்கி மகிழ்ந்தார்; என்னை அப்படியே கட்டிக் கொண்டார். என் பேச்சை டாக்டர் மு.வ. உட்பட அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர்.

இந்தக் கருத்தரங்கிற்கு Vishnu Cult in the Ancient Tamil Literature என்ற ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்

திருந்தேன். இந்த ஆண்டு திராவிட மொழிப் பகுதிக்கு டாக்டர் எஸ். சங்கரராஜு நாயுடு தலைமை வகித்ததாக நினைவு. என்னுடைய 15 பக்கக் கட்டுரையில் 215 அடிக்குறிப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டினார் கல்கத்தாவில் இருந்த மூன்று நாட்களில் ஒருநாள் காலை கல்கத்தா தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் அதன் தலைவர் எங்கட்கு 'இட்டிலி விருந்து' அளித்தார். கல்கத்தாவில் இந்த மரபு இருந்து வருகின்றது. மற்றொரு நாள் மாலை 6 மணிக்கு இராஷ்பீகாரி அவென்யூவிலுள்ள பாரதி தமிழ்ச்சங்கத்தில் பேசும் வாய்ப்பு கிடைத்தது. டாக்டர் மு. வ. 'தாயுமானவர்' பற்றியும் நான் 'குலசேகராழ்வார்' பற்றியும் டாக்டர் சங்கர ராஜு நாயுடு 'தமிழின் தனிப்பெருமை' என்பதுபற்றியும் பேசினதாக நினைவு. அன்றிரவு ஒரு தென்னிந்திய பிராமண விடுதியில் வற்றல் குழம்புடன் ஒரு சிறிய விருந்து நடைபெற்றது. கல்கத்தாவில் இன்னார் பேசுகிறார். என்று 'ஸ்டேஸ்மன்' பத்திரிகையில் செய்தி தந்துவிட்டால் போதும்; பெருந்திரளாகத் தமிழர் கூடிவிடுவர். தனி அழைப்பு அனுப்பத் தேவை இல்லை. இந்த மரபைக் கண்டு வியந்து போனேன்.

மாநாடு முடிந்து ஒருநாள் அதிகமாகத் தங்கினதாக நினைவு. டாக்டர் மு, வ.வும் நானும் ஒரு நாள் மாலை கிருட்டிணசாமி என்னும் நண்பர் வீட்டுக்குப் போனதாக நினைவு. மாநாடு முடிந்ததும் அறையைக் காலி செய்து கொண்டு கல்கத்தாவிலுள்ள நகரத்தார் இல்லத்திற்குச் (34, எஸ்ராதெரு. கல்கத்தா—1) சென்று ஒருநாள் தங்கினேன். அன்று புகழ்வாய்ந்த தேசிய நூலகம் வானக் காட்சி நிலையம் (Planetorium இவற்றைப் பார்த்துக் கொண்டு நூலகத்தின் முன்புறமுள்ள பெரிய மைதானத் தில் காற்று வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தபோது மு. வ. வும் சங்கரராஜு நாயுடுவும் எங்கோ சுற்றி விட்டு அங்கு வந்து சேர்ந்தனர். அடுத்த நாள் காலையில் கல்கத்தாவிலிருந்து திரும்பினோம்.

1970-மே 29, 30, 31 ஆம் நாட்களில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்கு திருச்சியில் நடைபெற்றது. இதற்கும் என்னைப் பேராளராகப் பல்கலைக்கழகம் அனுப்பி வைத்தது. நான் 'The Tirumurais and the Nalayiram;— theit codifications' என்ற ஆங்கில ஆய்வுக் கட்டுரை அனுப்பினேன். நாங்கள் தங்குவதற்கும் உணவிற்கும் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர் உணவு விடுதியில் வசதிகள் செய்யப் பெற்றிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் திருச்சி வானொலியில் 'அருளுரை' என்ற தலைப்பில் நம்மாழ்வார் கருத்துக்களை மூன்று நாட்கள் 4½ மணித்துளிக் காலை நிகழ்ச்சிகட்கு பதிவு செய்தேன்.

டாக்டர் மு.வ.வுக்கு ஆற்றில் நீராடுவதற்கு விருப்பம் அதிகம். டாக்டர் மு.வ.வுக்குத் தமிழகமெங்கும் வீர வழிபாட்டாளர்கள் உண்டு. திருச்சிப் பகுதியில் 15 பேர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். இவர்களுடன் இரண்டு நாட்கள் காவிரியில் நடந்தே திரும்பினோம். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கும் காவிரிக்கும் சுமார் முக்கால் கல் தொலைவே. டாக்டர் மு. வ. நகைச்சுவை விருந்து அளிப்பதில் என்னைத் தூண்டிக்கொண்டே இருப்பார். தேசியக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் இராசகோபாலன் மு.வ. வின் அணுக்கத் தொண்டராகச் செயற்பட்டார். சதா புன்முறுவலுடன் திகழும் இவர் என்னுடைய நெருங்கிய நண்பருமானார். இப்போது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இலால்குடிப் பகுதியைச் சேர்ந்தவர் இவர்.

1971-ஜூன் 1, 2, 3 நாட்களில் இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் மூன்றாவது கருத்தரங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. P. சௌரிராசனைப் பேராளராக அனுப்பு

மாறு பல்கலைக் கழகத்திற்கு எழுதி நான் என் சொந்தப் பொறுப்பில் கலந்து கொண்டேன். நான் இந்தக் கருத்தரங்கிற்கு "The Nalayiram and the Tirumnrais; A Birds Eye Comparative View என்ற ஆய்வுக் கட்டுரையை அனுப்பி வைத்தேன். இந்தக் கருத்தரங்கைப் பயன் படுத்திக் கொண்டு தில்லை நடராசனையும் இவனது ஆடலைப் பார்த்துக் கொண்டு சயனத் திருக்கோலத்தில் கண்டுகளிக்கும் தில்லைக் கோவிந்தனையும் சேவித்தேன். பல்கலைக்கழக வளாகத்திலேயே இருக்கும் திருவேட் களத்து ஈசனையும் வணங்கினேன். இந்தச் சமயத்தில் மு. வ. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்த ராக வரும் வதந்தி காட்டுத் தீ போல் பரவியது. திரு சி. பாலசுப்பிரமணியம் ஆளுநர் சே கே ஷாவின் தமிழாசிரியராக நியமனம் பெற்ற செய்தி தினத்தந்தியில் வெளியாகி பலரை மகிழ்வித்தது.

1971-ஜுன் 3-4 நாட்களில் திருவனந்தபுரத்தில் நடை பெற்ற முதல் மொழியியல் மாநாட்டிற்கு என்னைப் பல்கலைக்கழகம் பேராளராக அனுப்பி வைத்தது. மாநாடு திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கலைகல்லூரியில் நடை பெற்றது. இதற்கு நான் ஆய்வுக் கட்டுரை வழங்கவில்லை. தான்தான் இந்த மாநாட்டிற்குத் தகுதி பெற்றவன் என்றும் பல்கலைக்கழகம் என்னை அனுப்பினது தவறு என்றும், இல்லாததையும் பொல்லாததையும் முதல்வர் K. நீலகண்டத்திடம்கூறிப் 'பகீரதப் பிரயத்தனம்' செய்தார் தாமோதரன்.முதல்வரும் என்னை அனுப்புவதைத்தவிர்க்கு மாறு பல்கலைக் கழகத்திற்கு எழுதுமாறு கேட்டுக் கொண் டார்.திரைமறைவில் தாமோதரன் நடத்தியநாடகம்புலனா யிற்று. நான் முதல்வரிடம் "உங்கட்குத் துணிவு இருப்பின் எனக்குப் பிறப்பித்த ஆணையை மாற்றி தாமோதரனை அனுப்புமாறு நீங்களே எழுதுங்கள்" என்று கூறி என் உள்ளத்தை தெளிவு படுத்தினேன். முதல்வர் வாயை மூடிக்கொண்டு வாளா இருந்து விட்டார். மாநாட்டின்

நோக்கத்தையும் 'திராவிட மொழிக்கழகம்' என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு டாக்டர் V. I. சுப்பிரமணியத்தின் மேற்கொண்ட முயற்சியையும் தெரிந்து கொண்டேன். 'கெடுமிட ராய எல்லாம் கேசவா' என்றவுடன் தீயினில் தூசாகச் செய்யும் அனந்தசயனப் பெருமானைச் சேவித்தேன். கலைக்கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் ஓர் அரைமணி நேரம் பேசியதாக நினைவு.

1971-திசம்பர் 26, 27, 28 நாட்களில் அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டுக் கருத்தரங்கு (26-வது அமர்வு) உஜ்ஜயினியில் நடைபெறுவதாக இருந்தது. உஜ்ஜயினி (உச்சயினி) தமிழ் இலக்கியத்தில் உஞ்சை என்று குறிப்பிடப்பெறும். அவசரநிலை பிரகடனப்படுத்தப் பெற்றதால் இக்கருத்தரங்கு அத்தேதிகளில் நடைபெறவில்லை. இக்கருத்தரங்கு 1972-அக்டோபர் 26, 27, 28 நாட்களில் நடைபெற்றது. பல்கலைக்கழகம் என்னைப் பேராளராக அனுப்பி வைத்தது. இக்கருத்தரங்கிற்கு (1) The Alvar's Concept of Salvation, (2) Two Sects of South Indian Vaishnavism என்ற இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி வைத்தேன். மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் V. வேங்கடாச்சலம் (வடமொழி) அங்கு ஓர் அரசினர் கல்லூரியில் பணியாற்றி வந்தார். அவர் தூண்டுதலால் தான் இக்கருத்தரங்கு விக்ரம் பல்கலைக்கழகம் நடத்த முன் வந்தது. இது தவிர இவர் ஆண்டுதோறும் அரசு ஆதரவால் வடமொழிச் சம்மேளத்திற்கு ஏற்பாடு செய்து நாட்டிலுள்ள வடமொழிப் புலவர்களையெல்லாம் பாராட்டி வருவது நாம் வியக்கத் தக்க செய்தியாகும். தவிர, இம்மாநாட்டை முன்னிருந்து நடத்தியதும் பேராசிரியர் V. வேங்கடாசலமேயாகும். உஜ்ஜயினி

1. முத்தொள்ளாயிர விளக்கம்—பாடல்.63: 'பெருங் கதையில்' உஞ்சைக் காண்டம் நினைவு கூர்க.

செல்வதற்குமுன் இவர் சென்னை விவேகாநந்தர் கல்லூரியில் வடமொழித் துறையில் பணியாற்றியவர்.

உச்சயினி காளிகோயில் பெரும் புகழ் மிக்கது. ஒரு நாள் அங்குச்சென்றுச் காளிதேவியை வழிபட்டேன். பாரதியாரின் வழிபடும் தெய்வம் அல்லவா? இத்திருக் கோயிலுக்கு வந்தபோது காளிதேவி பற்றிய பாரதியாரின் பாடல்கள் நினைவில் எழுந்தன. கோயிலுக்கருகில்தான் அங்காடிகள் நிறைய இருந்தன. மருதாணியின் இலைத் தூள்கள் (ஈரமில்லாதது) குவியல் குவியலாய் ஒவ்வொரு கடையிலும் இருந்தன. சிறிது நீர் விட்டுக் குழைத்து அப்படியே பயன்படுத்தலாம். காளிதேவியின் உருவம் அச்சத்தைக் கிளப்பும் பாங்கில் அமைந்திருந்தது. கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து அன்னையைச் சேவித்துச் சென்றதைக் கண்டு மகிழ்ந்தேன்.

ஒருநாள் நானும் பண்டிட் வி. நடேசனாரும் (சென்னையில் உள்ள பெரும் புலவர்; ஓய்வு பெற்றவர். இந்த மாநாடுகட்கு இவர் வருவது தவறுவதில்லை) ஒரு வாடகைக் கார் வைத்துக்கொண்டு பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். கிருஷ்ணனைப் பற்றிய பல நினைவுச் சின்னங்கள் என் மனத்தைக் கவர்ந்தன. கண்ணன் இரண்டே மாதங்களில் சாந்தீபினி என்ற முனிவரிடம் கலைகளனைத்தையும் கற்றதாக வரலாறு. அந்த சாந்தீபினி இருந்த இடம் எங்கள் மனத்தைக் கவர்ந்தது; கண்ணன் கோயிலும் அங்கு இருந்தது. அவனை வழிபட்டு வெண்ணெய் முதலிய பிரசாத வகைகளைப் பெற்று உண்டோம். ஒருநாள் பிற்பகல் முழுவதும் இங்ஙனம் பல இடங்களுக்குச் சென்று திரும்பினோம்.

திரும்பும் போது போபாலில் இறங்கினேன். சென்னையிலிருந்து வந்தபோதும் இந்த இடத்தில் இறங்கித்தான் இருப்பூர்தி மாற்றி வேறு திசையில் உச்சயினிக்குச் செல்லுதல் வேண்டும். போபாலில் S. அப்பாவு என்ற

பள்ளி-கல்லூரி வகுப்புத்தோழர் அஞ்சல் துறையில் பெரிய பதவியில் இருந்தார். ஒருநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு பிர்லாமந்திருக்கு தன் ஸ்கூட்டரில் இட்டுச் சென்றார். ஊர் அமைப்பு மேடும் பள்ளமுமாக இருந்த தாக நினைவு. மாலையில் பாரத் கனரக மின்சாரத் தொழிற்சாலைக்கு இட்டுச் சென்றார். அன்று ஏதோ ஒரு கூட்டம்; அதிலும் கலந்து கொண்டோம். பல இடங் களைப் பார்த்த பிறகு இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பி னோம். மறுநாள் சென்னை செல்லும் இருப்பூர்தியில் இட ஒதுக்கீடு செய்திருந்தார் நண்பர். வசதியாகத் திரும்பி னேன்.

1972-டிசம்பர் 17, 18, 19இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழில்—இலக்கணக் கொள்கைகள்-II' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இதற்குத் ''தமிழ் ஒலியன்கள் — தொல்காப்பியம்'' என்ற ஆய்வுக் கட்டுரை அனுப்பினேன்.

1973-திசம்பரில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பத்து நாள் கருத்தரங்கில் 31-1-73 அன்று நடைபெற்ற அமர்வில் ''வைணவ சமய நூல்கள்'' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படித்தேன். இது பல்கலைக் கழகம் வெளியிட்ட 'தெய்வத்தமிழ்' என்ற தொகுப்பு நூலில் இடம் பெற்றது.

1974-திசம்பர் 26, 27, 28 இல் அனைத்திந்தியக் கீழ்த் திசை மாநாட்டுக் கருத்தரங்கு (27-வது அமர்வு) குருட்சேத்திரா பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. இதற்கு (1) God-Soul Relationship in the Nalayiram, (2) A critical Note on the Codification of Nalayiram என்ற இரண்டு ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பினேன். இந்த முறை பல்கலைக் கழகம் என்னைப் பேராளனாக அனுப்ப வில்லை, என் சொந்தச் செலவில் செல்ல வேண்டிய

தாயிற்று. என் ஆராய்ச்சி மாணவர் திரு. என். கடிகாசலத்தையும் துணைக்குக் கூட்டிச் சென்றேன்.

குருட்சேத்திரா பல்கலைக் கழகம் அரியானா மாநிலத்தில் உள்ளது. தில்லியிலிருந்து பானியட் வழியாகச் செல்ல வேண்டும். பல்கலைக் கழகம் ஒரு பரந்த மைதானத்தில் அமைந்துள்ளது. துறைக்குரிய கட்டடங்கள் பெரிய இடைவெளிகளுடன் அமைந்துள்ளன. மாணவர்கள் மிதிவண்டி வைத்துக் கொண்டிருந்தால் பல இடங்கட்குப் போக வசதியாக இருக்கும். ஓரிடத்தில் பார்த்தனுக்குக் கண்ணன் சாரதியாக இருந்த நிலையில் நல்ல அழகான நினைவுச் சின்னம் வைக்கப் பெற்றுள்ளது. அரை ஃபர்லாங் சதுரத்தில் ஒரு பெரிய செயற்கைத் தடாகம் வெட்டப் பெற்று அதில் தூய்மையான நீர் நிரப்பப் பெற்றுள்ளது. நான்கு பக்கங்களிலும் படித்துறைகள் கட்டப் பெற்றுள்ளன. ஒரே சமயத்தில் இலட்சக்கணக்கான மக்கள் நீராடலாம். நீர் அழுக்கேறி தூய்மையற்றதாக ஆகும்போது அதைக் காலி செய்து புதிய நீர் நிரப்பவும் வசதிகள் செய்யப் பெற்றுள்ளன. அழுக்குநீர் வீணாகாமல் ஏரிகளில் தேங்கவும் அதனைப் பாசனத்திற்குப் பயன்படவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. பண்டிட் நடேசனார், கடிகாசலம், நான்—மூவரும் எங்குச் சென்றாலும் சேர்ந்தே சென்று திரும்புவோம். வட மாநிலங்களில் இங்ஙனம் செய்யப் பெற்ற வசதிகள், தொழிற்சாலைகள், வேலை வாய்ப்பு வசதிகள் இவற்றைத் தென்னகத்திலுள்ள வசதிகளுடன் ஒப்பிடும்போது அறிஞர் அண்ணா சொன்ன "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது" என்பதில் உண்மை இருக்கும்போல் தோன்றுகின்றது. இதற்குக் கழுவாயாக ஆண்டவன்தான் வழி அமைக்க வேண்டும்.

இந்த மாநாட்டில் திராவிட மொழி ஆராய்ச்சிப் பகுதிகுத் தலைவனாக (28-வது அமர்வுக்கு) என்னைத்

தேர்ந்தெடுத்தனர். மாநாடு முடிந்ததும் நாங்கள் மூவரும் தில்லி திரும்பினோம். பழைய தில்லி இருப்பூர்தி நிலையத்தில் ''ஜனதா ஓய்வு அறையில்'' இரவைக் கழித்தோம்; அதிகாலையில் நீராட்டத்தையும் சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு தில்லி மாநகரைச் சுற்றிப் பார்த்தோம். நேரு இல்லம், குதுப்மினார், கன்னாட் வட்டம் (கடைவீதி), செங்கோட்டை, சாந்திவனப் பகுதிகள், ராம்லீலா மைதானம், ஜும்மாமசூதி, ஜவாஹர்லால் பல்கலைக் கழகம் முதலான இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இதற்கு இரண்டு நாட்கள் ஆயின. இரண்டாம் நாள் மாலை மதுரா வந்து விட்டோம். இருப்பூர்தி நிலையத்திலுள்ள ''ஜனதா தங்கும் அறையில்'' இரவைக் கழித்தோம். மறுநாள் காலை கண்ணன் கோயில், கண்ணன் பிறந்த சிறைச்சாலை, துவாரகநாதர் கோயில், மதுரா நகர் — இவற்றையெல்லாம் கண்டு களித்தோம். கண்ணன் பிறந்த சிறைச்சாலைப் பகுதியை— மிகப் பெரிய இடம்—பளிங்குக் கற்களால் வேயப் பெற்றிருந்தது. திருத்தலப் பயணிகள் தங்குவதற்கும் பிற வசதிகட்கும் ஒரு பெரிய அழகான மாளிகையின் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வடமதுரையில் இருந்தபோது நம்மாழ்வாரின் 'கொண்ட பெண்டிர்' (திருவாய் 9.1) என்ற திருவாய்மொழி மனத்தில் குமிழியிட்டுக் கொண்டிருந்தது. பகவானே எல்லா உறவும் என்று கூறுவது இத்திருவாய்மொழி.

அரணம் ஆவர் அற்றகாலைக்
    கென்றென் றமைக்கப் பட்டார்
இரணம் கொண்ட தெப்பர்
    ஆவர்; இன்றியிட் டாலுமஃதே

வருணித்து என்னே! வடமது
　　ரைப்பிறந் தவன்வண் புகழே
சரணென் றுய்யப் போகல்
　　அல்லால் இல்லைகண் டீர்சதுரே[2]

[அரணம்—கைம்முதல்; இரணம்—கடன்; தெப்பர்—புல்லியர்

"ஆபத்துக்கு உதவுவர் என்று சுற்றத்தவரை ஆராதித்துப் பயன் இல்லை; காரணமின்றி உதவி செய்பவனான எம்பெருமானின் கல்யாண குணங்களே நமக்கு இரட்சகம் என்று எண்ணி உய்வோம்" என்கின்றார். இத்திருவாய்மொழிப் பாசுரங்கள் யாவும் இப்படியே நடைபெறுகின்றன.

அன்று மாலை கண்ணன் கன்றுகளை மேய்ந்துத் திரிந்த பிருந்தவனத்தைக் காணத் திட்டம் இட்டோம். போகவும் திரும்பவும் ஒரு குதிரை வண்டியை(தோங்கா) அமர்த்திக் கொண்டு (10 கி.மீ. தொலைவு) புறப் பட்டோம். நெருஞ்சிக் காடாக இருந்த அந்த வனம் கண்ணன் திருவருளால் பசுக்கள் முதலானவை பெருகு வதற்கு ஏற்ப மிகச் செழிப்புற்றது. இங்குத்தான் கண்ணன் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டும் பல திருவிளையாடல்கள் புரிந்து கொண்டும் காலம் போக்கினன். குழலூதிக் கோபியருடன் இராசக்கிரீடை (குரவைக் கூத்து) நிகழ்த்திய இடமும் இதுவே. இப்பகுதி யில்தான் காளியன்மடு, கோபியரின் துகிலுரிந்த கட்டம்' கேசி என்ற அசுரனைக் கொன்ற இடம் (கேசிகட்டம்) கோபியரின் பக்திப் பரவசத்தைக் கண்ட அக்குரூரர் கண்ணீர் மல்க விழுந்து விழுந்து புரண்ட இடம், குழலூதிக் கோபியரின் உள்ளத்தைக் கவர்ந்தவனம்; (பான்சிவனம்) மற்றும் சேவாகுஞ்சம், பக்தவிலோசனம் முதலானவற்றைப் பார்த்து மகிழ்ந்தோம். சரியான வழிகாட்டி கிடைக்காததால் அருகிலுள்ள அரங்கமந்திர்

2. திருவாய்—9.10:4

(ஸ்ரீ ரங்கஜிமந்திர்) என்ற திருக்கோயிலைப் பார்க்கத் தவறி விட்டோம். இப்பகுதியைச் சுற்றிப் பார்த்த போது,

காளியன் பொய்கை கலங்கப்பாய்ந் திட்டவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து
மீள அவனுக் கருள்செய்த வித்தகன்

—பெரியாழ். திரு 3.9.7

காயுநீர் புக்குக் கடம்பேறி காளியன்
தீய பணத்தின் சிலம்பார்க்கப் பாய்ந்தாடி
வேயின் குழலூதி வித்தக னாய்நின்ற
ஆயன்

— ௸.2:1:3

என்பன போன்ற பாசுரங்களும் என் மனத்தில் குமிழி யிட்டன. மாலை 7—மணிக்குள் மதுரை திரும்பி விட்டோம். இரவில் இந்த வழியில் வருவோரைக் கொலை செய்து பணம் பறிக்கும் செயல் நடைபெறுவதாக வண்டிக் காரன் சொன்னபோது எங்கள் மனத்திலும் 'திகில்' ஏற்பட்டது.

அன்றிரவும் இருப்பூர்தி நிலையத்து ''ஜனதா ஓய்வு அறையிலேயே'' தங்கினோம். மறுநாள் சாமான்களைப் பாதுகாப்பு அறையில் வைத்துவிட்டு டெல்லியிலிருந்து வரும் ஆக்ரா விரைவு வண்டியில் ஏறி ஆக்ரா வந்தோம். கட்டணம் செலுத்தி அரசுப் பேருந்தில் ஏறிச் செங்கோட்டை, தாஜ்மகால் என்ற இடங்களைப் பார்த்து விட்டு ஃபாதேபூர் சிகரியிலுள்ள அக்பர் கட்டிய செங்கோட்டையைப் பார்த்தோம். வண்டியில் வந்த அரசு வழிகாட்டி ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு பகுதியையும் அற்புதமாக விளக்கினார். சரளமான ஆங்கிலப் பேச்சு; வரலாற்றுப் பேராசிரியர்கள் கூட இவர் விளக்கப் பேச்சைக் கேட்டால் நாணிப்போவார். அன்று மாலையே அதே பேருந்தில்—இருப்பூர்தியில் மதுரை வந்து

சேர்ந்தோம். சாமான்களைத் திரும்பப் பெற்றுச் சென்னைக்கு வரும் விரைவு இருப்பூர்தியில் இடம் பிடித்து ஏறி செளகர்யமாக கூடூர் வந்து சேர்ந்தோம். நண்பர் நடேசனார் நேராகச் சென்னை சென்றார். நானும் கடிகாசலமும்இருப்பூர்தியில் நீராடி உணவு கொண்டோம். பிற்பகல் திருப்பதி செல்லும் இருப்பூர்தியில் ஏறி திருப்பதி வந்தடைந்தோம்.

அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டின் கருத்தரங்கு (28—வது அமர்வு) கர்நாடகப் பல்கலைக் கழகத்தில் (தார்வார்) 1976 நவம்பர் 10, 11, 12 நாட்களில் நடை பெற்றது. இந்த அமர்வுக்கு திராவிடமொழி ஆய்வுப் பகுதிக்கு குருட்சேத்திராவில் நடைபெற்ற 27-வது அமர்வில் நான்தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந் தேன். இந்த அமர்வுக்கு (1) The Nalayiram as Dravid Veda (2) Instituitions of Popular Culture in the Ancient Tamil Country என்ற இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி விட்டேன். முதலில் பல்கலைக் கழகம் என் செலவில் போகுமாறு பணித்தது. ஆனால் துணைவேந்தர் மூர்த்தி யைப்பார்த்து பல்கலைக் கழகச் செலவில் அனுப்புமாறு கேட்டேன். என் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தார்; பல்கலைக் கழகமே என்னைப் பேராளராக அனுப்பி வைக்கும் ஆணை பிறப்பிக்கப் பெற்றது. பேராசிரியர் K.S. மூர்த்தி அவர்கள் தாம் ஆந்திரப் பல்கலைக் கழகத் தில் தத்துவப் பேராசிரியராக இருந்தபோது இத்தகைய இடர்ப்பாடுகளைச் சந்தித்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்

இனி என் தலைமையுரையைத் தயாரிக்கவேண்டும். இதற்குத் தென்னகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடத் துறைகளில் பணியாற்றும் பேராசிரியர்கட்கு எழுதி அவர்களிடமிருந்து பெற்ற மறுமொழிகளைக் கொண்டு என்னுடைய

தலைமையுரையைத் தயாரித்தேன். மாநாட்டிற்குப் போகும் போது என் ஆய்வு மாணவர் N. கடிகாசலத்தை யும் கூட்டிக் கொண்டு சென்றேன். வயது முதிர்ந்த நிலையில் துணைக்காகவே அழைத்துச் சென்றேன். குருட்சேத்திரத்தில் நடைபெற்ற மாநாட்டிற்கும், தார்வாரில் நடைபெற்ற மானியத்திற்கும் பல்கலைக் கழகத்திற்கு எழுதிப் பயணப்படி வாங்கித் தந்தேன்.

தார்வாரிலுள்ள பல்கலைக் கழகம் நல்ல சூழ்நிலையில் அமைக்கப் பெற்றிருந்தது. தங்குவதற்கு நல்ல வசதிகள், உணவுக்கும் நல்ல ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன. தென்னார்க்காட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்த ரெட்டி என்பவர் (தமிழ் எம்.ஏ. படித்தவர்) அங்கு மொழியியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் அதே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த கன்னடம் எம்.ஏ.படித்த கன்னடப் பெண்ணைக் காதல் திருமணம் செய்து கொண்டிருந்தார். அவரும் எங்களை நன்கு கவனித்துக் கொண்டார். ஒருநாள் எங்களைத் தம் வீட்டிற்கு அழைத்து பிஸ்கோத்து காஃபி அளித்தார். பகுதித் தலைவர்களின் தலைமையுரைகள் ஒரே மேடையில் நிகழ்த்தப் பெற்றன. அதன் பிறகு மறுநாள் தொடங்கி தனித்தனி அறையில் அந்தந்தப் பகுதிகளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன. திராவிட மொழியியல் பகுதியில் கன்னடம், மலையாளம், தெலுங்கு, தமிழ் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன. கட்டுரை கள் யாவும் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்ற மரபு இருந்தது. கடிகாசாலம் இரண்டு அமர்வுகளிலும் கட்டுகள் படித்தார். கர்நாடக மாநிலத்தில் கம்பு, சோள ரொட்டிகள் பேர் போனவை. உண்பதற்குச் சுவையாக இருக்கும். நான் பயந்து பயந்து ஒன்று அல்லது இரண் டிற்கு மேல் உண்பதில்லை. திரும்பும்போது ஒரு மயிர்ப் பட்டாலான ஒரு மேலங்கி என் மனைவிக்காக வாங்கி வந்தேன். அது இன்றளவும் பீரோவில் உறங்குகின்றது.

இங்ஙனம் பல மாநிலங்களில் நடைபெற்ற மாநாடுகளில் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளையெல்லாம் தொகுத்து Collected Papers என்ற தலைப்பில் நூல் வடிவாக்க வேண்டுமென்பது என் கனவு. இறையருளால் சென்னை வந்த பிறகு என் கனவு நனவாகியது. எல்லாம் வேங்கடவாணனின் திருவருள்,

குமிழி—233

## 77. ஓய்வு பெற்றதும் சென்னை வருகையும்

என் வாழ்க்கையில் ஓரிடம் விட்டுப் பிறிதோரிடத்தில் அமரும் போது ஏதாவது தொல்லை வருவது மரபாக அமைந்து விடுகின்றது, துறையூரிலிருந்து காரைக்குடி போகும்போது நிர்வாகம் எனக்கு விடுதலை தரமறுத்ததால் மூன்று மாத வரைவூதியம் கட்டி மனக் கசப்புடன் விடுதலை பெற வேண்டியதாயிற்று. காரைக்குடியில் அப்படி நிகழவில்லை. தொடர்புரிமையுடன் (Lien) இரண்டாண்டு விடுமுறை தந்துக் கழற்றிவிட்டனர். மகிழ்ச்சியுடன் சென்று திருப்பதியில் பணியை ஒப்புக் கொண்டேன். ஆனால் சேர்ந்து பத்து நாட்கள் கூட முடிவதற்கு முன்னர் திரும்பி வந்து பதவியேற்க வேண்டும் என்றும், இல்லாவிடில் மூன்று மாத வரைவூதியம் செலுத்த வேண்டும் என்றும் ஆணை வந்தது பணம் கட்டிவிட்டுத் திருப்பதியிலேயே தங்கிவிட்டேன், திருப்பதியிலும் நல்ல மனப்பான்மையுள்ள துணைவேந்தர் துணையால் பதவி உயர்வு கிடைத்தது. திரு க. அன்பழகனிடம் என்னை மேலும் ஐந்தாண்டு வைத்துக் கொள்வதாகச் சொன்னபடி தமிழக மானியம் கிடைக்கும் வரையிலும் என்னைப்

பேராசிரியராக வைத்துக் கொள்ளும் எண்ணம் தொனிக்கும்படி ஆணையும் பிறப்பிக்கப்பெற்றது. இந்த ஆணை கிடைத்து இரண்டு திங்கள் முடிவதற்குள் செப்டம்பர்-30 தேதி ஓய்வு பெற வேண்டும் என்ற கட்டளையும் வந்தது. துணைவேந்தரிடம் இதுபற்றி விவரம் கேட்டதற்கு 60—வயதிற்கு மேல் பணிபுரிய விதி இடம் தரவில்லை என்றார். பதிவாளரைப் பார்க்கும் படியும் பல்கலைக் கழக வழக்குரைஞரைப் பார்க்கும் படியும் அறிவுரை கூறினார். சாதியாரின் தொந்தரவு பொறுக்க முடியாமல் தம் வாக்கினின்றும் பின் வாங்குகின்றார் என்பது தெளிவாயிற்று. நான் பணிவாக இப்படிப் பார்ப்பதைவிட உயர்நிதி மன்றத்தில் வழக்கு போட்டு பார்த்து விடலாம் என்றும், இம்முறையைக் கையாளுவதால் தன்னைத் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டேன்,

செப்டம்பர்—24 (1977) அன்று முற்பகல் திரு. S. A. அனந்தசயனம் அய்யங்கார் பல்கலைக் கழகத்தில் ஏதோ நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி என் மணிவிழாவில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டதால் திரு. அய்யங்காரைத் தலைமை யேற்குமாறு வேண்டிக் கொண்டேன். அவரும் அன்புடன் ஒப்புக் கொண்டார். காலையில் திரு. அய்யங்காரிடம் துணைவேந்தர். ''பாருங்கள் ஐயா, உங்கள் டாக்டர் ரெட்டியார் என்மீது ரிட் போடப் போகிறாராம். இது நியாயமா? தடுத்து நிறுத்துங்கள்'' என்று கேட்டுக் கொண்டாராம. அதற்குத் திரு அய்யய்கார். ''நீங்கள் டாக்டர் ரெட்டியாரைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். மிகவும் நல்லவர். உங்கள்மீது அளவற்ற மதிப்பும் மரியாதையும் வைத்துக் கொண்டுள்ளார். நீங்கள் பதவி உயர்வு நல்கியதைப் பாராட்டாத நாட்களே இல்லை. என்னிடமே பத்துத் தடவைகட்கு மேல்சொல்லியிருப்பார். பல இடங்களில் சொல்லி வருவதையும் கேள்விப்படு

கின்றேன். பல்கலைக் கழகம் அனுப்பிய நியமன ஆணையின் வாசகத்தின் பொருளைச் சோதித்தறிவதற்காகத் தான் நீதிமன்றத்துக்குப் போகிறாரேயன்றி உங்கள் மீதோ தான் பணியாற்றும் பல்கலைக் கழகத்தின் மீதோ வெறுப்பின்றிச் செயல்படுகின்றார். நீங்கள் அவர்மீது கோபம் கொள்ள வேண்டா. அவருக்குச் சொந்தப் பொறுப்பில் பெருஞ் செலவு. உங்கட்குக் கைப்பிடிப்பு இல்லை; பல்கலைக் கழகம் செலவழிக்கின்றது" என்று சொன்னாராம்,

மணிவிழா நடைபெற்ற மறுநாளே (செப்டம்பர்—25) ஐதரபாத் சென்றேன். என் நண்பர் திரு. B. S. K. இராமச்சந்திரன் (இயக்குநர், அரசு அச்சகம்) சிற்றுந்துடன் நிலையத்திற்கு வந்து என்னைத் தம் இல்லத்தில் விருந்தினனாக வைத்துக் கொண்டார். பர்கத்புராவில் இருக்கும். திரு P. பாபுலு ரெட்டி வீட்டிற்குச் சென்றேன். அவர் நீதிமன்றத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மாலையில் வருமாறு பணித்தார். அங்ஙனமே மாலையில் சென்று ரிட்மனு தயாரிக்கச் செய்தேன். மறுநாள் ரிட்மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அன்றே பல்கலைக் கழக ஓய்வு பெறும் ஆணையை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு பிறப்பித்து இந்த வழக்கின் வாய்தா 10 நாள் தள்ளிப் போடப்பட்டது. 10 நாள் கழித்து மீண்டும் நான் ஐதரபாத் சென்றேன். அன்றும் முடிவு சொல்லவில்லை. உயர்நீதி மன்றம் என் பக்கம் இருப்பது தெளிவாகத் தெரிந்தது. பல்கலைக் கழக வழக்குரைஞர் ஏதோ காரணம் சொல்லி 5 நாள் வாய்தா வாங்கினார். அன்றே தீர்ப்புக் கூறத் தயாராக இருந்தார் நீதிபதி. சுருக்கெழுத்தாளரைக் கூடக் கூப்பிட்டுவிட்டார். சில ரிட்மனுவின் தீர்ப்பை உடனுக்குடன் வழங்கி விடுவதுண்டு. பல்கலைக் கழக அலுவலகம் ஆடிப் போயிற்று. என்ன செய்வது என்று தோன்றாமல் விழித்தனர். நியமன ஆணைப்படி இன்னும் 20 மாத காலம் இருக்கும் உரிமை

இருந்தது — ஆணையின் வாசகப்படி (தமிழ் நாடு அரசு மானியம் இருக்கும் வரை). திரு. P. பாபுலுரெட்டி பேசியது: ''தமிழக அரசு மானியம் இன்னும் 20 மாதம் உள்ளது. நாட்டிலேயே உயரிய கல்வி நிறுவனம் போட்ட ஆணை இது. 'தற்காலிகமாக' என்று போட்டிருந்திருக்கலாம். 'மானியம் இருக்கும் வரையிலும் என்று போட்டதால் இப்பதவி உரிமைக் கட்டுப்பாடுடைய பதவி (Tenure post) என்பது தெளிவாகிறது'' என்பதாக. இதை மறுத்திப் பேச அரசு வழக்குரைஞருக்கு வழி தெரியவில்லை. இதனால்தான் அரசு வழக்குரைஞர் வாய்தா வாங்கிக் கொண்டார்.

திருப்பதி பதிவாளர் அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கியது. ஆனால் நான் ஏதோ ஒரு காரணத்திற்காக தில்லி பல்கலைக் கழக மானிய ஆணையத்திற்கு எழுதிய என் கடிதத்தின் நகல் கிடைத்தது, துணைப்பதிவாளர் டாக்டர் அஞ்சனப்பாதான் இந்த நகலைத் தேடி எடுத்தார் என்பது என் ஊகம். இவர் என் இல்லத்தருகில் மற்றொரு இல்லத்தில் குடியிருந்தார். வழக்கு பற்றி ஏதோ பேச்சு வந்த போது ''நீங்கள் வெற்றியடைவீர்கள் என்பது ஐயமே'' என்று சொன்னதிலிருந்து இந்த ஊகம் எழுந்தது. கம்பராமாயணக் கருத்தரங்குக்கு அனுமதிக்கப் பெற்ற தொகை ரூ 4000/- முதல் தவணையாகக் கிடைத்தது. கருத்தரங்கு முடிந்து அதிகமாகச் செலவழித்த தொகை ரூ 1700/- சொச்சம் உடனே தருமாறு எழுதினேன். விவரமாக செலவுகளைக் காட்டிப் பில்கள் அனுப்பியிருந்தேன். இதற்கு முன்னர் பல்கலைக் கழகம் உடனே வழங்கும், சிலப்பதிகாரக் கருத்தரங்கிற்கு இப்படித்தான் வழங்கியது. இப்பொழுது ''தாங்கள் ஓய்வு பெறுவதால் உடனே வழங்குவதற்கில்லை. பல்கலைக்கழகமானிய ஆணையம் தந்த பிறகுதான் தரமுடியும்'' என்று பதில் எழுதிவிட்டனர். காரணம் பொருந்தாதது என்பதை மூடனுக்கும் தெளிவாகும்.

உடனே நான் பதிவாளர் மூலமாக பல்கலைக்கழக ஆணையத்திற்கே எழுதினேன். 'நான் செப்டம்பரில் ஓய்வு பெற நேரிடக் கூடுமாதலால் உடனே இரண்டாவது தவணைக் குரிய தொகையை அனுப்பவேண்டியது" என்று எழுதியிருந்தேன்—பொதுவாக நான் இப்படி (ஒருவர் மூலமாக) எழுதும் போது அதிகமாக ஒரு நகலை யும் கொடுப்பது வழக்கம்; ஒன்று தில்லிக்கு அனுப்பப் பெற்றாலும் மற்றொன்று அலுவலகத்தில் இருக்கட்டும் என்று இவ்வாறு செய்வது வழக்கம். இல்லையேல் இதை நகல் எடுப்பர் அல்லது எடுக்காது போவர். நான் தில்லிக்கு எழுதிய கடிதத்தின் நகலை ஐதரபாத்திற்கு அனுப்ப, அதை அரசு வழக்குரைஞர் மன்றத்தில் சமர்ப்பித்து பணி வகிக்கிறவரே (Incumbent) ஓய்வு பெறுகிறதாகக் கூறும்பொழுது இது உரிமைக் கட்டுப் பாடுடைய பதவி அன்று என்று அடித்துப் பேசவே நீதி பதியின் மனம் மாறியது; ரிட் வழக்கைத் தள்ளுபடி செய்தார்; என் வழக்கு தோற்றது. இந்த வழக்கில் என் கடிதமே என்னைப் பாதித்ததால் 'இனி திருப்பதியில் தங்க வேண்டா; ஓய்வு பெற்றுப் போய் விடு' என்று ஏழுமலை அப்பனே சொன்னதாகக் கருதி மன அமைதியானேன். தவிர, இன்னும் திருப்பதியில் தங்கவேண்டும் என்ற ஆசையால் வழக்கு தொடரவில்லையாதலால் தோல்வி என்னைப் பாதிக்க வில்லை.

அக்டோபர் 25 முதல் (1977) என்னைப் பல்கலைக் கழகம் பதவியிலிருந்து கழற்றி விட்டு விட்டது. இனி நான் என் பொறுப்பைத் துறையிலுள்ள ஒருவரிடம் ஒப்படைக்கவேண்டும். நான் துறைக்கு வந்து நேரில் தாமோதரனிடம் ஒப்படைக்க விரும்பவில்லை; வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதற்காகவே இவ்வாறு நினைத்தேன். முதல்வரிடமோ அல்லது இன்னொரு துணைப் பேராசிரியர் டாக்டர் P. சௌரிராஜனிடம் பொறுப்பைத் தர எண்ணினேன். ஆனால் பல்கலைக்

கழகம் நேரில் துறைக்கு வரவேண்டும் (தாமோதரனின் தூண்டுதலால்) என்று வற்புறுத்தியது. ஆனால் பொறுப்பைத் திரு சௌரிராஜனிடம் ஒப்படைத்ததாகக் கடிதம் அனுப்பி, கடிதத்தின் நகலை முதல்வருக்கு அனுப்பியதாக நினைவு; துறைக்குப் போகவில்லை. குறையிருப்பின் அதை நான் நிவர்த்தி செய்வதாக எழுதிவிட்டேன்.

P. F. கணக்கு முடிப்பதற்கு யாதொரு பாக்கியும் இல்லை என்று (1) துறையிலிருந்து ஒரு சான்றிதழும், (2) நூலகத்தாரிடமிருந்து ஒரு சான்றிதழும் அனுப்ப வேண்டும். டாக்டர் தாமோதரன் (1) வகுப்பு நூலகத்திலிருந்து சில நூல்கள் என் பெயரில் இருப்பதாகவும் (2) சில நூல்கள் நான் தலைமைப் பதவியிலிருந்தபோது சில மாணவர்கள் பேரில் தந்த நூல்களை என் பொறுப்பில் வாங்கித் தரவேண்டும் என்றும் கடிதம் எழுதியதுடன் நூலகருக்கும் சான்றிதழ் வழங்கக் கூடாது என்று தெரிவித்துக் கடிதம் அனுப்பினார். உண்மையில் என் பேரில் சில நூல்கள் இருப்பினும் நூல்கள் என்னிடம் இல்லை. அவற்றிற்குரிய விலையைச் சௌரிராஜன் கட்டிவிட்டு சான்றிதழ் வழங்கலாம் என்று சொல்லிவிட்டார். மாணவர்களிடமிருந்து நூல்களைத் திரும்பப் பெறுவது சட்டப்படி இப்போது துறைத் தலைவராக இருப்பவரின் பொறுப்பு என்று எழுதிவிட்டு அதன் நகலை நூலகருக்கும் அனுப்பினேன். ஒன்றிரண்டு ஆண்டுகளில் (1980-என்பதாக நினைவு) தாமோதரன் மாரடைப்பால் காலமாகிவிட்டார். அவருடைய நூல்களைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு அவர் குடும்பம் ஒப்படைத்தபோது என் பேரிலிருப்பதாகக் காட்டிய நூல்கள் அவர் வீட்டிலிருந்தன என்று சௌரிராசன் சொன்னபோது எனக்கு ஒரே வியப்பு. நான் பதவியிலிருந்தபோது நான் வகுப்பிற்குச் சென்றிருக்கும் சமயம் பார்த்து என் மேசையின்மீது இருக்கும் நூல்களை ஒவ்வொன்றாக எடுத்துப்

போயிருப்பதைத் தவிர வேறுவகையில் நூல்கள் தாமாக நகர்ந்து அவர் இல்லத்திற்குப் போகா. இப்படியும் நூல்களைக் களவாடும் ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றனர் என்பது என்னை வியக்க வைக்கின்றது.

ஓய்வு பெற்ற பிறகு சுமார் மூன்று மாதகாலம் (1977 அக்டோபர் 25 நாள் முதல் 1978-சனவரி 14 நாள் வரை) பல்கலைக்கழக அனுமதியுடன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆசிரியர் குடியிருப்பிலேயே இருந்து வந்தேன். காரணம், சென்னையில் வாடகை வீடு அமையவில்லை; திருப்பதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி யில் பணியாற்றி வந்த என் மூத்த மகன் இராமலிங்கத் திற்குச் சென்னைக்கு மாற்றலாகும் ஆணை கிடைப்பதில் சுணக்கம் ஏற்பட்டது. முன்னதை என் இரண்டாவது சம்பந்தி M. R. துரைசாமி செய்வித்தார். பின்னதை நான் சென்னை வந்து உரியவர்களைப் பார்த்துச் செய்தேன். இறையருளால் இரண்டும் ஏக காலத்தில் நடை பெற்றது. பொங்கல் உண்ட பிறகு (தமிழர் திருநாள்) சென்னைக்குப் புறப்படுவதென்பது உறுதி யாயிற்று. சாமான் வண்டி (Lorry) யில் சாமான்களை ஏற்றிச் செல்லவும் முடிவு செய்தோம். எங்கள் மூத்த மகனுக்கு அப்பொழுதும் ஆறு மாதக் கைக் குழந்தையும் (பெண் குழந்தை) இருந்தது.

பொங்கலுக்கு முதல் நாள் (போகியன்று) திரு துரைசாமிரெட்டியார் கார் அனுப்பியிருந்தார்; அவர் முதல் மகன் அரங்கராசன் B. E. வண்டியை ஓட்டிக் கொண்டு வந்திருந்தார். வேலூரிலிருந்து முதல் சம்பந்தி K.C. குப்புசாமிரெட்டியாரும் திருப்பதி வந்திருந்தார். போகிப் பண்டிகையன்று ஏழுமலையானைச் சேவித்து அவனிடம் விடைபெற்றுப் போகவேண்டும்

---

1, திரு. குப்புசாமி ரெட்டியார் 1985-ல் திருநாடு அலங்கரித்து விட்டார்.

என்பது என் விருப்பம். 17-ஆண்டுகள் அவன் அடிவாரத்தில் வாழ்ந்தேன். என் மக்களின் கல்வி நன்கு முடிந்தது; இருவரின் திருமணமும் சிறப்பாக முடிந்தது. எல்லோரும் உடல் நலத்துடனும் மன வளத்துடனும் இருக்கின்றோம். ஏழுமலையான் திருவருள்தான் இதற்கு முக்கியகாரணம் என்பதை நான் நன்கு உணர்ந்தவன். போகியன்று உணவை முடித்துக் கொண்டு நான், என் மனைவி, மனைவியருடன் என் மக்கள், கைக்குழந்தை, வேலூர் சம்பந்தி—இவர்களுடன் காரிலேயே திருமலை சென்று ஏழுமலையானைச் சேவித்தோம்; அவனிடம் பிரியாவிடை பெற்றோம். வேலூர் சம்பந்தியின் உதவியால் தரிசனம் எளிதாகக் கிடைத்தது. மாலை 6-மணிக்கு வீடு திரும்பி விட்டோம்.

பொங்கலன்று காலை 8-மணிக்கே லாரி வந்தது. சாமான்களை ஏற்றுவதில் என் பிள்ளைகளுடன் வேறு இரண்டு அபிமானப் பிள்ளைகளும்—ஆராய்ச்சி மாணவர்கள் டாக்டர் தேவசங்கீதம் (அப்போது விரிவுரையாளர்), திரு. N. கடிகாசலம்—துணைசெய்தனர். சாமான்களுடன் என் இளைய மகன் டாக்டர் இராமகிருஷ்ணனும், மற்றொரு அபிமான புத்திரன் டாக்டர் தேவசங்கீதமும் லாரியில் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தோம். ஏனையோர் காரில் செல்வதென்று உறுதியாயிற்று. இரண்டு நாட்கள் முன்னதாகவே அருகிலுள்ள 10 வீட்டு நண்பர்களிடமும் குடும்பத்தினரிடமும் விடைபெற்றுக் கொண்டோம். நான்கு நாட்கள் முன்னதாகவே ஒரு நாள் டாக்டர் Y. கிருஷ்ணா ரெட்டியும் (வேதியியல்) மற்றொரு நாள்டாக்டர்V.V. சாஸ்திரியும்(கணிதம்)எங்கள் அனைவருக்கும் விருந்தளித்தனர். பிற்பகல் 2-மணிக்கு 'உதயசூரியன்' திசையிலுள்ளசென்னையை நோக்கி எங்கள் கார் சென்றது; அரைமணிக்கு முன்னர் லாரியும் சென்றது. 'கெட்டும் பட்டணம் சேர்' என்பது பழமொழி. "கெடாமலேயே—ஏழுமலையான்திருவருளால்—பட்டணம்

சென்றோம்.' எங்கள் கார் புறப்படுவதற்கு முன்னிருந்தே உணர்ச்சி என்னை ஆட்கொண்டது. கண்களும் குளமாயின. என் இதயத்தில் நிரந்தரமாக வாசம்செய்யும் ஏழுமலையான் துணையாக இருக்கும்போது நான் அஞ்ச வேண்டியதில்லை. சென்னையில் என்னைக் கொண்டு புதிதாக அவனால் கட்டுவிக்கப்பெற்ற அவன் வீட்டில் ('வேங்கடன்') தான் நாங்கள் வாழ்கின்றோம். குடிலுக்கும் 'வேங்கடம்' என்று திருநாமம் சூட்டியுள்ளேன். இப்போது அவனது இல்லத்தில்தான் நாங்கள் வாழ்கின்றோம்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் நான் கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடம்[2]

—பொய்கையாழ்வார்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்;
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்; வேங்கடமே
தானவரை வீழத் தனிஆழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை[3]

—திருமழிசையாழ்வார்

2. முத. திருவந் 77
3. நான் திருவந் 48

## பின்னிணைப்பு—1

# குமிழிகளில் எழுந்த நூல்கள்

### அ : தமிழ் நூல்கள்

அண்ணங்கராசாரிய சுவாமிகள் : திவ்வியார்த்த தீபிகை

அதிவீரராம பாண்டியர் : வெற்றி வேற்கை (மர்ரே ராஜம் பதிப்பு)

அருணகிரிநாதர் : கந்தர் அலங்காரம் (கழகம்)

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார்பதிப்பு)

இராமலிங்க சுவாமிகள் : ஆறாம் திருமுறை(இராம லிங்கர் பணிமன்ற வெளியீடு)

ஔவையார் : நல்வழி, வாக்குண்டாம்(ராஜம் பதிப்பு)

,, : விநாயகர் அகவல்

கம்பர் : கம்பராமாயணம் — உரை (வை. மு. கோ. பதிப்பு)

குமர குருபரர் : நீதி நெறி விளக்கம் (மர்ரே ராஜம் பதிப்பு)

கவிமணி : மலரும் மாலையும் (புதுமைப் பதிப்பகம் காரைக்குடி ஆசிய ஜோதி (பாரி நிலையம்)

சங்கப் புலவர்கள் : அகநானூறு (பாகனேரி வெளியீடு)

,, : புறநானூறு(உ.வே.சா. பதிப்பு)

சமண முனிவர்கள் : நாலடியார்-உரை (வை.மு. கோ. பதிப்பு)

சுப்புரெட்டியார் ந. : **அறிவியல் விருந்து** (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108)

,, **கல்வி உளவியல்** (வாசன் ஆண்டு கோ)

,, **கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி**, செல்விப் பதிப்பகம், காரைக்குடி-623 001)

,, **கவிதையநுபவம்** (கழக வெளியீடு)

,, **இராக் கெட்டுகள்** (கழக வெளியீடு)

,, **இளைஞர் வானொலி** (கழக வெளியீடு)

,, **காதல் ஓவியங்கள்** (பழநியப்பா பிரதர்ஸ்)

,, **இல்லற நெறி** (தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை-600 005)

,, **முத்தொள்ளாயிர விளக்கம்** (திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி-517 502)

,, **அதிசயமின்னனு** (கழக வெளியீடு)

,, **இளைஞர் வானொலி** கழக வெளியிடு)
அறிவியல் தமிழ் (பாரி நிலையம்)

,, **இளைஞர் தொலைக்காட்சி** (கழக வெளியீடு)

,, பரணிப் பொழிவுகள் (திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி)

,, அறிவுக்கு விருந்து (செந்தில் குமரன் பதிப்பகம் திருப்பதி-2)

,, மலை நாட்டுத் திருப்பதிகள் (பாரி நிலையம், சென்னை-108)

,, தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை (பழநியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600 014)

,, அதிசய மின்னணு (கழகம்)

,, அம்புலிப் பயணம் (கழகம்)

,, தொலை உலகச் செலவு (கழகம்)

,, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (பாரி நிலையம்)

,, பாண்டி நாட்டுத் திருப்பதிகள் (பாரி நிலையம்)

,, திருக்குறள் - கருத்தரங்கு மலர்-1974 திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி)

,, மணி விழா மலர் (1977)

தாயுமானவர் : தாயுமான சுவாமிகள் பாடல்கள் (தருமபுரம் பதிப்பு)

சேக்கிழார் : பெரிய புராணம்

திருவள்ளுவர் : திருக்குறள்— பரிமேலழகர் உரை (கழகம்)

பவணந்தி முனிவர் : நன்னூல் காண்டிகை உரை (ஆறுமுக நாவலர் பதிப்பு)

திருமூலர் : திருமந்திரம்

பாரதியார் : பாரதியார் கவிதைகள் (S.R.S. பதிப்பு)

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : அஷ்டப் பிரபந்தம்-உரை (வை.மு.கோ. பதிப்பு)

பிள்ளை உலக ஆசிரியர் : முமுட்சுப்படி (அண்ணங்கராசாரிய சுவாமிகள் பதிப்பு)

புகழேந்திப் புலவர் : நளவெண்பா—உரை

மறைமலை அடிகள் : பட்டிப்பாலை ஆராய்ச்சி (கழக வெளியீடு)

மாணிக்கவாசகர் : திருவாசகம் குறிப்புரை (தருமபுர ஆதீன வெளியீடு)

மூவர் முதலிகள் : தேவாரம் அடங்கன் முறை (சமாஜப் பதிப்பு)

வேதாந்த தேசிகர் : தேசிகப் பிரபந்தம் (ஸ்ரீ ராம தேசிகன், ஒப்பிலியப்பன சந்நிதி, கும்பகோணம்)

ஆ: ஆங்கில நூல்கள்

Hadson : An Introduction to the Study of Literature.

Subbu Reddiar, N. : Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar. (S.V.University Tirupati-517502)

Annadurai : ANNA SPEAKS (in Perliament)

Subbu Reddiar N. : Collected Papers (Paari Nilayam 184, Prakasam Salai, Madras-108).

## பின்னிணைப்பு—2

# பொருட் குறிப்பு அடைவு

### அ


அகத்திய முனிவர்—428

அகமது, டாக்டர்—47, 188, 189, 193

அங்கதன்—81

அசுவத்தாமன்—24, 25

அசுவமேதயாகம்—362

அஞ்சனப்பா, டாக்டர்—589, 593, 639

அஞ்சிலைவல்லி நாச்சியார்—469

அட்டபுயகரம்—465

அடிவளி மண்டலம்—223

அடுக்கு வழி மண்டலம்—224

அணிமா மலர் மங்கைத் தாயார்—474

அணு—123

அணுக்கதிர்—45

அணுவின் ஆக்கம்—361

அண்ணங்க ராசாரிய சுவாமிகள், பி. ப.—116, 446

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—625

அண்ணாராவ், சி—182, 199, 609, 611, 612, 613

அண்ணாவின் நீள் நோக்கு—620

அதிசயமின்னணு—122, 125, 360

அத்திகிரி—465

அநுமான் தேக்ரி—316

அபிமன்யு—25

அப்பர் பெருமான்—344, 457, 468

அமிர்தலிங்கம், பூ—555

அமிர்தவல்லித் தாயார்—474

அமுதசுரபி—129

அம்மாஜி மந்திர்—314

அயனி மண்டலம்—224

அயோத்தி—290, 317, 620
அரங்கசாமி, ப—173
அரங்கசாமி அய்யங்கார், ஏ- 186
அரங்கசாமி ரெட்டியார்,P—184, 552
அரங்கநாதர்—478
அரங்கநாதன்—473
அரங்கநாத முனிகள்—62
அரசியல் வாதி—406
அரிசன மாணவர்கள்—245
அரியக்குடி—298
அருங்கலைக்கோன்—359
அருங்காட்சியகம்—386
அருணகிரியார்—481
அருணாசலம், P. V. டாக்டர்—571
அருணாசலம், மு—571
அருமறைகள்—616
அருளாளர்கச்சி—434
அருளுரை—625
அலகபாத் பல்கலைக் கழகம்—198
அலர்மேல் மங்காபுரம்—241
அலர் மேல் மங்கைத் தாயார்—466
அலாவுத்தீன்—161
அலர் மேல் மங்கை உறை மார்பன்—427
அலெக்ஸாண்டார் கிரஹாம்—118
அலெக்ஸாண்டர் ஞான முத்து—115
அழகப்பர், இராம—407
அழக முத்து, டி. பி—198
அழகர் கோவில்—567, 568
அழகிய சிங்கர்—473
அறிஞர் அண்ணா 185, 197, 200
அறிவியலடிப் படையில் திருமணம்—176
அறிவியல் பயிற்றும் முறை—129, 360
அறிவுக்கு விருந்து—93
அறையணி நல்லூர்—463
அறையணி நாதர்—463
அறையணி நாயகி—463
அனந்தசயனம், SA.—582, 637
அனந்தசயனம் அய்யங் கார்—எம், 495
அன்பழகன், க. —540
'அன்டல்'—209
அன்ன அபிஷேகம்—307
அஷ்டாங்க மார்க்கம்—329
அஹீந்திரன்—454

## ஆ

ஆகாமியம் (எதிர்வினை)—437
ஆக்ரா—633
ஆக்ரா பல்கலைக் கழகம்—198
ஆசிய ஜோதி—330
ஆசாரிய ஹிருதயம்—77

ஆச்சாரியார் G.S. N.S—355
ஆண்டாள்—478
ஆண்டிகட்டியமடம்—503
ஆதிகேசவப் பெருமாள்—427, 466
ஆதிமூலம், A—5ɔ2, 596
ஆதிவராகப் பெருமாள்—469, 475
ஆந்திரப்பிரதேச உயர்நீதி மன்றம்—27
ஆயுதப்பிரசவம்—423
ஆராவ முதன்—161
ஆரோக்கிய பவன்—19
ஆழ்வார் திரு நகரி—569
ஆள் அழகிய சிங்கர்—467
ஆனந்த பவன்—286.
ஆனந்தம் செட்டியார், A.K—476
ஆனம் சஞ்சீவ ரெட்டி—611, 612

இ

இசக்கி—171
இசைக்குடிமானம்—298
இடைச்சிக்கல்—462
இடைச்சிக் குன்று—462
இட்டார்சி—285, 331, 332
இட்டிலி விருந்து—624
இந்தியத்தூதரகங்கள்—172
இந்திராகாந்தி—529
இந்திராகாந்தி அம்மையார்—172
இந்தோனேஷியா—49
இரகு நாயகம், K.A. 542
இரகுபதி, T.J. 355, 594
இரணியூர் கோயில்—297
இரத்தினசாமி, M. 617
இராக்கெட்டு—22
இராக்கெட்டுகள்—237, 360
இராகவஅய்யங்கார், மு—127
இராகவய்யங்கார், ரா—127
இராகவரெட்டி—500
இராச கிரீடை—632
இராசாக் கண்ணனார், மு—212
இராதாகிருஷ்ணன், M. டாக்டர்—528
இராமாநுசம் 53
இராமகிருஷ்ணன் பரமஹம்சர்—305
இராமகிருஷ்ணன், எம். கே 495, 591
இராமகிருஷ்ணன், எஸ். 242
இராமகிருஷ்ண தபோவனம் 235, 237
இராதா கிருஷ்ணன், சர்வேபல்லி—582, 583
இராமசாமி, A. 445
இராம சர்மா, M. V. 529

இராமச்சந்திர அய்யர் K. 445
இராமச்சந்திரராவ்—V. டாக்டர் 386
இராமச்சந்திராரெட்டி—P. 325, 334
இராமச்சந்திரன் B.S.K.
இராமய்யா, சி. எஸ். 37, 38, 152 580, 638
இராமபக்தர்கள் 317
இராமநாத அடிகள்—301
இராம மந்திர்—303, 305
இராமராசன் S. K 93, 557
இராமலிங்கம் 242, 309, 367, 592
இராமஜன்ம பூ மி—314
இராமாநுசம், பெ. 116
இராமாநுசர்—437
இராமாநுசதத்தாச்சாரியார்—622
இராமாநுசராவ் நாயுடு—111
இராமா ராவ்—169
இராமா ராவ், N.T.608
இராஜசிம்மன்—470
இராஜவேலு, கு—541
இராஜா, K.K—621
இராஜா தங்கும் விடுதி -617
இராஜாஜி—182, 265, 266, 273, 582
இலக்குமிஜகந்நாதரெட்டி 495, 589
இலட்சுமணன் SVJ, டாக்டர் ১21, 523
இலட்சுமணமூர்த்தி, டாக்டர்—589
இலுப்பைக்குடிக் கோயில்29
இல்லற நெறி—276
இளைஞர் தொலைக்காட்சி-274
இளைஞர் வானொலி—360
இளையாற்றங்குடிக்கோயில்—296
இனப்பெருக்கம்—117
இஸ்மாயில் எம்.எம், ஜஸ்டிஸ் 185.

ஈ

ஈரத்தமிழ் 77,

உ

உச்சநீதி மன்றம் 26,
உடைய நங்கையார் 426.
உட்கரு 123,
உட்கருவாற்றல் 124.
உபாயவிரோதி 437
உமாமகேசுவர ரெட்டி 242.
உமாமகேசுவரரெட்டி குடியிருப்பு 183, 4 9
உமாயூன் கபீர், டாக்டர் 47, 166
உயிர்நிலை 174

உய்யவந்த பெருமாள் 439.
உரிமை விண்ணப்பம் 27
உலகளந்த பெருமாள் 469, 473
உள்ளெறி பொறி 223
உஜ்ஜயினி 627
உஸ்மானியாபல்கலைக் கழகம் 198, 385

எ

எம்.ஜி ஆர் 619
எலியட் டி. எஸ். 128
எல்லையா 58
எவ்வுள் கிடந்தான் 475
எஸ்ராபவுண்ட் 128

ஏ

ஏகலைவன் 27
ஏ.வி.எம். 619
ஏழுமலையான் 3, 145, 196, 519
ஏழுமலையப்பன் 96
ஏழுமலையான் திருவருள் 3
ஏழைபங்காளர் 120

ஐ

ஐசக் நியூட்டன் 223

ஒ

ஒளிக்குழல்கள் 125
ஒன்பதுகோயில்கள் 286

ஓ

ஓபெர்த் 222
ஓமியோமுறை ஆய்வுக் கழகம் 159
ஓராள் ஆணையம் 354

ஔ

ஔவையார் 110, 153, 157, 462
ஔஷதாத்திரி 456

ஃ

ஃபஸ்லுல்லா 194
ஃபிராய்டு 517

க

கங்கை கொண்டான் மண்டபம் 11
கங்கையநாயுடு 346
கடிகாசலம், N. 551. 590
கடைதிறப்பு 449
கணிகண்ணன் 466
கணேசன், சா. 43, 95, 158, 571
கண்டனூரார் விடுதி 568
கண்ணன் 25, 155, 205
கண்ணன் (கட்டமைப்பாளர்) 339
கண்ணம்மையார் 271
கந்தப்பச்செட்டி 53
கந்தனடிமை 452
கமலநாதன், கே, டாக்டர் 53, 589, 593
கமலவல்லி நாச்சியார் 470

கம்பன் 412, 428
கம்பநாடன் 313
கம்பனடிப், பொடி 265, 407, 571
கம்பனின் திருவாக்கு 315
கயை 290, 520
கருணாகரப்பெருமாள் 469
கருணாநிதி, டாக்டர் கலைஞர் 306
கர்நாடகப் பல்கலைக் கழகம் 734
கர்மபுத்திரன் 161
கலிங்கத்துப்பரணி 447
கலைஞர் 257
கலைஞர் மு. கருணாநிதி 509
கல்கத்தா 290
கல்கி நிறுவனம் 619
கல்யாண சுந்தரம் பிள்ளை, ஜி—290
கல்யாணம் அய்யங்கார் 187
கல்விஉளவியல் 360
கவிதையநுபவம் 399
கவி மணி 220, 237
கனகசபை பிள்ளை 127
கனகவல்லித்தாயார் 475
கன்னியாகுமரி 426

கா

காசியாத்திரை 283
காடார்டு 221
காட்வின் 221
காட்ஹெலியா 290
காமராசர், கே 112, 120, 205
காமாஸிகா 467
காய்ச்சல் வேகம் 523
காரைக்குடி 25, 293, 339
கார்வானம் 470
கால்டுவெல், டாக்டர் 127
காவிரிப்பூம் பட்டினம் 293
காழிப் பிள்ளையார்—457
காளத்திவேடன்—586
காளமேகப் புலவர்—89, 268
காளிகாட்—290

கி

கிரி. வி. வி—172
கிருபானந்தம், N. 553
கிருஷ்ணசாமி, ஓ. ஆர் 525
கிருஷ்ணன், வி. ஆர். டாக்டர், 53
கிருஷ்ணசாமி ரெட்டியார், என், ஜஸ்டிஸ் 478, 510
கிருஷ்ணாரெட்டி, Y. டாக்டர் 589
கிருஷ்ணசாமி ரெட்டியார், மு. 586

கு

குடுமித் தேவர் 585
குடும்பக் கட்டுப்பாடு 177

குடும்பராவ், M. 329
குண்டக்கல் தமிழ்ச் சங்கம் 184
குண்டூர் 515
குபேரன் 28
குப்தர் படித்துறை 316
குப்புசாமி ரெட்டியார், K.C. 642
குமர குருபரர் 4, 146
குமரகுருபர அடிகள் 58, 144
குமாரசாமி ராஜா, கே 4
கும்பகருணன் 149
கும்பகோணம் வழி 150 158
குருட்சேத்திரா பல்கலைக் கழகம் 630
குருசாமி, ஒய். ஆர் 445
குருசாமி, ம. ரா. போ 540, 542
குருஞான சம்பந்தர் 608
குருதேவ் 407
குருநாதன் 396
குருவ்வாயூர் 435
குருவாயூர் அப்பன் 435
குழந்தைசாமி, V. C. 517, 518
குறைமாதப் பிரசவம் 525

கூ
கூடலழகர் 568

கெ
கெப்ளர் 221

கே
கேரள நாட்டுப் பாணி 429

கை
கைலாசம் P. S. ஜஸ்டிஸ் 570

கொ
கொல்லம் 432
கொண்ட பாளையம் 474, 475

கோ
கோட்டயம் 431
கோதண்டராமய்யா T. டாக்டர் 53, 168, 621
கோதாரி, டாக்டர் 166
கோதாவரி 290
கோபால கிருஷ்ணன் G. 183, 184, 447
கோபால கிருஷ்ணநாயுடு G. T. டாக்டர் 496
கோபாலசாமி அய்யங்கர் டி. கே. 53, 621
கோபாலரெட்டி B. 571, 572
கோமளவல்லித் தாயார் 473

கோமளவல்லி நாச்சியார் 466
கோல் கொண்டா கோட்டை 385
கோல்ட் ஸ்மித் 149
கோவர்ந்தன மலை 145
கோவிந்தசாமி நாயுடு, K. 82
கோவிந்த ரஜுலு நாயடு S. 3, 13, 78, 110, 134, 137, 150, 182, 200, 205, 212, 217, 345, 364, 365, 367, 389, 538
கோவிந்த ராஜ சுவாமி 27, 137, 216
கேவிந்தராஜ சுவாமி சந்நிதி 245
கோவிந்தன் பாட்டு 28
கோவிந்த ரரஜன் 30
கோவிந்த ரெட்டி 635
கோவிந்தராஜுலு, L. K. 334

கௌ

கௌகாதி 616

ச

சகந்நாதரெட்டி, டி. டாக்டர் 42, 166, 390, 392, 399, 422, 423, 513, 519, 524, 531, 535, 590
சக்கரவர்த்தி அய்யங்கர் R. 113
சக்கரவர்த்தித் திருமகன் 473, 478
சங்க நூற் காட்சிகள் 128
சங்கரன் வி 102
சங்கர ராஜு நாயுடு, எஸ். 148, 161, 623
சச்சிதானந்த மூர்த்தி, S. டாக்டர் 166, 364, 591 593, 598
சஞ்சீவரெட்டி, நீலம் 205
சஞ்சீவி, ந. டாக்டர் 505, 530, 554, 604
சடுகுடு 161
சண்முகம், R 401
சண்முகம்பிள்ளை, எஸ்.பி 252, 477, 502
சதாசிவ பண்டாரத்தார்141
சதாசிவரெட்டி டி. 74
சந்தான நரசிம்மர் 473
சந்திரபாநு ராவுத் 9
சந்திர மௌலி ரெட்டி 593
சந்திரன், எம். ஆர். 52, 588
சபாநாயகர் நுழைவுச் சீட்டுகள் 256
சம்பாதி—சடாயு 221
சரசுவதி நதி 287
சவகர்லால் நேரு 170
சவுரிராஜன் P. 496
சரசுவதி சென்ன கேவன் 524
சல்லடைக் குழு 155

சா

சா. க 22
சாங்கேரபான்சா 590

சாட்டர்ன் 5, 484
சாந்தமூர்த்தி பு.ரா. 562
சாந்தா நந்தா 236
சாந்தீபினி 235
சாமி நாதய்யர் உ.வே. டாக்டர் 66, 94 110, 127
சாமுவேல் 498
சார கிராஹிகள் 454
சார்ங்கபாணி அய்யங்கார் R. 113
சாலை இளந்ரையன் 110
சாஸ்திரி V. V. டாக்டர் 653

சி

சிதம்பரநாதன் செட்டியார், அ. 61, 280, 390
சித்தநாதன் 44
சித்தலிங்கய்யா, T.B. 290
சித்தூர் தமிழ்ச்சங்கம் 185
சித்பவானந்த அடிகள் 235 237
சிரீகிருஷ்ணசர்மா, டாக்டர் 53, 169
சிரீவல்லிப்புத்தூர் 567
சிலம்பொலியார் 198
சிவப்பு நாடா 65
சின்னமலை 475

சீ

சீநிவாச சாஸ்திரி 40
சீநிவாசய்யங்கார் 127
நி 42
சீநிவாசன், வி. வி. 187
சீநிவாசராகன், அ-132, 617
சீநிவாச வரதன், கே.464, 473
சீமாட்டி 432

சூ

சூரியமூர்த்தி, எஸ். ஜஸ்டிஸ்
சூரைக்குடி கோயில் 552 297
சூழ்நிலை அமைதி 353

செ

செங்கணாச்சேரி 432
செட்டியார், ஏ. சி டாக்டர் 391
செல்லப்பன் சு. சிலம்பொலி 546
செல்லப்பன் K.A. 539
செயகாந்தி நாயுடு S.J.S 86
செயக்குமார் 589
சென்னாரெட்டி, ஜே 232

சே

சேக்கிழார் 587
சேக்கிழார் பெருமான் 585
சேதுபிள்ளை, ரா. பி. 94, 128, 147, 148, 506
சேவாகுஞ்சம் 632

**சொ**

சொக்கலிங்கம், K. I A S 201

சொக்கலிங்கம், ராய. சொ. 93, 95, 294

சொரூபவிரோதி 437

சொன்ன வண்ணம் செய்த பெருமாள் 466

**சோ**

சோகக் களை 582

சோமய்யா 321

**சௌ**

சௌந்திரம் இராமச் சந்திரன் 180

சௌந்திரராஜ அய்யங் கார், R 242

சௌந்திர ராஜன், பொன் 354, 355, 540, 541, 551 625

**ஞ**

ஞானஒளி 322 326

ஞானசம்பந்தம், அ.ச. 264, 392

ஞானத்தந்தை 44

ஞானமூர்த்தி T. E. 391, 392, 393, 395, 398, 399 416, 417, 419

**ட**

டாக்டர் மு.வ. 621, 623

டான்குக்ஸோட் 591

டி. கே. சி. 63, 68

டி. எஸ். ரெட்டி 75

**த**

தக்கான் 474

தண்டாயுதம், டாக்டர் 539

தந்தை பெரியார் 23

தமிழ்நாட்டு பெர்நாட்ஷா 131

தமிழ்ப்பண்பாடு 430

தமிழ் பயிற்றும்முறை 129, 360

தமிழ்ப் பாடத் திட்டக்குழு 10

தர்மபூத ஞானம் 546

தலசயனத் துறைவார் 472

**தா**

தாணுமாலயன் 426

தாமஸ் ஆல்வா எடிசன் 118

தாமோதரன், கு. 398, 401, 420, 421 523, 536 577, 581, 590, 605, 641

தாமோதரன் ஜி. ஆர் 59

தாயுமானவர் 588

தானியங்கி 223

தான்றோன்றித்தனம் 192

தாஜ்மகால் 305
தார்வார் 634

## தி

திங்கள் மண்டிலம் பயணம் 220
திருக்கடித்தானப் 430, 432
திருக்குருகூர் 162
திம்மாரெட்டி, பி. 422
திரிபிடகம் 329
திரிவேணி 287, 620
திரிவிக்கிரமன் கோயில் 457
திட்டத்தூய்மன் 24
திடீர்க் குபேரர்கள் 89
திரு ஆவினன் குடி 442
திரு எவ்வுளூர் 474, 475
திருக்காரகம் 469
திருகோவலூர் 453, 456
திருச்சி புனித குசையப்பர் கல்லூரி 320
திருச்சிற்றாறு 430
திருஞானசம்பந்தம் P. டாக்டர் 262
திரு நாரணன், B. M. 263
திருநின்றவூர் 474, 475
திரு நாவாய் 436
திருநீர்மலை—473
திருப் பவள வண்ணம் 470
திருப்பாடகம் 467
திருப்பாதிரிப் புலியூர் 454
திருப் புட்குழி 471
திருப்புளியாழ்வரர்—163, 469
திருமங்கை மன்னன் 405
திருமங்கையாழ்வார் 197, 305, 389, 431 437, 468, 473, 476
திருமணக்கலை 178
திருமண வாழ்வில் உடல் நலம் 179
திருமண்காப்பு 359
திருமந்திரம் 234
திருமழிசையாழ்வார் 644
திருமிற்றக்கோடு 438
திருமூலர் 234
திருமொழி 88
திருவண் பரிசாரம் 425, 430
திரு வயிந்திபுரம் 453
திருவல்லிக்கேணி 474, 477
திருவள்ளுவர் 501
திருவனந்தபுரம் 428, 430
திருவாங்கூர் அரசர் 420
திருவாழ்மார்பன் 425
திரு வி. க. 94, 176, 180
திருவித்துவக்கோடு 439
திருவித்துவக்கோட்டு வல்லி நாச்சியார் 439
திருவேங்கடம் (மு. வ.) 478, 538
திரௌபதி 24
தில்லிப்பல்கலைக்கழகம் 198

## தீ

தீனதயாளன் 187

## து

துரியோதனன் 24
துரை அரங்கசாமி, மொ.அ. 41, 285, 287, 292, 390, 391, 392, 393, 620
துரைக் கண்ணு முதலியார் ப. 60
துரைசாமி அய்யர் 112
துரைசாமி M.R. 642
துரோணர் 235
துலாபாரப் பிரார்த்தனை 435

## தெ

தெ. பொ. மீ. 267 292, 398, 399, 400, 401, 402, 620
தெய்வத் தமிழ் 510
தெய்வத்தின் குரல் 513
தெய்விகன் 461
தெனாலிராமன் 89
தென் புலத்தார் 320

## தே

தேவசங்கீதம் 499, 551, 590, 594, 595

## தொ

தொண்டரடிப் பொடியாழ்வார் 197, 270
தொலைக்காட்சி 270
தொலையுலகச் செலவு 549
தொலைவில்லி மங்கலம் 569

## ந

நகரத்தார் 293
நக்கல் பேச்சு 397
நச்சுச் காய்ச்சல் 306
நடராஜன் .ஏ 54, 76, 183, 187, 517
நடராஜா சர்வீஸ் 436
நடேச முதலியார் 505
நடேசனார் 634
நம்மாழ்வார் 33, 165, 905, 426, 427, 433, 436, 631
நம்பிள்ளை ஈடு 97
நரசிம்மாச்சாரி எஸ்.டி. 9, 528
'நளன்' 43
நனவடி நிலை 514
நனவு நிலை 517

## நா

நாகய்யா, எஸ். 183
நாசிக் பஞ்சவடி 290

நாட்டுக் கோட்டைச் செட்டியார் 294
நாத முனிகள் 162
நாம்பள்ளி 386
நாரத மந்திரம் 83
நாராயணசாமி நாயுடு அர.சு. 276, 278, 279
நாராயணராவ்S.டாக்டர் 526, 590

நி

நித்திய கல்யாணப் பெருமாள் 472
நிலமங்கைத் தாயார் 470
நிலமங்கை நாச்சியார் 472
நிலாத்திங்கள் துண்டம் 467

நீ

நீர் வண்ணப் பெருமாள் 473
நீலம் சஞ்சீவி ரேட்டி பவனம் 394

நு

நுகர்வினை 146

நெ

நெடுஞ்செழியன், நாவலர் 364, 513

நே

நெமம் கோயில் 297
நேரு முதுகலை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலையம் 493
நேரொருவர் இல்லா வல்லித்தாயார் 468

ப

பகவத் கைங்கரியம் 33
பகவத் விஷய காமத்தின் சின்னம் 305
பகவத் விஷய காமம் 30
பகீரதப் பிரயத்தனம் 359,399, 516 626
பக்தவச்சலம் 447
பக்தவத்சலம்.M 103,
பக்த விலோசனம் 732 166, 213
பக்தி 305
பசுபதி 541
பச்சைக் கொடி 43
பஞ்ச பாண்டவர்கள் 24
பஞ்சவடி 428
பட்டாம்பி 437
பதுமாவதி மகளிர்க் கல்லூரி 7,8
பதுமநாபன் 93
பத்தராவிப் பெருமாள் 47
பத்மாமணி நாச்சியார் 469

பம்பாபதிராவ், டாக்டர் 190, 227
பரணிகாட்டும் சுவைகள் 460
பரந்தாமன் 235
பரமபத நாதன் 471
பராங்குச நாயகி 436, 437
பரிட்சித்து 25
பரிமணம், ஆ.மு. 440
யரிமேலழகர் 17
பலராம ரெட்டி M-16, 18, 356, 357
பழநியாண்டி 440
பழநி 440
பழுதிலா வாழ்க்கை 379
பவள வண்ணன் 470
பவள வல்லி நாச்சியார் 470
பனிக்கட்டி மலை 515

பா

பாகவத கைங்கரியம் 33
பாக்காலாத் தமிழ்ச் சங்கம் 184, 447
பாஞ்சாலி சபதம் 413
பாண்டவ தூதர் சந்நிதி 467
பாண் பெருமாள் 428
பாபுலு ரெட்டி P. 639
பாமினி சுல்தான்கள் 385
பாரதம்புழா 437
பாரதியார் 30, 89, 117 125, 330, 481
பாரி மகளிர் 461
பார்த்தசாரதி, மேஜர் 168, 526
பார்த்தன் கணை 25
பால சுந்தர நாயக்கர் கே. 40,45
பாலசுப்பிரமணியன் .சி 44, 540
பலசுப்பிரமணியம் 45
பால் பொருத்தக் கேடுகள் 178
பான்சி வனம் 632
பாஸ்கரன், எஸ். 37
பாஸ்கரராவ், N. 607

பி

பிம்பசாரமன்னன் 324
பிம்பசாரன் 325
பிரணயகலகம் 455
பிரகாசம் நகர் 9
பிரபத்திநெறி 4
பிரளயம் 189
பிராப்யவிரோதி 437
பிராரத்தம் 146
பிருந்தாவனம் 463
பிரேமம் 305
பிள்ளை உலக ஆசிரியர் 77
பிள்ளைக்கவி 480
பிள்ளையார் சுழி 3

பிள்ளையார்பட்டிக்
கோயில் 297
பிள்ளைப் பெருமாள்
அய்யங்கார் 314
பிளாக் ஹவுஸ் 486
P.S.G கல்லூரி 249

பீ
பீம்சேனாச்சார் 521,528

பு
புதுக்கவிதை 128
புத்த கயை 620
புருடோத்தம நாயுடு பு.ரா
77, 81, 116, 133
புருடோத்தம், டி.ஏ. 59, 72
75, 78, 111, 156, 165,
194
புவனேஸ்வரம் 170

பூ
பூ. சா. கோ. பொறியியல்
கல்லூரி 262

பெ
பெரியாண்டவன், த 559
பெரிய உடையார் 471
பெரியவாச்சான் பிள்ளை
455
பெரியாழ்வார் 51, 480
பெருச் செல்வ நாயகி 434
பெருமாள் செட்டி V. 619
பெருமாள் முதலியார்,
மு. ரா. 212

பே
பேய்கள் உலகம் 450

பொ
பொய்கையாழ்வார் 644
பொய்யாமொழி 88
பொய்யா மொழியார் 327
424
பொன்னுசாமி முதலியார்
184
பொன்மொழி 88

போ
போரா 9

ம
மகராசன், எஸ், ஜஸ்டிஸ்
343, 446 571, 572, 577
619
மகாதேவ சாஸ்திரி கே.
டாக்டர் 167, 168, 169
மகாலிங்கம், நா 498
மகிழ்வுடைய இல்வாழ்க்கை
179
மக்கட்பேறு 178
மங்கல வாழ்த்து 179
மணப்பொருத்தம் 176
மணவாள மாமுனிகள்
27, 77

மணியனது கைங்கரியம் 22
மணிவாசகப் பெருமான்
91, 103, 440
மதவடை R. 201, 203
மதுபானம் 455
மதுர கவிகள் 163
மதுரவேணி நாச்சியார்
434
ம. பொ. சி. 202
மந்த மதியினன் 251
மயன் 494
மயிலாப்பூர் வுட்லன்ட்ஸ்
165
மரகதவல்லி 427, 471
மருதைப்பிள்ளை 610
மலைப் பயணம் 31
மலையமான் திருமுடிக்காரி
46
மலைஉச்சி அறிவுரை 74
மறைமலையடிகள் 127
மறைமொழி 3

மா

மாணிக்கம், வ. சுப.
டாக்டர் 245
மாணிக்க வாசகமுதலியார்
முத்து சு. 48
மாணிக்கவாசகன் 246
மாத்தூர் கோயில் 277
மாத்ருபூதம் 516
மாமல்லபுரம் 472
மாவலிச் சக்கரவர்த்தி 23

மி

மிட்டாய்த் திருவிழா 307
மின்னணுவாற்றல் 124

மீ

மீனாட்சி சுந்தரனார், தெ
பொ. 61, 170, 392 395,
398, 616

மு

முகமது உசேன் நயினார்
47, 53
முத்துச் சண்முகம் 604
முத்தொள்ளாயிர விளக்கம்
627
முத்துப்பிள்ளை, கோ 204,
423
முதலாழ்வார்கள் மூவர்
457
முத்தையா, கண 180. 265,
276
முத்தைய செட்டியார்,
ராஜாசர் 619
முதலியார், ஏ. எல்.டாக்டர்
204
முப்பத்து ஆறாயிரப்படி
77
முமுட் சுப்படி 315
மும்மணிகள் 451
மும்முனைப் போராட்டம்
20

மு. வ. டாக்டர் 282, 400, 411, 588
முனிரத்தினம்ரெட்டி 528
முனிரெட்டி 19, 20

மூ
மூர்த்தி, K. S. 531, 532, 533, 538, 634

மெ
மெய்ப்பொருள் நாயனார் 461
மெர்க்குரித்திட்டம் 432

ய
யசோதரை 323
யோக நரசிம்மர் 474

ர
ராம்பாபு சர்மா 9, 587, 589
ராய. சொ. 22, 466
ராவ். V. K. R. V. 6, 7
ராஜம், எஸ். 129
ரெட்டி ஜி. என் 53
ரேடியோஐஸோடோப்புகள் 388

ல
லீலாகிருஷ்ணன், ஜி 54, 183, 187, 517

வ
வசிட்டன் 409
வசுமதி 475
வட ஆலமரம் 321
வடவேங்கடம் 199, 507
வட்டிக்காசு திருவிழா 28
'வமனரவ்' 209
வரகுணமங்கை 569
வரதராசர் 477
வரதராசன், மு, டாக்டர் 10, 41, 65, 95, 129 130, 154, 155, 279, 285, 289, 390, 391, 392, 395, 478
வரதாச்சாரி, வி. டாக்டர் 53, 147, 160
வரதாச்சாரியார், கே. சி. டாக்டர். 49, 53, 72, 78, 79
வரதாச்சாரி 477
வரலாற்றுக்குக் குறிப்புகள் 450
வள்ளுவர் திருவாக்கு 17, 71, 79. 94
வள்ளுவர் பெருமான் 88, 114
வள்ளுவர் வாக்கு 521
வள்ளுவர் வாய் மொழி 90, 520
வள்ளைப்பாட்டு 67

வா
வாமதேவன் 409

வாமனன் பூமி 216
வாமன் ராவ் V.C. 166,205, 206, 209, 212, 217, 343, 345, 348, 355,357, 358, 364, 538, 549, 620
வாரணாசி 283, 292
வாழையடி வாழை 259
வானக்காட்சி நிலையம் 624
வானமாமலை 569
வானொலி 270

வி

விகடகவி 89
விசயபாஸ்கரரெட்டி 422
விசயன் 25
விசாகப்பட்டினம் 515
விசய ராகவன் 245
விசயை 413
விசுத்திமார்கம் 329
விசுவகர்மா 494
விசுவநாதன் க.ஆ.பெ, 227, 229
விசுவநாதன் 245
விசுவநாதன், எஸ் 337
விஞ்ஞான பவன் 169
விண்வெளிச் செலவு 481
விண்வெளிப் பயணம் 222
வி. பி. சிங். 9
விருப்புகானம் 516
வில்லியம் ஜேம்ஸ் 514
விவேகாநந்தர் 236
விவேகாநந்தர், சுவாமி 237
விவேகாநந்த வித்யாவனம் 237
வினைதீர்த்தான் செட்டியார் வீர. பழ. 290 303, 306, 307, 308, 310 318, 331
விஜயராகவன் 471
விஜயராகவப் பெருமாள் 471
விஷயகாமம் 305
விஷயகாமத்தின் சின்னம் 305
விஷ்ணுபாதம் 320

வீ

வீமன் 25
வீரட்டானே சுவரம் 457
வீரநாராயணபுரம் 162
வீரபத்ரய்யா, டாக்டர் 49
வீர ராகவன், டி. இ. 52, 53, ι5, 111
வீரராகவன (உற்சவர்) 475

வெ

வெள்ளைவாரணன், கே 554

வே

வேங்கடசாமி ரெட்டியார் கி. 558

வேளுக்கை 466

**ஞவ**

வைகுண்டப் பெருமாள் 470
வைகுண்டவல்லி 471
வைணவக்களஞ்சியம் 583

**வடமொழி**

வைரவன் கோயில் 297
ஜகந்நாதன், கி. வா. 128, 129,
ஜகதீசப்பெருமாள் 470
ஜகதீசன் 184, 447
ஜகந்நாதரெட்டி, D டாக்டர் 347, 359, 364, 365, 529
ஜலகம் வெங்கல் ராவ் 613
ஜவகர்லால் மருத்துவக் கல்லூரி 343
ஜனார்த்தன செல்லோ 587
ஜனோபகரர அச்சகம் 339
ஜார்ஜ் ஸ்டீபன் 552
ஜான் 246
ஜான்சன் 149
ஜான்கென்னடி 48
ஜி.டி. நாயுடு 184
ஜி. என். ரெட்டி 232
ஜெயராம ரெட்டி, P.டாக்டர் 521, 522
ஹெர்பர்ட் 528
ஸ்ரீதர் சிங் 587, 589
ஸ்ரீமத் ஆண்டவன் 570
ஸ்ரீவசன பூஷணம் 77

# பேராசிரியர் டாக்டர் ரெட்டியாரின் நூல்கள்

## ஆசிரியர் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

## இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியங்களில்—அறம், நீதி முறைமை
18. புதுமை (வை)க்கவி சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்

## சமயம் தத்துவம் :

### (அ) விளக்க நூல்கள்

19. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
20. சில நோக்கில் நாலாயிரம்
21. வைணவமும் தமிழும்
22. சைவசமய விளக்கு
23. ஆன்மிகமும் அறிவியலும்
24. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
25. கலியன் குரல்
26. கீதைக்குறள் (பதிப்பு)
27. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
2 . ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
29. கீதைப் பொழிவுகள்
30. கண்ணன் துதி
31. இராமர் தோத்திரம்

### (ஆ) திருத்தலப் பயண நூல்கள்

32. மலைநாட்டுத் திருப்பதிகள்
33. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
34. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
35. வடநாட்டுத் திருப்பதிகள்
36. சோழநாட்டுத் திருப்பதிகள்-முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
37. சோழ நாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி (ஷை)
38. தம்பிரான் தோழர்
39. நாவுக்கரசர்
40. ஞானசம்பந்தர்
41. மாணிக்கவாசகர்

## திறனாய்வு :

42. பாட்டுத் திறன்
43. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
44. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
45. அகத்திணைக் கொள்கைகள்
46. புதுக்கவிதை-போக்கும் நோக்கும்
47. கண்ணன் பாட்டுத் திறன்
48. பாஞ்சாலி சபதம்-ஒரு நோக்கு
49. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
50. குயில்பாட்டு-ஒரு மதிப்பீடு
51. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
52. ஆழ்வார்கள் ஆரா அமுது
53. விட்டுசித்தன் விரித்த தமிழ்
54. சடகோபன் செந்தமிழ்
55. பரகாலன் பைந்தமிழ்

## வரலாறு, தன் வரலாறு :

6. நினைவுக் குமிழிகள்-முதற் பகுதி
57. நினைவுக் குமிழிகள்-இரண்டாம் பகுதி
58. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
59. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
60. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
61. வேமனர்
62. குராஜாட
63. சி. ஆர். ரெட்டி
64. தாயுமான அடிகள்
65. பட்டினத்தடிகள்
66. வடலூர் வள்ளல்
67. பிரதிவாதி பயங்கரம்
68. மலரும் நினைவுகள்


## அறிவியல்:

69. மானிட உடல்
70. அணுவின் ஆக்கம்
71. இளைஞர் வானொலி
72. இளைஞர் தொலைக்காட்சி
73. அதிசய மின்னணு
74. நமது உடல் (த. அ. ப. பெற்றது)
75. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
76. அம்புலிப் பயணம்
77. தொலை உலகச் செலவு
78. அணுக்கரு பெளதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
79. இல்லற நெறி
80. வாழையடி வாழை
81. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
82. வான மண்டலக் காட்சி
83. தமிழில் அறிவியல் – அன்றும் இன்றும்

## ஆராய்ச்சி :

84. கலிங்கத்துப்பரணி
85. வடவேங்கடமும் திருவேங்கடமும்
86. Religion and Philosophy of Nalayiram with Speciai Reference to Nammalvar
87. Studies in Arts and Sciences : (61st Birth Day Cammemoration Volume)
88. Collected Papers.

## இந்நூலாசிரியரைப் பற்றி ...



பிறப்பு : 27-8-1916

74-அகவையைக் கடக்கும் இந்தநூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். **ஒன்பதாண்டுகள்** துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950)- **பத்து ஆண்டுகள்** காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகவும் (1950-60), **பதினேழு ஆண்டுகள்** திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் (1960—77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978 - இல் சென்னையில் குடியேறி **பதினைந்து மாதங்கள்** (1978-பிப்ரவரி - 1979 - ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல்வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (12), சமயம் (25), திறனாய்வு (12), அறிவியல்(15), ஆராய்ச்சி(5), வாழ்க்கை வரலாறு (14)-என்று 88 நூல்களின் ஆசிரியர், இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும் - ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணிகளைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் தமிழக அரசு திரு. வி. க. விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.

MK Color Process, Madras-14 Phone : 848311
Designed by P. N. Anandan